காவிரி மைந்தன்

பாகம் 1



அனுஷா வெங்கடேஷ்

இரண்டாவது பதிப்புக்கு முன்னுரை

"கல்கி எழுதிய பொன்னியின் செல்வனுக்கு தொடராக ஒரு நாவல் எழுதுகிறாயா?" என்று என்னைப் பார்த்து கேட்டவர் பலர்.

எனக்கே இந்த நாவலை எழுதிய இரண்டரை ஆண்டுகளில், 'இது சாத்தியமா?' என்ற கேள்விகள் எழுந்தன. எனினும் எழுதி முடித்துவிட்டேன்.

காவிரி மைந்தன் பிரசுரிக்கப்பட்டு ஓராண்டுக்குள இரண்டாவது பதிப்பு வந்தது எனக்கு பெரும் மகிழ்ச்சியை கொடுக்கிறது. அதை விட எனக்கு மகிழ்ச்சி கொடுத்த பல விஷயங்கள் இந்த ஓராண்டில் நடந்தன.

90 வயதை தொட்டுக்கொண்டிருக்கும் இரண்டு இளைஞர்கள் இந்த புத்தகத்தை முழுவதுமாக ஒரே மூச்சில் படித்தது எனக்கு மன நிறைவைத் தந்தது.

கண் தெரியாத ஒருவருக்கு மூன்று பேர் தொடர்ச்சியாக இந்த நாவலைப் படித்துகாட்டியது மன நெகிழ்வை ஏறபடுததியது.

அது போலவே, தமிழ் படிக்கத் தெரியாதவர்களுக்கு, இந்த நாவலின் 1300 பக்கங்களையும் படித்துக் காண்பித்த நிகழ்வுகளும் நடந்தன.

இந்த நாவலைப் படித்த பலர் தங்கள் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டனர். இதில் பாலாஜி என்ற ரசிகர் நாவலின் கடைசி அத்தியாயங்களை வேறு விதமாக எழுதி எனக்கே அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

இந்த புத்தகத்தின் வெற்றிக்கு பெரும் காரணமாய் இருந்த பத்திரிக்கை மதிப்புரைகள், புத்தகக் கடைகளின் பேராதரவு மற்றும் வாசகர்களின் அரவணைப்புக்கும் நான் என்றும் கடமை பட்டிருக்கிறேன்.

அனுஷா வெங்கடேஷ்

ஆரம்பம்...

மரங்களின் உச்சாணிக் கிளைகள் அந்த வானத்தையே தொட்டுவிடும் போலிருந்தன. அவ்வளவு உயர்ந்த தாவரங்கள் கொண்ட அடர்ந்த காடு அது. ஜனசஞ்சாரமில்லாத அந்தக் காட்டுக்குள், மரங்களுக்கு இடையே ஒரு பாதை சர்ப்பம் நெளிவது போல வளைந்து வளைந்து சென்றது. நல்ல அகலமான பாதைதான். புரவி பூட்டிய தேர்கள், ஒன்றல்ல இரண்டு கூட, அடுத்தடுத்தே செல்லக்கூடிய அகலம்.

இலையுதிர் காலமாதலால் காட்டுத் தரை நெடுகிலும் கருகிக் கிடந்த இலைகள் பாதையின் பெரும் பங்கை மறைத்து விட்டன. அதனால் காட்டில் வீசிய காற்றுக்கோ ஆனந்தம். இங்கிருக்கும் இலைகளை எடுத்துச் சென்று, அங்கு குவிப்பது. இல்லை, அங்கிருப்பதை இங்கெடுத்து வந்து குவிப்பது. இல்லை, ஒரே இடத்தில் அவற்றைச் சுற்றிச் சுற்றி வேடிக்கை பார்ப்பது என்று வாயு பகவான் கானகத்தில் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்.

சரத்காலச் சந்திரனின் வெளிச்சமோ சாலையை ஒளிமயமாக்கப் போதவில்லை. எனினும் கண்களைக் கசக்கி உற்றுப் பார்த்தோமேயானால், காட்டுப் பாதையில் ஒரு விசித்திர ஊர்வலம் செல்வது நமக்குத் தெரிய வரும்.

முதலில் நான்கு குதிரைகள் சென்றன. அதில் இரண்டின் மேல் வேல் பிடித்த வீரர்கள். மீதி இரண்டில் வேலைவிடப் பலமான ஆயுதம் கொண்ட வீரர்கள். ஆம், இருவரும் வேங்கை பாயும் சோழரின் கொடியை ஏந்தியிருந்தார்கள். பரதக் கண்டத்தில் பாதியை ஆண்ட வம்சத்தின் சின்னத்தைக் கண்ட பின் சகலரும் புலிக்கொடியொன்றைப் பார்த்துவிட்டு புலியைப் பார்த்தது போல ஒதுங்கியே நிற்பார்கள்.

நான்கு புரவிகளுக்குப் பின், ஒரு இரட்டை மாட்டு வண்டியில் சிலர் இருந்தனர். நிச்சயமாக அந்தச் சிலர் இஷ்டப்பட்டுப் பயணம் செய்யவில்லை என்று பார்த்தவுடன் தெரிந்தது. அவர்களை ஏற்றிச் சென்ற வண்டியின் பக்கங்களும் மேல் பாகமும் மூங்கில் கம்புகளால் கூண்டு போல அமைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பின்னால்

இன்னமும் ஓரிரு வண்டிகளில் மூட்டை மூட்டையாய்ப் பொருட்கள். எல்லாவற்றிற்கும் பின்னால் நாற்பது வீரர்கள் வாளும் வேலும் ஏந்தியபடி வந்தனர்.

"பொழுது சாய்கிற வரைக்கும் காத்திருந்துவிட்டு, இப்போது பார்த்துக் கிளம்பு, என்று கட்டளையிடுகிறார்கள். இருட்டில் இந்த முகங்களைப் பார்த்து வேறு செல்ல வேண்டியிருக்கிறது" என்றான் ஒரு வீரன், முன்னால் சென்ற மாட்டு வண்டி சுமந்தவர்களைப் பார்த்து.

உண்மையில் வண்டியில் இருந்த ஒன்பது பேரும் அலங்கோலமாகத்தான் இருந்தார்கள். கூண்டு போல மாற்றப் பெற்ற இரட்டை மாட்டு வண்டியில் சங்கிலியால் பிணைத்துக் கட்டப் பட்டிருந்தனர். அவர்கள் உடலெங்கும் காயம். அதனால் வண்டி காட்டுப் பாதையில் செல்லும்போது, ஏற்றத் தாழ்வுகளில் சக்கரம் உருண்டோடும்போது, வலி பிராணன் போனது. ஆனால், அவர்கள் வெகுவாக வலியைக் காட்டிக் கொள்ளவில்லை. வீரத்தினால் அல்ல. எல்லாம் போய்விட்டது என்ற விரக்தியில் இருந்த அந்த ஒன்பது பேருக்கும் உடல் வலி பெரிதாகத் தெரியவில்லை போலும்.

"விசித்திரமடா இந்த உலகம். தரித்திரத்துடன் எங்காவது திருமகளைச் சேர்ப்பார்களா?" என்றான் ஒரு வீரன்.

அவன் சொன்னது பாண்டியக் கைதிகளுடன், ஏராளமான வரிப் பணத்தையும் சேர்த்து ஒரே காவலில் அனுப்புவார்களா என்று.

அந்த வீரர் படைக்கு உத்தரவு. "பொன்னைக் கொண்டு போய்த் தஞ்சைக் கோட்டைக்குள் பொற்காசுகள் வார்ப்படம் செய்யும் தங்கசாலையில் சேர்க்க வேண்டும். பொன்னையும், கயல் சின்னம் பொறித்த பாண்டியக்காசுகளையும் உருக்கி, வேங்கைச் சின்னம் பொறித்த காசுகளாய்ச் செய்வார்கள் சோழர்கள். கைதிகளை அதற்கு அருகிலிருந்த பாதாளச் சிறையில் ஒப்படைக்க வேண்டும்."

"இந்தத் தரித்திரம் பிடித்த காட்டில் நம்மைத் தனியாய் விட்டு வேலை பார்க்கிறார்கள்" என்று வருத்தப்பட்டான் இன்னும் ஒரு வீரன். ஆனால், தனிமையை நினைத்து அவன் வருத்தப்பட்டிருக்கவே வேண்டாம்.

சூரியன் எப்போது அஸ்தமிக்கும் என்று பரபரப்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கும்பலும் அந்தக் காட்டுப் பாதையில் ஒளிந்திருந்தது. அவர்களுக்கு இருளில் செயல்படுத்த வேண்டிய பல காரியங்கள் இருந்தன.

முதல் குதிரையில் சென்றவன் திடுக்கிட்டான். பாதைக்கு அருகில் நெடிதோங்கி வளர்ந்திருந்த ஒரு மரம் எந்தக் காரணத் தினாலோ சாலை மேல் சாய்ந்திருந்தது. சமீபக்காலத்தில்தான் அந்தப் பெரிய மரம் அப்படிச் சாய்ந்திருக்க வேண்டும். "மழைக் காலம் கூட இல்லையே! மரம் எப்படி விழுந்தது? தழைகள் இன்னும் காயக்கூட இல்லை. அதே போல் நேற்று இப்பாதையில் சென்றிருந்த வண்டிகள் எல்லாம் திரும்பி வந்திருக்கும் அல்லவா? வேறு வாகனங்களை வழியில் எதிரே சந்தித்தோமே?" எனப் பல கேள்விகள் எழுந்தன.

"இரவில் கிளம்பினோமே. நமக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும், என்றுதான் சொல்லுவேன்" என்று முணு முணுத்துக்கொண்டு முன் சென்ற குதிரைகளின் வீரர்கள் இருவரும் கீழே குதித்து விழுந்து கிடந்த மரத்தைச் சென்று பார்வையிட்டனர்.

இருண்ட காட்டில் பயணம் நடு வழியில் தடைப்பட்டது என்ற செய்தி ஊர்வலமெங்கும் பரவியது. மற்ற வீரர்களின் பதற்றமோ இருளில் அதிகரித்தது. காவலாளிகளுக்கிடையே கசமுச என்று பேச்சு. பலரும் ஒன்று குழுமிப் பேசத் தொடங்கினார்கள். அந்தப் பதற்றமானது குதிரைகளுக்கும் பரவியது. அன்னியர் இருக்கும் இடத்துக்கு வந்து விட்டோம் என்று அவை உள்ளுணர்வில் அறிந்தன.

அப்போது திடீரென நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு காட்டில் கோட்டான்கள் ஒரே சமயத்தில் அலறின. பதற்றத்துடன் ஆயுதம் தாங்கிய வீரர்கள் இங்கும் அங்குமாய்ப் பார்த்தனர். இருளில் என்னவென்று புரியவில்லை.

ஆனால், ஊர்வலத்தில் எல்லாருக்கும் அப்படியல்ல. அந்தக் கோட்டான்களின் ஒலியானது வலியால் துடித்துக் கொண்டிருந்த ஒன்பது கைதிகளுக்கும் ஒத்தடம் கொடுத்தது போலிருந்தது. அவர்கள் கஷ்டத்துகெல்லாம் நிவாரணம் வந்துவிட்டது என்று அறிந்தனர். தங்களைச் சகாக்கள் மறக்கவில்லை என்று மனம் பூரித்தனர்.

அதற்கு நேர்மாறாகச் சோழ வீரர்களுக்கு அச்சம் எழுந்தது. அறியாத சூழல், அதில் தெரியாத பகைவன் என்று அவர்கள் கற்றறிந்த எல்லாப் போர் வித்தைகளுக்கும் சவாலாய் அந்த நிலைமை அமைந்தது.

அப்போது செடிகளின் இலைகள் அசைந்ததனால் உண்டான சலசலப்பைக் கேட்டுவிட்டுப் பல வீரர்களும் ஒரே சமயத்தில், "அது என்ன சத்தம்?" என்றனர்.

திடீரெனப் புதர்களின் பின்னிருந்து, பாறைகளின் மேலிருந்து, மரக் கிளைகளிலிருந்து பலரும் சோழ வீரர்களின் மீது பாய்ந்தனர். அவர்கள் கையில் வித விதமான ஆயுதங்களை வைத்திருந்தனர்.

திடீரெனக் குதித்த எதிரியைச் சமாளிக்க முடியாமல் தவித்தனர் காவல் வீரர்கள். வந்தவர்கள் இருபது பேர் தானிருக்கும் என்றாலும் நல்ல போர்ப் பயிற்சி கொண்டவர்கள். சுற்றுச் சூழலும் அவர்களுக்கே சாதகமாக இருந்தது. மேடு பள்ளம் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பாதிச் சண்டையில் பின் வாங்கி இருளுக்குள் புகுவதும், பின் வேறிடத்திலிருந்து குதித்துச் சண்டையைத் தொடங்குவதும் எனச் சோழ வீரர்களைத் திகைக்க வைத்தனர்.

அவர்களின் சாதுர்யம் சிறிய படைக்குப் பெரும் பலத்தைக் கொடுத்தது. எதிரியிடம் அளவில்லாத திகைப்பை ஏற்படுத்தியது. மகா சாதுர்யன் எவனோ இந்தத் திட்டத்தைத் தீட்டியிருக்க வேண்டும். இடத்தையும், சமயத்தையும் தேர்ந்தெடுப்பதிலிருந்து, புதியதொரு போர் முறைக் கலையைக் கையாண்டதுவரை அவன் போர்த் திறனையும் புத்திக் கூர்மையையும் வெளிக்காட்டியது.

முதலில் பின் வாங்கிய சோழர்களும் விடவில்லை. காக்க வேண்டிய இரண்டும் மிகவும் முக்கியமானவை. அதனால் வீரா வேசத்துடன் போரிட்டனர். சோழர்களுக்குப் புரிந்தது, வந்தவன் வெறும் கொள்ளையன் போலில்லை. கேவலம் பொற்காசு களுக்காக வாளேந்துபவன் இப்படி உயிரைப் பணயம் வைத்துப் போராட மாட்டான்.

மனச் சோர்வை வெளிக்காட்டக் கூடாது என்று பல சோழ வீரர்களும் கத்தியைச் சுழற்றிக் கொண்டு எதிரியைத் துரத்தினார்கள். பாதைக்கு அப்பால் சென்றவுடன் இருளில் பலர் அவர்களுக்காகக் காத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். போராட முடியாமல் மடிந்தனர்.

சற்று நேரத்துக்கெல்லாம் கத்திகள் மோதும் "டணார் டணார்" சப்தம் ஓய்ந்தது. அடி பட்டுப் பல சோழ வீரர்கள் தரையில் கிடந்தனர்.

யுத்தமெல்லாம் முடிந்த பிறகு முதலில் வந்தவர்கள், கைதிகளை விடுவித்தனர். அவர்களால் நடக்கக்கூட முடியவில்லை. பலர் கடும் சித்திரவதைக் கொடுமைகளைச் சந்தித்திருந்தனர். எல்லாரையும்

பெயர் கொண்டு அழைத்தான் போராளிகளின் தலைவன். பின் பெயருக்காக நலம் விசாரித்தான்.

அதில் ஒருவன், "எம்மையெல்லாம் மறந்து விட்டீர் என்று நினைத்தேன், ரவிதாசரே!" என்றான்.

"மறப்பேனா? பாண்டிய நாட்டுக்கு உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கும் உம்மையெல்லாம் மறப்பேனா? கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர் போன சோழர் படையிடமிருந்து உம்மை மீட்கவே வந்தேன். என்ன கேள்வி கேட்டீர்?" என்று செல்லமாய் அதட்டினான் ரவிதாசன்.

அருகில் அடிபட்டுக் கிடந்த சோழ வீரனைக் கொல்ல மற்றும் ஒரு போராளியான பரமேச்சுவரன் வாளை ஓங்கினான். அவனைத் தடுத்தான் ரவிதாசன். "இல்லை, நில். எல்லாரையும் சொர்க்கத்துக்கு அனுப்பிவிடக் கூடாது. அவன் இருந்தால்தான் நல்லது. எல்லாரையும் கொன்றால் நம் செய்தியை யார் தஞ்சைக்கு எடுத்துச் செல்வார்கள்? புறாவின் காலில் நாங்கள்தான் இந்தச் செயலுக்குக் காரணம் என்று தூது விட்டால் நன்றாகவா இருக்கும்?" என்று சொல்லிச் சிரித்தான்.

எல்லாரும் அவனுடன் சேர்ந்து சிரித்தார்கள்.

"சரி, கிளம்புங்கள். வண்டி வந்து சேரவில்லை என்று ஆள் அனுப்பப் போகிறார்கள்" என்றான் ரவிதாசன்.

ஒரு போராளி, "ரவிதாசா! இவ்வளவு தங்கம் இருக்கிறதே. விட்டுச் செல்லச் சொல்கிறாயே. நம் போராட்டத்துக்கு உதவும் அல்லவா?" என்றான். வண்டியில் இருந்த வரிப் பணமானது ஏராளம் என்று எல்லாருக்கும் தெரியும். எல்லாம் பாண்டிய நாட்டுச் செல்வம்.

வேகமாகத் தலையசைத்தான் ரவிதாசன். "இல்லை. அது இருக்கும்படியே இருக்கட்டும். நாம் கொள்ளையர் இல்லை என்ற செய்தியையும் அவர்களுக்கு அனுப்ப வேண்டியது அவசியம்."

அவன் பேச்சுக்குக் கட்டுப்பட்டு, விட மனமில்லாமல், தங்கத்தை எல்லாரும் விட்டுவிட்டே நடந்தனர். ரவிதாசன் போராட்டத்தின் நெளிவு சுழிவு எல்லாம் தெரிந்தவன். பெரிய படை திரட்டிக் கொண்டு அருகிலிருந்த ராஜ்யங்களைக் கவர்ந்து கொண்டிருக்கும் சோழர்களைத் தடுத்து நிறுத்துவது கஷ்டம், இன்றைய நிலையில். தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து போர் நடத்த ஒரு லட்சம் பேர் வேண்டும். ஆனால் இந்த மறைமுகப் போரில் அதே அளவு கிலியைச் சோழனுக்குக் கொடுக்க முடியும் என்றறிந்தவன்.

ரவிதாசன் யூகித்து விட்டான். சோழர் இராஜ்யத்தில் குழப்பம் விளையாமல் பார்த்துக் கொள்வதில் சிரத்தை கொண்டிருக்கும் பிரதமர் அநிருத்தருக்கு இந்தச் செய்தி நாளை செல்லும். "கேட்கச் சகிக்க வில்லையே!" என்று அவர் செவியைப் பொத்திக் கொள்ள வேண்டும்.

'இப்படி ஏதேனும் செய்தாலொழிய நாம் இருப்பதே மறந்து போகும்' என்று நினைத்துக் கொண்டான் ரவிதாசன். இப்படித் தானே சோழர் அரியணையில் ஏறக் காத்திருந்த ஆதித்தனைக் கொன்றனர். 'சோழரை நிம்மதியாகத் தூங்க விடுவதில்லை. அமைதியாய் அவன் அயரும்போது கெட்ட கனவு போலப் பாண்டியரின் நினைவு வந்து, வந்து கொல்ல வேண்டும். அவன் மனதில் என்றும் அகலாமல் ஒரு கவலை இருக்க வேண்டும்' என்று உறுதி கொண்டான்.

"சரி, எல்லாரும் கிளம்புங்கள்" என்று உத்தரவிட்டான் ரவிதாசன். சோழர்களின் புரவிகளை எடுத்துக் கொண்டு பாண்டியர் ஆபத்துதவிகள் காட்டுக்குள் விரைந்தனர்.

சற்றுநேரம் முன் வரை ஊர்வலத்தின் முன் கம்பீரமாகச் சென்ற வேங்கைக் கொடி ஒன்று மரத்தின் மீது சாய்ந்திருந்தது. அதைக் கீழே தள்ளிவிட்டு அதன் மேல் குதிரையைச் செலுத்தினான் ரவிதாசன். கடைசிக் குதிரை கடக்கும் போது, அந்த வேங்கைக் கொடி நார் நாராய்க் கிழிந்திருந்தது.



அத்தியாயம் ஒன்று

காய்ந்தது வீரநாராயண ஏரி

என்றென்றும் நிரம்பித் ததும்பும் வீரநாராயண ஏரி, பார்ப்பவர் கண்களுக்கு இன்று அடக்கத்துடன் அரை மட்டத்தில் காட்சி அளித்தது. கரைக்குள் இருக்கும் இடத்தைக் கைப்பற்ற நீரும் மணலும் போட்டியிட்டன. நீரின் ஓரமாக நாணல் புதர்கள் வேறு. அவை தழைத்திருந்த பாதி இடங்களில் தண்ணீர் முழுவதுமாக வற்றிப் போயிருந்தது.

[illegible] காவிரி என்று பக்தர்களாலும், கொள்ளிடம் என்று பொது மக்களாலும் வழங்கப்பட்ட அந்த நதியிலிருந்து வடவாற்றில் சென்று பாய்ந்து, அதன் வழியாகத் தண்ணீர் வீரநாராயண

ஏரியை நிரப்புவது பல ஆண்டுகளாக நடப்பதுதான். உள்ளே வருவதற்கு நீருக்கு ஒரு வழிதான் என்றாலும், அது வெளியேற இந்த ஏரிக்கு எழுபத்து நான்கு கணவாய்கள் உண்டு. அதன் வழியாகத் தண்ணீர் பாய்ந்து சுற்றுப் பக்கத்திலுள்ள நிலங்களுக்குப் பாசனத்துக்குச் செல்லும். ஆனால், இன்று, எப்போதும் கேட்கும் "குமுகுமு" என்ற சப்தமில்லை. ஆழ்ந்த மௌனம்தான் சுற்றுச் சூழலில் நிலவியது.

தற்போது வடவாறு காய்ந்து கிடந்ததே இதற்கெல்லாம் முதன்மையான காரணம் எனத் தோன்றலாம். மேலும் சற்று ஆராய்ந்து பார்த்தால், அந்த ஆண்டில் மலைப் பிரதேசங்களில் வழக்கமாக வரும் மாரிக் காலம் தக்க நேரத்தில் ஆரம்பிக்க வில்லை. கடம்பூர் நாட்டின் மேலே கருமையைக் கண்ணுக்குக் கொஞ்சமும் காட்டாத கல் நெஞ்சம் கொண்ட வானம், இந்த ஆண்டும் ஏமாற்றிவிடும் போலிருந்தது. நதிகளிலும் தண்ணீர்ப் பிரவாகம் வர வரக் குறைந்து வந்தது. இப்படி இயற்கை, கூட்டணி அமைத்துத் தாக்கினால் ஏரி வற்றத்தானே செய்யும்?

தமிழ் பேசும் இடங்களில் மிகப் பிரமாண்டமான நீர்ப் பரப்பாய் இருந்த வீர நாராயண ஏரி இன்று ஆங்காங்கே காய்ந்தும், பல இடங்களில் சகதியாயும் அளித்த காட்சி, அது முழுமையாக இருந்தபோது கண்டவர்களுக்கு இப்போது கொஞ்சம் மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஏனென்றால், பொங்கும் கடலைத் தவிர அலைகளைக் காணும் ஒரே இடம் வீர நாராயண ஏரி என்பது நாடறிந்த உண்மை. அந்த மெய்யே இந்தக் கோடை வறட்சியினால் பொய்த்துப் போயிருந்தது.

ஒரு காலத்தில் வெகு தூரம் பயணித்து சமுத்திரத்தைக் காண்பிக்க வசதியில்லாதவர்கள், தங்கள் குழந்தைகளை வீரநாராயண ஏரிக்குக் கூட்டிகொண்டு வந்து காட்டுவார்கள். அதேபோல் பெருநகரமான தஞ்சையைச் சென்று பார்க்க இயலாதவர்கள், கடம்பூரை வந்து பார்ப்பார்கள். ஆனால், இன்று ஏரியைக் காண்பதற்கோ, கடம்பூருக்கு விஜயம் செய்வதற்கோ யாரும் நினைப்பது கூட இல்லை.

ஆனால், இந்த நிலைமைக்கு யாரும் இயற்கையை மட்டும் குறை சொல்வதாகவும் தெரியவில்லை. சற்று அடக்கிய குரலில் காதோடு காதாக மக்கள் பேசிக் கொண்டிருந்தனர், "எல்லாம் அரசரின் பேராசையினால்தான் வந்தது!" என்று.

மாலைப் பொழுது நெருங்கும்போது இயற்கையின் அசைவுகள் கூட இல்லாமல் காட்சி தந்தது ஏரியைச் சுற்றியுள்ள அந்தப் பகுதி.

இல்லை, இல்லை! அந்த ஏரிக்கரையின் கீழ்மட்டத்தில் ஏதோ நடமாட்டம் தெரிகின்றதே. மெதுவாக நடந்து கொண்டிருக்கும் பூதாகார உடல் கொண்ட ஒருவன் நம் பார்வையில் படுகிறானே! கட்டையும் குட்டையுமாய் இருக்கிறான். முன் குடுமி வைத்திருக்கிறான். இளந் தொந்தியில் வேட்டியை இறுக்கிக் கட்டியிருக்கிறான். சந்தனத்தைக் குழைத்து உடம்பெல்லாம் கீழிருந்து மேலாக பூசியிருக்கிறான்.

அவன் யாராய் இருக்கும்? ஆள் நடமாட்டமே இல்லாத இடத்தில் அவன் மட்டும் என்ன செய்கிறான்? எங்கு செல்கிறான்?

அவன் மெதுவாக நகர்வது வட்டப் பாறை ஒன்று சரிவில் உருண்டு செல்வது போலிருக்கிறது. பார்ப்பவருக்கு நிச்சயமாக அது வேடிக்கையாய் இருந்திருக்கும். ஆனால், அந்தக் காட்சியை ரசிக்கத்தான் அக்கம் பக்கத்தில் யாரும் பார்வையாளர்கள் இல்லை. அப்படி யாரேனும் இருந்திருந்தாலும் தைரியமாகச் சிரித்திருக்க மாட்டார்கள். வருபவனை ஏளனம் செய்யவும், எள்ளி நகையாடவும் அவர்கள் நிச்சயம் யோசித்திருப்பார்கள்.

ஏனென்றால், அவன் வலது கரத்தில் ஒரு தடித்த கைத்தடியைக் கெட்டியாகப் பிடித்திருந்தான். தலையில் அதை வைத்துத் தொட்டால் போதும், நையப் புடைத்துவிடும். ஓங்கிப் போட்டாலோ மண்டையே பிளவுபடும். அப்படிப்பட்ட தடி அது. அந்தத் தடியைக் கண்ட பின் வாய்விட்டுச் சிரிக்க நினைப்பவர்கூட ஒரு புன்முறுவலுடன் நிறுத்திக் கொள்வார்கள். இல்லையென்றால் அந்தக் கைத்தடி கொண்டு, மண்டையில் ஒரு போடு போடுவான்.

மேலும், இவன் பார்ப்பதற்கு வைணவ சம்பிரதாயத்தில் அதிக பக்தி கொண்டவன் போலத் தெரிகிறான். அவன் வாயில் ஏன் வசவு வாங்க வேண்டும் எனப் பலரும் ஒதுங்கிவிடுவார்கள். அந்த அளவிற்கு அவன் உடலெல்லாம் வைணவ பாஷாண்டங்கள் பூசப்பட்டிருந்ததைக் காண்கிறோம். அவற்றைக் காணும்போது நமக்குப் பழைய ஞாபகங்கள் வருகின்றனவே!

இவனை நமக்கு முன்பே தெரியுமோ? முகத்தில் பல மாறுதல்கள் இருந்தாலும், அவனை நாம் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. நம் பழைய நண்பன்தான். திருமலை எனப் பெயர்சூட்டப்பெற்று, வைணவ ஆச்சாரியர்களின் மீது தன் பற்றை வெளிக்காட்டத் தன் பெயரை 'ஆழ்வார்க்கடியான் நம்பி' என்று மாற்றிக்கொண்டவன்தானே இவன்?

வெகுதூரம் ஏரியின் கரையின் மீது திருமலை ஏறவேயில்லை. பின்பு, ஒரு பெரும் முயற்சி செய்து செங்குத்தாக உயர்ந்த ஏரிக்

கரையின்மீது சற்றுத் தட்டுத் தடுமாறி ஏறி உச்சியை அடைந்தான். அப்போதுதான் அவனுக்கு ஏரியின் நீரப்பரப்பு முதல் முறையாகக் கண்ணில் தென்பட்டது. நாம் ஏற்கெனவே கண்டு வருத்தப்பட்ட நீரின் நிலைமையை அவனும் பார்த்தான்.

அந்தப் பகுதி சீரும் சிறப்புமாய் இருக்கும்போது திருமலை அதைப் பார்த்துப் பரவசம் அடைந்திருந்தான். ஒரு காலத்தில் தண்ணீர் நிறைந்து தளும்பியிருந்த ஏரியில் இன்று நடுப் பகுதியிலிருந்துதான் தண்ணீர்ப் பரப்பு தொடங்கியது. அதுவும், நீரின் செங்காவி நிறம் வீரநாராயண ஏரியை ஒரு குளம் அல்லது குட்டை போலவே அவனுக்குக் காட்டியது.

மயக்கும் மோகினி போல அழகு வார்த்தை பேசி அலைகள் இரவில் படகை அழைத்துச் சென்றுவிடுவது ஒரு காலத்தில் இங்கு நடந்ததுதான். அதனால் படகுகளை உரிமையாளர்கள் கரைமீது நடப்பட்டுள்ள கம்பத்தில் கட்டுவது வழக்கம். பழக்க தோஷத்தில் அப்படிக் கட்டப்பட்டிருந்த படகுகள் தரை மீது சாய்ந்து களைப்பாறுவது போலக் காட்சி அளித்தன.

அடியான் சுற்று முற்றும் பார்த்தான். தூரத்தில் ஓர் இளைஞன் தனியாக அமர்ந்து ஏரியின் நீரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை அடியான் கவனித்தான். அவனது புரவி, அருகில் எதைப் பற்றியும் கவலையில்லாமல் புல் மேய்ந்து கொண்டிருந்தது.

அப்படி எதைத்தான் அந்த மனிதன் உற்றுக் கவனித்தான் என அவன் பார்க்கும் திசையை அடியானும் நோக்கினான். மாலைப் பொழுதில் நீண்டு கொண்டிருந்த நிழல்களுக்கு நடுவே அஸ்தமிக்கும் சூரியனை அந்த வீரன் பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. வேறொன்றும் அந்தத் திசையில் இருப்பதாகவும் அடியானுக்குத் தெரியவில்லை.

ஆழ்வார்க்கடியான் முதலில் அந்த இளைஞனின் அருகே சென்று நின்றான். அவனுக்கு மூச்சு வாங்கியதைக் கேட்ட பின்பே அந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான். அவனது எண்ண ஓட்டத்தை அந்த சப்தம் கலைத்து நிறுத்தியிருக்கவேண்டும். எந்த வகை மனித சப்தத்தையும் அவன் அந்த மோனச் சூழலில் எதிர்பார்க்கவில்லை போலும். உணர்ச்சியற்ற கண்களுடன் அருகில் நின்றவரின் முகத்தைப் பார்த்தான். அந்தப் பார்வையில் புதியவரை எதிர்கொள்கிறோம் என்ற ஆர்வம் ஓர் அணு அளவுக்கும் கிடையாது.

அந்த இளைஞன் அடியானைத் திரும்பிப் பார்த்துவிட்டுப், பின் அவன் பார்த்துக் கொண்டிருந்த ஏரியை மீண்டும் நோக்கலானான்.

தன்னைவிட ஏரி அவன் ஆர்வத்தைக் கவர்ந்ததில் அடியானுக்குச் சற்று வருத்தம்தான். அந்த இளைஞன் அவனைக் கண்டு கொள்வது போலில்லை என அடியானுக்கு இப்போது நன்கு தெரிந்தது. ஆனால், அடியான் அதை அப்படியே விட்டு விடுவதாகவும் இல்லை. இதற்காகவா இவ்வளவு தூரம் வந்தான்?

அவன் வந்து நின்றதை அமர்ந்திருந்தவன் பார்த்துவிட்ட போதும், அவனைக் கவனிக்காமலிருந்ததால் தன் வரவைத் தெரிவிக்க அடித் தொண்டையிலிருந்து கனைத்து ஒரு சப்தத்தை எழுப்பினான் அடியான்.

அந்த ஒலி தன் காதில் விழாதது போல, அமர்ந்திருந்தவனும் பார்த்த திசையையே பார்த்துக் கொண்டிருக்க, இருவருக்கும் இடையில் ஒரு திரைமறைவுப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது. அடித் தொண்டைச் சப்தம் தோல்வியடையவே, பேச்சுக் கொடுத்தாவது அவன் வாயைக் கிளறுவது என முடிவெடுத்தான் அடியான்.

"ஆடிப் பெருக்கின் போதுகூட ஏரியில் நீர் இல்லை போலும்" என்றான், தெரிந்ததையே திருப்பிக் கேட்கும் தோரணையில். ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக் அலைமோதிக் கொண்டிருப்பதும் அப்போதுதான்.

வாய்க்குள் ஏதோ முனகியவாறு "உம்" என்று உறுமினான் அந்த இளைஞன். அவனது தனிமை பறிபோனதை அவன் கொஞ்சமும் விரும்பவில்லை. அதை இந்த வைணவன் புரிந்து கொள்ளாததில் அவனுக்கு ஓர் எரிச்சல் இருந்தது. தொடர்ந்து இந்த வைணவன் பேசிக்கொண்டே இருப்பான் போலும் என்று உணர்ந்த வாலிபனுக்கு வேறொரு மனிதனின் குரல் நாராசமாய் இருந்தது. அமைதியே செவிகளுக்கு யாழிசை போல இருந்தது. அதற்காகவல்லவா இந்த ஏரிக் கரைக்கு ஐந்து ஆண்டுகளாகத் தினந்தோறும் வந்து கொண்டிருந்தான்.

என்ன பேசினால் அவன் வாயை மேலும் கிளறலாம் என்று அடியான் ஒரு நொடி யோசித்தான். மனித உணர்வுகளைப் பாடம் போல் பயின்ற அடியானுக்கு அதில் ஒரு சிரமமும் இல்லை. இளைஞன் அருகில் புல் தரையில் ஓர் இடம் பார்த்துச் சற்று கஷ்டத்துடன் அடியான் அமர்ந்தான். அந்தப் பருமனான உடலைச் சிரமத்துடன் வளைத்துப் பின் குனிந்து மெல்ல மெல்லத்

தரையில் அமர்ந்து பெருமூச்சு விட்ட அடியானை உற்றுக் கவனித்தான் அந்த இளைஞன். அடியானின் வினோதமான உடலும் அவனது அங்க அசைவுகளும் அவனுக்குச் சற்று ஆவலை உண்டாக்கி இருக்க வேண்டும். எனினும் அவன் வாய் திறந்து பேசுவதாகத் தெரியவில்லை.

பொறுமை இழந்த அடியானும் பிரம்மாஸ்திரத்தை ஏவி விட்டான். "தம்பி, இன்று இரவுக்குள் நான் கடம்பூர் மாளிகையை அடைய முடியுமா?"

அந்த இளைஞன் தன்னை யாரோ பிடித்து உலுக்கியது போல் அதிர்ந்தான். முதல் முறையாகப் பேசினான். "உமக்கென்ன அங்கு வேலை?" என வினவினான்.

"ஓ! நீர் பேசுவீரோ? ஊமை என அவசரப்பட்டுப் பரிதாபப் பட்டு விட்டேனே! என்னை மன்னித்து அருள வேண்டும். சரி, அது போகட்டும், எவ்வளவு தூரம் என்று கேட்டால், என்ன வேலை என்று வினா எழுப்புகிறாயே, தம்பி. சோழ நாடு மிகவும் திமிர் பிடித்துப் போய்விட்டது. கேள்விக்குப் பதில் கேள்வி தானா!" எனச் சொல்லிச் சிரித்தான் அடியான்.

அந்த வாலிபன் திருமலையை உற்றுப் பார்த்தான். அடையாளமும் கண்டு கொண்டான். வீர வைணவர் ஆழ்வார்க்கடியான் சில காலமாகப் பொது மக்கள் கண்களில் தென்படாமல் இருந்ததால், அவரை மக்கள் பெரும்பாலும் மறந்திருந்தனர். வாலிபன் மெல்லிய குரலில், "உங்களை எனக்கு அடையாளம் தெரிகிறது ஐயா" என்றான். "உன்னையும் எனக்கு நன்கு அடையாளம் தெரிகிறது, கந்தமாற இளவரசே" என்றான் திருமலை. "அதனால்தான் கடம்பூருக்குச் செல்ல எவ்வளவு நேரமாகும் எனக் கேட்டேன்."

தன் தனிமை பறிபோனது பற்றி ஒரு வருத்தம் இருந்தாலும், தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கடம்பூர் இளவரசன் மாறன் உணர்ந்தான். விருந்தாளிகள் வரவேற்கப்பட வேண்டும் என்று சிறு வயதிலிருந்து அவனுக்குக் கற்பிக்கப்பட்டது ஞாபகம் வந்தது.

"ஐயா! தற்போது எங்கள் வீட்டுக்கு அதிகம் விருந்தாளிகள் வருவதில்லை. அதனால் என் கடமையை மறந்தேன். வர வேண்டும் ஐயா. எங்கள் இல்லம் தங்கள் வரவால் பாக்கியம் பெறும்" என்றான். மாறனின் கபடமற்ற குரல் அவனது வரவேற்பில் உள்ள மெய்ம்மையை உணர்த்தியது.

"உம்மைக் காணவே நானும் வெகு தூரத்திலிருந்து வந்தேன், இளவரசே" என்றான் திருமலை.

"தன்னையும் காண ஒருவரா? அதுவும் வெகு தூரத்திலிருந்தா?" தன் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தை மறைத்துக் கொண்டான் மாறன். அருகில் புல் மேய்ந்து கொண்டிருந்த தன் புரவியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு கோட்டைக்குச் செல்லும் வழியை அடியானுக்குக் காட்டிவிட்டு முன் நடந்தான். வளைந்து சென்ற ஏரிக் கரையின் மீது இருவருமாக மெல்ல நடக்கலானார்கள்.

கடம்பூர் தனது பொற்காலத்தில் மாயாபுரியாக விளங்கியது என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. நகருக்கு நெடுந் தூரத்திலிருந்தே அதன் வளமையை அந்நாளில் காண முடியும். ஆனால், இன்று போகும் வழியெல்லாம் மனிதக் குடியிருப்புகள் குறைவாகவே இருந்தன.

இருவரும் சற்று நேரம் நடந்தவுடன், ஏரிக் கரையின் மீதிருந்து இறங்கினார்கள். சற்றுத் தூரத்தில் சில ஓட்டு வீடுகளும் அவற்றைச் சுற்றிக் குடிசைகளும் கண்களுக்குத் தென்பட்டன. கூரை வழியே புகையும், வாசல் வழியே வாசமும் வந்து, அங்கு இரவு உணவு தயாராவதைக் காட்டிக்கொடுத்தன. வீசிய அந்த மணத்தை முகர்ந்தவுடன் அடியானின் வயிறு காலையிலிருந்தே தான் உணவு அருந்தவில்லை என்பதை ஞாபகப்படுத்தியது. அவன் வயிற்றை லேசான ஒரு வலி கிள்ளியது. வீடுகளின் வெளியே அசை போடும் மாடுகள் உண்ட களைப்பில் இருப்பதைக் கண்டவுடன் பசி இன்னும் அதிகரிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

மெல்லப் பேச்சுக் கொடுத்தான் இளவரசன். "உம்மை வெகு நாட்களாகக் காணவில்லையே." ஒரு காலத்தில் எங்கெல்லாம் அரசியல் குழப்பங்கள் இருந்தனவோ அங்கெல்லாம் அடியானையும் பார்க்கலாம்.

"வடநாட்டில் உள்ள திவ்விய தேசங்களுக்குச் சென்று வந்தேன். அதனால் தான் இரண்டு ஆண்டுகளாக நான் எங்கும் தென்படவில்லை" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டான் அடியான். "வட பாரதமும் அரசியல் சூறாவளியில் தவிக்கிறது. வட மதுரா நகரை ஓர் அன்னியர் குலம் ஆக்கிரமித்துப் பூஜைகளைத் தடுத்து விட்டார்கள்" என்றான்.

ஒரு திருப்பத்தின் பின் சாலையின் முடிவில் ஒரு சிறிய மலை போன்று காட்சி தந்தது கடம்பூர்க் கோட்டை. பயங்கரமான போரின் இறுதியில் இருக்கும் யுத்த களம் போலத்தான் அது

தென்பட்டது. எதை எதிர்கொள்ளப் போகிறோம் எனத் தெரிந்தே வந்த அடியானுக்கே அதைக் கண்டதும் ஓர் அதிர்ச்சி. கடம்பூர்க் கோட்டை சரித்திரத்தின் பாதையின் நடுவே நின்று கொண்டிருந்த ஒரு சின்னமாய் இருந்த காலம் போய்த், தன் பழமையை வெளிக் காட்டிக் கொண்டிருந்த ஒரு கற்குவியலாகத்தான் இன்று இருந்தது.

அஸ்தமனமாகும் கதிரவனின் கதிர்கள் மனிதப் பார்வையின் மீது தன் மாயாஜால வித்தைகளைக் காட்டும் அல்லவா? இந்த நேரத்தில் இல்லாதது இருப்பது போலவும், அதற்கு நேர்மாறாக இருப்பது இல்லாதது போலவும் மனிதக் கண்களுக்குத் தெரிவது சகஜம். மாலை நேர ஞாயிற்றின் கதிர்கள் அந்தப் பாழடைந்த கோட்டையின் மீது செப்புத் தகடுகள் பொருத்திக்கொண்டிருந்த காட்சி ஒரு விதத்தில் அந்தக் கோட்டை பற்றி எரிந்த நாளை நினைவு படுத்தியது. அங்குதான் இரவைக் கழிக்கப்போகிறோம் என ஒரு நிமிடம் நினைத்த அடியானின் உடம்பில் உரோமங்கள் குத்திட்டு நின்றன. உடலெங்கும் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

கோட்டை வாசல் இருந்த இடத்தில் சில ஆட்கள் நின்றிருந்தனர். மாறனுக்காகத்தான் அவர்கள் காத்திருக்க வேண்டும். அதுவும் தினந்தோறும் இதே வேளையில் காத்திருப்பதாகவும் தெரிந்தது அடியானுக்கு. தனியாய்ச் சென்ற சின்ன எசமானர் தன்னுடன் மற்றும் ஒருவரை- அதுவும் தன் உடலெல்லாம் வைணவ பாஷாண்டங் களை இட்டுக் கொண்டிருந்த பக்திமான் ஒருவரை அழைத்து வந்தது அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கோட்டையின் அருகே தயாராய்க் காத்திருந்த பணியாட்கள் குதிரையைப் பிடித்து அப்பாலே கொண்டு சென்றார்கள். அந்தக் குதிரையோ எஜமான னைப் பிரியும் வேதனையில் சோகக் களைப்புக் கனைத்தது. திரும்பி அதன் முகத்தைத் தடவிக் கொடுத்துவிட்டு மாறன் அவசரமாக நடந்தான்.

கடம்பூர் மாளிகை தீயில் எரிந்தபோது கரியேறிய தூண்களும் சுவர்களுமாக நின்ற கோரக் காட்சியைத் தூரத்திலிருந்தே பார்த்து விட்டு மேலே நடக்கலானார்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கோலாகலமாக ஆடிப்பாடி விருந்துண்டு மகிழ்ந்திருந்த இடம் இது. இன்றோ ஓர் கருகிய கற்குவியல்.

"வர வேண்டும் எங்கள் மாளிகைக்கு" என்றான் மாறன். ஒரு விரக்தியான சிரிப்புடன். இடிபாடுகளின் ஒதுக்குப்புறமாக ஒரு மிகப் பெரிய ஓட்டு வீடு இருந்தது. ஆனால், எந்த அளவு கோலினாலும் அதை மாளிகை எனக் கூற இயலாது.

ஒரு காலத்தில் சம்புவராயர் குலத்தினர் இப்படிப்பட்ட வீடுகளில் மழைக்குக் கூட ஒதுங்கியிருக்க மாட்டார்கள் என அடியானுக்குத் தெரியும். "எதற்கும் சித்தமாயிருக்க வேண்டும் அரச குலம்" என நினைத்துக் கொண்டான் அவன்.

பேச்சுக் குரல் அருகே வருவதை யூகித்த ஒரு முதிய பெண்மணி அந்த வீட்டிலிருந்து வெளியே வந்துவிட்டார். இருட்டிலும், செளந்தரியம் பொருந்தியது அவரது முகம் என அடியானுக்குத் தெரிந்தது. அது மாறனின் தாயாகத்தான் இருக்க வேண்டும் என ஊகித்தான் அடியான். சம்புவராயர் பட்டத்தரசி வாசற்படியில் ஏற்றப்பட்ட தீப் பந்தங்களுக்கு இடையே வந்து நின்றார்.வாசற்படியை இவர்கள் நெருங்கியபோது, "குழந்தாய்! வந்தாயா?" என்று அவரது குரல் கேட்டது.

"அம்மா! விருந்தாளி வந்திருக்கிறார்" என்று மாறன் கூற, ஆழ்வார்க்கடியான் அடக்க ஒடுக்கத்துடன் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து நின்றான்.

தினமும் தனியாய் வரும் தன் மகன் ஒரு விருந்தாளியை அழைத்து வந்திருக்கிறான் என அறிந்து, ஒரு பெண்ணின் உள்ளுணர்வோடு தன் ஆடைகளைச் சரி செய்து கொண்டார் மாறனின் தாய்.

தன் கால்களைக் கழுவிவிட்டு உள்ளே செல்வது என்ற நோக்கத்துடன் அருகில் இருந்த தண்ணீர்த் தொட்டியின் சமீபத்தில் சென்ற போது, வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான் அடியான். ஒரு காலத்தில் வான்ளாவி நின்று காட்சியளித்த கடம்பூர்க் கோட்டை இன்று அனுமார் அழித்த அசோக வனமாக மாறியிருந்தது.

தலைகளுக்கு மேல், கோட்டான்கள் அலறியவாறு இங்குமங்கும் பறந்தன. அவற்றின் குரலைக் கூர்ந்து கேட்டான் அடியான். கோட்டான்களின் கூச்சலில் ஒரு அர்த்தம் இருந்தது போல் கேட்பவர்களுக்குத் தோன்றியது. "கடம்பூர் சம்புவரயாருடையது அல்ல, இந்தக் கோட்டை. இனிமேல் எங்களுடையது!" என்று அவை கூவுவது போல் இருந்தது.

அடியானுக்கு அதிலும் ஒரு உண்மை . இருப்பதாகவே தோன்றியது.

❖ ❖ ❖

அத்தியாயம் இரண்டு

நள்ளிரவில் நடுக்கம்

திடீர் விருந்தாளியை வரவேற்று, வெகு விரைவில் இருவருக்கும் இரவு உணவு தயாரித்து விட்டார் மாறனின் தாய். ஒரு காலத்தில் உதவிக்குப் பல பணிப்பெண்கள் இருந்து பழகிப்போன அவருக்கு அடுப்படி வேலை புதிதாய் இருந்திருக்கும் என அடியான் நினைத்துக் கொண்டான்.

அடுப்படி உள்ளே செல்லுமுன், "மாடிக்கு அவரை அழைத்துப் போ, மகனே. அங்கு அனுப்பி விடுகிறேன் உணவை" என்றார். ஒரு மரப்படியில் ஏறி இருவருமாய் மாடிக்குச் சென்றார்கள். மாறன் தங்கியிருந்த வீடு முதல் மாடியில் பாதி சரிவான ஓடுகளாலும், மீதி சமமான தரையாகவும் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சம தளத்தில்தான் மாறன் தன் இரவுகளைத் தினமும் கழிப்பான் என அடியான் யூகித்துக் கொண்டான்.

அடியானுக்கு மாடியை அடைந்தவுடன் வேறு உலகத்துக்கு வந்தாற்போல் இருந்தது. தலைக்கு மேல் வானமெனும் பெண் தன் கரிய கூந்தலை அவிழ்த்து விட்டிருந்தாள். தேய்பிறையின் வெளிச்சம் அதிகமாக இல்லாவிடினும் நட்சத்திரங்கள் இருட்டில் ஜொலித்துக் கொண்டிருந்தன. "மாடியில் தரை சற்றுக் கடினமாக இருக்கும்" என்றான் மாறன்.

"அது பரவாயில்லை, இளவரசே. இரண்டு ஆண்டுகளாகக் கோயில் பிராகாரத்தில்தான் தினமும் தூங்கி வந்தேன்" என்று பதிலளித்தான் அடியான்.

உணவும் வந்தது. எடுத்து வந்த பணியாள் ஒரு கை விளக்கையும் கொண்டு வந்தான். மாறனின் தாய் ஒரு தட்டில் அடைகளைக் கோபுரம் போல அடுக்கி அனுப்பியிருந்தார். அதைக் கண்டவுடன் அடியானின் முகம் மலர்ந்தது. தொட்டுச் சாப்பிடக் காரமாகத் துவையல் ஒன்றும் அரைத்துக் கொடுத்திருந்தார். ஒரு குவளையில் காய்ச்சிய பாலும், ஒரு சீப்பு வாழைப்பழங்களும் கூட வந்தன. உணவைக் கொண்டு வந்த பணியாள் அதை இருவர் முன்பாகவும் வைத்துவிட்டுச் சற்று அப்பால் சென்று இரு பாய்களை மாடியின் நடுவே விரித்தான். பின் ஓரமாக அடக்கத்துடன் நின்றான்.

அடியானின் வயிற்றுப் பசியில், வந்த உணவு சுவைகூடப் பார்க்க நேரம் இல்லாமல் தீர்ந்து போனது. சற்று நேரத்தில் மீதம் இருந்தது பாத்திரங்களும் வாழைப்பழத் தோல் குவியலுந்தான்.

அதற்குப் பின் மாடியின் ஓரமாகச் சென்று இருவருமாகக் கையைக் கழுவிவிட்டு மெல்ல நடந்து விரித்திருந்த பாய்களின் சமீபத்தில் சென்றார்கள்.

படுத்து ஒரு வினாடியில் தன்னையறியாமல் கண்ணயர்ந்தான் அடியான். உள்ளத்தில் கேட்பதற்கு எத்தனையோ கேள்விகள் தோன்றிக் கொண்டிருந்தபோதும், எல்லாம் பிறகு விவரமாய்க் கேட்கலாம் என அவனைத் தொந்தரவு செய்யாமல் உறங்க விட்டு விட்டான் மாறன்.

ஆனால், அடியானின் தூக்கம் அமைதியாய் இல்லை. ஏதோ காரணத்தினால் சற்று நேரத்திலெல்லாம் கண் விழித்தான். ஆழ்ந்த அமைதியாய் இருக்கும் இரவுகள் என ஏட்டில்தான் படித்திருந் தான் அடியான். அரைத் தூக்கத்தில் படுக்கையில் புரண்டு கொண் டிருந்தவனுக்குக் கேட்கும் ஒலிகள் கிலியைத்தான் தூண்டின.

இரவு நேரத்தில் எழுந்த பலவகை சப்தங்களை அவனால் பிரித்து வகைப் படுத்திப் பார்க்க முடியவில்லை. எவை பட்சிகளிடமிருந்து வந்தவை, எவை மனிதனைப் பயப்படுத்தும் பேய் பிசாசுகளின் குரல்கள் என்று வேறாக்கிப் பார்க்க முடியவில்லை. கற்பனா சக்தி வேறு மனிதனுக்குப் பயத்தை அதிகரிக்குமல்லவா?

காற்றின் சீற்றத்தால் பற்பல சத்தங்கள் வந்தன. சலசலவென ஓசை எழுப்பின மரத்தின் இலைகள். வீராவேசத்துடன் காற்று இடிபாடுகளுக்கு நடுவில் பாய்ந்தது. அந்த சப்தம் இதே இடத்தில் மாண்டு போன ஆதித்த கரிகாலன், அவன் தன் அந்திம நிமிடத்தில் அலறுவது போலப் பயந்திருந்த அடியானுக்குத் தோன்றியது. அந்த சப்தத்தைத் தொடர்ந்து அவன் அருகில் ஒரு உருவம் வந்ததைக் கவனித்தான்.

'அருகில் வருவது யார்? வானத்திலிருந்து இறங்கி அவனை நெருங்கி வரும் அந்த உருவம் மெல்ல மெல்ல மனித உருவம் கொள்கிறதே! முகத்தில் வெறியும் கோபமுமாய் இருக்கிறதே!'

ஆகா! நினைத்தது சரிதான். வந்தது ஆதித்த கரிகாலனேதான். அவன் இறந்த பின் அவன் முகத்தைப் பார்த்து விட்டவன் உயிர் உள்ளவரையில் அதை மறக்க மாட்டான் என்று அடியானுக்குத் தெரியும். சுந்தர சோழர் வம்சத்தில் ஆணாகட்டும், பெண்ணா கட்டும், மேனி அழகுக்குப் பெயர் போனவர்கள். அதில் மூத்தவன் ஆதித்தன். ஆணுக்கு என்ன அழகு? உடம்பில் எத்தனை எத்தனை போர்க் காயங்களைப் பெறுகிறார்களோ, அவ்வளவு அழகுடைய வர்கள் என்ற தமிழ் மரபின் கணக்கைப் பார்த்தாலும் அவன் அழகன்தான்.

கதைகளிலும், காவியங்களிலும் வரும் எத்தனையோ வீரர்களுக்குச் சமமானவன் அவன். அப்படியொரு வீரன். ஆனால் இறந்தபோது அவனிடம் குடி கொண்டிருந்த உணர்வுகளை அவனது அழகுமுகம் பிரதிபலித்தது. கோபம், ஏமாற்றம், பயம், கவலை, வெறி என்ற அந்தக் கலவையில் அவன் முகம் கோரமாய் இருந்தது.

'செத்துப்போன இடத்தின் மேல் ஆவியாய்ச் சுற்றி வருபவ னிடம் மாட்டிக் கொண்டோமே. அவன் குருதித் தாகத்துக்கு நாம் இரையாகப் போகிறோமோ?' எனப் பயந்தான் அடியான்.

அந்த ஆவி அவனை நோக்கிப் பேசியது. "என்னைக் கடம்பூர்க் கோட்டைக்கு வரவிடாமல் தடுத்திருக்கலாம் அல்லவா? ஏன் செய்யவில்லை? சோறிட்ட சோழர் குலத்துக்குத் துரோகம் செய்தவனே! உன்னை நான் என்ன செய்கிறேன், பார்" என்றது.

நடுக்கம் கொண்ட குரலில் வைணவன் கெஞ்சினான். "ஐயா! நன்றாய் நினைவு படுத்திப் பாருங்கள். நானும் வந்தியத் தேவனும் வந்து உம்மைத் தடுத்தோம். உங்கள் பாட்டனார் மலையமானும் எடுத்துக் கூறினார். நீங்கள் கேட்க வில்லையே?"

அந்தப் பதிலில் ஆவி சாந்தமடையவில்லை. "ஏய் வைணவனே! நீ என்னிடம் இன்னும் அழுத்தமாய் அபாயத்தைப் பற்றிச் சொல்லி யிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் இப்போது என்னை எதிர்த்தா பேசுகிறாய்? மேலுலகம் சென்றவுடன் யாரைப் பார்த்தேன், தெரியுமா? தலையில்லாமல் முண்டமாய்த் திரியும் வீர பாண்டியனைப் பார்த்தேன். அவன் கூட என்னைக் கண்டு ஓடி ஒளிந்துவிட்டான். உன்னையும் விட மாட்டேன்!" எனக் கூறி மெல்ல மெல்ல நகர்ந்து அருகில் வந்தது அந்த உருவம்.

அடியானின் காதுகள் அதற்கு மேல் எதையும் கிரகிக்கவில்லை. உள்ளே அல்லது வெளியே செல்லாமல் மூச்சின் வழியை ஏதோ அடைத்தது. பயம் நெஞ்சை அழுத்தியது. மூச்சு விடவே திணறினான். ஹிருதயம் படபடவென அடித்தது. அது இருக்க வேண்டிய இடத்தை விட்டு வெளியே குதிக்கப் பார்த்தது.

அடியானை ஒரு பீதி பீடித்திருந்தது. இன்று இரவு மட்டும் உயிர் தப்பிப் பிழைத்தால் போதும் என்ற ஒரு உணர்வில் விஷ்ணு சஹஸ்ரநாமத்தைத் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால், அந்த உருவம் ஒரு நிழல் போல அவன் மேல் படரத் தொடங்கிவிட்டது.

"ஒன்றும் பிரயோசனம் இல்லை. இன்று நம் கதை முடிந்தது. திருமலை என்ற ஒற்றன் தூக்கத்தில் மாண்டு போனான் எனச்

சரித்திரம் எழுதும்'' என்ற முடிவுக்கு வந்தான். கடைசி முறையாகக் கண் திறந்து அந்த உருவத்தைப் பார்த்து விடுவது என முடிவெடுத்து, பெரும் முயற்சி செய்து கண் திறந்தான். தூக்கமும் கலைந்தது.

வியர்த்துப் போயிருந்தது அவனது உடல். வியர்வையில் நனைந்து போயிருந்தது அவன் பாய். 'இல்லை, இல்லை. இங்கு இனிப் படுக்கக் கூடாது. கீழே சென்று விட வேண்டும்' என முடிவு செய்து, அருகில் படுத்திருந்த மாறனை எழுப்ப எண்ணி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தால், மாறனது பாய் காலியாக இருந்தது.

ஏதாவது பேச நினைத்த அடியானுக்கு மூச்சுத் திணறலில் அவதிப் படுபவன் போல வெறும் காற்றுத்தான் வெளியே வந்தது. அந்தப் பரந்த மொட்டை மாடியில், பயங்கரமான நள்ளிரவில் தான் தனியாக இருப்பதை எண்ணிச் சுற்று முற்றும் பயத்துடன் பார்த்தான்.

அடியானின் கண்களுக்கு மாறன் மாடியின் ஓரத்திலிருந்து எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்து தெரிந்தது. ''நல்ல வேளை, நாம் தனியாக இல்லை'' என்று தெரிந்தவுடன் ஒரு பெருமூச்சுவிட்டு இன்னும் உற்றுப் பார்த்தான் மாறனை.

தாங்க முடியாத சோகம் வந்து மாறனை மேலிருந்து அழுத்துவது போலத் தோன்றியது. பழைய நினைவாய்க் கிடந்து இரவெல்லாம் உறங்காமல் கஷ்டப்படுவான் போலிருக்கிறது. தினம் தினம் இதே படலம்தான் போலும். பாய் விரித்திருந்தாலும் அவன் கண் விழித்தே கிடக்கும் வகை என அடியான் உணர்ந்தான்.

சம்புவராயர்களின் சரித்திரத்தை அறிந்தவர்களுக்கு அதில் ஒரு அதிசயமும் இல்லை. சில காலத்துக்கு முன்பு வரையில் கவலை என்பதே அறியாதவர்கள் இந்தச் சம்புவராயர்கள். வாழ்க்கை என்பது ஒரு சந்தோஷமான விடுமுறை என்று எண்ணும்படியாக நாட்களைக் கடத்தினார்கள். தினந்தோறும் அன்பும் ஆதரவும், ஆடலும் பாடலும் என்று காலமும் நகர்ந்தது.

பின்பு, ஒரு குலத்தில் இவ்வளவு மகிழ்ச்சியா என விதியின் கண்ணே பட்டது. அணிமணியும் அலங்காரமுமாய்த் திரிந்து வந்த இவன் தங்கை, இன்று இவர்களுடன் இல்லை. வீட்டை வாழ வைத்த திருமகள் போலிருந்த அவளின் பிரிவுக்குப் பின் இந்த இடமே சூன்யமாய்ப் போனது. காவியமும் ஓவியமும் படைத்துக் கொண்டு அவர்கள் வாழ்ந்த அதே இடத்தில் இன்று இடைவிடாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர் சம்புவராயர்கள்.

மாறன் தினந்தோறும் முழு இரவும் தூங்குவதில்லை, என்றாலும் சற்று நேரமாவது கண் அயர்வான். இன்று அவன் உறக்கம் முழுதாய்க் கெட்டது இந்த விருந்தாளியினால். அருகே இருந்த பாயில் படுத்திருந்த மாறன், அடியான் குழந்தை போலத் தூங்குவதைக் கண்டு முதலில் வியந்தான். அவனது இமைகள் படுத்தவுடன் உறக்கத்தின் கனத்தில் கீழ் இறங்குவது, ஐந்து ஆண்டுகளாக இரவு நேரங்களில் போராடும் மாறனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. நித்திரா தேவி அவனை அணைத்தவுடன் இந்த வைணவன் முகம் சிலை போலக் காட்சி தந்தது. அதுவும் தேய் பிறை நிலவின் ஒளியில் அவன் முகம் ஒருவாறு பயத்தைக்கூடத் தந்தது.

ஆனால், வைணவன் அமைதியாய்த் தூங்கியது என்னவோ ஓரிரு நிமிடங்கள்தான். பின் சற்றுக் கனத்த மூச்சுகளாக உள் வாங்கி வெளிவிட்டான். அவன் குடுமியிலிருந்து விடுதலை பெற்ற ஒரு நீள முடி மட்டும் ஒவ்வொரு குறட்டைக்கும் முன்னும் பின்னுமாய்ச் சென்று வந்தது. பின்பு ஒரு சிறிய சப்தம்- ஒரு பூனைக் குட்டியின் ஒலியைப் போல் அவனது சற்றே திறந்த வாயிலிருந்து வெளி வந்தது. பின்பு அது வெகுவாக அதிகரித்துச் சிங்கத்தின் உறுமலானது. கடைசியாகக் காயப்பட்ட காட்டெருமையின் கதறலுக்கு ஈடான சப்தமாய் உரு மாறியது.

'இனித் தூங்கியது போலத்தான்!' என்று சலித்துக் கொண்டான் மாறன். முதலில் பாயைத் தள்ளிப் போட்டுக் கொள்ளலாமா என நினைத்தான். ஆனால், இந்தக் குறட்டைச் சப்தம் கடம்பூர் எல்லை வரை கேட்டால் கூட அதிசயம் இல்லை.

தன் போர்வையைத் தள்ளி விட்டு மாடியின் ஓரத்துக்குச் சென்று இருட்டினில் தன் பார்வையைச் செலுத்தினான். மாறனின் மனமும் சும்மா இருக்கவில்லை.

'சட்டாயம் இவன் ஏதோ ஒரு காரியமாகத்தான் வந்திருக்கிறான்' என உணர்ந்தான். 'சோழியன் குடுமியும் சும்மா ஆடாதே.'

'இந்த வைணவன் நிச்சயமாக வேவு பார்க்க வந்திருக்கிறான்' என முடிவு கட்டினான். ஆனால், அதிசயத்திலும் அதிசயம். இவன் எப்படி ஒற்றனாய்க் காலம் கடத்த முடியும்? இவன் குறட்டைச் சப்தமே இவனைக் காட்டிக் கொடுத்துவிடுமே.

பின்புதான் மாறனுக்குப் புரிந்தது. 'இல்லை, இல்லை. இதுதான் அவன் பலமே. அதி சமர்த்தன் இந்த அடியான். இவனை யாரும் ஒற்றன் என நினைக்காத அளவுக்கு இவன் ஒரு சாமானியன் போல நாட்டுக்குள் உலவுகிறான்.'

மாறன் மனதுக்குள் ஒரு சபல உணர்வு தோன்றியது. 'ஒரு வேளை வந்தியத் தேவன்தான் தூது விட்டிருந்தானோ? அவனும் இந்த வைணவனும் நெருங்கிய நண்பர்கள் ஆயிற்றே!'

பின்பு அப்படி இருக்காது என முடிவுக்கு வந்தான். "நம் மனம் ஏன் பிதற்றுகிறது? அவன் ஏன் என்னை அழைக்க வேண்டும்? அதுவும் ஐந்து ஆண்டுகள் உருண்டோடிய பின். வந்தியத் தேவனுக் கென்ன நண்பர்களுக்கா பஞ்சம்? அருள் மொழி வர்மரின் அரு ளுக்குப் பாத்திரமான அந்தப் பாக்கியசாலி, என்னைப் போன்று வாழ்வில் பின்தங்கியவரிடம் ஏன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்?"

குறட்டைக்கு மாறுபட்ட ஏதோ சப்தம் கேட்க, மாறன் திரும்பிப் பார்த்தால், அந்த வைணவன் எழுந்து உட்கார்ந்து விட்டான் என்று தெரிந்தது. அவன் குறட்டைச் சப்தம் அவனையே தூங்க விடவில்லை போலும். அடியானும் மெல்ல எழுந்து மாறனின் அருகே வந்து இருட்டை நோக்கினான்.

வந்ததிலிருந்து அடியானுக்கு இந்தக் கட்டடம் எதையோ நினைவு படுத்துவதாகவே தோன்றியது. ஆனால், என்ன என்று தான் தெரியவில்லை. ஏரியின் பக்கத்தில் பார்த்த அடியானுக்குத் தூரத்தில் இருட்டின் நடுவில் தகதகவென ஒரு கலங்கரை விளக்கம் போலத் தெரிந்தது. தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. தீயின் தாண்டவத்துக்கு மேலே கரிய புகை மண்டலம் அடர்ந்திருந்தது.

"மாடு மேய்ப்பவரின் வேலையாக இருக்குமோ?" என்று அடியான் கேட்க.

"அது இடுகாடு" என்று சொல்லித் தலையைத் திருப்பிக் கொண்டான் மாறன்.

உடனே அடியானின் மனதில் மின்னல் போன்ற ஓர் எண்ணம் வந்தது. அந்தியில் அந்தக் கற்குவியல் ஒரு பள்ளிப்படையைத்தான் நினைவூட்டியது. வீரர்கள் மாண்ட பின்பு அவர்கள் நினைவாகக் கட்டப்படும் பள்ளிப்படைகளுக்கு அருகே மக்கள் அதிகம் போக்குவரத்து வைத்துக் கொள்ள மாட்டார்கள். அது சில நாட்களில் பாழடைந்து, பேய்களின் உறைவிடமாக மாறிவிடும்.

ஆம்! ஆதித்த கரிகாலன் எனும் ஒரு மாபெரும் வீரன் கொலை யுண்ட இடம் அல்லவா இந்தக் கடம்பூர்க் கோட்டை. சோழ குலத்து முன்னோரில் மிகப் புகழ் பெற்ற கரிகால் வளவன் பெயரையும் அவன் பெரிய பாட்டனார் இராஜாதித்தியர் பெயரையும் சேர்த்து "ஆதித்த கரிகாலன்" என்று நாமகரணம் செய்யப்பட்ட சோழ குலத்தை விளங்க வைப்பதற்குப் பிறந்து வந்த இளவரசன் இவ்விடத்தில் தானே கேட்பாரற்றுப் பிணமாய்க் கிடந்தான்.

"நள்ளிரவு பயமூட்டும்படிதான் இருக்கிறது!" என்று அடியான் ஒரு நடுக்கத்துடன் கூற. "ஒரு நள்ளிரவில் நடந்ததுதான் இந்த நிலைமைக்கு எங்களைக் கொண்டு வந்து விட்டது" என்று புலம்பினான் மாறன்.

எந்த இரவைப் பற்றி இவன் பேசுகிறான் என்று அடியானுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த ஊரில்தான் அந்த நள்ளிரவுக் கூட்டம் நடந்தது. அதுவும் சோழர் பரம்பரைக்கு ஒரு சவாலாய் நடந்தது. அதில்தான் அடுத்து யார் தஞ்சையில் அரியணை ஏற வேண்டும் என முடிவு செய்ய எண்ணியிருந் தார்கள், சிற்றரசர்கள்.

மாறன் தொடர்ந்தான் "அன்று இங்கு நடந்த விருந்தின் விமரிசையைச் சொல்லி முடியாது. ஏதோ திருமண வைபவத்தின் போது நடப்பதைப் போல் விருந்துகளும் கோலாகலங்களும் நடைபெற்றன. ஆனால், விருந்தோம்பலில் எங்கள் பொக்கிஷச் செல்வம் மட்டும் அழியவில்லை. என் முன்னோர்கள் காலத்தி லிருந்து நூறு ஆண்டுகளாகச் சேர்த்து வைத்திருந்த நன்மதிப்பு அவ்வளவும் அந்த மூன்று நாள் கொண்டாட்டத்தில் தீர்ந்து போய் விட்டது! அதில் யாரெல்லாம் இருந்தார்கள் தெரியுமா? குன்றத் தூர்க்கிழார், வணங்காமுடி முனையரையர்..." என ஆரம்பிக்கான்.

"தென்னவன் மழவரையர், சிங்க முத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார் மற்றும் மூடு பல்லக்கில் சோழர் குலக் கொழுந்து மதுராந்தகத் தேவர் கூட இருந்தார்" என முடித்தான் அடியான். ஆழ்வார்க்கடியான் பெயர்களை அடுத்தடுத்து எடுத்துக் கொடுத்தவுடன் அதிர்ச்சியில் மாறன் அவனை உற்றுப் பார்த்தான்.

ஆச்சரியத்துடன் நோக்கிய மாறனிடம், "நானும் அந்த நள்ளிரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன், அழையா விருந்தாளி யாக" எனத் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டான் அடியான்.

அதைக் கேட்ட மாறன், 'ஒஹோ, மாடியிலிருந்து கவனித்து அவனது எஜமானர்களிடம் அதை வார்த்தை வார்த்தையாகச் சொல்லியிருப்பான் போலும்' என யூகித்தான். ஆனால், ஒன்று. இந்த ஊரில் பாதிப் பேர் பனை மரத்தில் ஏறுவதுதான் தினந் தோறும் செய்யும் ஒரே காரியம். ஏறி மிடா மிடாவாய்க் கள்ளை குடித்துவிட்டு மரத்தடியில் தூங்கப் போய்விடுகிறார்கள். 'இந்த

உடலுடன் மாடியேறி ஒற்றுக் கேட்ட ஒற்றன் எப்படிப்பட்ட ஒரு விசுவாசியாக இருக்க வேண்டும்!' எனத் தோன்றியது.

'அழையா விருந்தாளியாக எந்த வகைத் தண்டனையைப் பற்றியும் கவலைப்படாமல் சுவர் ஏறிக் கள்வன் போல இந்தப் பூதாகர உடம்பைச் சுமந்து வந்தான் இவன், அரச விசுவாசத்திற்காக. தாங்களோ நன்றி மறந்து செயல்பட்டிருந்தோம்' என்பதும் மனதை உறுத்தியது.

அவன் எண்ண ஓட்டத்தைத் தடுத்து அடியான் கூறினான், "என்னுடன் உன் நண்பன் வந்தியத் தேவனும் நின்று பார்த்தான், அவன் தற்செயலாகத்தான் வந்தான். நான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது என அறிந்தே தான் வந்தேன்."

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. வந்தவனுக்கு இந்த ஊரின் சரித்திரம் முழுவதும் தெரியும் என மாறனுக்குப் புரிந்தது. "அன்று எங்களைக் கண்டு கோபப்பட்டிருப்பீர் அல்லவா, வைணவரே?" என்றான் மாறன்

"உன்மேல் எனக்கு என்ன கோபம்? அந்த அர்த்த ராத்திரிக் கூட்டம் நடந்தது நாட்டுக்கு நல்லதல்ல. அதனால் நாசம் விளைந்திருக்கும். விஜயாலயச் சோழர் குலத்துக்கு ஆபத்து நேராது பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே என் குறிக்கோள்."

அழுத்தமாக அடியான் கூறியதைக் கேட்ட மாறனும் அவன் கருத்தை ஒப்புக்கொண்டான். இப்போது யோசித்துப் பார்க்கும் போது. அது தான் அவனுக்கும் தோன்றுகிறது.

"பாண்டியர்களின் கையாளாக மாறிவிட்ட பழுவேட்டையர்களிடம் நாடு சிக்கிக் கொண்டிருக்கும். மூடர்கள் இருபது பேர் நள்ளிரவில் கூடி முடிவெடுத்தால் என்ன, சரித்திரம் மாறியா போய்விடும்? நாங்கள் நினைத்தது நடந்திருந்தால் நாடு என்ன ஆயிருக்கும் எனச் சிந்திப்பேன். பாண்டியர் கையில் சோழத் திருநாடு. அப்பப்பா! நினைப்பதே கடினமாக உள்ளது. சோழ நாட்டுக்கு இப்படி ஒரு கதியா என்று எதிர்காலம் திகைக்கும். சரித்திரம் எங்களை மன்னித்தே இராது !" என்றான்.

பின் அவனே நிறுத்திக் கொண்டான். "அதை விடுங்கள். எங்கள் பழைய நடவடிக்கைகளைப் பற்றிப் பேச நா கூசுகிறது!" என்று சொல்லி மௌனமானான். இருவருமாக இருண்ட வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அடியான் திரும்பி மாறனை உற்றுப் பார்த்தான்.

மாறனின் முகத்தில் கவலையினால் ஏற்பட்ட சுருக்கங்கள் இருந்தன. போன முறை பார்த்ததைவிட அவன் வயதானவன்

போலத் தோன்றினான். காதுகளுக்கு அருகே நரை கூட இருந்தது. இளமையின் ஆனந்தம் ஆவியாகப் போனது. உலகைக் கட்டுப்படுத்தும் ஆசை கொண்ட இளமை அவனிடம் இப்போது இல்லை என்பதற்கான பல அறிகுறிகள்.

"என் இப்படி நடக்கவேண்டும்? இப்படி ஏன் என் குடும்பம் உடைந்த கூடாக இன்று தரையெங்கும் சிதறிக் கிடக்க வேண்டும் என அடிக்கடி எனக்குள் கேட்டுக்கொள்வேன். நடந்ததெல்லாம் ஒரு கெட்ட கனவாகப் போகக் கூடாதா?" என்றான் மாறன்.

பின் வேறு ஒரு மூலைக்குச் சென்று ஓரமாய் நின்று அழத் தொடங்கினான். கைகளின் நடுவே முகத்தைப் புதைத்தான். உடல் மட்டும் அழுகையின் சீற்றத்தில் குலுங்கியது. ஒற்றன் வேலை பார்க்கும் அடியான் அதை ஓரக் கண்ணால் கவனிக்கத் தவறவில்லை. ஒரு மனிதன் எதற்குக் கோபம் கொள்கிறான், எதற்கு அழுகிறான் என்பது அவன் உள்மனதைத் தெளிவுபடுத்திக் காட்டிவிடும் என அவன் அனுபவம் கூறியது.

ஆனால், இன்று இந்தப் பிள்ளையைப் பார்த்தால் பரிதாபம் தான் வந்தது. குழந்தையாய் இருந்தால் மடிமீது இருத்தி வைத்துக் கொள்ளலாம். இவன் வாலிபன். அதுவும் அவனொரு வீரன். அவன் அழுது கொண்டிருப்பதை அடியான் பார்த்து விட்டான் என்று அறிந்தவுடன் தன் கண்ணைக் கசக்கி ஏதோ தூசு விழுந்து விட்டது போல நடித்தான் மாறன். ஒரு வீரன் கண் கலங்கக் கூடாது என்பது ஏட்டில் எழுதப்படாத விதிமுறை. ஆனால், ஒரு வீரனும் ஒரு அண்ணன் தானே? ஒரு மகன்தானே?

திரும்பிய மாறனின் கண்கள் குளமாக இருந்தன. அதைக் கண்ட அடியான் ஒரு பெருமூச்சுடன் நினைத்தான். 'கடம்பூர் மாளிகையும் வறட்சி என்று நினைத்தோமே! ஆனால், இதில் கூடச் சில ஊற்றுகள் வற்றுவதில்லையே.'



அத்தியாயம் மூன்று

உயிர் பெற்ற ஓவியம்

இரண்டாம் முறை வந்து படுத்த பிறகும் வெகு நேரம் தூக்கம் பிடிக்காமல் சிரமப்பட்டான் அடியான். நித்திரா தேவி இரவு

நாலாம் ஜாமத்தில்தான் தன் அருள் முகத்தை இந்த வைணவனுக்குக் காட்டலானாள்.

விடிகின்ற நேரத்தின் போது உதய சூரியனுடைய செங்கிரணங்கள் சுளீர் என்று அவன் முகத்தில் அடித்து அவனை எழுப்பின. ஆழ்வார்க்கடியானுக்கு விழிப்புத் தட்டியது. சுற்று முற்றும் பார்த்தான். எதிர்பார்த்தது போல, மாறன் இவனுக்கு முன்பே எழுந்து மாடியின் ஓரமாக ஞாயிற்றின் வரவுக்காகக் காத்திருந்தான். முன்பே எழுந்தானோ, இல்லை, தூங்கவே இல்லையோ? ஓர் இரவு துயிலுக்காகத் தவித்த அடியானுக்கு இவன் ஐந்து ஆண்டுகளாய் தூங்கவேயில்லை என்பது மலைப்பைத் தந்தது.

"நன்றாய்த் தூங்கினீரா?" விருந்தினரை உபசரிக்கும் முறையில் மாறன் கேட்டான்.

"ஆம்" என்றான் அடியான்.

காலையில் இருவருமாகக் குளிக்கக் குளத்திற்குச் சென்றார்கள். இடிந்து கருகிய கோட்டைச் சுவர்களின் நடுவே ஆடு மேய்ப்பவர்கள் ஏற்படுத்திய பாதையில் நடந்தார்கள். கருங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட கெட்டிச் சுவர்கூடக் கருகிய காட்சி அடியானை பிரமிக்க வைத்தது. எல்லாம் ஆசைப் பேயின் கூத்தைக் கண்டு அக்கினி பகவான் சிரித்த சிரிப்பின் விளைவு.

கோட்டையைச் சுற்றியிருந்த மரங்கள் எல்லாம் அதை அழித்த அக்கினிப் பிரளயத்தில் கருகிப் போயிருக்கும்போது, இன்று அவற்றின் கரித் துண்டுகளுக்கு இடையில் சில புதுச் செடி கொடிகள் துளிர்விட்டுக் கொண்டிருந்தன. அதில் ஒரு வேப்பங்கன்றைத் தேர்ந்தெடுத்து, அதன் கிளையை ஒடித்து இருவருமாகப் பல் துலக்கியபடியே சென்றார்கள்.

மனிதன் இயற்கையை ஒடுக்கி அடக்கிவிட்டுத் தன் பெயர் சொல்லும் கட்டடங்களைக் கட்டுகிறான். அவன் எப்போது அயர்வான், தன் இடத்தை மீண்டும் அடைவதற்கு என இயற்கை தன் பங்குக்குக் காத்திருக்கிறது. இந்த உண்மை கடம்பூரின் தொன்மையான கோட்டைச் சுவர்களைக் காண்பவருக்கே தெரியும்.

காற்றில் ஆலம் விதைகளும் அரச விதைகளும் பறந்து வந்திருக்கலாம். இல்லை, ஏதோ பறவை வெகு தூரத்தில் உண்ட உணவில் அந்த விதைகள் இருந்திருக்கலாம். அதன் கழிவினில் விதை தன் உயிரைத் தக்க வைத்துக் கொண்டு காத்திருக்க வேண்டும்.

மனிதக் கண்ணுக்குத் தெரியாத அச்சிறுவிதை கோட்டைச் சுவர்களின் மேல் விழுந்து இரு பாறைகளுக்கு நடுவே வேர்விட்டுப், பின் மெல்ல மெல்ல அவ்விரு பாறைகளுக்கு நடுவே ஒரு இடைவெளியை ஏற்படுத்தி உயிர் வாழ்ந்து வளரத் தொடங்கிவிடும்.

சில ஆண்டுகளில் விசாலமாகப் படர்ந்திருந்த அதன் கிளைகளும் விழுதுகளும், ஆதரவு கொடுத்த சுவர்களையே நன்றியின்றித் தகர்த்துவிடும். அதுதான் இங்கு நடந்திருந்தது. தான் காத்திருந்த காலத்திற்கு இயற்கை தக்க சன்மானம் பெற்றிருந்தாள். கடம்பூர்க் கோட்டைச் சுவர்கள் தாறுமாறாக இடிந்தும் சிதைந்தும் கிடந்தன. வேர்களின் சக்தியில் பல கற்கள் கீழே உருண்டு தரையின் மீது பாசி படிந்து பசுமைப் பந்துகளாகக் காட்சி தந்தன.

இடிந்த கட்டடங்களின் அருகே செல்லும்போது மாறன் இருபுறமும் பாராமல் வெகு விரைவாக நடந்தான். அதில் ஒரு வியப்பும் இல்லை என்பது அடியானின் கருத்து. காலம்காலமாகத் தங்கள் தலைநகர் இந்தக் கோட்டை எனப் பெருமையாய் மார்தட்டிக் கொண்ட சம்புவராயர் பரம்பரை இந்த எரிந்து இடிந்து கிடந்த கோட்டையைத் தினமும் காணும் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

அடியான்கூட ஒரு காலத்தில் கடம்பூரின் வளமையைப் பார்த்தவன்தான். அந்த வளமையையும் இன்றைய வீழ்ச்சியையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தான். ஆதித்த கரிகாலன், காலன் பிடியில் சிக்கியக் கோட்டை இன்று கருகிப் போயிருந்தது. சோழ சாம்ராஜ்யத்தை மகோன்னத நிலைக்குக் கொண்டு வருவான் என்று எதிர்பார்க்கப்பட்ட இளவரசன் பரிதாபமாய்க் கொலையுண்டு கிடந்த இடத்தை, தேவர்களும் மன்னிக்கவில்லை போலும்.

கண்ணுக்கெட்டிய தூரம் மனித நடமாட்டமே இல்லை. ஒரே தனிமை மயமாக இருந்தது. கட்டடங்கள் மட்டுமல்ல. ஒரு சமுதாயமே இந்தத் தீயினால் அழிந்திருந்தது. ஐந்து ஆண்டுகளாக யாதொரு பொருளாதார ஆதரவும் கிடைக்காததால் சுற்றிலும் உள்ள கிராமங்களையெல்லாம் சூனியமாக விட்டுவிட்டு மக்கள் போய் விட்டார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் இருவரும் தேடி வந்த இலக்கை அடைந்து விட்டார்கள். கருகிக் கிடந்த அந்தக் கோட்டைச் சுவர்களின் மத்தியில் ஒரு பசுமையான தீவு போல அந்தக் குளம் இருந்தது. விழுந்திருந்த பாறைகளைப் படிகளாய்ப் பயன்படுத்தி இருவரும் நீரில் இறங்கினார்கள்.

குளித்துவிட்டு முதலில் வெளிவந்தவன் மாறன்தான். சற்று நேரம் கழித்துத் தன் பூஜை புனஸ்காரங்களை நீரில் முடித்துவிட்டு அடியானும் கால் வழுக்கி விடாமல் மெல்ல அடி மேல் அடி வைத்து வெளி வந்தான்.

நனைந்த உடல் காற்றில் நடுங்க, இருவரும் ஒரு பெரிய பாழடைந்த மண்டபத்தின் அரவணைப்பை நாடினர். மண்டபத்தின் சுவர்கள் வெப்பத்தில் வெடித்த அறிகுறி தெரிந்தது. இடுக்கில் செடி கொடிகள் தழைத்தன. கூரை உள்ளே விழுந்திருந்தது. அதைத் தாங்கிய மர உத்தரங்கள் விழுந்தவுடன் அவை எப்படி நிற்க முடியும்?

மழைக்கு நிச்சயம் ஆதரவு தராது இந்தக் கட்டடம். ஆனால், காற்றிடமிருந்து காப்பற்றியது அந்தக் கரியினால் சாயம் பூசப்பட்ட சுவர்கள். துணிகளை உலரவைத்துவிட்டு, அடியான் மாறனின் அருகில் வந்தபோது, ஏதோ சொல்ல வந்தவன், எதற்காகவோ தடுமாறினான்.

நாவில் சரியான வார்த்தைகள் வர சில நொடிகள் காத்திருந்தான். பின்பு மௌனத்தை உடைத்து, "சக்கரவர்த்தி இல்லத் திருமணத்திற்குச் சென்றீர்களா?" என வினவினான். அதற்கு அவனுக்கு அழைப்பு வராததால் மனம் புண்பட்டது அவனது குரலில் தெளிவாகத் தெரிந்தது.

"நான் ஓர் சந்நியாசி. எனக்குத் திருமணத்தைப் பற்றி என்ன ஆர்வம்?" பதில் சொன்ன அடியான் தொடர்ந்து அடுத்த கேள்வியையும் கேட்டான்.

அடியானுக்கு மாறன் குறிப்பிட்ட திருமணம் வந்தியத் தேவனுடையது எனத் தெரிந்தது. 'உயிர் நண்பனானவன் பின் பரம எதிரியாகி இப்போது சக்கரவர்த்தி வீட்டு மாப்பிள்ளை என்று வாழ்வில் மேன்மையும் அடைந்து விட்டான். இந்த மாறனுக்கு மனதில் எப்படிப் பொறாமை இல்லாமல் இருக்கும்?' என நினைத்தவன், "ஆமாம், இளவரசரும் செல்லவில்லை போலத் தெரிகிறதே?" என்றான்.

அடியான் நினைத்தது போல ஒரு விரக்தியான குரலில் "நான் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் ஒரு மதிப்பில்லாச் சிற்றரசு. என்னைக்கூட மதித்துத் திருமணத்திற்கு அழைப்பார்களா என்ன?" என்றான் மாறன்.

"கோபமாக இருக்கிறீர்கள் போல" என்றான் அடியான், மாறனின் கோபத்தை இன்னும் அதிகரிக்கும் எண்ணத்துடன்.

"அரசன் மறக்கலாம். நண்பன் மறக்கலாமா?" என்று பதில் வந்தவுடன், அடுத்த கேள்விக் கணையைத் தயாராக வைத்திருந்தான் அந்தப் பொல்லாத வைணவன்.

"ஓ. உங்கள் நட்பு இன்னும் தொடர்கிறதோ?"

"வந்தியத் தேவன் எனக்கு நண்பனாய் இருந்து எதிரியானவன் தான். ஆனால், அது தனிப்பட்ட பகை அல்ல. நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிப்பதில் இரண்டு எதிர் அணிகளில் இருந்தோம். அவனது அணி வெற்றி பெற்றது, இளவரசியைக் கைப்பிடித்திருக்கிறான்."

அவனது வாயிலிருந்து உதிர்ந்த சொற்களில் ஒரு கசப்பு இருந்தது. அது பொறாமையாகத்தான் இருக்க வேண்டும் என அடியான் முடிவு செய்து விட்டான்.

வந்தியத் தேவன் மணந்த குந்தவை தேவியின் அழகும் அறிவாற்றலும் நாட்டு மக்களினால் மெச்சப்பட்டவை. எந்த ஆணையும் கவரக் கூடியவை என்பதைச் சாதுவாகிய அடியானும் அறிவான்.

"ஆறு ஆண்டுகளுக்கு முன் இந்த மாளிகை..." என்று சொல்லிவிட்டுக் கரியும் சாம்பலுமாய் இன்றிருந்த அவனது பூர்வீக மாளிகையைப் பார்த்தான் மாறன். "வந்தியத் தேவன் வந்த போது, அவனை என் காவலர்கள் உள்ளே கூட அனுமதிக்கவில்லை. இன்றோ அவன் தஞ்சை அரண்மனையின் மருமகன்."

"அரசிக்கு ஏற்ற ஆண்மகன் வந்தியத் தேவன் இல்லையோ?" அடியானின் கேள்விக்கு ஓர் வினாடி மாறன் பதில் சொல்லவில்லை.

"வந்தியத் தேவனுக்கு ஏற்ற மனைவி என் தங்கை மட்டும்தான். என் தங்கை மணிமேகலை அமர வேண்டிய மணமேடை அது. அவளுக்கு வர வேண்டிய அதிர்ஷ்டம்தான் இளவரசிக்குப் போனது" என்றான் மாறன்.

தான் நினைத்ததற்கு நேர்மாறாக உரையாடல் சென்றதில் அடியானுக்கு அதிர்ச்சி. "அதிர்ஷ்டம் என்றா கூறினாய்?" அவன் குரலில் இருந்த நையாண்டி இப்போது குறைந்திருந்தது. அப்படியென்றால் வந்தியத் தேவன் மீது எவ்வளவு நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறான் இவன். இவனைத் தவறாக எண்ணிவிட்டோமே என வருத்தம் கொண்டான்.

மாறனின் பெருந்தன்மையை மெச்சி அடியான் அவனது தோளின் மீது ஓர் கையை வைத்தான். 'பெண்ணைக் கண்டால்

பிதற்றத் தொடங்கிவிடும் ஆண்களுக்கிடையில் இப்படியும் ஒருவனா?'

மாறன் தொடர்ந்தான் ''ஒரு காலம் வான மண்டலத்தில் இருந்தோம். மறுகணம் பாதாளத்தில் தள்ளப்பட்டோம். பெரிய பழுவேட்டரையர் மற்றும் இதர சிற்றரசர்களையும் நான்தான் இந்தக் கோட்டைக்கு அழைத்து வந்தேன். மதுராந்தகத் தேவர் இரகசியமாக மூடு பல்லக்கில் இங்கு வந்ததும் என்னால்தான். பின்பு ஆதித்த கரிகாலரை அழைத்து வந்ததும் நான்தான். வேட்டையாடலாம் என்று ஆசைகாட்டிக் கூட்டி வந்தேன். அவரும் ஆர்வமாக இரை தேடி வந்தார், அவர்தான் வேட்டையில் இரை என அறியாமல். அந்த நாளில் நாட்டின் மிக முக்கியமானவர்கள் இங்கு தங்கள் படைகளுடன் கூடியிருந்தார்கள். இந்தக் கோட்டையின் செல்வச் சிறப்பை அது அதிகரித்திருந்தது. அன்று அப்படி இருந்ததனால்தானோ என்னவோ இன்று கேட்பாரற்றுக் கிடக்கின்றன இந்தக் கோட்டைச் சுவர்கள்'' என்றான்.

அடியான் பதிலேதும் சொல்லவில்லை.

''என் ஆர்வக் கோளாறினால் விளைவு இப்படியாகும் என நான் நினைக்கவே இல்லை. என்னால் நேர்ந்த இந்த விபரீதங்களுக்கு நானும் என் பெற்றோரும்தான் தினம் தினம் தண்டனை அனுபவிக்கிறோம். என் தங்கை நிம்மதியாகப் போய்ச் சேர்ந்துவிட்டாள்.''

''அந்தக் கூட்டத்தில்தான் மணிமேகலையை- எனது அருமைத் தங்கையை, வந்தியத் தேவனுக்கு நான் மணமுடிக்க வேண்டியது என வைத்திருந்தவளை, மதுராந்தகத் தேவருக்கு ஒரு இராஜரீகத் திருமணமாய் முடிக்க முடிவு செய்யப்பட்டது. வந்தியத் தேவன் மனம் எப்படித் துடித்திருக்கும்? அன்றுதான் அழியத்தொடங்கியது இந்தச் சம்புவராயர் குலம்''

அடியானுக்கு நன்கு தெரியும். சோழப் பேரரசின் அரியணையில் தங்கை அமர்ந்தாற்போல் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு இவர்கள் காயை நகர்த்த, அவளோ வந்தியத் தேவனை மனதால் மணவாளனாகக் கருத, அனைத்தும் பாழாய்ப் போயின. முதியவர்கள் அவளது திருமணப் பேச்சை முடித்துவிட்டார்கள். ஆனால், மணிமேகலை எதிர்த்து நின்றாள். அது பைத்தியக்காரத்தனமாகத்தான் இருந்தது. ஆனால், அவள் வந்தியத் தேவனையே கணவனாக முடிவு செய்துவிட்ட பின், மணவறையில் மற்றொருவரைக் கற்பனை செய்யக்கூட அவளுக்கு மனம் நொந்தது.

அமைதியாய் இருவரும் வீட்டிற்குத் திரும்பும்போது மாறனைப் பற்றிய தன் அபிப்பிராயத்தை முற்றிலுமாக மாற்றிக் கொண்டிருந்தான் அடியான்.

காலை உணவுக்காக இருவரும் மாறனின் வீட்டுக்குள் நுழைந்தார்கள். வரவேற்பறையில் நுழைந்தவுடன் முதலில் அடியானின் கண்ணில் பட்டது சுவரில் மாட்டப்படிருந்த அந்தப் படம்தான்.

அந்தப் படத்தில் ஜரிகை நிறைந்த பட்டுப் புடவை உடுத்தியிருந்த பெண்ணின் உருவம் இருந்தது. அழகு காட்டுவது போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். அவளது குறும்பு கண்களில் தெரிந்தது.

மைதீட்டி விரிந்த கண்கள் விழித்து அவனை நோக்குவதாகவே தோன்றின அடியானுக்கு. விழிகளை அகல விரித்துத் தன் வீட்டுக்கு இந்த ஐந்து ஆண்டு காலத்திற்குப் பின்பு வந்தது யார் எனப் பார்ப்பது போல இருந்தது.

அந்தப் பெண்ணின் தோற்றம் அவன் உள்ளத்தை அவ்வளவு வசீகரித்திருந்தது. வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அது மணிமேகலையின் படம்தான். ஐந்து ஆண்டுகளில் அவளை இவர்கள் மறக்கவில்லை எனக் காட்டும்படியாக இருந்தது அந்தப் படம்.

மணிமேகலையின் படத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தான் அடியான். சொல்லப் போனால் அந்த அறையில் எங்கு இருந்தாலும், என்ன வேலை செய்தாலும், அந்தப் படம் கண்ணில் படாமல் இருக்காது. தங்கள் வாழ்வின் ஒவ்வொரு செயலின் போதும் அவள் நினைவு இருக்க வேண்டுமென அந்தப் பெரிய ஓவியத்தைத் தீட்டி இவர்கள் வைத்திருந்தார்கள் போலும்.

இறந்து போன ஒருவரின் ஓவியத்தில்தான் எவ்வளவு உயிர் இருக்கிறது! ஓவியன் மிகத் திறமைசாலி. 'இல்லை, இல்லை, அந்த ஓவியனும் மணிமேகலையைக் காதலித்திருக்க வேண்டும். இல்லை என்றால் இதை இவ்வளவு தத்ரூபமாகத் தீட்டியிருக்க முடியாது. இறந்தவளுக்கு மீண்டும் உயிர் கொடுத்துவிட்டானே!' என அடியான் மனதுக்குள் முடிவு செய்து கொண்டான்.

அவள் முகத்தில் அப்படி ஒரு களை குடி கொண்டிருந்தது. முகத்தில் அவள் சிரிக்கும்போது வரிசையாய்ப் பற்கள் அடுக்கப்படிருந்தன- ஏதோ பல்லாங்குழியில் சோழிகள் போல. பவள உதடுகளுக்கு மேல் ஒரு சிறிய மச்சம். இடது கன்னத்தில் குழந்தைகளுக்குத் திருஷ்டியும் தீய கண்ணும் படாமல் தாய்மார்கள் வைப்பது போல ஒரு பொட்டு இருந்தது.

தன் தங்கை படத்தினை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் அடியானிடம் மாறன் விளக்கினான். "இந்தப் படத்தைப் பாரப்பவர்களுக்கு அவள் உயிருடன் இருந்தபோது எவ்வளவு உற்சாகம் நிரம்பிய பெண்ணாய் இருந்திருப்பாள் எனத் தெரியும். சில ஆண்டுகளுக்கு முன் இந்த வீட்டுக்கு வந்திருக்கக் கூடாதா எனவும் தோன்றும்."

"மணிமேகலையின் உற்சாக ஆர்ப்பரிப்பினால் இந்த அரண்மனை எப்படிக் கலகலவென இருந்திருக்கும் என அவள் படத்தைப் பார்த்தாலே உங்களால் தீர்மானிக்க முடியும். தாமரைக் குளத்தில் குளிக்கப் போகும்போதும் குளித்துவிட்டு வரும்போதும் சலங்கையிட்ட அவளது கால்கள் ஜதி போட்டுக் கொண்டே போகும். இப்போது கூடச் சில சமயம் அந்தச் சப்தங்கள் எனக்குக் கேட்கும். எனக்கு மெல்ல மெல்லப் பித்தும் அதிகமாகிறது என நினைத்துக் கொள்வேன்" என்றான்.

பூ உதிர்வது போலத்தான் மணிமேகலையும் மெல்ல மெல்ல மாண்டாள் என அடியான் கேள்விப்பட்டிருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக அவள் வாடி இளைத்துக் கடைசியில் கருகிப் போய் உதிர்ந்தாள். கடைசியாய் அவள் உயிர் பிரிந்தது அவளுடைய அன்புக்குப் பாத்திரமான வந்தியத் தேவன் மடிமீது என்பதுதான் அவள் காதலின் ஒரே ஆறுதல் பரிசு.

அவள் விளையாட்டுதனமான வாழ்க்கைக்கு இப்படி ஒரு விபரீத முடிவா? வந்தியத் தேவனின் நிலைமையை நினைத்த அடியானுக்கு ஒரு சிறிய உடல் நடுக்கம். இதையெல்லாம் அறிந்த வந்தியத் தேவனுக்கு எப்படி இரவுகளில் தூக்கம் வருகிறது என வியந்தான்.

இந்த நினைவுகளில் அகப்பட்டுக் கொண்டிருந்த் அடியான், மாறனின் தாய் அறையில் நுழைந்தவுடன் எழுந்து வணக்கம் செலுத்தினான்.

இருவருமாக இலையின் முன் அமர்ந்தார்கள். முதலில் இடியாப்பமும் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் தேங்காய்ப் பாலும் பரிமாறப்பட்டன. இத்தகைய வரவேற்பைச் சற்றும் எதிர்பார்க்க வில்லை என்பது அடியானின் முகபாவத்திலிருந்து நன்கு தெரிந்தது.

"இவர் எப்படி?" என இழுத்தார் மாறனின் தாய்.

"அம்மா! அவர் சைவம்" என்றான் மாறன்.

இடியாப்பத்தைத் தேங்காயப் பாலில் மூழ்கடித்து, பின் தாக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த அடியானுக்கு அதிர்ச்சி. தன் வைணவ பாரம்பரியத்தை அவமதிக்கும் இந்தத் துஷ்டனை என்ன செய்வது

எனக் கோபத்துடன் திரும்பினான். அப்போதுதான் எவ்வகை உணவைப் பரிமாறுவது எனக் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தார் மாறனின் தாய் என்பது புரிந்தது.

தான் சைவம் இல்லை எனச் சொன்னால் மீனையோ மானையோ சமைத்துப் பரிமாறிவிடுவார் எனப் பயந்து கொண்டு விழித்தான் அடியான். அடியான் விழிக்கும் விழியைக் கண்டு மாறனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. உரக்கச் சிரித்து விட்டான். பின்பு சிரிப்பை நிறுத்திவிட்டு அவனே ஒரு நொடி சிந்தித்தான்.

ஐந்து ஆண்டுகளாகச் சிரிக்காத அவன் வாய் இன்று அதைச் செய்திருந்தது. அவன் சிரிப்பொலியையே மறந்துவிட்ட நிலையில் இன்று வாய்விட்டுச் சிரித்தது புதுமையாக இருந்தது.

மாறனுடைய தாயின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "முதல் முறையாக என் மகன் பல ஆண்டுகளுக்குப் பின் இன்று சிரிக்கக் கண்டேன்" என்று கூறும் போது, அந்தத் தாயின் கண்களில் நீர் ததும்பியது. "அது உங்கள் வரவினால்தான், ஐயா!" என்றாள்.

சாப்பிடாமல் இருந்த அடியானிடம், "இவை அனைத்தும் சைவம் தான் ஐயா. மதியம் சமைப்பதற்காகக் கேட்டேன். நீங்கள் பயமின்றி உணவை உண்ணுங்கள். நான் இந்தக் கேள்வியை ஏன் கேட்டேன் என்றால் முதல் முறையாக நீங்கள் எங்கள் வீடு தேடி வந்திருக்கிறீர்கள் என்பதனால்தான்" என்றார் அவர்.

"இது இரண்டாவது முறை" என்று மர்மமாகக் கூறி, மாறன் அடியானைப் பார்த்தான்.

அவனது தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. "வைணவரே! நீங்கள் இப்போது வந்தது மகிழ்ச்சிதான். ஆனால், நாங்கள் சீரும் சிறப்புமாய் இருந்த காலத்தில் நீங்கள் வந்திருந்தால் உங்களை நன்றாக, உங்கள் தகுதிக்கு ஏற்றாற் போல் நடத்தியிருப்போம்" என்றாள்.

மாறன் ஒரு முறை திரும்பி இடியாப்பத்தை வாயில் அடைத்துக் கொண்டிருந்த அடியானைப் பார்த்தான். "அப்போதும் வந்திருக்கிறார், அம்மா!" என்றான், மிக மென்மையான குரலில்.

முந்தானையால் முகம் துடைத்துக்கொண்டு அடியானை உபசரித்தவாறே மாறனின் தாய் பேசிக் கொண்டிருந்தார். இதுவும் ஒரு சராசரிக் குடும்பம் போலத்தான் இருக்கிறது என்று நினைத்து முடிக்கும் முன் அறைக்குள் வந்தார் கடம்பூர் அரசர் சம்புவராயர். கதவு திறந்து சம்புவராயர் உள்ளே பிரசிவேத்தாரோ இல்லையோ, அறையில் பயான அமைதி குடிகொண்டது.

சற்று நேரம் யாரும் பேசக்கூட இல்லை.

❖ ❖ ❖

அத்தியாயம் நான்கு
சீற்றத்தில் சம்புவராயர்

மாறனின் தந்தையை அடியான் பார்த்தவுடன் மகனுக்கும் தந்தைக்கும் இருந்த முகத் தோற்ற ஒற்றுமைதான் பளிச்சென்று தெரிந்தது. ஆனால், அவன் எதிர்பார்த்ததே வேறு.

வந்தவர் இன்று பெயருக்குத்தான் மன்னர். பரிவாரங்கள் புடைசூழ அவரை அடியான் முன்பு பார்த்திருந்தான். இன்றோ அவரைக் காண்பதற்கு அடியானுக்கே கஷ்டமாக இருந்தது. ஆஜானுபாகுவான உடல் தேய்ந்து போயிருந்தது. அவர் முகத்தில் வெண்முடியும் சுருக்கங்களும் நிறைந்திருந்தன. உடை கூட ஆங்காங்கே கிழிந்து கிடந்தது.

உள்ளே நுழைந்த சம்புவராயர் அந்த அறையில் இருப்பவர்களை நோட்டமிட்டார். தன் மகனைப் பார்த்ததும் அவர் முகம் வாடிக் கறுத்ததை அடியான் கவனிக்கத் தவறவில்லை. ஒரு காலத்தில் நெருக்கமாக இருந்த தகப்பன் மகன் இடையே முளைத்து விட்ட விரிசலை அவனால் உணர முடிந்தது.

தன் வீட்டுக்குப் புதியவன் வந்திருக்கிறான்- அதுவும் வைணவ சம்பிரதாயத்தில் ஈடுபட்டவன் போல் இருக்கிறது எனத் தெரிந்து கொண்டு, வரவேற்பு எனும் பேரில் குறைந்த பட்சமாக அடியானைப் பார்த்துத் தலையை மட்டும் அசைத்தார் சம்புவராயர்.

அடியான் அதுவரை உணவை உள்ளே தள்ளும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். ஆனால், சம்புவராயர் நுழைந்தவுடன் அவன் உடனே நின்று எச்சில் கையால் கைகூப்பி வணக்கம் சொன்னான்.

''எனக்கு மரியாதை என்ன வேண்டிக் கிடக்கிறது?'' எனச் சலித்துக்கொண்டே, எழுந்த அடியானைக் கையமர்த்தியவாறே, உள்ளே வந்தார். பின் சுவர் ஓரமாகப் போடப்பட்டிருந்த மரக் கட்டிலின் மேல் அமர்ந்தார் கடம்பூர் மன்னர்.

நேரே பார்க்கப் பயந்து ஓரக் கண்ணால் அடியான் அரசரை மீண்டும் ஒரு முறை கூர்ந்து கவனித்தான்.

இப்போது பெரிய சம்புவராயர் அரசியலில், ஏன், அன்றாட வாழ்க்கையிலே கூட ஆர்வம் காட்டுவதில்லை என்று தெரிந்தது. தான் சாகும்முன் இந்தக் குலம் மீண்டும் தழைத்து வர வாய்ப்பில்லை என முடிவு கட்டிவிட்டார் போலும். கிழிந்த உடை, சிறிய வீடு, வீட்டுப் பெண்களே சமையலறையில் கஷ்டப்படுவது

போன்ற பலவும் இவர்களுக்குப் பொருத்தமானவையல்ல என அடியானுக்கு நன்கு தெரியும்.

இப்படிப்பட்ட வறுமையில் இவர்கள் வாழ ஒரு அவசியமும் இல்லை. தமிழ் நாட்டில் செல்வந்தர் வரிசையில் சோழ அரச குடும்பத்தினர் மற்றும் சில நகரத்தாருக்கு அடுத்துச் சம்புவராயர்கள்தான் இருந்தனர். ஆனால், இந்த வாழ்க்கை முறையை அவர்கள் தாமாகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என யூகித்தான்.

ஒரு காலத்தில் மெய்க்காவலர்கள் முடிவு செய்யாமல் கடம்பூர் அரசரைத் தனியே சந்திக்கக்கூட முடியாது. ஏன், அவர் நிழலைக் கூட தரிசிக்க முடியாது. அவர் ஒரு சமிக்ஞை செய்தால் நூற்றுக் கணக்கானவர்கள் ஓடிவந்து தண்டனிடுவார்கள். எழுந்திருக்கச் சொன்னவுடன்தான் எழுவார்கள். பேசச் சொல்லும்வரை அடக்க ஒடுக்கத்துடன் வாயைக் கையினால் பொத்திக்கொண்டு நிற்பார்கள். இது நாடறிந்த உண்மை.

இவர்கள் நாட்டு நடப்புகளிலிருந்து ஒதுங்கியே இருந்ததில் நியாயம் இருந்தது. இவர்களின் அழிவைக் கண்டு நாடு பரிகாசம் செய்து கை கொட்டிச் சிரிப்பது போல் உள்ளுணர்வு அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அருகில் சென்றால் மற்றவர்கள் அவர்களது தேச விரோதச் செயல்களைச் சுட்டிக்காட்டித் தள்ளி வைத்து விடுவார்களெனத் தெரிந்து தள்ளியே பல ஆண்டுகள் இருந்து விட்டார்கள்.

அரசியலைப் பற்றி ஏதேனும் பேசுவதை அவன் தந்தை விரும்புவதில்லை என்று மாறனுக்கு நன்கு தெரியும். அவர் இருக்கும்போது அதைப் பற்றிய பேச்சையே அவன் எடுப்பதில்லை. அவனது தந்தையைப் பார்க்க இந்த வைணவனை அழைத்து வருவதற்கு முன் அவனுக்கு அதைப் பற்றி எதுவும் எச்சரிக்கை செய்யவில்லையே என்று நினைத்தபோது அவனுக்குப் பயமாகவே இருந்தது. இவன் ஏதாவது உளறி வைத்துவிட்டால் ஏக ரகளையாகப் போய்விடும்.

''உங்களைப் பல ஆண்டுகளுக்கு முன் தஞ்சையில் பார்த்திருக்கிறேன், ஐயா'' என்று அடியான் அரசரைப் பார்த்துக் கூறியவுடன், மாறனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரு விநாடி ஒன்றுமே புரியவில்லை. நேரடியாக அரசியலைப் பற்றி வைணவன் பேசாவிட்டாலும் தலைநகரை நினைவுபடுத்தியது மாறனுக்கு அதிர்ச்சி. என்ன நடக்கப் போகிறதோ இந்த வைணவனின் புத்தியின்மையினால் என மனதுக்குள் புலம்பினான்.

அடியானின் பேச்சுக்கு ஒரு பதிலாகச் சம்புவராயர் தூரத்து இடிமுழக்கம் போலப் பற்களைக் கடித்தவாறு அவனை நோக்கிப் பேசினார். "நாம் ஒரு காலத்தில் பட்டம் பதவி அதிகாரம் என்றால் உயிராயிருந்ததுண்டு. ஆனால், ஏதோ பல காரணங்களினால் இப்போது அவை பிடிப்பதில்லை. காய்ந்து போன இலைகள் காற்றில் பறந்து சிதறுவது போல, எங்கள் மக்களும் தள்ளித் தள்ளிச் சென்று விட்டார்கள். காலம் காலமாக நாங்கள் அவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றி வரவில்லையா? நண்பர்கள்கூடத் தள்ளி நிற்கிறார்கள், எங்களுடன் சேர்த்து அவர்களையும் சந்தேகக் கண்ணுடன் நாடு பார்க்குமோ எனப் பயந்து. ஒரு அறைக்குள், நான் அங்கிருக்கும் மற்றவரைச் சங்கோஜப் படுத்தாமல், செல்லக்கூட முடிவதில்லை" என்றார்.

அடியான் மௌனமாய்த் தரையை உற்றுப் பார்த்தான்.

சம்புவராயர் தொடர்ந்தார்: "அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. என் வீட்டில் அடுத்துச் சோழச் சிங்காதனம் ஏற வேண்டிய இளவரசன் கொலையுண்டு கிடந்ததைப் பார்த்தபின் மக்களின் மனம் எப்படி இருந்திருக்கும்! அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் என் மனமே இன்றும் கதறும். என் குலத்துக்கு அழியா அபகீர்த்தியை உண்டு பண்ணியது அந்தக் கொலை. கண் மூடித் திறக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்தது. கொடும் பாவங்களினால் களங்கமடைந்த இந்த மாளிகையை அக்னி பகவானும் விட்டு வைப்பதாக இல்லை" எனச் சொல்லும்போதே சம்புவராயரின் தொண்டை அடைத்துக் கொண்டது.

சக்கரவர்த்தியின் மூத்த மகனான ஆதித்த கரிகாலனை, அடுத்து அரியணை ஏறும் பட்டத்து இளவரசனாக நியமித்தவுடன், அதை எதிர்த்துக் குறுநில மன்னர்களிடையே ரகசியச் சதிக் கூட்டங்கள் நடந்தன. அவை நடந்தது இந்தக் கடம்பூர் மாளிகையில்தான். அவர்கள் ஆதரித்தது கரிகாலனின் சிற்றப்பன் மதுராந்தகனை. கடைசியாக ஒரு சமரசம் பேசிச் சாம்ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துவிட எண்ணிக் கரிகாலனையே இங்கு அழைத்து வந்தார்கள். திடீரெனக் கட்சி மாறி, வந்தவனுக்குத் தங்கள் மகளை மணம் முடிக்கவும் எண்ணினார் சம்புவராயர். அரியணைக்கு அருகில் இருப்பவர் அனுபவிக்கும் அளவற்ற சக்திகளின் மீதுள்ள மோகம் இவர்களையும் பிடித்துக் கொண்டது.

அப்போது இந்தக் கோட்டையில் ஒரு நள்ளிரவில் எங்கும் கண்டும் கேட்டுமிராத கொடும் செயல் நடந்து விட்டது. சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசன் கரிகாலன் மர்மமாகக் கொலையுண்டு கிடந்தான். உடனே அவனது

சோழமைப் படைகள் இந்தக் கோட்டையை முற்றுகையிட்டு அதை அழிக்க முடிவெடுத்தனர். எதிரிகள் அதைச் சாதிக்கும் முன், சம்புவராயரே தன் கோட்டைக்குத் தீ வைத்து விட்டார். அக்கினி பகவான் தன் வேலையைச் சரிவரச்செய்து முடித்தபின் மிஞ்சியது இந்தக் கரி படர்ந்த தூண்கள்தாம்.

"எங்கள் மனதைப் புரிந்து கொள்வதில் நாங்கள் பின் தங்கி விட்டோம். ஆயிரக் கணக்கான சோழ வீரர்களின் உயிரையும் குடித்திருக்கும் ஒரு உள்நாட்டுக் கலவரம் வராமல் தடுத்து, மன்னர் பெருமான் தலையிட்டார். இல்லையென்றால் என் முட்டாள்தனத்தினால் இந்த நாடே கலவர பூமியாய்க் காட்சி தந்திருக்கும். மன்னரது பெருந்தன்மைக்கு முன் எங்கள் ஆணவம் அடங்கியது. என் அறியாமையால் செய்த பெரும் பழியைத் துடைக்க முயல்கிறேன். எப்படியென்றுதான் தெரியவில்லை" என்று முடித்தார்.

பின் பேச்சை மாற்றும் எண்ணத்துடன் அடியான் "வரும் வழியில் வீரநாராயண ஏரியைப் பார்த்தேன். நீர் இன்னும் கொஞ்சம் இருந்தால் தேவலை எனத் தோன்றியது" என்றான்.

"உமக்கு அந்த ஏரி எப்படி உருவானது எனத் தெரியுமா?" என்று கேட்டார் அரசர். பேச்சு திசை மாறியதைக் கண்டு மாறனும் [illegible] கொண்டதாகத் தெரிந்தது.

சம்புவராயர் தொடர்ந்தார், "பல ஆண்டுகளுக்கு முன் இராஜாதித்ய சோழர் ஒரு மாபெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு வடநாட்டின் மீது படை யெடுத்துச் செல்லக் கெடிலம் ஆற்றுக்கும் தென்பெண்ணை நதிக்கும் இடைப்பட்ட இடத்தில் முகாம் செய்து கொண்டிருந்தார். இரட்டை மண்டலத்து அரசனாகிய கன்னர தேவனின் தலைநகரமாம், மானிய கேடத்தைத் தரை மட்டமாக்க வேண்டும் என்று அவர் உறுதி கொண்டிருந்தார். திரட்டிய படைகளுக்குப் போர்ப் பயிற்சி தருவதற்குத் தக்க பிரதேசம் இது எனத் தேர்ந்தெடுத்த இடத்தில் இராஜாதித்தர் முப்பதினாயிரம் வீரர்களுடன் தங்கியிருந்தார். மற்ற [illegible]கள் லட்சம் பேருடனிருந்தார்கள். யானைப் படைகளும், குதிரைப் படைகளும் இங்கே முகாம் போட்டு இங்கு உள்ள நிலங்களைச் சேதப்படுத்தினார்கள். வேண்டுமென்று இல்லை. யானை நடந்தால் கீழே பயிர் நாசமாகாதா என்ன? பின் ஆயிரம் யானைகள் மாதக் கணக்கில் இருந்தால் என்னவாகும்? இங்கே படை இருந்தபோது இங்கிருந்தவர்களின் விவசாயத்துக்குப் பெரும் துக்கங்கள் நேர்ந்தன. எனினும் அவர்கள் பசியையும், பஞ்சத்தையும், பிணியையும், அவர்கள் நாட்டின் நலன் கருதிப்

பொருட்படுத்தவில்லை என்பது மன்னர் பெருமானுக்குப் பெருமிதத்தை அளித்தது. இத்தகைய மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்காகவே இராஜாதித்தர் இந்த இடத்தில் பல ஏரிகள் தோண்டுவித்தார். கொள்ளிடத்திலிருந்து புதிய ஆறு வெட்டிக் கொண்டு வந்து வீர நாராயணபுரத்து ஏரியில் நிரப்புவதற்கும் ஏற்பாடு செய்தார். இந்த ஏரியின் வளத்தினால் பெரும்நன்மை அடைந்தவர் கடம்பூர் சம்புவராயர்கள் ஆகிய நாங்கள்தான். அதில் சந்தேகமில்லை!'' என்றார்.

பின் சற்று நேரம் கழித்துச் சொன்னார் ''அதனால் அடைந் திருக்கும் செல்வச் செருக்கை வெளிக் காட்டிக்கொள்ளவே தஞ்சை அரசியலில் தலையை நுழைக்க முற்பட்டோம். ஏரி வெட்டிக் கொடுத்த சோழர்கள் தலையில் ஏறி உட்கார நினைத் தோம்.''

'எதைப் பேசினாலும் இங்கேயே வந்து விடுகிறாரே!' என நினைத்துக் கொண்டான் அடியான். அவனுக்கு மாறனின் முகத்தைப் பார்க்கவே பயமாய் இருந்தது.

அடியானுக்கு நன்கு தெரியும். சம்புவராயர்களைச் சரித்திரம் ஓரம் தள்ளியது நாட்டு நடப்பில் ஒரு மாறுதலையும் செய்ய வில்லை என்று. அவர்களை இழந்தது ஈடு செய்ய முடியாத இழப்பையும் ஏற்படுத்தவில்லை. 'பின் ஏன் இவர்களது முக்கியத் துவத்தைப் பற்றி ஆண்டாண்டுக் காலமாகக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம்?' என்று பொது மக்கள் பேசத் தொடங்கியது இவர்கள் செவிகளுக்கே கேட்டது.

சம்புவராயர் பேச்சைத் தொடர்ந்த போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டார். ''அந்தச் சனி பிடித்த காலத்தில் எது செய்தாலும் அது விபரீதமான காரியமாய் முடிந்தது எங்களுக்கு.'' மாறனை நோக்கி ஒரு வெறிப்பார்வை பார்த்துவிட்டு, ''இந்த மூடனின் பேச்சைக் கேட்டு என் குலத்திற்கு அழியாத பழியைத் தேடித் தந்து விட்டேன். இந்தப் பதற்றக்காரன் காரியத்தைக் கெடுத்து விடுவான் என எனக்கு முன்பே தெரியாமல் போனது'' என்று மகன் மீது பாய்வது போலச் சீறினார் சம்புவராயர்.

அடியான் நடுவில் புகுந்து மத்யஸ்தம் செய்யலாம் என நினைத் தான். ஆனால், இது ஒரு தந்தை - மகனுக்கு நடுவே நடக்கும் தனிப்பட்ட விஷயம் என மௌனம் காத்தான்.

''உணவு ஆறுகிறது!'' எனச் சற்று உரத்த குரலில் கூறினார் மாறனின் தாய். ஒன்று மட்டும் தனியாகத் தெரிந்தது. மாறன் எந்த ஒரு நிலையிலும் ஒரு வார்த்தைகூடத் தந்தைக்கு எதிராகப்

போகவில்லை. தினந்தோறும் தாய் மட்டும் வேறு ஏதாவது பேசிப் பிரச்சனையைத் திசை திருப்புவார் போலும்.

உணவை உண்டு கொண்டே சம்புவராயர் தொடர்ந்தார் ''காலம் மாறும் என இந்தப் பைத்தியக்காரி கூறிக்கொண்டே இருப்பாள். ஆனால், எனக்கு என்னவோ அதில் நம்பிக்கை உண்டாகவில்லை. என் விதி என்னை அழைக்கிறது.''

இவ்வாறு ஆவேசம் கொண்டு பேசி வந்த சம்புவராயர் உடலில் போதிய பலமில்லாமல், கட்டிலில் சாய்ந்தார். உடனே மாறன் எழுந்து அவருடைய தோள்களைப் பிடித்துக்கொண்டு கட்டிலில் தலை அடிபடாமல் மெள்ளப் படுக்க வைத்தான். அவர் அருகில் வந்து நெற்றியில் கையினால் தடவிக் கொடுத்தார் அரசி. சம்புவராயரின் வாய் விளிம்பில் எச்சில் ஒழுகியது. அதைத் தன் கையில் துடைத்தார். ஒவ்வொரு செயலிலும் தன் கணவன் மீது வைத்திருந்த கரிசனத்தைக் காட்டினார் அந்த மாதரசி.

மெல்லிய குரலில், ''அவர் உறங்கிவிட்டார்'' என்றார் மாறனின் தாய். ''பேசுங்கள். ஆனால், இரைய வேண்டாம்'' என்றார், சிரித்துக் கொண்டே. ''சட்டென அவர் எழுந்து விடுவார்.''

அதற்கு அப்புறம் அடியானின் குரல் ரகசியம் பேசுபவரின் வார்த்தைகள் போலத்தான் வெளிவந்தன. மீண்டும் ஒரு முறை அவர் எழுந்தால்... அப்பப்பா! ஒரு நொடியில் ஒரு புயல் அடித்து ஓய்ந்ததாகத் தோன்றியது அடியானுக்கு. இந்த மூவரின் உள்ளத் திலும் எப்பேர்ப்பட்ட சிந்தனைகள் கொந்தளித்துக் கொண் டிருந்தன என நினைத்தான்.

சுவரில் இருந்த மணிமேகலையின் படத்தைப் பெருமையுடன் பார்த்துவிட்டு மூதிய பிராட்டியார் கூறினார், ''முன்பெல்லாம் அவர் கோபமாயிருக்கும் போது, மகன் மனைவி கூட அவரை நெருங்க அஞ்சுவோம்! ஆனால், என் மகள் மட்டும் அவரை எந்நிலையிலும் கட்டுப்படுத்தி விடுவாள். மகள் மீது கொள்ளைப் பிரியம் இவருக்கு. அது கூட, அதன் ஆழம் கூட, அவள் போன பின்தான் இவருக்கே தெரிந்தது.''

''தன் கண்ணின் கருமணியாகப் பாவித்து வந்த மகளின் நினைவு அடிக்கடி எழுவதுண்டு. அப்போதெல்லாம் இப்படித்தான் கண்ணீர் விட்டுக்கொண்டு மூலையில் முடங்கிக் கிடப்பார்'' என்றான் மாறன். ''எங்கள் பிடிவாதத்துக்குப் பலியாகி அநியாயமாக இறந்து போனாள் இந்த வீட்டின் செல்வக்குமாரி மணிமேகலை. அவள் எங்களைத் தண்டித்து விட்டுத் தான் போனாள். அவள் போயும் எங்களால் அந்தக் குற்ற உணர்வு என்ற சிறையிலிருந்து மீளவே

முடியவில்லை. அவள் நினைவுகள் அகலவே இல்லை. அவளை நினைக்காத நேரமே இல்லை'' என்றான் மாறன்.

அவனது தாயோ, ''எங்களை விட்டுவிட்டு அடியோடு போய் விடப் போகிறாள் என்று தெரியாது'' என்றார். மகளை இழந்து துடிக்கும் இந்த தாயின் முகத்தில் சோக ரேகை பரவியிருப்பதில் ஆச்சரியம் இல்லை. பழையதை எண்ணிப் பெருமூச்சு விட்டார் அவர்.

அடியான் மௌனம் காத்தான். எந்த ஒரு பேச்சுக்கும் மனம் ஒப்பவில்லை. அவர்களது கஷ்டம், தானாகச் செய்து கொண்டது. செய்த காரியத்திற்குப் பிராயச்சித்தம் தேடும் வகையில் தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டிருந்தார்கள். புயல் காற்றினால் அலை வீசிக் கொந்தளிக்கும் கடல் கூட அவர்களது மனதை விட அமைதி யானது. இவர்களுக்கு வார்த்தைகள் எப்படி ஆறுதல் அளிக்க முடியும்? காலம்தான் இவர்களுக்கு அதை அளிக்க வேண்டும்.

படுத்திருந்த சம்புவராயர் எச்சிற் கையினால் தலையைச் சொறிந்து கொண்டார். மாறனின் அன்னை மெதுவாக அந்தக் கையைத் தலையிலிருந்து எடுத்து விட்டார்.

கண் மூடியிருந்தாலும் அவரது உதடுகள் அவ்வப்போது அசைந்தன. பேச்சும் கேட்டது. ஒற்றன் காதுகள் சர்ப்பத்தின் செவி களைப் போன்றவை. அவர் பேசியது அருகிலிருந்த அடியானுக்கு மட்டும் கேட்டது. புரிந்து கொண்டான். மறைந்த மகளுடன் பேசினார். மாண்டு போன பழுவேட்டரையரைக் கண்டித்தார்.

இன்று அவரது நிலைமை மோசமாய் இருந்தாலும், அவரை முன்பைவிட மாறன் மதித்து அன்பைச் சொரிந்தான் என்று அடி யானுக்குப் புரிந்தது. ஒவ்வொரு முறை அவனது தந்தை அறைக்குள் தட்டு தடுமாறி வரும் போதும் மாறன் தன்னை நிச்சயம் சபித்துக் கொள்வான் - 'என்னால்தானே இந்த நிலைமை!' என்று, என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

''இடுப்பில் துணி நிற்கிறதா என்பது கூடத் தெரியாத தந்தை, மரணமடைந்த தங்கை, எரிந்த தலைநகர், பாழான என் எதிர் காலம். இப்படி எல்லாம் போனது. என்னுடைய யோசனையை ஆரம்பத்திலிருந்து கேட்டதினால்தான் இந்த விபரீதம் எங்கள் வீட்டில் நடந்து விட்டது'' என்று தன்னைத் தானே பழித்துக் கொண்டான் மாறன்.

அடியானுக்கு நிலைமை நன்றாகப் புரிந்தது. அரசியல் குழப்பங்கள் ஏற்படும்வரை மாறனிடம் அவனது தந்தை ஓரிரு கடுமையான வார்த்தைகூடக் கூறியதாகத் தெரியவில்லை.

அவனது கருத்துக்களுக்கும் பெரும்பாலும் மறுப்புச் சொன்ன தில்லை. சோழர்களுக்கு எதிரான சதியாலோசனையில் மற்ற சிற்றரசர்களிடம் கூறப்பட்ட சம்புவராயரின் யோசனைகள் பெரும்பாலும் அவர் வாயிலிருந்து வந்த மாறனின் வார்த்தைகள் தாம். அதனால்தானோ என்னவோ இவனது ஓட்டைகள் நிறைந்த, அரைவேக்காடான திட்டம் கூடச் சபையில் விலை போனது.

''என்னை ஈன்ற தந்தையே என்னை மடையன் என அழைக்கும் போது, சரித்திரம் என் செயல்களை எப்படி வர்ணிக்கும்?'' என்றான்.

அடியான் புரிந்து கொண்டான்- மண், பொன், பெண் ஆசைகளைவிடச் சரித்திரத்தில் பெயர் பிடிக்க வேண்டும் என்பதே ஒரு வீரனுக்கு மிகப் பெரிய ஆசையாக இருக்கும் என்று.

மாறனின் நிலைமை நிச்சயமாக யாரும் பொறாமை கொள்ளும் படி இல்லை. மனதுக்குகந்த வேலை இல்லை. தினம் தினம் எதையோ நினைத்து நினைத்துப் படுக்கையில் புரள்வான் போலும். மனம் விட்டுப் பேசலாம், என்றால் பல தலைமுறை களாய் நட்புப் பூண்ட குடும்பங்கள் அவர்களைக் கண்டால் வெகு தூரம் தள்ளி நிற்கிறார்கள். இந்த இடத்தை விட்டுக் கிளம்பலாம் என்றால், அவனது கைகள் பாசமெனும் முறுக்குக் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தன.

அவனது மென்மையான வாலிபம் முதிர்ச்சியெனும் கல்லாகிப் போனது. அவனது உள்ளம் இப்போது கடுமையானது. அவனது கண்கள் அனைத்தையும் ஒரு சந்தேகப் பார்வையுடன் பார்ப்ப தைப் பார்க்கும் போது, அடியான் சிறிது வருத்தப்பட்டான்.

சரித்திரம் ஒரு வெள்ளமாய் மாறி, அதன் சுழல் இவர்களுடைய கால்களைப் பிடித்து அதிவேகமாக இழுத்துக் கொண்டிருந்தது. அந்த வேகமும் வீரியமும் உயிரையே பிய்த்துக்கொண்டு போய் விடும் போலிருந்தது.

அவனைத் தேற்ற எண்ணி உறுதியான குரலில் கூறினான் அடி யான், ''நிச்சயமாக ஒரு நல்ல காலம் உமது குலத்துக்கு விடியும்.''

தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் மாறன். அடியான் தான் பேசிய வார்த்தைகள் மாறன் காதில் விழுந்தனவா எனத் தெரிந்து கொள்ளக் காத்திராமல் தன் கை காய்ந்து விட்டதைக் கவனித்துக் கை கழுவ எழுந்தான்.

மாறனின் தாய், ''அதற்குள் அரை வயிறு கூட நிரம்பாமல் எழுந்து விட்டீர்களே! என் கணவர் இதுவரை பேசியதைப்

பொறுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக அரை வயிற்றில் எழக் கூடாது'' என்றார்.

'இதற்கு மேல் நான் அமர்ந்தால் மற்றவர் எல்லாம் பட்டினி தான்!' என நினைத்துக் கொண்டான் அடியான்.

மனம் மாற மறுத்த விருந்தாளியிடம் கை கழுவ ஒரு குவளையில் நீரைக் கொடுத்துவிட்டு மாறனின் தாய் மேலும் தொடர்ந்தார்.

''இப்படித்தான் போன வாரம் வந்த தாடி வைத்திருந்த இவன் நண்பரும் சாப்பிட மிக ஆர்வம் காட்டவில்லை. பேச வேண்டும் என்றே துடிதுடித்துக் கொண்டிருந்தார்'' என்றாள்.

மாறன் சட்டெனத் திரும்பித் தன் தாயை முறைத்தான். அவரும் தன் வாயை மூடிக் கொண்டார். போன வாரம் வந்து சென்ற விருந்தாளியைப் பற்றி அதற்குமேல் ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை. மாறனின் சமிக்ஞையை அடியான் கவனிக்கத் தவறவே இல்லை.

தற்செயலாக நாவிலிருந்து விடுபடும் வார்த்தை மற்றும் வார்த்தைகளின்றிப் பேசப்படும் சமிக்ஞை மொழிகளுக்கு ஒற்றன் மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது அடியான் கற்ற முதல் பாடம். மற்றவர்கள் கூட மறந்து விடுவார்கள்.

ஆனால், அடியான் தான் கசடறக் கற்றதை என்றும் மறப்பவன் இல்லை.



அத்தியாயம் ஐந்து

''ஏனென்று கேட்காதே! நம்பி வா!''

நான்கு நாட்கள் கடம்பூரில் தங்கியிருந்தான், ஆழ்வார்க் கடியான். காலையில் மாறனும் அவனுமாய் அருகில் உள்ள வைணவத் தலமான வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்குச் சென்று வருவார்கள். முன்பொரு காலம் கொள்ளிட வெள்ள நீர் வீணாய்க் கடலில் கலந்து கொண்டிருப்பதைக் கண்ட இராஜாதித்த சோழன் மனம் வருந்தி, கடம்பூருக்கு அருகில் வேலையின்றிச் சும்மா இருந்த லட்சக் கணக்கான போர் வீரர்களைக் கொண்டு கடல் போன்ற விசாலமான ஏரி ஒன்றை அமைத்தான்.

அதைத் தன் அருமைத் தந்தையின் பட்டப் பெயரால் வீரநாராயண ஏரி என்று அழைத்து, அதன் கரையில் வீரநாராயண புரத்தை ஏற்படுத்தி, அதில் ஒரு விஷ்ணுக் கிருஹத்தையும் அமைத்தான்.

நீருக்கும் விஷ்ணுவுக்கும் தொடர்பிருந்ததால் ஏரிக் கரையை ஒட்டி ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்குக் கோயில் எடுப்பது அக்காலத்து வழக்கம். அதன்படி வீரநாராயணபுர விண்ணகரத்தில் வீரநாராயணப் பெருமாளைக் கோயில் கொண்டு எழுந்தருளச் செய்தார்கள் சோழர்கள்.

இக்காலத்தில் சம்புவராயர் பராமரிப்பிலிருந்த இந்தக் கோயிலுக்கு இப்படித் தினந்தோறும் மாறன் வந்ததே இல்லை. இது ஒரு புது அனுபவமாய் அவனுக்கு இருந்தாலும், மனதுக்கு இதமாய் இருந்தது. தினந்தோறும் காலை சந்நிதிக்குச் சென்று நின்றதும் ஆழ்வார்க்கடியான் பாட ஆரம்பிப்பான். தன் பேருக்கு ஏற்ப ஆண்டாளின் பாசுரங்கள், நம்மாழ்வாரின் தமிழ் வேதத்திலிருந்து சில பாசுரங்கள் என்று கசிந்துருகிப் பாடுவான். கோயிலுக்கு வந்த சிலர் அதை மிகவும் ரசித்து மகிழ்வார்கள்.

வீடு திரும்பி மதிய உணவுக்குப் பிறகு நல்ல தூக்கம் போடுவான் அடியான். இன்னும் இரவில் உறங்கவில்லை அவன். மாறனிடமிருந்து அது தொற்று வியாதி போல இவன் மீது ஒட்டிக் கொண்டு விட்டது. எவ்விதச் சூழலிலும் நல்ல கும்பகர்ண சேவை செய்யும் அடியானுக்கே இந்தப் பாழடைந்த கோட்டை ஒரு சவாலாய்த்தான் இருந்தது.

தினந்தோறும் கண் மூடியவுடன் உடம்பெல்லாம் உதிரம் ஒழுகியபடி ஆதித்த கரிகாலன் வந்து இவனை எழுப்பி இவன் மனம் வைத்திருந்தால் தன் சாவைத் தடுத்திருக்கலாம் எனப் பழித்தான். அதே கனவு எப்படித் தொடர்ந்து வரும் என அடியானுக்குப் புரியவில்லை. எனினும் மதியம் உறங்கும் போது ஆதித்த கரிகாலன் வருவதில்லை என்பது பெரும் நிம்மதியை அவனுக்குத் தந்தது.

இரவெல்லாம் இதனால் திவ்யபிரபந்தங்களைச் சதா உச்சரித்துக் கொண்டு கண் மூடாமல் நித்ரா தேவிக்காகக் காத்திருந்ததினால் அவனது புண்ணியம் பன்மடங்கு ஏறியது.

மாறனும் தன் தந்தையை இனிமேல் சீண்ட வேண்டாம் என்று கண்டிப்பாக எச்சரித்து விட்டபடியால், சம்புவராயருடன் பேச அவன் முயற்சிக்கவில்லை. ஆனால், அவரை நன்கு கவனித்து வந்தான்.

மாறனின் தந்தையுடைய நிலைமை மிகவும் பரிதாபமாகத்தான் இருந்தது. நாளெல்லாம் கனவு உலகத்தில் இருந்தார் சம்புவராயர். தன் ஆசை மகனையும், பதவியையும் அடுத்தடுத்து இழந்தது அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. ஜுர வேகத்தில் பிதற்றிக் கொண்டே இருக்கும் நோயாளியைப் போல, சதா குரல் கொடுத்துக் கொண்டே இருந்தார். அவர் பேச்சு சில நேரங்களில் தெளிவாகவும் சில நேரங்களில் உளறலாகவும் தோன்றியது. சில நேரங்களில் சுய நினைவுடன் இழந்ததை ஆராய்ந்து பேசினார். சில நேரம் தன்னை மறந்து பித்தன் போல உரக்கப் புலம்பினார்.

இரண்டு நாட்களாகவே மாறனுடன் அந்தரங்க விஷயமெல்லாம் பேச வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்த அடியான், அதைச் செய்யவில்லை. வெளியில் கோயில்களுக்குச் செல்லும் போது பேசவும் வாய்ப்புகள் ஏற்படவில்லை. இதற்காகவே எங்காவது கிளம்பிச் செல்ல வேண்டுமென முடிவெடுத்தான். 'இந்தச் சூழலில் அவனுடன் பேசுவது சரிவராது' என அடியானுக்குத் தோன்றியது. 'கருகிய கோட்டை அருகே ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி எப்படிப் பேசுவது?'

''இன்று ஏரிக்கரைக்குச் செல்வோமா?'' என்று அடியான் கேட்டான்.

ஒரு நொடி ஸ்தம்பித்து நின்ற மாறன், ''வைணவரே! நீங்கள் வந்ததிலிருந்து நான் வீரநாராயண ஏரியின் கரையில் சென்று அமர்வதைப் பற்றி யோசிக்கக் கூடவில்லை!'' என்று வியப்புடன் கூறினான்.

இருவருமாக இரு புரவிகளில் புறப்பட்டு ஏரிக்கரைக்கு வந்து சேர்ந்தபோது சூரியன் உச்சியை நெருங்கிக் கொண்டிருந்தான். அமர்வதற்கு நிழலான இடத்தைத் தேர்ந்தெடுத்தான் மாறன்.

ஒரு விரக்தியான சிரிப்புடன், ''எனக்கு இந்த ஏரிக்கரை அத்துப்படி. இப்படித்தான் ஐந்து ஆண்டுகளாக நானும் வீரநாராயண ஏரிக் கரையில் தினந்தோறும் வந்து அமர்வேன். இந்த அலைகளுடன்தான் என் உரையாடல் எல்லாம். நீங்கள் நம்ப மாட்டீர்கள், மௌன மொழியில் அவையும் மறுமொழி சொல்லும்'' என்றான்.

ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தான்: ''ஒரு கண நேரம் ஒரு யுகமாகத் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அப்போது இந்த ஐந்து ஆண்டுகள் எப்படி இருந்திருக்கும்? என் வாழ்வில் மேன்மையான ஐந்து ஆண்டுகள் சாக்கடையில் ஓடும் நீராய்ப் போய் விட்டன.''

பேசப் பேச வெளி உலக விஷயங்களைப் பற்றி அவனுக்கு வெகுவாகத் தெரியவில்லை எனத் தெளிவாகத் தெரிந்தது. பெரும்பாலும் அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் இதுவரை அவனுக்கு ஆவல் இல்லை. அவனது உலகத்தின் எல்லைகள் இந்தக் கடம்பூருடன் முடிவுற்றன.

இந்த வைணவன் வந்தது அவன் வாழ்வில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

''வந்தியத் தேவன் எப்படி இருக்கிறான்?'' என்று முதல் பேச்சை எடுத்தான். இவனது வாழ்வே எப்போதும் அந்த ஒரு மனிதனைச் சுற்றித்தான் சுழல்கிறது போலும் என நினைத்துக்கொண்டு அடியான் பதில் கூறினான். ''நானும் அவனைப் பார்த்து வெகு நாட்களாயிற்று. அவன் திருமணம் செய்த பின் அடங்கிப் போய் விடுவான் என எண்ணினேன். அதுவும் தவறு. அருள்மொழிவர்மருடன் சேர்ந்து இப்போது கடல் கொள்ளையர்களை அடக்கச் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவனால் சும்மாவே இருக்க முடியாது'' என்றான்.

மாறன் தன் பழைய நண்பனை நினைத்துச் சிரித்தான். ''வந்தியத் தேவனைப் பற்றி உங்களுக்குச் சரிவரத் தெரியாது. அவனாவது சும்மா இருப்பதாவது. அவன் இருந்தாலும் அவன் விதி விடாது. அவனும் நானும் வடக்கு எல்லையில் காவல் புரிந்தபோதுதான் அதை நான் நன்கு அறிந்தேன். ஒதுங்கி இருக்க அவன் எண்ணினாலும், அவனைச் சுற்றியே காரியங்கள் எல்லாம் நடக்கும்.''

''ஒரு முறை நாங்கள் சென்று கொண்டிருந்த காட்டுப் பாதை வழி. அது சாதாரணப் பாதை. ஆயிரம் முறை சோழர் படைகள் இங்கும் அங்குமாய் நடந்து காலடி பதித்த இடம்- பக்கவாட்டிலிருந்து ஒரு காட்டெருமை எங்களை நோக்கிப் பாய்ந்து வந்தது. கடைசியில் நான்தான் அதை விரட்டினேன். வந்தியத்தேவன் ஒன்றும் செய்யவேயில்லை.''

''உமது வீரம் எனக்குத் தெரியாதா?'' என்று அடியான் மெச்ச, தலை குனிந்து மாறன் கூறினான், ''மரத்தின் மீது ஓர் இரவு அமர்ந்து விட்டு, சிங்கம் போலக் கர்ஜித்துத்தான் அதை விரட்டினேன். என்னுடைய வாள் அதன் தடித்த தோலின் மீது ஒரு கீறல் கூடப் போட்டிருக்காது. ஆனால், இரவு முழுவதும் வந்தியத் தேவன் தூங்கவில்லை. எருமையைச் சீண்டிக்கொண்டே இருந்தான்.''

சத்ருவைச் சம்ஹாரம் செய்யும் வீரர்கள் காட்டெருமைக்குப் பயந்து மரத்தின் மீது இரவைக் கழித்ததை நினைத்து அடியான் விழுந்து விழுந்து சிரித்தான். மாறன் தன்னிடம் சிரிக்கும் சக்தி

மட்டுமல்ல, மற்றவரைச் சிரிக்க வைக்கும் சக்தியும் இன்னும் இருக்கிறது என மகிழ்ந்தான்.

"வந்தியத் தேவனின் முல்லை நிகர் புன்னகையும் அவனது இணையில்லா வீரமும் எவரையும் கவரும். ஆனால், காந்தம் போல் கஷ்டத்தை அவன் கவர்வதுதான் அவனது முன்னேற்றத்தை எளிதாக்குகிறது" என மாறன் தன் நண்பனைப் பற்றிக் கூறினான். அவனுடன் சிநேகமானவர்கள் இருவரும் அவனைப் பற்றி இப்படிப் புகழ்வது வந்தியத் தேவனுக்குத் தெரிந்திருந்தால் அவனது உச்சி குளிர்ந்திருக்கும்.

மாறன் தொடர்ந்தான், "அவன் முதல் முறையாக எங்கள் வீட்டுக்கு வந்தபோது கூடச் சரித்திரம் உருவெடுத்துக் கொண்டிருந்தது. நாங்கள் சேர்ந்து எல்லையில் சேவை செய்து கொண்டிருந்தபோது, பல முறை அவனை என் வீட்டுக்கு வரச் சொல்லியிருப்பேன். ஆனால், அந்த இரவில்தான் இங்கு வர வேண்டுமென விதி நிர்ணயித்திருந்தது."

அடியானுக்கும் பழைய ஞாபகங்கள் வந்தன. அந்த இரவுதான் எவ்வளவு முக்கியமானது! எவ்வளவு பேருடைய வாழ்க்கைப் பாதைகள் அன்று மாறுபட்டன! வந்தியத் தேவன் இங்கு வந்தது தற்செயலாகத்தான். ஒரு பழைய நண்பனைப் பார்த்துவிட்டு இரவெல்லாம் பேசிக்கொண்டிருந்துவிட்டுக் விடிந்ததும் எழுந்து சென்றுவிட வந்தான். ஆனால், அன்றுதான் கடம்பூரில் சக்கரவர்த்திக்கு எதிராகச் சதியாலோசனைக் கூட்டம் நடைபெற இருந்தது.

"அவன் வந்தது பலருக்கும் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு மோப்ப சக்தியினால் பழுவேட்டரையரும் என் தந்தையும் இவன் வரவினால் தங்கள் திட்டங்களுக்குத் தீங்கு விளையுமெனச் சரியாக யூகித்தார்கள்" என்றான் மாறன். "அன்று இங்கு அவன் வராதிருந்தால், நாங்கள் இருவரும் நண்பர்களாகவே இருந்திருப்போம். அவனும் அரசகுல மருமகனாக ஆகியிருக்க மாட்டான். ஏன், இந்தச் சோழ மகாராஜ்யத்தின் சரித்திரம்கூட மாறுபட்டிருக்கலாம்."

சற்று நேரம் அமைதியில் பழையதை நினைத்தனர். மாறன் மேலும் "அதிர்ஷ்டசாலி ஒருவன் இருக்கிறான் என்றால் அது வந்தியத் தேவன்தான். அதிர்ஷ்ட தேவதை அவனைத் தேடிக் கொண்டு பின்தொடர்ந்தவாறு வருகிறாள். ஆனால், அதிர்ஷ்டம் கடைசியாகத்தான் வந்தது. முதலில் வந்தது சோகமும் சோதனைகளும்தான். தயிரைக் கடையும் மத்துப் போன்று நிலையில்லாதது தான் அவன் வாழ்வும். அவன் சொல்லக் கேட்டு, பின் வாணர்

குலத்தின் பெருமையை அறிந்திருக்கிறேன். அவன் குலம் தழைத்த போது இந்த மூவேந்தரும் கை கட்டி நின்றிருக்கிறார்கள். இப்படிப் பட்டவன் நாடின்றித் தவித்த தவிப்பு எனக்குத் தெரியும். அவனுக்கு நல்ல வாழ்க்கை அமையவே என் தங்கையை அவனுக்குக் கட்டிவைக்க எண்ணினேன். ஆனால், இன்று அவனுக்கு வானமே வசப்பட்டு விட்டது."

பல அரச குடும்பங்களின் வழித் தோன்றல்கள் மிகவும் ஏழ்மையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வந்தியத் தேவன் நாடு விட்டு நாடு நாடோடிபோல் அலைந்ததற்கு நல்லதொரு பலன் கிட்டியிருந்தது. தன் வீட்டுக் கதவைத் தட்ட வந்தியத் தேவனது மனம் எப்படிப் புழுங்கியிருக்கும் என இப்போது அதிகாரமும் வலிமையும் குறைந்திருந்த மாறன் தெரிந்து கொண்டான்.

"அவன் இன்று என்னைப் புறக்கணிப்பது என் நெஞ்சை கத்தியினால் குத்துவது போன்ற வலி கொடுக்கிறது. என்னை வதைக்கின்ற பல விஷயங்களில் முதன்மையானது இதுதான்" என்று புலம்பினான் மாறன். நட்பு மனதை விட்டு அகன்றது, ஆனால் அதன் பார்வையை மறைத்ததனால். விசித்திரமானது விதி. நண்பர்களை எதிரியாக்கி, எதிரிகளை நண்பர்களாக்கி, வாழ்க்கையைக் கவலைக்குள்ளாக்குகிறது.

"அதைப் பற்றியே யோசித்து மனதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது அடுத்த காரியத்திற்குத் தயாராக வேண்டும்" என்று ஆறுதலளித்தான் அடியான்.

"ஆனால், ஒன்று மட்டும் சொல்ல வேண்டும். வந்தியத் தேவனுடைய திறமைகள் வெளிவந்தது நாட்டுக்கே ஒரு அதிர்ஷ்டம்!" என அடித்துக் கூறினான் மாறன்.

அவன் காத்திருந்த சந்தர்ப்பம் கிட்ட, அடியானும், "உமது திறமைகளையும் வெளிக் கொண்டு வருவது இந்த நாட்டுக்கு நன்மையே பயக்கும்!" என்றான். "இராஜ்ய காரியங்களில் கவனத்தைச் செலுத்த உமக்கு வயது இன்னும் உள்ளது. திறமையும் உள்ளது."

"வாளை வீசவும், வேலை எறியவும் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இராஜ காரியத்துக்குப் புத்திக் கூர்மையும் வேண்டாமா? அது எங்களிடம் சுத்தமாகக் கிடையாது" என்று மாறன் பட்டெனப் பதில் கூறியதும், அவனது நீண்ட நாள் வேலை சிரமம் அவனை உடலிலும் மனதிலும் பாதித்திருந்தது தெரிந்தது.

சிறந்த போர்வீரன் கூட வேலையில்லை என்றால் மெல்ல மெல்லத் தன் திறமையை இழந்து விடுவது உறுதி.

இருதயத்தைத் திறந்து சொல்லத் தொடங்கினான் மாறன். "என் வாளும் வேலும் துருப்பிடித்து விட்டன. ஒவ்வொரு கணமும் எனக்கு யுகம் போல நகர்கிறது. இந்த இடத்தை விட்டுச் செல்ல நினைக்கிறேன். முடியவில்லை. ராஜத் துரோகியாக என்னை யாரேனும் அடையாளம் காட்டினால் அதை என்னால் தாங்க முடியாது."

வந்த வேலையை ஆரம்பித்தான் அடியான். "தஞ்சாவூரிலிருந்து உமக்கு முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

"என் தந்தையிடமே கூறியிருக்கலாமே."

"செய்தி வந்தது இளம் சம்புவராயருக்கு. உம்மை அங்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்கள்."

மாறன் மனதில் பற்பல முரண்பட்ட எண்ணங்கள் உண்டாகின. அழைப்புக்கு மகிழ்ச்சியும், காலம் தாழ்த்தியதில் கோபமும் ஏற்பட்டது. "இந்தச் சம்புவராயர் குலத்தை நினைவில் வைத்துக் கொண்டிருப்பது பற்றி நிரம்ப மகிழ்ச்சி. ஆனால், திடீரென ஏன் என்றுதான் கேட்கிறேன்."

"உங்கள் உதவி அங்கு தேவைப்படுகிறதோ என்னவோ?"

"உதவியா?" எனச் சிரித்தான் மாறன். "அதனால் இளம் சம்புவராயனை நினைத்துக் கொண்டாராக்கும். போதும் போதும். இந்த அரசாங்க வேலைகள் யாருக்கு வேண்டும்? தஞ்சையில் வாழும் உங்கள் எஜமானர்களிடம் ஓடிப்போய்ச் சொல்லுங்கள்" என்று வார்த்தைகளைத் துப்பினான்.

பதில் ஏதும் சொல்லாத அடியானிடம் "வைணவரே! என்னால் இனி என்ன சேவை செய்ய முடியும் அந்த அரசர் குலத்துக்கு? தோற்றுத் துரும்பாய்ப் போனவன் நான். வீடு வாசலற்றவன். என்னுடைய குலப் பெருமை எல்லாம் பழைய கதை. இந்தப் பழமையான சம்புவராயரின் குலம் ஆட்டம் முடிந்து திரையை இழுக்கும் பொறுப்பைத்தான் சரித்திரம் எனக்குக் கொடுத்திருக்கிறது."

மாறன் மீது பழி போடுவதற்குப் பதிலாக அவன் மீது பரிதாபம் கொள்வதுதான் சரி எனத் தோன்றியது அடியானுக்கு.

"இளவரசே! அவ்விதம் மனமுடைந்து பேசக் கூடாது. பல குறுநில மன்னர்கள் சோழ மகாராஜ்யத்தில் பெரிய பதவிகள்

வகிக்கிறார்கள். உங்களை அவர்கள் அழைத்தது அதற்காகக் கூட இருக்கலாம். தங்களிடம் மறைந்து கிடக்கும் மகாசக்தியைத் தாங்கள் அறியவில்லை. தாங்கள் மட்டும் அரச சேவையை மறுபடியும் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால் வந்தியத் தேவனைப் போல, ஏன், அவனை விட மேன்மையும் புகழும் அடைவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை."

ஓரக் கண்ணால் மாறனைப் பார்த்தான் அடியான். மெல்ல மெல்ல மாறனது உறுதி இளகுவதாய்த் தெரிந்தது.

"பலரது அழைப்பின் பேரில் போகாத நான் உம்முடன் ஏன் வர வேண்டும்? ஒரு காரணம் கூறுங்கள்" என்று கேள்விக் கணையை ஏவினான் மாறன்.

"அவர்களெல்லாம் 'உம்' என்று முகத்தை வைத்திருப்பார்கள். நான் உங்களை ஐந்து ஆண்டுகளில் முதல் முறையாகச் சிரிக்க வைக்கவில்லையா? தஞ்சைக்குச் செல்லும் நெடிய வழியெல்லாம் உம்மை வகை வகையாகக் கதை சொல்லி நகைக்க வைக்க மாட்டேனா?" என்று அடியான் முகத்தைப் பாவமாய் வைத்துக் கொண்டு கேட்டான்.

சட்டெனச் சிரித்த மாறனுக்கு இந்த வைணவனை மிகவும் பிடித்துப் போனது. அடியான் தொடர்ந்தான்: "தலைநகருக்குச் செல்வதனால் என்ன பிரயோஜனம் என நீர் கேட்கலாம். இது அது என நான் கூறமாட்டேன். எனக்குத் தெரியாது. ஆனால், முக்கியமான ஒருவர் உம்மை ஒரு வேலைக்காக அழைத்து வரச் சொன்னார். அவர் யாரென்று நான் உம்மிடம் சொல்ல இயலாது. என்னை நம்பி நீர் வந்தால், அது நம் இருவருக்கும், நாட்டுக்கும் நல்லது செய்யும் என நான் நினைக்கிறேன்."

மாறன் கண்களை மூடிக் கொண்டு சிந்தித்தான். தஞ்சைக்கும் அவனுக்கும் ஒரு நாளும் ஒத்துவரப் போவதில்லை. அதைப்பற்றி வீண் மனோராஜ்யம் செய்வதில் என்ன பயன்? அவன் குடும்பத்தைக் கேவலப்படுத்தியவர்கள் எல்லாம் இருக்கும் ஊர் தஞ்சை. 'நியாயமாய்ப் பார்த்தால் எதிர்த் திசையில்தான் கால்கள் நடந்திருக்க வேண்டும். தேசப் பிரஷ்டம் செய்தது போல் தஞ்சையை விட்டுத் தள்ளியே வாழ்ந்தாயிற்று. ஆனால், இத்துடன் நான் வாழப்பழகிக் கொண்டுவிட்டேன். இனி ஒரு மாறுதல் அவசியமா?'

மீண்டும் முடியாதென்று தலையை அசைத்தான்.

அடியானுக்குக் கோபம். "இத்தனை நேரம் நான் சொன்னதெல்லாம் உங்கள் மனதில் ஏறவில்லையா?"

"இல்லை, எனக்கு நீர் போதனை செய்வதில் சிறிதும் பயனில்லை என்றுதான் சொன்னேன். பொன், புகழ், பதவி போன்ற உலக ஆசைகளுக்கும் எனக்கும் வெகு தூரம். தஞ்சையின் போக்கும் என் உள்ளப் போக்கும் முற்றும் மாறானவை. அவை ஒத்து வரமாட்டா."

"ஒத்து வரும்படி நாம்தான் செய்ய வேண்டும்" என்றான் அடியான், ஒரு குழந்தைக்கு எடுத்துச் சொல்வது போல.

தன் நலனில் அக்கறை கொள்ளவும் ஒரு ஆள் இருப்பது மனதுக்கு ஆறுதல் அளித்தது மாறனுக்கு. "முதலில் என்னை வேவு பார்க்கத்தான் வந்தீர் என நினைத்தேன். துப்புத் தெரிந்தவுடன் ஓடிச் சென்று அங்கு யாரிடமாவது கூறுவீர் என யூகித்தேன்."

"இந்த உடல் கொண்டு என்னால் ஓட முடியுமா?" என்று சொல்லிச் சிரித்தான் அடியான். மாறனும் சேர்ந்து சிரித்தான். மாறன் சற்றுச் சிந்தித்தான். இந்த வைணவனின் யோசனைப்படி நடப்பதுதான் உசிதம் என்று தீர்மானித்தான். ஆனால், அதற்கு வேறொரு காரணம் இருந்தது.

அடியான் கடம்பூரில் விஜயம் செய்த நாள் முதல் இவன் எதற்காகத் தன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறான் என்று மாறனின் மனம் குழம்பியது. ஆனால், தன் ஆர்வத்தைக் காட்டிக் கொள்ள விருப்பமில்லாமல் மௌனம் காத்தான். இப்போதுதான் மாறனுக்கு எல்லாம் விளங்கத் தொடங்கிற்று .

ஐந்து ஆண்டுகளாக யாரும் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்ற ஆதங்கம் இருந்தது மாறனுக்கு. அவனைப் பார்க்க வேண்டுமென்று உத்தம சோழர் பலமுறை சொல்லி அனுப்பிய பின்னரும் மாறன் சக்கரவர்த்தியைக் காண்பதற்குப் போகவில்லை. அந்த அழைப்புகளும் நின்று விட்டன. ஐந்து ஆண்டுகளும் ஓடோடி விட்டன. இப்போது அடியான் வந்து அழைத்தது மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆச்சரியமும் கூட.

"ஏன் என்று கேட்காதே. என்னை நம்பி வா" என்று சொல்லியிருந்தான் அடியான்.

போன வாரம் வந்த தாடி வைத்தவனும் இதே வார்த்தைகளைத்தான் கூறினான். "ஏன் என்று கேட்காதே, என்னோடு, என்னை நம்பி வா" என்று, அடியான் உபயோகித்த அதே வார்த்தைகள்.

அடியானிடம் யோசித்துச் சொல்கிறேன் என்று அவகாசம் கேட்டுவிட்டு, அனைத்தையும் ஆராயத் தொடங்கினான் மாறன். சற்று நேரத்தில் முடிவு செய்து விட்டான்– தலைநகருக்குப் போவ

இன்று, ஆர்வம் வந்ததன் காரணம், வேலை வந்து விட்டது என்ற மகிழ்ச்சியினால் அல்ல. புதிருக்கு விடை வரப்போகும் வேளை வந்துவிட்டது என்பதனால்.

ஐந்து ஆண்டுகளாக யாரும் கண்டுகொள்ளாமல் இப்போது ஒரே வாரத்தில் இரண்டு அழைப்புக்களா? வியப்பை அளித்தது. இந்த இருவரும் ஒரே காரணத்திற்காகக் கூப்பிடவில்லை என்று யூகித்தான். அதனால்தான் அவனது ஆர்வத்தை அது கிளறியது. ஒரு சொல்ல முடியாத பரபரப்பு ஏற்பட்டது.

இரண்டு எதிர் எதிர்ப் பிரிவினருக்கு இப்போது சம்புவராயரின் உதவி தேவைப்பட்டது.

❖ ❖ ❖

அத்தியாயம் ஆறு

"வெற்றியுடன் வா!"

தஞ்சையிலிருந்து மாறனுக்கு வந்த அழைப்பைப் பற்றிய பேச்சை அத்துடன் நிறுத்திவிட அடியான் விரும்பினான். அடுத்த நாள் முழுவதும் அழைப்பைப் பற்றி ஒரு மூச்சு கூட விடவில்லை.

எப்படியாவது மாறனுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்துக் கொண்டு போய்த் தலைநகரில் சேர்த்துவிட வேண்டும் என முடிவு எடுத்தபடியால், மேலும் பேச்சை வளர்த்து மாறனின் மறுப்பை உறுதிப் படுத்திவிட அவன் விரும்பவில்லை. அவ்வளவு கண்டிப்பாக மாறன் மறுமொழி சொன்ன போதிலும் அவனது பேச்சுத் தோரணை அடியான் மனத்தில் இன்னும் ஒரு நம்பிக்கையை விதைத்திருந்தது.

ஆனால், அதற்காக வாயடைத்தும் உட்காரவில்லை, அந்தப் பொல்லாத வைணவன். சதா தலைநகரில் நடப்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். அங்கு அது நடந்தது, இங்கு இது நடந்தது. என்று அவன் பேசப் பேச மாறன் ஒரு மறுமொழியும் சொல்லவில்லை. ஆனால், அடியான் எதிர்பார்த்தபடி அவன் மனதில் ஆழ்ந்த ஆர்வம் ஏற்பட்டது.

பிறந்ததிலிருந்து அரசியலில் ஊறிவிட்டு ஐந்து ஆண்டுகளாக ஒதுங்கியிருந்தவனுக்கு இந்தச் செய்திகள் பழைய ஞாபகங்களைக்

கொண்டுவந்து சேர்த்தன. அவனாகப் பேச்சை எடுக்கும்வரை இப்படி வெறியேற்றிக்கொண்டே இருந்தான், அடியான்.

மாறனுக்கு ஆர்வத்துடன் சேர்ந்து ஆத்திரம். 'நான் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்பில்லாமலிருந்த விஷயங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி என்னுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதற்காகவே இந்த வைணவன் முயல்கிறான். இவனைப் பிடித்து இந்த ஏரியில் தள்ளி விடலாம் என்றால், ஏரியில் கூடத் தண்ணீர் இல்லையே!' என வருத்தப்பட்டான்.

கடைசியாக ஜயலஷ்மி அடியானுக்கே வெற்றியைத் தந்தாள்.

மாறன் பேசத் தொடங்கினான். "நீர் கலபமாய் அழைக்கிறீர். ஆனால், என்னால் எப்படி வர முடியும்? என் தந்தைக்கும் தாய்க்கும் நான் இங்கு இருப்பது தேவை. அவர்களுடன் இன்பத்தை அனுபவித்த நான், துன்பங்களையும் பகிர்ந்து கொள்ள இங்கு இருக்க வேண்டுமல்லவா?"

அவனுடைய தாயும் தந்தையும் வயோதிக காலத்தில் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தது உண்மை. ஆனால், அதற்காக அவன் வர மறுக்கவில்லை. தான் மேற்கொண்ட நெறியான பாதையிலிருந்து தவற வைத்து விட்டான் இவன் என்று சதா சபித்துக் கொண்டிருந்த தந்தையின் பேச்சை இவன் நம்பிவிட்டான். அந்தக் குற்ற உணர்வுக்காகவே அவரருகே இவன் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. விட்டுச் சென்றுவிட்டால் அது உண்மை என்று ஊர்ஜிதமாகிவிடும் என்ற ஒரு மூட நம்பிக்கை.

அவர் தினம் தினம் திட்ட, இவன் மனதுக்கு வருத்தமாகவும் இருக்கும். கோபமாகவும் இருக்கும். ஆனால், இப்படியே வாழ்க்கையைக் கடத்தப் பழகிப் போய் விட்டது. வயதும் ஓடோடிக் கொண்டிருந்தது.

ஆனால், அந்த வைணவனின் பொறுமைக்கும் ஒரு எல்லை இருந்தது. கடுமையாகச் சொன்னான். "உன் தந்தை ஓர் அரசன். உன் தாயோ ஒரு வீரம் நிறைந்த தமிழச்சி. அவர்களுக்குத் துணை நீர் எனக் கூறுகிறீர். இல்லை, இல்லை. உமக்குத்தான் அவர்கள் ஒரு சாக்கு. இம்மாதிரி மூக்கால் அழுவதை முதலில் தவிருங்கள்" என்றான் அடியான்.

அன்று இரவு மாடியின் ஓரமாகச் சுவர்களின் கரிய நிழல் அடர்ந்திருந்த இடத்தில் நின்று மாறன் யோசித்தான். அங்கிருந்தபடி ஜன சஞ்சாரம் இல்லாத இடங்களைப் பார்த்தபடி யோசித்தான். அழைப்பைப் பற்றி நினைக்க நினைக்க மாறனின் உள்ளத்தில் ஒரு

மகிழ்ச்சி. எனினும் மனதில் இன்னதென்று தெரியாத ஒரு தயக்கமும் கலந்தது அந்தக் குதூகலத்தில்.

'தஞ்சைக்குச் சென்றால் ஏதேனும் விபரீதம் விளைந்து விடுமோ?' என்ற பயம். 'அப்படி எல்லாம் ஒன்றும் நேராது' என்று ஒரு மனம் கூறியது.

அடியான் ஒரு குழந்தைக்கு எடுத்துச் சொல்வது போல, "விளையாட்டுக்குச் சொல்லவில்லை, இளவரசே. முகஸ்துதியும் செய்யவில்லை. நீர் ஒரு நல்ல மனிதன். சற்றுக் குழப்பத்தில் இருக்கிறீர். அவ்வளவுதான். பெற்றோரிடம் கலந்து பேசி முடிவெடுங்கள். எல்லாம் சுபமாய் முடியும்" என்றான்.

"கலந்து பேசக்கூடத் தந்தை சரியான நிலையில் இல்லை. சக்திகள் அனைத்தும் படைத்த என் தந்தை, இன்று தன் அறிவில் பாதிகூட வேலை செய்யாமல் பைத்தியம் போலத் திரிந்து கொண்டிருக்கிறார்" என்றான் மாறன்.

"உங்கள் அன்னையிடம் பேசுங்களேன்!" அடியான் சொல்லிக் கொடுத்தான். புருஷர்கள் விஷயத்தைப் பற்றி ஏன் அந்தப்புரத்தில் பேசச் சொல்கிறான் இந்தச் சன்னியாசி என நினைத்தான் மாறன். என்ன செய்வதறியாது பலவாறு குழம்பிக் கிடந்த மாறனுக்குத் தன் தாயிடம் அபிப்பிராயம் கேட்டால் ஒரு முடிவு கிடைக்கும் எனத் தோன்றியது.

நாட்டு நடப்புகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். ஆனால், மாறன் கொண்ட துயரின் ஆழத்தை யாரும் அறியவில்லை. அதை முழுதாக அறிந்த ஒரே ஜீவன் அவனது தாய்.

அவளுக்கோ- ஒரு பக்கம் கணவன். தன்னைக் கண் கலங்காமல் பல ஆண்டுகள் பார்த்துக் கொண்டவர். ஏன், மற்றொரு பெண்ணை ஏறெடுத்துக்கூடப் பாராத உத்தமர்.

மறுபுறம் தன் தசையிலிருந்தும் தன் ரத்தத்திலிருந்தும் உருவெடுத்த மகன். இருவரும் தங்கள் வாழ்நாட்களில் இதுவரை பார்த்திராத கஷ்டத்தை அனுபவிக்கும்போது, நடுவே இவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்! மனதில் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த இரு நெருக்கமானவரிடையே அமைதியை நிலை நிறுத்த அவர் ஐந்து ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சிகள் மிக அதிகம். எனினும் போருக்குச் சென்று விழுப்புண்கள் ஏந்தி வந்த இரு வீரர்களிடம் என்ன மாறுதல் செய்ய ஒரு பெண்ணால் முடியும்? வாயார வெறும் ஆறுதல் சொல்லவே முடியும்!

ஆனால், இன்றைய தேதியில் அந்தக் குடும்பத்தில் மாறனின் தாய் மட்டுமே கஷ்டத்தைச் சமாளிக்கக்கூடிய மனோ தைரியம் பெற்றிருந்தார். தினந்தோறும் அவர் முகத்தைப் பார்த்தவுடன்தான் மாறனுக்கு இந்தக் குலம் நிச்சயமாகத் தழைக்கும் எனத் திடமான நம்பிக்கை வரும்.

அப்படி ஒரு முதிர்ந்த சௌந்தர்யம் அவரது முகத்தில் நிறைந் திருந்தது. இவ்வளவு கஷ்டத்தின் இடையே இந்த மாதரசியின் முகம்தான் எவ்வளவு களையாக இருக்கிறது எனப் பல முறை அவனே கேட்டுக்கொள்வான்.

மாறன் தன் தாயிடம் பேச எண்ணி வெகு நேரம் வார்த்தை வராமல் காத்திருந்தான். தாய் கொண்டு வந்து வைத்த குவளையில் பால் ஆறத் தொடங்கியது. ஐந்து ஆண்டு காலமாக இந்த மாதரசி ஒரு வேலையாளையும் தன் கணவனுக்கோ, மகனுக்கோ சேவை செய்ய அனுமதிப்பதில்லை. தானே செய்து அவர்கள் மனம் இன்னும் புண்படாமல் பார்த்திருந்தார்.

"கொண்டு வந்து வைத்து எவ்வளவு நேரம் ஆகிறது! ஆறிப் போயிருக்கும். மீண்டும் சுட வைத்துக் கொண்டு வரட்டுமா?" என்றார்.

தொண்டையில் எச்சிலை விழுங்கியபடி, மாறன், "அம்மா! உங்களுடன் பேசவேண்டும். சற்று உட்காருங்கள்" என்றான்.

"என்ன? சொல் மகனே" எனச் சொல்லி அவன் அருகில் அவர் அமர்ந்தவுடன், சாய்ந்து அவர் மடியில் படுத்துக் கொண்டான். அந்தத் தாயின் மனதுக்கே அது ஆச்சரியத்தைக் கொடுத்தது. சாகும்வரை மகள் மணிமேகலை அவர் மடியில் படுத்துத்தான் கொஞ்சுவாள். ஆனால், தன் ஏக புத்திரனான இவன் மூக்கின் கீழ் மீசை அரும்பியவுடன், அவர் அருகிலே நெருங்கிக்கூட நிற்க மாட் டான். அதெல்லாம் கோட்டை நன்றாக இருக்கும்போது. ஆனால், இந்த ஐந்து ஆண்டு கஷ்ட காலமாக இருவரும் நெருக்கமாய் வந்தாலும் இன்று ஏன் இப்படிக் குழந்தை போலச் செய்கிறான்? ஆனாலும் தன் தாய்மை உள்உணர்வு மேலோங்க மாறனின் தலை முடியை லேசாக வருடினார்.

"சொல், மாறா!" என்றாள்.

"அந்த வைணவர் என்னைத் தஞ்சைக்கு அழைக்கிறார். யாரோ முக்கியமானவர் கூப்பிடுகிறார்களாம். ஏதோ முக்கியமான வேலை யாம். ஆனால், எனக்குப் பயமாக இருக்கிறது. செல்வதனால் நமது முந்தைய காரியங்களுக்கு ஒரு பரிகாரம் கிடைக்குமென்றால் செல்வேன். ஆனால், இனி ஒரு முறை இராஜாங்கச் சதிச் சூழலில்

என்னுடைய விருப்பமில்லாமல் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. மேலும் சோழ அரச குலத்தின் கோபம் முழுவதுமாகத் தணிந்து விட்டதா எனத் தெரியவில்லை. அதனால்தான் தஞ்சையின் பக்கம் இவ்வளவு நாள் போகவே இல்லை" எனக் கூறும்போது, அவனது குரலில் சோகம் தாண்டவமாடியது. அது அந்த தாயின் மனதை ஈட்டியால் குத்துவது போலிருந்தது.

மாறன் தொடர்ந்தான்: "அப்பாவுக்குச் சுயமாகச் சிந்தனை செய்யும் சக்தியே இப்போது இல்லாமற் போனது. அரசியலைப் பற்றிப் பேச்செடுத்தாலே என் மேல் பாய்ந்து விடுவார். இந்த நிலையில் நீங்கள்தான் எனக்கு யோசனை சொல்ல வேண்டும்" என்று மன்றாடினான்.

சம்புவராயர் பட்டத்தரசியின் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. "துன்பம் இன்னது எனத் தெரியாமல் வளர்ந்தேன் என் குழந்தைகளை. துயரம் வரத் தொடங்கிய போது ஒன்றன் மேலொன்றாகத் தொடர்ந்து வந்து மோதியது. அபாக்கிய சாலிகள் நாம். என் கணவர் உள்ளத்தை வேதனைப் படுத்திய எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்துவிட்டன. இல்லாவிடில் வீரப் பெருங்குடியில் பிறந்த வீராதி வீரர், உன் தந்தை இவ்வளவு விரக்தியடைந்திருக்க மாட்டார்" என்றார்.

"என் கணவரோ என் மகனோ போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் செய்து உயிர் விடும் பாக்கியம் கிடைக்குமானால் அத்தகைய நிகழ்வுக்குச் சிறிதும் அஞ்சமாட்டேன். சோர்வும் கொள்ள மாட்டேன். உற்சாகத்துடன் வரவேற்பேன். நூறு ஆண்டு காலமாக நம் வாழ்வில் ஒரு சிறிய மாறுதலும் இல்லை. நூறு ஆண்டுகள் ஆடலையும் பாடலையும் பல வினோதங்களையும் பார்த்துவிட்டு இன்று கோட்டான்களின் குரலையும் ஆந்தைகளின் அலறலையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதுதான் எனக்குக் கஷ்டமாக உள்ளது."

"தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்து ராஜ்ய பாரம் புரிந்த இந்த ஊரில் நாம் கேடுகெட்டு வாழும் நிலை வந்துவிட்டது. இப்படிப் பட்ட நிலையில் இந்த ஊரில் வழிப்போக்கர்களே ஒரு நாள் தங்கிப் போவது கஷ்டம். இங்கு ஐந்து ஆண்டுகள் எங்களுக்காக நீ இருந்து விட்டாய். உன் தியாகத்தை நினைக்கும்போது என் உடலும் உள்ளமும் குன்றிப் போயின. உன் தந்தை உன்னிடம் கோபமாய்ப் பேசலாம். உன் தந்தை என்ன பேசியிருந்தாலும் நீ அதை மறந்துவிடு. சீரும் சிறப்புமாய் வாழ்ந்தவர். மிகச் சிறந்த மனிதர்களிடையே கூட ஏதாவது குறைகள் இருக்கும். குறை ஒன்றும் இல்லை என இருப்பவர் கடவுளாகத்தான் இருக்க

முடியும். அவர் எனக்குச் சிறந்த கணவராக இருந்திருக்கிறார் உனக்கும் உன் தங்கைக்கும் நல்லதொரு எதிர்காலம் ஏற்பட வேண்டும் என்றுதான் அவர் செயல்பட்டார். குழந்தைகளுக்கு ஆகுமென்று வெகுவாகச் சொத்துகளைச் சேர்த்தார். பல ஆண்டு சேகரிப்புகள் புகையாய் மாறி ஆகாசத்தில் மிதக்கத் தொடங்கியதைக் கண்ணால் பார்த்ததனால் வந்தது அவருக்கு இந்த மனநிலை. விதியின் விளையாடல்கள் அவரை ஒரு தேசத் துரோகி போல வெளிக்காட்டி விட்டன.''

''கோட்டைக்கு வைத்த தீ தன் மகளின் சிதைவரை பரவியது. மகளின் மரணத்துக்குக் கதறி அழுத என் கணவர் மீண்டும் தன் முழு ஆற்றலை அடையவே இல்லை. தன் வாழ்க்கையில் நிகழ்ந்த அடுத்தடுத்த சோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் பாதிப் பித்தனாய்த் திரிகிறார். அவர் சுய நினைவில் இருந்தால் அவரும் உன்னை மெச்சுவார்'' என்றார்.

''அம்மா தஞ்சைக்கு நான் போகட்டுமா.?'' என மாறன் வினவினான்.

''இந்த நல்ல நாள் எப்போது வரப்போகிறது என்று எத்தனையோ காலமாக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். நீ இளம் பிராயத்தவன். நாங்கள் முதியவர்கள். நீ உலகின் சுகங்கள் ஒன்றையும் அனுபவிக்காமல் ஏன் இங்கு கஷ்டப்பட வேண்டும்? ஏன் இங்கு வீணுக்குக் காலம் கழிக்க வேண்டும்? நீ கஷ்டப்படுவதை இனிமேல் என்னால் ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது'' என்றார் அவன் தாய்.

''மேலும், இந்தச் சம்புவராயர் குலம் நாலு தலைமுறைகளாகத் தங்கள் ரத்தத்தைச் சிந்தி அரும்பாடு பட்டு ஸ்தாபித்தது இந்தக் கடம்பூர் நாடு. இது மீண்டும் தழைப்பது உன் கையில்தான் உள்ளது. நம் கஷ்ட காலம் முடியும் தறுவாயில் உள்ளது என என் உள்மனது சொல்கிறது, மாறா!'' என அவன் தாய் கண்ணில் நீர் பெருகக் கூறிய போது, அவர் இவ்வளவு காலமாக வாய் திறவாமல் எவ்வளவு கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டிருந்தார் என அவன் புரிந்து கொண்டான்.

''இது நாமாக விதித்துக் கொண்ட தண்டனை தரும் தனிமை. அதனால்தான் எதுவரை இது நீடிக்கும் எனத் தெரியாமல் தவித்தேன். இது மன்னர் விதித்த தண்டனையாக இருந்திருந்தால் நாம் வெளி வந்திருப்போம். இந்தக் கடம்பூர் அரச குடும்பத்தையே அழுத்தும் கஷ்டங்களுக்கு ஒரு விடிவு காலம் நிச்சயம் வரும். நம் கடம்பூரில் வசிக்கும் அமிர்தகடேசரையும், சோதிமின்னம்மையையும் வாயார நான் துதித்தது பலன் கொடுக்காமலா போய்விடும்? நல்ல காலம் வந்து விடும். தங்கை தெய்வமாக இருந்து நம் குலத்தைக் காப்பாற்றுவாள். நீ போய் அந்த வைணவனிடம் வருகிறேன் என்று ஒப்புக் கொள்'' எனத் தைரியப்படுத்தி அனுப்பினார்.

மாறன் முகத்தில் தெரிந்தது ஒரு வியப்பு மற்றும் மகிழ்ச்சி. இப்படிப்பட்ட தாயின் வயிற்றில் பிறந்த தன் பாக்கியத்தை எண்ணி மனத்துள் பூரித்தான்.

மாறன் அந்த வைணவனைத் தேடிச் சென்றவுடன் அவனது தாய் சிந்தனையில் ஆழ்ந்தார். தலை நகருக்குச் செல்லும் இவனுக்கு அங்கு உதவி செய்ய ஒருவரும் கிடையாது என அவருக்குத் தெரியும். அரசியலில் ஐந்து ஆண்டுகள் கண்ணுக்குத் தென்படவில்லை என்றால் என்ன ஆகும் எனச் சொல்லியா தெரிய வேண்டும்? மாறன் என்ன செய்வான் என அவர் மனம் சற்றுச் சஞ்சலம் அடைந்தபோது தன்னைத் தானே தேற்றிக் கொண்டார்.

மாறன் தன் நன்மைக்கு இந்த ஊரை விட்டுச் செல்ல வேண்டும். அவன் பழையதை மறக்க வேண்டும். தன் தந்தையின் நிழலிலிருந்து நகர்ந்தால்தான் அவன் எதிர்காலம் துளிர்விடும். முக்கியமாக அவன் புறப்படும்போது தான் கண்ணீர் விடக் கூடாது. அதை அவன் வேறு வழியில் புரிந்து கொண்டால் கிளம்ப மாட்டான்.

தன்னைத் தேடி முகத்தில் ஒரு முறுவலுடன் வந்த மாறனைக் கண்டவுடன் அடியானுக்கு வந்த வேலையில் வெற்றி எனப் புரிந்தது.

முடிவேந்திய ஒரு பார்வையைச் சுற்றிச் சுழலவிட்டு, ''வைணவனே! முடிவு செய்துவிட்டேன். உம்முடன் உம்மை நம்பி வருகிறேன். இனிமேல் நான் இங்கேயே சும்மா உட்கார்ந்திருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்'' என்றான் மாறன்.

பயணத்துக்கு ஏற்பாடுகள் நடந்தன. மாறனைக் காணும்போது பள்ளிக்கூடம் செல்லும் குழந்தையைப் பார்ப்பது போல இருந்தது அடியானுக்கு. சிரித்துக் கொண்டான். ''நெடுந்தூரம் பிரயாணம் செல்வதற்கு ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். கையில் ஏதேனும் ஆயுதம் அவசியமல்லவா? என் புரவியையும் கொண்டு வருகிறேன். உமக்கும் ஒன்று கூட்டிச் செல்வோம். என் வாளுக்குக் கூர்மையை அதிகரிக்க அதைத் தீட்ட வேண்டும்'' என அடுத்தடுத்துக் கேட்டும் பதில் சொல்லிக் கொண்டுமிருந்தான்.

ளெம்பும் நாள் மற்றும் நல்ல நேரம் குறித்து வந்தார் கடம்பூர்க் கோயில் பட்டர். அதன்படியே இருவரும் புறப்பட ஆயத்த மானார்கள். புரவிகளைத் தயார் செய்து கொள்ளிடக் கரை வரை வழி அனுப்பச் சில ஆட்கள் கூடவே வரவிருந்தார்கள்.

மற்றவர் நலன் கருதி இவ்வளவு நாளாக வெளிப்படுத்தாமல் இருந்தவர்களின் உணர்ச்சிகள் இப்போது நிரம்பிய ஏரியைப் போலத் ததும்பின. எனினும் தன் துயரை ஒரு முயற்சி செய்து மறைத்துக் கொண்டு வெளியே வந்தார் கடம்பூரின் அரசி. ஆனால், சம்புவராயர் எங்கும் தென்படவில்லை. தாய் எடுத்துச் சொல்லியும் தந்தை வெளியே அவனை வழியனுப்ப வரவில்லை என்பது மிக்க வேதனை அளித்தது மாறனுக்கு.

''வெற்றியுடன் வா!'' எனத் திலகம் இட்டு அவன் தாய் கூறினார்.

''நிச்சயம் வெற்றி வாகை சூடி வருவேன், அன்னையே. நீங்கள் வாசலுக்கு வந்து என்னை எதிர் கொள்வீர்கள்'' என்றான் மகன்.

''நீ வரும் செய்தியைக் கேட்டு நான் உன்னை எதிர்கொள்ளப் பல காத தூரம் வந்து கொள்ளிடக் கரையினில் காத்திருப்பேன்'' என்றார் தாய்.

ஒரு கும்பிடு போட்டுவிட்டு அடியானும் ஒரு குதிரையில் தாவி ஏறிக் கொண்டான். கடம்பூரை விட்டு அவர்கள் பயணித்தபோது, அந்தத் தாய் மெய்ம்மறந்து வாசலில் நின்றார்.

இத்தனை காலமாய்த் தன் மகனையும் கணவனையும் கவனித்து வந்த அந்தத் தாயின் கண்கள் பெருக்கெடுத்தன. மகள் மணி மேகலை மணக்கோலம் பூண்டு தன் கணவன் வீட்டுக்குச் செல்வதை வாசலிலிருந்து அவர் பார்க்கவில்லை. ஆனால், பூமாலைகள் சூடி மணப் பெண்போல இடுகாட்டுக்கு அவளை இட்டுச் சென்றார்கள் என்பதைக் கதறிக் கொண்டே பார்த்திருந்தார்.

'என் மகனாவது நல்ல வாழ்வு பெற்று என் குலம் தழைக்க வேண்டும்!' எனத் தன் குலக் கடவுளாம் முருகனை வேண்டிக் கொண்டார்.

கதவருகே தாய் நின்று மகன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். தன் கலங்கிய கண்ணுக்கு எட்டிய தூரத்தை அவன் கடக்கும் வரை காத்திருந்து கடம்பூர் அரசி தன் கணவனைக் கவனிக்க உள்ளே சென்றார்.

அங்கு ஜன்னலின் ஓரத்தில் யாரும் பார்க்க இயலாத இடத்தில் சம்புவராயரும் நின்று அதே காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரே ஒரு ஒற்றுமை. இருவருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பிற்று.

❖ ❖ ❖

அத்தியாயம் ஏழு

இரண்டு பெண்களின் நினைவுகள்

தஞ்சையை நோக்கிப் பல குதிரைகள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. சாலையில் ஒரு திருப்பம் தென்பட்டது. அதில் புரவிகள் திரும்பிவிட்டால் கருகிய கடம்பூர்க் கோட்டை கண்ணுக்கு முற்றிலுமாக மறைந்துவிடும். அங்கு ஒரு நொடி, முன் சென்ற இரண்டு குதிரைகளும் நிறுத்தப்பட்டன. மாறன் திரும்பித் தன் பாழடைந்த தலைநகரை ஒரு முறை பார்த்தான்.

கோட்டையைச் சுற்றியிருந்த தோட்டங்கள் எல்லாவற்றையும் அக்னியின் ஆயிரமாயிரம் பசிகொண்ட நாக்குகள் தின்று தீர்த்து விட்டன. அந்த ஆண்டு கடுங்கோடையும் பசுமையைக் கண்ணால் பார்ப்பதையே அபூர்வமாக்கியது. அந்தக் கரிபடிந்த கோட்டையில் சட்ட திட்டங்களுக்கு என்றும் கட்டுப்பட்டு நடந்து வந்த ஒரு அரச குலம் இன்று தனிமைப்பட்டு நின்றது. வேறு உலகுக்குச் சென்றுவிட்டான் மாறன்.

ஓடோடிக் காற்றைக் கிழித்துக் கொண்டு பறக்கலாம் என்று நினைத்த அவனது குதிரைக்கு ஏமாற்றம். சற்றுத் தூரம் கூட வரவில்லை. ஒரு வேகத்தைக் கூட அடையவில்லை. அதற்குள் கடிவாளத்தைப் பிடித்து எஜமான் நிறுத்திவிட்டாரே என்று கோபமடைந்தது. அதை வெளிப்படுத்த ஒரு கனைப்புக் கனைத்தது. அந்தச் சப்தம்தான் மாறனைக் கனவெனும் உலகிலிருந்து பூலோகத்திற்கு அழைத்து வர உதவி செய்தது.

திடீரென அதன் தலையைக் கயிற்றினால் சுளீர் என்று அடிக்க, அந்த ரோஷமுள்ள ஜீவன் தன் எஜமானின் உத்தரவாய் அதை ஏற்றுக் கொண்டு, வலியைக்கூடப் பொருட்படுத்தாமல் ஆனந்தமாய்க் குடந்தை செல்லும் சாலையில் புயலெனப் பிய்த்துக் கொண்டு பாய்ந்தோடியது.

குதிரைகளைத் தெற்குப் புறமாகத் திரும்பும் பாதையில் செலுத்தினார்கள். அதற்குப் பின் இருவரின் மன நிலையிலும் மாற்றம் தெரிந்தது. பிரயாணத்தில் அவசரமும் தெரிந்தது.

வாழ்க்கையில் பலவித அனுபவங்களைப் பெற்றிருந்த அடியானுக்கு ஒன்று நன்றாகத் தெரியும். சிறிய செடிகள் தங்கள் தாய்மரத்தின் அடியில் வளர்வதில்லை. அது பாசமென்று நினைத்துப் பரவி வைக்கும் நிழலே, அது ஈன்ற வழித்தோன்றல்களைக் கொன்றுவிடும். ஒரு விதத்தில் பாசமும் ஆலகால விஷம் போலத்தான். அதனால்தான் மரங்களின் விதைகளை விலங்குகளும் பறவைகளும் உண்டு வெகு தூரத்தில் விதைத்து விடுகின்றன. இனப்பெருக்கத்துக்கு உதவி செய்யவே அந்தத் தித்திக்கும் பழம் அந்தப் பிராணிகளுக்குப் பரிசு போலும். இயற்கையைப் பார்க்கும் போது இறைவனின் செயலைக் காண முடிந்தது அடியானுக்கு.

குறைந்த அறிவைப் பெற்றிருந்த செடிகொடிகள் தெரிந்து வைத்திருந்த இந்த ரகசியத்தை நன்கு புரிந்து கொண்டு செயல்பட்ட பெற்றோருக்கு வெற்றி உண்டு. காலம் சென்ற சுந்தர சோழர் தன் அருமைப் புதல்வர்கள் இருவரையும் அருகில் வைத்துக் கொள்ளவே இல்லை. காஞ்சியில் மூத்தவரையும், ஈழத்தில் இளையவரையும் விட்டு வைத்திருந்தார். அன்புக்குரிய பெண் பிள்ளையாம் குந்தவை தேவியையும்கூடப் பழையாறையில்தான் இருக்கச் செய்தார். மாறனும் இப்போது அந்த நிழலை விட்டு அகன்றது அவனுக்கு நல்லதைச் செய்யும் என அடியானுக்குத் தோன்றியது.

மாறன் உபயோகித்த அரபு நாட்டுக் குதிரையைப் போல, உயர்குடி மக்களிடம் நிறைய இருந்தன. இந்த நாட்டில் மக்களுக்கு நெல் விளைந்ததோ இல்லையோ, குதிரைகளுக்கு என்றே பல நிலங்களில் கொள் விளைந்தது. எனினும் புரவிகள் புறநகரப் பகுதிகளில் கம்பீரமாக நடைபோட்டபோது இரு பக்கத்திலும் இருந்தவர்கள் பலரும் நின்று அதை ரசித்துவிட்டே சென்றார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர் என்று எல்லாருமே குதிரையின் காலடிச் சப்தத்தைக் கேட்டுத் தலை திருப்பினர். செய்யும் வேலைகளை நிறுத்திவிட்டு இவர்கள் கடக்கும்வரை வேடிக்கை பார்த்தனர்.

ஒரு குதிரை கம்பீரமாக நடந்தாலும் சரி, புயலாய்ப் பறந்தாலும் சரி, அதன் அழகே தனி. ஏன், நின்று புல் மேய்ந்து கொண்டிருந்த புரவியும் அழகுதான். ஆனால், அந்த அழகான குதிரைகளில் சென்றவர்கள் இருவரும் தங்கள் எண்ணங்களில் மூழ்கியிருந்ததால் வழிப்போக்கர்களைச் சற்றும் பொருட்படுத்தவில்லை.

சென்ற இருவருக்கிடையே இருந்த வித்தியாசங்களையும் கண்டு பார்வையாளர்கள் வியந்தார்கள். ஒருவன் உயர்குடியைச் சேர்ந்த

[illegible]ரனாகத் தெரிந்தது. அவன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டிருந்தான்- பிடிக்காத விஷயத்தைப் பற்றி நினைப்பவன் போல.

மற்றும் ஒருவன் இந்த உயர் ஜாதிக் குதிரையைச் சவாரி செய்ய [illegible]திலும் பொருத்தமில்லாதவன் என்றுதான் தோன்றியது. [illegible]வுளையே கருத்தில் கொண்டு வேறொன்றும் செய்யாத [illegible] ஒன்று தமிழகத்தில் இருந்தது. சிலர் இவர்கள் அனைத்தை [illegible] தியாகம் செய்துவிட்டுப் பரம்பொருளை நாடுவதைக் கண்டு [illegible]வார்கள். வேறு சிலர், வேலை ஒன்றும் செய்யாமல் தண்டச் [illegible] சாப்பிடும் கூட்டம் இது என்று திட்டுவார்கள். இவன் [illegible] பிரிவைச் சேர்ந்தவன் தான். ஆனால், இவனோ பிரமாத [illegible] குதிரைச் சவாரி செய்ததில் ஆச்சரியம் அவர்களுக்கு. [illegible] அந்தப் பக்த கோடி வகையில் சேர்ப்பது பற்றி முடிவு [illegible]க்குள் குதிரைகள் பறந்துவிட்டன.

[illegible] கோட்டைச் சுவர்கள் கண்ணுக்கு மறைந்த பின், [illegible]டம் ஒரு தனி உற்சாகம் பரவியது என்பதை அடியான் [illegible] தவறவில்லை. சற்று தூரத்தில் கொள்ளிடப் பெருநதி [illegible] என ஒரு தனித்துவம் நிறைந்த பசுமை தெரிவித்தது. [illegible]லும் வெண் மணல் சிதறிக் கிடந்தது. வண்டியில் ஆற்று [illegible] அள்ளி வரும் வண்டிகளிலிருந்து காலங்காலமாக விழுந்த [illegible].

[illegible] நேரத்தில் நதிக் கரையை அடைந்தார்கள் இருவரும். [illegible] ஆடிப் பெருக்கின் புதுப் பிரவாகத்தின் போது பார்த் [illegible] வேண்டும். அப்போது வெள்ளம் கரைபுரண்டு செக்கச் [illegible] நிறத்தில் ஓடும். ''ஹோ'' என்ற பேரிரைச்சல் கொண்டு [illegible] சுழல்களுமாகப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுவது [illegible] அடைய அதற்கு அவ்வளவு அவசரம் என்பதைக் [illegible].

[illegible] நாள் வெள்ளம் வரும்போது இரு கரையிலும் மக்கள் [illegible] நிற்பார்கள். வருடா வருடம் வந்தாலும் அது அதிசய [illegible] அவர்களிடம் திகழ்ந்தது. ஆனால், இன்றைய தேதிவரை [illegible]களாக ஆடிப் பிரவாகம் வரவில்லை என்பது ஒரு [illegible] ஏமாற்றத்தையே தந்தது. ஒரு சிறிய ஓடை போலத்தான் [illegible] நீர் நீல நிறத்தில் எதிர்க்கரையின் அருகே இருந்தது.

[illegible] துறையில் ஓடங்கள் பலவும் மணல் பரப்பில் [illegible]. ஒரு காலத்தில் ஓடந் தள்ளுவோர் கையில் நீண்ட [illegible]டன் இங்கு பிரயாணிகளுக்காகக் காத்து நின்றிருப்

பார்கள். அவர்களும் இப்போது வேறு வேலை தேடிச் சென்று விட்டனர்.

ஆனால், இன்று தோணித்துறையில் ஆளே இல்லை என்று கூற முடியாது. மக்கள் பெரும் எண்ணிக்கையில் இருபுறமும் மர நிழலில் காத்திருந்தார்கள். குடும்பங்கள் சோறு உண்டு, படுத்து ஓய்வெடுத்து மாலைப் பொழுதுக்காகக் காத்திருந்தார்கள். காய்ந்த ஆற்றில் யாரோ புண்ணியவான்கள் தோண்டி வைத்த ஊற்றினில் இன்னும் தண்ணீர் இருந்தது. அதைக் குளிக்கவும், குழந்தைகள் நீந்தவும் உபயோகித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் கொள்ளிட நதியின் மணல் பரப்பு சூரிய பகவானின் முழு வீரியத்தையும் உள்வாங்கித் தேக்கி வைத்திருந்தது. இந்த வெய்யில் நேரத்தில் ஆற்றைக் கடந்தால் கால் கொப்புளித்துவிடும். நல்ல வேளையாகக் குதிரைகளுக்கு அப்படி இல்லை. கால்களில் கடம்பூர் அரண்மனை லாயங்களில் சீராக லாடம் அடிக்கப்பட்டிருந்ததால், அவற்றிற்கு எல்லாம் ஒன்றுதான்.

கொள்ளிட நதியில் பெருவெள்ளம் செல்லாது என அவர்களுக்கு முன்பே தெரியும். குதிரைகளை ஏற்றப் பெரிய படகும் தேவையில்லை. அக்கரைக்குச் சென்று வேறு ஒரு குதிரை சம்பாதிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. பிரவாகத்தைக் கடப்பது ஒரு கஷ்டம். இல்லையென்றால் இந்தக் கரையில் குதிரையை விற்று மறு கரையில் வாங்க வேண்டும்.

மறுகரை வெகு தூரத்தில் தெரிந்தது. மறுகரையிலும் மாலைப் பொழுதுக்காகக் காத்திருந்த மனிதர்கள் எறும்புகளெனத் தோற்றமளித்தார்கள். கொள்ளிடத்தின் வடகரைப் பரிசல் துறையை அடைந்தபின் தங்களுடன் வந்த துணை வீரர்களைத் திருப்பி அனுப்பி விட்டான் மாறன். அவர்களில் பலர் வீடு நோக்கிச் செல்ல விருப்பமில்லாதவர் போலத் தயங்கி நின்றார்கள். சின்ன எஜமானனுடன் பல காலம் இருந்தாயிற்று. இன்று அவரைத் தனியே அனுப்புவதில் அவர்களுக்கு மனக் கஷ்டம். பின் மாறனின் கட்டாயத்தின் பேரில் கண்கள் கலங்க வீரர்கள் வழியனுப்பினார்கள்.

பரந்து விரிந்து கிடந்திருந்த மணல் திட்டுகளைக் கடந்து அக்கரையை இருவருமாக அடைந்தார்கள். குதிரைகளின் கால்கள் காய்ந்த மண்ணில் சற்றுப் புதைந்ததனால் சிரமத்துடன்தான் மணல் பாங்கைக் கடக்க முடிந்தது. கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்த சிறிய பிரவாகத்தில் குதிரைகளை இறக்கி விட்டுப் பின் குடந்தைக்குச் சென்ற ராஜபாட்டையைப் பிடித்தார்கள்.

இருவராய்ச் சென்றது அவர்களுடைய பிரயாணத்துக்கு எவ்வளவோ சௌகரியமாகத் தானிருந்தது. மாறன் பயந்தது போல அடியான் உடலை வருத்திக் கொள்வதில் சளைத்தவன் அல்ல என்பதைப் புரிந்து கொண்டான். அடியானுக்கு வயது நாற்பது அல்லது ஐம்பது கூட இருக்கலாம். எனினும் அவனது புஷ்டியான சரீரம் திடமாய்த்தான் இருந்தது. மூப்பினால் சராசரியாக ஏற்பட்ட மாற்றங்கள் அவனிடம் தெரியவில்லை.

ஊரை விட்டுச் செல்லச் செல்ல மாறனுக்குப் பல ஆண்டுகளாகத் தொலைந்து போன பல ஆற்றல்கள் திரும்பி வந்து கொண்டிருந்தன. முகத்தில் புன்னகையும், பயணத்தில் வேகமும் அவற்றுள் வந்துவிட்டன. ஆனால், அடியானைப் படுத்தி எடுத்தது திரும்பி வந்த நகைச்சுவை உணர்வுதான். அடியான் சிரிப்புக்கும் நகைச்சுவை உணர்வுக்கும் என்றும் எதிரானவன் அல்ல. நகையில் பிறந்தது புன்னகை என்று நம்புபவன். ஆனால், மற்றவர் பார்த்துச் சிரிக்கும் ஆள் இவனாக இருக்கக் கூடாது.

அவனது கனத்திற்கு அடியான் நன்றாகவே குதிரைச் சவாரியும் செய்தான். அதில் அவனுக்கு ஓர் இறுமாப்பு. "இளவரசே, குதிரை ஏறினால் உடல் கனம் குறையும் என்று கூறுகிறார்களே. உண்மைதானா?" என்று தான் வரும் வழியில் கேட்டான், அந்தக் குண்டான வைணவன்.

அதற்கு முகத்தை மிகவும் கருத்தூன்றியதாக வைத்துக்கொண்டு, "நிச்சயம் குறையும். ஆனால், அது உமக்கல்ல. இந்த குதிரைக்கு!" என்று கூறிச் சப்தமாகச் சிரித்தான் மாறன்.

தொலைந்து போன நகைச்சுவை உணர்வு திரும்பக் கிடைத்ததும், அதை முதலில் மாறன் பிரயோகித்தது அடியானின் மேல்தான். எனினும் இருவருக்கும் நன்றாய் இப்போது ஒத்துப் போனது. போகும் வழியில் இருவருக்கும் பல முறை சண்டை நடந்தது. அதாவது மாறன் அடியானையும் அவனது தெய்வீக நம்பிக்கையையும் நையாண்டி செய்தபோது. ஆனால், அடியான் விட்டுக் கொடுத்தே சென்றான். நேரம் செல்லச் செல்ல அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள வயது மற்றும் சமுதாயப் படிநிலைகளை மீறி ஒரு நட்பு உருவானது.

காலையில் வீசிய தென்றல் அவர்களுடைய மனதையும் உடலையும் பதப்படுத்தியது. அதன் குளிர்ச்சி வழிப்போக்கர்கள் எல்லோருக்கும் ஒரு புத்துணர்ச்சி கொடுத்ததாகவே தோன்றியது. மாறனும் அதற்கு விதி விலக்கல்ல. அந்தக் காலையில் வீசிய காற்று அவர்களுக்கும் ஒரு எதிர்பார்ப்பு நிறைந்த உணர்வைக் கொடுத்

இருந்தது. ஓர் உள்ளுணர்வு, ஏதோ நன்மை அடுத்த சாலைத் திருப்பத்தில் காத்திருக்கின்றது என்பது போல.

ஆனால், மாறனுக்கு மட்டும் அந்தத் தென்றல் நல்வாழ்வுக்கு ஒரு ஏக்கத்தையும், அது இதுவரை நம்மை விட்டு அகன்றே இருக்கின்றது என்று மனதில் ஒரு சிறிய வலியையும் சேர்த்தே உண்டு பண்ணியிருந்தது.

உத்தம சோழரின் ஆட்சியில் நாட்டுக்கு எல்லா விதத்திலும் நன்மை வரும் போலத் தோன்றுகிறது என்பனை போன்ற பேச்சுகளை இருவரும் வழிநெடுகிலும் பொதுமக்களிடையே கேட்டுக் கொண்டே வந்தார்கள். ஊராரும் வழிப்போக்கரும் பேசுவதை உற்றுக் கேட்டு வந்தான் அடியான். நாட்டின் நடப்புகளை இந்த மாதிரிப் பேச்சுகளை வைத்தே எடை போட்டு விடலாம். தஞ்சையில் தன் குருநாதர் இவற்றைக் கேட்க மகிழ்ச்சியடைவார்.

ஆனால், மாறனை நிம்மதியாய்ப் பயணிக்க விடவில்லை அடியான். இந்த வைணவனோடு பெரும் தொல்லையாய்ப் போனது என்று மாறன் நினைக்கும் அளவுக்கு, போகும் வழியில் எங்கு நிறுத்தினாலும், சிவபக்தர்களை எதிரி போல் பார்த்துக் கொண்டே வந்தான் அடியான். அடியானுக்கு வைணவ மதத்தின் மீது அளவற்ற பற்று. வரும் வழியில் சைவர்களைக் கண்டால் சண்டை போடாமல் செல்வதில்லை என்ற உயரிய நோக்குடன் தலைநகரை நோக்கிப் பிரயாணித்தான். 'இவனிடம் என்ன மாற்றம்? கடம்பூரில் அவ்வளவு நல்லவனாக இருந்தானே!' என மாறனே அதிசயித்தான்.

ஏதோ சொல்லி வைத்தாற்போல், சைவர்களே சதா வந்து கொண்டே இருந்தார்கள். சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் விதி விலக்கின்றிச் சிவனையே தெய்வமாக மதித்துப் பாராட்டிக் கொண்டாடி வந்தனர். தஞ்சை அரண்மனைக்குள் சென்றால் சிவ பூஜை பிரசாதம் கொண்டு வரும் அர்ச்சகர்கள் பலரோடு போட்டிபோட்டுத்தான் உள்ளே செல்ல வேண்டும் எனும் நிலை. மெதுவாக மற்ற மதங்கள் எல்லாம் அழிந்து போய்விடும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்ற விரக்தி, அடியான் போலப் பல வேற்று மதங்களைச் சேர்ந்தவருக்கு உண்டு.

அடியான் எவரையேனும் நெற்றியில் திருநீற்றுடன் கண்டால் உற்சாகம் அடைந்தான். முதலில் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டே வருவான். கொஞ்ச நேரம் பேசியவுடன் வாதமெனும் சண்டை பிடிப்பான். சைவர்களோடு போடும்

[illegible] சச்சரவுக்கெல்லாம் ஒரே ஒரு பின்னணிதான். சிவனை [illegible] விஷ்ணு பெரியவர். அதற்குப் பின் சிவனுக்குக் கோயில் [illegible] சோழர்கள் சரியில்லை.

கையில் கபாலம் ஏந்திய பேராண்டிக்கு எதற்குக் கோயில்கள்? [illegible] கற்றளி எழுப்புவதற்குப் பதிலாக அவருக்குப் பிடித்த [illegible] இடுகாட்டுக்கு அனுப்பிவிட்டு நாடெங்கும் காத்து [illegible] விஷ்ணு பெருமானுக்கு ஆலயங்கள் எழுப்பலாம் [illegible]?" என்பான். சற்று நேரம் முன் சிரித்து எதிர் கொண்டவ[illegible] இவர்களை எதிரிகளாகவே பார்த்துவிட்டுச் செல்[illegible].

[illegible]யாக நிறுத்திய இடத்தில் இவனுடன் வாதத்துக்கு வந்து [illegible] போன சைவன் ஆழம் தெரியாமல் காலை விட்டு [illegible]ருந்தான். அவனைக் கிழிகிழியென நாராய்க் கிழித்து ஒரு [illegible] பார்வை இட்டுக் கொண்டிருந்தான், அடியான்.

[illegible]யாக, "ஏ சிவ பக்தா, உமது மடத்தில் எவ்வளவு சீடர்கள் [illegible] கொள்ளும் மூடர்கள் இருக்கிறார்கள்?" என்று [illegible]னான்.

[illegible] பாவமாக, "வீர வைணவரே! என்மேல் பாவப்பட்டு [illegible] இப்போது விட்டு விட்டீரென்றால், ஏழு பேர். [illegible]என்றால் ஆறு தான் இனி தேறும்" என்றான். அடியானும் [illegible] சிரித்து விட்டார்கள். அந்த நொடியில் தோற்றுப் போன [illegible]. ஆன்மீகத்தில் இவ்வளவு ஆபத்தா என எண்ணியபடி [illegible] ஓட்டம் பிடித்தான்.

[illegible]தைக்குச் சற்றுத் தூரத்தில் தென்மேற்குத் திசையில் சோழர் [illegible] இடைக்காலத் தலைநகரமான பழையாறை இருந்தது. அந்த [illegible] போக வழி குடந்தைக்கு முன்பாகவே பிரிந்தது. [illegible] வந்த பலர் அந்தக் கிளைச் சாலையில் சென்றதைப் [illegible] அடியான் சிந்தனையில் ஆழ்ந்தான். அந்த நகரில்தான் [illegible] தேவனுக்குக் குந்தவை நாச்சியாரின் மீது காதல் [illegible] உடனே அந்தக் காதலைப் பற்றி ஓடியது அவனது [illegible].

[illegible] நினைவுக்கு வந்த பெண் சுந்தர சோழரின் ஒரே மகள் [illegible] மன்னாதி மன்னர்களையும் வீராதி வீரர்களையும் [illegible]விட்டு, வெறும் வழிப்போக்கன் என மட்டும் [illegible] வேண்டிய வந்தியத் தேவனிடம் சிரத்தை [illegible] திருமணத்தில் சுரமும் பிடித்தான்.

உண்மைதான். பெண் மனம்தான் என்ன விசித்திரமான இயல்பை உடையது! ஆனால், அதை அவன் குந்தவையிடம் பார்ப்பதற்கு முன், அதைக் கவனித்தது அவன் வளர்ப்புத் தங்கை நந்தினியின் விஷயத்தில்தான். பிள்ளைப் பிராயத்தில் வேணு கானம் பாடுவதில் எவ்வளவு ஆர்வம் காட்டினாள் அவள்! வைணவத்தின் மீது எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தாள்! பின் திடீரென அரசியலில் அவளுக்கு ஈடுபாடு. அவளிடம் எந்தக் குணங்களையெல்லாம் மறைத்து மறைத்து அடியான் வளர்த்தானோ, அவையெல்லாம் அவளுக்குள் தாமாகவே வளர்ந்து வந்தன போலும்.

'என்னைத் திண்டாடித் திணறும்படி செய்து விட்டுச் சென்றாள். அவள் மட்டும் மண வாழ்விலும் அரசியலிலும் ஆர்வம் செலுத்தாமல் என் பேச்சைக் கேட்டு நடந்து, ஆன்மீகத்தில் மனதைச் செலுத்தியிருந்தால், அடுத்த ஆண்டாளாக அவள் வந்திருப்பது உறுதி' என்று அடியான் நினைப்பதுண்டு .

மேலும், ''இந்த வைணவ மதம் பல மடங்கு இந்தச் சோழ நாட்டில் வளர்ந்திருக்கும். சிலர்தான் சைவத்தைப் பின்பற்றும்படி செய்திருப்பேன். புத்தமதமும், சமண மதமும் இல்லாமலே வடநாட்டுக்கு விரட்டியிருப்பேன்!'' என்று பல முறை சொல்லிக் கொள்வான் அடியான்.

நந்தினி அழகும் நேர்த்தியும் நிறைந்த ஒரு பெண். இயற்கையால் எண்ண முடியாத அளவிற்குக் கவர்ச்சி கொடுக்கப் பட்டிருந்தாள். அதனால்தான் நந்தினியை நாடாதவர் இல்லை என்றே சொல்லலாம். அவளைக் கண்டவுடன், அவளைத் தானே அடைய வேண்டும் என எவருக்கும் தோன்றும். அவ்வளவு அழகு! அவள் அழகைக் கண்டு பலரும் அவளைக் கைப்பிடித்திடக் காத்திருக்க, பெரிய பழுவேட்டரையரை, தன் பாட்டன் வயதிருக்கும் ஒரு எழுபது வயதுக் கிழவனைக் கட்டிக்கொண்டு அவரைப் பாடாய்ப் படுத்தினாள். பின்பு ராஜ்ஜியத்தில் இருந்த இரு சக்திமான்களான பெரிய பழுவேட்டரையரும் இளவரசன் ஆதித்த கரிகாலனும் அவளுக்காகவே மறைமுகப் போர் நடத்தினர். பின் இருவருமே பரிதாபமாய் மாண்டனர்.

இந்த இரு வஞ்சியரையும் எண்ணி எண்ணி வஞ்சிக்கப் பட்டவர்தான் எத்தனைபேர்? இந்த இரு பெண்களும் சேர்ந்து நின்றால், ஒரு வானில் இரு சந்திரர்கள் என மக்கள் வர்ணிப்பார்கள். ஆனால், சேர்ந்து நிற்க வாய்ப்புகள் எக்காலத்திலும் குறைவு. ஏனென்றால் எலியும் பூனையுமாய், கீரியும் நாகமுமாய்ப் பழகினார்கள் இருவரும்.

இதையெல்லாம் காணும்போது இந்தச் சிலந்தி வலை போன்ற பெண்களிடம் மாட்டாமல் கடவுள் சேவை செய்வது எவ்வளவு புத்திசாலித்தனம் என்று தோன்றியது, அடியானுக்கு.

❖ ❖ ❖

அத்தியாயம் எட்டு

என்னை அழைத்தது யார்?

மாறன் வழிநெடுகிலும் அடியானோடு சம்பாஷணை செய்து கொண்டே வந்தான். அவன் மனதில் எழுந்த கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொண்டால் தான் அவனுக்கு நிம்மதி.

'இந்த வைணவன் உண்மையில் யாருடைய ஆள்? எதற்காகத் தன்னை அழைத்துச் செல்கிறான்' என்று தலைநகருக்குச் செல்வதற்கு முன் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவல் மாறனுக்கு உண்டாயிற்று. அந்த விருப்பம் விரைவில் வளர்ந்து கொழுந்துவிடத் தொடங்கியது. தெரியாவிட்டால் தலை வெடித்துவிடும் போலிருந்தது.

'இந்த வைணவன், அவன் சொல்வதுபோல, நிச்சயமாக எதுவும் தெரியாமல் வந்திருக்க மாட்டான். சிறிய விஷயத்துக்கே அவன் கேள்விகள் கேட்டுத் துளைத்துவிடுபவன். பல நாள் பயணம் மேற்கொள்ளும் முன் அதைப் பற்றி நிச்சயமாக அவன் யோசித்திருக்க வேண்டும். அவனுக்கு என்னென்ன தெரியும், எவ்வளவு தூரம் தெரியும் என்பதை வெளிக் காட்டிக்கொள்ள வேண்டாம் என நினைக்கிறான். வேறெந்த விஷயமும் அவனுக்கு உண்மையில் தெரியாமலிருந்தாலும், அவனிடம் யார் அழைப்பைக் கொடுத்தனுப்பினார்கள் என்று இந்த வைணவன் வாயிலிருந்து பிடுங்கி எடுத்துவிட்டால் மீதியை நாமே யூகித்து விடலாம்' என யோசித்தான்.

இப்படி, யார் அழைத்தார், எதற்காக அழைத்தார் என்று நேரடியாகக் கூறாமல், தன்னை ஒருவன் அழைத்துச் செல்வது அபத்தமாக இருக்கிறது. இதுவே ஐந்து ஆண்டுகளுக்கு முன் சாத்தியமா?

பின், மின்னல் போல ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது. ஒரு வேளை சக்கரவர்த்திதான் மீண்டும் அழைத்தாரோ என்னவோ?

அவனை முதலில் நாம் கேள்விகள் கொண்டு சோதிப்பது தெரிந்தால் வாயைப் பொத்திக் கொள்வான். ஒரு பேச்சுக் கொடுத்துப் பார்ப்போம் என்று மெல்ல ஆரம்பித்தான்.

"இப்போது தஞ்சையில் ஆட்சி புரியும் மன்னர் எப்படி?" என்றான்.

அவரைப் பற்றிய பேச்சை எடுத்தவுடன் அடியானுக்கு ஏக ஆர்வம். "இணையில்லா மன்னராக விளங்குகிறார் உத்தம சோழர். வழி நெடுகிலும் அவரைப் பற்றி மக்கள் பேசிய புகழ்ச்சியை நீ கேட்கவில்லையா? இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் இவர் சிங்காசனம் ஏறினார். சுந்தர சோழருக்கு முன்னால் அரசு புரிந்தாரே கண்டராதித்தர். அவர் கூடச் சிவ பக்தியில் திளைத்துச் சிவஞான கண்டராதித்தர் எனப் புகழ் பெற்றாரல்லவா? அவர் மகன் தான் இவர்."

"பிறப்பின் போதிருந்து விதியின் விளையாட்டால் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தார் மன்னர். இவருக்குப் பதிலாக வேறொருவனை வளர்த்து வந்தனர் அரசரும் அரசியும். பின் அவர் தாய் கும்பிட்ட கடவுள்கள் கண் திறக்க, அவருடைய உண்மையான மகனும் வெளிப்பட்டார். அவருக்குப் பதிலாக அரண்மனையில் வளர்ந்து வந்த மதுராந்தகர், பாண்டிய நாட்டின் இளவரசன் தானெனத் தெரிந்த பின் ஓட்டம் பிடித்தார்" என்று ராஜ ரகசியத்தை, குரலைத் தாழ்த்தி அடியான் சொன்னான்.

"அதுதான் எனக்குத் தெரியுமே!" என்றான் மாறன். சரித்திரத்தின் போக்கைப் பார்த்தால் அவனுக்குச் சிரிப்புதான் வந்தது. பாம்புக்குப் பாலூட்டி வளர்ப்பது போலச் சத்துருவை மாளிகையில் வளர்த்து வந்தார்கள், மகா சாமர்த்தியக்காரர்கள் என்று கூறிக் கொள்ளும் சோழர்கள். இவர்களது கோமாளித்தனத்தினால் சோழ சிம்மாசனத்தின் மேல் அவர்களது பரம எதிரியே அமர்ந்திருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும்.

பழுவேட்டரையரும் மாறனின் தந்தையும் ஆதரித்தவுடன் அரண்மனை மாடங்களில் சீராட்டி வளர்க்கப்பட்ட மதுராந்தகன் மன்னராவது உறுதியானது. அப்போதுதான் அவருக்குக்கூடத் தெரிந்தது, அவர் சோழர் வீட்டுப் புலிக் குட்டி அல்ல, பாண்டிய நாட்டு மீன் குஞ்சு என்று.

மீன் தவறிப் புலியின் குகையில் வளர்ந்து வந்ததை விதியென்று சொல்லாமல், ஏதென்று சொல்வது! மதுரைக்கு அந்தகன் என்று பெயர் சூட்டப் பெற்றவன் மதுரைக்கு உண்மையில் காவலன். வீடின்றி வாசலின்றி விரட்டப் பட்டவுடன் அவனுக்கும் அதிர்ச்சி

[illegible]. ஆனால், உறுமுவதை நிறுத்தி, நீந்தக் கற்றுக் கொண்டது பின்.

அந்தப் போலி இளவரசனுக்கு, வந்தியத் தேவனுக்கென [illegible] வைத்திருந்த தன் தங்கையைத் திருமணம் முடிக்க ஒரு காலத்தில் நினைத்தான் மாறன். நல்ல வேளை தப்பினான். ஆனால், அவனும் இப்போது இல்லை. அப்படி அந்தத் திருமணம் [illegible]திருந்தால் இவர்களின் கதி யாதாகியிருக்குமோ?

அடியான் தொடர்ந்தான்: "உத்தம சோழரின் ஆட்சியின் கீழே சோழர்களின் கை நாளுக்கு நாள் ஓங்குகிறது. அவர்களுடைய சாம்ராஜ்யம் நாலு திசைகளிலும் பரவி வருகிறது. இதில் அதிசயம் என்னவென்றால் மன்னருக்குச் சற்றும் இராஜ்யத்தை விஸ்தரிப்பதில் ஆர்வமில்லையாம். இருந்தாலும் பேரரசர் ஒருவருக்கு இருக்க வேண்டிய எல்லாச் சிறந்த அம்சங்களும் அவருக்கு உண்டு-ஒன்றைத் தவிர."

"என்ன?" என்று கேட்பது போல், தன் பார்வையை அடியானின் மேல் செலுத்தினான் மாறன். "போருக்குச் செல்வதுதான் அது. கோயில்களைச் சீரமைப்பதில்தான் அவர் முழுக் கவனமும். அது [illegible] தவறு" என்றான் அடியான்.

"அதில் என்ன தவறு? இறைவனுக்குச் செய்யும் திருப்பணி நாட்டின் நலனுக்கே வழி வகுக்கும், அல்லவா?" என்று வினவினான் மாறன்.

"ஆம் சரி. ஆனால், இவர் திருப்பணி செய்வது சிவன் கோயில்களுக்கு மட்டும்தான்!" என்று குறை கூறினான் அந்த வீர [illegible].

[illegible] காலத்தில் உத்தம சோழர் தஞ்சைச் சிங்காசனத்தில் [illegible] என எண்ணுவதற்கே இடமிருக்கவில்லை. இந்தப் [illegible] சிறுவனுக்கு எங்கிருந்து ராஜ்யம் வரப்போகிறது என [illegible] நினைத்திருப்பார். கடவுள் சித்தம் எப்படியோ, யார் [illegible]?" என நினைத்துக் கொண்டான் மாறன்.

சுந்தர சோழச் சக்கரவர்த்திக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் அடுத்த பட்டம் யாருக்கு என்று அவரைப் படுக்கையில் வைத்துக் [illegible] இரண்டு குழுவினர் சண்டையிட்டிருக்கையில், [illegible] பிறந்தவன் அருகிலுள்ள நந்தவனத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்தான்.

உத்தம சோழரின் சாகசங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே [illegible] அடியான். போ வந்த விஷயம் மாறனுக்கே மறந்து

விடும் போலிருந்தது. அவனுடைய மனதில் எரிச்சலை அது ஊட்டியது.

சுற்றி வளைத்துப் பேசிப் பேசி மாறனின் வாய்தான் வலித்தது. இந்தப் பொல்லாத வைணவன் யாருடைய அழைப்பைக் கொண்டு வந்திருக்கிறான் என்று ஒரு சிறிய தகவலும் வெளியிடுவதாகத் தெரியவில்லை.

ஒரு தருணத்தில் பொறுமை இழந்த மாறன், 'யார்தான் என்னை அழைத்தது?' என்று நேரடியாகக் கேட்டுவிட முடிவு செய்தான்.

"ஐய்யோ! உம்முடன் பெரும் கஷ்டமாக இருக்கிறது. உமக்கு உண்மையில் புரியவில்லையா? இல்லை, புரியாதது போல் நடிக்கிறீரா? கேட்க வேண்டியதை நேரடியாகத் தெளிவாகக் கேட்டு விடுகிறேன். என்னைத் தஞ்சையில் எதிர்பார்க்கும் நபர் யார்?"

இப்படி நேரடியாகத் தன் கேள்விக்கணையைப் போட்டு உடைப்பான் மாறன் என்று அடியான் எதிர்பார்க்கவில்லை. சுற்றி வளைத்து அரசரைப் பற்றியும் மற்றவரைப் பற்றியும் பேசித் துப்புத் துலங்க முயல்கிறான் என அவன் பேசியதிலிருந்து தெரிந்தது.

'சாமர்த்தியத்தில் நான் பாம்பென்றால் இவன் அற்ப மண் புழு. ஆனால், நேரடிக் கேள்விக்குத் தக்க மறுமொழி சொல்லித்தான் ஆக வேண்டும். என்ன சொல்வது?' என யோசித்தவனுக்கு, மறுமொழி உள்ளத்தில் உதயமானது.

"பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும். இரவில் அதுவும் பேசக் கூடாது. நடுச்சாலையில் நின்று இதைப் பற்றி யெல்லாம் பேசுவது உசிதம் அல்ல. தஞ்சைக்குச் சென்ற பின் எல்லா விஷயங்களும் பேசுவோம். உன் கேள்விகளுக்கு அங்கு விவரமாகப் பதில் கூறுகிறேன்" என்றான் அடியான்.

'இளம் சம்புவராயனைத் தஞ்சையில் கொண்டு சேர்க்கப் போகிறோம். எனக்கு விதிக்கப்பட்ட காரியம் வெற்றி பெற்று விடும் போலக் காண்கிறது. ஆனால், மாறனுக்கு விதிக்கப்படும் வேலையும் வெற்றி பெற்றால்தான் முழு வெற்றி. முக்கால் கிணறு தாண்டிப் பயனில்லை. மற்ற காற்பங்குக் கிணற்றையும் தாண்டியாக வேண்டும். வந்த காரியம் பூர்த்தியாவதற்குள் அவனை வீடு நோக்கி விரட்டிய பாவம் எனக்கு வேண்டாம்!' என்று நினைத்துத் தான் அவன் உண்மையைச் சொல்ல வில்லை.

மாறன் தோல்வியை ஒப்புக் கொண்டான். "உமது வாயி லிருந்து உம் விருப்பமில்லாமல் ஒரு வார்த்தையைக் கூட வெளியே எடுக்க முடியாது போலிருக்கிறது. தங்களைப் போன்ற சாமர்த்திய சாலியை நான் இதுவரை பார்த்ததே இல்லை!" என்றான்.

"[illegible] செய்யாதீர். எனக்காகக் கொஞ்சம் பொறுமையாய் இருங்கள், இளவரசே!" என்றான் அடியான்.

"என் உறையிலுள்ள வாள் அவமானத்தில் குன்றிப் போயிருக்கிறது. வேலாயுதம் ஏந்திய கைகள் இன்று 'நமநம' என்கின்றன. [illegible] வேலைப்பாடுகள் நிறைந்த எங்கள் மாளிகை இன்று இடுகாடாய் உள்ளது. நீங்களோ பொறுமையாய் இருக்கும்படி உபதேசிக்கிறீர்கள்!" என்று கத்தாத குறையாகச் சொன்னான், இளம் சம்புவராயன்.

'[illegible] போர்வீரர் கூட வேலையில்லை என்றால் இப்படி ஆகிவிடுவார்கள் போலிருக்கிறது!' என நினைத்துக் கொண்டு, "சேச்சே! அந்த மாதிரி எல்லாம் சொல்லாதே, அப்பனே. சற்று அமைதியாய் இரு" என்றான் அடியான்.

"வைணவனே! இந்த ஜென்மத்தில் எனக்கு இனி மன அமைதி இல்லை. அடுத்த பிறவியிலாவது மன அமைதி கிட்டுமா எனத் தெரியாது. என் அருமைத் தங்கையும் என் ஆருயிர் நண்பனாகிய [illegible]தேவனும் அந்த ஜென்மத்தில் திருமணம் செய்து கொண்டால் இந்த இரண்டு பிறவிகளின் பயனையும் அடைவேன்!" என்றான் மாறன்.

ஒரு நாள் முழுவதும் நன்றாய்ப் போய்க் கொண்டிருந்த பேச்சு இப்போது சோக வடிவம் எடுத்துக் கொண்டிருந்தது அடியானுக்கு [illegible]மாகத் திருப்தி தரவில்லை.

அப்போதுதான் அவர்களுக்குக் குடந்தை நகரின் கோயில் கோபுரங்கள் கண்களுக்குப் புலனாயின. இருவரும் குடந்தையில் [illegible] கழிப்பது என முடிவு செய்தனர். நகருக்குள் நுழைந்த [illegible] 'கோயில் பெருத்தது குடந்தை' என்னும் முதுமொழிக்கு [illegible] எண்ணற்ற கோயில்களும் அவற்றைச் சார்ந்த இடங்களுமே [illegible] இருபுறமும் காணப்பட்டன.

அடியானுக்குத் தெரிந்த சத்திரத்துக்கு இருவரும் செல்ல [illegible] குடந்தை நகரில் பாதியைக் கடந்து சென்றார்கள். [illegible] நகரின் வீதிகளில் உள்ள மக்கள் நடமாட்டத்தைக் கண்டு [illegible] அயர்ந்து போனான்.

"ஒரு ஊரில் இவ்வளவு கோயில்களா? தடுக்கி விழுந்தால்கூட [illegible] கோயிலில் தான் விழுவோம் போல!" என்றான் மாறன்.

"விழுவதை விஷ்ணு கோயிலாகப் பார்த்து விழு, தம்பி. புண்ணியமாவது கிடைக்கும்" என்றான் அடியான்.

[illegible] வைணவம் என்று இந்த நகரைப் பிரிக்க இயலாமல் இரு [illegible] சேர்ந்த கோயில்களும் ஏராளமாக இருந்தன.

மகாமக தீர்த்தத்தைக் கடந்தே இருவரும் சென்றனர். "இது என்ன மனிதன் தோண்டிய குளமா? எங்கள் வீர நாராயண ஏரியைப் போல் இருக்கிறதே!" என்று வினவினான் இளவரசன். ஏரியைத் தோண்டி விட்டால் போதும். மாரிக்காலத்தில் மழைநீர் வந்து நிரம்பிவிடும். நகருக்கு நடுவே ஒரு பெரும் குளத்தை வெட்டி, சுற்றிக் கருங்கற்களால் படிகள் அமைத்து, அது பாழடையாமல் பார்த்துக் கொள்வதே பெரும் கஷ்டம்தான்.

"இல்லை, இல்லை, இது அவ்வளவு பெரியதில்லை, ஆனால், மிகவும் தெய்வீகமானது. சுற்றுப்புறத்தில் பதினாறு கோயில்களும், நடுவில் ஒன்பது கிணறுகளும் உள்ளன. மஹாமக உற்சவத்தின் போது சரஸ்வதி, கங்கை, சரயு, யமுனை, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய ஒன்பது நதிகளும் நவ கன்னியர்களாக வந்து இந்தக் குளத்தில் ஒரு குளியல் போட்டுச் செல்லுவார்கள் என்பது நம்பிக்கை" என்று விளக்கினான் அடியான்.

குடந்தைக் காரோணம் என்று அழைக்கப்பட்ட சோமேசர் கோயிலை ஒட்டியிருந்த ஒரு சத்திரத்தைத் தேர்ந்தெடுத்தான், அடியான். மாறனுக்கு வியப்பு- ஒரு சைவச் சத்திரத்தை அடியான் தேர்ந்தெடுத்ததில்!

அவன் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தைக் கவனித்த அடியான், "வைணவக் கோயில்களைச் சேர்ந்த சத்திரங்களும் உள்ளன. எங்கள் பெருமான் இந்த நகரில் மூன்று கோலத்தில் நின்றும், இருந்தும், கிடந்தும் இருக்கிறார். சாரங்கபாணி மற்றும் சக்கரபாணி கோயில்கள் அருகே சத்திரங்கள் உள்ளன. ஆனால், அங்கு இருப்பவரெல்லாம் என் வாதத்துக்கு ஆமாம் சாமிதான் போடுவார்கள். இங்கு நல்ல சைவ பக்தன் ஒருவனைப் பிடித்து வாதத்துக்கு இழுத்து, அவனைத் தோற்கடித்து, அவன் திருமேனியிலுள்ள திருநீற்றையெல்லாம் அழித்துவிட்டு, நாமத்தைப் பூசி வேடிக்கை பார்த்தால் இரவுப் பொழுது போய்விடும்!" என்றான் அடியான்.

சத்திரமே 'ஜேஜே' என்று இருந்தது. தேவாரப் பாடகர்களின் குழு ஒன்று இந்தச் சத்திரத்தில் தங்கியிருந்தது உள்ளிருந்து வந்த பாடல் சப்தத்திலிருந்து தெரியவந்தது. "அவ்வளவுதான். இன்று இங்கு ரத்தக் களரியாகப் போகிறது!" என நினைத்துக் கொண்டான் மாறன்.

சத்திரம் மிகவும் பெரியது. தூர தூர தேசங்களிலிருந்து சிவனடியார்கள் அடிக்கடி வந்து தங்கும் இடம் குடந்தை. அவர்களின் வசதிக்காகக் கட்டப்பட்டிருந்தது இந்தச் சத்திரம். ஏதோ புண்ணிய

[illegible]ான் வாரிசின்றிச் சாகுமுன் இதைப் பொதுக் காரியத்திற்காக எழுதி வைத்துவிட்டுச் சிவபதவி அடைந்து மேலே சென்றிருப்பார் போலிருந்தது.

வெளியிலிருந்த திண்ணைச் சுவர்களிலே காவிக் கட்டிகளினால் கோடுகள் போடப்பட்டிருந்தன. வலது புறத் திண்ணையில் மணியக்காரர் அமர்ந்திருந்தார். அடியான் உடம்பெங்கும் வைணவப் பாஷாண்டங்கள் பூசப்பட்டிருந்ததைக் கண்டவுடன் அவர் முகத்திலும் வியப்புத்தான்.

தானாக அவர் சாரங்கபாணி கோயிலுக்கு வழி சொல்லி விடுவார் என்று மாறன் நினைத்தான். ஆனால், அவர் ஒன்றும் சொல்லவில்லை. இப்படிப்பட்ட சத்திரங்கள் முழுவதுமாக இலவச சேவை செய்தன. ஆனால், வசதி பெற்றவர் "மகமை" என்று [illegible]ப்பட்ட ஒரு தொகையைக் கொடுப்பது மரபாய் இருந்தது.

மாறன் ஒரு வெள்ளிக் காசை எடுத்து நீட்டினான். அதை வாங்கிக் கொண்டு அந்த மணியக்காரர் கணக்கு வைத்துக் கொள்ளத் தன்னருகில் கிடந்த எழுத்தாணியையும் ஒரு பனை ஓலையையும் எடுத்துக் கொண்டு, "உமது பெயர்?" என்று வினவினார்.

"[illegible]ங்குமாறன்!"

"குலம்?"

"[illegible]ப்பூர்ச் சம்புவராயர் குலம்" என்று மாறன் சொல்லிய [illegible]ன், மணியக்காரர் பாய்ந்து எழுந்து நின்று அருகிலிருந்த [illegible]ட் அவசரமாக எடுத்துத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டார்.

"இளவரசே! மன்னிக்க வேண்டும். ஏதோ வணிகர் என்று நினைத்து விட்டேன்" என்று கூறி, வெள்ளிக் காசைத் திரும்ப நீட்டினார். அதை வாங்க நீட்டிய அடியானின் கையைத் தடுத்தான் மாறன்.

"தங்கள் வரவு நல்வரவாக இருக்கவேண்டும்!" என்று குனிந்து கும்பிட்டார் மணியக்காரர்.

சத்திரத்தின் வெளித் தோட்டத்தில் கட்டுத்தறி இருந்தது. புரவிகளை அங்கு கட்டிவிட்டு, அங்கு சேவை செய்யும் சிறுவனிடம் அவற்றுக்குப் புல்லும், நீரும் கொடுக்கச் சொல்லி ஓரிரு செப்புக் காசுகளையும் ஊக்கத் தொகையாகக் கொடுத்தான் மாறன்.

இரவு உணவு வாங்கி வர ஏற்பாடு செய்தார் மணியக்காரர். அதை ஒரு பிடி பிடித்தான் அடியான். பின்னர் உள்ளே இருந்த நிலா முற்றத்தில் இருவருமாகப் படுத்திருந்தனர்.

"இரவு தூங்குவது உசிதம் இல்லையோ?" என்று சிரித்துக் கொண்டே மாறன் கேட்டான். வரும் வழியில் இரவு வரவர அடியான் முகம் கறுத்ததைக் கவனித்து வந்த மாறன், "இருளைக் கண்டு மிரண்டு போயிருக்கிறீர். இரவில் உம்மைத் தொந்தரவு செய்தது யார்? ஆதித்த கரிகாலர்தானே?" என்றான்.

தன் மனதை ஏடு போலப் படிக்க மாறனுக்கு எப்படித் தெரிந்தது என அடியான் வியந்தான். இவன் கனவை தானே பார்த்தவன் போலக் கூறுகிறானே. "உமக்கு எப்படித் தெரியும்?" என்றான் அடியான்.

"உமக்கு மட்டும் அல்ல. எனக்கு ஐந்து ஆண்டு காலமாகக் கனாக் காலத்தில் அவர்தான் வருகிறார். என் தந்தைக்கும் அதுதான் நடக்கிறது என நினைக்கிறேன். ஏன், எங்கள் ஊரில் உள்ள அனைவரும் காலி செய்து கொண்டு சென்றதற்கு இந்தத் தூங்கா இரவுகளும் அவற்றில் வரும் அந்தப் பயங்கரக் கனவும் கூட ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்" என்றான்.

"போகும் வழியில் துர்கையம்மன் கோயில் ஒன்றைப் பார்த்து, உமக்கு அந்தப் பூசாரியை வைத்து வேப்பிலை அடிக்கச் சொல்ல வேண்டும். அப்போதுதான் உமது பயம் தெளியும்" என்று கூறிச் சிரித்துவிட்டு, "விளையாட்டுக்குச் சொன்னேன். கடம்பூரைக் கடந்தால் அந்தக் கனவு வராது. நிம்மதியாக உறங்குங்கள்" என்று ஆறுதலாய்ச் சொன்னான்.

வேப்பிலை அடித்து மந்திரிக்க வேண்டும் என்று மாறன் சொன்னவுடன், அடியானுக்கு வேறு ஒரு யோசனை வந்தது. "குடந்தையில் பிரபலமான ஜோசியர் இருக்கிறார், பார்க்கிறீரா?"

மாறன் சிரித்தான். "அவர் என்ன சொல்வார்? என்னை யார் தஞ்சையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்வாரோ?"

"இங்கே பாருங்கள், இளவரசே, திருப்பித் திருப்பி அதையே பேசுகிறீர்!" என்று கோபித்துக்கொண்டான், அடியான்.

"பின் என்னதான் அவர் சொல்வார்?"

"எல்லாம் சரியாய்ச் சொல்வார்."

"ஐந்து ஆண்டுகளாக நாங்கள் கஷ்டப்பட்டதைச் சொல்வாரா?"

"நிச்சயம் சொல்வார்"

"[illegible]!"

"அவரைத்தான் கேட்க வேண்டும்"

"இனிமேல் அந்தக் கஷ்டம் பழகிப் போய்விடும் என்று [illegible]வியபின் தக்ஷிணையைக் கேட்பாரோ என்னவோ!" என்று [illegible] ஒரு விரக்தியான சிரிப்புச் சிரித்தான் மாறன். "இதெல்லாம் [illegible] வைணவரே. கஷ்டப்படவேண்டும் என்று என் கர்ம [illegible]யில் இருந்தால் நான் கஷ்டப் படுவேன். யாராலும் தடுக்க [illegible]து" என்றான்.

"[illegible] தவறு, தம்பி. கிரகங்களும் நட்சத்திரங்களும் வருங்கால [illegible]களைத் துல்லியமாகச் சொல்லிவிடும். அதைக் கண்டறிந்து [illegible] எடுத்துச் சொல்கிறார், இந்த ஜோசியர். உன்னுடைய [illegible] எப்பேர்ப்பட்ட குலம்! இந்தச் சத்திர மணியக்காரர் உன் [illegible] என்னவென்று தெரிந்தவுடன் குனிந்த குனிவில் அவர் முதுகு [illegible]பே முறிந்திருக்கும். இன்றைக்கு உன் நிலைமை இப்படி. [illegible]க்கு எப்படியிருக்கும் என உனக்குத் தெரிந்து கொள்ள [illegible] இல்லையா?"

"என் ஜாதகம் எல்லாம் நான் எடுத்து வரவில்லை" என்று [illegible] கழித்தான் மாறன்.

"அது அவரிடமே இருக்கும். அவரைப் போன்ற ஜோதிடர் [illegible] வாடிக்கையாளர்கள் வராதபோது வேறு என்ன வேலை? [illegible] வம்சத்தில் பிறந்த பிள்ளைகளின் ஜாதகங்களையெல்லாம் [illegible]ச் சேகரித்து வைத்திருப்பார் எனக் கேள்விப்பட்டிருக் [illegible]."

[illegible]த்தான் மாறன். இவர் போன்றவர்கள் அடுத்துப் பட்டத் [illegible] போவது யார் என உயர்குலத்து ஜாதகமெல்லாம் [illegible] கொண்டிருப்பார்கள். கோட்டைக்கு வெளியிலே [illegible]யான பூக்காரப் பெண்மணியின் வீட்டில் வளர்ந்து, [illegible]த்தில் தனக்கென ஒரு ஜாதகம் கூட இல்லாமல், அடுத்த [illegible] பூ பறித்துக் கொண்டிருப்பார். உலகாளும் பேரரசர் வழித் [illegible] அச்சிறுவன் கிழிந்த ஆடைகள் உடுத்தி, விபூதியும், [illegible]மாலையும் தரித்து, வேறு எவ்வித ஆபரணங்களும் [illegible], அவனது உரிமைக்கு உட்பட்ட உடைமைகளான [illegible] ஐசுவரியங்களுக்கு நடுவே ஏழ்மையில் வாழ்ந்து வருவான். [illegible] விதி. அதுதான் சோழ நாட்டில் நிகழவும் நிகழ்ந்தது.

''ஜாதகமாம் ஜாதகம்!'' என முணுமுணுத்துக் கொண்டு, போர்வையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டு தூங்கச் சென்றான், இளம் சம்புவராயன்.



அத்தியாயம் ஒன்பது
இதுதான் தஞ்சை!

காலையில் இருவருமாகக் கிளம்பினார்கள். பகற்பொழுது சென்று, இரவு நெருங்கி வந்து கொண்டிருந்தது. இருள் ஏதோ ஒரு பெரிய கடோத்கஜன் பெரிய காலடிகளை எடுத்து வைத்து வருவது போலவும், அவனது நிழலும் அவன் வேகத்துக்கு ஈடு கொடுத்து விரைந்து நாட்டை மூழ்கடித்தது போலவும் இருந்தது.

வெகு நேரமாகத் ''தஞ்சை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?'' என்று அடிக்கடி மாறன் ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டே வந்தான். 'இவன் இதற்கு முன் தஞ்சையே வந்ததில்லையா?' என்று சற்று கோபம் கொண்டான் அடியான்.

ஆனால், சென்று சேருமிடம் நெருங்க நெருங்க அவனது வேகம் குறைந்தது அடியானுக்குப் புலப்பட்டது. காலையில் இருந்த ஆர்வம் இப்போது இல்லை.

அன்று இரவே தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசித்து விட வேண்டும் என்ற எண்ணத்தை அடியான் கைவிடவில்லை. ஆனால், சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில்தான் தஞ்சைக் கோட்டையை இருவரும் அணுகினார்கள்.

தஞ்சை மாநகரின் வடக்குக் கோட்டை வாசல்தான் கண்ணுக்கு முதலில் தெரிந்தது. மதிற் சுவரின் பின் பல வானளாவிய அரண்மனை மாடங்களும், ஆலயக் கோபுரங்களும், கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அவற்றின் மீது கொடிகள் சிறகடிக்கும் பறவைகள் போலக் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன.

ஊரின் மத்தியில் புலிக் கொடி பறந்து கொண்டிருந்தது. அதைச் சுட்டிக் காட்டி, ''பெரிய புலிக் கொடி பறப்பது அரண்மனை, பனை மரக்கொடி பறப்பது பழுவேட்டரையரின் மாளிகை!'' என்று சொன்னான் அடியான், ஏதோ மாறன் தஞ்சைக்கே வராதவன் போல.

[illegible]ன் பாட்டனும் முப்பாட்டனும் இந்தச் சோழ பரம்பரைக்குச் [illegible] செய்து செத்து மடிந்திருக்கின்றனர்!' எனச் சொல்லலாம் என்று நினைத்த மாறன், இதெல்லாம் தானே தம்பட்டம் அடித்தால் [illegible] இராது என அமைதி காத்தான்.

கோட்டைச் சுவர்களின் பின்புறத்தில் மாட மாளிகைகள் [illegible]பட்டன. ஏதோ ஒரு மாளிகையின் விமானத்தின் மீது [illegible]ப்பட்ட கலசம் ஒன்று மறையும் சூரியனின் ஒளியில் [illegible]யது. அதைக் கண்டவுடன் மாறன் தன் குதிரையின் [illegible]த்தைப் பிடித்திழுத்து அதை நிறுத்தினான். சற்று நேரம் [illegible] மாலை வெளிச்சத்தில் அந்தக் காட்சியை உற்று [illegible]யபடி சிந்தித்தான். அந்த வெளிச்சம் அவனுக்கு ஏதோ [illegible]வது போலவே தோன்றியது

'இளவரசே! சற்றுச் சிந்திக்காமல் வருகிறீர்களா? பொழுது [illegible]தற்குள் கோட்டைக்குள் பிரவேசித்துவிட வேண்டும்!'' என்று அவசரப் படுத்தினான் அடியான்.

'[illegible]வூருக்குச் சமீபத்தில்தான் வந்து விட்டோமே. ஏன் இப்படி [illegible] செல்ல வேண்டும்!'' பல நாள் ஞாபகங்களுடன் நகர்ந்த [illegible] விரைவாகச் செல்ல விரும்பவில்லை.

''[illegible] சமயம் கோட்டைக் கதவுகளை மாலையில் அடைத்து [illegible]களாம்!'' என்று சொல்லிக்கொண்டே விரைந்து [illegible]றான் அடியான்.

[illegible] ஞாபகங்களுக்கெல்லாம் இப்போது அவகாசம் இல்லை. [illegible] காரியத்தை முதலில் பார்க்க வேண்டும். சென்றவற்றை [illegible] பற்றிச் சிந்திப்பதைப் பிற்பாடு வைத்துக்கொள்ள [illegible] என்று முடிவு செய்து, மாறனும் அவனைத் தொடர்ந் [illegible].

[illegible]னுக்குத் திடீரென ஒரு மன மாறுதல். ''கோட்டைக்குள் [illegible]தால் தங்குவது கஷ்டம். நகரத்தில் வேண்டுமென்றால் [illegible] வசதி இருக்கும்.'' பின் யோசித்து, ''உமக்குத் தஞ்சையில் [illegible] மாளிகை இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்

''[illegible] கடைசியாக அங்கிருந்து கிளம்பும் போது இருந்தது'' [illegible] மாறன், விரக்தியாக.

[illegible]யருக்கும் தஞ்சையில் தனியாக ஓர் அரண்மனை [illegible] தலைநகருக்கு வந்து போகும் போது தங்குவதற்காக அது [illegible] பாட்டன் காலத்தில் வாங்கிப் புதுப்பிக்கப்பட்டது.

''வழி தெரியுமென்றால் கோட்டைக்குள் பிரவேசிக்கலாம் இல்லையென்றால் கோட்டைக்கு வெளியே தஞ்சை நகரில் ஒரு நல்ல சைவச் சத்திரம் எனக்குத் தெரியும்'' என்றான் அடியான்.

''இல்லை, இல்லை. உள்ளேயே சென்று விடுவோம்'' என்றான் மாறன்.

கோட்டையின் உள்ளிருந்து அந்தத் தங்க நிற ஒளி வந்தது அவனுக்கு ஒரு புத்துணர்ச்சி கொடுத்திருந்தது.

''அருகில் சென்ற பின் கோட்டைக் கதவு சாத்தப்பட்டிருந்தால்?'' என்று அடியான் வினவ, ''அகழி ஓரமாக உறங்குவோம் காலையில் உள்ளே பிரவேசிப்போம். காற்றோட்டமாக இருக்கும்'' என்றான் மாறன்.

கோட்டை மதிலைச் சேர்ந்தாற்போல் அதைச் சுற்றிப் பெரிய அகழி இருந்தது அடியானுக்கும் தெரியும். அது காற்றோட்டமாகவும் இருக்கும் என்று தெரிந்த அவனுக்கு வேறொரு அபாயமும் அதில் உள்ளது தெரிந்ததே.

''தூக்கத்தில் உருண்டீரென்றால் அந்த அகழியில் வாழும் நூற்றுக் கணக்கான முதலைகளுக்கு இரவு போஜனம் பரிமாறப் பட்டது என நினைத்துக் கொள்ளலாம்'' என்றான். ''பின்பு அதிகாரிகள் கணக்கு எழுதும்போது, முதலைகளுக்கு ஒரு வீர வைணவனும் ஒரு நாத்திகனும் பரிமாறப்பட்டனர் என்று எழுதி விடுவார்கள்.''

கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலேயே தஞ்சை நகரம் ஆரம்பித்து விட்டது. மாறனுக்குத் தஞ்சையைப் பார்த்த பின் ஒரே ஆச்சரியம். இவன் வராத ஐந்து ஆண்டுகளில் இவ்வளவு மாற்றமா? இன்று கோட்டையைச் சுற்றியிருந்த இடங்களெல்லாம் ஒரு பெரும் நகரமாய்த் திகழ்கின்றது அவனுக்கு அதிசயத்தைத் தந்தது.

உண்மைதான். தஞ்சை நகர் முற்றிலும் இந்த ஐந்து ஆண்டுகளில் மாறுபட்டிருந்தது. அகலமான பாதைகளை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. எனினும் ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டுதான் மக்கள் நகர வேண்டியிருந்தது. அவ்வளவு கூட்டம். ஆங்காங்கே மக்கள் கடைகளில் கூடிப் பேரம் பேசுவதும், பொருட்களை வாங்குவதுமாக நின்றது நடமாட்டத்திற்கு மேலும் சிரமம் ஏற்படுத்தியது.

சாலையின் இருபுறமும் இருந்த கடைகளில் எரிந்த விளக்குகள் அந்த மாலைப் பொழுதை மதியம் போல் காட்சியளிக்க வைத்தன. கடை வீதிகளில் பல வகைப் பண்டங்கள் விற்கும் கடைகளும் இருந்தன. கோட்டையைச் சுற்றி வட்டம் வட்டமாகத் தெருக்கள்

[illegible]ந்திருந்தன. ஒவ்வொரு தொழிலைச் செய்யும் மனிதர்களும் [illegible]க்கென ஒரு வீதியைத் தேர்ந்தெடுத்து வசித்தும் வியாபாரம் [illegible]யும் வந்தனர்.

[illegible]டைபெடுத்து வந்த இரவுக்கு சவாலாக இருந்தது அவ்விடம். [illegible] இடங்களில் நரிக் கொம்பும் யானை உரோமமும் விற்றுக் [illegible]ண்டிருந்தனர். சிலர் தீராத வியாதிகளுக்கு மருந்து விற்றுக் [illegible]ண்டிருந்தனர். தீப்பந்த வெளிச்சத்தில் சேவல் சண்டைப் [illegible]ங்கள் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இரு [illegible]களின் மீது பந்தயம் கட்டியவர்கள், தாங்கள் பணம் [illegible] பறவையை உற்சாகப் படுத்துவதற்காக ஆரவாரமும், [illegible]மும் எழுப்பிக் கொண்டிருந்தனர். ஏதோ பானங்களைக் [illegible]விட்டுத் தட்டுத் தடுமாறி இவர்கள் மேல் சிலர் வந்து [illegible]ந்தனர்.

[illegible]ட்டைக்கு வெளியே இவ்வளவு செல்வம் குவிக்கப்பட் [illegible]. அந்த நாட்டு மக்கள் மன்னன் மீது வைத்திருந்த [illegible]யைக் வெளிப்படுத்தியது. போர் வராமல் தடுக்க அவன் [illegible] கொண்டவன் என்பதைத்தான் அது காட்டியது.

[illegible] சோழரின் ஆட்சியில் நாடு முன்னேறியது என்பது [illegible]க் தெரியும். ஆனால், இவ்வளவு செழிப்பா? தானிருந்த [illegible] கோட்டையையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தான். [illegible] வித்தியாசம்!

[illegible] வைணவன் கும்பிடும் விஷ்ணுவையும் பாற்கடலையும் [illegible]மென விட்டுவிட்டு, மஹாலஷ்மியே இந்தத் தஞ்சை [illegible]து சேர்ந்து விட்டாளோ என்னவோ?

[illegible] வீதிகளில் புகுந்து கோட்டையை அடையும் ஒரு [illegible]ான் இந்த மண்டலத்தின் அரசன் மேல் எவ்வளவு [illegible] வரும்! அதுவே மாறனுக்கும் வந்தது. மொத்தத்தில் [illegible] வேற்று தேசத்தில் இருப்பது போலத் தோன்றியது.

''[illegible] இருட்டு அதிகம். உன்னுடைய உடைமைகளைப் [illegible] வைத்துக் கொள்'' என்று எச்சரித்தான் அடியான்.

''[illegible] ஆட்சியில் இருட்டா?'' என்று வியந்தான், மாறன்

''[illegible] ஆட்சி செய்தால் என்ன? இருப்பதைவிட அதிகம் [illegible] என்ற உணர்வு எல்லா மட்டங்களிலும் இருக்கத்தான் [illegible].''

[illegible]த்தின் நெரிசலைத் தாண்டி அவர்கள் சற்றுத் தூரம் [illegible], வெகு தூரத்தில் வேலைப்பாடு நிறைந்த கோட்டை [illegible] தெரிந்தது.

இருவரும் குதிரைகளில் சென்றால் அது தேவையில்லா பிரபலத்தை உண்டு பண்ணும் என அறிந்து, கால்நடைகளுட கால் நடையாக அவற்றை நடத்திச் சென்றனர். இருவரு கோட்டை வாசலை நெருங்கியபோது கோட்டை வாசலி பிரமாண்டமான கதவுகள் திறந்திருப்பது தெரிந்தது.

கோட்டை வாசலிலும் மதில்களின் மீதும் வீரர்கள் காவ புரிந்தனர். ஓரிரு வினாடிகள் மாறன் அந்தக் காட்சியைக் கண் பெருமிதம் அடைந்தான். அவன் கண்கள் கலங்கின. இந்த காட்சியை மீண்டும் பார்க்க ஒரு வாய்ப்புக் கிட்டுமா என அவ நினைத்த நாட்கள் பல உண்டு. அகழிக்கு மேல் ஒரு குறுகலா மரப்பாலம் காணப்பட்டது. அது அகழிக்கு வெளிப்புற தொடங்கிக் கோட்டை வாசல் வரை சென்றது. அதன் மேல் ஏ இருவருமாய் உள்ளே பிரவேசித்தார்கள்.

பாலத்தின் பக்கத்தில் எட்டிப் பார்த்தால் அந்த அகழியி குடியிருக்கும் நூற்றுக் கணக்கான முதலைகள் பாலத்திலிருந் போடப்படும் இரவு உணவுக்காக ஒன்றுடன் ஒன்று மோதி கொண்டு காத்திருந்தது தெரிந்தது.

மாறனுக்கு ஒரு வருத்தம். "நான் வந்தபோதெல்லாம் யாராவ என்னை வரவேற்று அழைத்துச் செல்லக் காத்திருப்பார்கள் வழியெல்லாம் கூட்டத்தை ஒதுக்கிவிட்டு என்னை ஊர்வலமா அழைத்து செல்வார்கள். எங்கள் இராஜ பரிவாரங்கள் சாலையி செல்லும்போது மக்களெல்லாம் ஒதுங்கி நிற்பார்கள். எனக்கே இப்படி என்றால் என் தந்தை வரும்போது எப்படி இருந்திருக் மென்று நினைத்துப் பாருங்கள்" என்றான்.

அவன் கூற்று உண்மைதான் என அடியானுக்குத் தெரியும் அவன் குலம் பழைய நிலையில் இருந்திருந்தால், அவன் வரு செய்தி அறிந்து கோட்டையின் வாசற்படி வரையில் வந் காத்திருந்து அழைத்துச் சென்றிருப்பார்கள்.

இந்தப் பெரிய நகரில் தன்னை இன்று ஒருவரும் அடையாள தெரியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டது அவனுக்கு மிகுந் வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால், அவன் உண்மையில் என் நடந்தது என்று தெரிந்து கொண்டிருந்தான் என்றால் சந்தோஷ பட்டிருப்பான்.

கடம்பூரிலிருந்து வந்த இருவரும் தங்கள் வரவைக் கவனிக் வில்லை யாரும் என்று தேவையில்லாமல் வருத்தப்பட்டார்கள் அவர்கள் ஊருக்குள் காலெடுத்து வைத்தவுடனே அவர்களுக்கா

...ய நாட்களாய்க் காத்திருந்த ஒருவன் அவர்கள் வந்திருக்கும் ...தியை அனுப்பி விட்டான், ஒரு முக்கியமானவருக்கு.

இந்தத் தஞ்சை நகரை முத்தரையரிடமிருந்து விஜயாலயன் ...கைப்பற்றியிருந்தான். இந்த நகர் அவர்கள் கைவசம் வந்த பின் ... சோழர்களின் தலையெழுத்து மாறியது எனக் கூறலாம். ...ற்றில மன்னர்களாய், பாண்டியருக்கும் பல்லவருக்கும் ...யே நசுங்கி மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்த சோழர் ... இன்று பரத கண்டத்தில் சரிபாதி சொந்தமாக இருந்தது.

...சைக் கோட்டையில் அதை முன்பு ஆண்ட முத்தரையரின் ...ங்களே இருந்தன. அவற்றை வாங்கி இடித்தும், இருந்ததை ...மைத்தும் கட்டியிருந்தார்கள்.

...ஞ்சை நகரமே அவ்வளவு அழகாய் இருந்தது. கோட்டையோ ... சௌந்தரிய லோகமாக இருந்தது. அந்த மாபெரும் ...ரின் பிரம்மாண்ட வீதிகளில் அவர்கள் இருவரும் போய்க் ...கொண்டிருந்தபோது, மாளிகைகளுக்குப் பின்புறம் சூரியன் ...மனம் ஆகிவிட்டான். எனினும் இரவில் வீதிகளில் ...ங்கள் வெளிச்சம் தந்தன. வானை நோக்கி வளர்ந்த ...ங்களுக்கு நடுவே சாமானியர்கள் நடந்து கொண்டிருந் ...ர்கள். அவர்களுடன் இவர்களும் தங்கள் புரவிகளை இழுத்தபடி ...ன்றனர்.

...மாறன் விரைவாக நடந்தான், அவனது ஞாபகங்களை ...க்கொள்ளும் முயற்சியில். எத்தனை எத்தனை ஞாபகங்கள்- ...ம் கெட்டதுமாய் அவனுக்கு இந்தத் தஞ்சாவூரின் வீதிகள் ...ந்தன.

...லமாகத் தலைநகரில் ஒரு வீடு வைத்திருப்பது கடம்பூர் ... குடும்பத்தின் வழக்கமாய் இருந்தது. அவர்களது ஊரிலிருந்து ... பயணிகள் கூட அதை உபயோகிக்கலாம். கடம்பூரிலிருந்து ... எளிய பயணி கதவைத் தட்டினால் போதும். வரவேற்கப் ... உணவும் உறங்க இடமும் கொடுக்கப்படுவார்.

...ல் செல்லும்போது மனதில் நிறைவும் முகத்தில் புன்னகை ...படி சிப்பந்திகள் நடந்து கொள்வார்கள். யாரையும் ... குறையுடன் அனுப்பக் கூடாது என்பது பெரியவரின் ...ளை. கடம்பூரில் ஒரு சாதாராணப் பயணி கோட்டையின் ... கதவைக்கூடத் தாண்ட இயலாது. அவனே இங்கு ...அரசன் எதிரே அமர்ந்திருக்கலாம். இங்கு அரச குடும்பத்தினர் ... அமர்ந்து உணவருந்தும்படிகூட நேரலாம்.

பிரதான சாலையின் இருபுறமும் சந்து பொந்துகள் அதிகம். அவற்றில் எக்கசக்கமான வீடுகள். எனினும் பிரதான சாலையில் ஒரு பெரிய கட்டடம் இடது புறம் தெரிந்தது.

''இதுதான் அந்த விருந்தினர் மாளிகை!'' என்று சுட்டிக் காட்டினான் மாறன். அவன் கடம்பூரில் வசித்த வீட்டை விட இது பெரியதாகவே தெரிந்தது அடியானுக்கு. ஆனால், அதை விட மிகவும் மோசமாகப் பராமரிக்கப்பட்ட நிலையில் இருந்தது. வாசற்படியை அடைத்துக் கொண்டு, மூவர் உட்கார்ந்தபடி சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர்.

வந்தவர்கள் யாரென்று தெரியாதுதான். எனினும், இவர்களைக் கண்டவுடன், மரியாதையாய் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தனர்.

மாறனுக்குத் தெரியும். குதிரையைச் செலுத்தி வருபவர் உயர் குடியைச் சேர்ந்தவராய் இருக்க வேண்டும் என்று அந்த மனிதர்கள் யூகித்து விட்டனர். மனிதனுக்கு இருப்பதைவிட புரவிக்கு மதிப்பு அதிகம்.

அந்த மாளிகையில் வேலை செய்த சிப்பந்திகள் தங்கள் எஜமானனைத் திடீரெனக் கண்டவுடன் ஓரிரு வினாடிகளே ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். உடனே சுதாரித்துக்கொண்டு மாறனை மன்னன் போலக் கவனிக்கத் தொடங்கினர்.

ஆனால், அவரை வரவேற்கும் நிலையில் வீடு இல்லை. இந்தப் பராமரிப்பு இல்லாத கட்டடம் ஒரு வகையில் சம்புவராயர் நிலையை எடுத்துக்காட்டுவதாய் இருந்தது. எங்கும் ஒட்டடையும் சிலந்தி வலையும் மண்டிக் கிடந்தன. உடைந்த பானைகளும் பிளக்கப்பட்ட மரமும் தரை எங்கும் நிறைந்திருந்தன. குறைந்த பட்சம் மூன்று குடித்தனங்களாவது உள்ளே வசித்து வந்தார்கள். அதன் அங்கத்தினர்கள் உறக்கம் கலைந்து அவரவர் அறைகளிலிருந்து எட்டிப் பார்த்தார்கள்.

எஜமானரைக் கண்டு முதலில் அடைந்த ஆச்சரியமும் ஆனந்தமும் ஓய்ந்த பிறகு, தங்களால் இந்த விருந்தினர் மாளிகையை அவருக்கு ஏற்றாற்போல் சீர் அமைத்துத் தர இந்த இரவில் காலம் போதவில்லையே என்று தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தனர்.

'பரவாயில்லை' என்றாற்போல் கையை அசைத்தான் மாறன். அவர்களைச் சொல்லியும் குற்றம் இல்லை. ஐந்து ஆண்டு காலமாக அவன் இங்கு எட்டிக்கூடப் பார்க்கவில்லை. தன்னை இவர்கள் அடையாளம் கண்டு கொண்டதே பெரிய விஷயம் என்பதனால், மாறன் பெரிதாகக் கோபப்படவில்லை.

ஐந்து ஆண்டுகள் தலைநகரை விட்டு ஒதுங்கியே இருந்தாகி விட்டது. ஐந்து ஆண்டுகளில் தங்கள் எதிரிகள் வலுவடைந்திருந்தார்கள். பதவி வகிக்கும் பெரியோரிடம் இவர்களைப் பற்றிக் குற்றம் குறையுமாகச் சொல்லியிருப்பார்கள்.

பல ஆண்டுகளாக இங்கு வரவில்லை. கடைசி முறை வந்தது அவனது தந்தை தஞ்சைப் பாதாளச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போதுதான். அதன் பின்னர், அவர்கள் இந்த விருந்தினர் மாளிகைக்கும், ஏன், இந்தத் தஞ்சை நகருக்கும் வருவதைக்கூட நிறுத்தி விட்டனர். அவர் குற்றமற்றவர் எனச் சக்கரவர்த்தி கூறி விடுவித்தபோதும், நாடாளும் அரசன் சிறையில் ஓரிரவு கழித்தது வேதனையாகத்தான் இருந்தது.

அடியானை அனுப்பி இரவுக்கு உணவு வாங்கி வரச் சொன்னார்கள். அடியவன் போகும்போதே வாசலில் சொக்கட்டான் ஆட [illegible] அமர்ந்தவர்களை விரட்டி விட்டுச் சென்றான். நாளை காலை இருக்கும் குடித்தனங்களும் காலி செய்யப்படும் என்று அடியானுக்குத் தெரியும்.

உணவை உண்டு இருவருமாக விரிக்கப்பட்ட பாய்களில் படுத்தனர். இரவு அமைதியாக இருந்தது.

''இளவரசருக்கு இங்கு மெத்தை கிடையாதோ?'' என்றான் அடியான்.

''போர்க்களங்களில் முள் தரையிலும் இளவரசர்கள் தூங்க வேண்டும்!'' என்று மறுமொழி உரைத்தான் மாறன்.

''இப்போதெல்லாம் நான் கேள்வியை முடிப்பதற்குள் பதில் [illegible]'' என்று வருத்தப்பட்டான், அடியான்.

தன்னை அறியாமல் கேள்விகளுக்கும் பதில்களுக்கும் பேச்சு மாறிவிட்டது என அறிந்து வாயைப் பொத்திக் கொண்டான் அடியான்.

ஆனால் மாறன் கிடைத்த அந்தச் சிறிய இடைவெளியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. வெகு நேரமாய்க் கேட்க வேண்டும் என நினைத்த கேள்வியைக் கேட்க நேரம் வந்தது.

''கடைசியாக இந்த வீட்டுக்கு என் தந்தை வந்தது, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன்'' என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டு அந்தக் காட்சியைத் தன் மனதிலிருந்து விரட்டினான். அதற்குப் பின் பல தலைமுறைகளாய் நட்புப் பூண்ட குடும்பங்கள் நம்மைக் கண்டால் வெகு தூரம் தள்ளி நிற்கிறார்கள். ஒரு சிலரின் மனம் சிறிதளவே மற்றவரின் கேலியைத் தாங்கும். என்

தந்தை இந்த நகரின் சாலைகளை இனி மிதிப்பாரா என்பதே சந்தேகம். ஆனால், ஒன்று. பல ஆண்டுகளாக இரவும் பகலுமாய் நான் கண்டு கொண்டிருந்த கனவு நிறைவேறப் போகிறது. செய்த தவறைத் திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்புகூட எனக்கு இந்த நாடு தரக்கூடாதா என்று ஆதங்கம் கொண்ட நாட்கள் பலவுண்டு. என் தாய் கும்பிட்ட கடவுள் என்னைக் கை விட்டு விடாது என எனக்குத் தெரியும்!''

அவன் பேசும்போதே எதிரே அமர்ந்திருந்த வைணவனை உற்றுக் கவனித்தான், மாறன். அடியானுக்குத் தெரியாத இராஜ ரகசியம் இருக்காது. சோழ தேசப் பிரதமர் அநிருத்தரின் வலது கை அவன். அந்த வைணவன் முகத்தில் ஒரு மாற்றமும் இல்லை. அவனாக அழைத்து வந்த காரியத்தைப் பற்றிக் கூறுவான் என்று எண்ணியது தவறு.

''இப்போதாவது சொல்லுங்கள், வைணவரே! என்னை அழைத்தது யார்? நாளை யாரைப் பார்க்கப்போகிறோம்?'' என்றான் மாறன்.

அடியான் பெருமூச்சு விட்டான். 'உமது தலையில் இன்றும் தூக்கம் எழுதப்படவில்லை!' என்று நினைத்துக்கொண்டு, ''சின்னப் பழுவேட்டரையர்'' என்று அடியான் கூறியவுடன், ''என்ன?'' என்று அலறினான் இளம் சம்புவராயன்.

அந்த வைணவன் கூறிய வார்த்தைகள், வீசிய சவுக்கு காற்றினைக் கிழிக்கும்போது ஏற்படுத்தும் சப்தம் போலிருந்தது. அந்த வார்த்தைகளின் செயல் விளைவு மாறனுக்கு அந்தச் சவுக்கடி போலவே வலித்தது.



அத்தியாயம் பத்து
பழுவேட்டரையர் மாளிகை

சின்னப் பழுவேட்டரையர் அவரது அலுவலைக் கவனிக்கும் இடத்தில் அமர்ந்திருந்தார். அவரது ஒருங்கிணைக்கப்பட்ட மாளிகையும் அலுவலகமும் மிகச் சிறப்பான சிற்பக் கலையுடன் அமைக்கப்பட்டிருந்தன. மன்னரின் மாளிகையைத் தவிர்த்து விட்டால், தஞ்சையின் கோட்டைக்கு உள்ளே இவரது

[illegible]யே பார்ப்பவர் கண்களைக் கவர்வது என மக்கள் கூறும் [illegible] இருக்கும்.

[illegible]டத்தின் வெளிப்புறம் திருவண்ணாமலையிலிருந்து [illegible] வரப்பட்ட கருநிறக் கற்களால் அலங்கரிக்கப்பட் [illegible]. அதனால் தூரத்திலிருந்து பார்ப்பவர் கண்களுக்குப் [illegible]வேட்டரையர் மாளிகை ஒரு சிறிய மலை போலவே தோற்றம் [illegible]டிருந்தது.

[illegible] அழகைப் பற்றி மக்கள் பேசுவதை ஒற்றர்கள் வந்து கூறும் [illegible] காது குளிர அவர் கேட்ட காலங்களும் உண்டு. சோழ வள [illegible] சிவபெருமானின் கோயில்கள் கூடச் செங்கற்களால் [illegible]பட்டிருக்கும் நிலையிருக்க, தனி ஒருவரின் வீட்டைக் [illegible]களால் வடிவமைத்த பழுவேட்டரையரின் முன்யோசனை [illegible] தக்கதுதான்.

[illegible] கலந்துகொண்டு பல விழுப்புண்களைச் சுமந்த பழுவூர் [illegible] மாளிகையின் வெளி அழகிலோ, கட்டடம் தரும் [illegible] வாழ்விலோ ஆர்வம் சொற்ப அளவில்தான் இருந்தது. [illegible], அந்தக் கட்டடத்தின் தோற்றத்தைக் காண்பவர் மனதில் [illegible] மதிப்பும் ஒரு நிரந்தர கிலியும் ஏற்படுத்தத் திட்ட [illegible]டிருந்தது.

[illegible], மக்களுக்கு ஏற்பட்ட கிலியெல்லாம் இன்று [illegible] போனது.

[illegible]யிலிருந்து பதற்றமாகவே பழுவேட்டரையர் இருப்பதை [illegible] சுற்றுப்புறத்தில் இருந்தவர்கள் தெரிந்து கொண்டிருந்தனர். [illegible] வந்தாலும் எரிந்து எரிந்து விழுந்தார். அதனால் அவர் [illegible] செல்வதையே அனைவரும் தவிர்த்து விட்டனர்.

[illegible]திலிருந்து பார்த்தவர்களுக்கு அவரது கண்கள் மட்டும் [illegible] கதவை நோக்கியே சென்று சென்று வருவது தெரிந்தது. [illegible]காகவோ அவர் காத்திருப்பதும் புரிந்தது. அதனால் அவர்கள் [illegible] சென்ற பின்தான் வீட்டில் அமைதி திரும்பும் என அனை [illegible] யூகித்தனர்.

[illegible] சோழனின் ஆட்சியின் அந்திம ஆண்டுகளில் பல [illegible] குடும்பங்கள் சீரழிந்து போய்விட்டன. பல நூறு ஆண்டு [illegible] விஜயாலயச் சோழனின் வம்சத்திற்குத் தோள் கொடுத்து [illegible] இந்தக் குடும்பங்கள் சுந்தர சோழர் சாகும்வரை கயவர்கள் [illegible] கருதப்பட்டார்கள்.

[illegible] அரசனின் ஆட்சிக் காலத்திலும், அதே நிலைமை தொடர்ந் [illegible] அரசவைக் கூட்டங்களின் போது இந்தக் குடும்பத்தின்

உறுப்பினர் அருகில் வந்தால், மற்றவர்கள் பேச்சை நிறுத்திக் கொண்டார்கள். முக்கியமான ஆலோசனைக் கூட்டங்களில் இவர்களுக்கு அழைப்பு தவிர்க்கப்பட்டது. ஓரிரண்டு ஆண்டுகளில் தஞ்சைக்கு வெளியே இருந்தவர்கள் தலைநகருக்குள் பிரவேசிப்பதைத் தவிர்த்தார்கள். தஞ்சைக்குள் இருப்பவர்களோ அரசரின் மாளிகையின் பக்கம் தலைவைத்துக் கூட படுப்பதில்லை.

முழுவதுமாக ராஜியத் துரோகிகள் என ஒதுக்கி வைக்காமலும், நண்பர்கள் என்று நம்பி அணுக விடாமலும் இந்தக் குடும்பங்களை ஒரு திரிசங்கு லோகத்தில் தொங்கவிட்டு வேடிக்கை பார்த்தது சோழ சாம்ராஜ்ஜியம். இப்படி மாற்றம் இருந்த இரண்டு குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர் சின்னப் பழுவேட்டரையர். மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்காகத்தான் இப்போது பதற்றத்துடன் காத்திருந்தார் அவர்.

பழுவேட்டரையர் குலத்துக்கு இவ்வளவு அதிகாரமும் செல்வாக்கும் சுந்தர சோழர் கொடுத்திருக்கக் கூடாது என்று பலரும் இவர் காதுபடவே கூறினார்கள். அவர்கள் இல்லாமல் நாடே ஒரு நகமளவுக்குக் கூட நகராது என எல்லோரும் நினைத்தது இன்று பொய்த்துப் போய்விட்டது. ஆனால், இதனால் பழுவேட்டரையர்கள் தனித்துப் போய்விடுவார்கள் என நினைத்தவர் பலரும் ஏமார்ந்து போனார்கள். இன்றும் அரச குடும்பம் பழுவூர் அரசரை வெகுவான மதிப்புடன்தான் நடத்தியது. இன்றும் அவர்தான் கோட்டையினுள் முக்கியப் பொறுப்புகளைக் கவனித்து வந்தார்.

ஆனால், இவர்கள் இன்னும் பெரும் பதவி வகிப்பது சோழர்களின் ராஜ தந்திரத்தினால்தான், என எல்லாருக்கும் தெரியும். 'சோழ குலத்தவர் முடியுமானால் பகைவர்களைக் கூட நண்பர்களாக்கிக் கொள்ளவே பார்க்கிறார்கள். அதற்காகக் குலம் விட்டுக் குலம் திருமண சம்பந்தம் கூடச் செய்து கொள்கிறார்கள். தன் மகன் இறப்புக்கு இவர்கள் ஒரு முக்கிய காரணம் எனத் தெரிந்தும் இவர்களைச் சுந்தர சோழர் மன்னித்ததும் இதனால்தான்' என்பது பலரின் யூகம்.

காலையிலிருந்து சின்னப் பழுவேட்டரையர் அருகே எவரும் வரவில்லை. அதாவது ஒருவரைத் தவிர. அவரது இளைய மகள் லோகா மட்டும் தைரியமாக அவர் அருகில் வந்து சென்றாள். அவளையும் பெரியவர் விட்டு வைக்கவில்லை. காலையில் அவளையும் தன் கோப வார்த்தைகளால் தாக்கியிருந்தார். அதைப் பொருட்படுத்தாமல் வந்து தந்தைக்குப் பணிவிடைகள் செய்தாள் லோகா.

அருகில் வந்த மகளை ஏறெடுத்துப் பார்த்தார், பழுவேட்டரையர். 'லோகாவின் முழுமதி போன்ற முகத்தில்தான் சிந்தும் [illegible] சிரிப்பைப் பார்த்து எவ்வளவு நாள் ஆகின்றது! மகன் இல்லை. இனி இவள்தான் எல்லாம். முதலில் பிறந்த மகளைப் [illegible] பொருள் போல இளவரசனுக்குக் கட்டிக் கொடுத்து [illegible] போனது போதும் ' என நினைத்தார்.

அந்த இளவரசன் படியளக்கும் சோழர் குலத்தவன் என நினைத்து அவனுக்கு அரியணையையும் பெற்றுத் தர இவர்கள் போராடியபோது, அவனது பிறப்பின் ரகசியம் அம்பலமானது. [illegible] எதிரிகளின் குலக் கொழுந்து எனத் தெரிந்தவுடன் மேல் [illegible] ஏழும் இடிந்து தன் தலையின் மீது ஒருமிக்க விழுந்து [illegible] போலிருந்தது.

[illegible] இளவரசரை மகள் மணந்து கொண்டால் தம்முடைய [illegible] எல்லாம் தீர்ந்துவிடும் என எண்ணி அப்படியாவது [illegible] அந்தஸ்து சம்பாதிக்கக் காத்திருக்கும் குறுநில [illegible] ஏராளம். அரச குலத்துக்குப் பெண் கொடுப்பது [illegible] திருமணத்துடன் மட்டும் நின்றுவிடாது. அரச குடும்பத் [illegible] ஆண்டு காலம் நெருக்கமான உறவை ஏற்படுத்தும். [illegible] வரக்கூடிய அந்தஸ்தும் பதவிகளும் ஏராளம்.

ஆனால்! 'இல்லை, இல்லை, லோகாவையும் இனிப் பந்தயத்தில் [illegible] பொருளாக வைக்கப் போவதில்லை' என்று அவளைப் [illegible] போதெல்லாம் சொல்லி ஒரு உறுதியைத் தன் [illegible] ஏற்படுத்திக்கொள்வார் பழுவேட்டரையர்.

[illegible] நாயாய்ப் பேயாய் அரியணையில் ஒரு இடம் பிடிக்க [illegible] திரிந்து கொண்டிருந்த போது, தனக்கென நாடு [illegible] மகுடத்தை மற்றவனுக்கு அணிவித்து அழகு பார்த்த [illegible] மொழி வர்மரின் மாட்சிமையையும் அதன் முன் தங்கள் [illegible] நடவடிக்கையையும் பலர் ஒப்பிட்டுப் பார்த்து மனம் [illegible].

[illegible] இளவரசனாக முடி சூட்டும் நேரத்தில் அருள் மொழி [illegible] மகுடத்தைத் தன் சிற்றப்பன் உத்தம சோழரின் தலையில் [illegible] விட்டது தென்னிந்திய சரித்திர ஏடுகளில் பொன்னில் [illegible] வேண்டிய நிகழ்ச்சி என்பதில் எந்த ஐயமும் இல்லை.

[illegible] முன் நாகம் போல, மகுடத்தைக் கண்டு மயக்கத்தி[illegible] மக்களுக்கு நடுவே இப்படி ஒரு மானிடனா? அவனும் [illegible] அரியணை ஏறும் வாய்ப்பை அல்லவா [illegible]!

பழுவேட்டரையர் மீண்டும் வாசற் கதவைப் பார்த்தார். இன்று இவ்வளவு ஆவலுடன் காத்திருந்ததற்குக் காரணம் ஒரு பதினைந்து நாட்களுக்கு முன் நடந்த ஒரு சந்திப்புத்தான்.

ஒரு சண்டைக்குப் பின் சந்திக்கும் இருவருக்கிடையே ஒரு கசப்பான உணர்வு இருப்பது தெரிந்ததுதான். இந்த இரண்டு முதியவர்கள் சந்தித்தபோது இருவர் முகத்திலும் இருந்த புன்னகை வேஷம் நிறைந்தது. முறுவலாய் மடிந்திருந்த இதழ்களுக்குப் பின் நாவிலும் மனதிலும் அந்தக் கசப்பு பரவியிருந்தது.

'உமது அலுவலகத்திற்கு வருகிறேன்' என்று பழுவூர் அரசர் செய்தி அனுப்பியவுடன், பிரதமர் அநிருத்தருக்கு வியப்பு வருவதற்கு முன் சிரிப்பு வந்தது. மாறாக, சில ஆண்டுகளுக்கு முன், தான்தான் அவரைப் போய்ப் பார்த்திருக்க வேண்டும்.

பிரதமர் அநிருத்தர் வயது முதிர்ந்த அநுபவசாலி. ராஜாங்க சேவையில் அவர் பழந்தின்று கொட்டையும் போட்டவர். முன்னாள் சக்கரவர்த்தியுடன் நட்புப் பூண்டவர். இருண்டிருந்த சுற்றுப்புறத்தைச் சீரமைக்க, துறவறம் பூண்ட அவரைக் கெஞ்சி மீண்டும் அழைத்து வந்தவர் அருள் மொழி வர்மர். அவரால்தான் இப்போது மீண்டும் பிரதமர் பதவியை வகித்து வந்தார்.

இன்றைய சோழ சாம்ராஜ்யத்தில் முக்கியமானவர்களெனக் கருதப்பட்ட இந்த இரண்டு கிழவர்களும் நினைவுக்கு எட்டிய கால கட்டத்தில் என்றுமே சங்கோஜமின்றி உரையாடியதே இல்லை.

இருவரும் சற்று நேரம் அமர்ந்திருந்தனர், மௌனமாக. எப்படி ஆரம்பிப்பதெனத் தெரியாமல் தடுமாறுகிறார் பழுவூர் அரசர் என்று அநிருத்தருக்குப் புரிந்தது. அவரும் ஆறுதலாக ஏதும் சொல்ல வில்லை.

ஒருவரை ஒருவர் தொடாமல் நடந்து கொண்டிருந்த மல்யுத்தப் போட்டி அது. இன்று இருவரின் பலமும் சமமானது. வெளியி லிருந்து பார்ப்பவருக்குப் பிரதமரின் கை ஓங்கியிருப்பதாகக் கூடத் தோன்றும்.

ஆனால், பல ஆண்டுகளாகப் பழுவூர் கைதான் ஓங்கியிருந்தது. தமக்கெனத் தனி நாடு வைத்திருந்தவர்கள் அவர்கள். பல தலை முறைகளாக அரச பரம்பரைக்குப் பெண் கொடுத்து வந்தவர்கள். வழி வழியாக வந்தது அரச குலத்துடன் அவர்கள் நட்பு.

ஆனால், அந்தணர் குலத் தோன்றல் அநிருத்தர் தன் மதியை மட்டும் நம்பி அரசாங்க வேலை செய்து வந்தவர். சுந்தர சோழர்

[illegible] நில மானியத்தைத், தவிரத் தனக்கென எதுவும் [illegible]திருக்கவில்லை.

[illegible] பேச்சைத் தொடங்குவது எனத் தயங்கியிருந்த பழுவூர் அரசர் கடைசியாகக் கேட்டார்: "மன்னர் பெருமான் திருமழபாடி [illegible] இருக்கிறாராமே?"

"[illegible] அவர் தாய் பெரியபிராட்டி செம்பியன் மாதேவி மழவ [illegible] குலத்தில் பிறந்தவரல்லவா? தன் பாட்டனார் வீட்டுக்குச் [illegible]திருக்கிறார் அரசர்" என்றார் பிரதமர். அரசன் சென்றது [illegible] வீட்டுக்குத் தான் என்றாலும், முக்கியமாகச் சென்றது [illegible]பாடிக் கோயிலைக் கற்றளியாக மாற்றும் திருப்பணியை [illegible] நேராகப் பார்த்துவிடவும் அங்கு வேலை செய்பவருக்கு [illegible] அளிக்கவும்தான்.

[illegible]பாடி என்பது சைவத்திலும் சோழர் சரித்திரத்திலும் முக்கியத் [illegible] வாய்ந்த கோயில்.

"மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை யல்லால்
இனி யாரை நினைக்கேனே!"

[illegible] பாடிய வார்த்தைகளுக்கு ஏற்ப உத்தம சோழர் அந்தப் [illegible]யும் அதில் நாயகனாய் வரும் வஜ்ரநாதரையும் என்றுமே [illegible]வில்லை. நந்தவனத்தில் பூப்பறித்த போதும் சரி, கைதியாகப் [illegible] சிறையில் இருந்த போதும் சரி, முடிசூட்டப்பட்ட [illegible] சரி, மழபாடி நாதரின் மீது அவர் வைத்த அன்பு ஒரே [illegible]. இந்தப் பாடலைத் தினந்தோறும் பாடியவருக்கு, [illegible] உரிய பொருளான சோழச் சிங்காசனம் வந்து சேர்ந்தது [illegible].

[illegible] நினைவுகள் இருவர் மனதிலும் ஓடிய பின், பழுவூர் அரசர் [illegible] தோரணையில், "தாங்கள் என்னை நம்பவில்லை!" [illegible]

[illegible] இல்லாமல் கிழவர் பேசினாலும் எதற்கு வருகிறார் [illegible] அநிருத்தருக்குப் புரிந்தது.

"[illegible] குலத்தை நம்பாமல் நாட்டில் இருக்க முடியுமா, [illegible]" என்றார் புன்னகையுடன்.

"[illegible] என் அரசர் கிளம்பும்வரை எனக்குத் தெரிவிக்க [illegible]!"

பழுவூர் அரசரின் கேள்விக்குப் பிரதமர், "எனக்கே திடீரென்று தான் தெரியும். ஒரு நாள் சக்கரவர்த்தி கூப்பிட்டு அனுப்பினார். 'தலைநகரில் நான் ஒரு மாதம் இல்லாவிடில் தவறொன்றுமில்லையே' என்று கேட்டார். 'இல்லை' என்றேன். 'திருமழபாடி சென்று வருகிறேன்' என்றார். எனக்குப் படியளக்கும் எஜமானனிடம் நான் என்ன சொல்ல முடியும்? 'நான் இங்கு தொடர்ந்து தலைநகரில் இருக்கலாம் அல்லவா?' என்றேன். இதில் உம்மை நம்பாமல் இருப்பது எங்கு வந்தது?"

"அவரது பயணத் திட்டம் எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தால் அருகில் உள்ள என் நாடான பழுவூருக்கு அழைத்திருப்பேன் அல்லவா? இன்று அந்த மழபாடித் தென்னவன் மழவராயன் எல்லா நல்ல பெயரையும் அபகரித்துக் கொள்வான். ஒரு காலத்தில் என் முன் அமரக்கூடத் தயங்குபவன் இன்று சாம்ராஜ்யத்தில் பெரிய மனிதன்!" என்று அலுத்துக் கொண்டார்.

மன்னரின் மழபாடி விஜயத்தையும் தான் வாழ்வில் தாழ்ந்து போனதையும் முடிச்சுப் போட்டுக் குழம்புகிறார் இவர். பூவரச மரத்தைத் தேள் கொட்டிற்று, 'புளியமரத்துக்கு நெறி கட்டிற்று' என்று கூறுவார்கள் கிராமப்புறத்தில். அது போலத் தான் இன்று நிகழ்கிறது.

மனதுக்குள், 'உம் பக்கம் வீசிய காற்று அவர் பக்கம் இன்று வீசுகிறது. அவர் மேல் ஏன் கோபப்படுகிறீர்கள்?' என்று கேட்டுக் கொண்ட அநிருத்தர், வெளியே ஒன்றும் பேசவில்லை. அடுத்து என்ன வார்த்தை எதிரே அமர்ந்திருப்பவர் கூறுவார் எனக் காத்திருந்தார்.

"ஒரு முறை எங்கள் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தால் ஒரு விருந்தாவது கொடுத்திருப்பேன்!" என்று வருத்தப்பட்டார் பழுவூர் மன்னர்.

"முன்பே அவருக்குக் கடுங்காவலுக்கு இடையே பாதாளச் சிறையில் நீங்கள் கம்பங்களியை விருந்தளித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார் பிரதமர், ஒரு புன்னகையுடன்.

"மன்னர் மறந்தாலும் நீர் அதைச் சதா ஞாபகப்படுத்தி விடுவீர் போலிருக்கிறதே" என்று கோபித்தார் பழுவேட்டரையர்.

தற்போது அரசராய் இருக்கும் உத்தம சோழர் ஒரு காலத்தில் தான் பிறந்த அரச குலத்தை விட்டு விலகி விதியின் விளையாட்டினால் நந்தவனத்தில் சேந்தன் அமுதனாக வாழ்ந்தார். அவர் கோயிலுக்குப் பூப்பறிக்கும் பூக்குடலைச் சிறுவன் மட்டுமே என எண்ணி அவரைப் பாதாளச் சிறையில் அடைத்துப் படாத பாடு

[illegible] விட்டனர் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றிருந்த பழுவேட்டரையர். காரணம்- ஒற்றன் என்று கருதப்பட்ட வந்தியத்தேவனைத் தப்ப வைத்ததற்காக. இன்று அந்தப் பூக்குடலைப் [illegible] பேரரசன். அவனை வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க [illegible] காவில் நிற்க வேண்டியிருக்கிறது.

[illegible] எழுதப்படாத சட்டம் ஒன்று உண்டு. 'பழுவூர்க் [illegible] ஆளாகாதே' என்பது. அதெல்லாம் முன்பு ஒரு காலம். பழுவூர் அரசர் முகம் குரோதத்தில் கருகியது. எனினும் அதைக் [illegible] அநிருத்தர் உடனே தன் தோரணையை மாற்றிக் கொண்டார்.

பழுவூர் அரச குலம் சோழருக்குச் செய்த சேவையை இனி ஒரு [illegible] தோன்றித் தான் செய்ய வேண்டும் என அவருக்கு நன்கு தெரியும். எப்படிபட்ட சேவைகள்! எவர் கண்ணிலும் நீர் [illegible] அளவுக்குத் தியாகங்கள், அப்பப்பா!

வரி விதித்துப் பொக்கிஷத்தை நிரப்பும் வேலையை இவரது [illegible] மேற்கொண்டவரை, வர வேண்டிய ஓர் செப்புக் காசு [illegible] அவர் விரித்த வரி வலையிலிருந்து தப்பக் கூடாது எனக் [illegible] இருப்பார். அவர் நினைத்திருந்தால் வசதியான [illegible] பலரும் அவரைப் பொன்னால் இழைத்திருப்பார்கள். [illegible] உள்ள பொக்கிஷ சாலைக்கு வரவு அதிகரித்ததே அவர் [illegible] பதவியை ஏற்றுக் கொண்டவுடன்தான். அவரது சாணக்கிய [illegible] எல்லாம் ஒரு பெண்ணின் அழகுக்கு முன் அடிபணிந்து [illegible] போதுதான் அவரைக் கீழே தள்ளி வேடிக்கை பார்த்தது [illegible] பெரியவர் சாவில் கூட ஒரு தியாகம். அது பலருக்குத் [illegible].

[illegible] மன்னிக்க வேண்டும். உம்மைப் புண்படுத்த நான் [illegible]. இந்த நாவில் எம்பெருமான் ஒரு எலும்பை [illegible] போனதுதான் தப்பு!" என்றார் பிரதமர். "சரி, அரசே. [illegible] இந்த எளியவன் என்ன செய்ய வேண்டும்? உத்தர[illegible]. என் சக்திக்குள் இருந்தால் உடனே முடிப்பேன். [illegible], அரசரிடம் மன்றாடியாவது முடித்துக் கொடுப்பேன்!" [illegible].

[illegible] ஆரம்பித்தார், பழுவேட்டரையர், "என்னை யாரும் [illegible]. உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்."

"[illegible] இல்லை!" என்று அநிருத்தர் தொடங்க, அதைக் [illegible] பழுவூர் அரசர் தொடர்ந்தார்.

"நான் வரும்போதே என் காதுபட 'ஒற்றைப் பனைமரம் வருகிறது!' என ஒருவர் கூற, மற்றவர் வாயடைத்துப் போய் விடுகின்றனர்."

அநிருத்தர் முகத்தில் ஒரு புன்முறுவல். வானளாவிப் பறக்கும் பழுவூரின் கொடியில் பனைமரம்தான் சின்னம். இரண்டு சகோதரர்களுக்குப் பதிலாக ஒருவர் இன்று வந்து செல்வதை மக்கள் எப்படித் திரித்துச் சொல்கிறார்கள்! நாம் கூட இதைக் கேள்விப்படவில்லையே!

"என் மகள் பாண்டியருடன் சென்று விட்டபடியால்தான் இந்த நிலைமை. என் மூலமாக ராஜ்யத்தின் ரகசியங்கள் எல்லாம் வெளிச் சென்றுவிடும் என எல்லாருக்கும் பயம்."

இந்த முறை அநிருத்தர் சற்றுக் கோபமாகவே சொன்னார், "நீர் பேசுவது அபத்தம். உமது மருமகன் இளவரசனாக இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் அரண்மனையில் இருபது ஆண்டுகள் பவனி வந்தார். அப்போது, அவருக்குத் தெரியாத எந்த விஷயத்தை இப்போது உங்கள் மூலம் தெரிந்து கொள்வார்கள்?"

"அது போகட்டும். என் மகளைத் திரும்பக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவும் உடனடியாக" என்றார் அரசர்.

பிரதமருக்குப் புரிந்தது. பாண்டியர் படையில் தன் மகளை விட்டுவிட்டுத் தஞ்சையில் இவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவளைத் திருப்பி அழைத்து வர மிகவும் விருப்பப்பட்டார். அது அன்பினால் அல்ல, தன் நிலையைப் பத்திரப்படுத்திக் கொள்வதற்காகத்தான் எனப் பிரதமர் கருதினார்.

"போன மாதம் வரை பாண்டிய நாட்டில் பிரான்மலைக் குகையில் இருவருமாக இருந்தார்கள் எனத் துப்பு வந்தது. ஆனால், அவர்கள் தற்சமயம் எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு ஒரு விஷயமும் தெரியாதே!" எனப் பிரதமர் அடக்கத்துடன் கூறியவுடன்- "புளுகுகிறீர்கள், இன்று காலை அவர்கள் என்ன உணவு உண்டார்கள் என்பது கூட உமக்கு நன்றாய்த் தெரியும்" என்றார் அரசர்.

"முயற்சிக்கிறேன். ஆனால், சக்கரவர்த்தியின் உத்தரவு இல்லாமல் படை ஒன்றும் கிளம்ப முடியாது."

பின் சற்று யோசித்து, "பாண்டிய அகதிகள் சிறு சிறு கூட்டமாய்த் தான் எங்கும் செல்கிறார்கள் என்று துப்பு வந்தது. ஓரிருவரை அனுப்பிக் காதும் காதும் வைத்தாற் போல் காரியத்தை முடித்து விடலாம். என் சிஷ்யன் திருமலையப்பனையும் ஒரு வீரனையும்

[illegible]வோம். யாரதற்குப் பொருத்தமானவர்? வந்தியத் தேவரும் [illegible] இல்லையே!" என்று இழுத்தார்.

வந்தியத் தேவரின் பெயரைக் கேட்டவுடன் சின்னப் பழுவேட்டரையர் உடலில் ஒரு சிறிய நடுக்கம் ஏற்பட்டது. ஒரு [illegible] சின்னப் பழுவேட்டரையரின் ஒப்புதலின்றி ஒரு சிறிய [illegible] கூடத் தஞ்சையில் நகராது என்று சொல்லப்படும். ஆனால், [illegible] மீறி ஒரு புயற் காற்றே அடித்து ஓய்ந்து விட்டது. அந்தக் [illegible] முதலில் சாய்ந்தது இந்தப் பழமையான பழுவூர்க் [illegible]. அந்தப் புயலின் பெயர்தான் வந்தியத் தேவன்.

[illegible] தொடர்ந்தார்: "உங்கள் பெண்ணைப் பார்த்தவராய் [illegible]வேண்டும். அவள் கணவராம் பழைய மதுராந்தகரையும் [illegible]வராக இருக்க வேண்டும்" என்று உரக்க யோசித்தார். ஒரு [illegible], "இளம் சம்புவரையனை அனுப்பலாமே?" என்று [illegible]ப் பழுவேட்டரையரின் முகத்தை, அவரது நோக்கம் [illegible] பார்த்தார்.

[illegible] அரசருக்கு அதில் உடன்பாடில்லை. தலையை [illegible], "அந்தப் பிள்ளைக்கு முதிர்ச்சி போதாது!" என்றார் [illegible]ரையர். என்றுமே அவருக்கு மாறனின் மீது நல்ல [illegible]மில்லை.

[illegible] ஐந்து ஆண்டுகளில் முதிர்ச்சி வந்திருக்கும் என [illegible]றேன்" என்று சாதித்தார் அநிருத்தர்.

"[illegible] உங்கள் விருப்பம்."

"[illegible] மீண்டும் ஒரு முறை யோசித்துக் கூறுகிறீரா?" என்று [illegible] இல்லை, சட்டென வந்தது பதில்.

[illegible] வழியாக வந்த எங்கள் ராஜவிஸ்வாசத்தை மக்கள் [illegible]கிறார்கள். யோசிப்பதற்கும் காரணகாரியங்களை [illegible] முடிவு செய்வதற்கும் இப்போது நேரம் இல்லை. செய்ய [illegible] உடனே செய்யவேண்டும். என் மகளைத் திருப்பிக் [illegible] வாருங்கள், உயிருடனோ, இல்லை பிணமாகவோ!" [illegible] கூறினார், சின்னப் பழுவேட்டரையர்.



அத்தியாயம் பதினொன்று
"இவரா காலாந்தகண்டர்?"

சராசரி அமைதியை விட அதிகமாக உத்தம சோழனி ஆட்சிக் காலம் அமைந்திருந்தது. வஞ்சகம் நிறைந்த கொடி எதிரிகள் காணாமல் போயிருந்தார்கள்- பின்னங்கால்கள் நடு வாலைச் சுருட்டிக் கொண்டு பொந்தில் ஒளிந்திருக்கும் நடுக் கொண்ட நரிக் கூட்டம் போல.

ஆனால், அடியானைப் போல உற்றுக் கவனிப்பவருக்கு தெரிந்திருந்த உண்மைகள் இரண்டு.

ஆங்காங்கே சிறிய வன்முறைச் சம்பவங்கள் நடந்துதா வந்தன. அதனால் எதிரிகள் நம் கண்களில் மட்டும்தான் தென் வில்லை. அவர்கள் களத்தை விட்டு இன்னும் அகற்றப்படவில்ல என்பது ஒரு உண்மை. இரண்டாவது, அமைதி என்பது ஒ புயலுக்கு முன்கூட்டி வருவதாகக் கூட இருக்கலாம், என்பது.

மாறனும் அடியானும் குதிரைகளின் மீதேறிச் செல் வேண்டாம் என்றும் நடந்தே செல்லுவோம் என்றும் முடி செய்து பழுவூர் அரண்மனையை நோக்கி நடந்தார்கள். அதி தூரம் இல்லை. செல்வந்தர்களும் அரசர்களும் அவ்வளவா இல்லாதபோது, தஞ்சைக் கோட்டையின் ஒரு பக்கத்தில் பண பதவியும் படைத்தவர்கள் தங்கள் வீடுகளை அமைத்துக் கொ டார்கள். அதனால் அப்போது கட்டப்பட்ட சம்புவராயரி இல்லமும் பழுவூர் அரண்மனையும் பரம்பரைப் பணக்காரர் வாழ்ந்த ஒரே பகுதியில், நடக்கும் தூரத்தில்தான் இருந்தன.

சோழநாடு வளங்கொழிக்கும் பிரதேசம். அதிலும் தலைந தஞ்சையைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. கோட் யின் உள் பகுதி யெங்கும் ஒரே கலகலப்பாய் இருந்தது. மா மாளிகைகள் மற்றும் கூடகோபுரங்களுடன் விளங்கிய தஞ் யின் வீதிகள் எப்போதுமே திருவிழாக் காலத்தைப் போல் ஜ கூட்டம் நிறைந்து விளங்கும். மாடு பூட்டிய வண்டிகளும், குதி கொண்டு இயக்கிய தேர்களும் சாலை எங்கும் நகர்ந்து கொ டிருந்தன. வண்டி வாகனங்களின் சப்தம் ஓயாமல் கே வண்ணமிருந்தது.

வெளியூர்க்காரர்கள் கோட்டைக்குள் வந்தால் முதல் நா முழுவதும் நகரின் வீதிக் காட்சிகளையே பார்த்த வண்ணமிரு பார்கள். அடியான் மாறனுக்கு எடுத்துக் கூறினான். "இந்த ந

செழிப்புடன் திகழ்வதில் ஓர் ஐயமும் இல்லை. ஒவ்வொரு முறையும் திக்விஜயம் செய்து திரும்பும் போது சோழர் படை வெற்றி கொண்ட தேசங்களிலிருந்து ஏராளமான களைக் கொண்டு வந்து இங்கு குவிக்கிறார்கள். நமது மதமும் கலாசாரமும் இப்போது கடல் கடந்து வெகு சென்றிருக்கிறது. அதனால் இந்நகரில் வர்த்தகம் சிறந்தோங்கி கிறது. தூர தூர தேசங்களிலிருந்தெல்லாம் தஞ்சைக்கு ரிகள் வந்த வண்ணமிருக்கிறார்கள். மேலும் பிரசித்தி ஆலயங்கள் தஞ்சையின் சுற்றுப்புறத்தில் இருப்பதால் பற்பல களிலிருந்து யாத்திரீகர்கள் வருவதுண்டு. முக்கியமாகத் தினந் சக்கரவர்த்தியைப் பேட்டி காண்பதற்காகச் சிற்றரசர்கள் களுடன் வந்திருப்பார்கள். சீனம், பாரசீகம் முதலிய தேசங்களிலிருந்து அரசாங்கத் தூதர்கள் வருவார்கள். இதனா தஞ்சை நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருந்து து."

களின் தயவு இருக்கும்போது உற்சாகத்துக்கு என்ன ?" என்று மட்டும் மாறன் முணுமுணுத்தான். உலகெங்கும் புகழைப் பரப்பிக் கொள்ள விரும்பும் எவரும் இந்த வாழ வேண்டும் என அவனுக்குத் தோன்றியது. ஒரு தொடர்பாவது வைத்துக் கொள்ள வேண்டும். இதை விட்டு எங்கோ இருந்து விட்டோமே என்ற ஏமாற்ற மும் இருந்தது.

அதில் மட்டுமல்ல. இந்த வஞ்சகம் நிறைந்த தன்னை ஆசை வார்த்தை காட்டி, யாரால் தன் குடி ளோ, அவரது வேலையாகவே அழைத்து வந்திருக்கிறான். டரையனுக்குச் சதியும் சூழ்ச்சியும் தவிர வேறென்ன ? நம்மை மீண்டும் சிக்க வைக்கப் போகிறான் இவன்.

தானும் தூங்காமல், இந்த வைணவனையும் சமல், அவனை வார்த்தைகளால் வறுத்து எடுத்து "பொய்யும் புனைசுருட்டுமே பழுவேட்டரையரின் என் முதுகில் கத்தியால் குத்திவிட்டு, என் நண்பன் தேவன் அதைச் செய்தான் என நம்ப வைத்தார்கள். டன் நான், அதை நம்பி விட்டேன்."

னுக்குக் கோபம். கடம்பூரில் கரிகாலன் ஆவி தூங்கவிட கொல்லப்பட்டவன் உயிரை எடுத்தான். இந்தக் கடம்பூர் உயிருடன் கொல்கிறான். ஆனால், இருவருக்கும் இரவில் தூங்க விடாமல்தான் கொல்கிறார்கள். பிராணன் போகிறதே' என்று நினைத்தான்.

கடைசியில், ''கூறுவதற்கு மன்னிக்க வேண்டும், இளவரசே ஆனால், நீங்களும் பழுவேட்டரையருக்குப் பல காரியங்களில் உடந்தையாக இருந்திருக்கிறீர்கள்'' என்றான் அடியான்.

மாறனுக்கு அதிர்ச்சி. ஆனால், இந்த வைணவன் கூற்றிலும் உண்மை இருக்கத்தான் செய்தது.

''அது அறியாமையில் செய்தது. எனினும் என்னை அழைத்தது பழுவூர் அரசர் என்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்'' என்று புலம்பினான்.

அவனது தோளின் மீது கையை வைத்து, அடியான், ''உம்மை அழைத்தது அவரல்ல. வேறொருவர். நம் இருவரையும் சென்று பழுவூர் அரசரைப் பார்க்கத்தான் சொல்லியிருக்கிறார் அந்த ஒருவர். எனக்கும் பழுவூருக்கும் ஒத்து வராது என உமக்குத் தெரியாதா? உமக்குத் தீங்கு நேர்ந்தால், அது எனக்கும் நேரு மல்லவா? சென்றுதான் பார்ப்போமே. பிடிக்கவில்லையென்றால் திரும்பி வந்து விடலாம்'' எனத் தெளிவாகக் கூறிய பின்தான் அமைதியானான். தூங்கி விட்டான் அடியான். ஆனால், மாறன் தூங்கினானா என்று தெரியவில்லை.

காலையில் பெரிய பழுவேட்டரையரின் வீட்டைக் கடந்தே இருவரும் சென்றார்கள். அந்த வீடு விடிந்தபின்னும் இருட்டாகத் தான் இருந்தது. செடி கொடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

ஒரு காலத்தில் இந்த மாளிகைதான் அரசரின் இல்லத்திற்கு அடுத்தபடியாக அழகிலும் கம்பீரத்திலும் பெரிதாய் விளங்கியது. அது அந்தஸ்தில் இரண்டாமவர் பல ஆண்டு காலம் வசித்த அரண்மனை அல்லவா? சில சமயங்களில் அரசவையில் நடக்கும் பல விஷயங்கள் இங்குதான் தீர்மானிக்கப்பட்டன. பல வகை அரசியல் நாடகங்களுக்கு இங்குதான் ஒத்திகை பார்க்கப்பட்டது.

அந்த மாளிகையின் நிலா முற்றங்கள், ஆடல் பாடல் அரங்கங்கள், பண்டக சாலைகள், பளிங்கு மண்டபங்கள், ஸ்தூபிக் கலசங்கள், குதிரைக் கொட்டடிகள் லாயங்கள் எல்லாம் இன்று அமைதியாய் இருந்தன.

அந்த வீடு, ''இன்று நாங்கள் வாழ்வில் கீழே போய்விட்டோம். நீங்கள் எல்லாரும் எப்படி வேண்டுமானாலும் கும்மாளம் அடிக்கலாம்!'' என்று தஞ்சை மக்களிடம் சொல்வது போலிருந்தது.

கரிய பெரிய மத்தகஜத்தின் மீதேறித்தான் எப்பொழுதும் பெரிய பழுவேட்டரையர் வருவார். சோழப் பேரரசின் இறை விதிக்கும் அதிகாரிக்கு அந்த உரிமையுண்டு. ஆனால், என்னவோ எல்லாருக் கும் யானை மேல் இருக்கும் பழுவேட்டரையரைப் பார்த்தால்

[illegible] கடா மீது யமதர்மன் வருவது போலத்தான் தோன்றும். [illegible] மனதில் தோன்றியவுடனே, தோன்றிய இடத்தில் [illegible] புதைத்து விடுவார்கள் மக்கள். பொதுமக்கள் நினைத்ததை [illegible] பழுவூர் மன்னன் அறிந்திருந்தால், அவர்களுடைய உயிர் [illegible]டையது அல்ல. ஆனால், மாறன், வந்தியத் தேவன் [illegible]ருக்கு ஒரு காலத்தில் அவரைப் போலத் தானும் ஆக [illegible], உடலில் பல விழுப் புண்களை தாங்க வேண்டும். [illegible]தில் இடம் பிடிக்க வேண்டும் என்று மனோராஜ்யம் [illegible] முக்கியமாக நந்தினி போன்ற ஒரு பூவுலகத் தேவதையின் [illegible] கிடைக்க வேண்டும் என்றும் இருந்தது.

[illegible]ளிகையின் ஒரு பக்கத்தில் தோட்டத்துக்குள் நீண்டிருந்த [illegible] லதா மண்டபத்தை இருவரும் கண்டார்கள். அந்த லதா [illegible] இரண்டு பெரிய பிரம்மாண்டமான மாளிகைகளை [illegible] சேர்க்கும் பாதையைப் போல அமைந்திருந்தது.

[illegible]கரும் இருளும் குடிகொண்டிருந்த இந்த லதா மண்டபம் [illegible] இருந்தபோது எப்படி இருந்தது! அங்குதான் அவள் [illegible]ந்து ஆணுலகின் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்துவாள்.

[illegible]வர்கள் இருவருக்கும் நந்தினியை நன்கு தெரியும். அடி [illegible] அவள் தங்கை. அநாதையாய் வந்தவளை வளர்த்தவன் [illegible]

[illegible] அவள் விரித்த வலையில் ஒரு காலத்தில் விழுந்தவன். [illegible] கோமாளித்தனமாய்த் தோன்றிய பல காரியங்களை அன்று [illegible] செய்த காரணம் அவளுடைய ஆசை வார்த்தைகள்தாம். [illegible] ஒன்று. அவளது மோக வலையில் சிக்கித் தவித்தவர் [illegible]றும் பரம்பரரை பரம்பரையாகக் காட்டி வந்த மன்னர் [illegible] விஸ்வாசத்தையே மறந்தார்கள்.

[illegible] மண்டபத்தைப் பார்த்தபோது மாறனுக்கு நந்தினியின் [illegible] வந்தது. வயதான பெரிய பழுவேட்டரையரை மயக்கிய [illegible] அழகு படமெடுக்கும் நாகத்தின் அழகைப் போன்றது. [illegible] நினைத்த பின் மாறனின் உடம்பில் ஒரு சிலிர்ப்பு [illegible] அவனோடு பேசிப் பழகிய சில சந்தரப்பங்கள் அவன் [illegible] தொடர்படமாக வந்து தோன்றின.

[illegible] கண்களின் அழகும், கண்களைச் சிமிட்டும் தோரணை [illegible] தோன்றும் அப்பாவித்தனமான காட்சியும் எதிரே நின்ற [illegible] அவளது விருப்பங்களை மொத்தத்தில் நிறைவேற்றிய [illegible] மறு காரியங்களைச் செய்ய விடும். நந்தினியைப் பற்றி [illegible]டன் மாறனுக்கு வியர்த்துவிட்டது.

தனது அழகைக் கொண்டு ஒரு பெரிய சாம்ராஜ்யத்தைச் சாய்த்து விடும் திறமையும் வைராக்கியமும் அவளுக்கு இருந்தது. அருகில் இருக்கும் அடியானின் தங்கை அவள், என அறிந்திருந்தான் மாறன். இந்த லதா மண்டபம் அவனுக்கு எப்பேர்ப்பட்ட நினைவுகளைக் கொண்டு வந்திருந்தது என யூகிக்க ஆவல்.

திரும்பி அந்த வைணவனைப் பார்த்தவனுக்குப் புரிந்தது. அவளைப் பற்றித்தான் அவனும் நினைத்து மனதுக்குள் வேதனைப் படுகிறான் என்று. தன் தொண்டையைச் சரிசெய்ய ஒரு கனைப்புக் கனைத்தான் அடியான்.

''பெண் மோகம் என்பது எவ்வளவு மோசமானது என்று அவள் கதையைக் கேட்டால் தெரியும்'' என்றான் அடியான். ''போர்க்களத்தில் வேல் பாய்ந்து சாய்ந்தவரைவிட, வேல் விழிகளினால் புண்பட்டுப் போனவரே அதிகம்.''

உபதேசங்களுக்கோ உவமைகள் நிறைந்த கதைகளுக்கோ மாறன் தயாராக இல்லை. குறுக்கிட்டு, ''எனக்கு ஒன்றுதான் புரியவில்லை. சாம்ராஜ்யங்களை ஆளப்போகும் அழகிய மன்னரின் மகன் இவள் மீது உயிரையே வைத்திருந்தார், ஆனால், அவள் கிழவனைக் கட்டிக் கொண்டு படாத பாடு படுத்தினாள். அதுவே எனக்கு வியப்பை உண்டு பண்ணியது. மதுவருந்திய வண்டைப் போல, மயக்கத்தில் அவரும் அவள் ஆட்டி வைத்ததெற்கெல்லாம் ஆடினாரே?''

அடியான் மெல்லக் கேட்டான் ''பின் வேதாளத்துக்கு வாழ்க்கைப்பட்டு முருங்கை மரத்தில் ஏற மாட்டேன் என்றால் முடிகின்ற காரியமா?''

''ஆனால், அது அழகான வேதாளம் அல்லவா?'' என்றான் மாறன்.

நாடே வியந்த விசித்திரம் அது. தேவலோகக் கன்னிகையை ஒத்த பெண்மணி பெரிய பழுவேட்டரையரை மணந்ததுதான். அவரும் வீரர்தான், ஆணழகராகவும் இருந்திருப்பார்- ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன். அவ்வளவு வயது வித்தியாசம் தம்பதியருக்கு இடையே.

அவளுடைய காண்பதற்கரிதான அழகு அந்தக் கிழவரிடம் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி இருக்க வேண்டும். வயதான காலத்திலும் தன்னை மணக்கச் சம்மதம் தெரிவித்த பெண்ணிடம் தன் இருதயத்தைப் பறிகொடுத்தார்.

அதில் ஒரு தவறும் இல்லை. அவளைக் கண்டவுடன் தனக்கே உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என எவருக்கும் தோன்றும்.

[illegible] கண்ட பெண்ணை, அதுவும் போர்க் காலத்தில் [illegible] நாட்டில் கண்ட பெண்ணை, யார், என்ன என்று கூட [illegible] மணந்து கொண்டார் கிழவர். கடைசியில் இராஜ் [illegible] இரண்டாவது ஸ்தானத்தில் இருப்பவர் மீது கொலைப் பழி [illegible] அவரது இளம் மனைவி பாண்டியர் ஆபத்துதவி [illegible] ஓடிச் சென்றதும் மக்களால் சகித்துக் கொள்ள முடிய [illegible]

[illegible] பேசிக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் வந்தது [illegible] பழுவூர் அரண்மனையின் சமீபத்துக்குக் கொண்டு [illegible] இரவு அடியான் சொன்ன விளக்கங்களைக் கேட்டு [illegible] மாறன் வந்து விட்டான். ஆனாலும் அவனுக்கு இந்தப் [illegible] குலத்தின் மீது வெறுப்புக் குறையவில்லை.

[illegible] பழுவேட்டரையர் குலம் தானே தன் முதுகில் கத்தியால் [illegible] பல காத தூரம் தன்னைத் தூக்கிச் சென்று காப்பாற்றிய [illegible] தேவனைச் சந்தேகித்து விட்டோமே! என்னைப் போன்ற [illegible] வேறு யாரும் இல்லை. என்னைப் போலத் துரதிர்ஷ்ட [illegible] இல்லை!' என மனதுக்குள் புலம்பினான்.

[illegible] ஒன்று, நாட்டு நடப்புகள் முன்போல் இல்லை. [illegible] வீட்டுக்கு வருபவரின் போக்குவரவுகளைக் கவனித்து [illegible] கட்டளை மேலிடத்தில் நிச்சயம் இருக்கும். மாறன் திடீ [illegible] தஞ்சைக்குள் சஞ்சரித்து பழுவேட்டரையரின் மாளிகைக்கு [illegible] அரசாங்கத்தில் முக்கியமானவருக்குத் தெரிந்திருக்கும். [illegible] ஆசியுடனும் அனுமதியுடனும்தான் இது நிறைவேறி [illegible] வேண்டும்.

[illegible] மாளிகையை அணுகிய பின் ஒரு முறை அடியான் [illegible] முகத்தை வைத்துக்கொண்டு திரும்பி மாறனைப் [illegible] சமிக்ஞையினால் எந்த நிலையிலும் பொறுமையைக் [illegible] பிடிக்கும்படி கெஞ்சினான், கண்களால்.

[illegible] நேரே பார்த்தபடி கண்களைக் கூட அசையாமல் [illegible] காவல்காரர்களுக்கிடையே பெரிய கதவு தென்பட்டது. [illegible] கதவின் மேலே பனைமரச் சின்னம் தங்க நிறத்தில் பதிக்கப் [illegible]

[illegible]...'' என்று அடியான் வாசலில் இருந்த தலைப்பாகை [illegible] சேவகனிடம் கூறத் தொடங்கினான்.

[illegible] இளவரசரும், திருமலையப்பரும்தானே! வாருங்கள், [illegible] உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார்.''

உள்ளே நடந்த போது மாறனுக்கு உடம்பெல்லாம் நடுக்க[illegible] 'ஜன்ம சத்துருவைச் சந்திக்கப் போகிறோம். என்ன பேசவு[illegible] முக்கியமாக அவர் என்ன பேசப் போகிறார்?'

பல நாட்களுக்குப் பிறகு அவரைப் பார்த்தான், மாறன். ஆடி[illegible] போய் விட்டான். ஐந்து ஆண்டுகளில் மூப்பது வயதுக்கான மூப்[illegible] வளர்ந்திருந்தது. போன முறை பார்த்தபோது உயர்ந்த சிம்மாசன[illegible] தில் வீற்றிருந்தார், ஆனால், இன்று ஒரு கட்டிலில் நாலு தலை யணைகளை அடுக்கி வைத்துச் சாய்ந்திருந்தார்.

அவர் இந்த நிலைமைக்கு வந்ததன் காரணம் மற்றவர் சொல்[illegible] மாறன் அறிவான். ஆனால், அந்தக் கேள்வி ஞானம் அவனை இந்தக் காட்சிக்குத் தயார்ப்படுத்தவில்லை. அவர் மூத்த மகள் தன் பேச்சை மீறி ஓடிச் சென்றது சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்தில் போதுதான்.

அன்று அரசவையில் அனைவரும் அமர்ந்திருந்தனர். அப்போது தான் சின்னப் பழுவேட்டரையருக்குச் செய்தி வந்தது. அவ[illegible] மகளை ஒரு பெண் வந்து அழைத்துச் சென்று விட்டாள் என்று தன் கைக்குழந்தையுடன் சென்றபடியால் பாண்டியர்களி[illegible] ஆபத்துதவிகளுடன் இருந்த கணவனிடம்தான் சென்றிருப்பா[illegible] என்று யூகித்து இவரும் தொடர்ந்து சென்றார்.

தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி பாண்டியர்கள் வற்புறுத்[illegible] யும் ஒப்புக் கொள்ளாமல் தன் வாளை உருவியவருக்குப் பெரு[illegible] அதிர்ச்சி. கோழையாய் இருந்த தன் மருமகன் அற்புதமாக[illegible] போராடி இவரை ஒரு அருவியின் உச்சியிலிருந்து தள்ளியு[illegible] விட்டான்.

நீரின் ஓரத்தில் பிணம் போல ஒதுங்கியிருந்தார். இந்த இறுதி[illegible] போரை நேரடியாய்க் கண்ட வந்தியத் தேவன் கடவுள் அருளா[illegible] ஒருவேளை பிழைத்திருக்கலாம் பழுவேட்டரையர் என்று போய்[illegible] பார்த்தான். அருவியின் உச்சியிலிருந்து தள்ளப்பட்டுக் கிடந்[illegible] அவரைச் சுய நினைவின்றித் தூக்கி வந்தார்கள். அவரை மீண்டு[illegible] அழைத்து வந்து சிகிச்சை கொடுத்து, யமனின் வாயிலிருந்து மீட்[illegible] வந்தார்கள்.

சின்னப் பழுவேட்டரையரைச் சண்டைக்குப் பின் தூக்[illegible] வந்தபோது, யாருக்கும் அடையாளம்கூடத் தெரியவில்லை. ஏதோ[illegible] கசக்கப்பட்ட துணியைப் போல அவர் உடல் வளைந்து[illegible] சுருண்டும் கிடந்தது. உடலெங்கும் இரத்தக் கறை வேறு.

வைத்தியர்கள் அல்லும் பகலும் அவர் பக்கத்திலிருந்[illegible] காலனுடன் போராடிச் சிகிச்சை செய்து வந்தார்கள். பல நாள்[illegible]

[illegible]யற்ற நிலையில்தான் இருந்தார். மயக்கத்தில் தன் இறந்து [illegible] அண்ணனுடன் பேசினார். மாண்டு போன ஆதித்த [illegible]னிடம் மன்னிப்புக் கேட்டார். சுய நினைவு இல்லாமல் [illegible]ந்தார். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கண் விழித்துப் [illegible]க்கவும் தம் எதிரில் உள்ளவர்களைத் தெரிந்து கொள்ளவும் [illegible]ந்தார்.

[illegible]மேல் பிழைத்துக் கொள்வார் என்றும், ஆனால், இன்னும் [illegible] பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் [illegible] வைத்தியர்கள் சென்றுவிட்டனர். மெல்ல மெல்லத் [illegible] உடலை மட்டும் அல்ல, பதவியையும் அதிகாரத்தையும் சரி [illegible] கொண்டார்.

[illegible]வேட்டரையரைச் சுற்றி இப்போதும் பலர் கைகட்டி வாய் [illegible] நின்றார்கள். ஓலைகளைக் கையில் வைத்துக் கொண்டு [illegible] நின்றார். பதவி ஆசை இவரை இன்னும் விடவில்லை [illegible] மாறன் உணர்ந்தான். பழுவேட்டரையர் தன் நண்பர் [illegible]யும் தன் கூட்டாளிகளையும் தன்னுடன் சேர்த்து [illegible] இழுத்துச் சென்று விட்டார். இந்தக் கஷ்டத்திற் [illegible] காரணமாயிருந்த இவர் மட்டும் தன் பதவியில் [illegible]கொண்டார், பசை போல.

[illegible]ரும் அமர்ந்திருந்தனர். மவுனம் சூழ்ந்தது. எதுவும் பேசாமல் [illegible] காலத்தை நினைத்திருந்தார்கள். சின்னப் பழுவேட்டரை [illegible] காண்பதில் இருவருக்கும் சங்கடம் இருந்தது. பனை மரக் [illegible] கொண்ட இந்த அரச குலத்தினால் இருவருமே வெகுவாகப் [illegible]பட்டிருந்தார்கள்.

[illegible]ான் போல் வளர்க்க எண்ணிய தன் தங்கையைக் [illegible] சென்று தன் வாழ்க்கை லட்சியத்தில் மண்ணைத் தூவியது [illegible]லம்தான் என்று அடியாளுக்கு வருத்தம். மாறனோ தனது [illegible] எதிர்காலத்தைக் கெடுத்ததே இந்தப் பழுவேட்டரை [illegible] வேலைதான் என எண்ணினான்.

[illegible] காலத்தில் அனல் கக்கும் குரலில் அவர் கூறியதை நாடு [illegible]ன் கேட்டுக் கொள்ளும். அவர் பேச்சில் எப்போதும் [illegible]மும் அலட்சியமும் குடி கொண்டிருக்கும். இன்று என்ன [illegible] போகிறார் என்று இருவரும் யோசித்தனர். கட்டளையிடும் [illegible]ணையில் அவர் பேசினால் மாறன் எழுந்து ஊருக்கு [illegible] கட்டிவிடுவான் என்று அடியாளுக்கு நன்கு தெரியும்.

[illegible] "வாருங்கள்!" என்றார். பழுவேட்டரையரது குரல் [illegible]க்குள்ளிருந்து வருவது போல இருந்தது.

❖ ❖ ❖

அத்தியாயம் பன்னிரண்டு

கதவருகே காந்த விழிகள்

கிளர்ச்சியில் தவறான பக்கத்தில் இருப்பவரின் பதவியும் வேலையும் முடிவுக்கு வருவது சரித்திரத்தின் நியதி. ஆனால், சோழ நாட்டில் அப்படி நிகழவில்லை. ஆனால், காலாந்த கண்டர் எனும் சின்னப் பழுவேட்டரையரின் வேலை இப்போது அரச குலத்தின் நல்லெண்ணத்தில் மட்டுமே தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது.

அவரது ஒவ்வொரு செயலையும் மறைந்திருந்த கண்கள் கவனித்துக் கொண்டிருந்ததை அவரால் உணர முடிந்தது. உண்மை தான். பல நூறு ஆண்டு விசுவாசமாய் இருந்த பழுவூர்க் குலம் தடம் புரண்டவுடன் சோழர்களுக்கே அதிர்ச்சி.

ஆனால், இனிமேல் பழுவேட்டரையரின் அரண்மனையின் மேல் பனைமரக் கொடி காற்றில் எப்படிப் பறக்கின்றது என்று கூடக் கூர்ந்து கவனிக்க அரச குலம் முடிவு செய்திருந்தது.

சுந்தர சோழரின் கடைசிக் காலத்தில் உயர் குடியைச் சேர்ந்த பலருக்குச் சரிவு ஏற்பட்டிருந்தாலும், அதில் அதிகம் பாதிக்கப் பட்டிருந்த குடும்பம் பழுவேட்டரையரின் குடும்பமே. மற்றவர் களுக்கெல்லாம் அதிகாரமும் கௌரவமும் குறைந்திருந்தது என்னவோ உண்மை. ஆனால், பதவியைத் தக்க வைத்துக் கொண்ட பழுவேட்டரையரின் கதையோ கேலிக் கூத்தாய்ப் போனது.

அவர்கள் எதிர்த்த ஆதித்த கரிகாலன் இறந்த இடத்தில் இன்று புல் முளைத்து விட்டது. ஆனால், அவர்கள் ஆதரித்த இளவரசோ எதிர் அணியில் இன்று இருந்தார். மொத்தத்தில் இவர்களைக் கோமாளிகளாகச் சித்திரித்து ஊர் மக்கள் நகைத்தனர். ஒரு மனிதனைக் கெட்டவன் என்றோ கோழை என்றோ சொன்னால் கூடப் பொறுத்துக் கொள்வான். ஆனால், மடையன் என்றால் எவருக்கும் கோபம் வரும். தனது மதி நுட்பத்தின் மீது ஒவ்வொருவருக்கும் அவ்வளவு நம்பிக்கை.

இந்தச் சதிகாரக் கூட்டத்தின் தற்காலிகமான வரம்பு மீறல்களை அரச குலம் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொண்டது. அவர்களது குற்ற உணர்வே அவர்களை இப்போது தண்டித்துக் கொண்டிருந்தது.

[illegible] குடும்பங்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவற்றுள் [illegible] தினசரி வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. [illegible] இருந்த இரண்டு குடும்பங்களின் அங்கத்தினரும் இங்கு [illegible] அமர்ந்திருந்தனர்.

[illegible] மாற்றி மாற்றி இருவர் முகத்தையும் பார்த்துக் [illegible], மோனம் தழுவிய நிலையில் மூவரும் இறந்த [illegible] நிகழ்காலத்தை மறந்திருந்தனர்.

[illegible] இருப்புக் கொள்ளவில்லை. இவர்கள் முன் இனி [illegible]. இவர்களுடைய முகத்தை ஏறிட்டும் இனிப் [illegible] கூடாது என்று நினைத்த நாட்கள் உண்டு. இன்று அவர் [illegible] பொறுமையாகக் கேட்கவேண்டிய [illegible] இந்த வைணவன் நம்மை தள்ளி விட்டானே என்று [illegible]

[illegible] தொண்டையைக் கனைத்துத் தான் விஷயத்துக்கு வரப் [illegible] தெரிவித்தார் பழுவேட்டரையர். ஒரு காலத்தில் [illegible] ரையரது பேச்சுத் திறன் கண்டு ஆவேசப் படாத [illegible] இருக்க முடியாது. இவர் போருக்கு முன் பேசியதைக் [illegible] வீரனின் உடலில் ரத்தம் வெறி பிடித்து அக்கினி [illegible] போல ஓடுமாம். ஆனால், இன்று அவர் குரலே 'கரகர' எனக் [illegible] குரல் போல அடி வயிற்றிலிருந்து வந்தது. மலை [illegible] விழுந்தபோது உடலில் அனேகமாக அனைத்து [illegible] களிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தன.

[illegible] சிரமத்துடன் அவர் பேச நேரிட்டும், வார்த்தைகளை [illegible] பேச முற்படவில்லை. "தெள்ளாறு, தஞ்சை, குடமூக்கு, [illegible], திருப்புறம்பயம், வெள்ளூர், தக்கோலம், சேவூர் [illegible] போர்க் களங்களில் நம் முன்னோர்களும் உடன் பிறப்பு [illegible] உயிர் விட்டுத் தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்கள் [illegible] தியாகமும் நிகழ்த்திய அற்புதப் பராக்கிரமச் செயல் [illegible] இந்த சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம். ஆனால், இங்கு [illegible] எதுவும் என் மனதுக்கு உகந்ததாக இல்லை."

[illegible] மாறனின் கண்களை நேராகப் பார்த்து, "உமது [illegible] சிறையில் அடைத்தார்கள். அவர் உள்ளமும் உடலும் [illegible] போயின. இம்மாதிரி அவமானத்தை இதற்கு முன் அவர் [illegible] அடைந்ததில்லை. இத்தனை ஜனங்களுக்கு [illegible] இப்படிப் பேரவமானமா என்று நினைத்து இந்தத் [illegible] நகரப் பக்கமே அவர் வரவில்லை."

ஏதோ பேசுவான் மாறன் என்று பொறுத்தவர் பின்னர் மேலும் தொடர்ந்தார்.

''எங்கள் நிலையும் அப்படித்தான். எனக்கே இந்த வேலை பிடிக்கவில்லை. எங்களைக் கேட்டா இராஜ்ய காரியங்கள் நடக்கின்றன? நானும் இங்கு வெறும் பார்வையாளர்தான். பேருக்குத்தான் பதவியெல்லாம். நூறு போர்க்களங்களில் நமது பக்க பலமாயிருந்து போரிட்டவர்களை, பலமுறை உயிரைப் பொருட்படுத்தாமல் நமக்கு வந்த அபாயத்தைத் தடுத்துக் காத்தவர்களைக் கடிந்து கொள்கிறோம், சந்தேகிக்கிறோம் என்று அவர்கள் நினைக்கவேயில்லை.''

பழுவேட்டரையர் கோபாவேசத்தினால் பேச முடியாமல் தத்தளித்தார். வடுக்கள் நிறைந்த அவர் முகம் அடைந்த கோர சொரூபத்தை வர்ணிக்க முடியாது. சின்னப் பழுவேட்டரையர் கூறிய வார்த்தைகளை ஒன்றுவிடாமல் விழுங்குபவன் போல் கேட்டுக் கொண்டிருந்தான் மாறன். அவரது மனதின் ஆழத்திலிருந்து வந்த வார்த்தைகள் இவை என உணர்ந்தான். ஒரு காலத்தில் இந்தத் தஞ்சைக்குள் காற்றுக்கூடப் பிரவேசிக்க வேண்டுமென்றால் இவரைத்தான் கேட்டு விட்டுப் போகவேண்டும். இவர் நிலையே இன்று இப்படி.

ஆனால், அவன் மனதுக்குள் ஒரு கேள்வி எழுந்தது. 'பின் ஏன் தன் தன்மானத்தை விட்டுவிட்டு இங்கு காலம் கழிக்கிறார்? தன் நாட்டுக்குச் சென்று தன் மனம் போல வாழலாம் அல்லவா?'

அவன் மனதைப் படிக்கும் மாய ஜாலம் அறிந்தவர் போலப் பழுவேட்டரையர் உடனே கூறினார். ''நான் ஏன் மானங்கெட்டு இங்கு இருக்கிறேன் எனத் தெரிய வேண்டுமல்லவா? சொல்கிறேன்.'' பின்பு சம்பந்தம் இல்லாமல் நாட்டின் அரசியல் நிலவரத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.

''பாண்டிய நாட்டின் சுதந்திரத்தைச் செருப்பின் கீழ் வண்டு போல நசுக்கிவிட்டோம். கத்தியேந்தத் தடை மட்டுமல்ல, அங்கு கத்திக் கூடப் பேச முடியாது. இதெல்லாம் பிரதமர் அநிருத்தர் சொல்லும் வர்ணனைகள். ஆனால், அவர் சொல்லும் அளவுக்கு ஏதும் சுகமில்லை. அனைவருக்கும் தெரியும், பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் சிறிய கும்பல்களாகத் திரிந்து கொண்டுதான் இருக்கின்றனர். இரு பிரிவினர்களாய்ச் செயல்பட்டு வரும் அவர்கள் தகுந்த எண்ணிக்கை சேர்ந்தவுடன் அனுகூலமான தருணத்தில் சோழர்களின் ஆட்சிக்குச் சவாலெனக் கருதப்படும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து விடுகிறார்கள். ஆயுதக் கிடங்கில் கொள்ளை,

[illegible] பாலம், வரி வசூலிக்கச் செல்லும் அதிகாரி மீது [illegible] போன்றவை நடந்து கொண்டுதான் இருக்கின்றன.''

[illegible] இப்போது எல்லாம் புரிந்தது. பாண்டிய நாட்டு [illegible] இரு பிரிவுகளையும் தலைமை தாங்கி நடத்திய [illegible] சின்னப் பழுவேட்டரையருக்கு உறவில் நெருக்கமான [illegible] ஒரு குழுவுக்கு அண்ணியான நந்தினியும் மற்றும் ஒரு [illegible] அவரது மருமகனான பழைய மதுராந்தகரும் தலைமை [illegible] செயல்பட்டு வந்தனர்.

[illegible] வாய்ந்த பாண்டியரின் தலைவர் இவரது மருமகன். நாட்டு [illegible] இவர் மூலமாக எதிர்க் கோஷ்டியினரிடம் செல்கின்றன [illegible] அனைவரும் நினைப்பார்கள். அது மட்டும் அல்ல. நாட்டின் [illegible] அதிகாரி என்ற பொறுப்பைக் கொண்டிருந்த சின்னப் [illegible] ட்டரையர் பாண்டியப் போராட்டத்திற்கு நிதி உதவுகிறார் [illegible] குற்றச்சாட்டுகள் கூட எழும்.

[illegible] நேர்மையைச் சந்தேகிக்கும் ஒவ்வொரு கொடுஞ் [illegible] அவரது நெஞ்சை வஜ்ரத்தினால் பிளப்பது போலிருக் [illegible] அல்லவா?' அவனது ஊகத்தை உறுதிப்படுத்துவது போலப் [illegible] ட்டரையர் கூறினார்.

''[illegible] மகளும் அவர்களுடன் இருப்பதுதான் என் கஷ்டமே. [illegible] அங்கிருக்கும்வரை ஒருவரும் என்னை இங்கே நம்ப [illegible] மாட்டார்கள். பழைய நிலையில் என் உடல் இருந்தால் யாரிடமும் [illegible] கேட்கவேமாட்டேன். என் வாளுக்குப் பதில் சொல்ல [illegible] யமலோகம் போனவர் ஏராளம். ஆனால், இன்று அது [illegible] எழுந்து உட்காரக்கூட எனக்கு உதவி தேவைப்படு [illegible]'' என்று கூறும் போது வெகுவாக உணர்ச்சி வசப்பட்டார்.

''[illegible]! உன்னைச் சீராட்டி வளர்த்தது இதற்காகவா? [illegible] பெருங்குலத்துக்கு உன்னால் இத்தகைய அபகீர்த்தியா [illegible] வேண்டும்? சோழப் பேரரசுக்கு இத்தகைய பெருந்தீங்கு [illegible] ஏற்பட வேண்டும்?'' என்று புலம்பினார்.

[illegible] நிலையைக் கண்டு இருவரும் சிறிது நேரம் திகைத்து [illegible] டனர். ஆனால், அவர் நிறுத்துவதாக இல்லை. ''ஐயோ! [illegible] என்னைப் பற்றி என்ன நினைக்கும்?'' என்று சின்னப் [illegible] ட்டரையர் தலையில் அடித்துக் கொண்டார். வைரம் [illegible] அந்த வீரக் கிழவர் அவ்விதம் மனம் கலங்கிப் புலம்பக் [illegible] மாறனுக்கே ஒன்றும் புரியவில்லை.

[illegible] தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திப் பெரியவர் தொடர்ந் [illegible] ''[illegible] அனுப்ப அரசர் ஒப்புக்கொள்ள மாட்டார்.

ஒரிருவரை அனுப்பி வேலையை முடித்துக் கொள்ளலாம் என[illegible] பிரதமர் அபிப்பிராயப்படுகிறார். அவனை மட்டும் கொண்டு வந்[illegible] இங்கு சேர்த்து விடுங்கள். ராஜாங்கப் பொறுப்பையும் விட்டு [illegible] சொந்த ஊரோடு இருந்து விட எண்ணுகிறேன். இல்லை என்றா[illegible] அவனைக் கொன்றுவிடுங்கள். பெற்றவன் நான் சொல்கிறேன்[illegible] அதற்குத் தூர்கா தேவியே சம்மதம் தருவாள்."

வரும் போதே சந்தேகத்துடன் வந்த மாறனுக்கு எதிலும் ஒ[illegible] கள்ளத்தனம் தெரிந்தது. 'ஏதோ துர்நோக்கத்துடன்தான் இ[illegible] நாடகம் போடுகிறாரோ என்னவோ? பெரும் நடிகர் இவர்!' என்[illegible] நினைத்தான்.

மாறன் சத்தம் ஏதும் செய்யாமல் எழ நினைத்தான். ஐந்[illegible] ஆண்டு காலமாகத் தன் குலமும் குடும்பமும் பட்ட கஷ்டங்க[illegible] எவ்வளவு! தஞ்சை வந்தபோது குதிரையிலிருந்து திரும்பிப் பார்[illegible] கருகிய கோட்டையே அவனுக்கு மனதில் வந்தது. ஆனாலும் த[illegible] கோபத்தை அடக்கிக் கொண்டு இதுவரை அமர்ந்திருந்தான்.

வந்த போது பழுவேட்டரையரைப் பார்த்துக் கத்தி[illegible] வேண்டும் என நினைத்துத் தான் அறையினுள் நுழைந்தா[illegible] எப்படியாவது இந்தக் கிழவரை வார்த்தைகளால் நோகடித்துவி[illegible] வேண்டும் என்றும் நினைத்திருந்தான். ஆனால், அவரைக் கண்[illegible] வுடன், அவர் புலம்புவதைக் கேட்டவுடன், அது சாத்தியப்ப[illegible] வில்லை. ஏதோ பழைய ஞாபகங்களின் தோஷம். அவ்வள[illegible] பெரிய மனிதர் வாழ்வில் இவ்வளவு தாழ்ந்து விட்டாரா?

அதற்காக மௌனமாகவும் இருக்க எண்ணமில்லை. அதனா[illegible] மெதுவான குரலில் அழுத்தமாகக் கூறினான். "அந்த மாதிரி[illegible] பொறுப்பை எல்லாம் நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயில்லை[illegible] நாடெங்கும் சதிகள் நடந்து வருகின்றன. அதில் மீண்டும் ஒ[illegible] முறை நான் மாட்டிக் கொள்வதாக இல்லை. யார் யாருக்காகவே[illegible] போராடிச் சம்புவராயர் குலம் பலியானது. அம்மாதிரி மீண்டு[illegible] நேர்வதை நான் விரும்பவில்லை. மறுபடியும் நாங்கள் இம்மாதிரி[illegible] காரியங்களில் பிரவேசிக்காதபடி இருக்க முயல்கிறோம். இப்போ[illegible] வந்து எங்களை மாட்டவைக்கப் பார்க்கிறீர்கள்" என்றான்.

முடியாது என்று மூஞ்சியில் அடித்தாற்போல் அவன் கூறி[illegible] வுடன், நிசப்தம் அறை யெங்கும் பரவியது. அடியானுக்கு ஒ[illegible] குழப்பம். இந்த மாதிரித் தன் மனதுக்குப் பிடித்த வேலை ப[illegible] ஆண்டு காலம் கழித்து இப்போதுதான் வருகிறது. ஆனால், மாற[illegible] ஒத்துக் கொள்ள மாட்டான் போலிருக்கிறதே. நம்மைத் தனியா[illegible] வும் அனுப்ப மாட்டார்கள். இந்த அசட்டுப் பிள்ளையி[illegible]

[illegible]னால் இது விட்டுப் போகக் கூடாது. இதுவே வந்தியத்[illegible] என்றால் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து ஒப்புதல் தெரிவித்[illegible].

[illegible]னின் வார்த்தைகள் காலாந்த கண்டரின் இருதயத்தில் [illegible] அம்புகள் பாய்ந்தாற் போலிருந்தன. வெறுப்பை அவர் முகம் [illegible]து. நெற்றியில் வேர்வைத் துளிகள் அரும்பி நின்றன. [illegible]லாம் சின்னப் பழுவேட்டரையர் மாறனின் வார்த்தை[illegible] பொருட்படுத்திக் கேட்கக்கூட விரும்பியிருக்க மாட்டார். [illegible] எதிர்த்து எவர் பேசியிருந்தாலும் வாளை ஓங்கி ஒரே [illegible] பின்பு பேசியவனைத் தூக்கி வெட்டாற்று முதலை [illegible] போட்டிருப்பார். முதலை வாயில் சென்றது திரும்பி[illegible]?

[illegible], அவருக்கும் இன்று காரியம் நடக்க வேண்டும் என்று [illegible] 'சக்கரவர்த்தியின் கட்டளை வந்தால் செய்வீரா, அதையும் [illegible]வீரா?'' என்றார்.

"[illegible] சொன்னால் என்ன?'' ஆவேசம் வந்தவன் போலப் [illegible]லை. மெதுவாகப் பேசினான் மாறனும். "சோழருக்கும் [illegible] என்ன பந்தம்? பழுவூருக்கும் எனக்கும் என்ன தொடர்பு? [illegible] சிரிக்கும் போது சிரித்து, வேலை செய்யும் போது நானும் [illegible], போராடும் போது நானும் போராடினேன். கடைசியில் [illegible]து மட்டும் என்னைத் தனியாய் அழ விட்டு வேடிக்கை [illegible]கள். நான் பாட்டுக்கு என் வேலையைச் செய்து [illegible]ந்தேன். என்னை அழைத்து வந்து எனக்கு முழுதுமாய்ப் [illegible] விஷயங்களில் சம்பந்தப்படுத்தி அலைக்கழிக்கப் [illegible]கள்'' என்றான்.

[illegible]னின் இப்படிப்பட்ட பதிலைப் பழுவேட்டரையர் எதிர் [illegible]வில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் பலரும் [illegible] அடங்கி விடுவார்கள். ஆனால், இவன் அப்படியில்லை. [illegible]களில் மட்டும் அதிசயம் இல்லை. அவனது பேச்சுத் [illegible]யும் ஆழ்ந்து சிந்திக்கும் திறனையும் கண்டு [illegible] அவன் வார்த்தைகளுக்கு எதிரொலியாக ஒரு [illegible] அறிகுறியும் கூட அவன் முகம் காட்டவில்லையே. [illegible] கூறியது உண்மைதான். இவன் இந்த ஐந்து ஆண்டுகளில் [illegible]. முதிர்ச்சி வந்து விட்டது.

[illegible] தட்டில் நுழைந்தால் அவன் கோலத்தில் நுழைகிறான். [illegible] இவனை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று எனக்குத் [illegible]' என்று மனதுக்குள் ஒரு முடிவுக்கு வந்தார். மாறனது

[illegible]

மனதை நன்கு அறிய முடிந்தது. அவனிடம் சற்று விட்டுக் கொடுத்துப் பேசினால்தான் காரியம் கை கூடும்.

"உன்னைக் கத்தியினால் முதுகில் குத்த ஏற்பாடு செய்தார் என் அண்ணன். கடைசியாக ஒரு கத்திக் குத்தில்தான் அவர் இறந்தார். அவருக்கு உடந்தையாக இருந்த நானோ மலை உச்சியிலிருந்து என் சொந்த மருமகனால் தள்ளப்பட்டேன். துர்கா பரமேஸ்வரி நமக்கு ஊதியம் கொடுப்பாள், தம்பி. தகுந்த ஊதியமாய்த்தான் கொடுப்பாள்!" என்றார்.

ஒரு நொடி மாறன் அயர்ந்து போனான். அவனது மனதை இவரால் ஏடு போலப் படிக்க முடிகிறது. ஒரு முறுவல் அவன் இதழோரமாகத் தோன்றியது. தன்னை ஒரு காலத்தில் மக்குப் பிள்ளை என் வாயாரத் திட்டியவர் இவர். இன்று ஒரு வீரனாய்ப் பாவித்துப் பேசுகிறார்.

பழுவேட்டரையர் கூறியதில் அணுவளவேனும் சந்தேகம் இருப்பது போல அடியானுக்கும் தோன்றவில்லை. இந்த ஐந்து ஆண்டுகள்தான் எல்லாரையும் எப்படி மாற்றிவிட்டன!

மாறனது மனம் சற்று இளகியதை உணர்ந்த அடியான் தன் கண்ணை மூடித் தெரிந்த சுலோகத்தை எல்லாம் முணுமுணுத்தான். அவனுக்கு இந்த வேலையில் அவ்வளவு ஆர்வம் வந்துவிட்டது. ஒரு யுகம் போல நகர்ந்த ஓரிரு நிமிடங்கள் யாரும் பேசவில்லை. அந்த அமைதியில் மாறன் மட்டும் கவனித்த ஒரு சிறிய விஷயம் நடந்தது.

மோனம் தழுவிய சூழலில் மற்ற உணர்வுகள் அதிகரித்து மாறனுக்குச் செயல்பட்டன. அந்த இடத்துக்குச் சம்பந்தமில்லாமல் மல்லிகையின் வாசம் காற்றின் மேல் அலையாக வந்து தன்னைத் தாக்கியதை உணர்ந்த மாறன் திடுதிப்பெனத் தலை நிமிர்ந்தான்.

ஓரிரு நொடிகளுக்கு முன் மாறனுடைய மனதில் ஒரு சந்தேகம் ஜனித்தது. இரு கண்கள் அவனை உற்றுக் கவனிப்பதாகத் தோன்றியது. அந்த இரு கண்கள் எவ்வளவு அழகாக இருந்தன என்று அவனுக்கு அப்போது தெரியவில்லை.

வாசம் வந்த திசை உள் அறைக்குச் செல்லும் கதவாகத்தான் இருக்க வேண்டும் என யூகித்து அந்தத் திசையில் பார்த்தான். ஒருவரும் தெரியவில்லை. பிரமையாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்த மாறன் பழுவேட்டரையரைப் பார்த்து, "இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்?" என்றான்.

[illegible] பாவியை மீண்டும் இங்கு கொண்டு வர வேண்டும். [illegible] பிணமாகவோ! அவள் ஈமச் சடங்குக்கு ஏற்பாடு [illegible] செய்து வைக்கிறேன்" என்று கண்ணில் கனல் எழும்படி [illegible]

[illegible] உள்ளே வளையல் குலுங்கும் சப்தம் மாறனுக்கு [illegible] நன்றாய்க் கேட்டது. அவருடைய கொடுஞ் சொற் [illegible] யாருக்கோ தூக்கி வாரிப் போட்டது போல. அந்தச் [illegible] அந்தக் கதவின் பின் புறத்திலிருந்துதான். யாரோ [illegible] தலையில் மல்லிகையும் கையில் வளையலும் அணிந்து [illegible] இவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தாள் [illegible] ஊர்ஜிதம் ஆனது.

[illegible] எழுந்தான். நன்றாய்ச் சிந்திப்பது போல இங்கும் [illegible] நடந்தான். அடியான் மற்றும் பழுவேட்டரையரின் [illegible] அவனையே தொடர்ந்தன. மாறன் நன்றாய் யோசித்துக் [illegible] இருந்தான், இன்னும் எவ்வளவு தூரம் நடந்தால் [illegible] கதவின் மறைவில் ஒளிந்திருந்த பெண்ணை நன்றாய்ப் [illegible] முடியும் என்று.

[illegible] திடீரெனத் திரும்பிய மாறனுக்குத் தெரிந்தது. [illegible] ஓரத்தில் ஒரு இளம் பெண் நின்று கண் கொட்டாமல் [illegible] பார்த்துக் கொண்டிருந்தாள். அருகிலிருந்த விளக்கின் [illegible] அவள் முகம் ஜொலித்தது. ஆனால், முக்கியமாக [illegible] கதவை விட்டு எட்டிப் பார்த்தது போல, அவளுடைய [illegible] ஓரங்களில் இரு கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்ததை [illegible] கவனித்தான். அவன் மனதில் ஆயிரமாயிரம் பட்டாம் [illegible] பறக்கத்தொடங்கின.

[illegible] சந்திப்பு நிகழ்ந்த நாளின் விடியலிலிருந்து பழுவேட்டரை [illegible] வேதான் இருந்தார். என்ன காரணம் என்று யாரா [illegible] முடியவில்லை என்றாலும் யாரோ வரப் போவதைத் [illegible] கொண்டாள் அவரது மகள் லோகா.

[illegible] அருகே வந்து நின்ற மகளை முகம் உயர்த்திப் பார்த்தார் [illegible] ரையர். "என்ன?" என்றார்.

[illegible] வருகிறார்களா, அப்பா?"

[illegible] உன் அக்கா விஷயமாக இருவரை வரச் சொல்லியிருக் [illegible] என்றார். எதையும் ஐந்து ஆண்டுகளாக அவளிடம் அவர் [illegible] வில்லை.

[illegible] மகள் லோகா முகத்தில் முதலில் ஒரு சந்தோஷமும், பின் [illegible] கவலையும் கலந்து தாண்டவமாடின. மென்மையான

குரலில், "அக்காவை மீண்டும் அழைத்து வரச் சொல்லுவீர்களா, அப்பா?" என்று வினவினாள்.

அவளுக்குத் தெரியும், தன் தமக்கையின் மீது தந்தைக்குப் பிரியம் இப்போது சுத்தமாக இல்லை என்று. ஆனால், தன் அன்பை மட்டும் அவளால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. உடலில் ஓடுவது ஒரே ரத்தம்தானே.

கனல் கக்கும் கண்களைக் கொண்டு அவளை முறைத்துப் பார்த்த பழுவேட்டரையர், "அவளைக் கொன்றுவிட்டு வரச் சொல்லுவேன்" என்றார்.

"இது மாதிரி ஒரு தந்தையை இதுவரை நான் பார்த்ததே யில்லை!" என்று மனதுக்குள் கூறிவிட்டு, அழுதுகொண்டே உள்ளே சென்று விட்டாள் லோகா.

இப்போது அப்பா சொன்ன அந்த இருவரும் வந்துவிட்டனர். அப்பாவும் வெகு ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

மறுமுறை கதவின் வழியாக எட்டிப் பார்த்தாள் லோகா. வெளி யறையில் அமர்ந்திருந்த இருவரில் ஒருவன் முதுமை எய்தியவன். வைணவ பாஷாண்டங்களை உடலெங்கும் பூசிய அவனால் கொலை ஒன்றும் செய்ய முடியாது என்று முடிவுக்கு வந்தாள்.

மற்றவன்தான் தன் தமக்கையைக் கொல்ல வந்தவனாக இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள். அவன் இதுவரை தரையை பார்த்துத் தலை குனிந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். இவளுக்குக் கேட்காத மெல்லிய குரலில் பேசினான். திடீரென எழுந்து நடந்து வந்த இளைஞன் திரும்பி இவள் நிற்கும் திசையில் நேராகப் பார்த்துவிட்டான்.

அவனது பார்வையில் சிக்கியதை உணர்ந்து லோகா குழம்பிப் போய் அங்கிருந்து நகர்ந்தாள். அவளது மனத்தில் ஒன்று மட்டும் உறுதியாய்த் தோன்றியது. பார்ப்பதற்கு அந்த இளைஞன் நிச்சய மாக ஒரு கொலைகாரன் போல் இல்லை!

❖ ❖ ❖

அத்தியாயம் பதின்மூன்று

மீண்டும் ஒரு மல்லிகை வாசம்

இ[illegible] சம்புவராயனின் பார்வையில் அகப்பட்ட அந்தப் [illegible] மாளிகைத்தில் உள்ளே ஓடினாள். அந்த அவசரத்திலும் [illegible] போலத்தான் ஓடினாள் என்பதைப் பார்வையில் சிறைப் [illegible] மாறன் அதைப் பார்த்துப் பரவசப்பட்டான்.

[illegible] சென்று விட்டாலும், அவள் விட்டுச் சென்ற அந்த [illegible]ங்கும் நிறைந்திருந்த மலர்களின் நறுமணத்தை அவன் [illegible]தும் நன்கு உணர்ந்தான். 'என்ன வாசம்! அப்பப்பா!'

[illegible]ல் ஏறித் தலையைக் கிறுகிறுக்க அடிக்கிறதே! அவள் [illegible] பின்னும் அவ்விடத்தில் அலைமோதி, அவளது போகனை [illegible] போல அந்த நறுமணமும் போதை கொள்ளச் செய்கிறதே!'

[illegible] இருப்பதை விட ஒரு மலருக்குப் பெண்ணின் [illegible] இருக்கும்போது வாசம் அதிகமாக இருக்கக் கூடுமோ? [illegible] நின்ற இடத்தை மீண்டும் மாறன் பார்த்தான். ஒரு [illegible]தான் அவளைப் பார்த்திருந்தான். ஆனாலும் அந்தக் காட்சி [illegible] வழியே மனதில் பதிந்திருந்தது.

[illegible] மனதில் மீண்டும் தொடர்காட்சியாக ஓடியது. அவன் [illegible] பார்த்தது. கதவின் பக்கச் சட்டத்தின் மேல் ஒரு பெண் [illegible] சாய்ந்திருந்தாள். ஒய்யாரம் எனக் கூற முடியாது. [illegible] முகத்தில் இருந்த சோகத்தினால் அவள் சோர்ந்து போய் [illegible] கதவில் சாய்ந்தாற்போலத்தான் இருந்தது.

[illegible] அந்த உள்ளறையைக் கற்பனை செய்ய முடிந்தது. [illegible] சற்றுத் தூரத்தில் தங்க விளக்கில் ஒளிர்ந்த தீபச்சுடர் [illegible] ஒளியைப் பரப்பியது. அந்த விளக்கின் வெளிச்சத்தில் தேவ [illegible] ஒரு பெண் போல உருவெடுத்து அந்த இடத்தில் ஒரு [illegible] முன் வரை நின்றிருந்தாள். அப்படிதான் இருக்க வேண்டும். [illegible]னிடனின் பார்வை அவளது உடலை நோக அடித்துவிடும் [illegible] மறைந்தாளோ?

[illegible] அந்தப் பெண்ணை அள்ளி அணைத்து ஆறுதல் கூற [illegible] போலிருக்கிறதே. அவள் சோகத்தை என்னவென்று [illegible] அதற்குத் தக்க மருந்தளிக்க வேண்டுமே!' என அவன் [illegible] அடித்தது.

ஆனால், இது என்ன? திரும்பிக் கடம்பூருக்குப் போய்விடலாம் என்று நினைக்கும்போது, இந்தப் புது உணர்வு அவனைக் கட்டிப் போடுகிறதே என்றும் மனதுக்குள் குழம்பினான் மாறன்.

கிளம்ப வேண்டும் என நினைக்கும்போது, அதற்கு நேர்மாறாக இங்கேயே வாழ்நாள் முழுவதும் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வருவது எப்படி? இந்த அனுபவம் மிகவும் விசித்திரமாக இருந்தது. இதை நல்ல சகுனம் என எடுத்துக் கொள்வதா? இல்லை..?

'சரி, இந்த வேலையை ஒப்புக் கொள்வோம்' என முடிவு கட்டினான். ஒரு வினாடி பார்த்த பெண்ணுக்காக அதை ஒப்புக் கொள்கிறான் என அவன் மனம் சொல்ல நினைத்தாலும், அதை மூடி மறைக்க ஆயிரமாயிரம் இதர காரணங்கள் தோன்றின.

அடியான் மாறனின் முகத்தை ஒரு ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். சன்னியாசிக்குத் தெரியுமா, இந்தக் காமதேவனின் சாகசங்கள்! மாறனது கண்களும் இப்போது அடியானை நோக்கின. அவனைப் பார்த்து லேசாகத் தலையசைத்தான்.

உடனே தாமதிக்காமல், ''தங்களுடைய கட்டளையை எங்களால் இயன்றவரை நிறைவேற்றி வைக்கிறோம். கட்டளையிடுங்கள், அரசே'' என்றான் வைணவன். அதற்குள் இந்த அவசரம் பிடித்த கடம்பூர்க்காரன் மனதை மாற்றிக் கொண்டு விட்டால் பின் கஷ்டம் என்று.

இப்படி அடியான் கூறியபோது உள்ளேயிருந்து மீண்டும் வளையல் சப்தம். சட்டென மாறன் அந்தக் திசையில் திரும்பினான். ஆனால், இந்த முறை அந்த தேவதையின் தரிசனம் கிட்டவில்லை.

ஆனால், அந்த வளையோசை பழுவேட்டரையரின் செவிகளில் விழவே இல்லை. முதல் முறையாகப் பழுவேட்டரையர் சிரித்தார். கோணலாயிருந்த அவர் முகத்தில் அந்தப் புன்னகை பயமூட்டுவதாக இருந்தது.

''எதற்கெடுத்தாலும், 'தம்பி காலாந்தகா, எப்படியிருந்தாலும் நான் ஒருவன் இருக்கும்போது உனக்கு என்ன கவலை' என்று கூறிக்கொண்டிருப்பார் அண்ணன். அவர் இப்போது இல்லை என்பது எனக்கு ஒரு கை இல்லாதது போலிருக்கிறது. ஆனால், இப்போது அந்தக் குறை எனக்கு இல்லை!'' என்றார்.

மாறனுக்கு விதியின் விளையாடல்கள் விந்தையானவை எனத் தோன்றியது. யாரால் அவன் இந்த நிலையில் தள்ளப்பட்டானோ அவரது மறுவாழ்வுக்குத் தன் சேவை தேவைப்பட்டது.

[illegible]வேட்டரையர் தொடர்ந்தார், ''இந்த வாரக் கடைசியில் [illegible]யிலிருந்து படகின் மூலம், அவனும் அவனது கணவரும் [illegible]த் தப்பிச் செல்ல முடிவெடுத்துள்ளனர். இதை உறுதிப் [illegible]தோர் பிரதமர். அதனால் நிச்சயமாகச் சரியாகத்தான் [illegible] அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்''

[illegible] சிறிய இடைவேளைக்குப் பின் தொடர்ந்தார். ''இப்படி [illegible] நேரும் என நான் நினைக்கவில்லை. என் மருமகன் சோழை [illegible]ந்தேன். எங்காவது குகையில் வாழ்க்கையைக் கழித்து [illegible], பிணி அல்லது விலங்கினால் மடிந்து போவான் என்று [illegible] நினைத்தேன். ஆனால், இன்று பாண்டிய நாட்டில் அவன் [illegible] தலைவனாம். மதுரையை மீண்டும் கைப்பற்ற நினைக்கும் [illegible]களை வழி நடத்திச் செல்கிறானாம். என்னால் நம்ப [illegible]வில்லை. பின் ஏன் நாடு விட்டு நாடு செல்கிறானாம்?''

ஆனால், ஒன்று. அவனைத் தடுத்து நிறுத்துவது எனக்கு மட்டும் [illegible] சேவையல்ல. அது இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்குச் [illegible] சேவை கூட. எனினும் இதை எனது தனிப்பட்ட வேலை [illegible] கருதுவதால் இதற்கு ஏற்படும் செலவுகளை நானே [illegible] நியாயம்'' என்று கூறிப் பழுவேட்டரையர் இருக்கை[illegible] இருந்து எழுந்தார். அந்த வீராதி வீரர் தட்டுத் தடுமாறி [illegible]ாகக் கைத்தடியுடன் உள்ளே நடக்கலானார். இருவரும் [illegible]போது பழுவேட்டரையர் அமர்ந்திருந்தபடியால் அவரது [illegible] தென்படவில்லை. இப்போது அதைக் கண்டவுடன் [illegible] மனம் வேதனைப் பட்டது.

[illegible] பார்க்கவே பாவமாய் இருந்தது. அவர் மலை [illegible]ருந்து மட்டும் தள்ளப்படவில்லை. அப்படி ஒரு உயர்ந்த [illegible]லிருந்தும் கீழே தள்ளப்பட்டிருந்தார். அவரைச் சுற்றி [illegible] செயல்கள் அவர் போன்ற திடமான நெஞ்சுடையவரையே [illegible] நிண்டாடச் செய்துவிட்டன.

[illegible] இழப்புகளுக்கு ஈடாகத்தான் இவரும் நஷ்டப்பட்டிருக்[illegible]'' என நினைத்தான் மாறன்.

[illegible]ரியர் உள்ளே சென்றவுடன், அக்கம் பக்கத்தில் பார்த்து [illegible] அடியான் பேசினான். ''இவரது மகள் அந்தக் கோஷ்டியில் [illegible]வரை இவரை யாரும் நம்ப மாட்டார்கள். இவரது [illegible]யோ இங்கு இருந்தவரை சிவ பக்தியில் மூழ்கி [illegible]த்தைப் பற்றி மட்டுமே சிந்தித்திருந்தான். ஆனால், [illegible]யரின் குலக் கொழுந்து தாம் எனத் தெரிய வந்தவுடன் [illegible]யாக மாறிவிட்டான்.''

''விந்தையைப் பார்த்தாயா, மாறா? வேங்கைகளின் நடுவே சாதுவாக இருந்தவர் இன்று கயல்களுக்கு நடுவே வேங்கையாக மாறிவிட்டார். அந்த மாற்றத்திற்கு முழுக் காரணம் ரவிதாசன் என்னும் ஒரு மாயாவிதான். உண்மையான மந்திரங்கள் அவனுக்குத் தெரியுமா என்பது எனக்கு வெகு நாட்களாக ஐயம்தான். ஆனால், இவர் மாப்பிள்ளையை அப்படி மாற்றியது மந்திரமாகத்தான் இருக்கும்.''

தங்களுக்குத் தேவையான சில விஷயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டு இதர வேலைகளையும் முடித்துவிட்டு இருவருமாகப் பழுவூர் மாளிகையை விட்டு வெளிவந்தார்கள்.

''நீங்கள் முதலில் செல்லுங்கள். நான் காற்றாடச் சற்று நேரம் கழித்துவிட்டு வந்து சேர்கிறேன்'' என்று அடியானைக் கழற்றி விட்டான், மாறன்.

''சீக்கிரம் வாருங்கள், காலையில் சூரிய உதயத்தில் கிளம்புகிறோம்.''

அவனுக்குத் தனிமை தேவை என்று முடிவு கட்டிய வைணவனும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் சென்றுவிட்டான். அவனை இந்த வேலைக்கு ஒப்புக்கொள்ள வைத்ததே எவ்வளவு பெரிய வேலை! பழுவேட்டரையர் கொடுத்த காசுகளை மட்டும் தன்னுடைய ஆடையில் மறைத்து வைத்துக் கொண்டு சம்புவரையரின் மாளிகையை நோக்கிச் சென்றான் அடியான்.

மாறன் விரைவாக நடக்கவில்லை. சாலையில் காலையிலிருந்த ஜன சமுத்திரம் இப்போது இல்லை. ஆயிரமாயிரம் ஜனங்களின் கண்டங்களிலிருந்து எழுந்த பேச்சுக் குரல்கள் இப்போது இல்லை. தஞ்சையே உறங்கச் சென்று விட்டது மாறனுக்குச் சௌகரியமாகத்தான் இருந்தது. தங்கு தடையின்றி தன்னுடைய எண்ண ஓட்டத்தை அவனால் செலுத்த முடிந்தது. வேலையை ஒப்புக் கொண்டதில் இப்போது மாறன் மனதில் உருத் தெரியாத ஒரு பயம்.

அவன் மனதில் முன் இல்லாத சந்தேகங்கள் எல்லாம் தோன்றி அவனைத் திண்டாடச் செய்தன. அதுவும் திடீரென ஒப்புக் கொண்டது தவறென இப்போது தோன்றியது. யோசிக்க நேரம் கேட்டிருக்கலாம்.

'ஏற்கெனவே நம் வாழ்க்கையை நாமேதான் நரகமாக்கிக் கொண்டோம். ஊர் சிரிக்கும்படி மீண்டும் நாமே நம்மை வைத்துக் கொள்வதா?'

[illegible] உளைச்சலில் அவன் சோர்ந்து போயிருப்பான். [illegible] தூரத்தில் கால்களாவது வலித்திருக்கும். அப்படி [illegible] இல்லை. அந்தச் சந்தேகங்களுக்கும் மேல் ஓர் உணர்வு [illegible] பரவசப்படுத்தியது. அது அந்தப் பெண்ணின் முகம் [illegible] பரபரப்பு. தேவலோக மாதருக்கு இணையான அந்த [illegible] திரம்பையும் திலோத்தமையும் பார்த்துப் பொறாமைப் [illegible] சௌந்தர்யம்.

[illegible] முறைதான் அவள் முகம் பார்த்தோம். அவள் எதற்காகத் [illegible] இருந்தாள்? ஆனாலும் அந்த சோகத்திலும் எவ்வளவு [illegible]'' என்று பலதரப்பட்ட எண்ணங்கள். பிறகு முக்கியமான [illegible] வந்தது.

[illegible] மீண்டும் ஒரு முறை பார்ப்போமா? இல்லை [illegible] நமக்குத் தான் எவ்வளவு இழப்பு!' என யோசித்து [illegible] தனது விருந்தினர் மாளிகை கண்ணுக்குத் [illegible] தனது மாளிகைக்குத் திரும்பியபோது நள்ளிரவு கழித்து [illegible] ஜாமம் ஆரம்பித்திருந்தது. உள்ளே நுழைந்தவுடன், [illegible] பிரமையா? அந்த மல்லிகை வாசம் இங்கு எப்படி [illegible]'' என்று நினைத்தான்.

[illegible], நிச்சயமாக இது பிரமையில்லை.' உள் வாசலை [illegible]போது மீண்டும் மல்லிகை வாசம் வந்தது. வேறு [illegible] இல்லை. பழுவூர் மாளிகையில் சுவாசித்த அதே [illegible] கொண்ட மல்லிகைதான் இது.

[illegible] விரைந்தான் மாறன். குறட்டைச் சப்தத்தை வைத்தே [illegible] எங்கு தூங்குகிறான் என்று கண்டுபிடித்து விட்டான். [illegible] போய் எழுப்பினான்.

[illegible]பென எழுந்த அடியானுக்கு ஒன்றும் புரியவில்லை. [illegible] வந்து விட்டதா? கிளம்பலாமா?'' என்றான்.

''[illegible] யார் வந்தது?'' மாறன் பதற்றத்துடன் கேட்டான்.

[illegible] யார் வந்தது எனக் கேட்கத் தோன்றியவன், தூக்கம் [illegible] பின், தன் நிலையை இப்போது பூரணமாக உணர்ந்தான், [illegible]. ''இளவரசே! விதி சதி செய்கிறது என நினைக்கிறேன். [illegible] உங்களைப் பார்க்க வந்தாள். முடிந்தால் காத்திருக் [illegible] என்றாளே'' என்று சொல்லி வெளியில் எட்டிப் பார்த்தான். [illegible] காலை நாம் கிளம்பும் முன் வந்து உம்மைப் பார்க் [illegible] என்று சொல்லிச் சென்று விட்டாள்'' என்றான்.

[illegible] திரும்பி நோக்கினான் மாறன். பின் அத்திசையில் [illegible] ஓடினான்.

அவனை நோக்கிப், "பார்த்துச் செயல்படுங்கள். வந்தியத் தேவனின் வியாதி உம்மையும் பற்றிக்கொண்டு விட்டது போலும். பெண்கள் சகவாசம் நமக்கு எதற்கு?" என்றான் அந்த சன்னியாசி.

வெளியில் ஓடோடி வந்த மாறன் ஏமாந்து போகவில்லை. ஒரு பெண் நிழலிலிருந்து வெளி வந்தாள்.

ஓரிரு ஜாமம் நினைவில் மட்டுமே கண்ட அழகியை நேரில் பார்த்ததும் அவன் உள்ளம் பூரித்தது. உடம்பு சிலிர்த்தது.

"நீங்கள்." என ஆரம்பித்த அவனிடம், "நான் பழுவூர் இளவரசி!" என்றாள்.

மாறனுக்கு ஒரே குழப்பம். அதைப் புரிந்து கொண்ட அந்தப் பூவுலகத்துத் தேவதை, "அப்பா கொல்லச் சொன்னது என் அக்காவை!" என்றாள். "அவசரப்பட்டு வாளை உருவி விடாதீர்கள்!" என்றும் சொல்லி விரக்தியான சிரிப்பொன்றைச் சிரித்தாள்.

கொலை என்ற வார்த்தையைக் கேட்டவுடன் மாறனுக்கு ஒரு பயம். அசட்டுப் பெண் இப்படி நடு இரவில் வந்திருக்கிறாளே. பழுவூர் அரசருக்கு இது தெரிந்தால் என்ன ஆகும்? ஒரு வேளை குடும்பத்தின் குழப்பங்களை முன்னிட்டு இவள் பைத்தியமாக மாறியிருப்பாளோ?

ஒரு கள்ளக் கோபத்துடன் அவளிடம் வினவினான். "பெண்கள் வசிக்கும் அந்தப்புரத்தை விட்டு நீங்கள் எப்படி என் மாளிகையில் பிரவேசிக்கலாம்? இப்படி நள்ளிரவில் நீங்கள் வந்ததை யாரேனும் பார்த்தால் என்ன நடக்கும் எனச் சிந்தியுங்கள்" என்றான். ஆனால், மனசுக்குள் அவனுக்கு ஒரு பெருமை. தன்னைக் காண இந்தத் தேவதை எவ்வளவு அபாயங்களை மீறி வந்திருக்கிறாள் என்று.

"பழுவேட்டரையர் மகள் தஞ்சையில் எங்கும் தங்கு தடையின்றிச் செல்லலாம். அதைப்பற்றி நீர் கவலைப் படாதீர். காவலுக்கு ஆட்கள் கூட்டித்தான் வந்திருக்கிறேன்" என்றாள். "தங்களுக்கு விருப்பமில்லா விட்டால் சொல்லி விடுங்கள். இப்போதே நான் இந்த மாளிகையை விட்டு வெளியேறுகிறேன்" என்றாள் அந்த அழகி.

ஆனால், அது வெறும் பேச்சுக்குத்தான். கழுத்தைப் பிடித்து தள்ளினாலும் செல்ல மாட்டாள். யார் மகள் அவள்?

அப்படி அவளைப் போக இவனும் சொல்லியிருக்க மாட்டான். என்ன வயது இவனுக்கு?

[illegible] தெரியாத ஒரு பெண்ணுடன், பாதி இரவுக்கு முன் [illegible] மயங்கிய அழகு கொண்ட பெண்ணிடம் இப்போது [illegible] கொண்டிருக்கிறோம் என நினைத்தபோது, மாறனுக்கு [illegible] புரியவில்லை.

"[illegible] நான் என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

"[illegible] ஒன்றும் இல்லை. என் அக்காவை ஒன்றும் [illegible] கூடாது" என்றாள்.

[illegible], இப்போது இந்தப் பெண்ணின் சோகம் ஏன் எனப் புரிந்து [illegible] அவனுக்கு.

"ஆனால், அவள் உங்கள் எதிரிகளுடன் இருக்கிறாள்."

"[illegible] எதிரி? கட்டிய கணவனா? பழந் தமிழ் நாட்டுப் [illegible] மனதில் யாரைக் காதலிக்கிறார்களோ, அவரையே [illegible] மனதில் கொண்டார்கள். பின் தொட்டுத் தாலி [illegible] கணவனைத் தெய்வமாக மதிப்பதுதான் அவள் கடமை" [illegible] உணர்ச்சி பொங்கிய குரலில்.

[illegible] பொன் சாப்பிட்ட இரு கரங்களும் உணர்ச்சி [illegible] போது. ஏதோ பரத நாட்டியத்தின் ஹஸ்த முத்திரைகள் [illegible] போலும் கீழுமாய் ஆடின. சதவோரமாகச் செயலற்றுப் [illegible] நின்ற பெண்ணா இவள்?

"[illegible] பலவந்தத்துக்கு அவள் ஏன் உடன்பட வேண்டும்? [illegible] பார்க்காமல் அவளைத் திருமணம் முடித்துக் [illegible] தந்தையின் தவறுதானே!" என்று நள்ளிரவு நேரத்தில் [illegible] பற்றி அவள் பேசிக் கொண்டிருக்கையில் அவளது [illegible] சதிராடிய ஒவ்வொரு உணர்ச்சியையும் மாறன் [illegible]

"[illegible] இருவரையும் கண்டால் என்ன செய்வீர்கள்?" என [illegible]

"[illegible] இடத்தில் வெட்டிப் போடவேண்டும் எனக் [illegible]"

[illegible] தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, "ஐயோ! [illegible] கொடிய வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். நீங்கள் [illegible] படியே செய்து விட்டால் அப்புறம் அப்பா கவலை [illegible] இருக்கலாம். ஆனால், நான் விஷத்தைக் [illegible] செத்துப்போவேன்!" என்று சொன்னாள். அவளது [illegible] உறுதியைக் கண்டு அவள் செய்தாலும் செய்வாள் [illegible] தோன்றியது.

அந்தத் தேவதை விம்மி அழத் தொடங்கினாள். இமைகளின் ஓரத்தில் மை கரைந்தது. கருநிறத்தில் கண்ணீர்த் துளிகள் இளம் சிவப்புக் கன்னங்களைக் கறைப்படுத்தின. அவளது சேலையின் ஓரத்தைத் தன் அழகிய கண்களுக்கு அடிக்கடி எடுத்துச் சென்ற போது அவளது வளையல்கள் குலுங்கின, ஏதோ ஒரு பறவை சிறகுகளைப் படபடவென்று சிலுப்பிக் கொள்வது போன்று அவற்றைக் கண்டும் கேட்டும் மாறன் மெய்மறந்து நின்றான்.

அவன் வாயைத் திறந்து பேச முயன்றான். இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் அது இயலாத காரியமாகிவிடும் என அவனுக்குத் தெரிந்தது.

"இளவரசி! என்னை இக்கட்டான நிலையில் சிக்க விடுகிறீர்கள். எனக்குக் கொடுக்கப்பட்ட வேலையில் நான் வெற்றிபெற வேண்டும் அல்லவா?"

"ஐயா, தாங்கள் எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என்று நானும் ஆசைப்படுகிறேன். ஆனால், அதிலும் ஒரு தர்மம் வேண்டும்."

"யாருக்கும் தெரியாமல் இருளில் வந்தவளின் சித்தம் அவ்வளவு சுவாதீனத்தில் இல்லை என்று நினைத்தோமே. முன்னெச்சரிக்கை யாகச் செயல்பட வேண்டும் என்று கூட நினைத்தோமே. இவ்வளவு தெளிவாகப் பேசுகிறாளே!" என்று மாறன் வியந்தான்.

அப்படியும் அவள் பேசிய பல வார்த்தைகள் அவன் காதில் விழவேயில்லை. சாந்தத்தில் பெண்களின் குரல் 'தேனின் சொட்டு போல இனிக்கும். கோபத்தில் தேனீயின் கொட்டுப் போல வலிக்கும் எனப் புலவர் சொல்லிக் கேட்டிருந்தான். 'இவளது குரல் கோபத்திலும் சோகத்திலும் யாழாய் இருக்கிறதே!' அவள் அழகைக் கண்டு மாறனுக்கு ஏற்பட்ட திகைப்பு இப்போது பரிபூரணமாகிவிட்டது.

'தன் வீரத்துக்கு ஒரு வேலை. தன் ரசனைக்கும் இது ஒரு வேலை. ஆகா! இத்தகைய சந்தர்ப்பங்களுக்காக எத்தனை நாள் காத்திருந்தாயிற்று. ஆனால், எல்லாம் ஒரே நாள் வந்து சேர்கின்றதே. ஒன்றுக்கு ஒன்று முரணாகவும் உள்ளதே. என்ன செய்வது? கொல்லச் சொல்லித் தந்தையும், கொல்லாதே என்று மகளும் மன்றாடுகின்றனர். எது எப்படியோ, கோடிக்கரைக்குச் சென்று பார்ப்போம். சங்கிலி போலத் தொடர்ச்சியாகக் காரியங்கள் நடக்கத் தொடங்கிவிட்டன. நாம் வெறும் பார்வை யாளராக இருந்து பார்ப்போம்' என்று முடிவு செய்தான்.

[illegible]ளிடம் பேசி அனுப்பிவிட்டு, மனமில்லாமல் அவன் நடந்து [illegible] மறைவதைப் பார்த்துவிட்டு உள்ளே நடந்தான் மாறன். [illegible]க்கொண்டே மாளிகையின் உட்புறத்துக்குள் அவன் [illegible] முற்றத்துக்குள் தெரிந்த வான் வெளியில் வௌவால் [illegible] ஒன்று குறுக்காகப் பறந்து வானம் பார்த்து பிரயாணித் [illegible]

[illegible] தொடர்ந்து வந்த துரதிர்ஷ்டம் தஞ்சைக் கோட்டை [illegible] நின்றுவிட்டது போலும். அந்தக் காலத்தில் அரசனைத் [illegible]ந்து வந்த பிரம்ம ஹத்தி கோயில் வாசலில் நின்றது போல" [illegible] நினைத்தான்.

[illegible] என்பது அவனுக்கு ஒரு ஆர்வத்தைக் கொடுத்தது. [illegible] அவன் கோடிக்கரைக்குச் செல்வதாக இல்லை. அது [illegible]னால். ஆனால், இப்போதும் அவன் செல்ல விரும்ப [illegible] இது ஒரு விருப்பினால் வந்தது.

[illegible] மனதில் பதிந்த ஒரு பாடலை முணுமுணுத்துக் [illegible]டே, அவன் உள்ளே நடந்ததைத் தூக்கம் கலைந்த [illegible] கவனித்தான். சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது முன்னெப் [illegible] மாறனிடம் எவரும் பார்க்காத பல குணாதிசயங்களை [illegible] வெளிக்காட்டுகிறான் என அடியான் நினைத்தான். [illegible] முற்றிலும் வேறு என்பதையும் அந்த ஒற்றன் [illegible]விட்டான்.

[illegible]தைப் புனைந்து கூறுவதையே கவிதை என்று எண்ணும் [illegible] பாட்டை முணுமுணுத்தால், யாரால்தான் யூகிக்க [illegible]



அத்தியாயம் பதினான்கு

கடவுள் நடந்த பூமியின் மீது

[illegible]யோதயத்தின் போது தஞ்சையிலிருந்து புறப்பட்ட [illegible] மாறனும் தென்கிழக்குத் திசைக்குச் செல்ல எண்ணித் [illegible] வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று நாகப்பட்டினத்தை [illegible] பாட்டையில் பயணம் செய்தார்கள்.

வேகமாக ஓடிய குதிரைகள் மாறி மாறி நிழலிலும் வெய்யிலிலும் பாய்ந்தோடிக் கொண்டிருந்தன. பணம் படைத்தவர்கள் குதிரை மேல் ஏறிப் புழுதி பின் பறக்க, அவர்கள் முன் பறந்தார்கள். தணலாய்த் தகிக்கும் வெப்பத்தில் சுமக்க வேண்டிய பாரத்தை இடுப்பிலும் தலையிலும் சுமந்து கொண்டு பாமர ஜனங்கள் நடந்தார்கள்.

வெய்யிலின் தாக்கம் வருத்தாமல் பெண்களும் முக்காட்டைத் தலை மேல் இழுத்து விட்டுக் கொண்டு நகர்ந்தார்கள். இயற்கையுடன் போராடாமல் சிலர் வெய்யில் தணியட்டும் எனப் பொறுமையாய் வெகு நேரம்வரை மர நிழலில் காத்து நின்றிருந்தார்கள்.

பதைபதைக்கிற வெய்யிலிலே ஓய்வெடுத்துக் கொள்ள நினைப்பவர்களுக்கு ஏதுவாக ஆங்காங்கே நட்டுவைத்த குடைகள் போலப் புளிய மரங்களும், வேப்ப மரங்களும் இருந்தன. ஓரிரு ஆல் மற்றும் அரச மரங்களின் நிழலின் பரப்பளவு ஒரு சோலையைப் போலவே இருந்தது. ஒரு கிராமமே அதன் நிழலில் களைப்பாறலாம். அதன் கிளைகள் சதா காற்றில் சிலிர்த்தன. அதனால் மரத்தினடியில் எவ்வளவு சுகமாக இருக்கும் என வெய்யிலில் சென்றவருக்கு யூகிக்க முடிந்தது. அந்த நிழலைக் கண்டவுடன் யாருக்கும் நின்று சற்றே மூச்சு வாங்கலாம் எனத் தோன்றும். அது போலவே ஒவ்வொரு மரத்தின் அடியிலும் யாரேனும் களைப்பாறிக் கொண்டுதான் இருந்தார்கள்.

நம் நண்பர்கள் இருவருக்குமோ உடலில் களைப்பும் இல்லை, மனதில் சலிப்பும் இல்லை. அதனால் சென்று கொண்டே இருந்தனர். ஓடும் குதிரை பிரயாணத்தில் வேகத்தை மட்டும் கொடுக்காது. காற்றில்லாமல் இருக்கும் சூழலில் கூடக் குதிரையை ஓட்டுபவர் ஒரு குளுமையை அனுபவிக்க முடியும். எனினும் அவ்வப்போது நெற்றியைத் துணியால் துடைத்துக்கொண்டனர் இருவரும்.

சோழ மன்னர்கள் சாலை விஸ்தரிப்பிலும் பராமரிப்பிலும் அதிகக் கவனம் செலுத்தினர். பரந்த ஒரு பிரதேசத்தைக் கட்டிக் காக்க அதை இணைக்கும் சாலைகளின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருந்தார்கள்.

ராஜபாட்டைகள் அகலமாகவும் இருந்தன. அவை ஓரங்களில் நிழல் கொடுக்கும் மரங்களும் இருந்தன. பயணிகள் ஓய்வெடுக்க மற்றும் இரவைக் கழிக்கக் கட்டுக்காவல் கூடிய விருந்தினர் மண்டபங்களும், அவற்றின் அருகே குளங்களும் செய்வித்திருந்தனர்.

[illegible] பயணிகளின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஒரு [illegible] சோராமல் காவலும், தவறு செய்பவருக்குப் பொது இடங்[illegible] கூடிய தண்டனையும் கொடுத்துப் பயணிக்கும் மக்களின் [illegible] வளர்த்தார்கள்.

[illegible] ராஜபாட்டைகளுமே இப்படி இருக்க, தலைநகரையும் [illegible] துறைமுகத்தையும் ஒன்று சேர்த்த இந்த ராஜபாட்டை [illegible] கேட்கவே வேண்டாம். அது பிரமாதமாகப் பராமரிக்[illegible] வந்தது.

[illegible] சமயத்தில் சாலையில் குதிரைகளின் குளம்படிச் [illegible] சிறிதளவே கேட்டன. அதற்காகச் சாலைகள் அமைதி[illegible] இருக்கும் என்று பயணிகள் எண்ணிவிட முடியாதபடி பல [illegible]

[illegible] சாலையில் பெட்டி வண்டிகள் பலவும் ஒவ்வொன்றும் இரு [illegible] காளைகளால் இழுக்கப்பட்டு 'லொடக் லொடக்' என்ற [illegible] அசைந்து ஆடிய வண்ணம் சென்றன. மாடுகளை [illegible] வண்டிக்காரன், 'அய் அய்' என்று திடீர் திடீரென [illegible] ஒவ்வொருவர் மனதையும் திடுக்கிடச் செய்தது.

[illegible] இரு புறங்களிலும் வளர்ந்திருந்த ஆலமரக் [illegible] நிர்விசாரமாகக் குடியிருந்த பறவைகள் உல்லாசமாகக் [illegible] கொண்டிருந்தன.

[illegible] மாறனுடன் பயணம் செய்யப் பிடித்திருந்தது. [illegible] இருந்து கிளம்பிய ஓரிரு நாட்கள் மாறன் பாதையில் [illegible] வழித் துணையாக வேண்டுமானால் இருக்கலாம், [illegible] துணைக்கு ஏற்ற ஆளில்லை என யூகித்துக் கொண்டான். [illegible] முகத்தை வைத்துக் கொண்டு வந்த இளம் சம்புவ[illegible] செல்லச் செல்ல, அதுவும் தஞ்சையில் பழுவேட்டரை[illegible] மீது அவன் கோபத்தையெல்லாம் கொட்டித் தீர்த்து விட்ட[illegible] மாறிவிட்டான்.

[illegible] மாறன் மன நிலையில் வெகுவாக மாற்றங்கள் [illegible] வெளி உலகம் எவ்வளவு வேறுபட்டிருந்தது [illegible] அவன் மனதில் பரவியிருந்தது.

[illegible] வானம் கடம்பூர் மீது குடைபோல நிற்கும் அதே [illegible] ஆனால், அதன் நீலம் சற்று முன் பிறந்த குழந்தையின் [illegible] இப்போது இருந்தது. அதே தாவரங்கள்தான் இரு [illegible] தழைத்தன. ஆனால், கோடிக்குப் போகும் [illegible] இருந்த செடி கொடிகளின் பசுமை மரகதம் போல [illegible] இது ஏன்? அறிவுக்கு எட்டவில்லையே!

பின் அவனுக்கே புரிந்தது. தங்கள் வாழ்க்கைக்குச் சான்றா இருந்த அந்தக் கருகிய கோட்டையின் பின்னணியில் இருக்கு போது, எல்லாம் ஒரு மங்கலாய்த் தான் இதுவரை தெரிந்தன.

இப்போதோ எதற்கும் ஒரு சுவப்ன சுந்தரியின் முகம் பின்னணி யாக அமைந்தது. அவளை நினைக்கும் போதெல்லாம் மனதிற்கு ஓர் இன்பமளிக்கின்ற வெதுவெதுப்புப் பரவி அவனுக்கு குதூகலம் உண்டாக்கிற்று.

அவனது சந்தோஷம் வெள்ளத்தின் பிரவாகமாய்ப் பெருகியது ஐந்து ஆண்டுகள் மனம் அமைத்த சிறையிலிருந்து வெளிவர முயன்று நாலாபுறமும் முட்டி மோதிப் பார்த்தும், வெளியில் வர முடியாதபடியால் உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருந்தான் சதா சர்வ காலமாகக் கோபமாகவே இருந்து விட்டான். அவளை கண்டபின் வெளி உலகத்தில் தான் தவற விட்டவை எவ்வளவு என இப்போது புரிந்து கொண்டான்.

ஆனால், அதிலும் ஒரு ஆதங்கம் அவனுக்கு. 'நமக்கு மட்டும் ஏன் இவ்வளவு கஷ்டமான காரியங்கள் வர வேண்டும்? அவள் தந்தையைப் போல இவளுக்கும் தன் தமக்கையின் மீது கோபம் என்றால், எனது வேலை எவ்வளவு சுலபமாக முடிய வேண்டிய காரியம்!' என்று கோபம் கொண்டான்.

'நேற்று இரவு அவள் பேசிய வார்த்தை இப்போது நம் உள்ளத்தில் இத்தகைய குழப்பத்தை உண்டாக்கி விட்டதே. அவள் தமக்கையின் மீது உயிருக்குயிரான அன்பு வைத்திருக்கிறாள் நியாயம்தான்' என்று நினைத்தவனுக்கு கொடுக்கப்பட்ட வேலையில் சற்றும் பிரியம் இல்லை. தன் மகளைக் கொன்றுவிட சொல்லும் பழுவேட்டரையருக்குத் தன் தந்தை சம்புவராயர் மகளைப் பிரிந்து வாழும் கொடிய நாட்களைப் பற்றித் தெரியுமா?

அதனால், அவன் வேலைதான் இப்போது கடினமாகி விட்டது தமக்கையைக் கொண்டு வந்து ஒப்படைத்தால் இவள் கோபப் படுவாள். வேலையில் தோல்வி அடைந்தால் தன் எதிர்காலம் மீண்டும் கடம்பூர், கருகிய கோட்டை, கோபமான தந்தை என்று பழையபடி சென்றுவிடும்.

'பரவாயில்லை, அதைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். இது போல் வேறு சந்தர்ப்பம் கிட்டும். ஆனால், அவளுடைய உயிருக் குயிரான அன்பைப் பெற முடியுமா?' எனக் குழம்பினான்.

மாறன் பல பெண்களிடம் பழகியிருந்தான். அவனது மனதைப் பல பெண்கள் கவர்ந்திருந்தனர். நந்தினி, குந்தவை போன்றவரை

ஒரு காலத்தில் இவன் செய்வதறியாமல் பிதற்றிய நேரங்கள் ஆனால் இவளிடம் அப்படி இல்லை

"என்ன சிந்தனை, இளவரசே?" என்றான் அடியான் - தன் இவன் அருகில் கொண்டு வந்து.

'ஒன்றும் இல்லை' என்பது போல் தலையசைத்தான் மாறன்

வெகு சினேகமாகி விட்டோமே என்று அவர்களே அளவுக்கு இருவரும் பல நாள் பழகிய நண்பர்கள் சென்றார்கள். ஆனால், இருவரும் சர்வ ஜாக்கிரதையாக களை அளந்துதான் பேசினார்கள்.

கூப்பிட்டது அவன்தான்.' அதனால் தூதுவன் என மாறன். ஆனால், இப்போது கூட்டாளி என்று தெரிய 'இவனுடன் ஒத்துச் செல்லவேண்டும். கைத்தடி இந்த வைணவன் ஒரு வீரனல்ல. அதனால் இடைஞ்சல் நேராமல் இருக்க வேண்டும்' என்று மாறன் நினைத்துக் கொண்டான்.

அடியானோ, 'ஒருவரோடு ஒருவர் சண்டை பிடித்துக் கொண்டு கெடுத்து விட்டார்கள் என்று தஞ்சையில் குற்றம் வைத்துவிடக் கூடாது. சண்டை வரும் எந்த விஷயத்தை தவிர்த்துவிட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்.

மனதில் அந்தச் சுந்தரியின் நினைவைக் கலைத்துவிட்டு, வேலை முடிந்தது என்று தன் குதிரையை முன் செலுத்தினான் மாறனின் குதிரை பின் தங்கியே சென்று கொண் பத்து அடி முன் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்த அடியானின் பின்புறத்தைப் பார்த்தான் மாறன். குதிரையின் ஏற்ப ஆடி அசைந்து ஒரு குட்டி யானை போல நகர்ந்தான். இல்லை, உருண்டான் என்றே மாறனுக்குத் தோன்றியது. சதா அவன் வாய் ஏதோ ஒரு பாசுரத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

மாறனுக்கு ஏதும் புரிய வில்லை. 'இவனுக்கு இதில் என்ன பழுவேட்டரையர் இவனுக்கும் எதிரி அல்லவா?'

அடியானைப் பற்றி நினைத்தவுடன் தன்னைக் கூர்மையான போலப் பல கேள்விகள் சரமாரியாகத் தாக்குவதை உணர்ந்தான்.

இந்த வைணவனை நானே ஏன் தொடர்ந்து போக வேண்டும்? இவனே ஏன் இந்த வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டும்? காட்டுக்குள் இருவருக்கும் என்ன வேலை?, பாண்டிய ஆபத்துதவிகளுடன் நமக்கு என்ன தனிபட்ட வேறுபாடு?

யாருடைய வேலையையோ செய்து முடிப்பதற்காகவா நா[illegible] இருக்கிறோம்?அதுவும் நம்மைப் பழித்தவர்களுக்காகச் சேவக[illegible] அதுவும் உயிரைப் பணயம் வைத்தா? ஒருவேளை இதில் ஏதேனு[illegible] சூழ்ச்சி இருக்குமோ?'

கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களினால் எதையும் ஒ[illegible] சந்தேகக் கண்ணுடனேயே பார்க்க வேண்டியிருந்தது. கேள்வி[illegible] பல எழுந்தாலும் பதில் எதுவும் வருவதாய்த் தெரியவில்லை[illegible] கேள்விக் கணைகள் கோபக் கனலைத்தான் எழுப்பின.

அவ்வப்போது தன் சந்தேகங்களைச் சரி செய்து கொள்[illegible] வாயைத் திறந்த மாறன் மனதை மாற்றிக் கொண்டு மௌன[illegible] காத்தான்.

முன் சென்ற அடியானுக்கு மாறன் ஏதோ சொல்ல ஆரம்பித்[illegible] சிறிது தயங்குவதாகத் தோன்றியது. முணுமுணுத்துக் கொண்[illegible] வந்தது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

முன்னே சென்ற அடியானிடம் சரி சமமாக வந்து, உரக்[illegible] "வைணவனே! விரைவில் இந்தப் பழுவூர் அரசர்களின் க[illegible] அதோகதியாகப் போகிறது, பார்!" என்று கூறினான்.

அடியானிடம் பதிலேதும் வராத நிலையில் "சோ[illegible] அரண்மனை பழுவூரைக் கண்காணித்து வருகின்றது. தவறு ஒன்[illegible] இனிச் செய்துவிடமுடியாது. அரச குடும்பமும் இவர்களும் ஒட்[illegible] உறவாடிக் கட்டிப் புரண்டிருந்த காலம் போனது. இதற்கு மட்டு[illegible] நம்மை அரசர் பெயர் சொல்லி ஏவி விடுவார்கள்!" என்று ஆதங்கப்பட்டான்.

அடியான் அவனது வெறுப்பின் ஆழத்தைப் பார்த்து விய[illegible] கேட்டான். "பழுவேட்டரையர் என்றாலே உனக்கு வேம்பா[illegible]யிருக்கிறதா?"

"விருந்தாளியாக வந்து எங்கள் வீட்டில் தங்கிவிட்டு அங்கே[illegible] சோழ குலத்து இளவரசர் ஆதித்த கரிகாலனைக் கொன்றவர் பெரி[illegible] பழுவேட்டரையர். அவர் தீங்கிழைத்ததால்தான் தன்னுயிரை[illegible] மாய்த்துக் கொண்டார்!" என்றான் மாறன். "தவறு செய்தவ[illegible] தண்டனை அனுபவிக்க வேண்டும். மற்றவன் கையால் சாவ[illegible] விட அந்தக் கிழவன் தானே அதைச் செய்து கொண்டான்" என்றான்.

சட்டென்று குதிரையை நிறுத்தினான் அடியான். இரண்டு அ[illegible] முன் சென்ற மாறன் நின்று திரும்பிப் பார்த்தான். "இல்லை[illegible] இளவரசே! பெரிய பழுவேட்டரையர் ஆதித்த கரிகாலனை[illegible]

[illegible]வில்லை. அதை அவரே என்னிடம் சாகும் முன் [illegible]னார்" என்றான்.

"[illegible] சொல்வது புதிராக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் [illegible]களைச் சொன்னால் நல்லது" என்று மாறன் கேட்க, [illegible] பார்த்த மாறனை நோக்கி, "நம்புங்கள். மக்கள் உண்மை [illegible]கள். உங்கள் நண்பர் வந்தியத் தேவன் மீது உள்ள [illegible] அகற்றி விடவே அந்தக் கொலைப்பழியை ஒப்புக் [illegible]"

[illegible] முகத்தில் சிறிது வியப்பும், நம்பாமை போன்ற உணர்ச்சி [illegible] சேர்ந்தே தோன்றின.

"[illegible]? அவனைக் கண்டால் அவருக்குச் சற்றும் பிடிக்காதே!"

"அதை இளைய பிராட்டி குந்தவைக்காகத்தான் செய்தார்."

[illegible] மௌனமே குடி கொண்டது. குதிரையின் குளம்படி [illegible] தவிர. யோசித்துப் பார்க்கப் பார்க்க, அது உண்மையாகவே [illegible] வேண்டும் என மாறனுக்குத் தோன்றியது.

"[illegible]படியொரு அழியாப் பழியை ஏற்றுக் கொண்டாரா?" [illegible]ரையர் மீது மாறனுக்கு ஒரு பெரு மதிப்பு உண்டாயிற்று.

[illegible] ஒரு சந்தேகம் நிவர்த்தியானது மற்றும் பலவற்றைக் [illegible] விட்டது. 'பின் இளவரசரைத் தன் வீட்டில் வைத்துக் [illegible] யார்? தன் தங்கை மணிமேகலையாய் இருக்குமோ? [illegible] கொலையுண்டு கிடந்த இடத்தில் வந்தியத் தேவனைத் [illegible] இருந்தது அவள் மட்டும்தானே?'

அடியான் தொடர்ந்தான். "ஊரே பரிகசிக்கும்படி பழுவூர்க் [illegible] போனது பெண் மோகத்தில்தான். வீராதி வீரரும் சோழ [illegible] இணையற்ற செல்வாக்கு உள்ளவருமான அந்தக் [illegible] புத்தி போன போக்கைப் பார்!" என்று கூறி மாறனைப் [illegible]

[illegible] இரவு வந்த பெண்ணைப் பற்றி அவன் வாயிலிருந்தே [illegible]களைப் பிடுங்கிவிட வேண்டும் என்பது அவன் [illegible] ஆனால், மாறனோ வேறு திசையில் நினைத்துக் கொண் [illegible] அது அவன் உயிர் நண்பனைப் பற்றியது.

"[illegible] என்ன காரியம் செய்யத் துணிந்தோம்! வந்தியத் [illegible]யின் பேரில் கொலைப் பழியைச் சுமத்தப் பார்த்தோம். [illegible] என்னைக் கொல்ல முயற்சித்ததாக ஒரு பழி. பின்பு [illegible] கரிகாலரைக் கொலை செய்ததாகவே ஒரு பழி. அவன் [illegible] கடந்து நிரபராதி என நிரூபணம் செய்தான்.

இல்லை என்றால் முச்சந்தியில் கழுவில் ஏற்றியிருப்பார்கள். ஐயோ நினைக்கவே சகிக்கவில்லை. இதற்கெல்லாம் நானும் ஒரு காரண மாய் இருந்து விட்டேனே. வந்தியத் தேவன் மீது அபாண்டமாய் பழி சுமத்தித் தண்டனைக்கு ஆளாக்கி விட்டேன். அப்போது அ அவ்வளவு பெரிய பாவமாகத் தோன்றவில்லை. அதே குழியி நாங்கள் விழுந்தபோதுதான் அதன் ஆழத்தை உணர்ந்தேன். அந் குற்ற உணர்வைச் சாகும் வரைக்கும் அனுபவிப்பேன். இந் சிநேகிதத் துரோகியை அவன் மன்னிப்பானா?'' என்றா கந்தமாறன்.

''ஐயோ, அசட்டுப் பிள்ளை போலப் பேசுகிறாய்!'' என சிரித்தான், அடியான்.

''உமக்கு என் வேதனை சிரிப்பைத் தருகிறதோ?'' என அடியா மீதே பாய்ந்தான் மாறன்.

''அவனுக்கு நீர் ஒரு தீங்கும் செய்யவில்லை. நீர் கொடு ஒவ்வொரு கஷ்டத்தையும் அவன் ஏணிப்படிகளாக உபயோகி மேலேறி விட்டான். ஊரார் அவனைக் கல்லால் அடித்தன அந்தக் கற்களைக் கொண்டே அவன் மாளிகை கட்டிக் கொ டான்.''

பயணத்தின் முதல் நாள் இரவு இருவரும் திருவாரூ தங்குவதென முடிவெடுத்தார்கள். சோழர்களுக்குத் தில்லை அடுத்தபடி இந்த ஊரின்மீதும் இங்கு குடிகொண்டிருக் தியாகராஜப் பெருமானின் மீதும்தான் பற்று. ஊரை நோக்கிப் ப குதிரைகளும் பல்லக்குகளும் சென்று கொண்டிருந்தன. ஊ எல்லையை அடைந்தவுடன் சாலையில் வந்த பலரும் குதிரையி மேலிருந்தும் பல்லக்கிலிருந்தும் கீழிறங்கினார்கள். அடியானுக் மாறனுக்கும் என்னவென்று புரியவில்லை.

''எதற்கும் நாமும் நடந்தே செல்வோம்'' என்றான் அடியா மாறன் அருகில் இவர்களுக்கு முன் இறங்கி நடந்த ஒரு நடு வய காரரிடம், ''ஏன் இப்படி அனைவரும் இறங்கி நடக்கிறோம் என்றான்.

''தம்பி! எல்லாம் ஒரு மரியாதைக்குத்தான். கடவுள் நட பூமியின் மீது நாம் குதிரையில் சென்றால் நன்றாகவா இருக்கு

பின் அந்தப் பெரியவர் கதையைச் சொல்லி அதை விளக்கின ''சிவபிரானே தெருத் தெருவாக நடந்ததால், திருவாரூர் பு பெற்றுத் திகழ்கிறது. ஒரு பக்தனுக்காகக் கடவுள் என்னவெல்லா செய்வார் என்பதற்கு இதுதான் சான்று.''

...மூர்த்தி நாயனார் இங்கு வாழ்ந்து பின் வெண்யானை ...மேலேறிக் கைலாசம் சென்று சுமார் இருநூறு ஆண்டுகள் ... இங்கு தன் மனைவியுடன் வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி ... தொண்டை நாட்டில் திருவொற்றியூர் சென்ற போது ...வது முறையாக மணம் புரிந்து கொண்டார். திருவாரூரில் ... முதல் மனைவி பரவை நாச்சியார் வெகுவாகக் கோபம் ... அவர் திரும்பியதும் ஒன்று கூடி வாழ மறுத்தார். சுந்தரர் ... நண்பரல்லவா? சுந்தரருக்காகக் கடவுள் சென்று ... பேசினார். அப்போதுதான் இந்தத் தெருக்களில் ...'' என்று கூறினார்.

... ஒரு பெருமிதத்துடன், ''தம்பி! நாங்கள் திருவாரூர்க் ...'' என்றார்.

''...என்ன திருவாரூர் அவ்வளவு உசத்தியா? ஏதோ தஞ்சையில் ... போல, அதுவும் அரண்மனையை ஒட்டியுள்ள வீட்டில் ... போல மார் தட்டுகிறீரே!'' என்றான் அடியான்.

...க் கொண்டே பெரியவர் சண்டை பிடித்தார். ''உம் ...யில் யார் வாழ்வார்? உம்மிடம் ஒரு தேவாரப் பாடல் ... கோயிலாவது உள்ளதா? இங்கு தடுக்கி விழுந்தால் ... பாடல் பெற்ற சன்னிதியில்தான் விழ வேண்டும். ...ரில் பிறந்தாலே முக்தி நிச்சயம். அது மட்டுமல்ல. ... பற்றிச் சுந்தரரே என்ன பாடியிருக்கிறார், தெரியுமா?'' ...

... கூறக் கூற மாறனுக்குச் சிறிய வயதில் படித்த 'தில்லை ...ணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கிய ... தொண்டர் புராணம் நினைவுக்கு வந்தது.

...தில் ஒரு வரி ''திருவாரூரில் பிறந்த எல்லாருக்கும் அடியேன்'' ... சுந்தரர் கூறியது எங்களுக்காக' என்றார் அந்த ஊர்க்காரர்.

... உமக்காக அல்ல, ஐயா. திருவாரூரில் வாழ்ந்த தன் ... பரவை நாச்சியாரைப் பற்றித்தான் கூறினார்'' என்று ஒரு ... போட்டான் அடியான். உடனே அந்த ஆரூர்க்காரர் ...விட்டுச் சென்றுவிட்டார்.

...பழுவேட்டரையர் மகளையே சதா நினைத்திருப்பது சரியா ... எனப் புரியாமல் வந்த மாறனுக்கு மேலும் குழப்பம். ...னையே நண்பராய்க் கொண்ட அந்தப் புனித பக்தனுக்குக் ... பெண் மோகமா? ஒரு பெண்ணின் துணையில்லாமல் ... இருக்க முடியாதா? அவன் தலை சுற்றியது.



அத்தியாயம் பதினைந்து

திக்கு தெரியாத காட்டில்

மறுநாள் அதிகாலை புறப்பட்டுத் திருவாரூரின் ஊர் எல்லை வரை குதிரைகளை நடத்தியே சென்று இருவருமாகத் தெற்கு நோக்கிப் பயணித்தனர்.

பிற்பகலில் சாலையில் புழுக்கம் தாங்க முடியவில்லை. அதுவும் காற்றில் மெல்ல மெல்ல உப்பு சேர்ந்து வந்ததால் உடலெங்கும் பசபச என்று இருந்தது. கடல் சற்று சமீபத்தில் இருக்க வேண்டும் என்று யூகித்தார்கள்.

பிரயாணத் திசை கோடிக்கரையை நோக்கியது என்பதால், மக்கள் நடமாட்டம் போகப் போகக் குறைந்தது. கோடிக் கரையின் நிரந்தர மக்கள் தொகை சில நூறே இருக்கும். அங்கு வாழ்பவர்கள் மற்றப் பிரதேசங்களுடன் தொலைவு காரணமாகத் தொடர்பு அதிகம் வைத்துக் கொள்வதும் இல்லை.

போகும் வழியில், சில இடங்களில் உப்புக்காற்று செடிகொடி களைக் கருக அடித்திருந்தது. ஆனால் அதிலும் ஒரு மாமரம் மட்டும் மலர்களுடன் தனியே உப்புக் காற்றுக்குச் சவால் விட்டு நின்றது. அதிலும் இது மா பூக்கும் காலம் கூட இல்லை.

மா மலரும் காலத்தில் அதைச் சுற்றி எறும்புகளுக்கும், தேனீக் களுக்கும் ஒரே கொண்டாட்டம்தான். ஒரு மனிதன் அதன் நிழலில் நிம்மதியாய் அந்த இரு மாதங்களுக்கு ஓய்வெடுக்கக் கூட முடியாது.

மாமரம் என்பது ஒரு வர்ணம் நிறைந்த மரம். பசுமை இலைகள், சிவப்பு மலர்கள், மஞ்சள் மாம்பழங்கள் என்று வித விதமாய்த் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டும். இந்த மரத்தைத் தேடிவரும் பூச்சிகளும் பட்சிகளும் கூடப் பல வர்ணங்களில் இருப்பதனால் ஒரு கலைக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதற்கு மாமரம் ஒரு கிராமத்தில் நிகழும் திருவிழாபோலத்தான் இருக்கும். ஆனால், நம் நண்பர்கள் இருவருக்குமோ இவை ஏதும் தெரியவில்லை. தங்கள் மனதில் சுமந்த சுமைகள் அவர்கள் கண்ணுக்கு எப்படி ஒரு கலை நிறைந்த கண்ணோட்டதைக் கொடுக்கும்?

ஆனால், இந்தக் காட்சியைப் பார்த்த அடியானுக்கு ஒரு நினைவு வந்தது. "பழுத்த மாம்பழத்தின் உள்ளே வண்டிருப்ப தைப் பார்த்திருக்கிறீரா?."

[illegible]" என்று தலையசைத்துத், "தோலில் ஒரு ஓட்டை கூட [illegible] உள்ளே அந்த வண்டு எப்படிச் சென்றது? வாங்கும் [illegible] உள்ளே வண்டிருப்பது தெரிவதில்லை என்று நானும் பல [illegible]த்திருக்கிறேன்" என்றான் மாறன்.

[illegible] வேறு ஒன்றும் அல்ல. மா மலரில் முட்டையைப் [illegible]விட்டு சென்றுவிடும் வண்டு. பூ பழமாய் உருமாறும் [illegible] முட்டையும் வண்டாய் மாறிவிடும். இதைப் பார்த்தால் [illegible] ரவிதாசனின் நினைப்புதான் எனக்கு வரும். அவன் [illegible]தைப் போன்றவன். மகா மாயத் தந்திரக்காரன்."

"[illegible]ல்லாம் சரி. ஆனால், மாம்பழத்துக்கும் அவனுக்கும் [illegible] சம்பந்தம்?" என்று வினவினான் மாறன்

"[illegible] அரச குடும்பத்துக்கு நெருக்கமான பழுவேட்டரையர் [illegible]த்தில் நந்தினியைத் திணித்து வைத்தான் அல்லவா? அதைச் [illegible]கிறேன். அவனுக்கு மேலும் நல்ல நேரம், சோழ [illegible]க்கு உரிமை கொண்டாடும் மதுராந்தகரே வீர பாண்டி [illegible]னாய்ப் போனதுதான். அவர் மட்டும் பட்டத்துக்கு [illegible]ந்தால் நாம் எல்லாரும் இன்று பாண்டியரின் ஆட்சிக்கு [illegible]ருப்போம்" என்று அடியான் பதில் கூறினான்.

[illegible] அவனுக்கும் அப்பாற்பட்டு நடந்த விஷயம். அவன் [illegible] உண்மையான மந்திரவாதியா அல்லது வெறும் தந்திர [illegible]?" மாறனுக்கு அந்த மனிதன் எப்படிப்பட்டவன் என [illegible] ஆசை.

"அவனுக்கு இக்ஷிணி வித்தை தெரியும் என்று கேள்விப்பட் [illegible]கிறேன். கண் சிமிட்டும் நேரத்தில் எந்தச் சுவருக்குள்ளும் [illegible] வெளியிலே போய் விடுவான்! ஒரு சிறையிலும் அவனை [illegible] முடியாது. ஒரு சங்கிலியாலும் அவனை அடக்க [illegible]."

[illegible] சிரித்தான். "நேரே போர் செய்ய முடியாத கோழைகள் [illegible] மந்திரமும் தந்திரமும் செய்து எதிரியை வீழ்த்தப் பார்ப் [illegible] மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் முக்கால் [illegible] பேர் வெறும் பொய்யர்கள். அவனுக்கு மாய மந்திரம் [illegible]ந்தால் இந்தச் சமயத்தில் பட்டப் பகலில் பகிரங்கமாக [illegible] சென்றிருக்கலாமே. எதற்காக இந்தக் குருட்டு வழியில் [illegible]மாகச் செல்ல வேண்டும்?" என வினவினான்.

[illegible] யோசித்துப் பின் வார்த்தைகளைத் துப்புவது போலப் [illegible] "வீர பாண்டியர் வம்சம் ஏன் இப்படித் தரங்குறைந்து

இழிவான போர்முறையைக் கையாள வேண்டுமோ தெரியவில்லை.''

அதற்கு விளக்கமாக அடியான் பதிலளித்தான். ''ஆதித்த கரிகாலனின் மரணம் தென்னாட்டுச் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற சம்பவம். பல காலமாக பாண்டிய அரச குலத்தின் வாரிசு எனக் கூறிக்கொண்டு ஒருவன் கூட மதுரையில் கால் வைக்க முடியவில்லை. ஆனால், இந்தக் கொலை பாண்டிய நாட்டுப் போராளிகளுக்கு ஒரு புதுத் தெம்பைக் கொடுத்திருக்கிறது.''

''ஆதித்த கரிகாலனின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பை மக்கள் மறக்கவில்லை. வைகை ஆற்றின் தண்ணீரெல்லாம் செந்நீராக மாறியது அவ்வளவு எளிதாக மறக்கக் கூடிய சம்பவமா? பாண்டிய நாட்டுப் படைகள் அந்தக் கொலை வெறியில் சேதமடைந்தன. பெரும் பிரயத்தனத்தின் பேரில்தான் வீர பாண்டியன் தப்பினான். வீர பாண்டியன் படையிழந்து, முடியிழந்து, துணையிழந்து உயிரை மட்டும் காப்பற்றிக்கொண்டு போர்க்களத்திலிருந்து ஓடிச்சென்றான். ஓடிச் செல்பவனைக் கோழையாய் மட்டும் நினைக்க முடியாது. அடுத்தப் போருக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு ஆயத்தமானவன் என்று கூட நினைக்கலாம் அல்லவா? அவன் தப்பாமல் போர்க்களத்தில் வீரசொர்க்கம் அடைந்திருந்தாலும், அவன் கீர்த்திக்கும் நல்லது, நமக்கும் நல்லதாய்ப் போயிருக்கும்'' என்றான், அடியான்.

''ஏன்?'' என்று புருவங்களை உயர்த்திக் கேட்டான், மாறன்.

''அவன் அடிபட்டு படுத்திருந்த போது அவன் தலையை வெட்டினார் கரிகாலர். அதைக் கண்ட பாண்டிய ஆபத்துதவிகள் பழிவாங்கச் சபதமும் செய்தார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள்.''

போரில் பாண்டியப் படை அனேகமாக நிர்மூலமாகி விட்டது. அதனால் நீடித்த யுத்தத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் வேறு வகைப் போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள் பாண்டியர். ஆனால் மாறனுக்கு இந்த மந்திர தந்திரங்கள் எல்லாம் வீரத்துக்கு இழுக்கு என்ற நினைப்பு வந்தது. ''வாளின் துணை கொண்டு நமக்குக் கிடைக்கும் வெற்றி போதும். அது மட்டும் நமக்குக் கிடைக்கட்டும். அதனால் உயிரை இழந்தாலும் சரிதான். தந்திர மந்திரங்கள் எல்லாம் நமக்கு எதற்கு?''

ஆனால், அவன் மனதில் ஒரு சிறிய உளைச்சல்.

''ரவிதாசனுக்கு மாய மந்திர வித்தைகள் தெரியும் என்றீரே, அவன் நாம் இங்கு வரப் போவதை ஊகித்திருப்பானோ?''

''[illegible] தெரிந்திருந்தால் கஷ்டம்தான். சோழ வம்சத்தின் [illegible] கொண்ட வெறுப்பையெல்லாம் நம் மீது காட்டி [illegible] அவனுக்குத் தெரிந்த மந்திரங்களை ஏவிவிட்டு நம்மிரு[illegible] கொல்லக் கூடத் துணிவான்.''

''ரவிதாசனுக்குக் கொலை என்பது சாதாரணமானது போல!'' [illegible] மாறன்.

[illegible]லும் அவன் நினைத்ததையே ஆமோதித்தான். ''இன்று [illegible] சோழ பரம்பரையைக் கொன்று குழி வெட்டி மூடி விட [illegible] எண்ணுகிறான். அவன் வழியில் யார் நின்றாலும் [illegible] விடுவான்.அவன் கையில் சிக்கினால் நம் கதியும் [illegible] கதிதான்.''

''[illegible] வாளும் உன் தடியும் இருக்கும்வரை அது நடக்காது!'' [illegible] தைரியப்படுத்தினான் மாறன்.

[illegible], 'எதிரணியில் இருப்பதோ கொலைப்பழிக்கு அஞ்சாத [illegible]. நமக்குத் துணைக்கோ ஒரு பாசுரம் பாடும் [illegible]. இவனை வைத்துக்கொண்டு நாம் என்ன சாதிக்கப் [illegible]?'' என்ற சந்தேகம் மாறன் மனதில் பரவியது. [illegible] வேறு வழியில்லை.

[illegible] நினைத்து வந்த மாறனின் உள்மனதில் வேறொரு [illegible] தடுமாறிக் கொண்டிருந்தது.அது வெளிவரப் போராடிக் [illegible].

[illegible] வைணவனைப் பற்றி ஏதோ ஒரு விஷயம் இவனை [illegible] கொண்டிருந்தது. இவன் பித்துக்குளி வைணவன் அல்ல. [illegible] எல்லாம் வெறும் நடிப்பு. தன்னால் கூடக் கடம்பூர்க் [illegible] ச் சுவர் ஏற முடியாது. இவன் தன் பூதாகர உடலுடன் [illegible] என்றால் இவன் உண்மையில் யார்? என்ன தொழில் [illegible]? அதைக் கேட்டுவிட வேண்டும் என்ற துடிப்பு. [illegible] அவன் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்துக் [illegible]ருந்தபோது, அடியான் கோடிக்கரைக் காட்டைப் பற்றி [illegible].

''[illegible] காட்டில் புலியோ சிங்கமோ கிடையாது. அதனால் [illegible] விட்டோம் என நினைக்காதே. சிறுத்தை, கரடி, நரி [illegible] இங்குண்டு. சிறுத்தைக்கு ஒற்றன் வேலை செய்து [illegible] நரி என்ற நரி கூட இங்கு உண்டு. அதுதான் பலிக்கு ஒரு [illegible] வந்து கொண்டிருக்கிறது எனச் சிறுத்தையிடம் [illegible] கூறும்.''

ஒரு நொடி ஏதோ சிந்திப்பது போல இருந்தான் மாறன். பின் சட்டெனக் கேட்டான். ''வைணவனே! நீயும் ஓரி போன்ற ஒற்றனோ?''

''ஒற்றனைக் கேலி செய்யாதே! அரசன் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் பின் ஒரு ஒற்றன் தந்த தகவலே இருக்கும்'' என்று ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் வைணவன் பதிலளித்தான்.

அவன் பதிலின் தோரணையில் பேச்சு முடிந்துவிடும் என்று எண்ணிய அடியானுக்கு அடுத்த கணையைத் தயாராக வைத்திருந்தான், மாறன்.

''உமது வைணவப் பிரசாரம் ஒரு ஏய்ப்பு வேலை என நினைக்கிறேன். பக்தன் என்ற பொய்க்கோலம் பூண்டது உமது ஒற்றன் வேலைக்கு மாறுவேடமாய்த் திகழும் என்பதற்காகத் தானே?'' என்று கேட்டு, அடியானது முகத்தை உற்றுப் பார்த்தான், கோபத்தில் அடியானின் முகம் வேறுபடும் என எதிர்பார்த்து.

''மாறனுடன் மனம் விட்டுப் பேசி அவனது மனோநிலைமையை அறியலாம் என்றல்லவா நினைத்தோம். இப்படி அவன் எதிர்க் கேள்வி, அதுவும் தாறுமாறாகக் கேட்கிறானே'' என அடியான் மனதுக்குள் சங்கடப்பட்டுக் கொண்டான்.

''உன் முகத்தில் ஒரு குத்து விட்டால் எது மூக்கு எது வாய் எனத் தெரியாமல் போகும். அது கூட உனக்கு மாறுவேடமாய்த் தானிருக்கும்'' என்று முணுமுணுத்தான் அடியான்.

ஆனால், உரக்க, ''இச்சமயம் என் கடமை நாட்டின் நலனையும் ஆன்மீக வளர்ச்சியையும் சுற்றியே உள்ளது. போர் இல்லாத நாட்களில் மட்டுமே ஆன்மீகம் வளரும் என நீர் அறிந்ததில்லையா?'' என்றான்.

அடியானின் கவசத்தில் ஒரு ஓட்டையைக் கண்டறிந்த மாறன் விடுவதாக இல்லை.

''ஜன்னல் ஓரமாக நின்று ஒட்டுக் கேட்பதனால்தான் ஒற்றன் என்ற பெயர் வந்ததா? இல்லை ஒற்றன் அப்படிச் செய்வதனால் தான் ஒட்டுக் கேட்பது என வந்ததா?'' என வினவினான்.

''வாசற்படி அல்லது ஜன்னல் அருகில் மறைவாய் நின்று உள்ளே நடக்கும் உரையாடல்களைச் சற்று ஒட்டுக் கேட்பது மனிதர்களைப் பற்றி எவ்வளவு கூறும் என நினைக்கிறாய்? நான் நம்பிக்கைக்குத் துரோகம் செய்கிறேன் என்றால், என் முன் ஒன்று பேசி நான் இல்லாதபோது மற்றும் ஒன்று பேசுபவரிடம்தானே அப்படிச் செய்கிறேன். சைனியத்தில் நல்ல தேகக்கட்டு வாய்ந்த

[illegible] சேருவார்கள். அதற்கான குலத்தில் பிறந்த மறவர்களும் [illegible]கள். அவர்களுக்கு இருக்க வேண்டியது போலப் பல [illegible]கள் எங்களிடமும் உள்ளன. உமக்குத் தெரியுமா? ஒற்றன் [illegible] வரும்போது அவன் பாதங்கள் பூமியில் பட்டனவா [illegible]லையா என்று தெரியாதபடி நடக்க வேண்டும்'' என்றான்.

''இந்த உடலுடன் உங்களுக்கு அது கஷ்டம்தான்!'' என்று கூறிச் [illegible] மாறன். அவன் நகைப்பைப் பொருட்படுத்தாமல் [illegible] தொடர்ந்தான். ''அரசர்கள் கைபாண்ட யுத்த தந்திரங்[illegible] பின்னால் ஒரு ஒற்றன் இருக்கிறான். ஒற்றன் கொண்டு [illegible] செய்தி அசாத்தியத் துணிச்சலை உடமைப் போன்ற போர் [illegible] அளிக்கும். அந்தப் போர் வீரன் களத்தில் முன்னின்று [illegible] வீரச் செயல்களைப் போலவே ஒற்றனுக்கும் ஆபத்துகள் [illegible].''

[illegible] ஒப்புக் கொள்வது போல் தலை அசைத்தான். ''ஆம். [illegible] எனக்கும் தெரியும். எங்கள் நாட்டில் ஒற்றனுக்கு என்ன [illegible] தெரியுமா? ஒரு காதை வெட்டிவிடுவார்கள். எங்கு [illegible] உம்மை ஒரு ஒற்றன் என மக்கள் கண்டு கொள்ளும் [illegible] இல்லையென்றால் உம் முன்குடுமியைச் சிரைத்துத் [illegible] மொட்டை அடித்துக் கரும் புள்ளி செம்புள்ளி மூக [illegible] குத்திக் கழுதை மேல் ஏற்றி விரட்டி அடித்திருப்பார்கள். [illegible] இரவுக் கூட்டத்தில் மட்டும் நீர் மாட்டியிருந்திரென்றால் [illegible] அதோ கதிதான். அதெல்லாம் இருக்கட்டும். அரசியலை [illegible] ஆன்மீகத்தையும் கலக்கின்றீரே. இது நியாயமா? பெரு[illegible] போர்வையாய்க் கொண்டு, கள்ள வேலை செய்கிறீரே. [illegible] அடுக்குமா?''

''[illegible]ளவரசே! நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். போர்க் [illegible]களில் கோயில்களின் நிலைமை என்ன? அதனால் ஏற்படும் [illegible] ஆன்மீகம் வளருமா? கோயில்களில் பூஜைகள் தடைப் [illegible] கோயில்கள் உடைக்கப்படும். அங்கு பக்தர்கள் எறும்பு [illegible] சேர்ந்து வைத்த செல்வம் எல்லாம் சூறையாடப்படும். [illegible] தடுக்கவே நான் இந்த வேலையைச் செய்கிறேன். அரசன் [illegible] பூமியில் கடவுளின் நிழல் அல்லவா?''

''[illegible] என்றால் இந்தப் பாண்டியர் ஆபத்துதவிகள் செய் [illegible]யில்லையே?'' என்றான் மாறன். ''அவர்கள் அரசனின் [illegible]க்குத்தானே பழிவாங்குகிறார்கள்.''

''[illegible] தவறு எல்லாம் நாம் நிர்ணயிக்க முடியாது. அவை பாற் [illegible] முடிவு செய்யப்படும்'' என்று அடியான் சமாளித்தான்.

''கைலாசத்தில் முடிவு செய்யப்பட்டால் உமது கதி அதோ கதிதான்!'' என்றான் மாறன் ஒரு சிரிப்புடன்,

பின், ''கோடிக்கரைக்கு நாம் எப்போது போய்ச் சேரலாம்?'' என்று கேட்டான். பொறுமை இழந்ததை மாறன் அடிக்கடி வெளிக்காட்டியது போல இப்போதும் கேட்டான்.

''நாளைக் காலையில் செல்லலாம். அல்லது விரைந்தால் இன்று மாலையே சென்றுவிடலாம். ஆனால், அங்கு இரவில் சென்று சேருவது சற்றுக் கடினம். வழி தெரியாமல் மாட்டிக் கொண்டால் அதைக் கேட்கக்கூட ஒரு நாதியும் இருக்காது. ஒதுங்கக்கூட மண்டபம் இல்லை.''

மாறனுக்குக் கோபம். ''நாம் என்ன பெண்டிரா அல்லது குழந்தைகளா, இருட்டுக்குப் பயந்து மெதுவாய் நடக்க? இன்று மாலையே சென்று அடைய முயற்சி செய்வோம்'' என்று வேகமாய்க் குதிரையைச் செலுத்தலானான் மாறன். அடியானும் வேண்டா வெறுப்பாய்ப் பின் தொடர்ந்தான். ''இவன் என்ன! நேற்று விரைவாய்ச் செல்ல வேண்டும் என்றால் மெதுவாய் வந்தான். இன்று மெதுவாய்ச் செல்ல வேண்டும் என்றால் விரைகிறான்'' என்ற கேள்வி அவனுள் எழுந்தது.

அவர்கள் கோடிக்கரையின் சமீபத்தில் வந்துவிட்டனர். குதிரையை விட்டு இறங்கி நடையாகத்தான் மேலே செல்ல வேண்டும் என்று அறிந்திருந்தார்கள். ஆனால், அதற்கு அவசியம் சாயங்காலம் வரை ஏற்படவில்லை. அன்று காலையிலிருந்து வெய்யில் சுளீர் என்றுதான் அடித்துக் கொண்டிருந்தது. இருபுறமும் மரங்கள் நிழலைத் தந்தாலும், தொடர்ந்து காற்று அடித்துக் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

ஏறக்குறைய சூரியன் அஸ்தமனமாகும் சமயத்தில் இருவரும் களைத்துப் போனார்கள். காற்றிலும் உப்பு அதிகரித்திருந்தது. உடம்பெல்லாம் பிசுபிசு என ஒட்டியது. தொண்டை வற்றிப் போனது. நீர் பருகலாம் என்றால், வழியில் இருந்த குளங்களின் நீர் உப்புக் கரித்தது.

சற்று ஓய்வு எடுத்த பின் காட்டுக்குள் செல்லலாமே என்று இருவர் மனதிலும் தோன்றியது. களைத்துப் போன குதிரை களையும் காட்டுக்குள் செலுத்திச் சென்றால் நிச்சயமாகத் திரும்பி வர வாகனம் இருக்காது.

காட்டில் வானை அளாவிய மரங்கள் இல்லை. இருபுறமும் தாழ்வான காடுகள் சூழ்ந்த பாதை ஒன்று சென்றது. மனிதர்கள் மற்றும் மிருகங்களின் காலடிகளினால் ஏற்பட்ட அழிவுப்

[illegible] உருவெடுத்திருக்க வேண்டும். அவ்வளவு சிறியது. இரு [illegible] அடர்ந்த மரக் கிளைகளிடையில் அந்தச் சாலை பல [illegible] மறைந்தே விட்டது.

[illegible] கிளை பின்னிப் பிணைந்து காட்டு மரங்கள் [illegible] கோத்துக் கொண்டிருந்த பூதங்கள் போலக் காட்சி [illegible] காட்டுக்குள்ளே மிக ஜாக்கிரதையுடன் நாலா புறமும் [illegible] பார்த்துக்கொண்டு இருவரும் சென்றார்கள்.

''[illegible] பொழுதில் வந்தால் இராம பிரானின் கால் சுவடுகள் [illegible] குன்றின்மீது இருக்கும். காட்டியிருப்பேன். சாலைக்கு [illegible] ஒரு உப்பு நீர் ஏரியில் இளஞ்சிவப்புப் பூநாரைகள் வரும். [illegible] இருந்து வெப்பமான இடத்தைத் தேடி வருகின்றன'' [illegible] ஊரைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான் [illegible].

[illegible]கோ தன்னைச் சுற்றிச் சுழன்று வரும் இருள் வருத்தத் [illegible]. பாதை இன்னும் குறுகியது. நெருக்கமான செடி [illegible] பாதையை அடைத்துக் கொள்ளும் அளவுக்கு மண்டிக் [illegible]. ஏதேனும் ஊரும் பிராணிகள் இருக்கின்றனவா எனக் [illegible] சுவனித்தபடி இருவரும் அவ்வப்போது கீழே [illegible] பார்த்துச் சென்றனர்.

[illegible] மேல் இருந்த கிளைகள் இடித்ததால், அவர்கள் [illegible] நடத்தித் தாங்களும் நடந்தே செல்ல வேண்டி [illegible].

[illegible] மரத்தின் மீது ஏறி நான்கு பக்கமும் பார்த்தான். [illegible] ஒரு காட்டில் பழகிய கண்களிடமிருந்து ஜன நடமாட் [illegible] மறைக்க முடியாது. ஆனால், அடியானின் கண்களுக்கு [illegible] வந்து நடமாடுவதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் [illegible] நாட்டு அகதிகள் இனிமேல்தான் வர வேண்டும் [illegible].

[illegible] அந்தக் காட்டுக்குள் பிரவேசிக்கிறவர்கள் வழிகண்டு [illegible] செல்வது மிகவும் கஷ்டம். அடையாளம் வைத்துக் [illegible] எதுவும் இல்லை. எங்கும் மரங்கள்தான். அதிலும் [illegible] மரமும் மற்றொன்றைப் போலவே இருந்தது. [illegible] இருந்தவரை அடியானுக்குப் பாதை ஒருவாறு ஞாபகம் [illegible] உத்தேசமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

[illegible] வழி சற்று மேலேறி இறங்கியது. ஆங்காங்கே [illegible] கிளைகள் கீழ்நோக்கி வளர்ந்ததனால் குனிந்தே செல்ல [illegible]யிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் காட்டுக்குள்ளே

சுற்றிச் சுற்றி வருவதாக ஒரு எண்ணம் ஏற்பட்டதே தவிர, வழி அகப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சமயத்தில் அடியான் பின் தொடரத் திணறும்படியாக வேகமாக நடந்தான்.

"இந்த வைணவன் பேச்சைக் கேட்டிருந்திருக்கலாம். இந்த காட்டில் வந்து மாட்டிக் கொண்டோம். அந்த ரவிதாசன் வேறு இங்கு சுற்றிக் கொண்டிருக்கிறான்" என்று மாறனின் மனது பதைபதைத்தது. வலது கையோ சதா வாளின் மேலே தடவிக் கொண்டிருந்தது.

சூரியன் முற்றிலுமாக மறைந்து நாலு திக்கிலும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. அப்போது அதற்கெனக் காத்திருந்தது போல திடீரென மணி அடிக்கும் சப்தம் காட்டின் நடுவிலிருந்து கேட்டது.

மனக் கவலை அகன்றதற்கு அறிகுறியாக அடியான் முதல் முறை சிரித்தான்.

"அது குமகர் கோயில் மணியோசை!" என்றான். சத்தம் கேட்ட திக்கை நோக்கி இருவரும் திரும்பிப் பார்த்தனர். அது நிச்சயமாகக் கோயில் மணிதான். ஆனால், நகரத்தின் சூழலில் கேட்பது போல இந்தக் காட்டில் கேட்கவில்லை. சற்று வித்தியாசமாக இருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு கோயில் கோபுரம் கண்களுக்குத் தென்பட்டது.

❖ ❖ ❖

அத்தியாயம் பதினாறு

பார்த்து நட, புதை சேறு!

திரும்பத் திரும்பக் கோயிலில் சேமங்கலம் அடித்த ஒலி கேட்டது. தொலைந்து போய்விட்டோம் என்று நினைத்தபோது அமைதி காத்த இருவரும் பயம் கலைந்ததற்கு அறிகுறியாக இப்போது பேசினார்கள்.

"பட்டரை அர்ச்சனை செய்து தேவாரம் பாடச் சொல்லிக் கேட்கலாம். மனதுக்கு இதமாக இருக்கும்" என்று மாறன் கூற,

"ஆமாம், ஆமாம், பிறகு பிரசாதமும் கிடைக்கும். அது காலி யான இந்த வயிற்றுக்குப் பெரும் உதவியாக இருக்கும்" என்றான் அடியான்.

[illegible]மாய்த் திரும்பி மாறன் பார்த்ததற்குப், "பெருமாள் [illegible] பிரசாதம் போல நெய் ஒழுகாவிடினும் சம்பாச் [illegible] கிடைக்கும்" என்று முணுமுணுத்தான் வைணவன்.

ஆனால், இருவரும் ஒரே தீர்மானத்துக்கு வந்தார்கள். கோயில் [illegible] கேட்கும் திசையில் குறி வைத்துக் கொண்டு வெகு [illegible] நடந்தனர்.

[illegible] நடுவே ஒரு பாழடைந்த கோபுரமும் மண்டபங்களும் [illegible] கோயிலை எதிர்பார்த்த இருவருக்கும் ஏமாற்றம். [illegible] மிக அழகாகக் கற்றளியாக எழுப்பப் பட்டிருந்தது. அதுவும் [illegible] காலத்தில் செய்யப்பட்ட திருப்பணியாகவே அது தெரிந்தது. [illegible] உருப்படியாக இருந்ததைக் கண்டு இருவரும் அசந்தே [illegible]ார்கள்.

[illegible] கோபுரம் என்றாலும் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. எந்தப் [illegible]வானோ இந்தக் காட்டின் நடுவே திருப்பணி செய்து [illegible]ருந்தார் போல.

[illegible]லுக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கும் போதே "ஜிங் ஜிங் [illegible]" என்ற சத்தம் அவர்களுக்கு நன்றாய்க் கேட்டது. உளி கல்லின் [illegible] சத்தம் அது என இருவரும் புரிந்து கொண்டார்கள். [illegible] சிலை உருவெடுக்கும் பிரசவ வேதனைச் சப்தமெனக் கூட [illegible] கொள்ளலாம். ஆனால் "இரவில் கூட வேலை [illegible]தே?" என்று வியந்தனர்.

[illegible]லின் வெளியே ஒரு பழமையான மண்டபத்தில் [illegible] வேலை நடந்ததாகத் தெரிந்தது. ஆங்காங்கே ஆள் [illegible], கோயிலைச் சுற்றி மரக் கிளைகளினால் சாரங்கள் [illegible] திருப்பணி இன்னும் முடியவில்லை என்று [illegible].

[illegible] பார்த்தவரெல்லாம் தம் வேலையை நிறுத்திவிட்டு, [illegible] பார்க்காததைப் பார்த்தது போல வந்தவர்களை வியந்து [illegible], அதனால் உளிகள் அமைதி பெற்றன. திடீரென ஒரு [illegible] பாவியது.

[illegible] இருவருமாக நெருங்கினார்கள். வாயிலைக் கடந்த [illegible]யின் இருபுறமும் இருந்த நந்தவனத்தில் நாளைக்குக் [illegible] அலங்கரிக்கப் போகும் மலர்கள் மொட்டுகளாய்க் [illegible] நறுமணம் தெய்வீகமாக இருந்தது.

[illegible]லிருந்து பார்க்கும்போதே கருவறையில் இருந்த லிங்கத் [illegible] அலங்காரத் தீபங்கள் வரிசை வரிசையாக ஒளிர்ந்தன. [illegible] பூஜைக்காகப் பலவித வர்ண மலர்கள் தனித் தனிக் குவிய

லாகக் குவிக்கப்பட்டிருந்தன. நீல நிறத்தில் ஒரு குவியல். சிகப்பில் ஒரு குவியல். மஞ்சள் நிறத்தில் ஒரு குவியல். புஷ்பங்களின் நறுமணமும், அகிற் புகையின் வாசனையும் சேர்ந்து சிந்தனையை ஒருமுகப்படுத்த உதவும் என இந்தப் பூஜைகளை நிர்ணயித்த வர்கள் எண்ணியது சரிதான்.

கோயிலே கண்ணைக் கவரும்படி காட்சியளித்தது. ஆனால் பக்தர்கள் மட்டும் இல்லை. பட்டர் யாரையும் எதிர்பார்க்காமல் தேவாரம் பாடிக்கொண்டே சிவபெருமானை அலங்கரித்துக் கொண்டிருந்தார்.

"ஐயா!" என்று ஒரு குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார். 'கோயில் திறந்திருந்த வேளைகளில் இதுவரையில் அதிசயமாகத் தான் அவர் மனிதக் குரலைக் கேட்டிருப்பார் போலும்' என மாறன் நினைத்துக் கொண்டான். பட்டர் திரும்பி, இருவரையும் கண்டு கை கூப்பி வணங்கினார்.

பார்ப்பதற்கு பட்டர் பெரிய சிவபக்த சிகாமணி என்று தோன்றி யது. அவரை இந்த ஆழ்வார்க்கடியான் வம்புக்கு இழுக்காமல் இருக்க வேண்டும் என மாறன் நினைத்துக் கொண்டான். பட்டர் இவர்கள் அருகே வந்தார். அவர்களைக் கண்டு சந்தோஷப் பட்டார் எனத் தெரிந்தது. முகம் முழுவதும் புன்னகை. பின் இருவரையும் ஏற இறங்கப் பார்த்தார்.

உடம்பெல்லாம் நாமத்தைப் பூசியிருக்கும் அடியானை பார்த்து அடையாளம் கண்டு கொண்ட பின், "நீ ஈசானிய பட்டரின் தம்பிதானே?" என்றார்.

"இல்லை, அவர் என் அண்ணன்" என்றான் ஏட்டிக்குப் போட்டியாக அந்தப் பொல்லாத வைணவன். சிவ பக்தனை வம்புக்கு இழுக்காமல் அவனால் இருக்க முடியவில்லை.

இந்தக் கதை நடந்த கால கட்டத்தில் சைவர்களும் வைணவர் களும் தனித்தனி சாதியாய்ப் பிரிந்திருக்கவில்லை. ஒரே குடும்பத்தில் சைவப் பற்றுள்ளவர்களும், வைணவப் பிரியர்களும் இருப்பார்கள். அடியான் போன்ற சிலர் மட்டும் வீர வைணவன் என்றும் வீர சைவர் என்றும் சொல்லிக்கொண்டு ஊரெல்லாம் சண்டை போட்டுக் கொண்டு திரிந்தார்கள்.

அடியானின் ஒன்று விட்ட சகோதரர் ஈசான சிவ பட்டர் பரந்த நோக்கம் கொண்டவர். சிவன் கோயிலில் பூஜா கைங்கர்யம் செய்து வந்தார். விஷ்ணு கோயில்களுக்கும் போவார். இந்த சமயப் பிரச்சனையைத் தவிர, சகோதரர்கள் இருவருக்கும்

இடையே எந்தச் சமயத்திலும் தகராறு வந்ததில்லை. அவ்வளவு [illegible] மிக்க அன்பு கொண்டவர்கள்.

"தம்பி நீ சிவன் கோயிலுக்குள் போகமாட்டாய் என உன் [illegible] முன்பு வருத்தப்படுவாரே!" என்றார் பட்டர்.

"நல்ல பிரசாதம் இருந்தால் எங்கும் போவார்!" என்றான், [illegible] குறுக்கிட்டு.

பட்டர் சிரித்துவிட்டு "அதற்கென்ன? நல்ல சம்பாச் சாதம் [illegible]டு வைத்திருக்கிறேன். மிளகு மணக்கச் சூடாய் மடப் பள்ளியில் உள்ளது. ஈசனுக்குப் படைத்துவிட்டு உமக்கே தந்து [illegible]றேன். ஆனால் முதலில் பூஜை!" என்று கூறிக் கருவறைக்குச் சென்றார்.

"அன்பர்களே, உங்கள் நட்சத்திரங்களைக் கூறுங்கள். அர்ச்சனை [illegible] விட்டுக் கோயில் நடையைச் சாத்தலாம்" என்றார் பட்டர்.

மாறன் முந்திக்கொண்டு, "நான் கந்தமாறன், ஆதிரை [illegible]" என்றான்.

"எம்பெருமானின் நட்சத்திரமல்லவா? நல்லது!" என்று கூறிப் [illegible] வைணவனை நோக்கினார். "ஆழ்வார்க்கடியானுக்கு [illegible] நட்சத்திரமோ?" என்றார் .

அடியான் வாய் திறக்கும் முன் "வால் நட்சத்திரம்" என [illegible]ச் சிரித்து விட்டான் மாறன்.

"[illegible] வரை இவனது விளையாட்டுத் தனத்திற்கு அளவே இல்லை" [illegible] அடியான். அதற்குள் மாறனின் குறும்பு திரும்பி [illegible]ட்டைக் கண்டு அடியானின் மனம் திருப்தி அடைய [illegible]. அந்தக் குறும்பின் முழு வீரியத்தையும் அடியானிடம் சதா [illegible] கொண்டிருந்தபடியால்.

கருவறையில் பட்டர்,

"[illegible]தாய்க் கடற்காற்று வந்து எற்றக்கரைமேல்
[illegible]தான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகேள் உமக்கு ஆர்துணையாக இருந்தீரே"

என சுந்தரர் தேவாரத்தை மனமுருகிப் பாடினார்.

அதன் பொருளைப் புரிந்து கொண்ட மாறனுக்கு அதிசயம். [illegible] பெருமாளுடன் இங்கு வந்த சுந்தரர் கோயிலும் [illegible] தனித்திருப்பதைக் கண்டு, இந்தக் காட்டில் தனியாய் [illegible] வெறுக்காகப் பாடியது அந்தத் தேவாரம்.

கடவுளைக் கண்டு அஞ்சும் பக்தர்கள் உண்டு. ஆனால், கடவுளுக்காகவே அஞ்சும் பக்தனின் பாடல் அது. புருவங்களுக்கு மத்தியில் தீப்பொறி பறக்கும் நெற்றிக் கண் கொண்ட சிவபெருமானுக்கே துணையில்லை எனப் பாடும் பக்தனுக்குக் கடவுள் மீது எவ்வளவு பக்தி இருக்க வேண்டும்! இதே பக்தன்தான் பெண் மோகம் பிடித்தவர் என்று நேற்றுத் திருவாரூரில் நினைத்தோமே! மாறனுக்கு, ஒரு மனிதனுக்குள் ஈசன் மீது பக்தி, ஒரு பெண்ணின் மீது காதல் என இரண்டு வெவ்வேறு குணாதிசயங்கள் இருப்பது அதிசயமாக இருந்தது.

அடுத்து ஒரு கேள்வி. 'அது போல வீரமும், காதலும் ஒன்று சேர்ந்திருந்தால் தவறில்லையோ?' என அவன் மனதை உறுத்தியது.

கருவறையில் தீபாராதனையை முடித்துவிட்டு வந்த பட்டர் முதலில் "ஓம் நமச்சிவாய" என சொல்லிக் கொண்டு விபூதியைத் தன் நெற்றியில் இட்டுக் கொண்டார். பின் மாறனுக்குக் கொடுத்தார். மாறன் நினைத்தது போல அடியான் முகத்தைத் திருப்பிக் கொண்டான். 'பிரசாதம் வரும்போது எப்படியும் முகத்தைத் திருப்பித்தான் ஆக வேண்டும்' என மாறன் மனதினுள் நினைத்துச் சிரித்தான்.

பூஜை முடிந்த பின் குதிரைகளைக் கோயில் பிராகாரத்தில் விட்டுவிட்டு, அவை இரண்டுக்கும் புல்லும் நீரும் அருகில் வைத்து விட்டு, மூவருமாகக் கிளம்பினார்கள்.

"இப்போது எங்கே செல்கிறோம்? பட்டர் வீட்டுக்கா?" என்று கேட்டான் மாறன்.

"இல்லை, இல்லை, தியாக விடங்கர் வீட்டுக்கு" என்றான் அடியான்.

கோயில் கதவுகளைச் சாத்தும்போது அவை கிறீச் என்று ஒரு சப்தம் எழுப்பின. கோயிலுக்கு வெளியிலிருந்த இருளை நினைவு படுத்தி அது பயங்கரமாகக் கேட்டது.

நாதாங்கியை இழுத்துத் துருப் படிந்த பூட்டில் இறவுகோலைப் போட்டுப் பூட்டையும் பூட்டினார் பட்டர். சாவிகளை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தவர், பின் சாவிக்கொத்தை எடுத்து வேட்டியில் முடிந்து கொண்டார்.

பொறுமை இழந்த அடியான், "இங்கே என்ன இருக்கிறது திருட்டுப் பயல்களுக்கு?" என்றான்.

"ஆமாம்.வேண்டுமானால் இரவு கதவை உடைத்து உள்ளே சென்று கடவுள் அருளைத் திருடிச் செல்லலாம்," என்று ஒப்புக் கொண்டார் பட்டர்.

"[illegible]படி சென்றால் பெருமாள் கோயிலைப் போயல்லவா [illegible] [illegible]பான்!" என்றான் அடியான்.

"[illegible]ரம்பித்து விட்டாயா? உன் அண்ணன் எப்படிப் பட்ட சிவ[illegible] அவர் போல நீயும் ஆகக் கூடாதா?" என்று கேட்டார் [illegible].

"ஒரு குடும்பத்துக்கு ஒரு முட்டாளுக்கு மேல் எம்பெருமான் [illegible]பதில்லை!" என்றான் அடியான்- மூஞ்சியில் அடித்தாற் [illegible].

[illegible] திகைத்தார். இருளிலும் அவரது முகம் வாடியது [illegible]ளிவாய்த் தெரிந்தது.

[illegible] சுதாரித்துக்கொண்டு, "மடையனைக் கோடிக்கரைக்கு [illegible]விட்டு உமது அண்ணன் அங்கு நிம்மதியாக இருக்கிறார் [illegible]!" என்றான். அடியான் முறைக்க, பட்டர் வாய்விட்டுச் [illegible]விட்டார்.

"[illegible] புத்திசாலியாகத்தான் இருக்கிறான்" என்றார்.

[illegible] எல்லாருமாக நடந்தார்கள். கோயிலைச் சுற்றி [illegible] அக்கிரகாரத்து வீடுகளில் பலவும் பாழடைந்து கிடந்தன. [illegible] அந்தணர்கள் பல நாட்களாகத் தங்கவில்லை எனத் [illegible] இந்த இருளிலும் பயத்திலும் இருக்க வேண்டாமென [illegible]யே சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன்னுடன் அழைக்க [illegible]?

[illegible] அதிகமாக வரும் கோயிலுக்கு வருமானம் பலவிருக் [illegible] வேலை செய்யும் பட்டருக்கோ வசதிகள் ஏராளமாக [illegible]. ஆனால், ஒரு சேவை மனப்பான்மையுள்ள மனிதனே [illegible] போன்ற கோயிலுக்குச் சேவை செய்ய முடியும். இங்கு [illegible] ஊதியம் சொற்பந்தான். ஆனால், அவருடைய சேவை [illegible] இந்தத் தனிக்காட்டில் வாழ்க்கை முழுதும் செலவிட்டு [illegible] அந்தமும் இல்லாத பரம்பொருளைக் கவனித்து வந்தார் [illegible]

"[illegible] திருப்பணி நடப்பதால் கோயில் கொஞ்சம் கலகலப்பா [illegible] இந்த வேலையாட்கள் போய்விட்டால் அப்புறம் [illegible] ஒரு காக்கை கூட வராது" என்றார் பட்டர்.

[illegible] மீண்டும் காட்டில் புகுந்தார்கள். கோயிலின் [illegible]லிருந்து காட்டின் இருளுக்கு வந்தபோது, சுற்றுப் [illegible] போல மனதிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. [illegible] சப்தங்கள் கூடக் கொடூரமாகக் கேட்டன.

காட்டில் நுழைந்தவுடன் மீண்டும் மனித வாசனையே இல்லை. இந்தக் காட்டுப் பிரதேசத்தில் அடுத்த திருப்பத்தில் எதை எதிர் பார்ப்பது எனத் தெரியாமல் நடைவேகம் குறைந்தது. மிருகமா, இல்லை, அதை விடக் கொடிய எதிரியா என இனந் தெரியாத பயம்.

போகும் பாதைகள் எதுவும் எளிதாயில்லை. காட்டிலும் மேட்டிலும், கல்லிலும் முள்ளிலும் அவர்கள் நடப்பதாய் ஆயிற்று.

"என் பின்னே வாருங்கள். இது அபாயகரமான இடம். நான் தினம் தினம் செல்வதால் பழகிப் போனது" என்று பட்டர் சொன்னது மனதுக்கு ஆறுதல் அளிக்கவில்லை.

"இந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கே புதைசேறு இருக்கும்" என்றார் பட்டர்.

"அது என்ன?" என மாறன் ஒரு நடுக்கத்துடன் கேட்டான். "பெயரே நன்றாய் இல்லையே!"

"நிலத்தின் மேலே காய்ந்த பொருக்குத் தட்டியிருக்கும். இடம் பார்க்கத் தரை போலத்தான் இருந்தாலும். உள்ளே காயாத சேறு கொண்டிருக்கும். ஆடு மாடுகள், குதிரைகள், ஏன் - மனிதர்கள் கூட அதை மிதித்தால் உள்ளே போய் விடுவார்கள். அப்புதை சேற்றுக் குழிகள் அவர்களை விழுங்கி ஏப்பம் விட்டுவிடும். அதில் நாம் கால் வைத்தால் உயிருடன் சமாதிதான்!" என்று விளக்கினார்.

ஆங்காங்கே பாசிபடர்ந்த கற்கள் இருந்ததால் இதுவரை இருண்ட காட்டுப் பாதையில் மாறன் காலை ஊன்றி ஊன்றி வைத்து விழுந்து விடாமல் நடந்து வந்தான். ஆனால், இப்போது காலை அழுத்தி ஊன்றவே நடுங்கினான். மாறனுக்குத் தான் ஒரு குழியினுள் மெல்ல மெல்ல உள்செல்வது போலப் பிரமை ஏற்பட்டது. அதனுடன் ஒரு நடுக்கம் உடலெங்கும் ஏற்பட்டது. பின் மிக அக்கறையுடன் பட்டரைக் கவனமாய்ப் பின் தொடர்ந்தார்கள்.

மாறன் நாலாபுறமும் உற்றுப் பார்த்தாலும் ஒரு வெளிச்சமும் கண்ணுக்குத் தெரியவில்லை. தலைக்கு மேலிருந்த கரும்பச்சை நிறத் தாவரத்திரையைத் தாண்டி நிலவொளி கூடக் கீழே வரவில்லை.

இருட்டிச் சுமார் ஒரு ஜாமப் பொழுது ஆகியிருக்கும். உள்ளத்தில் சிறிது பதைபதைப்பு உண்டாகத் தொடங்கியது. காட்டில் சில சமயம் சலசலப்புச் சத்தம் கேட்டது. துஷ்ட மிருகங்களின் குரல் ஒலியும், ஆந்தைகளின் அருவருப்பான கூவலும் கேட்டன. இருண்ட அந்த வனப் பிரதேசத்தில் மரத்திலிருந்த கரும் பொந்தில்

...களில் கோட்டான்கள் குடிகொண்டிருந்தன. இருளில் அவற்றின் கண்கள் மட்டும் வட்டமான விளக்குகள் போல ஜொலித்தன.

...கலக்கத்துடன் இருவரும் சென்றார்கள். இரவில் வந்தது தவறு என மாறன் நன்கு புரிந்து கொண்டான். "இந்த வைணவன் இன்றிரவு நம்மைத் திட்டித் தீர்த்துவிடுவான். அதாவது உயிருடன் ...ப் சேர்ந்தால்."

பாதை இருள் படிந்ததுதான். ஆனால், பட்டர் தினமும் ...பயன்படுத்தியிருந்ததால் சீராக இருந்தது. சில இடங்களில் செடி கொடிகளை விலக்கி வழியமைத்துக் கொண்டு முன் செல்ல வேண்டியிருந்தது. பட்டர் கவலையில்லாமல் நடந்தார். ஆனால், ...மற்றவர்கள் இருவரும் சற்றுப் பயந்தே நடந்தார்கள். ஒவ்வொரு ...வை மட்டும் மண்ணை அழுத்தும்படி மிதித்தவாறு பட்டரின் ...னால் நடந்தார்கள். முன் கால் திடமான தரையைத் ...டியிருந்தால் மட்டுமே அடுத்த காலை ஊன்றிய இடத்தை ...ம் நகர்த்தினார்கள்.

...ரையைப் பற்றி மட்டுமே கவனத்தைச் செலுத்திச் சென்றவர் ...க்கு அதிர்ச்சி. திடீரென அவர்களின் வலது புறத்தில் ...ர்த்து தீப்பிழம்புகள் தரையிலிருந்து தோன்றின. இருட்டில் ...பல நாக்குகள் கொண்ட ஒரு பிசாசின் உருவம் போலவே ...து. தரையின் மீது நடப்பவரை விழுங்க பூமிக்கடியிலிருந்து ...ஒரு துஷ்டப் பிராணி முயற்சிப்பதாகவே தோன்றியது. ...ஸ்தம்பித்து நின்றான்.

...து என்ன கோரமான உருவம். நம் கண் முன் தோன்றுவது ...மையான காட்சிதானா? அல்லது நமது மூளை கலங்கி ...தா? அதனால் ஏற்பட்ட தோற்றமா?'

...தவில் அடியான் ஏதோ பாசுரத்தை முணுமுணுப்பதாகத் ...ந்தது. 'அப்படியென்றால் அவனுக்கும் அது தெரிந்திருக்கும். ...நேரத்தில் இருவரின் மூளையும் கலங்க வாய்ப்பில்லையே? ...ர் மட்டும் ஒரு கவலையுமின்றி நடக்கிறாரே!'

"...அது ஒன்றும் இல்லை. கந்தகம் கலந்த பிரதேசங்களில் ...! வெகு காலம் தேங்கி இருப்பதால், இது சதுப்பு நிலமாகி ...து. இரவில் இம்மாதிரித் தோற்றங்கள் ஏற்படும். பூமிக் ...கியிலிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும்போது ...ப பிழம்பு "குப் குப்" எனத் தோன்றி மறையும். இது ...ளிவாய்ப் பிசாசு வருவது போலிருக்கும் என்று மக்களும் பீதி ...டைவார்கள். சில நாட்களில் பழகிப் போய்விடும்" என்றார்

மாறனது உடம்பு சிலிர்த்தது. "நாம் என்ன அப்படி ஒரு பயங்கொள்ளியாக மாறிவிட்டோம்!"

ஆனால், கவலை குறையவில்லை. "அடர்த்தியான மரங்களும் ஆளில்லாப் பிரதேசங்களும் கொண்ட இடம் இது. இந்த அடர்ந்த காட்டில் புகுந்து தியாக விடங்கர் வீட்டை இந்த இருளில் எப்படிக் கண்டுபிடிப்பது?" என்று மாறன் கவலையுடன் வினவினான். அந்த விடங்கர் இருப்பது ஒரு கடலோரக் குடிலாய்த் தான் இருக்க முடியும் என்று அவர்கள் பேச்சிலிருந்து யூகித்திருந்தான்.

அடியான் சிரித்தான். ஆனால், பதிலைப் பட்டரே கூறினார். "அவர் வீட்டில் உள்ள வெளிச்சம் சோழர்களின் அரண்மனையில் கூட இருக்காது. வாருங்கள்."

சிறிது தூரம் சென்றவுடன் அந்தக் காரிருளில் ஓர் அதிசயத்தைப் பார்த்தான் மாறன். அடுக்குத் தொடராய் அதிசயங்கள் நிகழும் இந்த இரவை அவன் வாழ்நாளில் மறக்கவே முடியாது போல.

வானத்தையும் பூமியையும் பொன்னொளி மயமாக்கிக் கொண்டு ஒரு வெளிச்சம் இருந்தது. ஏதோ ஒரு பனை மரம் தீப்பிடித்து எரிவது போலத் தோன்றியது. மற்ற இருவருக்கும் அது அதிசயமாகத் தெரியவில்லை. "அதுதான் கலங்கரை விளக்கம்" என்று மாறனிடம் விளக்கினான் அடியான்.

அவர்கள் இருவரும் சூசகமாய் விடங்கரின் வீட்டைப் பற்றிப் பேசியது இப்போதுதான் புரிந்தது. கலங்கரை இருந்த திசையை நோக்கி மூவருமாய் நடந்தார்கள். பின்பு மரங்கள் அந்தக் கலங்கரையின் ஒளியை மறைத்தன. மீண்டும் இருள்தான்.

மாறன் சில சமயம் இரண்டு கைகளையும் எட்டி வைத்து நடந்தான். அவ்வளவு இருட்டு. இந்தக் காட்டுப் பாதை இப்படியே எவ்வளவு தூரம்வரை போகும்? இத்தகைய கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி எத்தனை தூரம் போக வேண்டுமோ?

திடீரெனக் காடு அடர்த்தியாகத் தோன்றவில்லை. சற்று நேரம் அதன் இருளில் பழகியதால் ஏற்பட்ட பிரமையோ? இல்லை, இல்லை. "இருள் சற்றுக் குறைந்து வருகிறதே."

மிக மிக மங்கலான ஒளி தோன்றியது. இப்போது தலைக்கு மேலிருந்து நிலவொளி வருகிறது. நிலவின் வெளிச்சத்தில் காட்டின் ஆயிரம் கரங்கள் சாம்பல் நிறத்திலும் அதன் லட்சம் விரல்கள் வெள்ளியிலும் பிரகாசித்தன.

சட்டெனக் காடு முடிந்தது. ஏதோ ஒரு பூதாகர மரம் வெட்டி தன் வேலையை அதுவரை காட்டியது போல. ஒரு கடற்கரை தெரிந்தது. வானத்திலிருந்து வந்த வெள்ளி நிலாக் கதிர்கள்

…றாகச் சேர்ந்து பூமியில் மண்டிக் கிடந்தது போல இருந்தது …ந்த மணல்.

…றைப்பரப்பை அடைந்தவுடன் கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் …ொண்டான் அடியான். ஆனால், இன்னமும் ஈரமண்ணில் …ாதங்கள் அழுந்தி அழுந்திப் புதைய முதலில் ஒரு பயம் இருந்தது.

இப்போது மரங்கள் இல்லாதபடியால் கலங்கரை நன்றாகத் …ெரிந்தது. நிலத்திலிருந்தும் நீரிலிருந்தும் திடீரெனச் செங்குத்தாக …ம்பியது கலங்கரை விளக்கம். பாறைகளுக்கு இடையே ஒரு …யரமான ஸ்தூபியாகத் தனியே நின்றது. சுற்றுப்புறத்தில் ஏதும் …யரமான மரங்கள் இல்லாதது அதைத் தனியாகக் காட்டியது.

"ஏன் மக்கள் தொகை இங்கு குறைவாக உள்ளது?" என மாறன் …லவ. அடியான் விளக்கினான்.

"நாகையிலும், புகாரிலும்தான் பெரும்பாலும் வர்த்தகர்களின் …ண்டக சாலைகளும், சுங்க மண்டபங்களும் இருக்கின்றன. …ரிய மக்கள் தொகை இருக்கின்றது. ஊருக்கு வெளியே …ம் கோட்டிகளும், மீன்பிடி வலைஞருந்தான் அதிகமாக வாசம் …ய்து வந்தார்கள். இங்கு மீன் பிடித்தால் யாரிடம் போய் விற்க …டியும்?"

அப்போது "அங்கு தெரிவதுதான் சித்தர் மடம். அங்கு இன்னும் …ல சித்தர்கள் வாழ்வதாக ஐதிகம்" என்றார் பட்டர், ஒரு …ங்கரையில் பாழடைந்த கட்டடத்தைச் சுட்டிக் காட்டி.

பாதி வழியில் பட்டர் தன் வீட்டுக்குச் செல்லும் ஒரு கிளைப் …ாதையில் திரும்பினார். "நீங்கள் எல்லாரும் பெரிய இடமாகப் …ார்த்துத்தான் தங்குவீர்கள். நானோ எளியவன்" என்று கூறி, "…லையில் பார்ப்போம்" என்றும் சொல்லி இருளில் மறைந்தார்.

காலுக்குக் கீழே பாதை கடற்கரை மண்ணாய் இருந்தபடியால் …டை வேகம் குறைந்தே இருந்தது. தூரத்தில் ஒரு குடிசை …ெரிந்தது. "பட்டர் சொன்ன பெரிய இடத்துச் சாவி அங்கிருக் …மோ என்னவோ? சுற்றிப் பார்த்தால் வேறு கட்டடமே இல்லை. …லங்கரையைத் தவிர" என்று மாறன் குழம்பினான்.

அச்சிறு குடில் இருக்கும் இடத்தை நோக்கிப் போனான் …டியான். இரவு அங்கு தங்கும் எண்ணத்துடன்தான் செல்கிறான் …றிந்த மாறன் "பெரிய இடம் என்று பட்டர் கூறினாரே" என …கத்தான் மாறன். "இதுவா அது?"



அத்தியாயம் பதினேழு

கலங்கரை காவலனின் குடிசையில்...

அந்தக் குடிசையை வர்ணிக்க வேண்டுமென்றால் ஒரு வார்த்தை போதும். வெறுமை.

நிச்சயமாக அது வறுமை இல்லை. கடல் காற்றிலிருந்தும் அவ்வப்போது வரும் புயல்-மழையிலிருந்தும் அங்கு வசிப்பவர்கள் கஷ்டப்பட மாட்டார்கள் எனத் தெளிவாய்த் தெரிந்தது. அதற்காகப், பட்டரும் அடியானும் கூறியபடி, இது பெரிய இடமாக இருக்கவும் சாத்தியமில்லை.

குடிசையை நெருங்க நெருங்க, ஜன்னல் வழியே உள்ளே விளக்கு எரிவது தெரிந்ததால், இன்னும் அங்கு வசித்தவர்கள் ஏகாந்தமாகயில்லை எனத் தெரிந்தது. கட்டடத்தின் முன்னிருந்த தோட்டத்தைக் கடந்து குடிலின் சிறிய கதவை நோக்கி இருவரும் நடந்தனர்.

பலமாக அந்தக கதவில் தட்டினான், அடியான். வெளியில் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டதும் உள்ளே மக்கள் நடமாட்டம் ஏற்பட்டது.

கதவைத் திறந்து, "யாரது?" என்று கேட்டுகொண்டே வாசற்பக்கம் ஒருவர் வந்தார்.

வந்தவரைப் பார்த்தால், காலம் எழுத்தாணி கொண்டு கிறிய முகம்தான் முதலில் பார்ப்பவர்களின் மனதில் பதிந்தது. அது அவரது முதிய வயதையும் அவரது கஷ்டமான தொழிலையும் காட்டியது. அவர் கழுத்தில் ஒரு சிகப்புக் கயிற்றில் கோர்க்கப் பட்ட ஒரு உருத்திராட்சம் தொங்கியது. நெற்றியில் திருநீறு பூசியிருந்தார்.

தோளில் கரி படிந்த துண்டிருந்தது. மிகவும் வயதானவராகவும் தெரிந்தார். அவரது வாயில் பற்கள் இல்லை. ஒரு பறவையின் கூடு போலச் சுருங்கித் தெரிந்த சதையில்லாத கன்னங்களுடைய முகத்தின் நடுவே அவருடைய கண்கள் மட்டும் இந்த வயதிலும் பளிச்சென்று ஜொலித்தது. அவரது அறிவாற்றல் சற்றும் குறைய வில்லை என எடுத்துக் காட்டியது.

"வணக்கம், தியாக விடங்கரே!" என்று கைகூப்பி வணங் கினான், அடியான்.

ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்டு, "வைணவரே, வாரும், வாரும். வெகு நாட்களாயிற்று உம்மைப் பார்த்து!" என்றார், அந்தப் பெரியவர். அவர் முகத்தில் அடியானைப் பார்த்ததில் ஒரு மகிழ்ச்சி பரவியது.

அடுத்து, அடியானுக்குப் பின்னால் நின்ற மாறனைக் கண்களில் கேள்வியுடன் பார்த்தார் தியாக விடங்கர். "இவர் சம்புவராயர் குலத்தின் இளவரசர். பெயர் மாறன்" என்று அறிமுகப்படுத் தினான், அடியான். உடனே தோளிலிருந்த துண்டு இடுப்புக்கு வந்தது பெரியவருக்கு.

மாறனிடம் திரும்பி, "இவர்தான் தியாக விடங்கர். இந்தக் கலங் கரை விளக்கைப் பார்த்துக் கொள்பவர்" என்றான், அடியான்.

"இப்போதுதான் தீயை மூட்டிவிட்டு வந்தேன்" என்றார், பெரியவர். "இரவு போஜனத்தை முடித்துக் கொண்டு செல்வோம் என வந்தேன். நல்ல வேளை உங்களையும் வரவேற்க முடிந்தது."

"தீயை வரும் வழியில் பார்த்தோம்" என்பது போல் தலை அசைத்தான் அடியான்.

"தூரத்திலிருந்து வந்திருக்கிறீர். வயிற்றுக்குப் பசியாய் இருக்கும். இந்த எளியவன் வீட்டில் அமுது செய்துவிட்டுப் பின் ஓய்வெடுங்கள். அப்புறமாக நான் கலங்கரை வரை சென்று வருகிறேன்" என்றார். பின் "காற்றோட்டமாய் வெளியிலே இருக்கலாம். உணவு தயாரான பிறகு உள்ளே செல்லலாம்" என்றார், விடங்கர்.

வெளித் தாழ்வாரத்தின் கீழ் இருந்த திண்ணையில் இருவரை யும் அமர வைத்து, "இளவரசர் என் குடிசைக்கு வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி!" என்று கூறி, உள்ளே சென்று ஏதோ கூறிவிட்டு வந்தார்.

விடங்கர் அவர்களுக்குத் தங்க இடமும் இரவு உணவும் கொடுப்பது ஒரு பெருமை என நினைப்பது மாறனுக்குப் புரிந்தது. "உயர்ந்த குல மக்கள் வந்து தங்குவதை எவ்வளவு பெருமையாய்க் கருதுகிறார் இந்த விடங்கர்! எவ்வளவு பணிவுடன் அரச குலத்தை அணுகுகிறார்!" என்று நினைத்தான் மாறன். இனித் தன் வீட்டுக்கு வரும் உறவினரிடமெல்லாம் பெருமையாய்ச் சொல்வார். "சம்புவ ராயர் இளவரசன் இந்தத் திண்ணையில்தான் படுத்திருந்தார்" என்று.

சில நொடிகளில் குடிசைக்குள்ளிருந்து வாசம் வந்தது. சூடான அடுப்பின் மீது எண்ணெய் காயும் வாசனை, சாப்பாடு தயார்

என்பதை விளம்பரப்படுத்தியது. உடனே வயிற்றில் ஒரு முணுமுணுப்பு இருவருக்கும்.

'ஆகா! இந்த வயிறுதான் எவ்வளவு புத்திசாலி. வாசத்தை மோப்பம் பிடித்தவுடன் உணவருந்தத் தயாராகி விட்டதே!' என்று நினைத்தான், அடியான். குருக்கள் கொடுத்த பிரசாதம் அங்கிருந்து வந்த போதே ஜீரணம் ஆகிவிட்டது. இப்போது இருவருக்கும் நல்ல பசி.

''ஐயா! உள்ளே வாருங்கள்'' என்று கதவை முழுவதுமாகத் திறந்தார். இருவருமாக உள்ளே சென்றார்கள். கதவின் மேல் சட்டம் தலையை இடித்துவிடும் போலிருந்தது. வீட்டில் நுழையும் போது குனிய வேண்டியிருந்தது. குடிசைக்குள் வெளிச்சம் குறைவாக இருந்தபோதும், அடுப்பில் கம்பு அடை வேகும் வாசனை இப்போது நன்றாய் வந்தது.

குடிசையில் இருவருக்கும் ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. திடகாத்திரமான ஒரு வாலிபன் தைத்த இளம் ஆலம் இலையிலே போட்டிருந்த கம்பு அடையைக் கீரைக் குழம்புடன் பரிமாறினான். விடங்கரின் மகனாய் இருப்பான் போலும். அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவர்கள் உண்ணும் உணவை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழும் உணர்வைக் கண்டு மாறன் நெகிழ்ந்தான். உணவு அருந்தும் இருவருக்கும் அருகே வந்து விடங்கர் நின்று கொண்டே ஒரு பனை ஓலையில் பின்னிய விசிறியினால் விசிறினார்.

''அரச பரம்பரையைச் சேர்ந்த விருந்தினர்கள் வந்ததால் இவர்கள் குடிசைக்குப் பெருமை என இப்படிச் சேவகம் செய்கிறார்கள். இப்படிப் பாமரரின் சேவகத்தில் சுகம் கண்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன!'' என்று பெருமூச்சு விட்டான், மாறன்.

தியாகவிடங்கரின் மகன் அடுப்பில் அடை சுட்டுக் கொண்டிருந்தான். சுடச்சுட ஒன்றொன்றாகக் கொண்டு வந்து கொடுத்தான்.

அடியானுக்கு ஒன்று, மாறனுக்கு ஒன்று என அவன் வைத்து வரவே, பாகப் பிரிவினை ஒழுங்காக நடந்திருக்க வேண்டும். ஆனால், மாறன் தன் அடைக்காகக் காத்திருக்கும்போது அடியான் வெகுவேகமாய் அவனது பாகத்தை முடித்துவிட்டு ஏக்கமான கண்களுடனும், காலியான இலையுடனும் காத்திருப்பான். மேலும் அவன் தன் விரல்களில் ஒட்டியிருந்த கீரையை ருசி பார்த்துச் சாப்பிட்டுப் பல தடவை நாக்கைச் சப்புக் கொட்டி விட்டுச் சப்தமும் செய்தான். தியாகவிடங்கரின் மகன் ஓரிரு முறை

[illegible]பி அடியான் தட்டில் மாறனுக்குரிய அடையைப் போட்டு [illegible], மாறன் முறைத்தான்.

அடியானின் பெரிய வயிறு நிரம்பும் முன், இரவின் மூன்றாம் [illegible] வந்துவிடும் என்று யூகித்த மாறனும் சரியான ஈடு கொடுத்து அடைகளை உண்டு கொண்டிருந்தான்.

விடங்கர், ''எங்கள் இருவருக்கும் இங்கு சமைத்துக் கொடுக்கப் பெண்கள் யாருமில்லை - மகள் திருமணமாகிப் போன பிறகு'' என்று கூறினார்.

பின்பு மாறனைப் பார்த்து, ''என் மகளைத் தஞ்சையில் கட்டிக் கொடுத்திருக்கிறேன்'' என்று அவர் பெருமிதமாய்க் கூறும்போது, மாறனுக்கு உள்ளுக்குள் சிரிப்பு. 'ஏதோ சக்கரவர்த்தியின் ஒன்று விட்ட சகோதரனுக்குத் திருமணம் கட்டிக் கொடுத்தது போலப் [illegible]கிறாரே, கிழவர். ஆனால், நாம் ஒன்றும் சொல்லக் கூடாது. [illegible]வராய்த் தெரிகிறார்' என்று நினைத்தான்.

இரவு போஜனம் முடிந்தது. கிழவரின் மகன் குவளையில் நீரும் [illegible] துடைக்க ஒரு துண்டும் ஏந்திய கைகளுடன் குடிசைக்கு வெளியே காத்திருக்க, இருவருமாய் எழுந்தனர்.

''வயிறார உண்டீர்களா?'' என்று ஆத்மார்த்தமான அன்புடன் [illegible]ரித்தார், கிழவர். ''இங்கு பெண்கள் வெகு காலமாக இல்லாததால், நாங்கள் சமைக்கக் கற்றுக் கொண்டோம்'' என்றார், [illegible]விட்டுக் கோரும் தோரணையில்.

''கஷ்டமாகத்தான் இருக்கிறது. திருமணமாகி அந்தக் குழந்தை [illegible] வீடு போய்விட்டவுடன், தனிமை எனக்கு இப்போது [illegible] விட்டது... ஆனால், எல்லாம் பகவான் செயல்.''

ஏதோ தத்துவம் பேசியது போல அவர் சிரித்தார். பதிலுக்கு அடியானும் சிரித்தான். மாறனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், அவன் அரச குலத்தைச் சேர்ந்தவனாதலால்தான் இவ்வளவு உபசாரம் செய்கிறார்கள் என்று மட்டும் யூகித்தான். அரச குலத்தைப் பார்த்தால் பொதுமக்கள் பணிந்து செயல் படுவது இயல்புதானே. இவ்வளவு நாள் நாம் அனுபவிக்காததால் இது [illegible] போனது என நினைத்தான். உணவு உள்ளே சென்றதும் [illegible] குரலில் ஆரம்பித்தார், பெரியவர்.

''என்ன காரியமாய் வந்தாய், திருமலை? யார் உன்னை அனுப்பினார்கள்? நாளை இலங்கைக்குப் பிரயாணமா? படகு வலிக்க யாரேனும் வேண்டுமென்றால் இப்போதே சொல்லிவிடு. ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

''இலங்கைக்குச் செல்வதாய் இப்போதைக்கு உத்தேசம் இல்லை. சக்கரவர்த்தி வேலையாகத்தான் வந்தோம். கோடியில்தான் வேலை'' என்றான், அடியான்.

சக்கரவர்த்தி என்று சொன்னவுடன், அவர் முகத்தில் ஒரு மர்மமான புன்னகை தோன்றியது. அதை மாறன் கவனித்தாலும், அதன் பொருளை அறிய முடியவில்லை. அதற்குள் தாம்பூலத் தட்டைக் கொண்டு வந்து வீட்டின் முன்கட்டில் செங்கல் அடுக்கித் தளம் போட்ட கூடத்தில் விடங்கரின் மகன் வைக்க, இருவருமாக உட்கார்ந்து கொண்டு பழைய கதையெல்லாம் பேசினார்கள்.

மாறன் திண்ணையில் அமர்ந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடியான் தன் குடுமியை அவிழ்த்து விட்டுப் பேசத் தொடங்கினான். அவர்களுடைய பேச்சு தனி ரகமாயிருந்தது.

''உமக்குப் பாக்கும் வெற்றிலையும் வேண்டாமா?'' என்பது போல விடங்கரின் மகன் மாறனைப் பார்த்துச் சமிக்ஞையினால் கேள்வி கேட்டான்.

''இவர் என்ன பேச மாட்டாரா?'' என்று மாறன் வினவ, அடியானே பதிலளித்தான். ''அவன் ஊமை. இவர் குடும்பத்தில் பலரும் அப்படித்தான்.''

மாறன் மனதில் ஏதோ ஒரு விஷயம் முளைத்து வெளிவர முயன்றது. ஆனால், அதை மற்ற விஷயங்கள் மூடி மறைத்தன.

பெரியவர் ஏகப்பட்ட கேள்விகளைத் தயாராக வைத்திருந்தார். ''அரசர் எப்படி இருக்கிறார்? அரசியார் எப்படி இருக்கிறார்? பின் பொன்னியின் செல்வர் எப்படியிருக்கிறார்?'' என்று அனைவரையும் பற்றிக் கிழவர் விசாரிக்க, அடியானும் அவர்களது நலத்தையெல்லாம் ஒன்றொன்றாய் விவரித்தான்.

'அரச குடும்பத்தைப் பற்றிச் சாமானியர்களும் பேச ஆரம்பித்து விட்டார்கள். அரசனுக்குப் பயந்த அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போய்விட்டது' என்று நினைத்தான் மாறன்.

மாறனுக்கு ஆச்சரியம். விட்டால் அடியான் வந்த வேலையைப் பற்றிக் கூடச் சொல்லியிருப்பான் போலும். அந்தக் கிழவனிடமும் தவறில்லை. கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அடியான் பூரணமான பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தது தான் தவறு.

''பேசினால் இரவெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால், கடமை அழைக்கிறது, இளவரசே. நான் கலங்கரை விளக்கத்திற்குச் செல்லுகிறேன்'' என்று சொல்லிக் கிழவர் எழுந்தார்.

''இந்த இரவில் போய்த்தான் ஆக வேண்டுமா?'' என்று வியந்தான் மாறன்.

''கருமையான இரவில்தான் எங்கள் சேவைக்குத் தேவை இருக்கும். காற்றில் அடிக்கடி தீ அணைந்து போகும். திரும்ப ஏற்றிவிட வேண்டும். ஒரே சமயத்தில் குளிரும் வெப்பமும் தாக்கும் தொழில் இது ஒன்றாய்த்தான் இருக்க முடியும்'' என்றார் கிழவர், சிரிப்புடன். ''கலங்கரை விளக்கு உச்சி மண்டபத்தில் தீ ஏற்றியவுடன் அது இரவெல்லாம் எரிய வேண்டும். அப்போதுதான் கடலில் செல்லும் மரக்கலங்களுக்குக் கரையின் அருகில் நெருங்க வேண்டாம் என எச்சரித்துக் கொண்டிருக்கும். இங்கு வெகு தூரத்துக்குக் கடலில் இடுப்பளவுதான் ஆழம். கடற் தரையிலிருந்த பாறைகள் நீர் மட்டத்திற்கு வெகு சமீபத்தில் இருக்கும். சிறிய படகுகள் அதன் மேல் எளிதாகச் சென்றுவிடும். கப்பல்களும் மரக்கலங்களும் வந்தால் மோதிச் சுக்கு நூறாய் உடைந்து விடும்'' என்று சொல்லிப் புறப்பட்டார் விடங்கர்.

கிழவர் சற்றுத் தூரம் போனவுடன் மாறன் கோபமாக அடியானிடம், ''வைணவனே! உமக்கு எங்கே போனது புத்தி? அரசாங்க வேலையைப் பற்றிக் கூட அவரிடம் முழு விவரம் தந்து விடுவீர் போலிருக்கிறதே!'' என்று கடுமையான குரலில் கேட்டான்.

முகம் மாறியது, அடியானுக்கு. ''அவர் என்ன சாமானியப் ...வரா..?'' என்று ஆரம்பித்தவன், பின் வாயடைத்து. ''அரசாங்க வேலையில் இருப்பவர் அல்லவா?'' என்று சுரத்தில்லாமல் சொன்னான்.

ஒரு சாதாரண மனிதன், அரசாங்க வேலையில் இருப்பதனால் அவனுக்கு அடியான் எவ்வளவு மதிப்புத் தருகிறான் என்று மாறன் வியந்தான். ''சர்வ அசடான உம்மை எப்படி ராஜ்ஜியக் காரியங்களுக்கு அனுப்புகிறார்களோ தெரியவில்லை'' என்று கூறித் திண்ணையில் கால் நீட்டிப் படுத்தான்.

கடலிலிருந்து எழுந்தது மெல்லிய காற்று. அத்துடன், ஆயிரமாயிரம் நீர்க் குமிழிகள் ஒரே சமயத்தில் வெடிப்பது போல் ஒரு மெல்லிய சப்தத்தை எழுப்பிய கடல் அலைகள். இரண்டுமாய் மெல்லத் தாலாட்டுப் பாடி அவனைத் தூங்க வைத்தன. சென்ற இரவுகளில் நல்ல தூக்கம் இல்லை என்பதாலும், நெடுந்தூரப் பிரயாணத்தினாலும் ஏற்பட்ட களைப்பினாலும் சாய்ந்த ஒரு நொடியில் தூக்கம் மாறனை ஆட்கொண்டது.

ஆனால், அந்த இரவின் பல விதமான நிகழ்வுகள் மனதை நிம்மதியாகவா இருக்கவிடும்? புதை சேறும், பூமிக்கடியிலிருந்து

எழுந்த தீப்பிழம்புகளும் அவன் மன அமைதியைப் பாதித்திருந்தன. அவன் முகம் வெவ்வேறு விதமாய் மாறியது. திடீரென விழித்த மாறன் கண்ணைத் திறந்து பார்த்தான். அவன் இருந்த திண்ணையிலிருந்து அருகில் தீப் பற்றி எரிவது தெரிந்தது.

இங்கும் அங்குமாய் வெறித்துப் பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. ஒரு நொடிக்குப் பின் புரிந்தது. அது கலங்கரை விளக்கமென்று. ஆனாலும் அது தன் கடம்பூர்க் கோட்டை தீயில் இரையானதை நினைவு படுத்தியது. உடனே உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது.

அவனை அதுவரை காதலி போல் அரவணைத்து ஆட்கொண்ட நித்திரா தேவி அலறியடித்துக்கொண்டு ஓடோடி விட்டாள். இனி இரவு முடியும்வரை இந்தத் திசையில் கூட எட்டிப் பார்க்க மாட்டாள் என்பது உறுதி.

பாறையினால் செய்யப்பட்ட திண்ணையின் மேல் உறக்கம் வராமல் படுத்திருப்பது பெரும் பாடு. துணி மூடாத பாகங்கள் பாறையின் குளிரினால் தாக்கப்பட்டுப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தன. தரையில் ஒரு விரிப்புகூட இல்லாமல் தூங்கும் போதுதான் கடம்பூரில் அவனது இதமான படுக்கையின் அருமை தெரிந்தது. புரண்டு படுத்தவன், அடியானும் தூங்காமல் விழித்திருந்ததைக் கண்டான்.

திண்ணையில் உறக்கம் வராமல் போராடிய மாறனைப் பார்த்து விட்டான் அடியான். படுத்திருந்தவன் தூக்கத்தில் ஏதோ முனகியவாறு உருண்டதைப் பார்த்த அடியான் வருத்தம் தோய்ந்த முகத்துடன், ''உங்களுக்கு என்ன, ஏதாவது உடம்பு குணமில்லையா?'' என்றான்.

''உடம்பெல்லாம் நன்றாய்த்தான் இருக்கிறது. மனம்தான்.....'' என்று வார்த்தைகளைப் பாதியில் நிறுத்தினான், மாறன்.

இந்தக் கலங்கரை விளக்கைப் பார்த்துக் கொள்ளும் தியாகவிடங்கர், தான் ஒரு இளவரசன் என்று தெரிந்தவுடன் எவ்வளவு பக்தியுடன் நடந்து கொள்கிறார். இதையெல்லாம் ஐந்து ஆண்டுகளாக அனுபவிக்கவில்லையே என்ற வருத்தம் அவன் மனதில்.

'மாறனின் மனதில் மறைந்திருக்கும் சோகம் வெளிப்பட வேண்டும், அவனது வாளிலும் வேலிலும் படிந்த துரு துடைக்கப்பட வேண்டும்' என அடியான் முடிவு செய்தான்.

''தம்பி, உனது மனதில் பெரியதொரு பாரம் உண்டு. அதை இறக்கி வைக்க இப்போது ஒரு சந்தரப்பம் கிடைத்திருக்கிறது. பேச வேண்டும் என்று தோன்றினால் என்னிடம் மனம் திறந்து பேசு''

என்று அடியான் கேட்க, ஏதோ அதற்காகக் காத்திருப்பது போல மாறன் புலம்ப ஆரம்பித்து விட்டான்.

''என் மனது விம்மி வெடித்து விடும் போல் இருக்கிறது. ராஜத்துரோகி என்ற சுமையைத் தோள்களில் சுமந்து எவ்வளவு நாள் இவ்வுலகில் வாழ்வது? இதற்குப் பதிலாகத் தூர தேசம் சென்று என் தோள் வலிமையால் புதிய ராஜ்ஜியங்கள் அமைத்திருக்கலாம்.''

''அருள் மொழி வர்மரிடம் இதைப் பற்றி ஒரு வார்த்தை கூறியிருந்தால் பொன்னியின் செல்வர் உன்னையும் கடாரத்திற்கு அழைத்துச் சென்றிருப்பார். அங்கு ஒரு சம்புவராயர் சாம்ராஜ்யத்தை நீ அமைத்திருக்கலாமே?'' என்றான் அடியான்.

''அருள் மொழி வர்மருடன் போருக்கெல்லாம் செல்ல எனக்கு மட்டும் ஆசை இல்லையா என்ன? பொன்னியின் செல்வருடன் சேர்ந்து ஒரு போராவது புரிய வேண்டும். பல தலைமுறைகள் கழித்து என் சந்ததியர் நான் அவரது காலத்தில் வாழ்ந்தேன் எனப் பெருமையுடன் கூற வேண்டும். அவரைப் பற்றி நூல்கள் எழுதப்படும் போது என்னையும் பற்றி எழுத வேண்டும்'' என்றான் மாறன்.

''பொன்னியின் செல்வருடன் இப்போது வந்தியத் தேவன்தான் இருக்கிறான்'' என்று கூறி, மாறன் முகத்தை உற்றுப் பார்த்தான் அடியான்.

மாறன் பொறாமைப் படுவதாகத் தெரியவில்லை. ''வந்தியத் தேவன் எனது உற்ற நண்பன். அவனுக்கு வந்த நல்ல வாழ்வு என்னைப் பெருமைப்படுத்துகிறது. அவனைச் சொந்தத் தமையனாகக் கருதுவதைவிட, எங்கள் வீட்டு மாப்பிள்ளையாக அழகு பார்க்க ஒரு காலத்தில் நினைத்து இருந்தேன்'' என்றான்.

அடியான் புன்னகை புரிந்து, ''சோழ சிம்மாசனத்தில் தங்கையை அமரவைக்க எழுந்த ஆசை குறுக்கிட்டதோ?'' என்றான். அவனது குரலில் வினாவிற்குரிய தோரணை குறைவாகவும், கிண்டல் அதிகமாகவும் இருந்தது. மாறன் அவனை மறுத்துத் தக்க எதிர்வாதத்தை முன்வைக்கும் முன் அடியான் தொடர்ந்தான்.

''தம்பி, வாழ்நாள் எல்லாம் சன்யாசியாகக் கழித்தவன் நான். ஆனால், தாம்பத்தியத்தைப் பற்றிப் பல காலம் யோசித்துள்ளேன். சாமான்ய ஜனங்களுக்கு இடையே நடக்கும் திருமணம் இரண்டு மனங்களுக்கு இடையே நடக்கும் சங்கமம் என அறிவேன். அப்படி இல்லாவிடில் குறைந்த பட்சம் இரு உடல்களின் சங்கமம் என

எடுத்துக் கொள்ளலாம். உங்களைப் போன்ற பிரபுக்களின் குடும்பங்களில் மட்டும்தான் திருமணத்தினால் ஏற்படக் கூடிய அரசியல் ஆதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்க்கிறேன்'' என்று விளக்கினான்.

மாறன் கோபத்துடன், ''அரசர்கள் ஒருவருக்கொருவர் அரசியல் உறவுக்காகப் பெண் கொடுத்துக் கொள்வதும், எடுத்துக் கொள்வதும் எப்போதும் உள்ள பழக்கம்தானே? என் தந்தை, தன் மகள் சக்கரவர்த்தியின் மனைவியாக வேண்டும் என்று கருதியது தவறா?'' என்று பாய்ந்தான்.

அடியான் பதில் ஒன்றும் சொல்லாமல், தூரத்தே எரிந்து கொண்டிருந்த கலங்கரை தீபத்தை உற்றுப் பார்த்தான். நெருப்புக்கு முன் நிழல் போல ஒரு மனிதர் கீழே குனிந்து குனிந்து, விறகை எடுத்துத் தீயின் பசியைப் போக்கிக் கொண்டிருந்தார்.

''அங்கு தெரிகிறாரே. அந்த ஆள் யாரென நினைக்கிறாய்?'' என்று கேட்டான் அடியான். முக்கியமான ஒரு விஷயத்தை முன்வைக்கும்போது அடியான் பேச்சை மாற்றுகிறான் எனக் கோபம் வந்தது மாறனுக்கு.

ஆனால், பொறுமையாகப் பதில் சொன்னான். ''அவர் கலங்கரை விளக்கைப் பார்த்துக் கொள்ளும் ஆள்.''

''அவரது மகளை யாருக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார் என நினைக்கிறாய்?'' அடியான் சூசகமாகக் கேட்டான்.

மாறனுக்குத் தெரியவில்லை. ஆனால், அடியான் அவனை அன்று மாலை பார்த்துப் பயந்த புதை மண்ணை நோக்கி இழுத்துச் செல்கிறான் என உணர்வு கொண்டான். சும்மா சொல்லி வைப்போம் என்று, ''இது என்ன கேள்வி? அவரது மகளை மற்றுமொரு கலங்கரை விளக்கைக் காப்பவனுக்குத்தான் மணமுடித்திருப்பார்'' என்றான்.

அடியானின் வட்டமுகம் மலர்ந்தது. ''இளவரசே! மிகவும் சரியாய்ச் சொன்னீர்கள். தமிழ் நாட்டை அன்னியர் அண்டாமலிருக்கக் கலங்கரை விளக்காகத் திகழும் விஜயாலயனின் சோழப் பரம்பரை எனும் கலங்கரை இருக்கிறது அல்லவா? அதைப் பராமரிக்கும் உத்தம சோழனின் மனைவி பூங்குழலி அம்மையார் தான் இவரது மகள்'' என்றான்.

அடியான் சொல்லி முடிப்பதற்குள் கலங்கரையில் தியாக விடங்கர் இட்ட விறகு முழுவதுமாய்ப் பற்றிக்கொண்டு வானை நோக்கி ஒரு மஞ்சள் நிற நாக்கைப் போலப் பாய்ந்தது நெருப்பு.



அத்தியாயம் பதினெட்டு

பெரிய இடம் தானிது!

''நிஜமாகவா? இது என்ன விந்தை! நான் கனவு காணவில்லையே! இவர் யார்? சக்கரவர்த்தினியின் தந்தையா?'' என்று தடுமாறினான் மாறன்.

பேசாமல் மாறனின் அசௌகரியத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்த அடியானிடம் இன்னும் ஒரு முறை உறுதி செய்து கொள்ள, ''இப்போது நீர் சொன்ன வார்த்தைகளை நான் காதில் தவறாக வாங்கி பொருள் கொள்ளவில்லையே?'' என்றான்.

ஆனால், அவனுக்கே உண்மை தெரியும். மெய்ம்மை எனும் ஒரு சக்தி வாய்ந்த எதிரி, அவனைத் தூக்கி எறிந்து புழுதியில் புரட்டி எடுத்தது போல ஒரு உணர்வு. வெளிப்பட வேண்டிய நேரத்தில் வெளிப்பட்டால் உண்மை அவ்வளவு பலமானது. அதனால்தானோ 'வாய்மையே வெல்லும்' என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

'தங்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டவர், அந்த எளிய பெரியவர் சக்கரவர்த்தியின் மாமனாரா!' மாறனுக்குத் தலை கிறுகிறுத்தது. 'எனக்கு யாருமில்லை, மகள் திருமணமாகிப் போன பிறகு' என்று கூறிய அந்தக் கிழவரின் தன்னடக்கத்தைக் கண்டு நெகிழ்ந்தான்.

''உன் வீட்டு மாப்பிள்ளை மன்னராய் இருந்திருந்தால் என்ன கேட்டிருப்பாய்?'' என்று அடியான் வினவினான், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் நோக்குடன். ''பாதி ராஜ்ஜியமாவது தா என்றுதானே?''

''மணிமேகலை மட்டும் அரசியாக இருந்தால் நானும் என் தந்தையும் தஞ்சையையே ஆட்டிப் படைத்திருப்போம்!'' என உண்மையை ஒப்புக் கொண்டான் மாறன். இப்போது அவன் அனுபவித்த உண்மைக்கு முன் பொய் பேச அவனுக்கு மனம் வரவில்லை.

''பாருங்கள், இளவரசே. எல்லாரும் மகளைப் பெரிய இடத்தில் கட்டிக் கொடுத்துவிட நினைப்பது அவரவர் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளத்தான். விடங்கரைப் பாருங்கள். இவர் தலைநகருக்கு ஒரு முறை கூடப் போயிருக்க மாட்டார் போலிருக்கிறதே. அவரது மாப்பிள்ளை படகோட்டியா. இல்லை, கோயிலில்

பூப் பறிப்பவரா, இல்லை, உலகாளும் சக்கரவர்த்தியா என்பது அவருக்கு முக்கியமில்லை'' என்று சொன்னான் அந்த வைணவன்.

மாறன் தன் வாழ்க்கையின் பாதையில் ஒரு நாள் கூட இப்படிப் பட்ட ஒரு மாமனிதனைச் சந்தித்ததில்லை. அவன் பெரிய மனிதர்கள் என்று நினைத்தவர்களெல்லாம் இவர்முன் ஒரு தூசுக்குக் கூடத் தேற மாட்டார்கள்.

இவ்வளவு பெரிய நிகழ்வு நடந்தும் வாழ்க்கையில் ஒரு மாற்ற மும் கொள்ளாமல், அரசாங்க மான்யம் பெற்றுக் கலங்கரையின் மேற்பார்வையாளராக இருக்கிறாரே. ராஜ்ஜியத்தின் ஒரு மூலையில் ஒரு வசதியற்ற குடிசையில் இவர் ஜீவனம் செய்கிறாரே. அரண்மனையில் மகளிருக்கும்போது எதற்கு மனித சஞ்சாரமே இல்லாத நடுக்காட்டில் குடில் கட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்? தினம் தினம் தீயுடன் இந்தத் தள்ளாத வயதில் ஏன் போராட வேண்டும்? நெறி தவறாத மனிதனுக்கு இதுதான் இயல்பு போலும்.

தன் தங்கை அரசரைத் திருமணம் செய்யப் போகிறாள் என்றவுடன் தான் கட்டிய மனக் கோட்டைகளை எண்ணி வியந்தான் மாறன். இவருக்கு முன் அதெல்லாம் எப்பேர்ப்பட்ட குப்பைக்குச் சமமான விஷயங்கள். 'தங்கை மணிமேகலை ஒப்புக் கொள்ளாததால் அவளைப் பழித்துப் பழித்துக் கடைசியாகப் பித்துப் பிடிக்கும்வரை விரட்டினோமே. இந்த மனிதன் நாம் ஏங்கிய அந்த அரசாங்கத் தொடர்பை ஏன் பயன் படுத்திக் கொள்ளவில்லை?'

சில விஷயங்களின் மர்மமும் அதன் விந்தையும் அவன் மனதில் கனத்தன. ஆழ்ந்து யோசிக்க வைத்தன. அவன் எழுந்தான். தூக்கம் வரவில்லை. ''நான் கலங்கரைவரை சென்று வருகிறேன்'' என்றான். அடியான் ஒன்றும் சொல்லவில்லை. மாறன் கடல் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

தனிமையில் நடப்பதற்கு அது ஓர் அருமையான இரவு. இயற்கைக்கு முன் எல்லாரும் எவ்வளவு சாதாரணமானவர்கள் என்று காட்டிய இரவு. இயற்கை என்ன? சில மனிதர்களுக்கு முன்னால்கூட எல்லாரும் சாதாரணமானவர்கள் என்று மாறன் புரிந்து கொண்ட இரவு.

தலைக்கு மேல் முடிவே தெரியாத இரவில் தோய்ந்த வானம். பெரிய மேகத்திரள் வானத்தின் ஓர் எல்லையில் இருந்தது. நிலவு அதன் பின் மாட்டிக் கொண்டது என்பது மேகத் திரளின் ஓரங்கள் வெள்ளியில் வடிவெடுத்ததனால் புரிந்தது. அது வெளிவர வெகு

நேரமாகும். அப்போதைக்குப் பூமியை வெளிச்சப்படுத்தியது நட்சத்திரங்களின் ஒளிதான். ஏதோ வைரம் வைத்திருந்த கிண்ணம் கைதவறிக் கீழே விழுந்தது போல வானம் ஆங்காங்கே [illegible] விட்டது.

இல்லை, இல்லை. வானில் ஒரு நகரம் இருந்தது போலிருந்தது. விண்மீன்களைப் பார்த்தவுடன் தலைவியின் கூந்தலில் அதை ஆபரணமாகச் சூட்ட நினைக்கும் புலவர்கள் இதை ஏன் நினைக்க வில்லை? நேற்று இதைப் பார்த்திருந்தால் அவன் கூட அந்தப் பழையூர்ப் பெண்ணின் தலையில் இவற்றைச் சூட்டி அழகு பார்க்க நினைத்திருப்பான். ஆனால், இன்று?

வானில் தெரிந்த நகரம் பெரும் ஜனத்தொகை கொண்ட ஒளி மயமான ஒரு நாடு போலவும், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு விளக்கு எரிவது போலவும் மாறனுக்குத் தோன்றியது.

ஆனால், அது அமைதியான நகரம். ஒருவர்கூட ஒரு சப்தமும் எழுப்பவில்லை. ''நான்தான் பெரியவன். நான் செய்வதுதான் சரி'' என்ற குரல்களே வரவில்லை. ''நாங்கள் தவறு செய்யவில்லை, எல்லாம் நற்செயலாகத்தான் நடந்தது'' என்று யாரும் சாக்கு போக்கும் சொல்லவில்லை.

தனக்கு மேலிருப்பது தன் சாதனைகளைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளாத நாடு. மாறன் பெருமூச்சு விட்டான். அது தன்னை வெகு சிறியவனாய்க் காட்டிய கனவுப் பிரதேசம்.

மாறன் நடந்தபோது காற்றிலும் அமைதி. கடலிலும் அமைதி. கோடிக்கரையில் ஆக்ரோஷமான அலைகளைக் காண இயலாது. அந்தச் சமுத்திர ராஜன் அடங்கிப் போய் ஓய்வெடுக்கும் இடமாக வைத்திருந்தான். கடல் உறக்கத்தில் முனகிக் கொண்டு படுக்கையில் புரள்வது போல அலைகள் ஏதோ பேருக்காக இவன் கால்களை வந்து தழுவிப் பின் பின்னே சென்றன.

கலங்கரை, கடலுக்குக் காட்ட வேண்டிய வெளிச்சத்தை திசைக்கும் பாரபட்சமின்றிக் காட்டிக் கொண்டிருந்தது. தொலை தூரத்தில் வரும்போதே கலங்கரை விளக்குக் கட்டடம் பூமிக்கடியி லிருந்து ஒரு ராட்சதக் கை வெளிவந்து ஒரு தீவர்த்தியைப் பிடித்திருந்தது போலத் தெரிந்தது.

மாறன் ஒவ்வொரு அடியாய் எடுத்துக் கலங்கரையை நெருங்கும்போது, அந்த உருவம் தெரிந்தது. ஒரு மனிதர் குனிந்து குனிந்து விறகை எடுத்துத் தீயினுள் போட்டுக் கொண்டிருந்தார். விறகு விழுந்ததும், தீ அமுங்குவது போல அமுங்கிப் பின்மேலே

குதித்து எழுந்தது. இந்தச் சம்பவங்கள் அவன் கலங்கரையை அடையும் முன் பல தடவை ஏற்பட்டு விட்டன.

கடற்கரையில் எங்கும் மண். ஆங்காங்கே கற்குவியல்கள். ஒரு சிறிய குன்று போலத் தோன்றிய கற்குவியலின் மீது செங்குத்தாய் நிற்கும் வட்டமான தடி போல நின்றது கலங்கரை விளக்கு. மண்ணில் நல்ல அஸ்திவாரம் போட இயலாது என இயற்கையான மேடையின் மீது கட்டிவிட்டார்கள் இதை.

கலங்கரையை நெருங்கியவுடன் காற்றில் ஒரு புகை வாசனை யின் அறிகுறி நன்றாகவே இருந்தது. கட்டடத்தின் மேல் தளத்தில் தீயின் கோரத் தாண்டவம் ஒன்று நிகழ, அதற்கு ஈடு கொடுப்பது போலக் கட்டடத்தைச் சுற்றி நிழல்களின் ஆட்டம். அந்த இடத்தின் தனிமையைக் காணப் பயங்கரமாகத்தான் இருந்தது. அதை விட அந்தத் தீயைக் கண்டு பழைய ஞாபகங்கள் அவனை ஒரு நிமிடம் பயமுறுத்தின. ஆனாலும் தைரியமாக மேலே ஏறினான் மாறன்.

கலங்கரை ஒரு செங்கல் கட்டடம். வட்டமாக ஒரு ஸ்தூபி போல ஒன்றரைப் பனை மர உயரத்திற்கு இருந்தது. வட்டமான சுற்றுச் சுவரைச் சுற்றிக்கைப்பிடி இல்லாத படிகளிருந்தன. கீழே தவறி விழுந்து விடக் கூடாது என்ற பய உணர்வோடு அந்த வட்டமான படிகளில் ஜாக்கிரதையாகப் பாதங்களைப் பதிய வைத்துச் சுற்றிச் சுற்றி மேலே ஏறினான்.

கலங்கரை மீது ஏறியவுடன் ஒரு சிறைப்பட்ட பட்சியைப்போல வேகத்துடன் வீசிய மேலைக் காற்றில் சடசடவென்று சத்தம் செய்து கொண்டு அவனது ஆடைகள் படபடத்தன.

கட்டடத்தின் மேல் தளத்தில் சமமான கருங்கல் தரை. அதில் ஹோம குண்டம் போல ஒரு பெரிய குழி.

எந்தப் பக்கம் நோக்கினாலும் இருள். நடுவில் ஒரு தீவு போலத் தீ. கலங்கரைத் தீயினை முதல் தடவை அருகிலிருந்து பார்த்தான். தங்கம் பழுக்கக் காய்ச்சியது போலக் காட்சி தந்தது. மேலும் ஓர் அடி வைக்க முடியாமல் வெப்பம் மாறன் முகத்தில் அறைந்தாற் போல் தாக்கியது.

யாரோ வருவதைச் சைகை மூலம் விடங்கருக்கு அவரது உதவியாளர் சொன்னார். அவரும் திரும்பிப் பார்த்தார்.

முன் பார்த்தது போலில்லாமல் தியாகவிடங்கரின் முகம் கறுத்துப் போயிருந்தது. அது இந்தக் கடற்கரையின் உப்புக் காற்றும் சாம்பலும் சேர்ந்து செய்த வேலை.

"இந்தக் காரியத்திலும் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறார்! இந்த வயதில் இவர் எப்படித் தினமும் இவ்வளவு வேலை செய்கிறார்" என மாறன் நினைத்துக் கொண்டான். அவருடைய உத்தியோகப் பொறுப்பு அதிகமானது என்பதற்காகவா?

நெருப்பின் ஜுவாலை உரக்க சப்தித்துக் கொண்டு பேயாட்டம் ஆடியது. நெருப்பு இசைக்கும் கீதத்தின் சக்தியை என்னவென்று சொல்லுவது? அதன் மேல் அவர் பேச முற்பட்டார். அவரது வார்த்தைகளைக் கேட்பதற்காக அவன் சிரமப்பட்டான். தீ எரிவதன் ஓசையே வலுத்திருந்தது. விறகில் ஒளிந்திருந்த ஈரத்தைக் கண்டுவிட்டால் போதும். நெருப்பு அதைத் தாக்கி ஒரு வெடிப்புச் சத்தம் எழுந்தது. உடனே எங்கும் தீப் பொறிகள் பறந்தன.

சற்று நேரத்தில் தீயின் சமீபத்தில் நிற்கக்கூட முடியவில்லை. தீ நன்றாய் எரியவே, மூவரும் நான்கைந்து படிகள் கீழே இறங்கி வந்து விட்டனர். கலங்கரையின் படியின் மீது சாவதானமாக உட்கார்ந்து அடுத்து எரிக்க வேண்டிய விறகை வரிசைப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்கள், விடங்கரும் அவரது உதவி யாளரும்.

மாறன் மட்டும் நின்றிருந்தான். "வாருங்கள், இளவரசே. அமருங்கள்" என்றார் விடங்கர்.

ஒரு வார்த்தை பேச முடியாமல் பிரமித்துப் போய் நின்றான், மாறன். அவன் திகைத்து நின்றதைக் கண்ட தியாக விடங்கர், "ஏன் இப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்! நான் என்ன பேயா, பிசாசா?" என்று கேட்டார்.

ஈனசுவரத்தில் "ஐயா நீர்...?" என்று தடுமாறிக் கொண்டே கேட்டான் மாறன்.

வந்தவனுக்கு உண்மை தெரிந்து விட்டது என அவர் புரிந்து கொண்டார். அவன் முகம் வெய்யிலில் அகப்பட்ட பூங்கொடி யைப் போலத் துவண்டு கிடந்தது அதைச் சொன்னது.

மெல்ல எழுந்து, 'வீணாக அலட்டிக் கொள்ளாதே!' என்பது போல் அவர் மாறன் தோளில் தட்டினார்.

பின் உரக்கச் சொன்னார் "இளவரசே ! என் மகள் சக்கர வர்த்தினி என்பதால் என் வாழ்க்கை மாறிவிடவில்லை. மற்றவர்கள் என்னை வேறு விதமாகப் பார்ப்பதையும் நான் விரும்புவதில்லை" என்றார். "அந்தப் பொல்லாத பிராமணர் வாக்கு வாயில் தங்காது" எனச் சிரித்துக்கொண்டே அடியானைத் தட்டினார்.

மாறனை அமரச் சொல்லித் தன் வேலையைப் பற்றி விவரித்தார். "கோடிக்கரையில் கடல் ஆழமில்லை. அரைக் காத தூரம் இடுப்பளவு தண்ணீர்தான் இருக்கும். கட்டு மரங்களும் சிறிய படகுகளும் மட்டுமே கரை ஓரமாக அணுகி வரலாம். மரக்கலமும் நாவாயும் நெருங்கி வந்தால் தரை தட்டி மணலில் புதைந்துவிடும். வேகமாக வந்தால் இரண்டாகக் கூடப் பிளந்துவிடும். அதனால் தான் சோழ மன்னர்கள் இந்தக் கலங்கரையை ஏற்படுத்தினார்கள். கடலில் செல்வோருக்கு மிகவும் தேவையானது இந்த அமைப்பு. விளக்கு விட்டில் பூச்சியை வா என அழைக்கும். கலங்கரையோ வராதே என்று கப்பலுக்குக் கூறும்."

மாலையில் ஒரு முறை தீயை ஏற்றி வைத்தால் போதும். விடியும்வரை வீட்டில் வந்து தூங்கி விடலாம் என நினைத்திருந்தான் மாறன். அதைக் கேட்டும் விட்டான்.

"இல்லை, தம்பி. அவ்வப்போது அதைக் கவனிக்க வேண்டும். விறகு சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும். சாம்பலை அகற்ற வேண்டும்."

"நீர் உம் மகளின் வீட்டுக்குச் செல்ல வேண்டாம். ஆனால், இந்தத் தள்ளாத வயதினில் இந்த வெப்பமும் வாடையும் தாக்கும் படி ஏன் கஷ்டப்பட வேண்டும்?" என்றான் மாறன்.

பலர் கேட்ட கேள்வி போல இருந்தது. ஏனென்றால் மாறன் முடிப்பதற்குள் பதில் தயாராக வைத்திருந்தார்.

"மனிதர்களாய்ப் பிறந்தவர்கள் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும். படகில் வரும் மக்களின் உயிர் எவ்வளவு மேன்மையானது! கடலில் மூழ்கிப், பாறையில் இடித்து அது பிரிய வேண்டுமா? நமது பசியைத் தீர்க்க உயிரைப் பணயம் வைக்கும் படகோட்டிகளுக்கு இதுகூடச் செய்யாவிடில் பின் எப்படி?" என்றார்.

ஒவ்வொரு வேலையும் எவ்வளவு முக்கியம் என்று இப்போது விளங்கிற்று மாறனுக்கு.

"இரவில்தானே கலங்கரை விளக்கு எரிய வேண்டும்? காலையில் ஓய்வு கிடைக்குமல்லவா?" என்று கேட்டான் மாறன்.

"காலையிலிருந்து மாலை வரை விறகு தேடுவது எங்கள் வேலை. காலையில் ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் தூங்குவேன்" என்றார். "மாலைக்குள், இங்கு இருக்கிறானே, இந்த வேலையாள் அந்த விறகைக் கொண்டு வந்து இங்கு சேர்ப்பான். பின் அதைக் கொளுத்தி விடுவான். கட்டடத்தின் கீழ்த் தளத்தில் ஓர் அணையா தீபம் இருக்கிறது. அதைக் கொண்டுதான் நெருப்பை ஏற்றுவான். அவன் பாதி இரவில் தூங்கச் செல்லும் போது, நான் வேலையைப் பார்ப்பேன். அந்த வேலையாள் காலையில் வந்து கரித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு சாம்பலைக் கடலுக்குள் தள்ளிவிடுவான். அடிக்கும் காற்றில் சாம்பல் பறந்து செல்லும். தளம் காலியாகும். பின் திரும்ப அடுத்த நாள் வேலை" என்றார்.

மாறன் மனதுக்குள் நினைத்தான். "இன்று ஒரு நாள் பார்ப்பதற்கு நன்றாய்த் தான் இருக்கிறது. ஆனால், இவர் தன் ஆயுள் முழுதும் இந்தக் கோடிக்கரைக் கலங்கரையில் பணியாற்றி வர வேண்டும். வெப்பமும், வாடையும் மாறி மாறித் தாக்கிக் கொண்டுதான் இருக்கும்."

அதற்குள் மேலிருந்து ஒரு விதமான புகை வாசம் வந்தது. அது நெருப்பு அணையப் போகிறது என்பதற்கு அறிகுறி. இருவரும் மேலே ஓடினார்கள். மாறனும் பின் தொடர்ந்தான்.

இந்த முறை மாறனும் உதவி செய்தான். கீழிறங்கிப் படிகளின் வழியாக அந்த உதவியாளரும் அவனுமாய் வெட்டி வைக்கப் பட்டிருந்த விறகை மேலே இழுத்து வந்தனர். விறகில் காய்ந்த முட்கள் இருந்து மாறனின் கைகளைப் பதம் பார்த்தன. அதைப் பொருட்படுத்தாமல் வேலையை முடித்தான். விறகு தீயின் கோரப் பசியைத் தற்சமயம் தணித்தது. மீண்டும் நெருப்பு பிரகாசமாக எரிந்தது. புகை ஒரு நீண்ட கயிறு போல வானை நோக்கி வளைந்து சாய்ந்தது.

மாறன் பாராத நெருப்பா! இவன் கோட்டையே நெருப்பில் தானே அழிந்தது. அவன் மனக் கோட்டை மட்டுமல்ல. நிஜக் கோட்டையும்தான். எனினும், அருகிலிருந்து பார்க்கும்போது, தன் எப்போதுமில்லாத வனப்பும் கவர்ச்சியும் பெற்று விளங்குகின்றது இந்த அக்கினித் தேவதை.

மாறன் இருண்ட கடலுக்குள் பார்வையைச் செலுத்தினான். கலங்கரைக்கு மேலிருந்து பார்த்தால் வானத்தைப் பிரதிபலிக்கும் ஆழமான கடல் திருமாலின் மேனி வண்ணத்தைத்தான் நினைவூட்டியது. "அடியான் இங்கு வந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பான்" என்று நினைத்துக் கொண்டான், மாறன்.

கடலின் மீது காற்று குளிராகத்தான் இருக்கும். அங்கு படகில் இருக்கும் ஒவ்வொரு படகோட்டியும் இந்த நெருப்பைப் பார்த்து அதன் அருகே இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என நிச்சயமாக நினைப்பான். ஆனால், அது எவ்வளவு விபரீதமானது எனத் தெரியும்.

இரவில் அலுப்புச் சலிப்பில்லாமல் மேலும் கீழுமாகப் பல முறை சென்று வந்தார்கள்.

''தூங்கி விட முடியாது. அதாவது வெப்பம் எங்களைத் தூங்க விட்டாலும், நெருப்பு நின்று விட்டால் பின் ஏற்றுவது கஷ்டம். அதற்காக நெருப்பு அதிகமாய் வைத்தாலும் சில சமயம் வெப்பம் இந்தக் கட்டடத்தின் மேல் தளத்தை பிளவு படுத்திவிடும்.'' கீழே வந்த பின் தியாக விடங்கர் கூறினார்.

''நிச்சயமாக மழை வந்தால் சூடான கல் பிளவுபடும். அப்போது தஞ்சைக்குச் சொல்லி அனுப்பினால் யாரேனும் ஸ்தபதியை அனுப்பி வைப்பார்கள். நீர் வந்திருக்கா விட்டால் நான் வாய் திறவா மோனத்தில் ஆழ்ந்திருந்திருப்பேன். நன்றாய்ப் பொழுது போகிறது'' என்றார் விடங்கர். இவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. நெருப்புடன் உரையாடிக் கொண்டிருப்பவர் போலத்தான் இருக்கிறது. நகரத்தில் இவர் போன்றவரைப் பித்துப் பிடித்தவர் என்று ஒதுக்கி விடுவார்கள்.

தனிமைக்குப் பலத்த சக்தி உண்டு. எல்லாரையும் பித்துப் பிடிக்கச் செய்யும் மந்திர வித்தையை நன்கு பயின்ற மாணவன் தனிமையே. அதனுடன் மாறன் எவ்வளவு நாள் போராடியாகி விட்டது!

நீண்ட பிரயாணம் செய்த களைப்பினால் தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. மாறனுக்கும் ஓய்வெடுத்தால் நல்லது என்று தோன்றியது. அவனது கண்கள் ஆடிய ஆட்டத்தை விடங்கரும் பார்த்தார். ''தம்பி! நீங்கள் சென்று ஓய்வெடுங்கள். இப்படித்தான் நாங்கள் மேலே உட்கார்ந்திருப்போம். வெப்பம் அதிகமானால் நான்கு படிகள் கீழ் இறங்குவோம். விறகு பற்றவில்லை என்றால் தரை மட்டத்துக்கு இறங்குவோம். உமக்கு இது சலிப்புத் தட்டிவிடும்.''

''சரி, காலையில் உம்மைப் பார்க்கிறேன்'' என்று கூறி, மாறன் தட்டுத் தடுமாறிப் படிகளில் இறங்கினான். சூரியன் போன்ற வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு இப்போது இருளில் நடக்க மிகவும் கஷ்டமாக இருந்தது.

அவன் மனதில் நின்றது விடங்கரின் எளிமையும் தன்னடக்கமும். அவரது சேவை பெரியது என இவன் மெச்சியபோது, ''ஆதி அந்தமில்லாத கடலிது. அதில் ஒரு ஓரத்தில் ஒரு கரையில் கலங்கரை ஏற்றும் ஆள் நான். என்னை விட எவ்வளவு பேர் தியாகங்கள் செய்து வருகின்றனர்! என் பெயரில் மட்டும்தான் தியாகம்'' என்றார்.

மாறன் திரும்பும் போது நிலவு மேகத் திரளிலிருந்து வெளி வந்துவிட்டது. சந்திரனின் முத்து நிறக் கதிர்கள் ஆயிரமாயிரம் வெள்ளிக் கிரணங்களாய்க் கடலில் மிதந்தன. கடலில் இருந்து அடித்துக் கொண்டிருந்த வாடைக் காற்றின் சிலுசிலுப்பினால் அவன் உடல் நடுங்குவதாகத் தோன்றியது. கட்டு மரங்கள் ஆட்களின்றி மேலும் கீழுமாய் அமைதியற்ற அலைகளில் தாவிக் கொண்டிருந்தன, கரையிலிருந்து ஒரு கயிற்றின் காவலைக் கொடுத்து மீனவர்கள் அவற்றை விட்டு விட்டுச் சென்றார்கள். திக்கற்ற அநாதையைப் போல் அவை பரிதாபத் தோற்றம் அளித்தன.

சடசட வென்று சப்தம் கேட்க, மேலே நோக்கினால் பல வகைப் பறவைகள் ஒன்று சேர்ந்து கடலின் மேலிருந்து காட்டுக்குள் பறந்து கொண்டிருந்தன.

கலங்கரையில் அவன் கழித்த பொழுது மாறனுக்கு ஒரு புதிய தெம்பைக் கொடுத்திருந்தது. ஆழ்ந்த அமைதியையும் கொடுத்தது. உண்மையைத் தெரிந்து கொண்ட மாறனுக்குப் பணிவு ஏற்பட்டது. விடங்கரின் தன்னடக்கத்தைக் கண்டு நெகிழ்ந்தான். பிறகு ஒரு நெடிய பெருமூச்சு விட்டு வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினான். அன்றிரவு அடியானின் குறட்டையும் ஒரு பொருட்டாகவே இருக்காது. கல் திண்ணை கூடக் கஷ்டமாக இருக்காது.

படுப்பதற்காகத் திண்ணையின் சமீபத்தில் சென்றால், என்ன ஆச்சரியம்! தரை எங்கும் வெள்ளிக் காசுகள் சிதறிக் கிடந்தனவே. பின் புரிந்தது. கூரையிலிருந்து சிறு துவாரங்கள் வழியாகச் சந்திரனின் கிரணங்கள் புகுந்து திண்ணையின் மீது வெள்ளிக் காசுகளாய்ச் சிதறிக் கிடந்தன. இதுவும் ஒரு பணக்காரன் வீடுதான் என்று இயற்கை சொல்வது போல. இப்போது புரிந்தது மாறனுக்கு.

பட்டர் சொன்னது போல இதுவும் பெரிய இடம்தான்.

❖ ❖ ❖

அத்தியாயம் பத்தொன்பது
மந்திரவாதியின் சிரிப்பு

கோடிக்கரையில் மட்டும் ஒரு மனிதன் இரவு எந்த நேரத்தில் தூங்கினாலும், காலையில் ஒரே நேரத்தில் அவனுக்கு விழிப்பு

வந்துவிடும். அப்படி ஒரு கானமழை சூர்யோதயத்துடன் நிகழும். குயில்களின் கீதமும், வண்டுகளின் ரீங்காரமும் அவர்களை விழிப் படையச் செய்தன. மேலும் நிசப்தத்தைக் கலைத்து ஆயிரமாயிரம் பறவைகள் ஒன்று சேர்ந்து சிறகடித்துக் கடலுக்கு இரை தேடிச் செல்லும். அந்த சப்தத்திலும் உறங்குபவன் செவிடனாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் காட்சிகளை ரசிக்காதவன் ஒரு மனிதனாகவே இருக்க முடியாது.

விழித்துக் கொண்ட பிறகும் எழுந்திருக்க மனம் வராமல் மாறன் படுத்திருந்தான். 'ஓரிரு நாட்களாய் நடக்கும் சம்பவங்கள் எல்லாம் நிஜம்தானா, இல்லை, மக்களிடமிருந்து ஒதுங்கியிருந்த காரணத் தால் எல்லாம் விந்தையாகத் தோன்றுகிறதா?' என அவனுக்கு இன்னமும் புரியவில்லை.

கடவுள், 'ஏ பக்தா! ஐந்து ஆண்டு காலமாகக் காய்ந்து போய் விட்டாய். அனுபவி!' என்று சரமாரியாகப் புதுப்புது அனுபவங் களை அனுப்பி வைக்கிறாரா?

அந்த வீர வைணவ சிகாமணி தன் முகத்தைக் கடுவன் குரங்கு போல வைத்துக் கொண்டு தொந்தியைச் சொரிந்து கொண்டிருந் தான். இரவெல்லாம் கட்டையைப் போல் கிடந்து தூங்கிவிட்டு இப்போதுதான் துயிலெழுந்தான். வெறும் கட்டையல்ல, குறட்டைவிடும் கட்டை. படுத்துக் கிடந்த அடியானைப் பார்த்தான் மாறன்.

காட்டில் நாவிதர்கள் இல்லை என்பதால், அடியான் சில நாட்களாகத் தலையை மழித்துக்கொள்ளவில்லை. அவன் தலை எங்கும் வெள்ளி முடி தலை காட்டத் துவங்கிவிட்டது. அடியானின் வயது இப்போது வெளிப்படையாகத் தெரிந்தது.

காலையில் உணவை முடித்துவிட்டு, வந்த வேலையைக் கவனிக்கத் தொடங்கினர். ''இவ்வளவு பெரிய ஆரண்யத்தில் ஒரு மனிதக் கூட்டம் வருவதை எப்படிக் கண்டுபிடிப்பது? வைக்கோற் போரில் ஓர் ஊசியைத் தேடுவது போல இருக்கிறது'' என்று வருத்தப்பட்டார்கள். முதலில் அடியானே தெளிந்தான்.

''கடற்கரை ஓரமாய் நடப்போம். அங்குதான் கட்டுமரக் காரர்களும் படகோட்டிகளும் இருப்பார்கள். ஓரிரு நாட்களாய் ஏதேனும் வித்தியாசமாய் நடந்ததா என விசாரிக்கலாம்.''

அப்படி அவர்கள் ஒரு நாள் தேடி அலைந்தனர். ஒன்றிரண்டு வலை பின்னுபவர்கள் மற்றும் மீனவர்களிடம் விசாரித்தனர். மீன் வாடை வீசிய கூடைகளைச் சுமந்த பெண்களிடமும் விசாரித்தனர். அங்கு வசித்த பெண்கள் வெண் நிறத்தில் காதிலும், கரங்களிலும்

ஆபரணங்கள் அணிந்திருந்தனர், அவை சங்குகளிலிருந்து அறுத் தெடுத்தவை என அறிந்தான் மாறன். அந்தப் பெண்களும் நாணிக் கோணித் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றனர்.

சமைத்து வைத்துவிட்டு, விருந்தாளிக்குக் காத்திருப்பது போல, இருவரும் எதிரியின் வரவுக்காகக் காத்திருந்தனர். அன்றிரவு மட்டுமல்ல, மறுநாளும்கூட யாரும் வருவதாகத் தெரியவில்லை. ஆனால், இருவரும் அவ்விடத்திலேயே தங்கியிருந்து பாண்டியரைப் பார்த்து விட்டுத்தான் செல்வது என முடிவு செய்து விட்டனர்.

மூன்றாவது நாள் இருவருக்கும் சந்தேகம் கூடியது. ''வேறு எங் கிருந்தாவது செல்கிறார்களோ, என்னவோ?'' என வினவினான் மாறன்.

அடியான் அடியோடு அதை நிராகரித்தான். ''அப்படியெல்லாம் இருக்காது.''

''அது சரி, தப்புவதற்குக் கோடியை ஏன் தேர்ந்தெடுத்தனர்? அதுவும் சோழ நாட்டில்?'' என்று கேட்டான் மாறன்.

சோழ நாட்டுக் கடற்கரையோரத்தில் இரண்டு, பாண்டிய நாட்டுக் கரையில் இரண்டு என நான்கு துறைமுகங்கள் அக்காலத் தில் பிரசித்தி பெற்றிருந்தன, தமிழகத்தில். துரிதப் பிரயாணத்தை மேற்கொள்ள நினைப்பவர் அருகில் உள்ளதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

செல்வச் செழிப்புள்ள வர்த்தகர்கள் பயன்படுத்துவது நாகை அல்லது பாம்பன். இடையே தொண்டி. கடலில் மூழ்குவதற்கு முன், பூம்புகார் நகரமும் அது போலவே திகழ்ந்தது.

நாகை அப்போது தமிழகத்தின் முக்கியத் துறைமுகப் பட்டினம். வெளிநாடுகளிலிருந்து எத்தனை எத்தனையோ மரக்கலங்கள் வந்து அத்துறைமுகத்தில் பொருட்களை இறக்கி வைத்துவிட்டுத் தமிழகப் பொருட்களை மாற்றுப் பண்டங்களாக ஏற்றிச் செல்லக் கடலில் நங்கூரம் பாய்ச்சி விட்டுக் கரைக்குச் சற்று அப்பால் காத்திருந்தன.

''நாகையில் கட்டுக் காவல் அதிகம். நாட்டின் பாதுகாப்புகாக இல்லை என்றாலும், சுங்கத் திறை விதித்து, அதை வசூலிக்க அரசாங்க அதிகாரிகள் பேரெண்ணிக்கையில் காத்திருந்தனர். தமிழகத்திலிருந்து எவர் கண்ணிலும் படாமல் செல்லக் கோடி போல ஒரு சிறந்த துறைமுகம் இல்லை. செல்வது பாண்டிய நாட்டுப் படையின் தலைவன். அப்படி வெளிப்படையாக அவன் நாகையிலோ ராமேஸ்வரத்திலோ படகேற முடியாது. ரகசியமாகக்

கடல் கடக்க நினைப்பவர் நாகப்பட்டினம் அருகே செல்லாம லிருப்பதே நல்லது.

"ஆனால், கோடி அப்படி இல்லை. பெரிய மரக்கலங்கள் இங்கு வராவிடினும் ஆள் நடமாட்டம் இல்லாமல் பிரயாணத்தை மேற் கொள்ளலாம்."

இதைச் சொல்லிவிட்டு, "குருநாதர் அநிருத்தர் தவறு செய் திருக்க மாட்டார்" என்றான் அடியான். ஆனால், அவன் குரலில் முன்பு இருந்த தெம்பு இருப்பதாக மாறனுக்குத் தெரியவில்லை. எனினும் மாறனுக்கு இப்போது இந்த இடம் பிடித்திருந்தது. அமைதியில் அவன் கடந்த காலம் பற்றியும், எதிர் காலம் பற்றியும் தெளிவாகச் சிந்திக்க முடிந்தது. அநிருத்தரின் கணக்குப் படி இன்று இரவுக்குள்தான் அந்த வெளியேற்றம் நடைபெற வேண்டுமோ என்னவோ?

மாலையில்தான் மனித சஞ்சாரமே இல்லாத ஒரு இடத்தில் சில படகுகள் இருந்ததைக் கவனித்தார்கள். விசாரித்ததில் அவை அந்த இடத்துக்குப் புதியவை எனத் தெரிய வந்தது. எங்கிருந்து வந்ததென என யாருக்கும் தெரியவில்லை. யாருடையது என்றும் தெரிய வில்லை. யாரோ நடு இரவில் கொண்டு வந்து இங்கு விட்டு விட்டார்கள். இலங்கையிலிருந்து வந்திருக்கலாம் என்று ஓர் வயதான வலை பின்னுபவர் கூறினார்.

உடனே, "இங்குதான் பாண்டியர்கள் பழுவேட்டரையர் மகளையும் மருமகனையும் இலங்கைக்கு ஏற்றிவிடப் போகி றார்கள் போலும்" என்று மாறன் சொல்ல, அதை அடியானும் ஒப்புக் கொண்டான்.

திரும்பிப் படகிருந்த இடத்திலிருந்து காட்டைப் பார்த்தார்கள். விஷயமில்லாமல் படகுகள் அங்கு நிற்கவில்லை. படகுகள் கரையிலிருந்த இடத்திற்கு நேரே ஒரு பாதை காட்டுக்குள் புகுந்தது. அந்த வழியாகத்தான் வருவார்கள் எதிரிகள் என முடிவு செய்து, இருவருமாய் அந்த வழியில் சென்றார்கள்.

இருண்ட காட்டுக்குள் செல்லும்போது அவ்வப்போது தன் இடுப்பில் உறையிலிருந்த வாள் உள்ளதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான் மாறன். காலையிலேயே எழுந்தவுடன் தன் வாளை எண்ணெய் தேய்த்துச் சீர்செய்து கொண்டு விட்டான். அது இன்று வெகு காலம் கழித்துப் பயன்படப் போகிறது என்கிற சந்தோஷம்.

நான்கைந்து நாட்களாகவே கடற்கரையிலிருந்து கொண்டு அந்த வாளைக் காற்றில் சுழற்றிப் பார்த்தான். கண்ணுக்குத்

தோன்றாத பகைவர்களின் தலைகளை அந்த வாள் வெட்டியதாக நினைத்துச் சந்தோஷப்பட்டான். வாளைச் சுழற்றக் கஷ்டமாய் இருந்தாலும், கலை மறந்து போக வில்லை எனத் திருப்தி கொண்டான்.

காடு என்றவுடன் மாறனுக்கு அருவருப்பு. ஏதோ ஒளிமயமான கடற்கரை உலகிலிருந்து கருமையான இருள் படிந்த உலகுக்குள் செல்வது போலிருந்தது.

அதற்குள் இருவருமாக அந்தப் பாதை சென்ற வழியில் பயணித்து நடுக்காட்டில் இருப்பதை உணர்ந்தார்கள். அடியான் கத்திப் பேசுவது போல நினைத்த மாறன், அப்போதுதான் அதை உணர்ந்தான். பொழுது சாய்ந்தவுடன் காட்டில் ஒரு அதிசயமான நிசப்தமும் உண்டாயிற்று என்று.

ஒரு இடத்தில் சாலை இரண்டாகப் பிரிந்தது. எதில் செல்வது என அறியாமல் ஒரு நொடி சிந்தித்து, ஒரு வழியைத் நிர்மானித் தார்கள், அதே இடத்தில் இருந்து விடுவதென்று. "இனி விடங்கர் குடிசைக்குத் திரும்பிச் செல்வது முடியாது. இங்கே இரவைக் கழிப்போம்" என்று கூறி அடியான் சில மரங்களுக்குப் பின்னே ஒரு ஒதுக்குப்புறமான இடத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அங்கு அமர்ந்தவர்கள் சிறிது நேரம் களைப்பாறினார்கள். "இளவரசே! நீர் தூங்குவதற்கு ஒரு முகூர்த்த நேரம் உண்டு. நீங்கள் தூங்குங்கள்" என்றான், அடியான்.

"அதன் பின்?"

"நான் தூங்குவேன்," என்றான் அடியான்.

படுத்தவுடனே மாறன் அசதியில் தூங்கிப் போனான். ஒரு மரத்தின் மீது சாய்ந்தபடி அடியான் அந்தக் காட்டு வழியினில் ஏதாவது காலடி அல்லது புரவியின் குளம்படிச் சப்தம் கேட்கிறதா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். வெகு நேரம் ஒன்றும் நேராதது, அவனது புலன்களை மங்கச் செய்தது. காளி கோயில் பூசாரிக்குச் சாமி வந்தாற்போல் அவனது தலை தூக்கத்தில் ஆடத் தொடங்கியது.

திடீரென அந்த அமைதியைக் கலைத்தாற்போல் ஒரு சப்தம் அடியானை உலுக்கியது. தூங்கத் தொடங்கிய அடியான் மட்டும் அல்லவில்லை. தூங்கிக் கொண்டிருந்த பட்சிகள் ஆயிரமாயிரம் விழித்தெழுந்து சிறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு பல வித ஒலிகளை எழுப்பியபடி வனப் பிரதேசமெல்லாம் பரவின. பேரெண்ணிக்கையில் பறவைகள் வானத்தை நோக்கிச் சிறகடித் தன.

சிறகுகள் செய்த சப்தங்கள் இரவின் நிசப்தத்தைச் சிதறடித்தது.

காட்டில் எவரும் பறவைகளின் அமைதியைக் குலைக்காமல் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது என அடியான் அறிவான். பறவைகள் மிகவும் உணர்ச்சி மிக்கவை. ஒரு காத தூரத்தில் ஒரு காலடியைக் கண்டு பிடிக்கக் கூடியவை. எதிரி வந்து விட்டான் என்று பறவைகள் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருந்தன.

அடியான் தனது சொரசொரப்பான கையை வைத்து மாறனது உடலைப் பிடித்து உலுக்கினான். மாறன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். திடீர் என எழுப்பப்பட்டதில் மாறன் அடியானைப் பார்த்து முறைத்தான். அவனது கண்களில் ஒரு கோபக் கனல் வீசியது.

ஏதோ கத்தப் போகும் அவனைத் தன் உதடுகளில் ஒரு விரல் வைத்துச் சைகை செய்து அமைதியாய் இருக்கும்படி அடியான் சமிக்ஞை செய்து, "அதோ கேள்" என்று மேற்குத் திசையை நோக்கிக் கையை நீட்டினான்.

சுற்று முற்றும் பார்த்தார்கள். பறவைகளின் சப்தம் ஓய்ந்த பின், பலவகைச் சப்தமும் கேட்டது. காது கொடுத்துக் கவனமாகக் கேட்டபோது, காலடி ஓசை, அடக்கிப் பேசும் குரல்கள், தவிர்க்க முடியாமல் தரையில் படும் வாள் மற்றும் வேல், அவ்வப்போது ஒரு குழந்தையின் அழு குரல். ஒரு இருமல்.

சப்தங்கள் கேட்ட நொடியில் இருவரும் மரங்களின் கிளைகள் தந்த மறைவை நாடினர். அவனுக்குச் சைகை காட்டிவிட்டு, ஒரு மரத்தின் சமீபத்தில் சென்றான் அடியான். "யாரோ வருகிறார்கள். அவர்கள் வழியில் நாம் இருக்க வேண்டாம். சற்று அப்பால் இருப்போம்" என்று சொன்னான்.

தன் கனத்தைப் பொருட்படுத்தாமல் அடியான் ஓர் வானரத்தைப் போல மரக் கிளைகளின் மேலே தாவி ஏறினான். அவன் பருமனில் கிளைகள் வளைந்து ஊசலாடியதைக் கண்டு கீழே நின்ற மாறன் அவனைப் பின் தொடரச் சற்றுத் தயங்கினான்.

மேலே இரண்டு கவடுகளாகப் பிரிந்த ஒரு பெரிய கிளையில் தனக்கு வசதி செய்து கொண்டு, அடியான் மாறனைப் பார்த்து, "மேலே வாருங்கள், இளவரசே" என்றான். "உம்முடன் சேர்ந்தால் இந்த மரம் ஏறும் படலம் என்னையும் விடாது போல."

மாறனும் ஏறினான். இருவரின் பாரமும் தாங்காமல் மரத்தின் கிளை சாய்ந்தது. அதில் பெரும் பங்கு திருமலையுடையதுதான். மாறன் அடியானைக் கண்டு முறைத்தான். "பெருமாள் கோயில் பொங்கலை வாழ்க்கை முழுதும் சாப்பிட்டுக் கொண்டிருந்தால், இப்போது பெருமாள்தான் வந்து காக்க வேண்டும்."

அப்போது கூட தன் மதப் பிரசாரத்தை விடுவதாக இல்லை அடியான். "யானையைக் காக்க முதலையைக் கொன்ற பெருமான் நம்மைக் காக்க வரவா மாட்டார்?"

"உம்முடைய வைணவப் பற்றுப் பெரிதுதான். ஆனால், உம் கடவுள் உம்மைக் காக்கின்றார் என்றால் ஏன் நாம் கஷ்டப் படுகின்றோம்?"

"பசும்புல் பாய் போல விரித்திருந்த கடவுள் வழியில் சில முட்களையும் போட்டு வைக்கிறான். இல்லையென்றால் நாம் அவனை நினைக்க மாட்டோம்" என்றான் அடியான், எப்போதும் பேசும் உரத்த குரலில்.

"உஷ், இரைந்து பேசாதே" என்றான் மாறன்.

பேச்சை நிறுத்திவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தார்கள்.

மரத்தின் மீதிருந்து கோடியின் அலையற்ற கடல் ஒரு கரிய நிலம் போல அழகாகத் தெரிந்தது. அந்தக் காட்சியை ரசிக்கத்தான் மனம் வரவில்லை. கடலின் எதிர்த் திசையையே இருவரும் நோக்கினார்கள்.

"அதோ" என்று அடியான் சுட்டிக் காட்டிய திக்கில் மாறனும் நோக்கினான். மனிதர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அதிசயத்தில் தள்ளாடிக் கீழே விழப் பார்த்தான் அடியான். அடுத்த வார்த்தை பேசுவதற்குள் சிறிது நேரமாகி விட்டது. திடீரென்று தலையை நிமிர்த்தி, "அட பரந்தாமா! இப்போதுதான் உன்னைப் புகழ்ந்தேன். பழிவாங்கி விட்டாயே!" என்று முணுமுணுத்தான்.

அவன் எதிர்பார்த்தது வேறு. 'இங்கோ இருபது முப்பது பேர் வருகிறார்களே. சர்வ சாதாரணமாக எண்ணி விட்டோமே. ஓரிருவர் அதுவும் பெண்டிர் குழந்தைகள்தான் வருவார்கள். அகதிகள் போலக் கள்ளத் தோணியில் தப்பிச் செல்வார்கள் என்று. இங்கு ஒரு சிறிய சைனியமே செல்கிறதே. நாம் எப்படி அவர்களைத் தடுத்து நிறுத்துவது?'

திரும்பிப் பார்த்தால் மாறனும் ஸ்தம்பித்துச் சித்திரப் பதுமை போல அசைவின்றி அமர்ந்திருந்தான். சிறப்பாகச் செய்யப்படும் திட்டங்கள் கூடச் சில எதிர்பாராத சம்பவங்களால் தடுமாறிப் போய்விடும். அந்த நிகழ்வுகள் திட்டமிடும் போதே மாற்று வழிக்குச் சிறிய இடம் ஒதுக்கிவிட வேண்டும்.

உடனே இடத்தை ஒதுக்கி விட்டான் அடியான். அந்த இடம் மரத்தின் மீது அந்த இரு கிளைகள் பிரியும் கவடுதான். பாண்டியர்கள் படகேறிச் செல்லும்வரை இந்த மரம் ஆதரவு தரும். அதை ஏற்றுக் கொண்டு உயிருடன் சென்று தஞ்சையில் நடந்ததைச் சொல்லலாம். மாறனும் வந்தவர்களைப் பார்த்துவிட்டு, அடியானைத் திரும்பி முறைத்தான். அவன்தான் கோட்டை விட்டு விட்டான். ஆனால், அவன் அடியான் போலச் சும்மா இருக்க விரும்பவில்லை. ''ஊர்வலம் கடக்கட்டும். பின் ஏதாவது சந்தர்ப்பம் வராமலா போகும். பார்த்துக் கொள்ளலாம்'' என்று நினைத்தான்.

இப்போது மங்கலான வெளிச்சத்தில் வருபவர்கள் கண்ணுக்குப் புலனாயினர். அனைவரும் இருளில் நிழல்கள் படர்ந்த முகத்துடன் பயங்கர உருவம் கொண்டிருந்தார்கள். அடிவயிற்றைக் கலக்கியது மரத்தின் மேல் இருந்த இருவருக்கும்.

கற்பனா சக்தி பயத்தை அதிகரிக்கும். மரத்தில் உள்ள முட்கள் அவர்கள் உடலைப் பிராண்டி விட்டுப் பல நேர் கோட்டுக் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றை மரம் நகம் முளைத்துக் கீறிவிட்டது போல எண்ணினார்கள். ஆனால், கத்தக் கூட முடியவில்லை.

முன்னால் வந்த இரண்டு வீரர்கள் கையில் வேலும் இடுப்பில் வாளும் வைத்திருந்தது மாறனின் கண்களில் முதலில் பட்டது. போருக்குப் பயிற்சி பெற்ற ஒரு வீரனின் அனுபவம் அதை முதலில் அவனுக்கு எச்சரித்தது. அவர்களுக்கு அடுத்தாற்போல் தனித்து வந்தனர் ஒரு தம்பதியர். முன்னும் பின்னும் சற்று இடைவெளி விட்டே மற்றவர்கள் நடந்தார்கள். அந்த இடைவெளியின் அர்த்தம் மாறனுக்கு நன்கு புரிந்தது. அவர்கள் இருவரும் உயர் குலத்து மனிதர்களாக இருக்க வேண்டும்.

அனைவரும் கால் விரல்களின் நுனியில் எச்சரிக்கையாய் நடந்தனர். ஊர்வலம் நெருங்கி வந்துவிட்டது. அதன் முன் பகுதியில் இருந்த வீரன் இருவரும் ஒளிந்திருந்த மரத்தின் அடியில் வந்துவிட்டனர். மரத்தின் மீது இருவர் இருப்பதை அவர்கள் அறிந்தாற்போல் தெரியவில்லை.

எதிர்ப்பட்ட வீரர்கள் இருபது பேர்தான் என்றாலும் மரத்தின், மீது ஒளிந்திருந்தவர்களுக்கு நூறு பேராகக் காட்சியளித்தார்கள். குறுகிய காட்டுப் பாதையாகையால் ஊர்வலம் முடிவில்லாமல் வருவதாய்த் தோன்றியது.

மாறன் அந்த உயர் குலத்து மனிதனை உற்றுப் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டான். அவன் முடி சடை சடையாய்ப் பின்னியிருக்க, அவன் அணிந்திருந்த துணிகளும் கிழிந்திருந்தன. அவன் முகம் வெண்தாடி கொண்டு வயதிற்கு மீறிய முதிர்ச்சியைக் காட்டியது. ஐந்து ஆண்டு காலத்தில் அவனிடம் காணப்பட்ட மாறுதலானது அதிசயத்தைத் தந்தது.

பழைய மதுராந்தகனை மாறன் நன்கு அறிவான், அவனது மைத்துனன் ஆகும் துரதிருஷ்டம் மாறனுக்கு நேர்ந்திருக்கலாம். நல்ல வேளை, தன் மகளை இவனுக்குக் கட்டிவிட்டு என்ன தவிதவிக்கிறார், சின்னப் பழுவேட்டரையர்.

மதுராந்தகர் அருகில் வந்த பெண் பயத்தினாலோ அல்லது வாடைக் காற்றினாலோ அவள் கணவரை ஒட்டியே நடந்தாள். அவள் தோள்பட்டையில் ஒரு குழந்தை துணியில் சுற்றியபடி தூங்கியது. ''முன்னால் பார்த்த பழுவேட்டரையரின் மகளா இவள்?''

சட்டென்று தஞ்சையில் பார்த்த பெண் ஞாபகம் வந்தது. அவள் தமக்கைதானே இவள். அப்போதுதான் அவனுக்கு மற்றும் ஓர் உண்மையும் தெரிந்தது. ''அந்தத் தஞ்சைப் பெண்ணைப் பற்றி நேற்றிலிருந்து நினைக்கவே இல்லையே?''

'இப்படிக் கிழிந்த புடவையை உடுத்தி, காலணிகள் கூட இல்லாமல், காட்டுப் பாதையில் நொண்டி நொண்டி நடந்து வர இவளுக்கு என்ன நிர்பந்தம்? அரச குலத்தில் பிறந்து அரச குலத்தில் புகுந்த அரசர்க்கரசி, இன்று இந்த நிலையில். ஆனால், ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிந்தது. அவளைக் கட்டாயப்படுத்தி யாரும் அழைத்துச் செல்லவில்லை. சொந்த விருப்பத்தின் பேரில் தான் சென்று கொண்டிருந்தாள். அன்று அந்தப் பெண் தஞ்சையில் சொன்னது சரிதான். கணவனுக்குக் கஷ்டம் என்றால் அச்சமயம் மனைவிக்கு எங்கிருந்தோ துணிச்சல் வந்து விடுகிறது. அத்துடன் அதிசயமான மனோதிடமும் தைரியமும் கூட.'

காட்டுப் பாதையில் அந்த ஊர்வலம் கடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அனைவரும் வெகு தூரம் வழி நடந்து களைப்புற்றவர்களாய்க் காணப்பட்டார்கள்.

அந்தத் தம்பதி கடந்து சென்றவுடன் ஊர்வலத்தின் கடைசி தென்பட்டது. உடனே ஒரு நிம்மதி. ஆனால், கடைசியாய் வந்தவனைப் பார்த்தவுடன் இருவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

அடியான் அவனைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆனது. எனினும் ரவிதாசனை நன்றாய் அடையாளம் கண்டு கொள்ள

முடிந்தது. அவனது வெறிக் கனல் பாய்ந்த கண்களை யாரால் மறக்க முடியும்?

மாறனோ போன மாதம்தான் அவனைப் பார்த்திருந்தான். முன் பின் தெரியாத அந்தக் கூட்டத்தின் இடையே அந்தத் தாடிக்காரன் மீண்டும் எப்படி?. அடியான் கடம்பூருக்கு வருவதற்கு முன் அங்கு வந்து, ''தன்னுடன் வர முடியுமா?'' என்று கேட்ட தாடிக்காரன். 'அன்று ஒப்புக்கொண்டிருந்தால் இந்த ஊர்வலத்தில் தானும் இலங்கை செல்ல நேரிட்டிருக்குமோ?'

அடியானும் அந்த மனிதனைக் கண்டான். இல்லை, இல்லை. அவனது அபிப்பிராயத்தில் மனித ரூபத்தில் ஒரு நடமாடும் பேய் அந்த மனிதன்.

'இந்த மந்திரவாதி ஏன் இலங்கைக்குச் செல்கிறான்? அதுவும் இவர்களோடு. இனிமேல் வந்த காரியம் நிச்சயமாக முடியாது. இன்று ராத்திரி ஏதோ விபரீதம் ஏற்படப் போகிறது' என்று அவனுக்குத் தோன்றியது.

இருதயம் முரசு போல அடிப்பதைக் கேட்டு எதிரி அண்ணாந்து பார்த்தால் என்ன ஆகும் என்று நினைத்த அடியானும் மரக்கிளையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

'கீழே செல்லும் ஊர்வலம் தங்களைக் கடக்கும் போது, கை தவறி அவர்கள் முன் பொத்தென்று விழுந்தால் எப்படியிருக்கும்?' என்று நினைத்துப் பார்த்தான் அடியான். 'செத்தோம்!'

மாறன் அப்படிப் பயப்படவில்லை. இங்கு செல்பவரில் அந்தத் தாடிக்காரனைப் பார்த்துவிட்டு அவன் கோபம் அதிகரித்தது. 'ஓகோ! நான் நினைத்தது சரியாகப் போயிற்று. கடம்பூருக்கு வந்தவன்தான் இவன்.'

நாடு தன்னைத் தேசத் துரோகி எனச் சந்தேகித்தது. இவனோ அதை ஊர்ஜிதம் செய்ய நினைத்தவன். பல்லைக் கடித்துக் கொண்டு தன் முழு பலத்தையும் கொண்டு அவர்களைத் தாக்கி விடலாமா என்று கூட யோசித்தான். தான் இங்கு ஒளிந்திருப்பது யாருக்கும் தெரியாது. அந்த அதிர்ச்சியில் பாதிப்பேரை வெட்டிச் சாய்த்து விடலாம்.''

அவன் மனதை அறிந்தாற்போல் அடியான் தன் கையை இவன் கை மீது எச்சரிக்கையாய் வைத்தான்.

அப்போதுதான் நிகழ்ந்தது அந்த அதிசயம். ஊர்வலத்தின் கடைசியில் வந்த ரவிதாசன் இவர்கள் இருவரும் ஒளிந்திருந்த மரத்தின் அடியில் சற்று நின்றான். மோப்பம் பிடிப்பது போல

மீசையை இழுத்து இழுத்து விட்டான். பின் அந்த மரத்தடியில் நின்று தொண்டையைக் கனைத்தான்.

'காட்டில் ஆயிரமாயிரம் மரங்கள் இருந்தனவே. ஏன் இந்த மரத்தைத் தேர்ந்தெடுத்தான்? மரத்தின் மீது ஏறினால்தான் மறைவாக இருக்கும் என்று ஏறி இப்படி மாட்டிக் கொண்டோமே!' என்று மனதுக்குள் புலம்பியிருப்பார்கள் மரத்தின் மேலிருந்த இருவரும்.

அவன் என்ன செய்யப் போகிறான் என்று இருவரும் யோசித்திருக்கபோது அவன் பயங்கரமான ஒரு சிரிப்பைச் சிரித்தான்.

'ஹா ஹா ஹா!'

அவன் சிரிப்பு இருவரின் தேகத்தைச் சிலிர்க்க வைத்தது. உடம்பெல்லாம் நடுங்கிற்று. யமதர்மனிடம் பயம் கொள்வது போல் உள்ளம் பதைத்தது. மீண்டும் ஒரு முறை சிரித்தான் அந்த மந்திரவாதி

''ஹா ஹா ஹா!''



அத்தியாயம் இருபது

இரண்டு எங்கே? இருபது எங்கே?

''ஹா ஹா ஹா'' என்று மறுபடியும் அந்தத் துஷ்ட மனிதன் உரக்கச் சிரித்தவுடன் பறவைகள் இன்னும் ஒரு முறை சடசடவெனச் சிறகடித்து வானத்தை நோக்கிப் பறந்தன. மரத்தின் மீது இருந்த இருவருக்கு மட்டும் இறக்கைகள் இருந்திருந்தால் அந்த வழியையே அவர்களும் கடைப்பிடித்திருப்பார்கள். மரத்தின் கீழ் ஜன்ம சத்ரு பைத்தியக்காரன் மாதிரிச் சிரித்துக் கொண்டிருக்கிறான். எப்படிக் கீழே இறங்குவது?

அந்த இருளின் அமைதியில் அந்தச் சிரிப்பு இடிபோலக் கேட்டது. அடியானுக்கு அப்படிப்பட்ட பீதி என்றைக்கும் ஆட்கொண்டதே இல்லை. அந்தச் சிரிப்பிற்குப் பின்னாலிருந்த அர்த்தம் அவனுக்கு அளவில்லாத பயங்கரத்தை உண்டாக்கியது. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஒரு நடுக்கம். பெரும் அபாயத்தில் ஒரு பற்றுக்கோல் போல உதவும் நாராயணன் நாமத்தை உடனே அவன் ஜபித்தான்.

காட்டிலிருந்த பிராணிகள் மட்டுமல்ல, மரத்தின் மீது இருந்தவர் மட்டுமல்ல, ரவிதாசனுடன் சென்றவரும் அசந்து போனார்கள். நிசப்தமாக நடந்து வந்த ஊர்வலத்தில் இப்படியா அமைதியைக் குலைப்பது என்று ரவிதாசனுடன் வந்தவர்கள் ஒன்றும் புரியாமல் ஸ்தம்பித்து நின்றார்கள். அவன் ஒரு மந்திரவாதி என்று அரசல் புரசலாகச் சிலரும், அவனே சொல்லக் கேட்ட சிலரும், அவனைக் கண்டு சற்றுப் பயம் கொண்டிருந்தனர்.

அவனுக்குச் சித்தப் பிரமை பிடித்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் அடியான் மனதில் தோன்றியது. அதே சந்தேகம் பாண்டியரிடமும் வந்தது. பின் இருக்காதா? சப்தம் செய்யாமல் அனைவரும் கால் விரல்களின் நுனியில் எச்சரிக்கையாய் நடந்து பல காத தூரம் வந்த பின், இலக்கை அடையும் முன் அனைவரையும் காட்டிக் கொடுக்கும் செயலைத் தேவையின்றி இந்த மந்திரவாதி செய்கிறான்.

ஒரு சப்தமும் செய்யாமல் வர வேண்டும் என்று அறிவுரை செய்து வந்த ரவிதாசனே இப்படிச் சப்தம் செய்தது ஒரு வகைக் கலக்கத்தை உண்டாக்கியது. அந்தப் பெண்ணின் கைகளிலிருந்த குழந்தை கதறியது. விட்டால் அதன் தாயும் மற்றவரும் கூட அழுதிருப்பார்கள். அவன் சிரித்து முடித்த பின், பீதியை உண்டாக்கும் பயங்கர மௌனம் நிலவியது. குழந்தை மட்டும் இன்னும் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தது. அதைச் சுமந்த மதுராந்தகனின் மனைவி பேயறைந்தது போலிருந்தாள்.

"நடுக் காட்டில் யாரைப் பார்த்துச் சிரிக்கிறீர்?" என்றான் ரவிதாசனின் அருகிலிருந்த ஒருவன். மற்றவரெல்லாம் மௌனமாய், ஆனால், அவனை முறைத்தபடியே இருந்தார்கள்.

"பாவம்! நீ என்ன செய்வாய்? உன் கண்களுக்கு மனிதர் மட்டும்தான் தெரிவார்கள். என் கண்களுக்கு அதனையும் தாண்டிப் பேய்களும், மரம் ஏறும் வேதாளங்களும் கூடத் தெரியும்" என்றான்.

செவிடரிடம் பேசுவது போல உரத்த குரலில் பேசினான். இதைக் கேட்டவுடன் கூட்டத்தினரும் பயந்து போனார்கள். உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மரத்தின் மேலிருக்கும் இருவரைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

அந்த வார்த்தையைக் கேட்டு மரத்தின் மீது இருந்தவர்கள் இருவரும் உண்மையில் தத்தளித்துப் போனார்கள். மரத்தின் மேலிருக்கும் வேதாளத்தைப் பார்க்க யாரேனும் விருப்பம்

கொண்டால் என்ன ஆகும்? அவர்கள் அண்ணாந்து எப்போது பார்க்கப் போகிறார்கள் என்று ஒரு பயம்.

மாறன் காதில் விழுந்த அந்தச் சிரிப்பு அவனுக்கு அச்சத்தை உண்டாக்கியது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவன், "நாம் இங்கு உள்ளதை ஊகித்திருப்பானோ இந்தப் பொல்லாத மந்திரவாதி!" என்று நினைத்தான்.

என்ன செய்வது என அறியாமல் இருவரும் மரத்தின் மீது அமர்ந்திருந்தார்கள். விரைவில் ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று மட்டும் இருவரது உள்ளுணர்வுக்குத் தோன்றியது. 'சோழ வம்சத்தின் மீது அவன் கொண்ட வெறுப்பையெல்லாம் இவர்கள் மீது இன்னும் சில நொடிகளில் காட்டிவிடுவான். இருவரையும் கொல்லக் கூடத் துணிவான். ரவிதாசனுக்குக் கொலை என்பது சாதாரணமானது' என்று நினைத்துக் கொண்டார்கள்.

அவர்கள் இருந்த பக்கம் அவன் பார்க்கவில்லைதான். ஆனால், அவன் கொஞ்சம் உரத்த குரலில் பேசியது அவர்கள் கேட்பதற்குத் தானோ? 'உன்னுடைய உறைவிடம் எனக்குத் தெரிந்ததே' என்பதைக் குறிக்கத்தானோ அந்தச் சிரிப்பு?

ஆனால், அந்த மந்திரவாதியோ, அகதிகள் கூட்டத்தில் வேறு எவரோ, அண்ணாந்து பார்க்கவில்லை. சிரிப்பினால் ஏற்பட்ட தாமதத்தைச் சரி செய்ய அகதிகள் கூட்டம் கடலை நோக்கி விரைவாக நடந்தது. ஒரு திருப்பத்தில் திரும்பியவுடன் ஒரு வழியாக ஊர்வலம் முழுவதுமாய் இவர்கள் பார்வையிலிருந்து மறைந்தது. கடைசிவரை அந்த மந்திரவாதி திரும்பிப் பார்த்து இவர்களைக் கண்டுபிடித்து விடுவானோ என்ற பயம் இருவரின் நெஞ்சிலும் இருக்கத்தான் செய்தது.

பாண்டியரின் ஊர்வலம் மணற்பரப்பை நோக்கிச் சென்றுவிட்டது என அறிந்தவுடன், அவர்கள் சற்றுத் தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இருவருமாய் இதுதான் சமயம் என்று மரத்திலிருந்து இறங்க முடிவு செய்தனர்.

மாறன், அடியானின் தலை அசைவுக்குக் காத்திருந்தவன் போல, ஒரே குதியில் கீழே குதித்தான். ஆடிப்போயிருந்த அடியான் மெல்ல மெல்ல ஒவ்வொரு கிளையாகக் கால் ஊன்றிப் புமா தேவியின் மீது சஞ்சரித்தான். இத்தனை நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்ததால் அடியானின் கால்கள் மரத்துப் போயிருந்தன. கடைசியாக இறங்குவதற்கு அவன் மாறனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"மரத்தில் உள்ள முட்கள் என் உடலைப் பிராண்டி விட்டன. கத்தக் கூட முடியவில்லை" என்று கூறினான் அடியான், தன் உடலை ஆராய்ந்தவாறு.

"ஐயோ! ரத்தம்!" என்றான்.

"நீர் உம் தொழிலில் பார்க்காத ரத்தமா?" என்று கோபமாய்க் கேட்டான் மாறன். அந்தக் கீறல்களில் வந்த ரத்தம் இன்னும் ஓராயிரம் ஆண்டுகள் ஒழுகினாலும் அடியான் உடல் நலனுக்கு ஒரு ஆபத்தும் வராது என அவனுக்குத் தெரியும்.

"ஆனால், இது என் ரத்தமாயிற்றே!" என்றான் அடியான்.

மாறன் உடலிலும் கீறல்கள் இருந்தன. ஆனால், அதற்கு எல்லாம் அப்பாற்பட்ட உணர்ச்சி வேகத்தில் அவன் அகப்பட்டுக் கொண்டிருந்தான். கீழே இறங்கியவுடன் மாறனுக்கு வீரப் விழித்தெழுந்ததுபோல் அசாத்தியக் கோபம் வந்தது.

இங்கே கிட்டியிருப்பது போல் தன் திறமையை வெளிக் காட்ட ஒரு வாய்ப்பு மீண்டும் கிடைப்பது மிகவும் அரிது என்பதை உணர்ந்திருந்தான். இதில் வெற்றி வாகை சூடினால் தன் எதிர்காலமும் தன் குலத்தின் செழிப்பும் அதிகரிக்கும்.

ஒரு முடிவுக்கு வந்தான். "எனக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பு இது. அதைக் கை நழுவவிட நான் நினைக்கவில்லை" என்று கூறி எழுந்தான் மாறன். வாளை உறையிலிருந்து உருவினான். "பாய்ந்து சென்று அவர்களைத் தாக்குவோமா?" என்றான்.

அடியான் பதறிப் போய்விட்டான். "வேண்டாம், இளவரசே!" என்று அவன் கரத்தைப் பிடித்துத் தடுத்தான். "தயவு செய்து போகாதீர்!" என்று மன்றாடினான்.

"வைணவனே! விளையாட இதுவா நேரம்? என்னை முழுப் பைத்தியக்காரனாய் ஆக்கப் பார்க்கிறீர். நாம் எதற்காக அனுப்பப் பட்டோம் என்று மறந்து பேசுகிறீர். அந்தச் சதிகாரனுக்குத் தக்க தண்டனை கொடுக்காவிட்டால் நான் வந்து என்ன பயன்?"

"இல்லை, இளவரசே. அவர்கள் எங்கும் போய்விட மாட்டார்கள். இங்குதான் திரும்பி வர வேண்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்றான் அடியான். "வேகத்தை விட விவேகம் முக்கியமானது. அவர்கள் இருபது பேர். நாம் இருவர். இரண்டு எங்கே, இருபது எங்கே? உம்முடைய வீரத்தையும் துணிச்சலையும் இதிலேதானா காட்ட வேண்டும்?"

மாறனுக்கு இப்போது கணக்குப் புரிந்தது. ஆனால், கோபம் குறையவில்லை. "அலட்சியமாய்ச் சிரித்து விட்டுச் சென்றானே. எனக்கு வந்த கோபத்துக்கு, கீழே குதித்து அவன் கழுத்தை நெரிக்க வேண்டும் போலிருந்தது" என்று உறுமினான்.

"அதைச் செய்கிறாயா என்று பார்ப்பதற்கே அவன் சிரித்தான். அவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவன் வகுத்த வழியில் எதிர்ப்பட்ட எவரையும் யமலோகம் அனுப்பத் தயங்க மாட்டான்."

"சிரித்தவன்தானா ரவிதாசன்?" என்று கேட்டு, உறுதி செய்து கொண்டான் மாறன். அவன் சற்றுச் சாந்தமானதை உணர்ந்த அடியான் பேச்சைத் திசை திருப்பினான்.

"சற்று அருகே சென்று மணற் பாங்கின் அருகே நின்று மேலே நடப்பதைக் கவனிப்போம். நமக்கு அதிர்ஷ்டமிருந்தால் பாதிப் பேர் படகில் ஏறி, மீதிப் பேர் இவ்வழியே வரலாமல்லவா? அவர்களைச் சிறைப்பிடிக்க முயலுவோம்" என்றான் அடியான்.

ஆனால், அவனது குரலில் உறுதியில்லை. இன்று இரவு இவர்களுக்குச் சாதகமாக ஏதும் நடக்காது என உள் மனது சொன்னது. உயிருடன் தப்பியதே பெரும் விஷயம்.

நல்ல இடைவெளிவிட்டு அந்தப் பாண்டியர் கூட்டத்தை இருவருமாகத் தொடர்ந்தார்கள். ஜிலுஜிலுவென்று குளிர்ந்த காற்று அவர்கள் உடல் மீது பட்டவுடன் கடல் நெருங்கி வந்து விட்டது என இருவருக்கும் தெரிந்தது. சற்று ஜாக்கிரதையாகவே நடந்தார்கள். சித்தர் மடம் என்று பட்டர் காட்டிய கட்டடம் தெரிந்தது. வேறு ஒன்றும் செய்யச் சக்தி இழந்தவர்களாய் அதையொட்டி உள்ள மணல் மேட்டின் மீது அமர்ந்தார்கள் இருவரும்.

மாறனுடைய நெஞ்சு இன்னும் படபடவென்று அடித்துக் கொண்டது. "இனிமேல் ஏதாவது பேசலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"நன்றாகப் பேசலாம். இனி அவ்வளவு பயமில்லை. காடு பெரியது. இரவு இருள் நிறைந்தது. இதில் ஒரு பயமும் இல்லை. உமக்கு நடுக்கம் நீங்கியிருந்தால் பேசலாம்!" என்றான் அடியான்.

மெல்லிய குரலில் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

"பாண்டிய நாட்டில் ஒளியவா இடம் இல்லை? நாடு விட்டு நாடென இலங்கைக்கு ஏன் செல்கிறார்கள்?" மாறன் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் அடியான் சிரித்தான்.

"தாய் நாட்டில் காலடி வைத்தால் சிரசாக்கினை என்று சோழச் சக்கரவர்த்தி விதித்திருக்கிறாரே! எங்கேயாவது கண் காணாத தேசத்திலாவது உயிரை வைத்துக் கொண்டு காத்திருக்கவேண்டும்

நல்ல சமயம் வருமென்று. மேலும் வெகு தூரத்தில் இல்லை இலங்கை. நீர் கடந்து வந்த தஞ்சையிலிருந்து கோடிக்கரைக்கு உள்ள தூரத்தை விட இது குறைவு.''

சற்றுக் கரையில் நடப்பதைக் கவனித்து விட்டுச் சொன்னான், ''இளவரசே, நீர் இலங்கைக்குச் சென்றதில்லை போலும். அஷ்ட திக்குப் பாலகர்களுக்கு உட்பட்ட எந்த ஒரு பிரதேசத்திலும் இலங் கைத் தீவைப் போல ஒரு அருமையான அடைக்கலம் கிட்டாது.''

''அங்கும் சோழர் ஆட்சிதானே நடக்கிறது. இங்கிருக்கிற அதே ஆபத்து தானே அங்கும்'' என்று தொடர்ந்தான் மாறன்.

''இலங்கையில் வடக்குப் பகுதி அனுராதபுரம் வரை சோழர் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது. கட்டுப்பாடு என்பது நகரங்களும் பிரதான சாலைகளும் மட்டும்தான். காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் நமது ஆட்சி இல்லை'' என அடியான் விளக்கியபோது மாறனுக்கே அதிசயம்.

''பின் பொன்னியின் செல்வர் சென்று வெற்றியுடன் திரும்ப வில்லையா? கொடும்பாளூர் இளைய மன்னர் அங்கு மடிந்த தெல்லாம் வீணா?'' என்று வினவினான்.

''இதற்கு மேல் அங்கு ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வர முடியாது, இளவரசே. இலங்கைக்கு இயற்கை அன்னையிட்ட வரப் பிரசாதங்கள் அவை. ஒளிந்திருக்க நினைக்கும் மன்னனுக்கு நல்ல அடைக்கலமாகவே இலங்கையின் காடுகள் திகழும். அவனாக வெளிப்பட நினைக்கும் போதே உலகின் கண்களுக்கு அவன் தென்படுவான்.''

''மேலும் பாண்டியருக்குத் தோழமையான நாடு அது. ஈழத்துக் கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பலமுறை அரசியல் ரீதியான திருமணங்கள் நடந்துள்ளன. ராஜசிம்ம பாண்டியன் காலத்தில் ஈழத்துக்கு அவன் தன் மணிமுடியை எடுத்துச் சென்று அங்கு விட்டு விட்டான். முதல் பராந்தகச் சோழர் ஈழத்துக்குத் தூது அனுப்பி அந்த முடியைத் திருப்பித் தரும்படி நட்பு முறையில் கேட்டனுப்பினார். சோழர் கையில் அது அகப் பட்டால் பாண்டிய நாடே 'தென் சோழ மண்டலம்' ஆக மாறிவிடும் எனப் பாண்டியருக்கும் தெரியும். சிங்களவருக்கும் தெரியும். அதனால் மறுத்துவிட்டனர்'' என்று சொல்லிக் கடலைக் கவனித்தான்.

கரையோரமாக அந்தக் குளிரிலிருந்து தப்பிக்க அந்த உயர் குலத்துக் குடும்பம் ஒருவரை ஒருவர் அணைத்து நின்றார்கள். குழந்தையை இருவருக்கும் நடுவில் வைத்துக்கொண்டு வாடைக்

காற்று அதைத் தாக்காமல் பெற்றோர் காத்தார்கள். ''சேர நாட்டி லும் தென்பாண்டிய நாட்டிலும் சுற்றி அலைந்துவிட்டு இப்போது கடல் கடந்து செல்கிறார்கள். இன்னும் எங்கெல்லாம் சுற்றியலைய வேண்டுமோ? தன் வாழ்நாட்களில் ஒரு பாண்டிய அரசை ஸ்தாபனம் செய்ய முடியுமா என்று கூட நிச்சயமாகத் தெரியாமல் நாடோடிகளாய் அலையும் இவர்கள்கூடப் பாவம்தான். ஆனால், போரில் பாவம் புண்ணியம் பார்க்க முடியுமா?'' என்று மாறன் மனதில் மாறுபட்ட எண்ணங்கள் தோன்றின.

ரவிதாசன் படகுகளை சுற்றிச் சுற்றி வந்தபடி அந்தக் கூட்டத்தின் நடவடிக்கையை மேற்பார்வை செலுத்தியது இருளில் தெரிந்தது. 'அந்த மனித உருவம் கொண்ட அசுரன். மனதில் நரகத்தைச் சுமப்பவன், பாண்டிய அரச குடும்பத்தைப் பத்திரப்படுத்தி விட்டுச் சோழ நாட்டில் என்னவெல்லாம் அட்டூழியங்கள் செய்யப் போகிறானோ?' என அடியான் மனதுக்குள் பயந்தான்.

அந்தக் கூட்டத்திலிருந்த சிலர் இரு படகுகளைக் கட்டவிழ்த்து [illegible]த்திக் கடலில் தள்ளி விட்டார்கள். நாலு பேரைத் தவிர மற்றவரெல்லாம் ஏறிக்கொண்டார்கள். அந்த நால்வர் தங்கள் இரும்புக் கரத்தின் பலம் முழுவதையும் பயன்படுத்தி அந்தப் படகுகளைக் கடலில் தள்ளி விட்டார்கள். பின் இடுப்பளவு நீரில் சென்று ஏறிக் கொண்டார்கள். அடியான் ஆசைப்படி ஒருவரும் திரும்ப வரவில்லை. அனைவரும் ஈழத்துக்கே செல்வதாய்த்தான் திட்டம் போலிருந்தது.

கடலும் வானும் கலக்கும் ஒரு மெல்லிய நீல நிறக் கோட்டின் பின்பு அவர்களது படகு விரைவில் மறைந்துவிடும். பின்பு அவர்கள் சோழர் பிடியிலிருந்து நிரந்தரமாகத் தப்பிவிடுவார்கள் என்று அறிந்த மாறன் அவர்கள் படகேறும் காட்சியைக் கண்டு [illegible]ரிந்து நின்றான்.

சிலர் துடுப்பை வலிக்கத் தொடங்கினர். காற்றிலும் அலையிலும் உல்லாசமாய் ஆடுவது போல அசைந்து படகுகள் புறப்பட்டன.

நாலா பக்கமும் நிசப்தம் நிலவியது. கடலை நோக்கிய வண்ணம் அடியானும் மாறனும் சிறிது நேரம் இருந்தார்கள். கோடிக் கரையின் ஓரத்தில் கடல் அலை அடங்கி ஓய்ந்திருந்தது. அவர்களின் மனதில்தான் பேரலைகள் எழுந்தன. அதில் ஒரு அலை சந்தேகத்தைச் சுமந்து வந்தது.

''ஒரு வேளை பிரதமருக்குப் பழுவேட்டரையருக்கு உதவி செய்ய எண்ணம் இல்லையோ என்னவோ. ஒரு சிறிய படையை அனுப்பியிருந்தால் எவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்க

லாம். இரண்டு பேராய் வந்ததுதான் பிசகானது'' என்றான் அடியான்.

''நாம் இருவராய் வந்து இங்கு பலி ஆடாக மாட்டிக் கொண்டு விட்டோம்!'' என்றான் மாறன். உலகில் நியாயம் என்பதே அற்றுப் போய்விட்டதாக அந்தச் சமயம் தோன்றியது.

படகு கடலில் மிதக்கத் துவங்கியது. படகுகள் கடலில் செல்வதைப் பார்க்கப் பார்க்க அவனுடைய கோபம் கொந்தளித்துப் பொங்கிற்று. அந்தப் படகுகளில் போனவருடன் உடன் போனது அவன் மறுவாழ்வுக்கான சந்தர்ப்பம். உடலும் மனதும் சோர்வடைந்திருந்து, முக்கால் பிராணனை இழந்திருந்த சம்புவராயர் குலம் தலை நிமிர்ந்து நிற்கக் கிடைத்த ஒரு வாய்ப்பு கைவிட்டுச் சென்று கொண்டிருந்தது.

அடியானுக்கும் அது போன்ற எண்ணங்கள் அடிக்கடி தோன்றி அவன் மனதைச் சஞ்சலப்படுத்தின. ஆனால், வாய் திறக்கவில்லை. அநிருத்தர் தவறு செய்திருப்பார் என அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை.

படகுகள் மெல்ல மெல்லப் பார்வை புக முடியாத இருளுக்குள் பயணித்தன. இரண்டு படகுகளில் அகதிகள் சென்று கொண்டிருந்தார்கள். அமர்வதற்கு இடம் கிடைத்தவுடன் பல நாள் அலைந்து திரிந்த அகதிகள் அனைவரும் இடம் பிடித்து உட்கார்ந்தார்கள், ஒரு உருவத்தை தவிர.

மாறனுக்கு எல்லாம் கனவாய்த் தோன்றியது. தன்னை ஒரு முட்டாளாக இன்னும் பார்க்கிறது உலகம். சோழரும் சரி, பாண்டியரும் சரி. சிரித்தவன்தான் மந்திரவாதி. அவன்தான் ரவிதாசன். போன மாதம் தன் வீட்டுக்கு வந்து சென்றவனும் இவனே. நாலே எட்டில் அந்த மணலையும் நீரையும் கடந்து சென்று அந்தத் துஷ்டனைக் கொல்ல வேண்டும் போலிருந்தது.

''அங்கு பார்'' எனக் கடலை நோக்கி விரல் நீட்டினான் அடியான். பாண்டிய அகதிகள் அனைவரும் படகில் அமர்ந்திருந்தனர். ஒருவனைத் தவிர. ரவிதாசன் மட்டும் அந்த ஆடும் படகில் உறுதியாய் நின்று கரையைப் பார்த்திருந்தான்.

ரவிதாசன் தனக்கும் நிலத்துக்கும் அதிகரித்துக் கொண்டிருந்த தூரத்தை நிரப்பிய நீரைப் பார்த்தான். தள்ளிச் செல்லும் எதிரியின் நாட்டைப் பார்த்தான். இருட்டினுள் அவனது பார்வைக் கணைகள் வீசப்பட்டன. விட்டுச் செல்லும் நிலத்தைக் காண்கிறான் என்றுதான் அடியான் முதலில் நினைத்தான். ஆனால், அடியானின் உள்ளுணர்வுக்கு ஒன்று புலப்பட்டது. ரவிதாசன்

உற்று நோக்குவது தன்னைத்தான் என்று அவன் ஊகித்தான். கலங்கரையில் எரிந்த தீபத்தின் வெளிச்சம் அவன் முகத்தின் ஒரு பாதியில் பட்டது. அது அவனை இன்னும் பயங்கரமாகக் காட்டியது.

அவர்கள் காத்திருக்கும் திக்கை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ரவிதாசன். அவனது செயல்களைக் கண்காணிக்க இருவர் காத்திருந்ததை அவன் நன்கு அறிந்திருந்தான். பின்பு ஏன் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை?

அடியானுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மனம் சொன்னது. அந்த மந்திரவாதியின் கண்ணோட்டத்தில் நிச்சயமாக அவர்கள் விழவில்லை என்று. காட்டுக்குள்ளே வெகு நேரமாகப் போகிறோம் என்று வேறு உத்தேசமில்லாமல் களைத்து நிற்க இவர்களது மரத்தைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

'பின் ஏன் அவன் சிரித்தான்? இல்லை, இல்லை. அவன் ஒரு முறைகூட மேலே பார்க்கவில்லையே. அப்படிப் பார்த்திருந்தால் நிச்சயமாகத் தன் ஆட்களை ஏவி இவர்களை நார் நாராய்ப் பிய்த்திருப்பான், அல்லவா?'

''இல்லை, இல்லை'' என்றது இன்னொரு மனம். இவர்கள் இருவர் அவனுக்காகக் காத்திருந்தது அந்த மந்திரவாதிக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. அவன் வியப்புறவில்லை. திடுக்குறவும் இல்லை. ஆகையினாலே அவர்கள் காதினில் அவனது அலட்சியம் விழட்டும் என்றுதான் அவ்வளவு சப்தம் போட்டுச் சிரித்தான். பின் ஏன் ஒன்றும் செய்யவில்லை? சிறிது நேரம் ரவிதாசனைப் பார்த்துக் கொண்டிருந்த அடியானுக்கு ஒரு பயங்கரச் சந்தேகம் பற்றிக் கொண்டது

எலியைப் பார்த்த பசியில்லாத பூனை தனக்குப் பசி வரும்வரை அதனுடன் விளையாடுவது, அடியானின் நினைவுக்கு வந்தது. தேகமெங்கும் ஒரு சிலிர்ப்பு பரவியது. அவனது பெரிய உடல் நடுங்கியது.



அத்தியாயம் இருபத்தொன்று
ஏன் விட்டு விட்டான்?

காலையிலிருந்தே கடலின் இரைச்சல் அதிகமானது போல இருந்தது. மாறனையும் அடியானையும் கண்டு, அது கலீரென நகைப்பது போலக்கூட அவர்களுக்குச் சில சமயம் தோன்றியது.

இனிக் கோடிக்கரையில் வேலையில்லை எனத் தெரிந்தவுடன் இருவருமாகத் தியாகவிடங்கரிடம் விடைபெற்றுக் கொண்டனர். இவர்கள் கிளம்புவது அவருக்கு உற்சாகமூட்டவில்லை என்பதை அவர் முகக் குறி புலப்படுத்தியது.

நீர் ததும்பிய கண்களுடன், "இளவரசே, என்னவோ தெரியவில்லை. ஓரிரு நாட்கள்தாம் பழகியிருக்கிறோம். ஆனால், உம்மை விட்டுப் பிரிய எனக்கு மனம் வரவேயில்லை. நீர் நலமாய் இருக்க வேண்டும்" என்று மனதார வாழ்த்தினார்.

"உம்மைப் போன்ற பெரியவரின் வாழ்த்துக்கள் இருந்தால் போதும், ஐயா!" என்றான் மாறன் பணிவாக.

பெரியவர் அடியானிடம் திரும்பி, "என் குடிசையில் இளவரசருடன் வந்து தங்கி என்னைப் பெருமைப்படுத்தியதற்கு என் மனமார்ந்த நன்றி!" என்றார்.

மாறன் குறுக்கிட்டு, "உங்களுடைய குடிசை எனக்கு அரண்மனையைவிட ஆயிரம் மடங்கு மேல்!" என்றான். அந்த வார்த்தைகள் உதட்டளவில் இல்லை என அடியான் புரிந்து கொண்டான்.

கிளம்பும்போது கலங்கரையைத் திரும்பி ஒரு முறை பார்த்தான், மாறன். நேற்று இரவு வெளிச்சத்தின் விளைவாகப் பிறந்து வந்த சாம்பலை விடங்கரின் உதவியாளன் கடலுக்குள் தள்ளிக் கொண்டிருந்தான். அவன் விருப்பத்துக்கு நேர்மாறாக அந்தச் சாம்பலைக் கடல் காற்று இன்னும் உயரத்துக்குத் தூக்கிச் சென்று விளையாடிக் கொண்டிருந்தது.

மாறன் அந்தச் சாம்பலைப் பார்த்து உடல் சிலிர்த்தான். அவன் எதிர்கால வாழ்க்கையின் பல அம்சங்களுக்கு இந்தக் கலங்கரைதான் வழி காட்டியது. அவனுடன் கூடப் பிறந்த அகங்காரம், ஆணவம் போன்றவையெல்லாம் இப்போது பறந்து கொண்டிருந்த சாம்பலைப் போலக் காற்றில் எங்கோ பறந்தன. இனி அவன் வாழ்வில் ஒவ்வொரு நாளும் அவன் செய்யும் ஒவ்வொரு

காரியத்திலும் இங்கு கற்ற படிப்பினை அவனுக்கு உதவும். அவனை நல்வழி நடத்தும்.

குழகர் கோயில்வரை வந்து பட்டரிடம் விடை பெற்றுக் குதிரைகளையும் கூட்டிக் கொண்டு, தஞ்சையை நோக்கி இருவரும் சென்றார்கள்.

பட்டர் கேட்டார்: "நேற்று இரவு ஒரே ஆள் நடமாட்டமாய் இருந்தது. அமர்க்களமாய் இருந்தது. உமது ஆட்களா?"

கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாமல் இருவரும் நிற்பதைக் கண்டு, "நானும் அப்படித்தான் நினைத்தேன். பாண்டியர்கள்தானே?" என்றார். பேச்சை மாற்றி மழுப்பிவிட்டு, விட்டால் போதும் என்று இருவரும் கிளம்பினார்கள்.

தலைநகருக்குச் செல்லும் பாதை நெடியது. தெரிந்ததுதான். வேகம் குறைந்தே நடந்ததால் ஊர் சென்று சேரத் தாமதமாகும் என்பது இருவருக்கும் தெரியும். இருவருக்கும் சலிப்புத் தட்டியது. மாறனுக்கு வெறும் கைகளுடன் திரும்பும் நிலை வேகத்தை இன்னும் குறைத்தது. மனம்தான் கனமாய் இருந்ததே. தோல்வியைச் சுமப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. அடியானும் துரிதப் பிரயாணத்தை விரும்பவில்லை. இரண்டு காரணங்களினால்.

ஒன்று, தோல்வி. மற்றொன்று, தன் குருநாதருடன் தஞ்சையில் சென்று நேருக்கு நேர் மோத நினைத்தது. இதுவரை அவரிடம் கோபம் கொள்வதற்குச் சந்தர்ப்பம் எதுவுமே ஏற்படவில்லை. ஆனால், இந்தக் கடைசி முயற்சியில் அநிருத்தர் குழந்தைகூடக் கேலி செய்யும் அளவுக்கு ஓர் காரியத்தைச் செய்திருந்தார். உலகில் வாழும் அறிவாளிகளில் முதன்மையானவர் எனத் தான் கருதிய அவர், காரணமே இல்லாமல் பெரும் மூடனாக நடந்து கொண்டு விட்டார்.

ஒரு கொடிய மிருகத்தைப் பிடிக்க ஒரு ஒற்றனை அனுப்புவானேன்? மாறன் வீரன்தான் எனினும் அவன் ஒருவனால் என்ன செய்ய முடியும்? எப்பேர்ப்பட்ட வீரனாக இருந்தாலும் இருபது பேரை வெல்வது சிரமம்தான். அதனால் வேகத்தைவிட விவேகம் சிறந்தது என நினைத்தான். இரவு நடுநிசியில் மரத்தின் மேல் உட்கார்ந்திருந்து விட்டுத் திரும்பி கொண்டிருந்தது நெஞ்சை என்னவோ செய்தது. பல நாட்களாய் முயற்சி எடுத்தது வீணாய்ப் போனது.

அடியான் பாண்டியனைப் பழித்தான். தன் வாழ்க்கையைப் பழித்தான். நீண்ட நாட்களுக்குப் பின் முதல் முறையாகத் தன் குருநாதரைப் பழித்தான். எல்லாவற்றையும் யோசிக்கும் அநிருத்தர்

ஏன் தப்பி ஓடுகின்ற பாண்டியர் குழுவின் அளவை ஊகிக்கவில்லை என்று புரியவில்லை. இப்படிப்பட்ட பிரதமரை வேலையில் தொடரவிட்டால் சோழ நாட்டரசனுக்கு ஒரு கடினமான பாதையில் பிரயாணம் காத்திருந்தது என்று கூடத் தோன்றியது.

இன்னும் இருபது வீரர்கள் உடனிருந்திருந்தால்.. இல்லை, இல்லை. பத்துப் பேர் கூடப் போதுமானதாய் இருந்திருக்கும். வெற்றி நிச்சயம் இவன் பக்கத்தில்தான். இப்போது தஞ்சைக்குச் சென்று எப்படி முகத்தைக் காட்டுவது? முதன் மந்திரியும் தனக்கு எதிராகச் சதி செய்திருக்கிறாரோ என நினைக்கத் தோன்றியது.

கோடிக்கரையிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் பாதை பாதி காட்டுப் பாதையாகவும் மீதி ராஜபாட்டையாகவுமிருந்தது. ராஜபாட்டையை அடைந்த பின் நீண்ட நாள் அமைதிக்குப் பின் மக்களின் குரல் செவிகளுக்கு யாழிசை போல இருந்தது. இருவருமாக வேதாரண்யம் என இன்று அழைக்கப்படும் திருமறைக் காட்டுக்கு மாலையில் வந்துவிட்டார்கள்.

அங்கு சாலை இரண்டாகப் பிரிந்தது. தஞ்சைக்குச் செல்லும் பாதை இடது பக்கமாக வயல்களுக்கு நடுவே சென்றது. வலது பக்கத்தில் நாகப்பட்டினத்துக்குச் செல்லும் பாதை சென்றது. அதன் அருகே கடற்கரை ஓரமாகச் சென்ற கால்வாய் இருந்தது. வேண்டும் என்ற போது அந்த வழியாகப் படகில் கூட ஏறி மக்கள் செல்லலாம்.

சில நாட்கள் முன் வந்த சாலையில் திரும்பாமல், நேரே சென்ற சாலையில் குதிரையைச் செலுத்தினான் மாறன். முன் சென்ற மாறனைக் கைதட்டி அழைத்தான் அடியான். "திருவாரூருக்கு வழி அப்படி அல்ல."

"நான் திருவாரூர் வரவில்லை. இப்படியே நாகப்பட்டினம் வழியாகச் சிதம்பரம் சென்று அப்படியே கடம்பூர் செல்கிறேன்" என்று கூறி முன் நகர்ந்தான் மாறன். அடியானுக்கு ஒன்றும் புரியவில்லை. கோடிக்கரை சென்று வரும் பிரயாணத்தின் சில நாட்களில் மாறன் மீது கணிசமான வாஞ்சை ஏற்பட்டிருந்தது. மாறனின் நிலை பாவமாய்தான் இருந்தது.

எல்லாம் தன் குருநாதர் என்று இதுவரை பாவித்து வந்த பிரதமரால் வந்தது. "கடம்பூரிலிருந்து இளம் சம்புவராயனை அழைத்துச் சென்று பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் இலங்கைக்குக் கிளம்புவதைப் பார்த்துவிட்டுக் கையசைத்து விடை அனுப்பி வாருங்கள்!" என்று அவர் ஆணை பிறப்பித்திருந்தால், அது இன்னும் பொருத்தமாய் இருந்திருக்கும். தஞ்சைக்குப் போய் அவரை ஒரு வாங்கு

வாங்க வேண்டும். ஆனால், அதற்கும் அவனுக்கு மனம் வரவில்லை. அநிருத்தரின் நட்பு இந்த அபாயகரமான காலத்தில் மாறனுக்கு உதவலாம்.

அவனது நெஞ்சின் ஆசைகளை எல்லாம் ஐந்து ஆண்டுகளில் மாறன் விட்டுவிட்டான், அவை அடைவதற்குக் கடினம் என்று அறிந்தவுடன். உலகம் அவன் எதிர்பார்த்திருந்த நம்பிக்கைகள் என்ற கதவுகளை ஒன்றொன்றாய் அவன் முகத்தில் சாத்தி விட்டது. ஒதுங்கி இருப்பதே மேல் என்று நினைத்துத் தனிமையாய் இருந்தவனை அழைத்து வந்து, சும்மா இருந்த சங்கை ஆண்டி ஊதிக் கெடுத்தது போல, அவனது தனிமையைச் சேதப்படுத்தியாயிற்று.

ஆனால், மாறனைத் தஞ்சைக்கு எப்படியாவது அழைத்துச் செல்ல வேண்டுமே. வாயில் வார்த்தைகள் ஏதும் வராமல் விழித்துக் கொண்டிருந்த அடியானிடம் மீண்டும் ஒரு முறை மாறன் விளக்கினான். "நான் இப்படியே கடம்பூருக்கு நடையைக் கட்டுகிறேன்." அவன் குரலில் ஒரு அலுப்புத் தெரிந்தது.

அடியானுக்கு நன்றாய்ப் புரிந்தது. தோல்வி அவனைக் கலங்க வைத்து விட்டது போலும். தனக்காக இட்ட பணியைச் செயல்படுத்த முடியாமல் திரும்புகிறோம் என்ற சீற்றம் அவன் தேகத்தைச் சுட்டெரிப்பது போல உணர்கிறான்.

ஆனால், அடியான் பேச்சை மாற்றினான். "இளவரசருக்குச் சொந்த ஊரின் நினைவு வந்துவிட்டது போலிருக்கிறது" என்றான்.

"அதெல்லாம் இல்லை. வேலையை முடிக்காமல் நான் எந்த முகத்துடன் தலைநகருக்கு வருவது?"

ஆனால், அடியான் தாய் தந்தையைப் பற்றிச் சொன்னதும் ஒரு முக்கிய காரணம்தான் என்று மாறன் உணர்ந்தான். இந்தச் சில நாட்கள் ஒரு விடுமுறையைப் போலப் போய் விட்டது. கடம்பூரில் எத்தனையோ விதக் கஷ்டங்கள் சூழ்ந்திருப்பது உண்மை. ஆனால், எல்லாருக்கும் மேலாகத் தான் அதிகம் கடமைப்பட்டிருப்பது தன் பெற்றோருக்குத்தானே. அவர்களிடம் சென்று அவர்களைக் காத்திருப்பதுதானே முதன்மையான கடமை.

அடியான் விடுவதாயில்லை. "ஒரு மரியாதைக்கு வந்து பிரதமரைப் பார்த்து விட்டுச் செல். அதற்குப் பின் உம் விருப்பத்துக்குக் குறுக்கே நான் நிற்கவில்லை. இருவராய் வந்தோம். இருவருமாய்ச் சென்று பிரதமரைப் பார்ப்போம். பின் தஞ்சையில் அவரவர் வழி பார்த்துச் செல்வோம்" என்று கெஞ்சாத குறையாக மன்றாடினான் மாறனிடம், அடியான்.

அடியானைப் போல அல்லாமல், மாறனுக்கு இது பெரும் தோல்வி. ''இவ்வளவு சிரத்தை எடுத்துத் தன்னை இங்கு அனுப்பியவர்கள் ஏன் தகுந்த படை வலிமையை அவனுடன் அனுப்பவில்லை? யாரோ வேண்டுமென்றுதான் தன்னை அசிங்கப்படுத்த முயல்கிறார்கள்'' என்று தோன்றியது. ஆனால், எதற்காக? அதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?

மாறன் லேசாகக் குழப்பம் அடைந்தான். அவன் வாழ்க்கையில் அத்தகைய சூறைக் காற்று இப்போதுதான் சுழன்றடித்து ஓய்ந்திருந்தது. வாழ்க்கை என்பது இடைவிடாத இடராய் இருந்தது. சிறிது காலத்துக்கு முன்பு வரையில் அதற்கு விமோசனமே இல்லை என்று நினைத்திருந்தான். திடீரென ஒரு அழைப்பு. வாழ்க்கை மாறிவிட்டது என்று நினைத்தால், திரும்பவும் தோல்வி.

''இதைப் போல ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எவ்வளவு காலம் ஏங்கித் தவித்தோம். ஆனால், அப்படி ஒன்று கிட்டியவுடன் எனது எண்ணம் நிறைவேறவில்லை. எல்லாம் என்னுடைய தலையெழுத்து'' என்று இரு நாட்களாக மனதுக்குள் புலம்பிக் கொண்டிருந்தான்.

''இப்போதைக்கு என் யோசனைக்குச் செவி சாய்க்க வேண்டும். நாம் போன காரியம் என்ன ஆனது என அறிய ஆவலுடன் பலர் காத்திருப்பார்கள் தஞ்சையில்'' என்றான் அடியான்.

உடனே ஏதோ ஞாபகம் வந்தது போல நெடிய பெருமூச்சு ஒன்று விட்டபடி தலையை அசைத்துச் சம்மதம் சொன்னான், மாறன்.

அடியானுக்குத் தெரியும், இதைச் சொன்னால் அவன் நிச்சயம் தஞ்சைக்கு வருவான் என்று. ஓர் இளம் பெண்ணின் கருவிழிகளிலுள்ள காந்த சக்திதான் அவனைக் கவர்ந்து இழுக்கும். எல்லாப் பாசங்களையும் மீறி, வெற்றி தோல்விகளையும் மீறி, வலிமை பொருந்திய பாசமது. கருவிழிகளில் மின்னும் வேல்களின் மீது காதல் வந்தால், இரும்பில் செய்த வேல்களின் மீது வீரனுக்குக் கூட ஆசை போய்விடும்.

மாறனுக்கு எப்பேர்ப்பட்ட வரவேற்பு தஞ்சையில் காத்திருக்கிறது என்று தெரியவில்லை. ஒரு பெண் நிச்சயமாகத் தஞ்சையில் சந்தோஷமாக இருப்பாள். அவள் தந்தை அதற்கு நேர்மாறாகக் கோபமாய் இருப்பார். இதுவே பாண்டிய நாட்டுத் துரோகிகளைக் கொன்று அவர்கள் சடலங்களைத் தாண்டிச் செல்லும் நிலை இருந்திருந்தால் வேகம் வேறு விதமாக இருந்திருக்கலாம்.

நிலைமையே வேறு விதமாய் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று அடிக்கடி அவன் சிந்தனை செய்தான். ஓரிருவர் மட்டும், இல்லை இல்லை, ஐவர் மட்டும் வந்திருந்தால், அந்தப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைச் சின்னா பின்னமாக்கிச் சோழ நாட்டின் சரித்திரத்தையே மாற்றி அமைத்திருக்கலாம்.

அது கூடக் கஷ்டம்தான். அந்த மல்லிகை வாசம் மிக்க பழுவூர்ப் பெண் வந்து இவனைச் சபித்து விடுவாள். ''என்னை இனி நினைக்காதே, இனி உன் கனவில் நான் வர மாட்டேன்!'' என்று.

மாறன் திருவாரூர்ச் சாலையில் பயணிக்கத் தொடங்கியவுடன் தான் அடியானுக்குத் திரும்ப மூச்சு வந்தது.

முதல் நாள் இரவு அவர்கள் திருவாரூரைக் கூட அடையவில்லை. ஓய்வெடுக்க வேண்டிய நிர்பந்தம். சோர்வான மனமும் உடலும் சுமந்தபடி எவ்வளவு தூரம்தான் செல்ல முடியும். குதிரைகளைக் கட்டிவிட்டு, ஒரு மரத்தின் அடியில் தரையில் படுத்துக் கொண்டார்கள்.

இரவு நாலாம் ஜாமத்தில் கிழக்குத் திசையில் வெள்ளி முளைத்தது. பின் உதய சூரியனின் செங்கதிர்கள் மாறனுடைய முகத்தில் சுளீரென அடித்துத் துயில் எழுப்பின. உறக்கம் தெளிந்ததும் எழுந்திருக்க மனம் வரவில்லை.

'விரைவாகவே தஞ்சையை அடைந்து அநிருத்தரிடம் செய்தியைச் சொல்லிவிட்டுக் கடம்பூருக்குப் போவதே சரி. வழியில் வீண் பொழுது போக்குவது பெருங்குற்றம். இந்தக் கணமே எழுந்து குதிரையின் மீதேறி அதை விரட்ட வேண்டும்' என்று ஒரு மனம் சொன்னது.

எனினும் அவனுக்கு அது சாத்தியப்படவில்லை. எப்படியாவது போய்ச் சேருவதைத் தள்ளிப் போட வேண்டும் போலிருந்தது. பாதிக் கண்ணைத் திறந்து பார்த்தான். அடியான் எழுந்து எங்கோ அருகில் ஒரு நீர்த் தேக்கத்தைக் கண்டுபிடித்து, குளித்து, உடலெங்கும் வைணவப் பாஷாண்டங்களைப் பூசிக் கொண்டிருந்தான்.

'இந்த வைணவனை எதுவுமே பாதிக்காதா? முற்றும் துறந்தவனா இவன்?' என்ற கேள்வி எழும் வண்ணம் அடியான் ஏதோ பாசுரத்தைப் பாடிக் கொண்டிருந்தான்.

படுத்திருந்தவன் அருகில் வந்து அடியான் நிற்பது, தூங்குவது போல் நடித்த மாறனால் உணர முடிந்தது. ஆனால், கண்ணை இறுக்க மூடியபடியிருந்தான். பின் அடியான் தொண்டையைக் கனைத்தான். எழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

குதிரையை விரட்டாமல் மெல்லச் செலுத்திக் கொண்டு இருபுறமும் தோன்றிய இனிய காட்சிகளை ரசித்துக் கொண்டே போனார்கள்.

வரும் வழியெல்லாம் கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பச்சைப் பிரவாகமாய் இருந்தது. பசுமைப் பிரளயத்தைப் போல. காவிரி ஆற்றிலும் அதன் கிளை நதிகளிலும் வரும் வெள்ளமே இந்த நாட்டை வளப்படுத்தியது. எவ்வளவு செழிப்பாயிருக்கிறது சோழ நாடு என வியக்கும் வண்ணம் இருந்தது. இதனால்தான் சோழ நாட்டை வளநாடு என்றும் சோழ மன்னனை வளவன் என்றும் கூறுவர் மக்கள்.

பல ஆறுகளைக் கடந்தே இருவரும் செல்ல வேண்டியிருந்தது. தன் கடம்பூர் நாட்டில் காய்ந்து கிடந்த நதிகளுடன் இந்தச் சோழ நாட்டு நதிகளை ஒப்பிட்டுப் பார்த்தான் மாறன். சோழ நாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பற்றியும், வர்த்தகப் பெருக்கத்தைப் பற்றியும் வியந்தான்.

நெல்லும், கரும்பும் செழித்து, அதனால் பொன்னும் மணியும் கொழித்துக் கடம்பூர் செல்வத்தில் ஊறித் திளைத்த காலமும் உண்டு. சோழ வள நாட்டுடன் எல்லா வகையிலும் போட்டியிடக் கூடிய சிறப்புக்களுடன் கடம்பூர் விளங்குவது யார் கண்ணோ பட்டது. பின்னர்தான் எல்லாக் கஷ்டமும்.

வீரநாராயண ஏரி ஒன்றை வைத்தே தன் நாடு செழிப்படைந்தது எனப் பலரும் அரச குடும்பத்தின் முதுகுக்குப் பின் பேசியதைக் கேட்டிருந்தான் மாறன். ஆனால், அவனுக்குத் தெரியும். அது மட்டும் காரணம் அல்லவென்று. சோழர்களின் குல தெய்வமாம் அகில புவனமும் உய்ய ஆனந்த நடனமாடும் நடராஜரின் சிற்சபையும் பொற்சபையும் இருப்பது கடம்பூர்ப் பிரதேசத்தில்தான். அதுவே இவ்வளவு நாட்களாகச் சம்புவராயரின் வளமைக்கு உண்மையான காரணம் என்று அவனுக்குத் தெரியும். 'அந்த நடராஜர்கூட ஏனோ இன்று தங்களைக் கைவிட்டுவிட்டார்!' என்று ஒரு பெருமூச்சு விட்டான்.

ஆனால், இந்த நதிகளைப் பார்க்கும்போது, மாறன் மனதுக்குள் ஏதோ நம்பிக்கை வந்தது. 'எங்கள் நாட்டின் நதிகளில் புதுப்புனல் பொங்கிப் பெருகிக் கொண்டு வரும். வீரநாராயண ஏரி நிரம்பும். எங்கள் நாடு பழைய பொலிவை அடையும். நிச்சயம் அது நடக்கும்.'

கடந்து வந்த ஆற்றில் வெகுவாக ஆழமில்லை என்பதால் குதிரைகளை இறக்கினார்கள். அடியான் எச்சரித்தான். ''இளவரசே! பார்த்துச் செல்ல வேண்டும். சோழ நாட்டு நதிகளின் புது வெள்ளம் அபாயகரமானது. இந்த நீரில் வரும் சுழல்கள் அபாயகரமானவை. அவற்றை ஒரு போதும் நம்பவே கூடாது. உங்களை எங்கு இட்டுச் செல்கிறது என்று தெரிவதற்குள் நீங்கள் இருக்க வேண்டிய கரைக்கு எதிர்க் கரையில் கொண்டு சேர்ப்பித்துவிடும்.''

''சோழ நாட்டு அரசியலும் அப்படித்தான்'' என்றான் மாறன்.

''ஓகோ, அதைச் சொல்கிறீரா? என் தூரத்து உறவுக்காரப் பையன். பாவம்! இப்படிப் பட்ட ஆறு ஒன்றில் விழுந்து விட்டான். பாருங்களேன், அவன் கால் முட்டிவரைதான் நீர் இருந்தது. ஆனால், மூழ்கியே போனான்'' என்றான் அடியான்.

''அது எப்படி?'' என்று வியப்புடன் கேட்டான் மாறன்.

''அதை ஏன் கேட்கிறீர்கள். அவன் ஆற்றுக்குள் தலை குப்புற அல்லவா விழுந்து விட்டான்!'' என்றான் அடியான். மாறன் சிரித்தான். ஆனால், அவனுக்கு நன்கு தெரியும், அப்படி ஒரு விபத்தே நடக்கவில்லை என்று. தன்னைச் சிரிக்க வைக்க வேண்டும் என்று இந்த வைணவன் முயற்சிக்கிறான். அந்த நொடியில் இந்த வைணவனை மிகவும் பிடித்துப் போனது அவனுக்கு.

வழி எங்கும் புது நடவு நட்ட வயல்களுக்கு மரகதப் பச்சை நிறம் தீட்டியிருந்தாள் இயற்கை அன்னை. ''பசுமையில்தான் இப்படி ஓர் அழகு. பரந்தாமனே பச்சை மாமலை போல் மேனியைக் கொண்டவன்தானே. ஆனால், இந்த அமைதியின் விளிம்பில் பயங்கரம் பதுங்கியிருக்கிறதே! நம்மைப் பதுங்கித் தாக்க நினைக்கிறார்கள், பாண்டியர்கள்'' என்று நினைத்தான் அடியான்.

உடனே அடியானின் உள்மனது இருபுறமும் இருந்த பசுமையைக் கவனிக்காமல், பாண்டிய நாட்டின் ஆபத்துதவிகளினால் ஏற்பட்ட குழப்பங்களைப் பற்றி எண்ணத் தொடங்கியது. மக்கள் உள்ளத்தில் பீதியை விளைவித்த அந்தப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளையும் அவர்களின் தலைவனான மந்திரவாதியையும் மிக அருகில் பார்த்தது அவர்கள் இருவரையும் ஒரு கலக்குக் கலக்கியிருந்தது.

மாறனும் இதைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தான் போல. ஏனென்றால் அப்போது பார்த்து அடியானைக் கேலி செய்தான். ''மரத்தின் மீது உமது நடுக்கத்தைக் கண்டேனே. அதன் பாதி இலைகள் கீழே விழுந்து விட்டன!'' என்றான்.

''இரத்தமும் சதையுமுள்ள மனிதனோடு நான் சண்டை போடுவேன். எது வேண்டுமானாலும் செய்வேன். ஆனால், ஆவிகளை

ஏவிவிடும் மந்திரவாதியோடு யாரால் போரிட முடியும்!'' என்று திரும்ப வினவினான், அடியான்.

''மாயஜாலமாவது, மந்திரமாவது. இதெல்லாம் குருட்டு நம்பிக்கை'' என்று கூறிய மாறனின் குரலில் அவ்வளவு தெம்பு இல்லை. அவன் மனதில் ஒரு மூலையில் ஒரு எண்ணம் உதித்தது. ''அந்த ரவிதாசனுக்கு ஏதோ சக்தி இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அந்த மரத்தின் அடியில் நின்று பயங்கரமாக அப்படிச் சிரிப்பானேன்?'' அந்தச் சிரிப்பொலி அவன் காதில் இன்னமும் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அந்த நேரம் பார்த்துக் குளிர்ந்த வாடைக் காற்று வீசியது போல அவனுடைய உடம்பு சிலிர்த்தது.

''நாம் இருந்த மரத்தின் அடியில் நின்று சிரித்ததனால் அவனுக்கு மந்திரம் தெரியும் எனக் கூற முடியாது'' என்றான் மாறன்.

''இது காலைப் பொழுது, கோடியிலிருந்து வெகு தூரம் வந்து விட்டோம் நாம். ஈழத்துக்குக் கடல் கடந்து சென்று விட்டான் அவன் என்ற தைரியத்தில் பேசுகிறீர்'' என்று ஏசினான் அடியான்.

''இல்லை, இல்லை, மரத்தின் மேலே பார்த்து இரண்டு வாலில்லாக் குரங்குகள் உள்ளன என்று போயிருப்பானோ?'' என்றான் மாறன்.

அடியானுக்குக் கோபம். ''உன்னைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால், எனது தோற்றத்துக்கும் மரக் கிளையில் தொங்கும் குரங்கின் தோற்றத்துக்கும் வெகு தூரம்! ஆனால், குரங்கின் சேட்டையெல்லாம் உம்மிடம் நன்றாய் இருக்கிறது என்று நான் இந்தச் சில நாட்களில் கண்டு கொண்டேன்'' என்றான்.

இருவரும் கவலை மறந்து சில வினாடிகள் சிரித்தார்கள். பிறகு அடியான் சொன்னான்: ''அவன் நம்மைக் கொல்வது என நினைத்திருந்தால் அந்தச் சமுத்திர ராஜனுக்கு நம்மைப் பலி கொடுத்து விட்டுச் சென்றிருப்பான்.''

தன்னைக் கொன்று நந்தினியின் வெறுப்பைச் சம்பாதிக்க விருப்பமில்லாமல்தான் தன்னை விட்டு விட்டான் என்று அடியான் யூகித்தான்.

''என்னை ஏன் விட்டான் என என்னால் யூகிக்க முடிகிறது. ஆனால், உம்மை ஏன் விட்டான்?'' என்று உரக்க வியந்தான் அடியான். மாறனுக்கும் அதே கேள்விதான், ஆனால், சற்று மாற்றம்.

தன்னை ஏன் கொல்லாமல் விட்டு விட்டான் என யூகித்து விட்டான். இந்த வைணவனை ஏன் கொல்லாமல் விட்டான் என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை.



அத்தியாயம் இருபத்திரண்டு

பிரதமரின் வீட்டில்

வரும் வழியெல்லாம் அடியான் ''தொணதொண'' என்று பேசிக் கொண்டே வந்தான். மாறன் காதில் அடியானுடைய பேச்சைக் கேட்டு வாயில் மட்டும் ''ஊங்'' கொட்டிக் கொண்டு பிரயாணம் செய்து கொண்டிருந்தான். ஆனால், தன் மனத்திற்குள் தனியாக எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

அடியான் பல முறை மாறனிடம் தன் ஒற்றன் வேலையைக் காட்டப் பார்த்தான். ''நீர் ஏதோ சொல்ல விரும்புவது போல் காண்கிறது. சொல், உனது மனதின் பாரம் குறையும்'' என்றுதான் ஒவ்வொரு முறையும் ஆரம்பிப்பான் அடியான்.

இப்படி எனக்கு ஏதோ நல்லது செய்வது போல எல்லா விஷயத்தையும் கறவை மாட்டைக் கறப்பது போல் கறந்து விட்டான் இந்த ஒற்றன் என்று மாறன் மனதுக்குள் சொல்லிக் கொண்டு, ''உம்முடன் சேர்ந்தவுடனேதான் எனது பாரம் அதிகரித்து விட்டது'' என்றான். ''ஆகையால் உமது கதைதாங்கி வேலையும் என்னிடம் இனிச் சிறிதும் செல்லாது'' என்றும் எச்சரித்தான்.

கோடிக்கரையிலிருந்து கிளம்பிய இரண்டாம் நாள் மாலை இருவருமாகத் தஞ்சைக் கோட்டைக் கிழக்கு வாசலை அணுகினார்கள்.

பிரயாணம் முடியும்போது சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகி விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தி மயங்கி இருள் சூழ்ந்து விடும். ஆனால், பிரச்னை இல்லை. வழி விசாரிக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது. எல்லா வழிகளும் தஞ்சையை நோக்கியே சென்றன.

கோட்டையைப் பார்த்தவுடன் இருவருக்கும் அடிவயிறு அப்படியே கலங்கியது. தோல்வியின் முழு அளவும் அப்போது

தான் புரிந்தது. நேற்று மட்டும் ஜெயித்திருந்தால், சோழ நாட்டுக்கு எப்படி ஒரு பாதுகாப்பாய் இருந்திருக்கும். இந்தக் கோட்டையைக் கருங்கற்களால் பலமாய்க் கட்டியிருந்தார்களே, மூத்தரையர்கள். இதைப்போலப் பத்து மடங்கு உயரமாகவும், அகலமாகவும் சுவரைப் பலபடுத்தியதற்குச் சமம் அந்த வெற்றி. ஆனால், அதைத்தான் கோட்டை விட்டு விட்டோமே என்று மனம் புலம்பியது.

தஞ்சைக் கோட்டையைக் கண்ணில் பார்ப்பதற்கும் அதில் காலைப் பதிப்பதற்கும் நிரம்ப நேர வித்தியாசம் உண்டு. கோட்டை அவ்வளவு பெரியது. வெகு தூரத்திலிருந்தே கண்ணுக்குப் புலப்படும். ஆனால், சென்று அடையத்தான் நேரமாகும்.

ஏதோ சொல்லி வைத்தாற்போல் மாறனின் குதிரையும் தயக்கத்துடனே நடந்தது.

''இளவரசே, சீக்கிரம் வாருங்களேன்!'' என்றான் அடியான்.

''உங்கள் வைணவத் திருமுதுகைப் பார்த்துக் கொண்டே வருவதாய் எனக்கு என்ன, வேண்டுதலா? குதிரை மெதுவாக வருகிறது. அதனால் நானும் மெதுவாகத்தான் வருவேன். என்ன அப்படி அவசரமாம்?'' என்றான்.

''விளையாடாதீர்!'' என்றான் அடியான்.

''விளையாடுவதற்கு நான் என்ன பச்சைக் குழந்தையா?''

மாறனுக்குக் கோட்டைக்குள் பிரவேசிக்கவே மனம் இல்லை. எனினும் இருவருமாய்ச் சென்று கடம்பூர் விருந்தினர் மாளிகை சேர்ந்தார்கள். எஜமானரின் கால் ஒரு முறை பட்டால் போதும். இடம் விளங்கி விடும் என அடியான் நினைக்கும் அளவுக்கு, இப்போதுதான் அந்த மாளிகை ஒரு மாளிகை போலத் தோன்றியது. புதியதாக வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது கட்டடம். சுற்றி எங்கும் தூய்மை.

சின்ன எஜமான் திரும்ப வந்தவுடன் இந்த முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியுறுவார் என்று சிப்பந்திகள் செய்திருந்தார்கள். ஆனால், மாறன் இதையெல்லாம் கவனிக்கவேயில்லை.

வாசலில் நின்றான். சுற்று முற்றும் பார்த்தான். நன்றாய் மூச்சை இழுத்து இழுத்து, மோப்பம் பிடிப்பது போலச் செய்தான். அவள் ஆவலோடு வாசற் பக்கம் காத்திருப்பாள் என்று சந்து பொந்துகளில் எல்லாம் ஆசையுடன் பார்த்தான். ஆனால், மலர் போன்ற பெண்ணும் இல்லை. மல்லிகை வாசமும் இல்லை.

முகத்தில் ஏமாற்றத்துடன் உள்ளே நடந்தான், இளம் சம்புவராயன். இதையெல்லாம் கவனித்த அடியான், மற்றும் ஒன்றைக் கூடக் கவனித்தான். எதிர்க் கட்டடத்தில் இருந்த திண்ணையில் சாய்த்துறங்கியபடி, இவர்கள் வரவைக் கவனித்த ஒரு மனிதன் இலேசாகச் சுறுசுறுப்படைந்தான். இவர்கள் வந்து சேருவதைக் கண் கொட்டாமல் பார்த்துவிட்டு, உடனே எழுந்து புறப்பட ஆயத்தமானான். மாறன் வீட்டுக்குள் நடந்தவுடனே அந்த மனிதன் விரைவாக எதிர்த் திசையில் நடந்தான். அவன் யார், எங்கு செல்கிறான் என்று யூகித்து விட்டான் அடியான்.

'இரு நாட்களாக எல்லா நேரமும் வாசலில் கால் கடுக்க நின்று, எதிர்பார்த்தவர்கள் வந்து சேர்ந்தவுடன் ஓடுகிறான், எஜமானனிடம் சொல்ல. இல்லை, எஜமானியாய் இருக்குமோ?'

அடியான் பெருமூச்சு ஒன்று விட்டான். இந்தக் கோடிக்கரைப் படலத்தில் அடியானுக்கு இரட்டைத் தோல்வி. தன்னை இன்னும் ஒருமுறை துரதிர்ஷ்டம் தாக்கியதாகவே தோன்றியது.

வந்தியத் தேவன் குந்தவையைத் திருமணம் செய்து கொண்டதில் பேரிழப்பு அடியானுக்கே. ஒரு சிறந்த நண்பனை இழந்து விட்டான், அந்த வைணவன். பிரம்மசாரியான அடியானுக்கே தெரியும், தாம்பத்தியத்துடன் நட்பு போராடி ஜெயிக்க முடியாது என்று.

பல நாள் கழித்து மாறன் நல்ல நண்பனாய் அமைந்தான். அவன் மட்டும் நேற்று வெற்றி பெற்றிருந்தால் பல காலம் இவர்கள் நட்பு தொடர்ந்திருக்கும். ஆனால், தோல்வியைச் சுமந்து எவ்வளவு நாள்தான் தஞ்சையில் மாறன் இருப்பான்? அப்படியே அவன் இருந்தாலும், அவனைக் காதலும் தாம்பத்தியமும் துரத்துவதை அடியான் உணர்ந்தான்.

சத்திரத்தின் உள்ளே சென்று தூணின் மீது சாய்ந்து அமர்ந்தபடி யோசிக்கத் தொடங்கினான் அடியான். அநிருத்தர் கூறிய ஏவலைச் செய்து முடிக்க வில்லை. இருவராய் வந்ததே பிசகாய்ப் போய் விட்டது. அவர் செய்த தவறான கணக்கைப் பற்றிப் பிரதமரிடம் நேரே சென்று முறையிட வேண்டும். என்ன மறு மொழி சொல்கிறார் எனக் கவனிக்க வேண்டும்.

அவர் இட்ட கட்டளை காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

''மாறனைக் கடம்பூரிலிருந்து அழைத்துச் செல். பழுவேட்டரையர் வீட்டுக்குப் போ. அவரது மகளும் மருமகனும் ஈழம் செல்கிறார்களாம். துரிதமாகச் சென்று, முடிந்தால் அவர்களைத் தடுத்து விடுங்கள். எனக்கு வந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்''

அவ்வளவுதான். யாருடன் வருவார்கள், எவ்வளவு பேர் வரு வார்கள் என்று ஒன்று கூட அவரும் சொல்ல வில்லை. இவனும் கேட்க வில்லை. அதுதான் பிசகு.

நாளை, ஆட்கள் அகப்படவில்லை என, அடியானின் பாவ மான முகத்தைக் கண்டே அவருக்குத் தெரிந்து விடும். தோல்வி என்று சொன்னால், "அதுதான் முகத்தைப் பார்த்தால் தெரிகிறதே" என்று அமைதியாக ஏசுவார்.

"நீ கோயில் குளமாகச் சென்று உனது ஒற்றன் வேலையை மறந்து விட்டாய்" என்றும் சொல்வார்.

ஆனால், ஏதோ ஒரு எண்ணம் குறுக்கிட்டு அவர் கோபப்பட மாட்டார் என அவனுக்குச் சொல்லியது. என்னிடம் அவர் ஏதேனும் ஒன்றைச் சொல்லவில்லை என்றால் அதற்குத் தக்க காரணம் இருக்கும். அவருடைய செயல்கள் வேண்டுமென்றால் விசித்திரமாக இருக்கும். ஆனால், முடிவு வெற்றிதான்.

"அது எப்படி?" என அவன் மனது மறுபடியும் அவனைப் பயமுறுத்தியது. சோழ நாட்டின் சரித்திரத்தை மாற்றிவிடும் சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டு விட்டு, பிரதமர் ஒன்றும் சொல்ல மாட்டார் என எப்படி நினைக்க முடியும்?

அடுத்த நாள் காலை, கொல்லைக் கிணற்றில் குளித்துவிட்டு அப்போதுதான் வீட்டுக் கூடத்துக்கு வந்து கொண்டிருந்த அடியானிடம் மாறன் பேச்சுக் கொடுத்தான்.

"சத்துரு நாட்டிலிருந்து வந்த அந்த ஊர்வலத்தைத் தங்கு தடையின்றித் தப்பிக்க விட்டுவிட்டு எந்த முகத்துடன் அவர் அலுவலகத்துக்குள் செல்வது?" என்று கேட்டான். இன்னமும் அநிருத்தரைப் பார்க்கும் விஷயத்தில் அவனுக்குக் கொஞ்சம் பயமாய்த்தானிருந்தது.

"அப்படியெல்லாம் இல்லை" என்று அடியான் ஆறுதல் சொன்னான்.

மாறன் அநிருத்தரைப் பற்றி முற்றிலும் அறிந்த பின்னே அவரைப் பார்ப்பது நல்லது எனத் தோன்றியது.

"வைணவரே! பிரதமர் என்ன, கோபக்காரரா?" என்றான், மாறன். "அவர் எப்படிப் பட்டவர்?"

"மிகவும் சாமர்த்தியசாலி!" என்று மட்டும் அடியான் கூற-

"அதுதான் தெரிகிறதே. அந்தப் பதவியில் பல காலமிருப்பது என்பது, அதுவும் சோழ நாட்டுக்குப் பேரபாயம் வந்தபோ தெல்லாம் இருந்தது பெரிய கஷ்டம் அல்லவா? அதுவும்

அடுத்தடுத்த அரசர்களுக்குப் பிரதமராய் இருப்பதற்குப் பெரிய சாமர்த்தியம் வேண்டுமே! எனக்குப் பலமுறை தோன்றும். இவர் அந்தணர் அல்லவா? வேங்கைகளுக்கு நடுவே இந்தப் பசுமாடு எப்படிக் காலம் கழிக்கிறது என்று."

அநிருத்தரின் சாதனைகள் குறித்து யாராலும் பெருமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது.

"அதுதான் சொன்னேனே! அவர் சாமர்த்தியம்தான்!" என்று கூறிய அடியானின் குரலில் அவ்வளவு சுரத்தில்லை. பின் ஏன் தன் விஷயத்தில் அவரும் பிசகு செய்தார் என்று உள் மனது கேட்டது. அவனுக்கு இன்னமும் குழப்பமாய்த்தான் இருந்தது.

"சுந்தர சோழர் மாண்டபின் தனக்கு வயதானதால்தான் அநிருத்தர் பிரதமர் பதவியை விட்டுச் சென்றார், இல்லையா?" என்று மாறன் வினவ, அடியான் பதில் அளித்தான்.

"இல்லை, அவருக்கு அப்படி ஒன்றும் வயசாகவில்லை. அவர் பிரதமர் பதவியை விட்ட காரணத்தை இன்னொரு சமயம் சொல்கிறேன்."

"நட்டிக் கழிக்காதீர். இப்போதே சொல்லுங்கள்" என்று இளம் சம்புவராயன் அவசரப்படுத்த- "உமக்குச் சுந்தர சோழரைத் தெரியும் அல்லவா?" என்று கேட்டான், அடியான்.

"நன்றாய்த் தெரியும்" என்றான் மாறன்.

"பொன்னியின் செல்வர், குந்தவை, ஆதித்த கரிகாலர் என்று மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த தந்தை சுந்தர சோழர். அவர் ஒரு காலத்தில், அதாவது பதவிக்கு வருமுன் கடல் பிரயாணத்தின் போது தன் கப்பல் உடைந்து ஒரு தீவில் ஒதுங்கிக் கிடந்தார். அந்தத் தீவுக்குப் பெயர் பூதத் தீவு என்று நினைக்கிறேன்."

"அங்கு என்ன, பூதம் இருந்ததா?" என்று மாறன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"இல்லை, ஆனால், ஒரு அழகிய பெண் இருந்தாள்."

பெண் என்றவுடனே மாறனுக்குக் கதையில் ஆர்வம் ஏற் பட்டது. தூணின் மீது சாய்ந்திருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"கடலோரமாக அரைச் சடலமாக ஒதுங்கியிருந்தார் சுந்தர சோழர். அப்போது ஒரு ஊமைப் பெண் அவரைக் காப்பாற்றி னாள். அவளுடன் சினேகமும் காதலும் இவருக்கு ஏற்பட்டது. வெகு சந்தோஷமாகக் காலம் கழித்தார். ஆனால், அங்குதான் விதி விளையாடியது. தனக்கு முன் சிங்காதனத்துக்குப் பாத்தியம் கொண்டவர்கள் அகாலமாகப் போரில் மாண்டதால் சுந்தர

சோழர் நாட்டுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். அவரை அரசராய் மாற்றினார்கள் மக்கள்.''

''அந்தப் பெண்....?'' என்றான் கவலையுடன் மாறன்.

''பின்னர் அழைத்துக் கொள்ளலாம் என்று அங்கேயே விட்டுவிட்டார். பின் இங்கே தாம்பத்தியம், அரசியல் என்று மூழ்கியிருந்த அவருக்கு அந்தப் பெண் கலங்கரையிலிருந்து விழுந்து மூழ்கிப் போனதாகத் தெரிய வந்தது.''

''நாம் பார்த்த கலங்கரையிலிருந்தா?''

''ஆம். ஆனால், அது பொய்த் தகவல். ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். அவள் ஊமைதான். ஆனால், காட்டுவாசி இல்லை. ஊமை என்பதால் சமுதாயத்திலிருந்து ஒதுங்கியே இருந்து விட்டார். கோடியில் தியாக விடங்கரைக் கண்டோமல்லவா? அவரது தங்கைதான் இவள். தியாக விடங்கருக்கு இரு தங்கைகள். இரட்டைப் பிறவிகள். இருவரும் ஊமை. ஒருவர்தான் நம் உத்தம சோழரை வளர்த்து வந்த அன்னை. பெயர் வாணி. அடுத்தவர் தான் அந்த ஊமை ராணி. அவள் பெயர் மந்தாகினி. பூதத் தீவில், 'புயலைப் பிடித்தாலும் அந்த அம்மணியைப் பிடிக்க முடியாது!' என்று கப்பலில் பயணித்தவர்கள் சொல்வார்கள். நானும் அதைக் கண்கூடக் கண்டிருக்கிறேன்'' என்றான் அடியான்.

அந்த ஊமை ராணியைத் தான் பிடிக்கச் சென்ற படலத்தை மனதுக்குள் ஓட விட்டுப் பார்த்தான். பின், கதையிலிருந்து தள்ளி வந்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டு ''சுந்தர சோழர் சென்றவுடன் அதன் பின் அந்தத் தீவில் தனியாய் இருந்த அந்தப் பெண்ணுக்கு மற்றும் ஒரு மனிதருடன் சினேகம் ஏற்பட்டது'' என்றான்.

மாறன் முகம் சுளித்தான்.

அதைப் புரிந்து கொண்டு, ''காட்டில் வாழும் பெண்ணுக்குக் கற்பைப் பற்றியெல்லாம் என்ன தெரியும்?'' என்றான் அடியான்.

''அவனும் இலங்கைக்குத் தப்பிச் சென்றபோது கப்பல் உடைந்து கரையில் வந்து சேர்ந்தவன்தான். ஆனால், அவ்வளவு தான் அவனுக்கும் சுந்தர சோழருக்கும் இருந்த ஒரே ஒற்றுமை. ஏனென்றால் அவன் சுந்தர சோழரின் ஜன்ம விரோதியான வீரபாண்டியன்தான். படையிழந்து ஓடிய வீரபாண்டியனும் அவளுடன் சினேகம் கொண்டான். அதன் விளைவாகப் பிறந்தவர் தான் இரட்டையர். இன்று இரு பாண்டிய அணிகளுக்குத் தலைமை தாங்கும் நந்தினியும், புஜங்கனும்.''

''ஆனால், அந்த ஊமைப் பெண்ணுக்குத் தன் குழந்தைகளை விடச் சுந்தர சோழரின் குழந்தைகள் மீதுதான் அவ்வளவு பிரியம். குழந்தையாக இருக்கும் போது பொன்னி ஆற்றில் தவறி விழுந்த அருள்மொழிவர்மரை இவளே காப்பற்றினாள். அதை அவர்கள் பொன்னி நதியே பெண்ணாய் வந்துதான் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்தாள் என நம்பிப் 'பொன்னியின் செல்வர்' என்று பெயர் வேறு அவருக்குக் கொடுத்து விட்டார்கள்.''

''ஊமை ராணியின் செல்வர் என அல்லவா கூப்பிட்டு இருக்க வேண்டும்?'' என்றான் மாறன்.

சிரித்து விட்டு அடியான் சொன்னான். ''அதிலிருந்து அவர் ஊமை ராணியின் செல்வச் சுவீகாரப் பிள்ளையாய் மாறி விட்டார். எங்கு சென்றாலும் பின் தொடர்ந்து பல முறை அவர் உயிரைக் காப்பாற்றினாள் அவள். கடைசிக் காலத்தில் சுந்தர சோழரின் கால்கள் செயலிழந்து விட்டன. படுத்த படுக்கையாய் இருந்த மன்னரைக் கொலை செய்யப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் அரண்மனையில் இருந்த ரகசியப் பாதையில் புகுந்து வேலை எறிந்தார்கள். அதைத் தன் தெய்வீக சக்தியால் கண்டுகொண்ட ஊமைராணி வேலுக்கும் வேளுக்கும் நடுவே வந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். அது கூடப் பெரியதல்ல. மன்னர், கால்கள் திடீரென உயிர் பெற்று, அவளிடம் ஓடி வந்து, தன் மடியில் அவளைக் கிடத்திப் புலம்பினார்.''

''அதனால்தான் ஆதித்த கரிகாலன் கொலையை கூட அரசாங்கம் விசாரிக்கவில்லை. அந்த ஊமை ராணியின் மகளான நந்தினி அதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதால்'' என்றான் அடியான்.

''அதனால்தான் உண்மையும் வெளிவரவே இல்லை. நாங்கள் இன்னமும் குற்றவாளியாகவே கருதப்படுகிறோம்'' என்று வருந்தப்பட்டான் மாறன்.

அதைக் கண்டுகொள்ளாமல் அடியான், ''பொன்னியின் செல்வர் பட்டாபிஷேகம் அன்று அவர் அந்தப் பதவியை வேண்டாம் என்று உதறியதில் நாடே வருத்தப்பட்டது. ஒருவரைத் தவிர. அது அநிருத்தர்தான்'' என்றான்.

''ஏன்?'' என்று அலறியது போல வியந்து கேட்டான் மாறன்.

''அவர் ஆட்சிக்கு வந்தால் பாண்டியர் குழுக்களுக்குத் தலைவர்களான ஊமைராணியின் இரு மக்களிடமும் கனிவு காட்டி விடுவார். பின் நாட்டின் பாதுகாப்புக்கு அது ஆபத்தாகப் போய் விடும் என்றுதான். எனக்கு என்னவோ அவரது யோசனையின்

பேரில்தான் பொன்னியின் செல்வர் உத்தம சோழரைப் பதவியில் அமர்த்தினார் என்று கூடத் தோன்றுகிறது'' என்று சொல்லிவிட்டு அடியான் தொடர்ந்தான்.

''ஆனால், இந்த நல்ல மனிதனுக்குத் தான் செய்த நல்லதிலும் ஒரு தவறு இருப்பதாகவே தோன்றியிருக்க வேண்டும். பொன்னியின் செல்வர் போன்ற மகத்தான தலைவரைச் சோழ நாடு இழந்து விட்டதே. அதுவும் தன்னால் அது நடந்ததே என்று அந்தக் குற்ற உணர்வில் பதவி விலகி விட்டார். ராமேஸ்வரம் சென்று துறவறம் பூண்டார்.''

''பின் பொன்னியின் செல்வர் ராமேஸ்வரம் வந்து, அநிருத்தரே பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டுச் சோழ சாம்ராஜ்யத்தை மீண்டும் பரிபாலிக்கும் பொறுப்பை வகிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். இவரால் அதை மறுக்க முடியவில்லை'' என்றான்.

தான் இப்போது கேள்விப்பட்டதை எல்லாம் ஜீரணிக்க முயன்று கொண்டிருந்த மாறனிடம், ''விரைவாய்க் கிளம்புங்கள். நேரம் ஆகிவிட்டது'' என்று அவசரப்படுத்தினான் அடியான்.

சோழ மாளிகைகளில் பல வானளாவி நின்ற கட்டடங்கள் கொண்ட வீதியில் கடைசியாக ஒரு மாளிகை இருந்தது. அது உத்தம சோழரின் முதன் மந்திரியான அநிருத்தப் பிரும்மராயரின் மாளிகை.

முன் வாசலைத் தாண்டி அவர்கள் உள்ளே நுழைந்ததும், அங்கே காவல் புரிந்து கொண்டிருந்த வீரர்களில் ஒருவன், அவர்களைத் தன் எதிரே இருந்த ஈட்டியைச் சாய்த்து வழிமறைத்துத் தடுத்தான்.

எல்லாரிடமும் கேட்கும் கேள்வியையே கேட்டான். ''பிரதமரைப் பார்க்க அழைப்பு இருக்கிறதா? என்ன நேரத்தில் வரச் சொன்னார்?''

பிரதமரைக் காணும் பேறு எல்லாருக்கும் எளிதிலே கிட்டாது. அழைப்பிருந்தால் மட்டுமே அலுவலகத்தில் வந்து பார்க்கலாம். இல்லை என்றால் வாரம் ஒரு முறை குறை கேட்கும் நேர்காணல் நேரத்தில் வந்து ஜன சமுத்திரத்தின் நடுவே நிற்க வேண்டும்.

பதில் ஒன்றும் சொல்லாமல் அடியான் நிற்க, அவனை நன்றாய்ப் பார்த்தான் காவலாள். உடனே, ''வருக! வருக! வைணவரே! உள்ளே சென்று ஆசனத்தில் அமருக!'' என்று உபசரித்தான். ''இன்னும் சிறிது நேரத்தில் ஐயா வந்துவிடுவார்.''

இந்தச் சன்னியாசியுடன் தன் எஜமானருக்கு என்ன சம்பந்தம் என்று அந்தச் வீரனுக்குத் தெரியாது. ஆனால், பெரியவரே சொல்லியிருக்கிறார். ''இவன் வந்தால் முதலில் என்னைப் பார்க்க அனுப்ப வேண்டும்'' என்று

வரவேற்பு அறை மிகவும் வெளிச்சமாகவும் வாசமுமாக இருந்தது.

உள்ளே நுழையும் போது மிகவும் கூச்சமாக இருந்தது மாறனுக்கு. ஏதோ போரில் தோற்றுப் பின் நாடு திரும்பும் வீரனைப் போல. இந்தக் கஷ்ட காலத்தில் தனக்கு உதவி புரியும்படி, தன் குலம் வழி வழியாக வழிபட்ட தெய்வமாகிய முருகக் கடவுளை வேண்டிக் கொண்டான் மாறன்.

அமர்ந்தவுடன் சுற்று முற்றும் பார்த்தார்கள். இவர்களுக்கு முன் பிரதமரைப் பார்க்கப் பலரும் காத்திருந்தார்கள். வெவ்வேறு வேலையாக வந்தவர்கள் போலத் தோன்றியது. ஒரு புத்த பிக்கு அமர்ந்திருந்தார். கையில் ஒரு மாலையில் ஒவ்வொரு மணியாக விரல்களால் தள்ளிப் பகவான் பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தார். எவ்வளவு நேரமானாலும் காத்திருந்து வேலையை முடித்துவிட்டுச் செல்வதில் அவருக்குக் கஷ்டமிருப்பதாய்த் தெரியவில்லை.

கையிலும் கழுத்திலும் பொன்னாலான நகைகளுடன் வணிகர் கூட்டம் ஒன்று காத்திருந்தது. நேரமானதால் அவர்கள் முகத்தில் அவ்வளவு சந்தோஷம் இல்லை.

தூரத்தில் பேரிகை முழக்கம், சங்கநாதம், குதிரைகளின் காலடிச் சத்தம் கலந்து கேட்டன.

''யார், அநிருத்தரா?'' என்றான் மாறன்.

''அவர்தான் வருகிறார். இதோ!''

''திருபுவனச் சக்கரவர்த்தி உத்தம சோழப் பராந்தகரின் மகாமான்ய முதன் மந்திரி அன்பில் அநிருத்தப் பிரம்மாதி ராஜர் வருகிறார். பராக் பராக் !'' என்று எழுந்த ஒரு கோஷத்தைக் கேட்டவுடன் அனைவருமே எழுந்து நின்றார்கள். கோஷம் வந்த திசையை அனைவரும் நோக்கினார்கள். காவல் வீரர்கள் முன்னும் பின்னும் தொடரச் சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் பெற்ற முதன் மந்திரி வந்து கொண்டிருந்தார்.

பிரதமர் வருவதை மலர்ந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்- அங்கு அவரைச் சந்திப்பதற்காக வெகு நேரமாய் அமர்ந்திருந்தவர்கள்.

ஓரக் கண்ணால் அவர் வந்தவர்களைக் கவனிக்கவும் செய்தார். இரு பக்கத்திலும் நின்றிருந்தவர்கள் கைகூப்பித் தலை வணங்கி வணக்கம் செலுத்தத் தலையை அசைத்துக் கொண்டே சென்றார். ஒருவருடன் கூட அவர் பேசவில்லை. அவர் கண்ணில்படும் எல்லாரும் சமம் என்பது போல நடந்து கொள்ளும் கட்டாயம் அவரது பதவிக்கு.

சுக்கத்தில் தடியுடன் பரம சாதுவைப் போல நின்ற ஆழ்வார்க் கடியானைக் கவனித்தார். "சற்றுப் பொறுத்திரு" என்பது போலக் கண்ணால் சமிக்ஞை செய்தார்.

அவனும் அதைப் புரிந்து கொண்டு, தலை அசைத்தான்.



அத்தியாயம் இருபத்து மூன்று
சாணக்கியனிடம் பயின்றவர்

முதன்மந்திரி அநிருத்தரின் அறைக்கு வெளியே ஆழ்வார்க் கடியானும் இளம் சம்புவராயனும் அவர் அழைப்புக்காகக் காத்திருந்தார்கள். பிரதமரின் அறைக் கதவின் சமீபத்தில் திண்ணைகள் பல இருந்தன. அதில் ஒரு திண்ணையின் மீது அமர்ந் திருந்த இருவரின் தொங்கிய முகத்தைப் பார்த்தாலே போதும். அவர்கள் சென்று வந்த காரியத்தின் முடிவை யாரும் யூகித்து விடலாம். உள்ளே அமர்ந்ததிலிருந்து இருவரும் ஓரிரு வார்த்தைகள்கூடப் பரிமாறிக் கொள்ளவில்லை.

இவர்கள் மட்டுமல்ல. அறை வாசலில் பலரும் வந்து காத்திருந் தார்கள். இவர்கள் அனைவரையும் பார்த்து முடிப்பதென்றால் பிரதமருக்கு மதியம் ஆகிவிடும். அமர்ந்திருந்த அனைவர் முகத்திலும் ஒரு திருப்தி நிலவியது போல இவர்கள் இருவருக்கும் தெரிந்தது. அது அவர்களுக்குப் பிரதமரின் நேர்காணலுக்கு அழைப்பு வந்ததால் கூட இருக்கலாம். ஆனால், நம் நண்பர் களுக்குத் தோன்றியதே வேறு. மற்றவர்கள் பிரதமர் இட்ட பணியைச் செவ்வனே முடித்துவிட்டு வந்தது போல அவர்களுக்குத் தோன்றியது. அவர்கள் முகத்தை நேருக்கு நேர் பார்ப்பதற்கே மாறனுக்குக் கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருந்தது.

அறையின் வாசலில் இருந்தவர்களுக்கெல்லாம் ஒரு வெள்ளித் தட்டில் பல குவளைகளில் பானகமும் மோரும் பரிமாறப்பட்டது.

எல்லாரும் ஏதாவது ஒன்றை எடுத்துக் குடித்தனர். மாறன் பானகத்தை எடுத்துக் கொண்டான். அடியானோ ஒரு குவளை மோரை எடுத்துப் படு வேகமாகக் குடித்து விட்டு, பின் அடுத்தவர் முன் நின்ற பணியாளின் தட்டிலிருந்து ஒரு குவளைப் பானகத்தை யும் எடுத்துக் கொண்டான்.

அங்கு இருந்த எல்லாரும் ஒரு ஏளனப் பார்வையுடன் அடியானைப் பார்த்தார்கள். 'நம்முடனா இப்படி பட்டவர்களைப் பிரதமர் அழைக்க வேண்டும்!' என்பது போல. மாறனுக்கு மானம் போனது. அதனால் சிறப்பாய்ப் பாகும், பட்டையும், கிராம்பும் போட்டுத் தயாரிக்கப்பட்ட அந்தப் பானகத்தைக் கூட அவனால் ரசிக்க முடியவில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம் ஓர் ஊழியன் அறையின் வெளியே வந்தான். அவன் யாரை முதலில் அழைக்கப் போகிறார் என அனைவர் முகத்திலும் ஆவல். அவன் நேரே ஆழ்வார்க்கடியானை நோக்கி, "உங்களை உள்ளே வரச்சொல்கிறார், முதன் மந்திரி" என்றான்.

அங்கு எல்லாருக்கும் அடியானை முதலில் அழைத்ததில் ஒரு அதிர்ச்சி. அடியான் சுற்றி அமர்ந்திருந்தவர் அனைவரையும் ஒரு முறை ஏளனமாய்ப் பார்த்துவிட்டு, மெதுவாக உள்ளே நடந்தான்.

மாறனுக்குப் புன்னகை. 'வாழ்க்கையே ஒரு சக்கரம்' என்று நினைத்தபடி அடியானோடு சேர்ந்து எழுந்தவனைக் கண்டு, "இவரை மட்டும்தான் வரச் சொன்னார்" என்றான் அரண்மனை ஊழியன்.

மாறனுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால், தோல்வியுடன் மந்திரியைச் சந்திக்க அவன் தயங்கியதற்கு இது நன்றாகவே அமைந்தது.

அடியான் கதவை நெருங்கியவுடன் அவனை முதலில் பிரதமர் அழைத்தார் என்ற ஆணவம் எல்லாம் போனது. அதற்குப் பதிலாக அடி வயிற்றைக் கலக்கியது. மோரையும் பானகத்தையும் சேர்த்து வயிற்றுக்குள்ளே அச்சம் எனும் மத்து கடைந்து கொண்டிருந்தது.

ஒரு சப்தமுமின்றித் திறந்தது பிரதமரின் அறைக் கதவு. அப்படி ஒரு வழவழப்பும் மெருகும் அதன் மேல் தெரிந்தது. தேய்த்துத் தேய்த்து அதைப் 'பளபள' என ஆக்கியிருந்தனர். அவன் முகத்தின் பிம்பமே அதில் தெரிந்தது. அது மட்டுமல்ல. அவன் முகத்தில் இருந்த பலதரப்பட்ட உணர்வுகளும் தெரிந்தன.

கதவு திறந்தவுடன் அவன் கண்ணில் பட்டது தரையில் அமர்ந்து கணக்கர் போலிருந்த முதன் மந்திரிதான். இவரது கணக்கு என்றும்

தப்பாது என்று ஊருக்குள் பேச்சு. இவன் விஷயத்தில் மட்டும் அது தப்பியது எப்படி?

ஆழ்வார்க்கடியான் பயபக்தியுடன் கையைக் கட்டிக்கொண்டு பிரதமரின் முன் சென்று நின்றான்.

''வா, திருமலை!'' என்றார்.

அநிருத்தர் தன் சீடனைப் பார்த்தார். அவர் பார்வையில் அன்பு தோய்ந்திருந்தது. பல ஆண்டுகளுக்கு முன் வந்து தன்னுடன் ஒட்டிக் கொண்டவன் இவன். மிக ஏழ்மையில் பிறந்து வளர்ந்தவன். அதற்காக யாரிடமும் பணிந்து போக மாட்டான். அன்பெனும் சங்கிலியால் மட்டும்தான் அவனைப் பிணைத்துப் பணிய வைக்க முடியும்.

''நலமாய் இருக்கிறாயா, திருமலை?'' என்றார், சீடனைப் பார்த்து, குருநாதர்.

சகல தர்ம சாஸ்திரங்களையும், நீதி சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர் அநிருத்தர். சோழ சாம்ராஜ்யத்தின் சட்ட திட்டங்களையெல்லாம் நடத்தி வைக்கும் பொறுப்பு வாய்ந்தவர். நீதிக்கு மாறாகச் சக்கரவர்த்தியே காரியம் செய்தாலும், அதைக் கண்டித்து நியாயமாக நடக்கச் செய்யும் உரிமை வாய்ந்தவர். இன்றோ தன் வாழ்வில் முதல் முறையாகப் பெரும் தவறைச் செய்துவிட்டு அதன் விளைவுகளைப் பற்றி அறியாமல் இருக்கிறார். இல்லை, அப்படி நடிக்கிறாரா?

முதலில் சங்கடமான விஷயங்களைப் பேசக் கூடாது என்று மரியாதையினால் இத்தனை நேரம் சும்மாயிருந்த அடியானுக்குப் பொறுமை போதவில்லை. அநிருத்தர் பேச்சில் இப்போது குறுக்கிட்டு, ''போன வாரம் வரை தங்கள் அன்பால் நலமாய் இருந்தேன், ஐயா!'' என்றான்.

ஒரு நொடி காத்திருந்து விட்டு, ''நாம் இருவரும் கும்பிடும் பரந்தாமன் அருளால் இன்றும் நலமாய் இருக்கிறேன்'' என்றும் கூறினான். ''பிரபு, தங்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு நாளும் தங்களுடைய நலனுக்கு எதிரான காரியம் எதுவும் நான் செய்யவில்லை; இனியும் செய்ய மாட்டேன். அது போல, ஐயனே, போன வாரம் வரையில் தாங்கள் என் நலனில் நோக்கம் கொண்டவர் என்ற கருத்துடனே நான் இருந்தேன். இப்போது என் கருத்து மாறுபட்டுள்ளது'' என்று ஒரே மூச்சில் பொரிந்து கொட்டினான்.

வந்த போதே அடியான் ஒரு முடிவுடன்தான் வந்தான். பிரதமரிடம் நேரே சென்று முறையிட வேண்டும். ''என்னை யம

லோகத்துக்கு அனுப்பி விடுவது என்று உமக்கு உத்தேசமா?'' என்று. சிறிது நேரம் பேச அவகாசம் அளிக்க வேண்டும். என்ன மறுமொழி சொல்கிறார் எனக் கவனிக்க வேண்டும். அது போலவே இப்போது செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

சீடனது ஆவேசம் முன் குடுமியின் ஆட்டத்தில் தெரிந்தது, குருநாதருக்கு. ஆனால், பிரதமரின் சுயம்பிரகாசமான முகத்தில் ஒரே ஒரு மாற்றம்தான். அவரது இடது புருவம் ஒரு நகமளவு மட்டும் உயர்ந்தது.

''அப்படி நான் என்ன தவறு செய்தேன்? என்னைத் தெளிவித்து ஆட்கொள்ள வேண்டும்'' என்று மட்டும் சொன்னார்.

''எல்லாம் தெளிவிக்கிறேன்'' என்று அடியான் தொடங்க ஆயத்தமானான்.

அவர் குறுக்கிட்டு, ''அதற்கு முன் ஒரு கேள்வி'' என்றார். ''சென்ற வேலை வெற்றிதானே?''

அடியான் கால்கள் நடுங்கின. ''இல்லை, ஐயா, பாண்டியனும் அவனது மனைவியும் இலங்கைக்குச் சென்று விட்டார்கள்'' என்றான்.

அவரது முக பாவனையில் அவன் எதிர்பார்த்தது போல ஒரு மாற்றமும் தெரியவில்லை. ''அதற்கென்ன, பார்த்துக் கொள்ளலாம். அப்படி யொன்றும் அது பெரிய விஷயம் இல்லை. வேறு ஒன்றும் விஷயமில்லையே?'' என்றார். அடியானுக்கு ஒன்றும் புரியவில்லை. அவரை எரித்து விடுவது போலப் பார்த்தான் .

''சரி, நீ சொல்ல வந்ததைச் சொல்வதற்கு முன் கோடிக்கரையில் நடந்ததைச் சொல்'' என்று கட்டளையிட்டார்.

''ஆகா, நம்மைத் திசை திருப்புகிறார். நமக்கு இணங்குவது போல நடித்து நம்மைச் சாந்தப்படுத்த நினைக்கிறார் இவர்'' என்று அருவருப்புக் கொண்ட பார்வை ஒன்றை அவர் மீது ஒரு கணம் செலுத்திவிட்டு, அடியான் கோடிக்கரையில் நடந்ததை விவரிக்கத் தொடங்கினான்.

''நாங்கள் இருவர்தான் இருந்தோம். அவர்களோ முப்பது பேர் இருந்தனர்.'' அவ்வளவு பேர் இல்லை என அவனுக்குத் தெரியும். ஆனால், எதற்கும் அதிகபட்சமாகவே சொல்லி வைப்போம் என எண்ணினான்.

''இருபத்து மூன்று பேர்'' என்று முணுமுணுத்தார் முதல்வர். பின் உரக்க, ''ஆகா! நீங்கள் என்ன செய்தீர்கள்?'' என்றார்.

அடியானுக்கு தான் பட்ட கஷ்டமெல்லாம் இந்த எளிய கேள்விக்குதானா என்று கோபம்.

"என்ன செய்தோமா? அதனால்தான் ஒன்றும் செய்ய முடிய வில்லை. அதிலும் இளம் சம்புவராயன் போரிடுவோம் என்று வாளை உருவி விட்டான்."

"அப்படியா?" என்று அநிருத்தர் தன் இரு புருவங்களையும் உயர்த்திக் கேட்டார். "அவ்வளவு வீரமா அவனுக்கு?"

"விட்டால் அதில் ஒரு பத்துப் பேரை வெட்டிச் சாய்த்திருப் பான். ஆனால், எங்கள் கதி அதோ கதியாய் இருந்திருக்கும். கோடிக்கரையின் கோட்டான்களும் ஆந்தைகளும் எங்கள் உடல்களை இப்போது கொத்திக் கொண்டிருக்கும்" என்றான் அடியான்.

புன்னகை பூத்த முகத்துடன் பிரதமர் கூறினார். "அதிலும் புண்ணியம்தான் திருமலை. கோடிக்கரையில் உள்ள ஆந்தைகள் தேவாரத்தில் பாடல் பெற்றவை. தெரியுமா?" எனக் கதையை விவரிக்கத் தொடங்கினார்.

"அந்த ஊர்ச் சிவன் மட்டும் பாடல் பெற்றவரில்லை. கோடிக் கரை ஆந்தைகளைப் பற்றிக் கூடச் சுந்தரர் பாடியிருக்கிறார்.

"காடேன் மிகவால் இது காரிகை யஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற
வேடித் தொண்டர் சாலவுந் தீயர்
சழக்கர் கோடிக் குழகா விடங்கோயில் கொண்டாயே!"

அடியானுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. "இந்தப் படலத்தில் கடவுள் புண்ணியத்தில் தப்பித் திரும்பியது பற்றிச் சொல்லுகிறேன். தாங்கள் அந்தச் சைவ ஆந்தைகளைப் பற்றிப் புகழ் பாடுகிறீர்களே, குருவே!" என்றான்.

"ஓ! அவை வைணவ ஆந்தைகளாய் இருந்தால் சந்தோஷப் பட்டிருப்பாயோ? சரி, என் மீது பாயாதே. நான் சொல்ல வந்ததை முடித்து விடுகிறேன்" என்றார் பிரதமர் புன்னகை பூத்த முகத்துடன்.

"திருமலை, என், மனமார்ந்த வாழ்த்துக்கள். சென்ற காரியத்தை வெற்றியுடன் செயல்படுத்தியதற்கு."

அநிருத்தர் பேசியதைக் கண் கொட்டாமல் பார்த்திருந்தான், அடியான். அநிருத்தரின் அறிவாற்றலின் மீதே இப்போது சந்தேகம் வந்தது. கிண்டல் செய்கிறாரா அநிருத்தர் என்றுகூட ஒரு கணம் யோசித்தான் ஆழ்வார்க்கடியான். ஆனால், அவரது புன்சிரிப்பு

உண்மையானதாகவே தோன்றியது. விரைவில் குழம்பாத அடியான் இன்று வெகுவாகக் குழம்பிப் போனான்.

"அவர்கள் பிடிபட மாட்டார்கள் என எனக்கு முன்பே தெரியும்" என்றார் பிரதமர்.

"பின்பு ஏன் என்னையும் மாறனையும் கோடிக்கரைக்கு அனுப் பினீர்கள்? பாண்டியன் பத்திரமாகப் படகு ஏறினானா என்று பார்ப்பதற்காகவா?" என்று ஆத்திரத்துடன் வினவினான் அடியான்.

திருமலையின் கோபம் அநிருத்தருக்குப் புரிந்தது. தேவையற்று ஒரு அபாயகரமான காரியத்தில் அவனை இறங்க விட்டது அவனுக்குச் சினத்தைத் தந்தது.

அவனது கண்களை நேரே பார்த்தார் பிரதமர். அவரது நேர் பார்வையைச் சகிக்க இயலாமல் அடியானுடைய கண்கள் பூமா தேவியை நோக்கின.

"ஓ. நீ சுறாமீனுக்குத் தூண்டில் இட்டேன் என்று நினைத்தாயா, திருமலை? நான் பிடிக்க எண்ணியது திமிங்கலத்தை. அது சிக்கி விட்டது. நீ சென்ற வேலை முற்றிலும் வெற்றி!" என்றார்.

வினாவுக்குப் பதில் விடுகதை!

குழம்பியிருந்த அடியானைப் பார்த்து அவர் மேலும் சொன்னார். "நான் திமிங்கலம் என்று சொன்னது இளம் சம்புவ ராயனை. கந்த மாறனின் மன மாற்றம்தான் எனக்கு முக்கியம்."

அடியானுக்கு உடனடியாகப் புரிந்தது ஒன்றுதான். தன் குருநாதர் தன்னிடம் பூரண உண்மையைச் சொல்லி அனுப்ப வில்லை. அவருடைய எண்ணத்தை யாராலும் அவ்வளவு எளிதாகக் கண்டு கொள்ள முடியாது என்று அவனுக்கு முன்னமே தெரியும். வாய் தவறிக்கூட எதையும் பேசிவிட மாட்டார். ஆனால், அவரறியாமல் ஒரு துரும்புகூட நாட்டில் அசைவதில்லை. அதனால் அவருக்குக் கோடிக்கரையில் என்ன நடந்தது எனத் தெரிந்திருக்கும். தன் மதி நுட்பத்தினால் அறிந்து வைத்திருப்பார்.

"ஐயனே! உம் முகத்தில் தவழும் புன்னகையைப் பார்த்தால், இது என் ஆறுதலுக்காகச் சொல்லும் வார்த்தை போலத் தெரிய வில்லையே? எங்கள் தோல்வி உமக்கு முன்கூட்டியே தெரிந்த விஷயம் போலிருக்கிறதே!" என்றான்.

"ஆம். திருமலை. நல்ல வேளை நீ அந்தத் தூர்த்தனைப் பிடித்துக் கொண்டு வரப் பிரயத்தனப்படவில்லை. இத்தனை நேரம் அவனால் நீ யமலோகத்துக்கு நிச்சயமாக யாத்திரை செய்து

கொண்டிருப்பாய். எனக்குக் கூடக் கவலையாகத்தானிருந்தது. ஆனால், சர்வ சக்தி வாய்ந்த விஷ்ணு மூர்த்தியின் பக்தனாகிய நீ பத்திரமாக வந்துவிடுவாய் என்று என் உள்மனது சொல்லியது. அது மட்டுமல்ல. உங்களை அவன் ஒன்றும் செய்ய மாட்டான் என்றும் தெரியும். எனினும் நேற்று நள்ளிரவு நேரத்துக்கு நீங்கள் இருவரும் வந்த செய்தி தெரிந்த பிறகுதான் நிம்மதியாயிற்று.''

அநிருத்தரின் பேச்சைக் கேட்டு அடியானின் பயம் கொஞ்சம் தணிந்தது. ஆனால், முழுவதுமாக முதல் மந்திரி தன்னிடம் விஷயங்களைச் சொல்ல மாட்டார் என்ற பயம் மிகுந்தது.

தன் தொண்டையைக் கனைத்துத் தான் ஏதோ கூறப் போவதைக் குறிப்பிட்டான் அடியான். ''என் வினாவை மன்னியுங்கள்'' என்றான். ''பின் ஏன் இந்தக் கோடிக்கரைப் படலம்? வேறு எங்காவது விஷ்ணு தலம் இருக்கும் இடமாக எங்களை அனுப்பியிருக்கலாமே?''

''திருமலை! முதலில் புரிந்துகொள். திரும்பத் திரும்பக் கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போல் சொல்வதற்கு எனக்கு அலுத்துப் போய்விட்டது. பழுவேட்டரையரின் மகளைப் பிடித்து ஒப்படைக்க நீ செல்லவில்லை. மாறனைப் பிடித்து வந்து ஒப்படைக்கவே நீ சென்றாய். பாண்டியர்கள் பிடிபட மாட்டார்கள் என எனக்கு நன்கு தெரியும். மேலும், இந்தப் படலத்தை நானாக உருவாக்கவில்லை. இது பழுவூர் அரசரின் விருப்பம். அதை என் வேலைக்காகப் பயன்படுத்திக் கொண்டேன்.''

அடியானுக்குக் கொஞ்சம் புரிந்தது. ஆனால், பெரும்பாலும் இருட்டில்தான் இன்னமும் இருந்தான். ''மாறனை ஏன் பிடித்து வர வேண்டும்? எனக்குப் புரியவில்லையே?''

''மாறனுக்குத் தான் ஒரு வீரன் என்று நினைவு படுத்த வேண்டும். அவன் சோழர்களின் முக்கியமான நண்பன் என்று புரிய வைக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தேன்'' என்றார் பிரதமர்.

''ஆகா, அதுதான் விஷயமா?'' என்று நினைத்துக் கொண்டான் அடியான். பழைய நடப்புகளிலிருந்து விடுபட மாறனது துடிப்பு அநிருத்தர் பார்வையில் தனியாக நின்றிருக்க வேண்டும். சோழ அரசர்களுக்குத் தனது விசுவாசத்தையும் ராஜ பக்தியையும் நிரூபணம் செய்ய வேண்டும் என்பதே அவன் முன் வைத்திருந்த தலையான நோக்கம் என்பது இவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

பிரதமர் தொடர்ந்தார்: ''தோல்வி, தோல்வி என்கிறாயே. அவனைத் திருப்பிக் கொண்டு வந்து சேர்க்கும் விஷயத்தில் யாரெல்லாம் தோற்றுப் போனார்கள் என்று உனக்குத் தெரிந்தால், உன் வெற்றியின் ஆழம் உனக்குப் புரியும். ஒருவரை மட்டும் சொல்கிறேன்'' என்று ஒரு நொடி தாமதித்து, ''நம் சக்கரவர்த்தி கூட இதை முயன்று, பின் கைவிட்டார்'' என்றவுடன் அடியான் பூரிப்பில் கண் கலங்கினான்.

அடியானுக்கு உடலெங்கும் ரோமாஞ்சனம் ஏற்பட்டது. படு தோல்வியென்று நினைத்தது பெரும் வெற்றியா? அந்தப் பாற்கடலில் படுத்துறங்கும் பரந்தாமன் இவன் விஷயத்தில் ஒரு நொடி தன் தாமரை இதழ் போன்ற கண்களைத் திறந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

மாறனின் மனோநிலையை உணர்ந்து, கடம்பூருக்குச் சென்று, எந்தச் சாக்கிட்டேனும் திருப்பி அழைத்து வரப் பிரதமர் தீர்மானித்திருக்க வேண்டும். பல முறையும் முயற்சித்திருக்க வேண்டும்.

அடியானுக்கு இன்னும் ஒரு ஏமாற்றம்தான். ''மாறன் திரும்ப வந்தது நன்மைதான், குருவே. ஆனால், பாண்டியனைக் கூண்டோடு பிடித்திருக்கலாமே.''

பிரதமர் கவலைப்படவில்லை. ''அவன் சென்றால் இன்னொருவன். இதை அடக்க முடியாது, திருமலை. நாம் கவலையற்று நிம்மதியாக வாழும் காலம் முடிந்தது. அவன் நடத்தப்போகும் பயங்கரச் செயல்களுக்கு நாம் பாண்டியனைப் பழிவாங்காமல் இருக்கவே பாண்டிய அரச வம்சத்தைக் கடல் கடந்து அனுப்பி விட்டான் ரவிதாசன்.''

''ஆனால், நீ இதைப் பற்றியெல்லாம் நினைத்துக் குழம்பிக் கொள்ளாதே, உனக்குத் தேவையானதைச் சொல்கிறேன். நான் உன்னை அனுப்பிய நோக்கம் முழுவதுமாக நிறைவேறியது. நீ சென்ற காரியத்துக்கு ஜெயலக்ஷ்மி உனக்கு மகுடம் சூட்டி மகிழ்கின்றாள்!'' என்று முடித்தார்.

''இப்போது சொல், திருமலை, நான் உன்னை ஏமாற்றி விட்டேன் என்று நினைக்கிறாயா?'' என்று அடியானிடம் அன்புடன் கேட்டார் அநிருத்தர்.

அநிருத்தரிடம் சிரம் தாழ்த்தி மன்னிப்புக் கோரினான் அடியான். ''ஆச்சாரியரே! தங்களுக்கு நான் சீடன் மட்டும் அல்ல. அடிமை. ஒரு நாளும் அப்படிச் சொல்ல மாட்டேன். இதுவரை நேராத அபாயம் இப்போது என்ன நடந்துவிடப் போகிறது. ஏதோ விஷயத்துக்கு என்னை அனுப்புகிறீர்கள் என்று நினைத்தேன். இல்லை என்று தெரிந்தவுடன் எனக்கு அதைப் பற்றி முன் கூட்டியே தெரிவித்திருக்கலாமே என்று ஒரு ஆதங்கம்தான்.''

''ராஜிய காரியங்களில் அனைத்தையும் தெரிந்து கொள்ளுவது நாட்டுக்கும் நல்லது அல்ல. உனக்கும் அபாயகரமானது!'' என்றார் அநிருத்தர்.

''ஐயா! இன்னும் ஒரு கேள்விதான்'' என்று இழுத்தான்.

''சீக்கிரம் கேள். வெளியில் எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள், பார்த்தாய் அல்லவா?''

''ஐயனே! அந்த ரவிதாசன் செய்யும் அட்டூழியங்களைப் பார்த்தால் என் வயிறு கொதிக்கின்றது; அவனைத் தீர்த்துக்கட்ட நம் சோழர் படைக்கு எவ்வளவு நேரம் ஆகும்! ஒரு பெரும் படையைக் கோடிக்கரைக்கு அனுப்பி அவனைக் கையும் களவுமாகப் பிடித்திருக்கலாம். அந்தச் சண்டாளப் பாதகன் ரவிதாசன் இப்படி நம்மை வாட்டி வதைக்கிறானே, அவனை ஒன்றும் செய்ய இயலாதா?'' என்று அடியான் வினவினான்.

''சாகத் துணிந்தவனின் பாணங்களுக்கு எதிர்ப் பாணம் என்னிடம் இல்லையே!'' என்றார் அநிருத்தர். அவரது குரலில் ஒரு விரக்தி தெரிந்தது. ''ரவிதாசன் தன் நாட்டை நேசிக்கிறான், அதனால்தான் அவனது இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் நம் நாட்டில் உபத்திரவமாக எதிரொலிக்கின்றது. ஆனால், ஒன்று சொல்லுகிறேன், திருமலை'' என்றார் அநிருதர். ''மாறன் திரும்ப வந்ததே உன்னால்தான். அது நீ சோழ சாம்ராஜ்யத்துக்குச் செய்த பேருபகாரம்.''

இராஜரீக காரியங்களில் ஈடுபடுகிறவர்களுக்குச் சாணக்கியத் தந்திரங்கள் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், இவர் சாணக்கியனிடமே தந்திரம் பயின்றவர். இவரே தன்னால் ஒரு பேருதவியை நாட்டுக்குச் செய்ய முடிந்தது எனக் கூறும் போது ஒரு சிறிய அகந்தை அடியானின் முன் குடுமி வைத்த தலைக்குள் எழுந்தது.

''மாறன் எப்படி?'' என்று வினவினார் அநிருத்தர்.

''நல்லவனாய்த் தெரிகிறான். என்னுடன் வெகு நெருக்கமாக ஆகிவிட்டான். அவனது ரகசியங்கள் பலவற்றை என்னிடம் சொன்னான்'' என்று பெருமையாய் விளக்கிக் கொண்டிருந்தான் அடியான்.

நடுவில் குறுக்கிட்டு, ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''ரவிதாசன் அவனைக் கடம்பூரில் பார்க்க வந்ததைச் சொன்னானா?'' என்றார் குருநாதர். சற்றுமுன் அகந்தை பிடித்த தலைக்கு ஒரு குட்டுப் பெற்ற அதிர்ச்சியில் அடியான் விழித்தான்.

''உன்னை அங்கு அனுப்பியதே அதற்குப் பின்தான், திருமலை. ரவிதாசன் ஒருவனை நண்பனாக மாற்ற நினைத்தால் அது அவனது சொந்த வளர்ச்சிகளுக்குத் தான் இருக்க முடியும்.''

அடியானுக்கு இப்போழுது அனைத்தும் புரிய ஆரம்பித்தது.

தாடி வைத்த ஒருவன் வந்து சென்றதை மாறனின் அன்னை உணவு பரிமாறும்போது சொன்னதும், மாறன் அவளைக் கண்டு முறைத்ததும், அடியான் நினைவுக்கு வந்தது. முக்கியமாக இன்னும் ஒன்று புரிந்தது.

தன்னை உயிருடன் விட்டது போல மாறனையும் ஒன்றும் செய்யாமல் ஏன் ரவிதாசன் விட்டான் என்றும் புரிந்தது.



அத்தியாயம் இருபத்து நான்கு

இதுவும் ஒரு சதுரங்கம்

மாறன் அறைக்கு வெளியே பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தான். கடம்பூருக்குச் சென்று தந்தை தாயாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது- அடிபட்ட குழந்தை தாயின் அரவணைப்பை நாடுவது போல.

'தர்மத்தை மீறி நடந்ததாகத் தம் குலத்தின் மீது ஏற்பட்டிருந்த அபவாதத்தைப் போக்கிக் கொள்ளவே அவர்களை விட்டு வெகு தூரம் வந்து விட்டோம். இனி என் பயணத்தின் திசை கடம்பூரை நோக்கியேதான் இருக்க வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டான்.

ஆயினும், தமது ஆர்வத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு பிரதமரைச் சந்திக்க வந்தது நியாயம்தான் என்றும் நினைத்தான். வெற்றி வாகை சூடி வரும்போது மட்டும் வரவேற்பை எதிர்பார்க்கிறவன் நல்ல வீரனாய் இருக்க முடியாது. தோல்வியின் போதும் மனம் சளைக்காமல் நடந்ததைப் பற்றி ஆராயவும், மற்றவரிடம் தன் அனுபவங்களைப் பற்றிக் கூறவும் மனமானது பக்குவமடைய வேண்டும் என்று பயிற்சிக் காலங்களில் அவனது குருநாதர்கள் கூறிவந்ததை நினைத்துக் கொண்டான். ஒரு நாள் அதிகமாகப்

போகிறது. பிரதமரைச் சந்தித்த பின் தஞ்சையிலிருந்து கடம்பூருக்குப் புறப்பட வேண்டியதுதானே?

வரவேற்பு அறையில் தனியாய் அமர்ந்து பொழுது போக்குவது என்னவோ அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. தினந்தோறும் பிரதமரின் அலுவலகத்தில் நடந்த வேலைகளைச் கூர்ந்து கவனித்தான். பலர் உள்ளேயும் வெளியேயும் சென்று வந்தார்கள். கையில் பல பனை ஓலைகள், ஒரு தட்டில் முக்கிய ஆவனங்கள் என்று பலவற்றையும் எடுத்துக் கொண்டு, இங்கும் அங்குமாய்ச் சென்றார்கள். ஆனால், ஒரு ஆரவாரம் இல்லை. எங்கும் வெறும் அமைதிதான்.

சற்று நேரத்தில் அதுவும் சலித்துவிட்டது. தன்னை எப்போது உள்ளே அழைப்பார்கள் என்று ஆவலுடன் காத்திருக்கும் மற்றவரைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரத்தைப் போக்கினான்.

புத்த பிக்குவை முதலில் பார்த்தான். காவி வஸ்திரம் தரித்த பௌத்த சந்நியாசி அவர். புத்த பிக்குகளின் தேகமானது வறண்டு கெட்டிப்பட்டுக் கடினமாகி இருக்கும் எனக் கேள்விப்பட்டிருந்தான். ஆனால், இவர் அப்படியில்லை. கொஞ்சம் கொழு கொழு என்றுதான் இருந்தார். கடுமையான தவ விரத அனுஷ்டானங்களில் கொஞ்ச நாட்களாய் ஈடுபடவில்லை போலும்.

நாகை சூடாமணி விஹாரத்தின் அழகைப் பற்றியும் அதன் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த அருமையான சித்திரக் காட்சிகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தான் மாறன். அந்த விஹாரம் புயலில் அழிந்தவுடன் இப்போது மீண்டும் பொன்னியின் செல்வர் ஆதரவுடன் கட்டப்பட்டு வந்தது. அதன் விஷயமாக இவர் பிரதமரைப் பார்க்க வந்திருப்பார் போலும்.

வெகுவாக நேரம் சென்றது. முதலில் ஒரு வைணவன்தான் உள்ளே செல்கிறான் என்பதே அங்கு சமுதாயத்தில் தங்கள் நிலைமையைப் பெரியதாக நினைத்து வந்த பலருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. ஏதாவது வைணவக் கோயிலுக்குச் சன்மானம் பெற்று உடனே வெளி வந்து விடுவான் என எல்லாரும் நினைத்துத் தங்களுக்குள் ஆறுதல் சொல்லிக் கொண்டார்கள். வெகு நேரம் உள்ளே பிரதமருடன் அவன் உரையாடுவதிலே கழிந்த பொழுது வெளியில் இருப்பவர்களுக்கு உற்சாகத்தை அளிக்க வில்லை.

அப்படி என்னதான் உள்ளே பேசுகிறார்கள் என்று மாறனே நினைத்தான். நேரம் அதிகமாக அதிகமாக, உள்ளே பெரும் விவாதம் நடப்பதைக் காட்டியது. அது அவனுக்குத் திருப்தியைத் தரவில்லை.

அறையினுள் உரையாடல் முடிவதாகத் தெரியவில்லை. அடியான் படு ஆவேசமாக இருந்தான். ஆனால், அவனது கோபமெல்லாம் முன் போல குருநாதர் மேலில்லை. இப்போது அது ரவிதாசன் மீதிருந்தது

'சம்புவரையர் குலத்தையே தன் பக்கம் இழுக்க முயற்சிக்கிறானா அவன்? என்ன தைரியம்!'

அடியானுக்கு ரவிதாசன் மீதிருந்த வெறுப்பு அதிகரித்தது. மரத்தின் மீது ஒளிந்திருந்த போது, மாறனைக் கீழே குதிக்க அனுமதித்திருக்க வேண்டும். அந்தக் கொடும்பாவி ஒருவனை மட்டுமாவது கொன்றிருக்கலாம்' என்று இப்போது தோன்றியது.

''மாறனைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டுமென்று ரவிதாசன் முயல்கிறான். தேசப்பற்று அவனிடம் கொழுந்து விட்டெரிகிறது. அதனால் தப்பித்தோம். இல்லை என்றால் நினைத்துப் பார். வடக்கே ஒரு எதிரி! தெற்கே ஒரு எதிரி!'' என்றார் பிரதமர்.

அடியானுக்கு அடுத்த வருத்தம். ''இனி நமக்குத் தோழமையான அரச குடும்பங்கள் எல்லாவற்றையும் அடுத்தடுத்து அவன் தேசமாக்கிக்கொள்ள நினைப்பானே? நாம் யாரை என்று கண்காணிப்பது?''

''மறந்து விட்டாயே, திருமலை. அது ஒன்றும் புதிதல்லவே! ஏற்கெனவே பழுவூர்க் குடும்பத்துக்குள்ளே உன் சகோதரி நந்தினியைப் புகுத்தி நாட்டை ஒரு காலத்தில் கதி கலங்க வைத்து விட்டானே. இன்று பழுவேட்டரையரின் நிலையைப் பார்த்தாயா?''

அடியான் தன் வாதத்தை விடுவதாக இல்லை. ''ஆனாலும், குருநாதா! ஒரு நல்ல வாய்ப்பை நழுவ விட்டோம் என்றுதான் நினைக்கிறேன். பின் ஒரு நாள் இதற்காக ரவிதாசனை விட்டு வைத்தது தவறு என்று வருத்தப்படுவோம் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்'' என்றான் அடியான். ''அவன் செல்கிறான் என்று தெரிந்து ஒரு படையை அனுப்பி, காலனியின் கீழ் மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல ஏன் நசுக்க வில்லை? அந்தணன் அவன் எனப் பார்க்கிறீர்களா? அவனைக் கொல்வதில் ஒரு தவறும் இல்லை. பாண்டியர்களின் போர் வலிமையும் குன்றிப் போயிருக்கும். இல்லையென்று வெளியே விட்டு வேடிக்கை பார்க்கிறீர்கள். சில சமயம் தங்களுடைய நிதானப் போக்கு எனக்குக் கோபத்தைக் கொடுக்கிறது'' என்றான்.

''இல்லை, இல்லை. ஒரு விசாரணைக்காக அவனை உயிருடன் இருக்க அனுமதிக்க வேண்டியிருக்கிறது'' என்றார் பிரதமர்.

அடியானுக்கு இப்போது புரிந்தது. சோழ சாம்ராஜ்யத்தின் முதன் மந்திரி பிரம்மராயருக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்கிறது. தனக்கு ஒன்று தெரியாது என்று ஏற்பட்டால், தன்னிடம் மக்களுக்குள்ள மதிப்புக்குப் பங்கம் வந்துவிடும் எனத் தெரிந்து அவரும் எல்லா வற்றையும் தெரிந்து கொள்ள முயற்சித்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

அப்படிப்பட்டவருக்கு ஒன்று மட்டும் தெரியாது. அதைத் தெரிந்தவன்தான், மரத்தடியில் நின்று ''ஹா ஹா ஹா'' என்று சிரித்துவிட்டுக் கள்ளத் தோணியில் ஈழம் சென்றுவிட்டான்.

ஆதித்த கரிகாலனைக் கடம்பூரில் கொன்றவர் யார் என்பது ரவிதாசனுக்கு மட்டுமே தெரியும். அந்தத் துக்ககாலத்துக்குப் பின்பும் மர்மம் வெளிப்படவில்லை.

இது நாட்டுக்காக மட்டும் அநிருத்தர் செய்யவில்லை. கொஞ்சம் தன்னலம் கருதியும்தான் செய்கிறார் என்று அடியானுக்குத் தெரியும். ஆதித்த கரிகாலனின் மரணத்துக்குத் தான் கூட ஒரு காரணம் என்று ஒரு சாரார் சற்றுத் தாழ்ந்த குரலில் கூறி வந்தது பிரதமருக்குத் தெரியும். தன்மீது சாட்டப்பட்ட குற்றம் ஆதாரமற்றது என்று நிரூபிக்க அவர் ஆர்வம் கொண்டிருந்தார். அதற்கு ரவிதாசன் உயிருடன் இருக்க வேண்டும்.

தாம்தான் ஆதித்த கரிகாலனைச் சதி செய்து கொன்றோம் என்ற வதந்தியைப் பற்றி நினைத்தவுடன் பழைய ஞாபகங்கள் எல்லாம் பிரதமருக்கு வந்துவிட்டன. அந்தச் சகிக்க முடியாத நினைவால் அவர் கண்களை மூடிக் கொண்டார். அவர் முகம் அருவருப்பினால் சிணுங்கிற்று.

அடியான் ஆறுதல் கூறினான். ''அப்படி தங்களைச் சந்தேகிப்பது மாசற்ற பொன்னை ஐயம் கொண்டு தரையில் தேய்த்துப் பார்ப்பது போல, ஐயனே.''

''திருமலை, ஒன்று தெரிந்து கொள். ஆதித்த கரிகாலனின் மரணத்தில் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்று யாரேனும் சந்தேகித்தால், அதைத் தவறு என நிரூபணம் செய்ய வேண்டியது என் கடமை. நாட்டின் முக்கியப் பொறுப்பில் உள்ளவர்கள் நல்லவர்கள் என்றும் நிரபராதிகள் என்றும் சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதைப் பொது மக்கள் அறியும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்!'' என்றார் பதிலுக்குப் பிரதமர்.

அடியான் தொடர்ந்தான் ''அப்படிப் பார்த்தால் கூட, ஐயனே! ரவிதாசனை உயிருடன் பிடித்து வந்து உண்மையைக் கக்க வைத்திருக்கலாமே?''

பிரதமர் தலையை அசைத்தார். ''அது இன்றைய நிலையில் கஷ்டம் என்று நினைக்கிறேன். அவன் பிடிபட்டிருக்க மாட்டான். நீங்கள் ஐந்நூறு பேருடன் சென்றிருந்தால், அவன் வேறு வழியாய் ஈழத்துக்குச் சென்றிருப்பான். ரவிதாசன் எனக்கு நன்கு அறிமுகம் ஆனவன். அவனுக்கும் நான் அப்படியே!'' என்றார் அநிருத்தர்.

பெரும் ஆச்சரியத்துடன் அடியான் அநிருத்தரைப் பார்த்தான். சோழ நாட்டின் பிரதான எதிரிக்கும் பிரதம மந்திரிக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?

அவனது சந்தேகத்தைப் புரிந்து கொண்டார் பிரதமர். ''பல ஆண்டுகளாக ரவிதாசன் எனக்குத் தொல்லைகள் கொடுக்கிறான். நானும் அவனுக்குத் தொல்லைகள் கொடுக்கின்றேன். அவனது சூழ்ச்சிகளை நான் முறிடிக்கவும், எனது சூழ்ச்சிகளை அவன் முறியடிக்கவும், எங்கள் இருவருக்கும் நேரம் சரியாக இருக்கிறது. சொல், திருமலை, தினமும் அவனை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவனும் என்னை நினைக்காத நாளில்லை என்று நம்புகிறேன். நாங்கள் இருவரும் அறிமுகம் ஆனவர்கள் தானே?''

சற்று மௌனத்தில் ஆழ்ந்த பிரதமர், ''நீ எப்போதாவது சதுரங்கம் விளையாடி இருக்கிறாயா? இரு கோஷ்டியினரும் காய்களை நகர்த்திக் கொண்டே இருக்க வேண்டும், அரச குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியதே முக்கிய நோக்கமாகும். மாறன் எனும் காயை நான் இப்போது நகர்த்தியுள்ளேன்.''

அடியானுக்கு ஆதங்கம் தாங்கவில்லை. ''தனி ஒருவனுக்குப் பயந்தா நாம் செயல்பட வேண்டும்? தனி ஒருவன் ஒரு சாம்ராஜ்ஜியத்தை முற்றுகை இடுவதா? நான் கேள்விப்பட்டதே இல்லை, குருநாதா.''

''மதங்கொண்ட ஒரு யானை ஆயிரம் யானைகளுக்குச் சமமானது என நீ கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? ரவிதாசனும் அப்படித்தான். நன்றாய் யோசித்துப் பார். செங்கோலைப் பிடித்த கைகளுக்கு விசுவாசமாய் இருப்பதற்கு ஆயிரமாயிரம் பேர் இருக்கிறார்கள். ஆனால், நாட்டை இழந்து காட்டில் வாழும் முன்னாள் அரசருக்கு உயிரைக் கொடுக்கத் துடிக்கும் ஒரு கும்பல் எப்படி ஒரு ராஜ விசுவாசம் கொண்டிருக்கும்? மதுரை சாம்ராஜ்யத்தை அஸ்தமனத்திலிருந்து காப்பாற்ற விரும்புகிறவர்களின் கூட்டம்

எதற்கெல்லாம் துணிந்து செயல்படும்? சாகத் துணிந்தவன் முன் யாரும் கஷ்டப்படாமல் எதிர்த்து நிற்க முடியாது, திருமலை'' என்று பிரதமர் கூறிக் கொண்டிருந்தார்.

அடியானின் உடம்பு சிலிர்த்தது. காதைப் பொத்திக் கொள்ள எண்ணினான், அநிருத்தர் துர்ச்செய்திகளையே அடுக்கிக் கொண்டு போன போது. அடியான் தன் குருநாதரைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான், அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

''பள்ளத்தாக்கின் விளிம்பில் நிற்கிறோம். முன்னால் செல்ல இயலாது. பயங்கரமான அபாயங்கள் சூழ்ந்திருக்கும் காலமிது. ஆனால், அவனைக் கொல்ல இது தருணமல்ல.''

''பின் இந்தப் படலத்தில் தப்பித் திரும்புவது எப்படி?'' என்றான், அடியான்.

''நல்ல வேளை. ரவிதாசனின் மூளையில் உதிக்கும் ஒவ்வொரு திட்டமும் எனது அகக் கண்ணாடியில் காட்சிகளாகப் பிரதிபலிக்கின்றது. அவன் அடுத்தது என்ன செய்யப் போகிறான் என்பதை என்னாலும் நமது உளவுத் துறையினாலும் பெரிய அளவில் யூகிக்க முடிகிறது. மானைப்போல் யோசிக்கத் தெரிந்த வேடன் வீட்டுக்கு வெறும் கையோடு திரும்ப மாட்டான். வெகு நாள் பசியுடன் இருக்க மாட்டான்'' என்றார்.

''உதாரணத்துக்கு, முன்னொரு தடவை ரவிதாசனின் சூழ்ச்சி வெற்றி பெற்றது. விதி வசக்கால் துர்கதி சம்பவித்துவிட்டது. ஆதித்த கரிகாலன் ரவிதாசனின் கொலை வெறிக்குப் பலியானான். ஆதித்தன் தன் பன்னிரண்டாம் வயதில் சேவூர்ப் போர் களத்தில்தான் வரலாற்றில் இடம் பிடிக்கத் தகுந்த மாவீரன் என்று நிரூபணம் செய்தான். அவனை எந்த அஸ்திரம் கொண்டும் வீழ்த்த முடியாது என்று ரவிதாசனுக்குத் தெரியும். அதனால் அழகிய ஒரு பெண்ணின் மோகனாஸ்திரத்துக்கு அவனைப் பலியாக்கினான். ஒரு மோகவலை விரித்துக் கரிகாலனின் விதியைக் கடம்பூரில் முடித்தான்.''

''ரவிதாசனைச் சொல்லியும் குற்றம் இல்லை, ஒரு சாம்ராஜ்ஜியம் ஆரம்பிக்கும்போது அதன் மன்னர்கள் போர்க் களத்தில் வீர சொர்க்கம் அடைவார்கள். ராஜாதித்யர் அதற்கு உதாரணம். நாட்டின் உச்ச கட்டத்தில் மன்னர்கள் வயதாகிப் படுக்கையில் உயிர் விடுவது சகஜம். சுந்தர சோழர் அதற்கு உதாரணம். ஆனால், சாம்ராஜ்யம் அஸ்தமனம் ஆகும்போது, கொலையுண்டும் சதியெனும் சகதியில் அகப்பட்டும் சாவார்கள். ஆதித்த கரிகாலன் அதற்கு உதாரணம்.''

''என்ன குருவே, சோழர்களுக்கு அஸ்தமனமா?'' நமது பொற்காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றல்லவா நினைத்தேன்?'' என்று அடியான் கேட்டான், வியப்புடன்.

''கவலைப்படாதே. உன் வாழ்நாளில் அந்த அஸ்தமனம் இல்லை, திருமலை. சோழ சம்ராஜ்ஜியம் என்பது ஒரு ஓடும் யானை. நிற்க வெகு நாள் ஆகும். இன்னும் ஓரிரு நூற்றாண்டுகளில் நாம் பிறந்திருந்தால் எல்லாரும் பாண்டிய நாட்டுப் பிரஜைகளாகி விடுவோம்.''

''காட்டில் அகதிகளாய்ச் சுற்றும் பாண்டியராவது எல்லா வலிமையும் கொண்ட சோழர்களை வீழ்த்துவதாவது! சிரிப்பு வருகிறது, குருவே!'' என்று நகைத்தான் அடியான்.

''சிரிக்கத் தோன்றினால் சிரி. ஆனால், பாண்டியன் பதவிக்கு வராமல் இருக்க முடியாது. என்றைக்காவது ஒரு நாள் அவன் வந்துதான் தீருவான்.''

உடனே சிரிப்பை நிறுத்திவிட்டு அடியான் வினவினான். ''தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே?''

''அவனைக் குறுக்கும் நெடுக்குமாய்ச் சங்கிலியால் பிணைத்துக் கட்டிவிட்டுப் போனால் கூட அவன் தப்பி விடுவான். விடுதலைக்காக அவனது தாபம் அவ்வளவு அதிகம்'' என்றார்.

அடியான் உடனே, ''வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருவது இயற்கை. வென்றவர்கள் மீது தோற்றவர்கள் கோபம் கொள்வதில் பயன் என்ன? நமது ஞாபகங்கள் கேவலம் ஒரு வாழ்நாளுக்குத்தான் நீடிக்கும். பாண்டியருக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் அது தொடர்ந்து வரும் போலிருக்கிறதே. பாட்டனார் காலத்தில் நடந்த படையெடுப்புக்கு, இப்போது பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது அந்தக் கும்பல். நான்கு தலைமுறைகளுக்கு முன்பு நடந்த சரித்திர மாறுதல்களுக்காக இன்று போராடுவது தகுமா?'' என்று கேட்டான்.

''மற்றவர் போலச் சோழர்களின் வெற்றியை ஒப்புக்கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டியதுதானே. இந்தத் தஞ்சை மாநகரை முத்தரையர் கட்டினார்கள். சோழர்கள் அதை அவர்களிடமிருந்து பிடுங்கி ஆட்சி நடத்தினர். இன்று முத்தரையர் குலத்துக்கு இங்கு ஒரு காணி நிலம் கூட இல்லை. அவர்கள் பேசாமல் இல்லையா?'' என்றான் அடியான்.

''திருமலை! முதலில் எதிரியை மதிக்கக் கற்றுக்கொள். பல்லவர்கள் நம்மை ஆண்டபோது நாம் என்ன விவசாயமா பார்த்துக் கொண்டு இருந்தோம்? துணிந்து போராடவில்லையா? பார்த்திப மகராஜாவை நினைத்துப் பார். சுவரெங்கும் தன் கனவைச் சித்திரித்து, மகனுக்கு அதைக் காட்டிவிட்டுப் போர்க் களத்தில் சென்று மடியவில்லையா? இன்று சோழரின் செழிப்பெல்லாம் அவர் கண்ட கனவுதானே! பின் ஏன் பாண்டியர்களது போராட்டத்தை மலிவாக்குகிறாய். விடுதலை எனும் ஒரு உயர்ந்த நோக்கத்திற்காகச் சாகத் துணிந்தவனை எந்த அணை போட்டுத் தடுப்பாய்? ரவிதாசன் தன் சிறந்த அறிவாற்றலுடன் சோழ குலத்துடன் உறவு பூணுவதற்கு எவ்வளவு நேரமாகும். நானே முன்னின்று அவனை வரவேற்க மாட்டேனா? என் பதவியை அவனுக்கு விட்டுக் கொடுத்து விடமாட்டேனா? எந்தக் கட்சியில் அனுகூலம் அதிகம் இருக்கின்றதோ அதில் சேர வேண்டியது என்று இராமல், காட்டில் தன் வாழ்நாளைக் கழிக்கும் அவன் தேச பக்தியைக் குறைத்து எடை போடாதே. அவன் தேசபக்தி என்னுடையதை விட அதிகமானது.''

அடியான் உற்றுக் கவனித்தான். அவன் கற்றுக்கொள்ள நிறைய விஷயங்கள் இன்னும் உள்ளன என ஊகித்தான்.

அநிருத்தர் தொடர்ந்தார் ''ஆனால், இப்போது நாம் தயாராக இருக்கவேண்டும். இறுதி யுத்தத்திற்கு ஆயத்தமாகி விட்டான் ரவிதாசன். இது சைனியங்கள் மோதும் போரல்ல. அப்படி என்றால் அவன் அடியோடு நிர்மூலமாகி விடுவான் என்று அவனுக்குத் தெரியும். தலைவர்களை ஆபத்தில்லாத பாதுகாப்பிடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற முடிவு அதைக் குறிக்கின்றது. நமது பழிவாங்கும் நடவடிக்கையிலிருந்து அவர்களைக் காப்பாற்றவே இந்த நாடு கடத்தும் படலம்.''

அடியான் ஆச்சரியத்துடன் தனது குருவைப் பார்த்தான். அந்தப் பேரிடரை நினைத்து அநிருத்தரின் மூடிய கண்கள் கொண்ட முகம் நடுக்குமுறுவதையும் கண்டான்.

பிரதமர் ஒரு பெருமூச்சு விட்டார். ''சரி, அதை விடு, திருமலை. நீ வடபாரதம் சென்று வந்ததைப் பற்றிக் கூறு'' என்றார்.

''ஐயனே, அங்கும் குழப்பம்தான். அங்கு வடக்கிலிருந்து வந்த வேறு மதத்தினர் நாட்டைக் கைப்பற்றி விட்டனர். பலமுறை படையெடுத்து எல்லாக் கோயில்களையும் அடைத்துவிட்டுப் பூஜையையும் தடை செய்து விட்டனர். நானே இரவில் வெகு தூரத்திலிருந்து கண்ணன் பிறந்த வட மதுரா நகரைத் தரிசித்து

விட்டு வந்து விட்டேன். நம் கடவுள் ஏன் நம்மைக் கைவிட்டார் எனத் தெரியவில்லை.''

பிரதமர் தன் சீடனுக்கு ஆறுதல் அளித்தார். ''பொறு, இது சோதனைக் காலம். நம் மதம் தழைக்க ஒரு காலம் வரும். அப்போது உலகுக்கு நாம் வழி காட்டும்படியிருக்கும். ஆனால், அது தெற்குப் பாரதத்தில் உள்ள நம் பொறுப்பை அதிகரிக்கிறது. ஒரு பலமான சாம்ராஜ்யம் இங்கிருந்தால்தான் அந்தப் பெரும் அபாயம் நம் நாட்டை அண்டாமல் நம்மால் தடுக்க முடியும்'' என்றார். ''ச்சீ, இது என்ன? இன்றைக்கு எது பேசினாலும் அது துயரார்ந்த பேச்சாய்த்தான் இருக்கும் போலிருக்கிறதே!'' என்று முடித்தார்.

சற்று நேரம் கழித்துத், ''துயரார்ந்த பேச்சு இன்றைக்குப் போதும் திருமலை'' என்றார். அடியானின் சோகம் தழுவிய முகத்தைக் கண்டு, ''தற்போதைய நிலையில் சிறிது நாள் மாற்றம் எதுவும் நிகழாது என்று இறைவனை வேண்டுவோம்'' என்றார்.

''எது எப்படியிருந்தாலும் இனிமேல் பாண்டியர்களுடைய கட்சியில் மாறன் சேர மாட்டான்'' என்றார் பிரதமர்.

மாறன் வெளியில் அமர்ந்திருந்தது அப்போதுதான் அடியானுக்கு நினைவுக்கு வந்தது.

பிரதமரின் வாயிலிருந்து வர வேண்டிய அனைத்து வார்த்தைகளும் வந்து விட்டன என்று உணர்ந்த அடியான், ''மாறனை உள்ளே அழைக்கட்டுமா? தாங்கள் பார்த்து விடுகிறீர்களா?'' என்றான்.

'சரி' என்பது போலத் தலையை அசைத்தார் பிரதமர்.

முதலில் சற்று நேரம் சுற்றியிருந்தவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் மாறன். பின் அது சலிப்புத் தட்டியது. சில சமயம் மேலே நிமிர்ந்து கூரையை நோக்கியவண்ணம் யோசித்தான். சில சமயம் பூமியை நோக்கிய வண்ணம் சிந்தித்தான். சற்று நேரம் அநிருத்தர் அறைக்கதவை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

கடைசியாகக் கதவு திறந்தவுடன் அங்கு அமர்ந்திருந்தவர்களின் முகம் பளிச்சென்று மலர்ந்தது. வைணவன் வரவில்லை என்று பார்த்தவுடனே, விரைவாக மலர்ந்தவை வாடின. வந்தவன் பணியாள்தான்!

மாறன் அருகே வந்து, ''இளவரசே! உள்ளே வாருங்கள்'' என்றவுடன், அதைக் கேட்ட மற்றவருக்கு ஒரே ஆச்சரியம். ''இங்கு

இவ்வளவு நேரம் அமர்ந்திருந்தவன் இளவரசனா? அவனே இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருந்ததா? அப்போது நாம் காத்திருப்பதில் தவறில்லை. ஆனால், அவனும் உற்சாகத்துடன் செல்லவில்லையே. வேண்டா வெறுப்பாய் அல்லவா செல்கிறான்'' என்றும் யோசித்தார்கள்.



அத்தியாயம் இருபத்தி ஐந்து

வந்தியத் தேவன் எப்படியிருக்கிறான்?

சக்கரவர்த்தியின் அந்தரங்க அபிமானத்தைப் பெற்ற முதல் மந்திரியாரைப் பார்க்கப் போகிறோமா இல்லையா எனத் தெரியாது அமர்ந்திருந்தான், மாறன். அடியானை மட்டும் உள்ளே அழைத்துப் பேசியவர், இவனைப் பார்க்காமலே அனுப்பி விடுவாரோ என்றுகூடச் சந்தேகம் அவனுக்கு வந்தது. திடீரெனப் பணியாள் வெளிவந்து அழைத்தவுடன் எழுந்தான்.

தயங்கித் தயங்கி நடந்து நாலாபுறமும் பார்த்துவிட்டுப் பிரதமர் அறையின் கதவைத் திறந்தான். அவன் மனதில் அப்போது ஒரு சிறிய சந்தேகம். ''ஒரு ஓட்டம் பிடித்தால், மாலைக்குள் கடம்பூர் சென்றுவிடலாம் அல்லவா?'' என்று.

''இல்லை, இல்லை. மனதைத் தளர விடக்கூடாது'' என்று சொல்லிக் கொண்டு, உள்ளே மெல்லத் தரையைப் பார்த்தபடியே நடந்தான். அடியான் இருந்த இடத்தின் அருகே சென்று அமைதியாய் நின்றான். மெல்ல நிமிர்ந்து பிரதமர் முகத்தைப் பார்த்தான்.

பல நாள் கழித்து மாறன் பிரதமரைத் தரிசிக்கிறான். முதலில் அவன் மனதில் பட்டது அநிருத்தர் முகத்தில் இப்படி ஒரு களை வீசுகிறதே என்றுதான். ''கஷ்டமான காலத்தில் ராஜாங்கக் காரியங்களை நடத்துவதனால் வரக்கூடிய களைப்பு கொஞ்சம் கூட இல்லையே!'' என்று யோசித்தான். இதற்கு நேர் மாறாகத் தன் தந்தை பாதிப் பிராணனை விட்டுவிட்டாரே.

பிரதமருக்கு வயதானது போலவே தோன்றவில்லை. கடுமையான தவ விரத அனுஷ்டானங்களின் பயனாகத் தேகமானது கெட்டிப்பட்டுக் கடினமாகியிருந்தது. வயதின் தளர்ச்சி தெரியவில்லை.

இல்லை, வாழ்வில் நிறைவாய் இருப்பதனால் அவரது முகத் தோற்றமானது அன்பையும், பார்ப்பவரின் நெஞ்சில் பக்தியையும் உண்டாக்கியதா? நாடு நகரமெல்லாம் இவரைப் போற்றிப் புகழ்வதில் தவறொன்றும் இல்லை.

''வருக, வருக! இளம் சம்புவராயனை நீண்ட நாள் கழித்துக் காண்பதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி!'' என்று கூறித் தன் இருக்கையிலிருந்து எழுந்தார் பிரதமர். அடியான் அதைக் கவனிக்கத் தவறவில்லை. எதிரியையும் நண்பனாய் ஆக்கும் வல்லமை கொண்டவர் பிரதமர்.

ஒன்று நிச்சயம். இப்படிப்பட்ட வல்லவரைத் தமக்கு உதவிக்கு வைத்திருக்கும் சோழர்கள் இலங்கை முதல் விந்திய பர்வதம் வரையில் ஆண்டதில் வியப்பொன்றும் இல்லை என்றும் அவனுக்குத் தோன்றியது.

பிரதமரின் பிரமாதமான வரவேற்பைப் பார்த்துவிட்டு மாறனுக்கு ஒரு சந்தேகம். அடியான் கோடிக்கரையில் தாங்கள் சந்தித்த பெரும் தோல்வியைப் பற்றி இன்னும் விவரிக்கவில்லையோ? இல்லை, வாய்க்கு வந்தபடி கதைகளைத் திரித்து விட்டானோ? இவ்வளவு அன்பாய்ப் பேசுகிறாரே, பிரதமர். ஆனால், அவரது அன்பான பார்வையில் தான் பேச நினைத்ததைத் தைரியத்துடன் பேசினான்.

''ஐயா, தங்களை வெகு நாள் கழித்துப் பார்ப்பதிலும் எனக்குப் பெரும் மகிழ்ச்சிதான். ஆனால், தாங்கள் கூறிய பணியை நிறைவேற்றி விட்டேன் என்று என்னால் சொல்ல முடியவில்லை. என்னென்னவோ மனக் கோட்டை கட்டிக்கொண்டு கோடிக்கு யாத்திரை கிளம்பினோம். எப்படியோ, எங்கள் மனதைப் படித்து விட்டது போலப் பாண்டிய நாட்டுத் துரோகிகள் பெரும் எண்ணிக்கையில் வந்து விட்டனர். அதனால் போரில் அவர்களை கடுபடுத்த முடியவில்லை. படைகளின் பலத்தைப் பற்றிக் கவலைப் படாமல் போராட வேண்டும் என்பது தமிழ் வீரனின் கடமை என்று அறிந்தும் தவறிவிட்டோம்'' என்றான்.

அதற்கு மேல் அவன் ஏதும் சொல்லவில்லை. பிரதமரிடம் காட்டில் இவர்களுடைய மரத்தை ரவிதாசன் தேர்ந்தெடுத்ததைச் சொல்லியிருந்தால் அவர் உடனே பதில் அளித்திருப்பார். ''நீர் பொய் உரைக்கிறீர், இல்லையென்றால் உம் கண்கள் உம்மிடம் பொய் உரைத்து விட்டன'' என்று அவர் முகத்தில் இருந்த புன்னகை மாறவேயில்லை எனப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தான்.

''எனக்கு ஒரு தனிப்பட்ட வருத்தமும் உண்டு. இனி என் திறமையைக் காட்டுவதற்கு இதைக் காட்டிலும் சிறந்த சபையும் சந்தர்ப்பமும் எங்கே கிடைக்கப் போகிறது?'' என்றும் கூறினான்.

அடியானுக்குத் திகைப்பு. 'இவ்வளவு பணிவாகப் பேசுகிறானே இவன்!'

அநிருத்தர் மாறனைப் பார்த்து உருக்கமாய்ப் பேசினார் ''அது போகட்டும், இளவரசே. உம்மைப் போல வீரர்களுக்கு வாய்ப்புகள் வந்து கொண்டேதான் இருக்கும்.''

மேலும் தொடர்ந்தார் ''சம்புவராயர் குலம் இதுவரைக்கும் செய்த சேவைக்கெல்லாம் ஈடாகக் கூடியது ஏதும் இல்லை இந்த நாட்டில் என்று சக்கரவர்த்தி கவலை கொள்கிறார். நீர் வேறு எங்களை இன்னமும் கடன்காரர்களாய் ஆக்கப் பார்க்கிறீர் என்று தான் பாண்டியர்கள் அப்படிச் செய்தார்களோ என்னவோ?''

மாறன் கண்களில் நீர் ததும்பியது. ஏன் அடிமை போல இந்த வைணவன் அநிருத்தரிடம் சேவகம் செய்கிறான், ஏன் தன் குலத்துக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட பயங்கரமான வேலை களைச் செய்கிறான் என்று மாறனுக்கு இப்போது புரிந்தது.

அடியான் மனதுக்குள் நினைத்துக் கொண்டான். 'அவ்வளவு தான். மாறன் விழுந்து விட்டான். அடுத்து மாறன் 'என்னைத் தாங்கள் அழைத்து வரும்படி சொன்ன காரணம் வேறொன்றும் இல்லையா? நான் உங்களுக்குச் செய்யக்கூடிய சேவை வேறொன்றும் இல்லையா? அப்படி ஏதாவது இருந்தால் உடனே சொல்லுங்கள்' என்று மன்றாடுவதுதான் பாக்கி. இனி ரவிதாசன் கடம்பூர்க் கோட்டையின் வாசலில் தலை கீழாக நின்று தவம் செய்தாலும் இவனிடம் ஒன்றும் பலிக்காது.'

பிரதமர் தொடர்ந்தார், ''உமக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றும் இல்லை. ஆனால், இந்த வயதான பிராமணனது விருப்பம் ஒன்றுதான். சோழர் சாம்ராஜ்ஜியம் அதன் பூரண வளர்ச்சியை அடையும் காலம் வந்து விட்டது. ஆனால், அதன் பலனான வளமையையும், அமைதியையும் குடிமக்கள் அனுபவிக்க முடியா மல் ஒரு கொலைகாரக் கும்பல் ஆட்டம் போடுவது வருந்தத் தக்கது. இராஜ்யத்துக்கு எதிர்பாராத ஆபத்துகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. மறைமுகப் போர் உச்சநிலை அடைந்து விட்டது. அதில், இளவரசே! நீர் சோழ மன்னர் அருகே நின்று தோளோடு தோள் போரிட வேண்டும்.''

மாறன் பேசினான் ''அப்படியே செய்கிறேன், ஐயா. இந்த தேசத்துக்கு என்னால் ஏதோ நல்லது நடக்கப் போகிறது என்று

என்றோ ஏற்பட்ட ஆவல் இன்று வரையில் வளர்ந்து கொண்டே தான் இருக்கிறது.''

அநிருத்தர் பதில் அளித்தார். ''உங்களுடைய ஆவல் நிறை வேறும் காலம் நெருங்கி விட்டது. வெகு சீக்கிரத்தில் உங்கள் மனோரதம் நிறைவேறும்!'' என்றார்.

''அது என்னுடைய பாக்கியம்தான். நீங்கள் உத்தரவு போடுவது தான் தாமதம். என்ன அபாயம் வந்தாலும் பின்வாங்காமல் காரியத்தை முடித்துக் கொண்டு வருகிறேன்'' என்றான் இளம் சம்புவராயன்.

பிரதமர் எழுந்தார். சந்திப்பு முடிந்தது என அறிந்து இருவரும் கிளம்பினார்கள்.

வணங்கிவிட்டு வெளியில் சென்ற அடியானிடமும் மாறனிட மும் பிரதமர், ''நீங்கள் இருவரும் சில நாட்கள் தஞ்சையில் இருக்கும்படி நேரும். உங்கள் தாய் தந்தைக்குச் செய்தி சொல்லி அனுப்பி விடுங்கள். இளவரசருக்கு இங்கு ஒரு வீடு இருக்கிறது என நினைக்கிறேன்'' என்று தெரியாதவர் போலக் குரலை இழுத்தார்.

''அந்த வீட்டில் எவ்வளவு ஜன்னல் இருக்கிறது என்று கூட உமக்குத் தெரியும்!'' என்று முணுமுணுத்தான் அடியான்.

''என்ன சொன்னாய், திருமலை?'' என்று அவனை நோக்கித் திரும்பி வினவினார் பிரதமர்.

''ஒன்றும் இல்லை, ஐயா!'' என அவசரமாகத் தலையை அசைத்தான் அடியான். அநிருத்தர் தொடர்ந்தார்.

''விரைவில் அடுத்த அரசாங்க வேலை உங்கள் இருவருக்கும் வரும்.''

மாறன் வெளியில் சென்றபோது, அடியானைத் தன் கண்ணின் சமிக்ஞையினால் நிற்கும்படி கூறினார் அநிருத்தர்.

''மாறனைப் பொறுத்தவரையில் அவன் உண்மையில் எப்படிப்பட்டவன் என ஆராய முயற்சிக்க வேண்டும். அது உன் பொறுப்பு. ஆகையால் அவனை உன் பார்வையிலிருந்து தவற விட்டுவிடக் கூடாது.''

முகம் சுளித்த அடியானைப் பார்த்து, ''இந்த வேலையைக் குறைத்து எடைபோடாதே, திருமலை. சோழரெனும் சக்கரம் சுற்றினால்தான் தமிழகத் தேர் நகரும். சம்புவராயர் போன்ற அரசர்கள் இந்தச் சக்கரத்தின் அச்சாணி போல. அவர்கள் இல்லா மல் நாம் எப்படிச் சுற்ற முடியும்? மாறன் பொதுவாழ்விலிருந்

ஒதுங்குவதை நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. எல்லாவற்றிலும் அவனது பங்கேற்பு அவசியம். சிறந்த வீரனாய் மட்டுமல்ல; பெரும் தலைவனாய் வரவும் அவனுக்குத் திறமையுள்ளது'' என்றார்.

''தங்கள் அளவற்ற அன்பு அவனை மாற்றி விட்டது என நினைக்கிறேன், ஐயா!'' என்றான் அடியான் ஒரு பரிகாசம் நிறைந்த குரலில். தன் தேன் குழைந்த குரலில் மாறனை மயக்கிவிட்டாரே பிரதமர் என்று அவனுக்கு ஆச்சரியம்.

''அப்படியா? இவ்வளவு நாள் கடந்து விட்டதே என்று பல முறை வருந்தியிருக்கிறேன்'' என்று வருத்தப்பட்டார் பிரதமர்.

மேலும் தொடர்ந்தார், ''கசப்புகளைத் தவிர்க்கக் கடம்பூரில் இருந்துவிட்டான் அவன். தன் குலத்தின் தேய்பிறையைத் தினந்தோறும் கண்டு விட்டான். நல்ல காலத்தில் தங்களைச் சுற்றித் திரிந்த நண்பர்களெல்லாம் ஆலங்கட்டி மழை போலக் கரைந்து விட்டனர். இவனை விட வீரத்தில் குறைந்தவரெல்லாம் உலகம் அதிரும்படி சாதனைகள் புரியும்போது, சபையில் ஒரு பார்வையாளராக இருந்து விட்டான். அந்த அனுபவங்களை நாம் அவனுக்குக் கொடுக்கவில்லை என்றால் பாண்டியரிடம் போய்ச் சேர்ந்து விடுவான், அது அவனுக்கும், இந்த சாம்ராஜ்யத்துக்கும் பேரிழப்பாய் ஆகிவிடும்.''

விட்டால் இரவு முழுவதும் பேசிக் கொண்டே இருப்பார் என அறிந்த அடியான் அவசரமாக வணங்கிவிட்டு வெளியே காத்திருந்த மாறனை நோக்கி நகர்ந்தான். அவனுக்குப் படுக்கையில் சாய்ந்து ஒரு வாரமாக நடந்தவற்றை அலச வேண்டும் போலிருந்தது. சிறிது நேரம் பேச்சுக்கு விலக்கு அளிக்க வேண்டும். ஆற அமர நடந்தவற்றை நினைத்துப் பார்க்கவேண்டும்.

இருவருமாய் விருந்தினர் மாளிகைக்குத் திரும்பும்போது வழி நெடுகிலும் தரை ஈரமாயிருந்தது. ஆங்காங்கே பள்ளமான இடங்களில் நீர் தேங்கியிருந்தது. மரங்கள் பனிச்சென்று இருந்தன. காற்றும் குளிர்ந்து வந்தது. சற்றுமுன் இங்கெல்லாம் மழை பெய்திருக்கிறது என்று தெரிந்து கொண்டனர். திரும்பி நடக்கும் போது இருவரும் அமைதியாகவே நடந்தார்கள், அவரவர் எண்ணங்களில் மூழ்கி.

அடியான் மனதில், ''ரவிதாசன் கடம்பூர் சென்றது உண்மையாய் இருக்குமோ?'' என்ற கேள்விதான் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது. அந்தச் செய்தி அவனை முதலில் தூக்கி வாரிப்

போட்டது. அது உண்மைதான் என்பது அது பிரதமர் வாயிலிருந்து வந்ததால் ஐயமறத் தெரிந்தது. அடியானுக்கு ஒரு ஆதங்கம்.

நம்மை ஏமாற்றி விட்டானே இந்த மாறன் என்ற நினைவும் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. ரவிதாசன் தன்னை வந்து பார்த்தான் என்று நம்மிடம் இவன் சொல்லவே இல்லையே? ஆனால், நேற்று மாலை மாறன் மீது வைத்திருந்த அபிப்பிராயத்துக்கு இப்போதைய அபிப்பிராயம் நேர்மாறாயிருந்தது.

'நேற்று அவன் ஏதும் அறியாச் சிறுபிள்ளை என்றுதான் நினைத்தோம். இவனுக்குப் பதிலாக இருபது பேர் இருந்திருந்தால் கோடிக்கரையில் ஜயம் நமக்கே என்று கூட நினைத்தோம். இவன் பெரிய ஆளாய் இருப்பான் போலிருக்கிறதே. நம்மையே ஏமாற்றி விட்டானே!'

மனதின் இன்னும் ஒரு பாகம் கூறியது, 'நாம் கேள்வி கேட்டு அவன் பொய் சொல்லவில்லையே. நம்முடைய மதிதான் நம்மை ஏமாற்றிவிட்டது. அவனல்ல.'

அடியானின் மனம் இப்படித் தத்தளிக்க, மாறனுக்கோ விருந்தினர் மாளிகைக்குத் திரும்பியபோது ஒரே சந்தோஷம்தான். அவன் நடையில் அவனது ஆனந்தம் தெரிந்தது. அவன் தோல்வி அடைந்தாலும், அவன் தஞ்சையில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தான். அந்தப் பரந்து விரிந்த சாம்ராஜ்யத்தில், அவன் ஒரு அணு அளவாய் இருந்தாலும், அதில் ஒரு பாகமாகிவிட்டான்.

அதுமட்டுமல்ல. கடம்பூருக்குச் செல்லவேண்டும் என்று திரும்பத் திரும்ப அவன் சொல்லிக் கொண்டிருந்தாலும் தஞ்சையை விட்டுச் செல்ல அவனது உள்மனம் சம்மதிக்கவில்லை. அந்தப் பெண் இருக்கும் ஊரில் வாழ்வது எவ்வளவு சுகமாய் இருக்கும்! அவள் நடந்த தெருக்களில் நடப்பது எவ்வளவு சுகம்! இனிமேல் அவள் பார்த்த காட்சிகளைத் தினந்தோறும் இவனும் ரசித்து வாழலாம்.

பழுவூர் அரண்மனையில் பார்த்த ஒப்பில்லாத சௌந்தர்யத்தோடு இருந்த அந்தப் பெண்ணின் நினைவு இடையிடையே வந்து கொண்டிருந்தது. அவளுடைய முகம் அவன் மனதில் நன்கு பதிந்து இருந்தது. மாறனும் அவளுடன் ஆங்காங்கே பார்த்தபடி வந்தான்.

வழி நெடுகிலும் ஆங்காங்கே ஒரு தேவ கன்னிகையின் முகம் போலத் தெரிந்தது. அந்தப் பெண் இளநகை புரிந்தவண்ணமாக மாறனுடைய முகத்தைப் பார்த்து நின்றாள். ஆனால், உற்றுப் பார்த்தால் மறைந்தாள். மாறன் முகத்தில் ஏமாற்றம். ஆனால்,

'நாம்தான் சில நாள் இங்கு தங்கப் போகிறோமே' என்று ஆறுதல் சொல்லிக் கொண்டான்

இன்னமும் ஒரு தீர்மானத்துக்கும் அவன் வரவில்லை. 'தன் அக்காவுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த வீரன்' என்று தன்னை நினைத்திருக்கும் அந்தப் பெண்ணிடம் என்ன சொல்லிப் புரிய வைப்பது? தற்செயலாகத்தான் அவன் தமக்கையைக் கொல்ல வில்லை என்று கூறுவதா? இல்லை, அதற்காக அவள் செலுத்தும் நன்றியை ஏற்றுக்கொண்டு அவன் மேல் அவள் வைத்திருக்கும் நன்மதிப்பைக் கூட்டிக் கொள்வதா?

அவன் நினைத்தது போல மாளிகைக்குள் நுழைந்தவுடன் மல்லிகை வாசம். ஊழியன் ஓடிவந்து, "ஐயா! உம்மைத் தேடி ஒரு பெண் வந்தார். வெகு நேரம் காத்திருந்தார். இப்போதுதான் சென்றார். ஓரிரு நாட்களில் வந்து உங்களைப் பார்க்கிறேன் என்றார்'' என்றான்.

மாறனுக்கு ஆத்திரம். ஆனால், அதுவும் ஒரு வழியில் நல்லது தான். கோடியில் நடந்தவற்றைப் பற்றி அவளிடம் எவ்வளவு கூறலாம், எவ்வளவு மறைக்கலாம் என முடிவு செய்ய அவனுக்கு அவகாசம் கிடைத்ததும் நல்லதுதானே.

விருந்தினர் மாளிகையில் சில காலம் தங்கப் போவதாகவும், அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தான். மதியம் இருவரும் சாப்பிடவில்லை. அதனால் பணியாள் செய்து வந்த பலகாரத்தை ஒரு வெட்டு வெட்டினார்கள்.

வீடு மிகவும் குளிர்ச்சியாகவும் அமைதியாகவும் இருந்தது. நகரத் தின் சப்தங்கள் வெகு தூரத்தில் இருப்பது போலத் தோன்றின. இரவு வந்ததால் அப்படி இருந்திருக்கலாம் அல்லது கட்டடத்தை வடிவமைத்தவர் வேண்டுமென்றே அப்படிச் செய்திருக்கலாம்.

இவ்விடத்தில் ஓய்வு எடுக்கத் தடை ஏதும் இருக்காது என நினைக்கத் தோன்றியது. அடுத்தடுத்த பாய்களில் படுத்திருந்தபடி இருவரும் நித்திரைக்குக் காத்திருந்தனர்.

பாயின் மீது தலையணைகளை அடுக்கி வைத்து, அவன் கும்பிடும் பாற்கடல்வாசியைப் போலவே ஒய்யாரமாகச் சாய்ந் திருந்தான் அடியான்.

அடியானிடம் மாறன் கூறினான், "உம்முடன் பழகிய ஆரம்ப காலத்தில் உமது வாழ்க்கையுடன் என்னுடையதைப் பண்ட மாற்றம் செய்து கொள்ளலாம் என்று கூடத் தோன்றும். நினைத்

தால் வேலை. இல்லையென்றால் யாத்திரை. உமது வாழ்க்கையே உமது கையில்'' என்றான்.

''என் கதையைக் கேட்டால் உம்முடன் நான்தான் இடம் மாற்றிக்கொள்ள வேண்டும் என நினைப்பீர்கள்'' என்றான் அடியான். ''இளவரசே! நமது கடந்த கால நினைவுகளே நாம் சுமக்கும் பாரம்.''

''அப்படியென்றால் என் முதுகு கூனிப் போயிருக்க வேண்டும்'' என்றான் மாறன்.

''அப்படியென்றால் உலகமே பாரம் சுமக்க முடியாமல் வளைந்த முதுகுடன்தான் இருக்கும்!'' என்று அடியான் சொன்ன உடன், மாறன் விவரிக்கத் தொடங்கினான். ''ஆதித்த கரிகாலர் எங்கள் நாட்டில் மாண்டபின், எங்களைப் பற்றி அநாவசியமாக யாரேனும் பேசினால், அப்படிப்பட்ட துஷ்டர்களின் நாக்கைத் துண்டித்துப் புத்தி கற்பிப்பது என முடிவு செய்தேன். ஆனால், நாடே நாவின்றி ஊமையாய்ப் போயிருக்கும். எங்கள் நாட்டின் மேல் அவ்வளவு வெறுப்பு. பின்னர் யோசனை செய்து பார்க்கும் போது அதுவும் நியாயம்தான் என்று தோன்றுகியது. நாட்டின் பட்டத்து இளவரசர் மர்மமான முறையில் ஒரு இடத்தில் மாண்டு போனால், பின் ஊரார் வாயை அடைக்கவா முடியும்? ஒதுங்கி இருப்பதே மேல் என்று இருந்துவிட்டேன்.''

''கரிகாலன் அற்ப ஆயுள் படைத்த மனிதன். பட்டத்துக்குப் பாத்தியதை என்பது சாதாரண விஷயம் அல்ல. அது அபாயகர மான விஷயம் என்று தெரிந்துதான் அதை ஏற்றுக் கொண்டான் அவன். அதில் உம்மை ஏன் குற்றம் சொல்கிறார்கள்?'' என்றான் அடியான்.

''அதை விதி என்று சொல்லி முடிவு கட்டிவிடவும் முடியாது. எங்கள் பங்கும் இருந்தது.'' உண்மையை மாறன் ஒப்புக் கொண்டதை அடியான் வியப்போடு கேட்டிருந்தான்.

''வசனம் எழுதாத ஒரு நாடகத்தில் நாங்கள் எல்லாரும் நடித்துக் கொண்டிருந்தோம், அதை இயக்கியவள் நந்தினி எனத் தெரியாமல்!'' என்றான் மாறன்.

''இளவரசுக்கு ஒரு நிருபம் கொடுக்கிறேன் என்று என்னிடம் தான் நந்தினி கொடுத்தாள். ஆதித்தனிடம் நான்தான் அதை எடுத்துச் சென்றேன். எனது நிருபத்தைப் படித்துக் கடம்பூருக்கு வந்தவர், திரும்பிக் கோட்டையை விட்டு வெளியே பிணமாய்த் தான் வந்தார். அபாயத்தின் இருப்பிடம் கடம்பூர் என்று தெரிந்தும் கூட அந்தச் சுத்த வீரன் இறந்து போனான்.''

அடியான் சொன்னான்; "விட்டில் பூச்சி மரணம் என்று தெரிந்தும் தீயைச் சுற்றி வருவது போல, மதி நுட்பம் நிறைந்தவர்கள் என நாம் நினைத்தவர்களின் புத்தியும் கெட்டுப் போகும்."

"எது எப்படியோ? உமக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். எனக்கு ராஜசேவையில் இவ்வளவு சுகம் இருப்பது மறந்தே போயிருந்தது. நீரே அதை நினைவு படுத்தினீர்" என்றான் மாறன்.

அடியான் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. "எல்லாம் அந்த உலகளந்த பெருமானின் செயல்தான்" என்றான்.

அப்போது கூட மாறன் தன் குறும்பை விடுவதாய் இல்லை. "எனக்கென்னவோ அது அடிமுடி காண முடியாத சிவனின் பெரும் கருணையினால் இருக்கும் எனத் தான் தோன்றுகிறது!" என்று கூறினான்.

திடீரென இந்தப் பேச்சை மாற்றி அடியான் கேட்டான். "வந்தியத் தேவன் இப்போது எப்படி இருக்கிறானோ?"

அவனுக்கு நன்கு தெரியும். அருள் மொழி வர்மர் கடல் கடந்து சென்று கடல் கொள்ளையரைப் போர் புரிந்து அழிப்பதற்காகச் சென்றிருந்தார் என்று. தமிழகத்தின் வர்த்தகத்தை மட்டும் காக்க அவர் செல்லவில்லை. அதன் தன்மானத்தையும், வீரப் பண்பையும் நிலை நாட்டுவதற்காகவும்தான். அவருடன் சென்றிருந்தான் வந்தியத் தேவன்.

வந்தியத் தேவன் மீது மைத்துனர் அளவற்ற வாஞ்சை வைத்திருந்தார். எங்கு சென்றாலும் அவனையும் அழைத்துத்தான் செல்வார். சூரியனுடைய பார்வையில் இருந்த மற்றவை யாவும் தாங்களும் ஒளி பெற்றுத் திகழ்வது போல, அருள் மொழிவர்மரின் பார்வை பட்ட எல்லாருமே புகழ் பெற்றனர். அவரை எதிர்த்த அனைவரும் படு நாசமடைந்தனர். அது அவரது உயர்ந்த உள்ளத்திற்காக வானோர்கள் கொடுத்த பரிசு.

மாறனின் முகம் சட்டென மாறியது. எங்கோ இருக்கும் வந்தியத் தேவனைப் பற்றி அடிக்கடி அடியான் நினைவுகூர்வதைப் பொறாமையுடன் பார்த்தான்.

சிவந்த முகத்துடன், "அவனுக்கு என்ன? அருகில் நட்புக்கு மன்னர் மன்னன். அவன் வேண்டியபடி போர்க்களத்தில் வேலை. வீட்டில் தனக்காகக் ஆரத்தித் தட்டுடன் காத்திருக்கும் பூவுலகுத் தேவதை. நிச்சயமாகச் சரித்திரத்திலும், இலக்கியத்திலும் ஒரு நிரந்தர இடம். அவனுக்கு என்ன? அவன் இப்போது மிதந்து கொண்டிருப்பான்" என்றான்.

உண்மையில் வந்தியத் தேவன் மிதந்து கொண்டுதான் இருந்தான். ஆனால், அவன் மிதந்தது உப்பு நீரில். நிசப்தமான இரவில் சற்றுத் தூரத்தில், அவர்களது கப்பல் கடலுக்குள் மூழ்கும்போது தனது இறுதி மூச்சை நீர்க் குமிழிகளாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

கடற் கொள்ளையர் தெரிந்தோ தெரியாமலோ அருள் மொழி வர்மரின் கப்பல் மீது மோதி விட்டார்கள். அதுவும் இரண்டாய்ப் பிளவு பட்டது.

இளவரசரும் வந்தியத் தேவனும் தனியே கடலில் மிதந்திருக்க, சூழ்ந்திருக்கும் இருளில் இதர கப்பல்களில் இருந்த மற்றவர்களால் இவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா என்பதே சந்தேகம். நாலாபுறமும் கரிய இருள் சூழ்ந்து இருந்தது.

பேரலைகள் அவர்கள் இருவரையும் பந்து போலத் தூக்கி எறிந்து வேடிக்கை பார்த்தன.



அத்தியாயம் இருபத்தாறு
சாகரத்திலா நமக்கு சமாதி?

தன் ஆருயிர் மனைவி குந்தவையின் கன்னத்தை ஒரு விரலை நீட்டித் தொட்டுப் பார்த்தான், வந்தியத் தேவன். என்ன அதிசயம்! மலரின் இதழ் போன்றது, பனித் துளியில் நனைந்தது போல ஈரமாய் இருந்தது. சோகம் தோய்ந்த அவள் கண்களிலும் நீர் பெருக்கெடுத்தது. அவன் இதயத்துக்குள் ஈட்டியை விட்டு ஒரு [illegible] திருப்பியது போலிருந்தது வந்திய தேவனுக்கு.

"ஏன் அழுகிறாய், என் ஆருயிர்க் கண்ணே?" என்றான். திருமணமான நாளிலிருந்து அவள் கண்ணீர் சிந்தி அவன் பார்த்ததே இல்லை. ஏன், பெற்ற வீட்டிலிருந்து விடைபெற்று வந்தபோதுகூடச் சிரித்துக் கொண்டே வந்தவள், குந்தவை.

மறுமொழி பேசவில்லை அவன் ஆசை மனைவி. அழுது கொண்டே இருந்தாள். அவளைச் சமாதானப் படுத்த வேண்டுமே என்ற எண்ணத்துடன் கட்டி அணைத்து முத்தமிட்டான் - அவள் கன்னத்தில்.

அவளது கண்ணீர் இவன் உதட்டில் உப்பாய்க் கரித்தது. சட்டெனப் பின்வாங்கினான். உடனே வந்தியத் தேவன் துயில் எழுந்தான். கனவும் கலைந்தது. ஆனால், இதழ்களில் மட்டும் உப்பு இன்னும் கரித்தது.

ஆகா. அதுதான் விஷயமா? அலைகளில் ஒன்று மட்டும் சின்னக் குழந்தை போலத் தாவிக் குதித்து அவன் முகத்தில் முத்தமிட்டிருக்க வேண்டும். அது ஆசை முத்தமல்ல. அபாய முத்தம்.

கப்பலிலிருந்து உடைந்து விழுந்திருந்த ஒரு மரத் துண்டை மிதவையாய்ப் பற்றிக் கொண்டு இருவரும் மிதந்து கொண்டிருந்தனர். அதைப் பிடித்தபடி மிதந்து கால்களை மட்டும் அடித்துக் கொண்டிருந்தனர்.

திடுக்கிட்டு இவன் எழுந்ததைப் பார்த்த பொன்னியின் செல்வர் ஒரு புன்முறுவலோடு, ''என்ன கனவா? தமக்கையார் கனவில் வந்தாரா?'' என்று குறும்பாய்க் கேட்டார். சரியாகவும் கேட்டார்.

கனவு கலைந்ததும் சுற்றிப் பார்த்தான் வந்தியத் தேவன். இரவில் இருந்த கருமையில்லை. விடிந்து கொண்டிருந்தது.

ஆனால், அக்கம் பக்கத்தில் நீல நிறம். மேலும் கீழும் நீல நிறம். எங்கும் அதே நீல நிறம்தான். வேறு ஏதும் இல்லை.

நீச்சல் தெரிந்தாலும் ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் இருந்தன. திசை தெரியாததால் எந்தப் பக்கம் நோக்கி நகர வேண்டும் என்று முதலில் இருவருக்கும் தெரியவில்லை.

நாட்டுக்கு உள்ளது போலக் கடலுக்கு வரைபடம் வகுக்கப்படவில்லையே! அப்படி இருந்திருந்தாலும் அது அவர்களுடைய கப்பலுடன் கடலுக்குள் சென்றிருக்கும்.

எந்தப் பக்கம் நிலம் இருக்குமென்று கண்டறிய முடியாமல் தவித்தனர். சூரியன் வரப் போகிறது என்று அறிவித்து வானத்தில் ஒரு பகுதி வெளுத்தது. அது தான் கிழக்கு என்று முடிவு கட்டி அதன் எதிர்த் திசையான மேற்கு நோக்கி நகர்ந்தனர் இருவரும்.

கடற் கொள்ளையரிடம் போர் புரியப் பிடிவாதம் பிடித்து, இருவரின் புது மனைவியரிடமும் போராடிய பின் வந்தவர்கள் இவர்கள். பஞ்சணையில் சாய்ந்து மனைவியர் செய்யும் பணிவிடைகளை அனுபவிக்க வேண்டியவர்கள், இன்று திக்குத் திசை தெரியாமல் கடலில் மிதந்து கொண்டிருந்தனர்.

உடலும் நிழலும் போலக் கணவரோடு இணை பிரியாமல் இருக்க வேண்டுமென்று நினைத்த காதலர்கள் இப்படிச்

சென்றதில், அந்த இரண்டு தேவகன்னியருக்கும் வருத்தம்தான். ஆனால், என்ன செய்வது?

வீரர்களை வேண்டுமென்று விரும்பிக் கட்டிக் கொண்டு விட்டு, வீட்டில் பெண்டிர் போல இருக்க வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்த முடியுமா என்ன? 'உம்மைக் கடலுக்கு அனுப்ப முடியாது. உங்களை விட்டுக் கண நேரமும் என்னால் பிரிந்திருக்க இயலாது!' என்று சொல்லத்தான் முடியுமா?

ஆனால் இப்போது பொன்னியின் செல்வருடைய இரண்டு குழந்தைகளை வளர்ப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தனர். அந்த இரு பெண்களும். ராஜேந்திரனும், குட்டிக் குந்தவையும் அவர்களுடைய அன்பில் மூழ்கித் திளைத்துத் திண்டாடிக் கொண்டிருந்தனர்.

நீரில் மிதப்பது என்பது வந்தியத் தேவனுக்குப் புது அனுபவமாய்த்தான் இருந்தது. இதற்கு முன் பல முறை தனக்கு நீரில் கண்டம் என நினைக்கும் அளவுக்கு அகப்பட்டுக் கொண்டிருந்தாலும், இவ்வளவு நேரம் நீரில் அவன் இதுவரை மிதந்ததில்லை.

'தான் ஏறும் கப்பல்தானா கடலுக்குள் கவிழ வேண்டும்? தான் செல்லும் பிரயாணத்தில்தானா அபாயம் நிறைந்திருக்க வேண்டும்? தனக்கு ஏற்படும் அனுபவங்கள் இவ்வளவு அதிசயமாக உள்ளனவே' என நேற்று இரவு முதல் தனக்குள் பல முறை கேட்டுக் கொண்டிருக்கிறான். ஏனென்றால் முன்பொரு கால கட்டத்தில் அவனுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவன் வாழ்க்கையை மட்டும் மாற்றவில்லை; நாட்டையே மாற்றி விட்டன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு எட்டு மாதக் காலம் அவன் சந்தித்த பல தரப்பட்ட அனுபவங்களைப் பிற்கால அறிஞர்கள் கதையாய்க் கூட எழுதலாம். அக்கால கட்டத்தில் அவன் பல முறை நீரில் அகப்பட்டிருந்தான். ஏன், புதைமண்ணில் கூட அகப்பட்டிருந்தான். ஆறு, கடல், ஏரி என்று எதையும் அவன் விதி அவனை விட்டு வைக்கவில்லை.

ஈழ யாத்திரை போனதைத் தவிர, அந்த வீரன் கடல் பிரயாணம் அதிகமாகச் செய்ததில்லை. பிரயாணம் செய்ய ஆசைப்பட்டதும் கிடையாது. அவனுக்குக் கடல் என்றால் பயம். ஈழத்துக்குச் செல்வதென்றால் இரண்டு மூன்று மணி நேரத்துக்கு மேல் நிலத்தைப் பார்க்காமல் இருக்க முடியாது. ஏதாவது தீவு ஒன்று கப்பலின் ஒரு பக்கத்தில் வந்து கொண்டே இருக்கும். நிலத்தை விட்டு வெகு தூரம் செல்லவில்லை என்ற மன நிறைவோடே பயணிக்கலாம். ஆனால், இப்போது அப்படியே இல்லை.

நேற்று இரவு என்ன நடந்தது என்று நினைத்துப் பார்த்தான். கடலின் அலைகள் இருவரும் சென்ற கப்பல்களைக் குழந்தையைத் தாலாட்டுவது போலத் தாலாட்டின. அந்த ஆனந்தத்தில் பலரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென்று ஒரு குலுக்கல். சிறிதும் எதிர்பார்க்காத நேரத்தில் ஏதோ ஒன்று வந்து மோதியது, கப்பலின் மேல். கடலுக்குள் பெரிய மீன்கள் இருக்குமென்றும் அவை மனித மாமிசப் பிரியர்கள் என்றும் கப்பல் மாலுமிகள் அடிக்கடி பேசிக் கொள்வார்கள். அதுவாய் இருக்குமோ என்று வந்தியத் தேவன் வருந்த, வந்தியத் தேவனின் கையைப் பிடித்துக் கொண்டு, அவசரமாய் அறையின் வெளியில் ஓடி வந்தார், பொன்னியின் செல்வர். பொன்னியின் செல்வருக்கு நன்கு தெரியும். அது கடல் கொள்ளையரின் வேலைதான் என்று.

இரும்புக் கவசம் பொருத்தப்பட்ட கப்பல்கள் கொள்ளையரிடம் உண்டு. அதைக் கொண்டு மரக் கலத்தின் மீது மோதினால், அது பிளவு படும். ஆனால், அதை அவர்கள் கொள்ளையடிக்கப் போகும் கப்பல்களின் மீது பிரயோகிக்க மாட்டார்கள். படகில் உள்ள செல்வமெல்லாம் வருணனின் வாய்க்குள் போனால் அவர்களுக்கு என்ன பயன்? தங்களைப் பிடிக்க அவ்வப்போது வரும் அரசாங்கக் கப்பல்களின் மீது இவற்றைக் கொண்டு இருளில் மோதுவார்கள்.

ஒரு கூட்டமாய் வரும் போர்க் கப்பல்கள் ஒன்றிரண்டின் மீது இப்படி மோதினால் அந்தக் கப்பல்களில் பிரயாணம் செய்வோர் கொந்தளிக்கும் கடலில் விழுந்து தவிப்பார்கள். அவர்களைக் காப்பற்றவே மற்றவர்களுக்கு நேரமாகும். அதில் இவர்கள் தடையின்றித் தப்பிப்பார்கள்.

அதே மோதல்தான் இப்போது நடந்திருந்தது. மரக்கலங்கள் என்ன நிலமா, ஒன்றும் ஆகாமல் இருக்க. நேற்று இரவு கப்பல் உடைந்தது. சடசடவென்று மரம் முறியும் சப்தம் கேட்ட பின், நீர் திரள் திரளாகக் கப்பலுக்குள் புகுந்தது. சரியான நேரத்தில் இருவரு மாகக் கடலுக்குள் குதித்தார்கள். கடலின் மறைமுக நீரோட்டம் மற்றவர்களை யெல்லாம் வெவ்வேறு இடங்களுக்கு இழுத்துச் சென்று விட்டது போலும். இல்லை, எல்லாரும் வருணனின் வயிற்றினுள் சென்று விட்டார்களோ? இப்போது அடுத்த நாள் விடியப் போகிறது.

சுற்று முற்றும் பார்த்தான், வந்தியத் தேவன். எந்த வித அடையாளமும் தெரியவில்லை. அவனது கண்கள் நாலாபுறமும் சுற்றிய

பின் இளவரசர் முகத்தை உற்றுப் பார்த்தன. "நிலம் எவ்வளவு தூரம்?" என்று அலுப்புத் தட்டிய குரலில் வந்தியத் தேவன் கேட்டான்.

"நிலம்தானே வேண்டும், வாணர் குலக் கொழுந்தே! முத்துக் களும் பவளமும் படர்ந்து, மங்கையின் புன்னகை போலக் காட்சி தரும் நிலம் இங்கிருந்து வெறும் இரண்டு காத தூரம்தான்" என்றார் பொன்னியின் செல்வர்.

அதுவரை உள்ளம் பதைபதைத்து மிதந்து கொண்டிருந்த வாணர் குல வீரன் மனதில் ஒரு புதிய நம்பிக்கை உதித்தது. "எங்கே? எங்கே?" என்றான் வந்தியத் தேவன், நாலாபுறமும் ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்து.

"சுற்றிப் பார்த்தால் எப்படித் தெரியும்? நேர் கீழே இருக்கிறது. உங்கள் கால்களுக்கு அடியில்" என்று சொல்லிச் சிரித்தார், பொன்னியின் செல்வர்.

அலைகடல் ஆழத்தில் இருக்கும் தரையைக் கூறுகிறார் என்று புரிந்தவுடன் கோபமடைந்தான் வந்தியத் தேவன். முடிவில்லாத கடல் நடுவே மிதந்து கொண்டு கேலி செய்கிறார் இளவரசர். இந்த நிலையிலும் அவர் குணம் மாறவில்லையே! இவரை எதுவுமே பாதிக்காதா?

பல காலம் இவருடன் தனியாகக் காலம் கழிக்க வேண்டும் என்று வந்தியத் தேவனுக்கு ஆசை. இவன் ஆசையை நிறை வேற்றும் வழியாக இப்படி நடந்தது போலும். அதை அவரிடமே சொல்லிவிட்டான்.

"உம்முடன் சில காலம் கழிக்கலாம் என்று வந்தேன். இப்போது சில ஆண்டுகளாக அது மாறிவிடும் போலிருக்கிறது."

பொன்னியின் செல்வர் சிரித்தார். பின் மௌனமாகவே இருவரும் மிதந்தார்கள். கொஞ்ச நேரத்தில் உச்சி வேளைச் சூரியன் அவர்களை ஒரு கை பார்ப்பது என முடிவு செய்தது. நீர் குளிர்ச்சியாக இருந்தாலும் உப்புக் கலந்திருந்ததால் அது மெல்ல மெல்ல உடம்பில் உள்ள நீரை உறிஞ்ச தொடங்கியது. நாக்கு வறண்டு விட்டது. உப்பு நீரையும் குடிக்க முடியவில்லையே எனப் புலம்பினான், வந்தியத் தேவன். "என்ன கொடுமை, சுற்றிலும் நீர்! ஆனால், ஒரு சொட்டுக் கூடக் குடிப்பதற்கு உகந்தது அல்ல" என்று வேகாந்தும் வேறு பேசத் தொடங்கினான்.

அருள்மொழி வர்மர் தன் வீட்டு மாப்பிள்ளையை அன்புடன் பார்த்தார். ஆயிரம் காலத்து அரச குலத்தின் களை அவன் முகத்தில் தாண்டவம் ஆடியது. கடைசிச் சில ஆண்டுகளில் இவர் சந்தித்த

அனுபவங்களைக் கதையாக எழுதினால் கூட இன்னும் ஓராயிரம் ஆண்டுகள் மக்கள் அதை ரசிப்பார்கள்.

வாணர் குலத்து வீர குமாரனுக்குப் பழுவேட்டரையரும், சகாக்களும் கொடுத்த இடையூறுகள் ஏராளம். ஆனாலும் அதிலிருந்து மீண்டு வந்தான். ஒரு நாள் பாதாளச் சிறையிலும், ஒரு நாள் நடுக்கடலில் மரக்கலத்திலும் இருந்து வந்தான். ஒரு நாள் புதை மண்ணில் காலை விடுவான், ஒரு நாள் எதிரிகளின் சதி ஆலோசனையை ஒட்டுக் கேட்பான். ஒரு பெண்ணுக்காகக் காதலில் உயிரை விடத் தயாராய் இருப்பான். அப்போது, வேறு ஒரு பெண் இவன் மடியில் காதலை நினைத்து உயிர் விடுவாள். வந்தியத் தேவனைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு அவனது செயல்பாடு ஆச்சரியம் அளித்திராது.

அவனுக்கு ஒரு விதப் பித்து என்பதா? அல்லது வெறி என்பதா எனச் சொல்ல இயலாது. ஆனால், இடரைத் தொடர அவன் காட்டிய ஆர்வமும், இடர் அவனைத் துரத்திய வேகமும் மற்றவருக்கு விந்தையாகத்தான் இருந்தது.

வந்தியத் தேவனைப் பார்த்து அருள்மொழி வர்மர் புன்னகை புரிந்தார். வந்தியத் தேவனைக் கண்டால் யாருக்கும் பிரியம் வரும். அரண்மனையில் வளர்ந்த இளவரசர்கள் இருவருக்கும் அவன் மீது அன்பு. பூக்குடலைப் பையனாய் வளர்ந்து இன்று சோழ சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் சக்கரவர்த்திக்கு இவர் மீது உயிர்.

இப்படிப்பட்டவன் பெண்களையும் விட்டு வைக்கவில்லை. இளவரசி குந்தவையை முதல் சந்திப்பில் வீழ்த்தியவன் இவன். பின்பு திருமணமும் புரிந்து கொண்டான். அந்தப் பேதைப் பெண், மாறனின் தங்கை மணிமேகலையின் காதலைச் சம்பாதித்தான். சாகும்போதுகூட இவரைக் காணவே மணிமேகலை துடித்தாள். யாரையும் மயக்கிவிடும் நந்தினிக்குக்கூட வந்தியத் தேவனைக் கண்டால் ஒரு மயக்கம்தான்.

வந்தியத் தேவன், வேண்டுமென்றால் உயர்பதவி வகித்திருக்கலாம். அவனை மாதண்ட நாயகராய் நியமிப்பதைக் கூட யாரும் எதிர்த்திருக்க மாட்டார்கள். இன்று அவன் அரச குடும்ப மாப்பிள்ளை ஆயிற்றே, முன் போல் நாடோடி அல்லவே. பதவி வகித்தபடி புதுக் காதல் மனைவி குந்தவையுடன் சொகுசாக வாழ்க்கை நடத்தி வந்திருக்கலாம். அதையெல்லாம் வேண்டாம் என்று இங்கு நடுக்கடலில் மிதந்து கொண்டிருந்தான்.

வந்தியத்தேவனுக்கு உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் அலை பாய்ந்தன. தன்னுடைய கதி இன்றிரவுக்குள் என்ன ஆகப்

போகிறது? அதுவும் தெரியவில்லை. நீரின் கீழே பெரிய கூரிய பற்கள் கொண்டு யானையையே விழுங்கி விடும் மிருகங்கள் இருக்குமாமே? கப்பலில் இருந்த போது இவற்றைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லையே? இப்போது பயமாக இருக்கிறதே!

ஆனால், அந்த மிருகம் மோப்பம் பிடித்து இங்கு வருவதற்குள் தாகத்தில் செத்து விடுவோம் போலிருக்கிறதே. வர வரத் தொண்டை வேறு வறண்டு போகிறதே. பரவாயில்லை என்று ஒரு வாய் உப்பு நீரைக் குடித்துத் தொலைத்து விட்டான். அது இன்னும் தாகத்தைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்த்தது. பின், வயிற்றையும் கலக்கியது.

ஏதாவது கப்பல் வந்தால் எப்படியிருக்கும்? தப்பித்து விடலாம். கப்பல் மேல் ஏறியவுடன் ஒரு நான்கைந்து குவளைத் தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால், அது கொள்ளையர் கப்பலாயும் இருக்கக் கூடாது. தன் ஈட்டியையும் வாளையும் வருணன் விழுங்கி விட்டான். நிராயுதபாணியாகக் கொள்ளையரிடம் மாட்டிவிடக்கூடாது.

இந்தக் கஷ்டங்களெல்லாம் என்ன, தம்மை மட்டுமா வருத்தும். அவை கடலில் மிதப்பவர் எல்லாருக்கும் பொதுவானவைதானே என்று நினைத்துக் கொண்டு, பொன்னியின் செல்வரும் மிரண்டு போய்த்தான் இருப்பார் என்று அவரைத் திரும்பிப் பார்த்தான் வந்தியத் தேவன்.

ஆனால், என்ன அதிசயம்! அவர் முகத்தில் ஒரு வருத்தம் தோய்ந்த ரேகை கூட ஓடவில்லை. எப்போதும் போலத்தான் இருந்தார். பொன்னியின் செல்வருக்கு நீரில் மிதப்பது பிடித்திருந்தது போல. "உமக்கு எதுவுமே பிடிக்காமல் இருக்காதோ?" என்று வந்தியத் தேவன் கேட்டு விட்டான்.

"வல்லவராயரே, இந்தச் சமுத்திரத்தை நினைத்துப் பாருங்கள். சமுத்திரம் என்பது ஒரு அடக்க முடியாத நாடு. எந்த வீரருக்கும் இயலாத ஒரு காரியம், இதை வெல்வதுதான். நீங்கள் நிலத்தை அடிமைப் படுத்தலாம். அதன் செல்வத்தைப் பிடுங்கிக் கொள்ளலாம். அது சுலபம். கடல் அதன் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்தது இல்லை. வானத்தின் வெளிச்சத்தில் ஓய்வெடுக்கும் அமைதியான கடல் அழகானதுதான். ஆனால், வெஞ்சினம் கொண்டு வெகுண்டு எழுந்து சீறும் கடல் அதை விட அழகு. கடலின் சீற்றம் வலியது. அதன் உறுமலின் முன் இடிகூடக் காதலியின் கனிந்த சொல் போலத்தான் இருக்கும். நிலத்தின் மீது வீசுகிற புயல் கூடப் பெண்

ஒருத்தியின் சிணுங்கல் போல் இருக்கும். கடல் ஒரு தூங்கும் மிருகம். சக்தியைக் கணக்கிட முடியாத மிருகம். வசப்படுத்தவோ விலங்கிடவோ முடியாத விலங்கு. கடல் கர்ஜித்துக் கொண்டு பொங்கிப் பாயும்போது உலகத்தின் முடிவு நெருங்கி விட்டதாகவே மனிதனுக்குத் தோன்றுமல்லவா?'' என்றார்.

வந்தியத் தேவனுக்கு இதில் ஏதும் மனதுக்குள் ஏறவில்லை. ''அதெல்லாம் சரி. இவையெல்லாம் நிலத்தின் மீது, திடமான மண்ணின் மீது கால்களை ஊன்றிப் பேசுவதற்கு நன்றாய் இருக்கும். இப்போது நம் முடிவு நெருங்கி வந்து விட்டது போலத்தான் இருக்கிறது'' என்றான்.

''ஒரு முறை கப்பல் கவிழ்ந்ததால் மனம் உடையலாமா? கடல் பிரயாணத்தில் இதெல்லாம் சகஜம்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

''இந்தப் படலத்தில் தப்பிப் பிழைத்தால் போதும். மறுபடியும் கடல் பக்கம் போகும் உத்தேசமே எனக்கு இல்லை. ஆடி அமாவாசைக்குக் கூடக் கடலில் குளிக்க மாட்டேன்!'' என்று சங்கற்பம் செய்தான் வந்தியத் தேவன்.

பின் ஒரு நெடுமூச்சு விட்டுவிட்டுத் தொடர்ந்தான், ''கப்பல் ஏறும் முன் இப்படி ஏற்படும் என்று நான் கனவிலும் கருதவில்லை. இப்போது சமுத்திர ராஜனின் கடுங்காவலை மீறி எப்படித் தப்பிப்பது என்று ஒரு வழி சொல்லுங்கள்'' என்றான் கோபமாக.

ஆனால், வழியேதும் அவர் சொல்லவில்லை. முழு நாளும் வெய்யிலில் மிதப்பதாயிற்று. மாலை நேரம் நெருங்கியபோது வந்தியத் தேவனின் முகத்தில் எதுவோ மிதந்து வந்து மோதியது. செடி போலப் பச்சையாய் இருந்தது. கொத்துக் கொத்தாக இலைகள் போல இருந்தது. ஆனால், துர்நாற்றம் கொண்டிருந்தது. ''இது வேறு!'' என்று அலுத்துக் கொண்டு ஒரு கையால் அதை எடுத்துத் தூர விட்டெறிந்தான் வந்தியத் தேவன்.

''அதை அவ்வளவு அலட்சியமாகத் தூக்கி எறியாதீர்'' என்றார், பொன்னியின் செல்வர்.

''ஏன், அதைத் தின்று தாகத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று நினைப்பா? ச்சீ! என்ன துர்நாற்றம்! தாகத்தால் சாவேனே தவிர, இதையெல்லாம் தொடக்கூட மாட்டேன்'' என்றான் வந்தியத் தேவன்.

''எவ்வளவு அழகாக உள்ளன அவை!'' என்றார் பொன்னியின் செல்வர், அவை தூரத்தில் மிதந்து செல்வதைப் பார்த்து.

வந்தியத் தேவன் திரும்பி இளவரசரை முறைத்தான், மூளை கடுமாறிப் பேசுகிறார் என்று நினைத்தபடி. மேலும் தொடர்ந்த இளவரசர், ''இதைக் காண என் கண்கள் இன்பமடைகின்றன!'' என்றார். அதற்கு வந்தியத் தேவன், ''அவை வெறும் கடல் பூண்டுகள்தானே? இதிலென்ன அதிசயம். நிலத்தருகே நீரில் கடல் பூண்டுகள் அதிகமாக இருக்கும் என எனக்குத் தெரியாதா...?'' என்று கூறியவன், பாதியில் நிறுத்தினான்.

அவர் பேசிய வார்த்தைகளின் ஆழத்தைப் புரிந்து கொண்ட பின் அவன் ஒரு நொடி மௌனமாயிருந்தான். நிலம் அருகில் இருந்தால் தான் இவை மிதந்து வரும். உடனே சுற்று முற்றும் பார்த்தான்.

எதிரே விரிந்த பரந்த கடலில் ஒரு குன்று போலத் தன் தலையை வெளியே நீட்டிப் பார்த்தது ஒரு தீவு. அந்தத் தீவு கடலின் தரையிலிருந்து வளர்ந்த பெரும் பாறை. அதன் மேல் வெவ்வேறு உயரங்களில் மரங்கள் வேறு இருந்ததனால் அதன் உருவம் அஷ்ட கோணலாகக் காணப்பட்டது.

எது என்னவானாலும் நிலம் நிலம்தானே. நீருக்கு எவ்வளவோ உசத்தியானதுதானே! கரையில் சடலமாக ஒதுங்குவதை விட, மீனுக்கும் நண்டுக்கும் உணவாவதைவிடக் கோணல் மாணலாய் இருக்கும் தீவே நல்லது. மேலும் இளநீர் கொண்ட தென்னை மரங்கள் நெடுகிலும் வரிசை வரிசையாகக் கண்ணுக்கெட்டிய தூரம் தீவின் மீது காணப்பட்டன. தாகத்தில் தொண்டை வற்றிய வந்தியத் தேவனுக்குப் பேரானந்தம்.

சொப்பன லோகத்தில் இருப்பது போல அந்தத் தீவு பெரிதாகிக் கொண்டே இருந்தது. தனியாகவும் இல்லை. சற்றுத் தூரத்தில் திட்டுத் திட்டாகத் தோன்றிய பல தீவுகளையும் கண்டான். நிலத்தின் காட்சியோ கண் கொள்ளாத அற்புதக் காட்சியளித்தது.

இதைக் கண்ட வந்தியத் தேவன் குதூகலமடைந்தான். அந்தக் குதூகலத்தில் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துப் பின் வேகமாக நீச்சலடிக்க ஆயத்தமானான். காலுக்கடியில் நீரை ஒரு தள்ளுத் தள்ளி மூச்சை உள் இழுத்தான். ஆனால், ஒரு அவசரமும் காட்டாமல் பொன்னியின் செல்வர் இருந்த இடத்திலேயே மிதந்து கொண்டிருந்தார்.

''நீர் வரவில்லையா?'' என்பது போல் பொன்னியின் செல்வரைத் திரும்பிப் பார்த்தான் வந்தியத் தேவன். ''நமது கஷ்ட காலங்கள் முடிந்தன!'' என்றும் விளம்பரப்படுத்தினான்.

அருள்மொழி வர்மர் மெல்லச் சிரித்தார். ''இல்லை, இது நமது கஷ்ட காலத்தின் தொடக்கமாகக் கூட இருக்கலாம். நாம்

பிழைத்து வந்தது உண்மைதானா என்று இன்னும் எனக்குச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது. ஒரு கஷ்டத்திலிருந்து தப்பித்தோம். அடுத்ததைச் சந்திக்கப் போகிறோமா? சட்டியிலிருந்து தீயினுள் குதிக்காமல் இருக்க வேண்டும்'' என்றார். புரியாமல் விழித்த வந்தியத் தேவனைப் பார்த்து, ''இது கடற்கொள்ளையர் வசிக்கும் தீவு என நினைக்கிறேன்'' என்றார்.

''பின் கரைக்குச் செல்ல முடியாதா?'' என்று சோகமாய்க் கேட்டான் வந்தியத் தேவன்.

''பொழுது சாயட்டும். பின் சென்றடைவோம்'' என்றார்.

பேயறைந்தது போலத் தேவன் முறைத்துப் பார்த்தான், நம்பிக்கையின் சிகரத்திற்குச் சென்று, கீழே தள்ளி விடப்பட்டவன் போல.



அத்தியாயம் இருபத்தேழு

எலும்புக்கூடுகள்! எங்கும் எலும்புக்கூடுகள்!

இத்தனை நேரமும் கடல் மீது மிதந்த இருவரும், இருள் படிந்த பின் நிலத்தில் சஞ்சரித்தார்கள். கொள்ளையர் தீவில் கால் வைப்பதைத் தவிர வேறு மார்க்கம் ஒன்றும் இல்லை என அருள்மொழிவர்மர் கூட முடிவு செய்துவிட்டார். தாகத்தில் மயக்கம் வருவதற்குள் கெட்டியான தரை சேர்ந்துவிட வேண்டுமென்று முடிவு செய்தார். உப்பு நீரில் மிதப்பதைவிட, அபாயம் அதிகமாகவே இருந்தாலும், தீவைச் சென்றடைய வேண்டுமென்று அவரது உள் உணர்வு சொன்னது.

பொழுது சாய்ந்தது. இருவரும் மெல்ல நிலத்தை நோக்கி நீந்தினார்கள். அது ஆழ்கடலில் நீந்துவதைவிடச் சுலபமாகவே இருந்தது. அலைகளே அவர்களைக் கொண்டு கரையில் சேர்த்தன.

திடீரென, நீந்தி வந்த வந்தியத் தேவனது கால்கள் தரையைத் தொட்டன. அவ்வளவுதான். நிலப் பகுதிக்கு வந்தாயிற்று. இனி மூழ்கிச் சாகும் அபாயம் இல்லை.

முழங்கால்வரைதான் நீர் இருந்தாலும், நிலப் பகுதிக்குக் கீழிருந்த ஈர மண்ணில் கால்கள் புதைந்தன. தட்டுத் தடுமாறித் தரைக்கு வந்தனர். அவர்கள் கரை சேர்ந்தது பூமிக்கும் கடலுக்கும்

நடுவில் இருந்த வெண்மணல் பிரதேசம். அலைகள் வந்து தொந்தரவு செய்யாத இடத்துக்குச் சென்றுவிட வேண்டும் என்று இருவரும் நடந்தனர். கால்கள் நடக்க மறந்தனவோ என்று நினைக்கும் அளவுக்கு முதலில் தளர்ந்திருந்த மண்ணில் நடப்பது கடினமாய் இருந்தது.

கரையேறிய வந்தியத் தேவனின் கண்கள் உடனே நாலாபுறமும் தேடின. எதைத் தேடின என்பது அவனுக்கே முதலில் தெரியவில்லை. ஆனால், ஏதாவது ஆறுதலாக இருக்கும் என்றுதான் தேடினான்.

இருபுறமும் நெடுந்தூரம் நீண்டிருந்தது அந்த மணல்பரப்பு. ஆனால், கடலில் இருந்து சற்றுத் தூரத்தில் மரங்கள் செழித்து வளர்ந்து வானோங்கி நின்றன.

ஒரு முழு நாள் கடலில் மிதந்ததால் நனைந்திருந்தார்கள் இருவரும். ஆடைகளிலிருந்து நீரைப் பிழியக் கூட நினைக்கவில்லை. அவ்வளவு அயர்ந்து போயிருந்தார்கள். அப்படியே மணலின் மீது விழ நினைத்தான், வந்தியத் தேவன்.

''இல்லை, வல்லவராயரே. இப்போது படுக்கக் கூடாது. இந்தக் களைத்த நிலையில். பின்னர் எழுவது கஷ்டம். முதலில் வாருங்கள், எங்காவது நீர் கிடைக்குமா எனப் பார்ப்போம்'' என்று கூறி, தட்டுத் தடுமாறிப் பொன்னியின் செல்வர் மரங்களை நோக்கி நடந்தார். வந்திய தேவனும் பின் தொடர்ந்தான்.

மணற்பரப்பு இயற்கை கிழித்த ஒரு கோட்டைத் தாண்டவில்லை. அதற்கு மேல் தாவரங்கள் தழைத்தன. குறுக்கும் நெடுக்குமாய் எதையோ தேடிய பொன்னியின் செல்வர் யானைக் காது போல அகன்ற இலை கொண்ட ஒரு செடியின் அருகே சென்று நின்றார்.

அதன் இலைகள் பனியும் மழையும் கொட்டும் நீரைத் தேக்கி வைத்திருந்தன. ஒரு இலையை மெதுவாகப் பிய்த்து அதை எடுத்து முதலில் வந்தியத் தேவனுக்குக் கொடுத்துவிட்டுத் தனக்கென்று வேறு இலையைத் தேடிச் சென்றார் பொன்னியின் செல்வர். இருவருமாய் இலைகள் தேக்கியிருந்த மழைத் தண்ணீரைக் குடித்தார்கள். தேவாமிர்தம் போலிருந்தது. முதல் முறையாக இதழ்களில் ஒட்டியிருந்த உப்பும் கலைந்து மிகுந்த நிம்மதியைக் கொடுத்தது.

இருவரும் மீண்டும் வந்து கரையில் களைத்துப் போய்ப் படுத்திருந்தார்கள். அந்த இருளில் அலைகளின் இரைச்சலும் அவர்கள் மூச்சு விடும் சப்தமும் மாறி மாறிக் கேட்டன. அந்த அமைதியில் வந்தியத் தேவனுக்குத் தோன்றியது ஒன்றுதான். அருள்மொழி

வர்மருடன் தனியாக ஒருவரும் குறுக்கிடாமல் ஓரிரு நாட்களை செலவழிப்பது நாட்டில் நடக்கும் காரியமா? அப்படி நிகழ எவ்வளவு நாள் வேண்டியிருக்கிறோம்? இப்போது கிடைத்திருக்கிறது. ஆனால், இப்போது தாகத்துக்கு நீரும் பசிக்கு உணவும்தான் முக்கியம் என்று தோன்றுகிறதே. அதுதான் வாழ்க்கை போலும். கடலின் முற்றுகையில் சிக்கியாகி விட்டது. துணைக்கு இவர் இருக்கிறார். ஆனால், இதிலிருந்து தப்புவது இவரால் கூட முடியுமா?

கடலிலிருந்து வந்த குளிர்ந்த காற்று ஈர உடம்பை நடுங்கச் செய்தது. அதைப் பற்றிக் கவலைப் படாமல் அருள்மொழி வர்மர் நித்திரையில் ஆழ்ந்தார். அவரைத்தான் எதுவும் பாதிக்காதே. இந்தத் தீவில் கழித்த அரை மணி நேரத்தில் இங்கு மனித சஞ்சாரமே இல்லை என்பது உறுதியாய்த் தெரிந்தது. அது ஒருவாறு ஆறுதல் அளித்தது. வந்தியத் தேவனுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. பொன்னியின் செல்வர் இந்தத் தீவைத் தப்பாகக் கணக்கிட்டுவிட்டு, உப்பு நீரில் தேவையில்லாமல் அதிக நேரம் மிதக்க விட்டாரே. சிறிது கோபமும் அவனுக்கு வந்தது. 'ஆனாலும் பொன்னியின் செல்வர் அபாயங்களை மிகைப்படுத்துகிறார்' என்று மனதுக்குள் திட்டினான்.

சற்று நேரம் தூக்கம் வராமல் வந்தியத் தேவன் புரண்டு புரண்டு படுத்தான். ஏதோ ஒன்று மணலில் புதைந்து கிடந்து தன் உடலில் குத்தியது என அறிந்தான். அதை எடுப்பதற்கு எழுந்தான். இருட்டில் சுற்றிப் பார்த்தான். குத்தியது மட்டுமல்ல, மரக் கிளைகள் பலவும் கரையில் கிடந்தன என அறிந்தான்.

'கடல் கொண்டு வந்து அவற்றை இங்கு சேர்த்திருக்க வேண்டும். சரியாக நீரின் எல்லைக்கு அப்பால் இருந்தன' என முடிவு செய்து கொண்டு, அவன் உடலை ஒட்டியிருந்த கிளை ஒன்றை எடுத்தான். அதைத் தூரத்தே விட்டெறிய நினைத்தபோது, அதை நிலவொளியில் நன்றாய்க் கவனித்தான். 'இது மரக்கிளை போல இல்லையே' என்றது அவன் மனம்.

ஏனென்றால், அது வழுவழுப்பாய் இருந்தது. வெளுத்துப் போயிருந்தது. அது உண்மையில் என்ன என்று அறிந்தபோது அவன் உடல் நடுங்கியது. அதன் மேல் இருந்த பிடி தளர்ந்துவிட வேண்டும் என்று முயற்சித்தான். ஆனால், அது அவன் கையில் ஒட்டியது போலவே இருந்தது. அது ஏதோ துரதிர்ஷ்டம் பிடித்த ஒரு மனிதனின் கையாக இருந்திருக்க வேண்டிய எலும்பு. தசையை நண்டோ, வண்டோ உண்ட பின் மீதம் இருந்தது இதுதான்.

...றிக் கொண்டு அதைக் கீழே போட்டான், வந்தியத் தேவன். ...வொளியுடன் பயமும் சேர்ந்துகொண்டு, அவனுக்கு ஒரு ...மான காட்சியை விளக்கிக் காட்டியது. கடற்கரை யெங்கும் எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகள்! அங்கு பலரும் இறந்து கிடந்த ...யிலேயே எலும்புக் கூடுகளும் இருந்தன. சண்டையின் இறுதி ... ஏதோ போர்க்களம் போல இருந்தது கடற்கரை.

'ஆகா! பொன்னியின் செல்வர் கூறியது உண்மைதான் ...யிருக்கிறதே. ஐயையோ, கடலே சிறந்தது போலத் தோன்று... மீண்டும் ஓடிச் சென்று நீருக்குள் குதிக்கலாமா' என்றுகூட ... கணம் யோசித்தான்.

அவன் தன்னை அறியாமல் அலறியதில் விழித்து எழுந்த பொன்னியின் செல்வர் அவன் பயத்தை அறிந்து கொண்டார். ... தொடங்கினார். இந்தக் கருமத்தை எல்லாம் அவர் முன்பே ...ரித்து விட்டார் போலும்.

கடல் என்பது மீனவருக்கும் முத்துக் குளிப்பவருக்கும் மட்டும் செல்வத்தைக் கொடுக்காது. நாடுகளைப் பிரித்தது கடல்தானே. ... ஒரு பக்கத்தில் நிறைந்து கொட்டிக் கிடப்பதற்கு மறு பக்கம் ...வெகுவாக இருக்கலாம் அல்லவா? அதை அங்கு எடுத்துச் ...வருக்கே அந்தப் பரிசு கிட்டும்.''

''ஆனால், ஆழ்கடலில் என்றுமே அமைதியில்லை, மனிதர் ... சட்டங்கள் செல்லாத இடம் அது. அரசனின் தண்டிக்கும் ... எட்டாத இடம் அது. கடலில் யார் வேண்டுமென்றாலும் ... வேண்டியதை இரையாக எடுத்துக் கொள்ளலாம். சட்டங்கள் துறைமுகத்துடன் நின்றுவிடும்'' என்றார். அதன் ...வுதான் இவையெல்லாம் என்பது போல ஒரு முறை சுற்றிப் பார்த்தார்.

வந்தியத் தேவனுக்கு இதெல்லாம் நன்கு தெரியும். கரையிலிருந்து தள்ளி வந்து விட்டோம் என்றாலே பாதுகாப்பில்லை. ... நிலை மாற வேண்டும் என்று முயற்சித்தவர் இவராகத்தான் இருக்க வேண்டும். கடற் கொள்ளையரை ஒடுக்கப் பொன்னியின் செல்வர் சோழரின் கடற்படையுடன் வந்தது சரித்திரத்தில் முதல் ...யாகக் கூட இருக்கலாம்.

இந்தப் பல மாதங்களாகக் கடலில் போன வழியெங்கும் ... பயங்கரக் கொள்ளை, நாச வேலைகளைக் காணும்படி நேர்ந்தது. 'கல்லுளிமங்கன் போன வழி, காடு மலையெல்லாம் தவிடுபொடி' என்பது போல, அந்தக் கொள்ளையர் போன

வழியெங்கும் பற்பல பயங்கர நாச வேலைகளைக் காணும்படி யாயிற்று.

இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்தது, கடல் வர்த்தகம் பெருகியவுடன்தான். தொடக்கத்தில் ஏதாவது மக்கள் நடமாட்டம் இல்லாத தீவில் ஒளிந்திருந்து, இருட்டின் ஆதரவுடன் சப்தமின்றி மீனவர்களைக் கொள்ளையடித்த கொள்ளையர், இப்போது கடல்களில் பேரபாயமாகத் திகழ்ந்தனர்.

இப்போது பெரும் கூட்டமாய் வந்து ஆயுதம் கொண்டு வணிகரின் கப்பல்களைத் தாக்கிக் கொண்டிருந்தனர். அவ்வளவு செல்வம் நாட்டைச் சேராமல் கடலில் சூறையாடப்பட்டது சோழ நாட்டுக்குப் பெரும் இழப்பை உண்டாக்கியது. துறைமுகத்தை விட்டுக் கிளம்பியதிலிருந்து சேரும் இடத்தை அடைந்து நங்கூரம் இடும் வரை கப்பலுக்குப் பாதுகாப்பு இல்லை. அதில் பயணித்த வருக்கு அடிமை வாழ்வு அல்லது கொடும் மரணம் கூடச் சம்பவிக்கலாம் என்ற நிலை.

ஆனால், இதை எல்லாம் கடல், பல காலம் கவனித்து வந்தாலும், ரகசியத்தை வெளிச் சொல்லாது இருந்தது. பல இரவுகளில் வன்முறையும், இரத்தம் சிந்துதலும் இருந்தாலும், காலையில் ஒன்றும் நடக்காதது போலச் சூரியன் கடலின் மீதிருந்து எழும். எங்கும் அமைதியாக இருப்பது போலவே தோன்றும். அடுத்த நாள் இரவு வரை.

''இங்கு எப்படிப் படுப்பது?'' என வினவினான், வந்தியத் தேவன் .

''இது அமைதியான இடமாய்த்தான் இருக்கிறது. துஷ்ட மனிதர்கள் யாரும் பல ஆண்டுகளாக இங்கு வந்ததாகத் தெரிய வில்லை'' என்றார் பொன்னியின் செல்வர்.

''அதுதான் பார்த்தாலே தெரிகிறதே'' என்று அருவருப்புடன் மீண்டும் ஒரு முறை எலும்பு நிறைந்த கடற்கரையை நோட்டம் விட்டுவிட்டு, ''வாடைக் காற்றின் குளிர் தாங்கவில்லை, தீவுக்குள் செல்வோமா?'' என்று கேட்டான், வந்தியத் தேவன்.

அவனுக்குக் காற்றை விட, எலும்புக் கூடுகளுக்கு நடுவே படுப்பது பிடிக்கவில்லை. உண்மையைப் புரிந்து கொண்டார் பொன்னியின் செல்வர்.

''பதற்றம் அடையாதீர், வல்லவரையரே. இவர்களெல்லாம் இறந்து பல வருடங்கள் ஆகியிருக்கின்றன. இங்கு உறங்குவோம். காலையில் எழுந்து நடப்பதைப் பார்த்துக் கொள்வோம்'' என்று ஆறுதலாய்ச் சொன்னார்.

''நாலு புறமும் அபாயங்கள் சூழ்ந்த இந்தத் தீவில் எப்படித் தூங்குவது?'' என்றான், வந்தியத் தேவன்.

''இப்படிப்பட்ட சமயத்தில் நாம் தீவுக்குள் போவது உசிதமா என்று யோசிக்க வேண்டும்.அங்கு அபாயங்கள் அதிகமாகக் கூட இருக்கலாம் அல்லவா?'' என்று பொன்னியின் செல்வர் கூறிய வுடன், வந்தியத் தேவன், ''இப்போது நாம் என்னதான் செய்ய லாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இங்கு நீங்கள் படுத்துத் தூங்குங்கள். நான் காவல் காக்கிறேன். காலையில் பார்த்துக் கொள்வோம்'' என்றார் பொன்னியின் செல்வர். இதில் ஒரு வகை மனத்தெம்பு பெற்ற வந்தியத் தேவன் காலை நீட்டிப் படுத்தான்.

ஆனால், படுத்தாலும் உறக்கம் வரவில்லை, வந்தியத் தேவனுக்கு. ''இவ்வளவு மண்டை ஓடுகளும் எலும்புகளும் எப்படி இங்கு வந்தன? கொடிய மிருகம் நம் பின்னாலிருக்கும் காட்டில் இருக்குமோ? இல்லை, பசியால் இறந்திருப்பார்களோ?''

''எத்தனையோ போர்க் களங்களைப் பார்த்திருக்கும் உமக்கு மண்டை ஓடுகளைக் கண்டு என்ன பயம்?'' என்று வினவினார், பொன்னியின் செல்வர்.

''பயம் ஒன்றுமில்லை; அருவருப்புதான். நமக்கும் இந்த நிலையோ என்ற யோசனை. ஆனால், ஒன்று. இங்கு காலா முகர்கள் வந்தால் கொண்டாட்டம் தான். எவ்வளவு மண்டை ஓடுகள்!'' என்றான்.

''ஏன்?'' என்றார் பொன்னியின் செல்வர்.

''நீங்கள் பார்த்தது இல்லையா? ஒவ்வொரு ஐப்பசி அமாவாசை யிலும் கொள்ளிடக் கரைக்குப் போனால் காலாமுகர்களின் மகாசங்கம் நடைபெறும். மண்டை ஓடுகளை மாலையாய்க் கட்டி அணிந்திருப்பார்கள்.''

''வாழ்க்கை அநித்தியம் என்பதை மறந்து விடாமலிருப்பதற்காக அவர்கள் அந்த மாலையை நெஞ்சுக்கு அருகே மாட்டிக் கொள்கிறார்கள். இந்த ஓடுகள் நமக்கும் அந்தப் படிப்பினையைத் தெரிவிக்கின்றன'' என்றார் அவர்.

அதை வந்தியத் தேவன் கேட்டதாகத் தெரியவில்லை. மெல்லக் கண் அயர்ந்தான். பொன்னியின் செல்வரின் பேச்சும் நின்றது. காற்றின் சப்தம் மட்டும் கேட்டது. அமர்ந்தபடி பொன்னியின் செல்வர் காவல் புரிந்தார். வந்தியத் தேவன் மட்டும்தான் தூங்கிக் கொண்டிருந்தான்.

ஆனால், இருவரும் களைத்துப் போயிருந்தார்கள். படுத்திருந்த வந்தியத் தேவனின் கனவிலோ எலும்புக் கூடுகளின் நடனம் படு அமர்க்களமாய் நடைபெற்றது. ஒரு கலா ரசனையுடன் அதை அவன் கவனிக்கவில்லை. தூக்கத்தில் நடுங்கினான். ஆனால், கண் விழித்து எழவில்லை.

பொன்னியின் செல்வரின் தலையும் மெல்லத் தூக்கத்தில் ஆடத் தொடங்கியது. அவர் மனமும் நிம்மதியாக இல்லை. அவர் அமர்ந்திருந்த அதே கடற்கரையில், தான் ஒரு பெண்ணின் எதிரில் நிற்பதாகவே அவருக்குத் தோன்றியது. 'இவள் எப்படி இங்கே?' என்று வினவியது மனம்.

முதலில் நிழலாக இருந்தவள், மெல்ல மெல்ல அவரை நோக்கி அருகே வந்தாள். பிறகுதான், மௌனமாய் இருந்த அவளுடைய முகத்தை அவர் கவனித்தார். 'ஆகா! அப்படி ஒரு அழகு! முகத்தில் ஒவ்வொரு பாகமும் ஒரு மொழி பேசியதே. பேச வேண்டிய வாயைத் தவிர.' தன் அழகிய கண்களை அகல விரித்து அவரை ஆவலுடன் நோக்கினாள் அந்தப் பெண், கண்களாலேயே ஒரு புன்னகை புரிந்து விட்டு அவள் முகம் ஆசையாய் அவரைப் பார்த்ததைப் பொன்னியின் செல்வரால் தாங்க முடியவில்லை.

''யார் நீ?'' என்று கேட்டு விடலாம் என்றால், இப்போது பார்த்து வாய் பேச முடியவில்லையே.

அப்படி அவரை மெய்மறக்கச் செய்த அந்தக் கனவுக் கன்னி யார்? அவள் உயிருடன்தான் இருக்கிறாளோ? இல்லை, அசதியான தூக்கமெனும் மத்தில் சுழன்று சுழன்று கடையப்பட்டு மேலே வந்த பிரமையோ? அவளைத் தொட அவர் ஒரு கரத்தை நீட்ட, 'வேண்டாம்' என்பது போலக் கூந்தல் பறக்கத் தலையை ஆட்டி விட்டு அகன்றாள்.

ஆனால், அவருடைய விரல் நுனி அவளைத் தொட்டு விட்டது. அவளைத் தானா, இல்லை, அவள் உடுத்தியிருந்த பட்டுத் துணியையா?

அவளைத் தொட்டபோது பட்டினை ஒத்த ஸ்பரிசம் ஏன் தீயினைப் போல் உடலெங்கும் ஒரு புயலைக் கிளப்பியது?

'அவள் ஏன் அகன்று செல்கிறாள்? என் மீது கோபமாய் இருக்குமோ?' என்று பதறினார். பின், 'இல்லை, இல்லை. அவளுடைய முகத்தில் நாணமும், அச்சமும் கலந்து தோன்றினவே' என்று ஆறுதல் சொல்லிக் கொண்டார்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றிருந்தனர். அவளைப் பார்வையில் விழுங்கி விடுவது போல இளவரசர்

பார்த்தது, அவளுக்கு மிகுந்த கூச்சத்தைக் கொடுத்திருக்க வேண்டும். தரையைப் பார்த்தபடி கால் விரலால் கோலமிட்டபடி நின்றாள். அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று பொன்னியின் செல்வர் நினைத்தபோது, திடீரென வந்தியத் தேவனின் குரல் கேட்டது. இருவரும் திடுக்கிட்டனர். அந்தப் பெண் அப்படியே சிரித்து கடலின் மீது கரைந்து போனாள்.

தூக்கம் கலைந்தது.

''என்ன இளவரசே, சொப்பனமா? திடுக்கிட்டு எழுந்தீர், கவனமில்லாமல். உம்மை நம்பித் தூங்கச் சென்றேனே!'' என்றான் வந்தியத் தேவன்.

''நீர் ஏன் எழுந்தீர்?'' என்று கேட்டார் பொன்னியின் செல்வர்.

''இல்லை, ஏதோ சப்தம் கேட்பது போலத் தோன்றியது. உங்களுக்குக் கேட்கிறதா?'' என்று வந்தியத் தேவன் கேட்டபோது, அவனுடைய குரலில் வியப்பும் பயமும் ததும்பின. உற்றுக் கேட்டார்கள். காற்றைத் தவிர ஏதும் இல்லை.

பொன்னியின் செல்வருக்கு ஆசை. மீண்டும் உறங்க வேண்டும். அந்தக் கனவு தொடர வேண்டும். அந்தப் பெண்ணைப் பற்றிய மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால், தூக்கம் வரவில்லை.

விழித்திருந்தபடியே பொன்னியின் செல்வர் வியந்தார். கடலுக்கும் காட்டுக்கும் நடுவே மணல் பரப்பு. அதில் எலும்புக் கூடுகளுக்கு நடுவே படுத்து உறங்குகிறோம். இதில் காதல் கனவு காண்கிறோம். இப்படிப்பட்ட மனோகற்பனை உள்ளவர்கள் கவிஞர்களைத் தவிர யார் இருக்க முடியும்? இவ்வளவு அபாயமான சூழ்நிலை, கோரமான சூழல். இதில் காதல் கனவு வேறு!'

மிக அழகான ஓர் எண்ணம் அவர் மனதில் உதித்தது. அது சொல்ல முடியாத குதூகலத்தை உண்டாக்கியது. அந்தப் பெண்ணின் முகத்தில் தினமும் கண் விழிப்பவன் எவ்வளவு அதிர்ஷ்டசாலி? அந்தக் கனவை நினைத்து ஆனந்தித்துக் கொண்டே இருந்தார். உறக்கத்திலிருந்த இன்பம் இப்போது மனதில் ஒரு சின்ன பாரமாய் வலித்தது.

''யார் அவள்?'' என்று எவ்வளவோ சிந்தித்தும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. தன் ஞாபகம் எனும் சக்தியின் கடைசி எல்லை வரைக்கும் சென்று ஊடுருவிப் பார்த்தும் அவள் யார் என்று தெரியவில்லை.

கனவில் வந்தவள் நிச்சயமாகக் கொடும்பாளூர் வீரவேளிர் குலத்தில் பிறந்த பெண் இல்லை. தன் இரு குழந்தைகளுக்குத்

தாயான வானதி அல்ல. இது வேறு பெண். மனைவியும் மக்களும் சொப்பனத்தில் வராமல் ஓர் கன்னிப் பெண் அந்த இடத்தை ஆக்கிரமித்தது எப்படி?

அந்தக் கனவுக் கன்னியின் வருகை அவருடைய உள்ளத்தின் அமைதியைப் பெருமளவு குலைத்திருந்தது. தான் இராமனைப் போல ஆட்சி செய்ய வேண்டும் என்று உறுதியாய் இருந்தவர் அவர். இராமன் போலவே, அரியணையைத் துறந்ததும் அதனால் தான். அது மட்டுமல்லாமல், அவனைப் போல, ஏக பத்தினி விரதத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றல்லவா நினைத்திருந்தார். தன் அன்பு சற்று நேரம் கூட வானதியை விட்டு அகன்று போனதையே அவர் அவ்வளவாக விரும்பவில்லை. அப்படி ஓர் உணர்வை ஏற்படுத்திய இந்தக் கனவுக் கன்னி யார்?

ஆனால், அந்தப் பெண்ணையும் மறக்க முடியவில்லை. 'என் மனக் கண் முன்னால் வந்து தரிசனம் அளித்த அந்தப் பெண் யார்? அழகுக்கு அழகு செய்யும் அந்தப் புன்னகை நம் மனதைப் புண்படச் செய்துவிட்டதே.' அவள் வந்து சென்ற நாள் தன் வாழ்க்கையில் முக்கியமான தினம் என உணர்ந்தார்.

அவர் உள்ளத்தில் அலை மோதிக் கொண்டிருந்தது ஒரு பேராவல். திரும்பிச் சென்றவுடன் முதல் வேலையாக அவளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

'ஆனால், அந்த விஸ்தாரமான பரத கண்டத்தில் எங்கென்று அவளைத் தேடுவேன்? சோழ நாட்டில் அவள் வசித்தாலே அவளைக் கண்டுபிடிப்பது கஷ்டம். இந்தக் கடற் கொள்ளையரின் தீவில் மாட்டிக் கொண்டு எப்படி அவளைக் கண்டு பிடிப்பது?' என்று குழம்பினார். பின், 'இல்லை, இல்லை, நிச்சயம் அவளைக் காண்பேன். நான் நாட்டுக்குத் திரும்பும் போது அவள் துறைமுகத்தில் கூட இருக்கலாம்' என்று சொல்லிக் கொண்டார்.

ஓர் அழகிய பெண், ஓர் அமுதமான கனவு. ஆனால், அது கடைசியாய் விட்டுச் சென்றது என்னவோ துயரம் நிறைந்த சிந்தனைகள்தான். தன் மனதை ஈட்டியால் குத்தியது போல, விட்டு விட்டுச், சென்று விட்டாளே, அந்த மென்மையான கொடியவள்.

பின்பு பல சந்தேகங்கள் எழுந்தன 'இது வரையில் கனவில் இவ்வளவு உயிருள்ள பெண்ணை நான் பார்த்ததில்லையே. அவள் ஜீவனுள்ள பெண்தானா? மற்றக் கனவுகள் போல ஏன் இவளது முகம் நம் மனதிலிருந்து மறையவில்லை.? முக்கியமாக அவள் முகத்தில் தெய்வீக சௌந்தரியம் வாய்ந்தது எப்படி? கடவுள்கள்

தன்னைக் கேலி செய்கிறார்களோ. 'இந்த நிலைமையில் பெண்ணைப் பற்றிய நினைவா?' என்று.'

பொன்னியின் செல்வருக்குச் சந்தேகங்கள் தொடர்ந்தன. 'அவள் பூவுலகவாசி என்றால் தேடலாம். அதில் அர்த்தம் உள்ளது. ஆனால், அவள் இந்த உலகத்தைச் சேர்ந்தவள்தானா? இல்லை, என் கற்பனையில் வந்தவளா? இல்லை, தேவலோகக் கன்னிகையா? தான் இந்தப் படலத்தில் மாண்டால்தான் அவளைப் பார்க்க இயலுமோ? அதிலும் தவறில்லை. ஏனென்றால் அவளைப் பார்க்காமல் என்னால் இனி வாழ முடியுமா?' என்று அவர் நினைத்திருக்கையில், வந்தியத் தேவன் எழுந்தான். "பசியாக இருக்கிறது" என்றான்.

வானத்தில் வெள்ளி முளைத்து விட்டது. காட்டுக்குள் செல்ல வேண்டியதுதான் என்று முடிவெடுத்து இருவருமாக எழுந்து போகும் வழியில் அந்த யானைக்காது இலை கொண்ட செடியில் மழைநீரைப் பருகிவிட்டுச் சென்றார்கள்.

ஒரு மேடு கடற்கரையிலிருந்து வடக்கே சற்றுத் தூரத்தில் இருந்தது. அதை நோக்கி நடந்தார்கள். பொன்னியின் செல்வர் சுறுசுறுப்பாக நடந்தார். அவர் அந்தக் கனவினால் ஓரளவு குதூகலம் அடைந்துதானிருந்தார், காதல் என்பது ஒரு புத்துணர்வு கொடுக்கும் தேவாமிர்தம் அல்லவா? எந்த வயதில் வந்தால் என்ன? எந்த நிலையில் வந்தால் என்ன? தன்னை உடம்போடு தூக்கி மேகத்தில் மிதக்க விட்டது போல் அல்லவா காதலில் விழுந்தவர் எண்ணுவார்கள்!

அவர் மௌனமாய் வந்தது வந்தியத் தேவனுக்கு பிடிக்கவில்லை. ஏதோ பேசத் தொடங்கினான், வந்தியத் தேவன். ஆனால், முடியவில்லை. சொரசொரப்பு நிறைந்த ஒரு கை வந்து அவன் வாயை மூடியது.

வந்தியத் தேவனுக்குப் பின்னால் அவனது வாயைக் கையினால் மூடிக் கொண்டு ஒருவன் நின்றான். அந்த அதிர்ச்சி அவனை ஸ்தம்பிக்கச் செய்திருந்தது. கண்களை மட்டும் திருப்பிப் பார்த்தால் பொன்னியின் செல்வரைக் கட்டுப்படுத்தவோ இருவர் தேவைப் பட்டார்கள் என்று தெரிந்தது. ஆனால், அவர் அதிசயமாக எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்து விட்டார்.

அவரிடம் அவன் எதிர்பார்த்தது அதுவல்லவே. தூண்டிலில் சிக்கிய மீன் போல அவர் இப்படியும் அப்படியுமாய் நெளிந்திருக்க வேண்டுமே. தன்னைக் கட்டுப்படுத்தியவரை எட்ட விழும்படி

செய்திருக்க வேண்டுமே. ஆனால், அப்படி அவர் செய்யவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டாரோ? பின் நம் கதி?

வந்தியத் தேவனுக்கு அப்போது நினைவுக்கு வந்தது, அந்த எலும்புக் கூடுகள் நிறைந்த கடற்கரைதான். ஒருவேளை நம்மைச் சிறைப்படுத்தியவர்கள் கீழ்த்திசைக் கடல்களில் மனித மாமிசத்தை ரசித்துத் தின்னும் கூட்டத்தினராய் இருப்பார்களோ என்று நினைத்தபோது, அவன் உடலெங்கும் ஒரு நடுக்கம் பரவியது.



அத்தியாயம் இருபத்தெட்டு
சங்கு சக்கர ரேகை

கொள்ளையர் தீவில், தெரியாதவர்களிடம் பிடிபட்டாயிற்று. இப்போது என்ன நடக்கப் போகிறதோ என்று கவலையுடன் இருந்தான், வந்தியத் தேவன். இவர்களோ இருவர்தான். இவர்களைப் பிடித்திருந்தவர்கள் குறைந்த பட்சம் ஏழெட்டுப் பேர் இருக்கும்.

அப்போது, அவர்கள் முன் ஒருவன் வந்து நின்றான். தாடியுடன் கூடிய முகம் இருளில் பயங்கரமாகத்தான் இருந்தது.

ஆனால், தூய தமிழில் பேசினான் "இப்போது உமது வாயிலிருந்து கையை எடுக்க உத்தரவு இடுவேன். ஆனால், ஒரு சத்தம் வந்தாலும் அவ்வளவுதான். கத்தியால் குத்தி விடுவேன். கேட்ட கேள்விக்குப் பதில் மட்டும்தான். அதுவும், உள்ளது உள்ளபடி என்னிடம் சொல்ல வேண்டும். கூட்டியோ, குறைத்தோ சொல்லக் கூடாது" என்றான்.

பயம் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் பேசினான். ஆனால், அவன் பேச்சில் அவன் எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்தக் கொடுமை வரவில்லை. பண்பட்டவன் போலப் பேசினான். உயர்குடியைச் சேர்ந்தவன் என அவன் பேச்சில் தெளிவாகத் தெரிந்தது. அது வந்தியத் தேவனின் மனதுக்கு ஆறுதல் அளித்தது.

வாயிலிருந்து கைகள் எடுக்கப்பட்டன. உடனே, "நம் ஊர் ஆள் போலத் தான் இருக்கிறீர். யாரையா நீங்கள்?" என்றான் அந்த மனிதன்.

கொள்ளையர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களில்லை என்று தெரிந்தது. கொள்ளையராய் இருந்திருந்தால் கத்தியால் குத்திவிட்டுப் பின்னர் தான் கேள்வி கேட்டிருப்பார்கள்.

பின்பு தெம்பாய்ப் பேசினான் வந்தியத் தேவன். "நம் ஊர் ஆள் என்று தெரிந்த பின், ஏன் இப்படி இருட்டில் வந்து தாக்குகிறீர்?" என்றான், உடம்பில் வலித்த இடத்தைத் தடவிக் கொண்டு.

"அது உம் நலனுக்காகத்தான். பயத்தில் கத்தி விட்டீரென்றால் அப்புறம் எல்லாருக்கும் அபாயம்தான். சரி, யார் நீங்கள்?"

இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டு மக்களாகவே தோன்றியதால், உண்மையைச் சொல்வதில் பயமில்லை என்று வந்தியத் தேவன் தொடங்கினான். "இங்கு நிற்கிறாரே, அவர்தான் பொன்னியின் செல்வர்" என்றான். உடனே எல்லாரும் உற்சாகத்தில் துள்ளுவார்கள் என்ற எண்ணம் அவனுக்கு.

வந்தியத் தேவனின் பதில் அவ்வளவு சுமுகமாக வரவேற்கப்படவில்லை. தங்களைக் கேலி செய்கிறான் இந்த மனிதன் என்றே கருதினர், அந்தத் தீவின் வாசிகள். அவர்களது முகம் மாறிய தோரணையில் நம்பாமை இருந்தது என்று பொன்னியின் செல்வர் கவனித்தார்.

வந்தியத் தேவன் வாழ்கையில் எவ்வளவோ பொய் சொல்லியிருந்தான். அதில் முக்கால்வாசி எதிர்க் கேள்வியின்றி நம்பப்பட்டிருந்தது. ஆனால், அவன் பேசிய உண்மை இன்று ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அவர்களுக்கிடையே பேசிக் கொண்டனர். "உப்பு நீரில் மிகுந்ததால் ஏற்பட்டது. போகப் போகச் சரியாகி விடும்." வந்தியத் தேவனின் சித்தம் சுவாதீனத்தில் இல்லை என்று உடனே முடிவு கட்டி விட்டனர். "வந்தவர்கள் இருவரும் கடலில் வெகு தூரம் நீந்திக் களைப்புற்றவர்களாகக் காணப்பட்டார்கள். அதனால் சித்தம் கலைந்திருக்குமோ?" எனச் சந்தேகித்தார்கள்.

மீண்டும் அந்த மனிதன் மென்மையாகப் பேசினான். "நண்பர்களே, உமது நிலையை நான் நன்கு புரிந்து கொள்கிறேன். பரவாயில்லை. கடலில் களைத்துப் போய்த் தத்தளிக்கிறவர்களை நான் இதற்கு முன்னும் பார்த்திருக்கிறேன். நிதானித்துச் சொல்லுங்கள், ஆனால், உண்மை சொல்லுங்கள்."

"இல்லை, ஐயா. உண்மையில் அவர்தான் பொன்னியின் செல்வர்" என்று சாதித்தான், வந்தியத் தேவன்.

பேசாமல் நின்ற அருள்மொழி வர்மரைத் திரும்பிப் பார்த்தான் அந்த மனிதன். ஆறடி உயரத்துக்கு மேல் வளர்ந்திருந்த ஆஜானுபாகு. கட்டமைந்த தேகமும், களை பொருந்திய முகமும் உடையவர்தான். ஆனால், அதற்காக அவன் அந்தப் பைத்தியகாரன் கூறியது போலப் பொன்னியின் செல்வராக இருக்க முடியுமா, என்ன?

பொறுமை முழுதுமாய் மறைந்தது. இந்த முறை கோபமாகவே பேசினான். ''அழகாயிருக்கிறதே!'' என்றான் அந்த ஆள். ''சேச்சே! என்னை முழுப் பைத்தியம் என்று நினைத்தாயா?''

அவர்கள் இருவரையும் நோக்கி, ''ஏன் பொய் சொல்கிறாய்? நாங்கள் உங்களுக்குப் பெரிய உதவி செய்ய வந்தோம். பசி பட்டினியிலிருந்து உம்மைக் காப்பாற்றுவோம் என்று வந்தோம். அதற்காக என்னிடம் என்றைக்கும் நீர் நன்றி செலுத்தியே தீர வேண்டும். நீர் என்னவென்றால் புளுகுகிறீர். உமக்கு ஏற்கெனவே ஏதாவது சித்தக் கோளாறு உண்டா ?''

வந்தியத் தேவனுக்கு தான் பைத்தியம் என்று இவர்கள் நினைத்து விட்டார்கள் என்றவுடன் பதற்றம். அவன் முகத்தில் திடீரென்று ஒரு கரிய நிழல் வேகமாகப் படர்வது போலிருந்தது. அருள்மொழி வர்மரை அவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. தான் பைத்தியம் இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டுமே, என்றிருந்தது.

அனைத்தையும் பொன்னியின் செல்வர் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். வல்லவராயனின் திண்டாட்டம் ஒரு புது அனுபவம் அவருக்கு. தன்னை யாரென்று விளக்க, விளக்க அதை மறுக்கும் மக்களை இதுவரை அவர் சந்தித்ததே இல்லை.

அந்தக் கூட்டத்தின் தலைவன் வந்தியத் தேவனைத் திட்டும் தோரணையில் தொடர்ந்தான் ''நீங்கள் இருவரும் தன்னந்தனியாகப் படகுகூட இல்லாமல் மரக்கட்டையைத் தள்ளிக் கொண்டு வந்ததைப் பார்த்தோம். கடலில் விழுந்து தத்தளித்த நீங்கள் கொள்ளையரின் கொலைகார ஆட்களிடம் சிக்காமல் காப்பாற்றினோம். ஆனால், அதற்காக நாங்கள் முட்டாள்களா? வணிகர் என்று சொல்லுங்கள். நம்புகிறோம். வீரர் என்று சொல்லுங்கள். அதையும் நம்புகிறோம். அதற்காகப் பொன்னியின் செல்வர் இவரென்று கூறுகிறீரே. பொன்னியின் செல்வர் இவர் என்றால், நீர் என்ன வந்தியத் தேவரா?'' என்றான் அந்த மனிதன்.

வல்லவராயன் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினான். முதலில் தன் புகழ்கூடக் கடல் கடந்து வந்தது பற்றி

மனதுக்குள் மமதை. ஆனால், இப்போது தான்தான் வந்தியத் தேவன் என்று சொன்னால், நிச்சயம் பித்துப் பிடித்தவன் என்று முடிவெடுத்துவிடுவார்கள் என்று தெரியும். தன் நிலைமையைக் கண்டு விரக்தியாகச் சிரித்து விட்டான்.

அது அந்த மனிதனுக்குப் பிடிக்கவில்லை. ''இப்போது பரிகசித்து நகைக்கவும் நகைக்கிறீர். பித்துத் தலைகேறியதனால்தான் இப்படிப் பேசுகிறீர். இல்லை என்றால் வேறு என்ன இருக்க முடியும்? உம்முடன் பேசுவதில் பயனில்லை. இவரைப் பார். அவர் குழப்பவில்லையே. அவரிடம் கேட்டால் போகிறது'' என்று பொன்னியின் செல்வரிடம் திரும்பினான்.

''ஐயா, இந்த ஆள் பிதற்றுகிறார். நீர் உண்மையில் யார்?''

''அவர் சொல்வதும் உண்மை, நீர் கேட்டதும் உண்மை'' என்று கூறிவிட்டுப் பொருள் பொதிந்த புன்னகை புரிந்தார், பொன்னியின் செல்வர்.

''இவன்தான் பிதற்றுகிறான் என்றால் நீருமா? உம்மை நான் தலைவர் என்று நினைத்து விட்டேனே!'' அந்த மனிதனின் குரலில் மாற்றம்.

பொன்னியின் செல்வர் பொறுமை இழந்தார். ''சரி, நாங்கள் சொல்வதை நீங்கள் நம்புவதாக இல்லை. நாங்கள் யாரோ அதைத் தானே நாங்களும் சொல்ல முடியும். இப்போது என்ன செய்வது? நீங்கள் பொன்னியின் செல்வரைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்றார்.

''அவர் ஒரு முறை நாகைப்பட்டினம் வந்தபோது தூரத்திலிருந்து பார்த்திருக்கிறேன். ஆனால், அவர் உம் போல் இல்லையே'' என்றான்.

உண்மைதான். பொன்னியின் செல்வர் உருவத் தோற்றத்திலும் பெரிய மாறுதலை நாமும் காண்கிறோம். அவர் முகத்தில் இப்போது கருகருவென்று மீசையும் தாடியும் வளர்ந்திருந்தது. ஆனால் அவர் சௌந்தர்ய முகம் முழுவதுமாகத் தெரியவில்லை. இரட்டைக் குதிரை பூட்டிய ரதத்தில் தனியே அல்லது வல்லவராயருடன் தஞ்சையின் தெருக்களில் அவர் வந்த பவனிக்கு இப்போது சம்பந்தமே கிடையாது. அடையாளம் தெரியாததில் அதிசயம் ஒன்றும் இல்லை.

என்ன செய்வது என இரு கோஷ்டியினரும் யோசித்திருக்கையில், அந்த மனிதனுக்கு ஒரு யோசனை வந்தது. ''பொன்னியின் செல்வர் கையில் சங்குச் சக்கரம் இருக்குமெனக் கேள்விப்பட்டிருக்கிறேன், உங்கள் கையைக் காட்டுங்கள். அதில் அது இருந்தால்

நம்புகிறோம். இல்லை என்றால் உம்மை இங்கேயே விட்டு விட்டுச் சென்று விடுவோம். நீங்களும் உங்கள் விதியுடன் மோதிப் பாருங்கள்'' என்றான், சற்றுக் கோபமாக.

''அவர் கையில் சங்கும் சக்கரமும் இருக்கும் என்று உமக்கு எப்படித் தெரியும்?'' என்றார் பொன்னியின் செல்வர்.

''இது நான் அதைப் பார்த்த மக்கள் சொல்லிக் கேட்டறிந்த விஷயம்'' என்று பதில் வந்தது.

''சரி, சங்குச் சக்கரம் எப்படியிருக்கும் என்றாவது தெரியும் அல்லவா?'' எனக் கூறியபடி இரு கைகளையும் விரித்தார்.

கடல் மேல் சூரியன் வந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம் அவர் விரித்திருந்த கைகளில் பட்டது. ஏதோ சூரியன் எழுந்ததும் விரியும் தாமரை போல இருந்தது, அவர் கையை விரித்தது. அவ்வளவு மென்மை! அவ்வளவு இளம் சிவப்பு நிறம்!

அதை உற்றுப் பார்த்தவன் ஒரு நொடியில் ''ஆஹா'' என்று வியப்பொலி ஒன்றைச் செய்து பின் மணற் தரையின் மீது மண்டியிட்டான். ''அரசர்க்கரசே!'' என்றான். அவர் கையை விடுவதாக இல்லை. அதில் தன் முகத்தைப் புதைத்தபடி அழுதான்.

வந்தியத் தேவனுக்கு அதிசயம். ''என் தம்பி நாடாளப் பிறந்தவன். அவன் கைகளில் சங்கு சக்கர ரேகை ஓடுகிறது'' என்பாள் எப்போதும் அவன் மனைவி குந்தவை.

''உள்ளங்கையில் ஓடும் ரேகையை வைத்து என்ன முடிவு செய்ய முடியும்?'' என இவன் நினைத்த நாட்கள் உண்டு. குழந்தை கருவில் இருக்கும்போது அதன் எதிர்காலம் முழுவதும் அதற்குத் தொடர்படம் போலத் தெரியுமாம். அதன் பின் பூமிக் காற்றைச் சுவாசித்த பின்பே அனைத்தையும் மறந்து விடுமாம் அந்தச் சிசு.

அது அனைத்தும் தெரிந்த போது கையை மடித்து வைத்திருப்பதே அந்த ரேகைகளை உருவாக்கும் என்பார்கள். ஆனால், ஒன்று. ரேகையை வைத்து மூவுலகை ஆள முடியுமோ இல்லையோ, நிச்சயமாகத் தான் யார் என்று நிரூபணம் செய்ய முடியும் என்று புரிந்து கொண்டான்.

கடற்கரையில் மனதை நெகிழ வைக்கும் சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. இவர்களைத் தேடி வந்த எல்லாரும் இருவரின் முன் வந்து சேர்ந்தனர். மற்றவர்களும் மண்டியிட்டுக் கைகூப்பிக் கும்பிட்டபடி இருந்தனர். பலரும் பொன்னியின் செல்வருடைய முகத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது சூரியக் கதிர்கள் பட்ட அவர் திருமுகத்தைப் பார்த்ததும் அடையாளமும் கண்டு கொண்டார்கள். ''இது சொப்பனமில்லை, இந்த அற்புதமான நிகழ்வு பொய்யில்லை!'' என்று உறுதியாய்த் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்கள். பொன்னியின் செல்வர் எழுந்திருக்கச் சொன்னவுடன்தான் அனைவரும் எழுந்தார்கள், அதுவும் மனம் வராமல்.

எழுந்தவுடன் அவர்களை அறியாமல் கைகளைக் கூப்பிக் கொண்டனர். அவரை வணங்கியபடியே நின்றனர்.

வந்தியத் தேவனுக்குத் தன்னைப் பித்து என்று கூறியவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டதில் பெரும் மகிழ்ச்சி. மிக முக்கியமான ஒரு தருணத்தில் உதவிய சங்குச் சக்கரத்தை மனதார வாழ்த்தினான். இல்லை என்றால் அவனை ஒரு மரத்தில் கட்டிப் போட்டிருப்பார்கள், எலும்புக் கூடுகளுக்கு நடுவே.

இளவரசரிடம் ஏதோ அதிசய சக்தி இருக்கத்தான் செய்கிறது. சோழ நாட்டு மக்கள் இளவரசர் அருள்மொழி வர்மர் என்றால் தலை கால் தெரியாமல் கூத்தாடுவதில் வியப்பில்லைதான் என்று நினைத்துக் கொண்டான். ''நமக்கு எப்போதும் அவர் அருகில் இருப்பதனால், அவரது அருமை முழுவதுமாகத் தெரியவில்லை.''

அந்தக் கூட்டத்தின் தலைவன் எவ்வளவு அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் அவன் கண்களில் நீர் ததும்பியது. அவனை அறியாமல் விம்மல் எழுந்தது. கண்ணீர்த் துளிகள் வெண்மணற் தரையில் உருண்டு விழுந்தன.

இளவரசரின் வற்புறுத்தலின் பேரில் எல்லாரும் அழுவதை நிறுத்திக் கொண்டனர். அதற்குப் பின் இருவரையும் வரவேற்று உபசரிப்பதில் சிறிதும் காலம் தாழ்த்தி விடவில்லை.

''ஐயனே! பூமண்டலாதிபதி உம்மை இத்தனை நேரம் நிறுத்தி வைத்து விட்டதற்காக மன்னிப்பைக் கோருகிறோம். சகல ஜீவராசிகளையும் ரட்சிக்கும் பரம்பொருளின் அருளால் காப்பாற்றப்பட்டுத் தாங்கள் எங்கள் கைகளில் ஒப்புவிக்கப்பட்டது ஒரு தெய்வீக விஷயம் தானே. ஆதியோடந்தமாகச் சேர்ந்தாற்போல் இருக்கும் ஈசன் எங்களுக்குக் காட்டிய அருள்தானே. வாருங்கள். இந்த ஏழைகளின் இடத்துக்குச் செல்வோம்'' என்று வழிகாட்டினான்.

மரங்களுக்கு இடையே எல்லாரும் நடக்கத் தொடங்கினர். மலைச் சரிவில் இருந்த தம் ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள்.

வானளாவிய பாறைகளும் அவற்றின் இடையிடையே நெடிய தென்னை மரங்களும் காட்சியளித்தன. அதனிடையில் ஏறிச்

சென்று மலையுச்சியை அடைந்தார்கள். வழி செங்குத்தாக ஏறியது. மக்கள் நடந்து நடந்து படிகள் போல உருவெடுத்திருந்தது வழி.

வந்தியத் தேவனுக்கு மூச்சு இரைத்தது. சற்றுத் தூரம் ஏறிய பின், அவர்களது ஜாகை கண்ணுக்குத் தெரிந்தது. அந்த ஆரணியப் பகுதியில் ஒரு மலைச்சரிவு. அதில் ஒரு குகை. கடல் மேலிருந்து விர்ரென்று அடித்துக் கொண்டிருந்த வாடைக் காற்றின் குளிரில் கஷ்டப்படாமல் குகை எதிர்த் திசையைப் பார்த்துக் கொண் டிருந்தது. அதைச் சுற்றிலும் உயர்ந்த மரங்கள் மற்றும் அடர்ந்த செடி கொடிகள் இருந்தபடியால் அந்தப் பிரதேசத்தில் அது தெளிவாக எதிரியின் கண்களில் தென்படாது.

தீவில் ஒரு தீவு போல இருந்தது குகை. வேறு சந்தர்ப்பத்தில் பார்த்திருந்தால் மிகவும் எழில் மிகுந்த இடமாக இருந்திருக்கும்- ஓய்வில் தங்குவதற்கு. திரும்பிப் பார்த்தால், கீழே வெகு தூரம் மணற்பாங்காயிருந்தது. அதற்கப்பால் கடல் அலைகள் வெண்ணுரையுடன் வந்து மோதிக் கொண்டிருந்தன.

குகைக்கு முன்னால் சிலர் அதிசயத்துடன் இவர்கள் ஏறி வருவ தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். "இன்னும் சிலரைக் குகையில் விட்டு விட்டு வந்தோம்" என்று சொன்னான் அந்த அகதிகள் குழுவின் தலைவன்.

வாசலில் காத்திருந்தவர்களை ஒருவன் ஓடிச் சென்று பார்த்து, அவசரமாய்ப் பேசி, இவர்கள் மேலே சென்றவுடன், அவர்களை யும் மண்டியிடச் செய்தான். எல்லாரும் பொன்னியின் செல்வ ரைக் கண்டதில் வெகு குதூகலமாயிருந்தார்கள்

"நமது அரச குலத்தினர் விஜயம் செய்திருக்கிறார்கள். இவர் களுக்கு உணவு அளிக்க வேண்டும். சோற்றுப் பானையை அடுப்பில் வைக்கச் சொல்" என்று கட்டளையிட்டான், தலைவன். எல்லாரும் வந்த விருந்தாளிகளைச் சுற்றி நின்றனர். உணவு தயாராவதற்குள், ஒரு சீப்பு சிகப்பு நிற வாழைப் பழங்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டன. வந்தியத் தேவன் வாயில் அப்படியே கரைந்தன அந்தப் பழங்கள். மனமில்லாமல்தான் கனிகளின் தோல்களையேகூட அவன் விட்டெறிந்தான்.

அவர்களிடம், இது எப்படி, அது எப்படி, என்று சரமாரியாகக் கேள்விகளைப் பொழிந்தார், அருள்மொழி வர்மர். "நீங்கள் எல்லாரும் யார்? ஏன் இந்த நிலையில் இருக்கிறீர்கள்?" என்று கவலைக் குரலில் பொன்னியின் செல்வர் கேட்டார். "முதலில் உமது பெயரைச் சொல்லுங்கள்" என்றார்.

"ஐயனே, நான் மெய்யப்பன்" என்றான் அந்தக் கூட்டத்தை நடத்திச் சென்ற தலைவன். தாங்கள் யாரென்றும் விவரமாய்க் கூறினான். செல்வச் செழிப்புள்ள ஒரு வர்த்தகக் கூட்டத்தார் சோழப் பேரரசின் கீழ், கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் நடத்தி வந்தார்கள். 'நானா தேசத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' என்னும் வர்த்தகரின் உழைப்பில் சோழநாடு நாளுக்கு நாள் செழிப் படைந்து வந்தது. அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் இவர்க ளெல்லாம். இந்த தீவுக்கு சிலர் கப்பல் உடைந்து நீந்தி வந்தார்கள். சிலரோ கொள்ளையரின் பிடியிலிருந்து தப்பி வந்தவர்கள்- சில நாள் அடிமை வாழ்வுக்குப் பின்.

இவர்கள் எல்லாரும் பட்டினத்தின் நாகரிகத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். எப்படியெல்லாமோ சுகத்தில் ஊறி வாழ்ந்த வர்கள்! ஆனால், இந்த ஆரண்ய வாழ்க்கைக்குத் தகுந்தபடி அவர்களுடைய நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொண்டு விட்டனர்.

கடைசியில் மெய்யப்பன் கூறினான்: "நீங்கள் வந்ததனால் எங்களுக்கு விடிவு காலம் வந்து விட்டது."

தனக்கு எவ்வளவு பெரிய கடமை இருக்கிறது என நினைத்த போது, பொன்னியின் செல்வருக்கே மலைத்துப் போனது. அரசர் களுக்கு ஈடான செல்வத்தை சொந்தம் கொண்டாடியவர்கள். இன்று குளிரிலும் மழையிலும் அவதிப் பட்டுக்கொண்டிருந்தனர். கஷ்டத்தையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவர்க ளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்திருந்தது. அதன் காரணம் அசைக்க முடியாத ஓர் உறுதி அவர்கள் மனத்தில் ஏற்பட்டிருந்தது. தர்மமே நடக்குமென்று. இப்போது நாடே போற்றும் மாமனிதர் இவர்களிடையே வந்தது அதற்கு ஒரு சான்று.

மெய்யப்பன் தொடர்ந்தான்; "முன்னொரு காலத்தில் தடை யின்றி கடல்களைச் சுற்றி இருந்தோம். இப்போது இங்கு வந்து சேர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இத்தனை காலமும் நாங்கள் உயிர் வாழ முடிந்தது, மீண்டும் தமிழகத்தை என்றாவது சென்று சேர்வோம் என்ற ஆசையினால்தான்" என்று சொல்லி அழத் தொடங்கினான், ஏதோ அடக்கி வைத்த அணை உடைந்தாற் போல். எல்லாரும் விம்மினார்கள்.

"ஏன் அழுகிறீர்கள்?" என்றார் பொன்னியின் செல்வர்.

தன் விம்மலைச் சற்றுப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டு, மெய்யப்பன் கூறினான்: "அரசர்க்கரசே, சோழர் ஆட்சியில் இப்படி நடக்கலாமா? நாங்கள் எல்லாரும் உங்கள் பிரஜைகள்

அல்லவா? நான் இந்தத் தீவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் இருக்கும் என்று நினைக்கிறேன். முதலில் தினமும் சூர்யோதயத்தை எண்ணுவேன். பின் எண்ணுவதை நிறுத்திக் கொண்டேன். வந்த காலத்தில் தினமும் கடலைக் கவனிப்போம், ஏதாவது கப்பல் வருமென்று. ஆனால், அதையும் நிறுத்தி விட்டோம்- உலகம் எங்களை மறந்து விட்டது என்று நினைத்துக் கொண்டு.''

கண்களைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தான். ''என்னை உயிருடனும் விடுதலையுடனும் விட்ட கடவுள் பலருக்கு அந்தப் பாக்கியத்தையும் கொடுக்கவில்லை. கடலில் மூழ்கி இறந்தவரும், சாட்டையடிக்குப் பயந்து உழைத்தே இறந்தவரும் பலர். கடல் கொள்ளையரின் லீலைகளை நாங்கள் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். எத்தனையோ மரக்கலங்கள் கடலுக்குக் கீழே உடைந்தும் முறிந்தும் கிடக்கின்றன. வணிகர் சேர்த்து வந்த செல்வத்தை அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு போய்விட்டனர். தப்பித்த எங்களை வருண பகவான் பல நாட்களாக முற்றுகையிட்டு விட்டார். அங்கு எலும்பாய்க் கிடக்கும் பலர் அந்த ஆழ்கடலை நீந்திக் கடக்க முயன்றார்கள். அலைகளும் குளிரும் அவர்களை எமலோகத்துக்கு அனுப்பின. பின் தப்பிக்க நினைத்த தீவுக்கே அவர்களைக் கொண்டு வந்து சேர்த்து விட்டன அலைகள்.''

பொன்னியின் செல்வருக்கும் வந்தியத் தேவனுக்கும் வருத்தம் நெஞ்சை அடைத்தது. என்ன கொடுமை! திருப்தியாக ஒருவேளை உண்டோம் என்று இல்லாமல், நிம்மதியாய் உறங்கினோம் என்று இல்லாமல், தங்கள் குழந்தைகளைப் பார்ப்போமா என்று கூடத் தெரியாமல் எவ்வளவு நாட்கள் கழித்துவிட்டார்கள்.

''இத்தனை ஆண்டுகளாக எவ்வளவோ பொறுமையுடன் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டாயிற்று. இதற்கெல்லாம் காரணமானவர்கள் பதில் சொல்ல வேண்டாமா?'' என்றான் மெய்யப்பன்.

பொன்னியின் செல்வர் எழுந்தார். ''பதில் சொல்வார்கள். அவர்களுக்குப் புரியும் மொழியிலேயே கேள்வி கேட்கப்படும். அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை!'' என்று சோழர் பெருந்தகை கர்ஜனை செய்ததும், மற்றவர் வாயடைத்துப் போய் நின்றனர்.

ஏன், காற்றுக் கூட நின்றது. மரங்கள் அசைவற்றிருந்தன.



அத்தியாயம் இருபத்தொன்பது
மலையின் மீதொரு குகை

கொள்ளையர் தீவுக்கு இருவரும் வந்து சில தினங்களாகி விட்டன. எவ்வளவு நாள் என்று சரியாகக் கணக்கு வைத்திருந்தார், பொன்னியின்செல்வர். தினம் தினம் குகையில் படிந்திருந்த சுரியின் மீது அருள்மொழி வர்மர் ஒவ்வொரு சூர்யோதயத்துக்கும் ஒரு கோடு கீறிவிடுவார், நாள் கணக்குக்காக.

குகை மிகவும் எளிமையாக அமைந்த கிராமத்து வீடு போல இருந்தது. அந்தப் பிரதேசம் குன்றிலுள்ள ஒரு மச்சுத் தோட்டம் போலிருந்தது. அவ்வளவு அழகு.

ஆனால், அழகுக்காக அதை மெய்யப்பனும் சகாக்களும் தேர்ந்தெடுக்கவில்லை. முக்கியமாக அது வெகு பாதுகாப்பாக இருந்தது. குகையைச் சுற்றியிருந்த பெரிய பெரிய மரங்களெல்லாம் ஒளிந்திருந்தவர்களுக்கு இயற்கை கொடுத்த திரையாய் அமைந்தது. தீவின் மறு பக்கத்தில் இருந்த கொள்ளையர்கள் அங்கு வருவதென்றால் தீவைச் சுற்றியுள்ள மணல் பரப்பின் மூலம்தான் வர வேண்டும். இதுவரை அவர்களில் யாரும் இந்தப் பக்கம் வந்ததில்லை.

இருவரும் வந்தவுடனேயே இங்கு பயந்தாற்போல் உணவுக்குக் கஷ்டமில்லாதது பிரத்யட்சமாகத் தெரிந்தது. பொன்னியின் செல்வர் புரிந்துகொண்டார். ''தங்களை எதிர்க்க யாரும் இல்லை என்ற மமதையில் கொள்ளையர்கள் எச்சரிக்கை இல்லாமலே இருந்தனர். அதனால் அவர்களிடமிருந்து அவ்வப்போது உணவுப் பொருட்களைத் திருடி எடுத்து வர முடிந்தது. குகையைச் சுற்றியும் வாழை மரங்கள் இருந்தன. ஒரு வேளை வாழைக்காய், ஒரு வேளை பழம். ஒரு நாள் வாழைப் பூ, ஒரு நாள் வாழைத்தண்டு என்று வாழை இலை விரித்துச் சாப்பாடு தினமும் உண்டு.

ஆனால், ஓரிரு கஷ்டங்கள் இருந்தன. குகைக்குள்தான் சமைக்க வேண்டும். புகை வெளியே தெரியக் கூடாது என்று கண்டிப்பாக இருந்தார்கள். கார் காலத்தில்தான் கஷ்டம். அரிசியெல்லாம் முளை தட்டிவிடும். எங்கும் ஈரமும் பரவிவிடும்.

குகைக்குப் பின்னால் ஒரு சிறிய நீரூற்று இருந்தது. கொள்ளையர் கிராமத்திலிருந்து முன்யோசனையுடன் எடுத்து வந்த பாத்திரம் ஒன்றில் நீர் நிரப்பப்பட்டு எடுத்து வருவார்கள்.

புதிதாய் வந்த இருவரும் ஓரளவுக்கு இந்த வாழ்க்கைக்கும் பழகிப் போய் விட்டார்கள். மற்றவர்களின் உபசாரம் அவர்களது கஷ்டத்தைப் பெரிதும் குறைத்தது.

'சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரல்லவா நம்முடன் வாழ்கிறார்!' என்று அவர்களே எல்லாப் பணிவிடைகளும் செய்தனர். அரியணையைத் துறந்தவர் அல்லவா இவர் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டனர். நமக்கு விமோசனம் அளிக்கவே இங்கு வந்திருக்கிறார் என்று அவரிடம் விசேஷ அன்பும் ஆதரவும் காட்டினார்கள். வந்தவர்கள் இருவரையும் ஒரு வேலையும் செய்ய விடக் கூடாது என்ற தீர்மானத்துடன் இவர்களே எல்லாவற்றையும் வாரிப்போட்டுச் செய்தனர்.

ஆனால், இந்த உபசரிப்புகளால் ஈடு செய்ய முடியாத ஒரு வலி வந்தியத் தேவனின் மனதில் இருந்தது. தினமும் சூரிய அஸ்தமனத்துக்கு ஓரிரு நாழிகை முன்பு வந்தியத் தேவன் கடற்கரையில் நடக்கச் செல்வான். கடலில் நாலாபுறமும் கண்களைச் சுழற்றிப் பார்த்துவிட்டு வருவான். தங்களை அழைத்துச் செல்ல ஏதேனும் கப்பல் வந்ததா என்று தேடுவான். ஏதேனும் விரித்த பாய்மரம் கண்ணில் படாதா என்று ஒரு மறைவான இடத்தில் இருந்தபடி நோட்டம் விடுவான்.

அப்படித் தென்பட்டால் அதை நோக்கி நீந்திக்கூடச் சென்று விடலாமே என்ற எண்ணம் அவனுக்கு. தினமும் கப்பலைக் காணாமல் ஏமாற்றத்துடன் இரவு திரும்புவான் வந்தியத் தேவன். பல முறை மன அழுத்தத்தில் உணவுகூட உண்ணாமல் உறங்கி விடுவான்.

பின் அதுவே பழகிப்போனது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு கடற்கரையில் பல நாழிகை நேரம் அமர்ந்திருப்பான். இந்தக் கஷ்டத்தைச் சதா சுமந்திருந்தபடியால் சற்று மெலிந்தும் போய்விட்டான்.

ஒரு நாள், இதைக் கவனித்த பொன்னியின் செல்வர் அவனுக்கு ஆறுதல் சொல்ல முற்பட்டார். அவன் இருக்குமிடத்துக்கே சென்று ''வல்லவராயரே, தங்களுக்கு இங்கே எந்த விதமான தீங்கேனும் நேருமோ என்று அஞ்ச வேண்டாம். நிச்சயமாக உம்மைக் கொண்டு தமக்கையிடம் ஒப்புவிப்பேன்'' என்று உறுதி அளித்தார்.

வல்லவராயரும், ''ஐயா! எனக்கு அத்தகைய அச்சம் சிறிதும் இல்லை. உம்முடன் இருக்கும் போது எனக்கு என்னவாகும்?'' என்பான்.

''வெகு சீக்கிரத்தில் உம்மைத் தாயகம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது என் முக்கியக் குறிக்கோள்'' என்றார் பொன்னியின் செல்வர்.

வானத்தில் குமுறிக் கொண்டிருந்த மேகங்களின் உறுமல் கேட்டது. ''சீக்கிரம் வாருங்கள், குகைக்குச் செல்வோம்'' என்றார் பொன்னியின் செல்வர். இருவரும் குகையை நோக்கி நடக்கும் போது அண்ணாந்து பார்த்தார்கள். தீவின் நடு மையமாக இருந்த மலை கரும் பச்சை நிறமாக ஓங்கி நின்றது. சிறிது நேரம் இருவரும் அந்தக் காட்சியைக் கண்டு பிரமித்து நின்று கொண்டிருந்தார்கள்.

பச்சை மலை திருமாலின் மேனி வண்ணத்தை நினைவூட்டியது. திருமாலை நினைத்தவுடன் இருவருக்கும் திருமலை யென்னும் அந்த வீர வைணவர் நினைவு வந்தது. ''எப்படியிருக்கிறாரோ, உம் நண்பர்?'' என்றார் பொன்னியின் செல்வர்.

''வட திசையில் யாத்திரை சென்றார். நாம் கிளம்பும்வரை வரவில்லை. அவரை மட்டுமல்ல. மற்றவர்களையெல்லாம் பார்த்து எத்தனை காலமாகிவிட்டது! ஒரு யுகம் மாதிரி இருக்கிறது!'' என்றான் வந்தியத் தேவன்.

பேசியபடியே நடந்தார்கள். இப்போது இளங்காற்றில் எழுந்த சிற்றலைகள், இரவு அடிக்கப்போகும் புயல் காற்றில் மலை அடிவாரம் வரை வரும் என்று அறிகுறி தெரிந்தது. அங்கு வரிசையாக எலும்புகளும் மரத் துண்டுகளும் கிடந்தன. அன்று மனதை வருத்திய எலும்புக் கூடுகள் இன்று ஏதோ தெருவோரம் கிடக்கும் குப்பைகள் போலத்தான் தோன்றின.

பொன்னியின் செல்வருக்கே கஷ்டமாய்த்தானிருந்தது. தஞ்சையில் பொன்னியின் செல்வர் வீட்டுக்குள் வரும்போது ''அப்பா!'' என்று கூவிக்கொண்டு இரு குழந்தைகளும் ஓடிவருவார்கள். அவர்களைத் தம் தோளின் மேல் சாய்த்துக் கொண்டு கொஞ்சிச் சீராட்டுவார். அவர்களை எல்லாம் எப்போது பார்க்கப் போகிறோம் என்ற ஏக்கம் அவர் மனதில் ஒரு வேதனையை ஏற்படுத்தியது.

நேற்று வேறு மெய்யப்பன் ஏதோ ஆறுதல் கூறுவது என நினைத்துக் கொண்டு, இவர்களிடம், ''ஏதோ வானதி தேவியார், குந்தவை தேவியாரின் மாங்கல்ய பலத்தினாலேதான் நீங்கள் பகைவர்களிடம் சிக்காமலும், சுறா மீன்களுக்கு இரையாகாமலும் பிழைத்து வந்தீர்கள்!'' என்றான்.

மனைவியின் பெயரைச் சொன்னவுடன், அருள்மொழி வர்மருக்குத் தன் கனவில் வந்த தேவதையின் நினைவு வந்தது.

'புராண இதிகாசங்களில் அரியணை மீது பற்றில்லாத ராமனைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். அவனைப் போல் யாரும் இருக்க முடியாது என்று ஊரார் கூற, அப்படியே இருந்து நானும் சரித்திரத்தில் இடம் பிடிக்க எண்ணினேன். அவனைப் போல ஏக பத்தினி விரதனாகவும் இருந்து மக்கள் மனதில் இடம் பிடிக்க உறுதி பூண்டிருந்தேன். யார் இந்தப் பெண்? எதற்கு அந்தக் குறிக்கோளுக்குக் குறுக்கே இவள் வருகிறாள்?' என்ற கேள்வி அவரை வாட்டியது.

வானதியைத் தவிர வேறு எந்தப் பெண்ணைப் பற்றிய நினைவும் அதற்கு முன்பு அவர் அடி உள்ளத்தில் கூட இல்லை. ஆனால், இந்தப் பொல்லாத மனதை என்ன செய்வது? இதற்கிடையிலேதான் அந்தப் பெண்ணின் பிம்பத்தைக் கனவில் பார்க்கும்படி நேர்ந்தது. அதன் பலனாக அவருடைய மனக்கோட்டைகள் எல்லாம் பொலபொலவென்று தகர்ந்து விழுந்தன.

தன் வாழ்வில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளது என அவருக்குத் தெரிந்தது. அவளை நினைக்க நினைக்க, அவருடைய உள்ளம் வெடித்து விடும் போலிருந்தது. சோக வடிவானார். அவருடைய மனத்தை அறிந்து கொள்ளாத வந்தியத் தேவன், "கவலைப் படாதீர். கப்பல் ஏதாவது வரும். திரும்பச் சென்று விடலாம்" என்றான். பதிலுக்குத் தலையை அசைத்தார்.

அவள் மீண்டும் கனவில் வராதது அவரது உள்ளக் கனலுக்குத் தூபம் போட்டு வளர்த்தது. அவள் நிச்சயமாகக் கனவுக் கன்னியல்ல. உயிருடையவள் தான். நாட்டுக்குத் திரும்பி அவளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவருடைய மனோ ராஜ்யம் மேலும் விரிவடைந்து கொண்டே வந்தது. ஆனால், அதற்கு முன் கடமைகள் சில இருந்தன எனவும் உணர்ந்தார்.

அந்தப் பெண்ணின் நினைவு மட்டும் அவரை வருத்தவில்லை. "பெண் சௌந்தரியத்தினால் மனம் கெட்டுப் போய்விடுமா? என் வலிமை குறையுமா? என்னுள் இருக்கும் வீரன் கோழையாகப் போவானா? அவளைப் பார்ப்பதற்காக உயிரைத் தக்க வைத்துக் கொண்டு தாயகம் திரும்ப வேண்டுமெனத் தோன்றியதால் கொள்ளையருடன் போருக்கு ஆயத்தமாகாமல் என் மனம் பின் வாங்குமா?" என்ற சந்தேகம் வந்தது. சீக்கிரம் ஏதேனும் முடிவு செய்ய வேண்டும்.

பொன்னியின் செல்வர் மெய்யப்பன் தலைமையில் வாழ்ந்த வணிகர்களைக் கண்டு பரிதாபித்தார். "நாம் வந்த சில நாட்களே நம்மால் நிம்மதியாய்க் கழிக்க முடியவில்லை. இவர்களெல்லாம் வந்து வருடக் கணக்காகிறது."

இவர் முன்னால் வந்தபோதெல்லாம் அவர்கள் முக மலர்ச்சியோடு மரியாதையாகவே பேசினார்கள். எனினும் இவர்களின் வாழ்வு ஏமாற்றமும் மன வேதனையும் நிறைந்தது என்று பொன்னியின் செல்வர் அறிந்து கொண்டார்.

தனிமையினால் எல்லோரது அறிவும் நாளுக்கு நாள் சிதறிப் போய் வருவதைக் கண்ட பொன்னியின் செல்வர், ஒரு வட்டமான பாறையை லிங்கம் போல ஸ்தாபித்துத் தினமும் அதன் முன் எல்லாரையும் தேவாரப் பாடல்களைப் பாடும்படி செய்தார். தினமும் எல்லாரும் குளிக்க வேண்டும். கோயிலுக்குப் போய் பூஜை செய்ய வேண்டும் என்று கட்டளைகள் பிறப்பித்தார். அதன் பின்னர் எல்லாருக்கும் வாழ்க்கையில் ஒரு ஈடுபாடே ஏற்பட்டு விட்டது.

அடுத்து மெய்யப்பனைப் பொன்னியின் செல்வர் கூப்பிட்டார். "நான் தீவுக்குள் பிரவேசிக்க வேண்டும். அந்தக் கொள்ளையரின் இருப்பிடத்தைக் கவனிக்க வேண்டும்" என்றார்.

மெய்யப்பன் அலறியே விட்டான். "பொன்னியின் செல்வா! தீவுக்குள்ளே எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் செல்லக் கூடாது. சென்றால் விபரீதமாகும். கொள்ளையருக்குப் பிடித்திருக்கும் கொலை வெறியைப் பற்றி நான் என்ன சொல்வது! எதிரில் கண்டவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு போகிறார்கள்."

சர்வ ஜாக்கிரதையாகத்தான் இந்த அகதிகள் கூட்டம் வாழ்க்கை நடத்தி வந்தது என்று பொன்னியின் செல்வர் வந்த ஓரிரு நாட்களில் கண்டு கொண்டார். தேவையில்லாமல் யாரும் தீவின் மறுபக்கம் செல்வதில்லை. மேலும், மற்றவர் தூங்கும் போது ஒருவன் மலையில் ஏறிவரும் பாதையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதைப் பழக்கமாய்க் கொண்டிருந்தனர். அந்தப் பொறுப்பைப் பொன்னியின் செல்வரும் ஓரிரு நாட்கள் - மற்றவர் எதிர்த்தாலும் செய்தார்.

உணவுப் பற்றாக்குறை வந்தால் மட்டுமே கிராமத்துக்குச் சென்று உணவைத் திருடுவார்கள். அதிலும் ஒருவன்தான் செல்வான். கைக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டு பூனை போல இருளில் நடந்து வெளியேறுவான்.

காட்டில் ஆங்காங்கே சில அகதிகள் இருப்பார்கள் என்று நிச்சயமாகக் கொள்ளையருக்கு தெரியும். ஆனால், அவர்கள் மீது அதிகக் கவனம் செலுத்தாமல் தங்கள் வேலையைக் கவனித்தார்கள்

கொள்ளையர்கள். அவர்கள் பொறுமையையும் சோதிக்காமல் வாழ்க்கை நடத்துவதில் அக்கறை காட்டினான் மெய்யப்பன்.

"இந்தக் கொள்ளையர் என்ன அவ்வளவு பயங்கரமானவர்களா?" என்றார் பொன்னியின் செல்வர்.

அந்தக் கொடியவரைப் பற்றிப் பேசியபோதே மெய்யப்பனுடைய குரல் நடுங்கியது. "இந்தத் தீவுகளைச் சுற்றிக் கொள்ளையர் வைப்பதே சட்டம். கடலில் வீசும் காற்றில் சில சமயம் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் கப்பல்களில் ஏதேனும் ஒன்று தனியாய்ப் பிரிந்து வந்துவிடும். அந்தக் கப்பலை இந்தக் கொள்ளையர் கைப்பற்றி விடுவார்கள். அவர்களுக்குப் பயந்து மாலுமிகள் பலரும் கடலில் குதிப்பார்கள். அவர்களில் தப்பித் தவறிக் கரையேறியவர்களும் பசியால் சாவார்கள். கடலில் சுறாமீனிடம் மாட்டினால் சுற்றியிருந்த தண்ணீரெல்லாம் செந்நீராக மாறிவிடும். ஒரு கடியில் தொடை வரை காலைத் துண்டித்து விடும். எனினும் கடலில்தான் குதிப்பார்கள். ஏனென்றால் அதைவிடவெல்லாம் பயங்கரமானது இவர்களிடம் நடத்த வேண்டிய அடிமை வாழ்க்கை!" என்றான்.

ஆனால் பொன்னியின் செல்வரும் விடுவதாக இல்லை. மலைப் பிரதேசம் வழியாகக் கூட்டிச்சென்று, மாலைப்பொழுதில் ஒரு மறைவான இடத்திலிருந்து கொள்ளையர் கிராமத்தைக் காட்டினார்கள். "உயிருடன் பிடிபட்டால் இலேசில் விடமாட்டார்கள். அதனால் ஜாக்கிரதை!" என்று எச்சரித்தபடி அழைத்துச் சென்றனர்.

ஒரு புதரின் மறைவில் நின்று முதலில் அந்தக் கிராமத்தைப் பார்த்தார், பொன்னியின் செல்வர். சராசரிக் கிராமம் போலத் தானிருந்தது. சில கூரைகளின் வழியாகப் புகை எழுந்து கொண்டிருந்தது. ஒரு விதத்தில் அழகாகத்தான் இருந்தது. இடையிடையே சற்றும் இடைவெளி இல்லாது, முற்றிலும் மரத்தினால் செய்யப்பட்டிருந்த வேலி சூழ்ந்திருந்தது கிராமத்தை.

அழிக்கப்பட்ட கப்பல்கள் இங்கு வீடுகளாகவும் சுற்றுச் சுவராகவும் திகழ்ந்தன. எல்லாம் அடிமைகளின் கடும் உழைப்பில் வந்தவை. கிராமத்தின் நடுவில் சின்ன ஓடை ஒன்று ஓடியது. அந்த ஓடை எங்கு ஜனனம் கொண்டது என்று அது வந்த வழியைத் திரும்பிப் பார்த்தார் பொன்னியின் செல்வர்.

ஒரு உயரமான பாறையைச் சுட்டிக்காட்டி மெய்யப்பன் விளக்கினான். "இந்தத் தீவில் மழை அடிக்கடி பெய்யும். ஆனால், நிலத்தில் உள்ள ஏற்றத் தாழ்வினால் அது உடனே ஓடிச்சென்று

கடலுடன் ஒன்றிக் கரிக்கத் தொடங்கிவிடும். அதனால் மலையிலிருந்து நீரருவியாய் விழுந்து பின் ஆறாய் ஓடும் இடத்தில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர் கொள்ளையர்."

அதன் அருகே சென்று அதைப் பார்வையிட்டார் பொன்னியின் செல்வர். சில பாறைகளின் மீது ஏறினார். பின் நீர்த் தேக்கத்தை நன்றாய்ப் பார்க்க முடிந்தது. ஒரு சிறிய ஏரி போல, நீர்த் தேக்கம் அருமையாக வடிவமைக்கப் பட்டிருந்தது. அருவிக்கு நூறு அடி தள்ளி ஒரு சிறிய இடுக்கு வழியாகத்தான் தண்ணீர் கீழ் மட்டத்துக்கு ஓடியது. அந்த இடுக்கின் இருபுறமும் இயற்கையாகப் பாறைகள் அமைந்திருந்தன. அதன் இடையே சுண்ணாம்புக் கலவை, களிமண் மற்றும் மூங்கில் கீற்றுகள் கொண்டு ஒரு அணை கட்டப்பட்டிருந்தது. அதற்குப் பக்க பலமாக உருண்டையான பாறைகளும் வைக்கப்பட்டிருந்தன.

அணையில் ஆங்காங்கே பெரிய மூங்கில் பதிக்கப்பட்டிருந்தது. அதன் வெளிப்புறம் அடைக்கப் பட்டிருந்தது. கோடை காலத்தில் வேண்டும் என்கின்றபோது அதைத் திறந்து விட்டால் தண்ணீர் எப்போதும் போல ஓடும்.

அதைக் கண்டு வியந்தார் அருள்மொழி வர்மர். "ஆகா! என் பாட்டன் கரிகாலன் காவிரியை அணையிட்டான். இந்தக் கொள்ளையர்கள் கூட அதைச் செய்திருக்கிறார்களே!"

மிகவும் அழகாக இருந்தது அந்த இடம். வெள்ளை நிறத்தில் நூல் போல ஒரு அருவி வந்து அந்த அணையை நிரப்பிக் கொண்டிருந்தது. நீரின் அளவு அதிகமானால் அணையைக் கடந்து நீரோட்டம் ஓடி அந்தக் கொள்ளையர் கிராமத்தை சென்று அடைந்து, அதன் நடுவே சென்று கடலில் கலந்தது.

அதற்கு அப்பால் துறைமுகம் இருந்தது. கடல் ஒரு இடத்தில் நிலத்தின் உள்ளே வந்திருந்தது. ஆழம் அதிகமாயிருந்த அவ்விடத்தில் கப்பல்களை நிலத்துக்கு வெகு அருகே கொண்டு வந்திருந்தனர்.

அன்று அருகில் சென்று கிராமத்தைப் பார்க்க வேண்டுமென்று பொன்னியின் செல்வருக்குத் தோன்றியது. ஆனால், பொழுது முழுவதுமாகச் சாயட்டும் என்று முடிவு செய்தார். இரவு வந்ததும் பொன்னியின் செல்வரும் வந்தியத் தேவனும் அந்தக் கொள்ளையரின் கிராமத்தை நெருங்கினார்கள். வெளிச்சம் குறைவாக இருந்த இடத்தில் ஆளுக்கு ஒரு பாறையை வேலியின் ஓரமாக உருட்டி, அதன் மேல் ஏறி நின்றார்கள். கிராமத்தின் உட்புறம் பல தீவர்த்தி

களின் வெளிச்சத்தில் நன்றாய்த் தெரிந்தது. ஆள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

கொள்ளையரை நேரில் பார்ப்பதற்கு அவர்களுக்கு ஏதோ போலிருந்தது. அவர்களைப் பற்றி எட்டு மாத காலமாகப் பேசியாயிற்று. ஓரிரு வாரங்களாகப் பயந்தும் வாழ்ந்தாயிற்று. இப்போதுதான் நேரில் பார்க்கிறார்.

அந்தக் கிராமத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு முகத் தோற்றம் கொண்டிருந்தார்கள். ஆனால், ஒரு ஒற்றுமை. எல்லாரும் பயங்கரமான உடல் தோற்றம் கொண்டிருந்தார்கள். முகத்தில் இரு மெல்லிய கீறல்கள் போலக் கண்ணுடைய கடார நாட்டுவாசிகளே முக்கால்வாசி இருந்தார்கள். சீனர்கள், மலாயர்கள், அரேபியரும் இருந்தனர். பல பரத கண்டத்தைச் சேர்ந்தவரும் இருக்கிறார்கள் என்று தெரிந்தது.

உள்ளே ஒரே கும்மாளமாய் இருந்தது. பல மொழிகளில் பாட்டு. போதையில் பாடிய வேற்று மொழி வார்த்தைகள் கொண்டவையென்பதால் எதுவும் எட்டிப் பார்த்தவர்களுக்குப் புரியவில்லை. வலது பக்கத்தில் ஏதோ துன்பக் குரல்கள் கேட்கவே அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

நடுங்கிக் கொண்டிருந்த ஆண்கள் அடங்கிய ஒரு கூட்டம் அங்கே பந்தமுற்ற கைகளுடன் தலை குனிந்து நின்றது. அவர்களைச் சுற்றி யம கிங்கரர்களைப் போன்ற முரடர்கள் சிலர் கையில் சாட்டைகளுடன் நின்றார்கள். அவர்கள் சிரித்துக் கொண்டே அவ்வப்போது நடுவில் நின்றவர்களை அடிக்கவும் செய்தார்கள்.

அடிமைகளின் முகத் தோற்றத்திலிருந்து அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவராய் இருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிந்தது. அடிமைகளின் அழுகுரல் காதில் நாராசமாக விழுந்தது.

இந்தக் காட்சியைப் பார்க்கும்போதே வந்தியத் தேவனின் உள்ளம் பதைத்தது. பொன்னியின் செல்வருடைய மன வேதனை பன்மடங்காயிற்று. ஆனால், பொறுமை காத்தார். அந்த அடிமைகளைத் துன்புறுத்திக் கொண்டிருந்த கொள்ளையரைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு வேலி மீது ஏறிக் குதிக்க முயற்சித்தான் வந்தியத் தேவன். அவனைத் தடுத்து நிறுத்தினார் பொன்னியின் செல்வர். அவனுடைய உடல் மட்டும் சிறிது நேரம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவமானமும் ஆத்திரமும் தொண்டையை அடைக்கத் தழுதழுத்த குரலில், "நம் மக்கள் சாட்டையடி

படுவதைக் கண்டும் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே!" என்றான்.

அவன் வார்த்தைகள் பொன்னியின் செல்வருடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின. அந்தக் காட்சியைக் கண்ட பின் அவர் கண்ணிலும் நீர் ததும்பிற்று. அவருடைய மன அமைதியை மிகக் குலைத்தது.

'அங்கு அரங்கேறியது சோழரின் ஆட்சிக்கு ஒரு சவால் அல்லவா? சோழன் ஆட்சி செய்யும்போது கொள்ளையரா? வரலாறு என்ன சொல்லும்? அந்த அபகீர்த்தி மறைவதற்கு நாம் பாடுபட வேண்டாமா?'

சற்றுத் தூரம் இருளில் நடந்தார்கள். மெய்யப்பன் சொன்னான் "இந்தக் கொள்ளையர்கள் இரக்கமற்ற ராட்சசர்கள். பிடிபட்டவர்களை மனிதர்களாகவே நடத்த மாட்டார்கள். கால்நடைகள் போன்றதுதான் இனி அவர்களது வாழ்க்கையும்."

திரும்பி வரும்போது அருள்மொழி வர்மர் அந்தக் கிராமத்தை நன்றாக நோட்டம் விட்டார். ஒரு போரின் போது இந்தக் கோட்டையின் சக்தி என்ன? பலவீனம் என்ன? என்பதையெல்லாம் தெரிந்து கொண்டார்.

மெய்யப்பன் தொடர்ந்தான். "அதோ, பாருங்கள், நடுவில் இருக்கும் பெரிய குடிசையை. அங்குதான் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை வைத்திருக்கிறார்கள். ஒரு நாள் இரவு நானே பார்த்தேன். ஆனால், அன்று நான் தேடியது என் பசிக்குச் சற்று நெல் என்பதனால் அது பெரிதாகத் தெரியவில்லை" என்று சொல்லிச் சிரித்தான்.

"எல்லாம் கப்பல்களிலிருந்து கொள்ளையடிக்கப் பட்டவை. ராணியின் மேனியை அலங்கரிப்பதற்கு உகந்தவை. அப்படி ஜொலிக்கும்! பட்டமகிஷி கழுத்தில் தொங்க வேண்டியவை. மன்னாதி மன்னர்களெல்லாம் தங்கள் மணி மகுடத்தில் சேர்ப்பதற்கு ஆசைப்படக் கூடியவை. இங்கு வெறும் ஓலைக் குடிசையில் கிடக்கின்றன."

பொன்னியின் செல்வர் ஒரு கேள்வி கேட்டார் "கொள்ளையடித்த அனைத்தும் இங்கு வந்து விடுமா?"

"இல்லை. கீழ்த்திசை நாடுகளில் கிடைக்கும் கற்பூரம் போன்றவை கப்பலிலேயே வைக்கப்படும். காற்றில் பட்டால் கரைந்துவிடும் என்பதற்காக அவற்றை இங்கு எடுத்து வருவதில்லை" என்றான் மெய்யப்பன்.

பொன்னியின் செல்வர் சட்டென நின்று விட்டார். அப்போது சரியாக நீர்த் தேக்கத்தின் வடக்கு எல்லைக்கு அருகே வந்திருந்தனர். அந்த இருளிலும் அவர் முகம் ஜொலித்தது. நீர்த் தேக்கத்தைப் பார்த்தார். தூரத்தில் துறைமுகத்தில் நின்ற கப்பல்களைப் பார்த்தார்.

தன் மனோரதம் நிறைவேறும் ஒரு வழி அவருக்குத் தோன்றி விட்டது.



அத்தியாயம் முப்பது

சோழம்! சோழம்!

கொள்ளையர் கிராமத்திலிருந்து ஒரு மூட்டை அரிசியைத் திருடி வந்தாயிற்று என்று குதூகலத்தில் இருந்தார்கள் எல்லாரும். வந்தியத் தேவனின் முகம் கூட மலர்ந்திருந்தது. மூன்று நாட்களாக வாழைப்பழத்தைச் சதா சாப்பிட்டு இருந்தாயிற்று. "இது இன்னும் ஒரு வாரம் தொடர்ந்தால், என்னாலும் மரமெல்லாம் ஏற முடியும்!" என்று விளையாட்டாய் அவன் சொல்லி வந்தான்.

கொள்ளையர் கிராமத்திலிருந்து பொருட்களைத் திருடி வருவதில் சுந்தரம் எனும் வணிகன் கைதேர்ந்து விட்டான். அரிசி வந்தவுடன் அதில் உப்பிட்டு அதை வடிக்க மற்றவர் முற்பட்டனர். சற்று நேரத்துக்கெல்லாம் அடுப்பு ஏற்றப்பட்டு உணவு கொதிக்கும் வாசமும் குகையிலிருந்து வெளிவந்தது. உணவு தயாராகிவிட்டது என்று ஒருவன் வந்து சொன்னான். அது காதில் விழாதவர்போல் ஆழ்ந்த யோசனையில் இருந்தார், பொன்னியின் செல்வர்.

"ஏன் கவலையாயிருக்கிறீர்கள்?" என விசாரித்தான் வந்தியத் தேவன்.

"இன்னும் எத்தனை நாள்தான் கள்வர்கள் போல வாழ்க்கை நடத்துவது?" என்றார் பொன்னியின் செல்வர்.

"இதற்காகச் சாப்பிடாமல் இருக்கப் போகிறீர்களா? வாருங்கள். இப்போதே சூரியன் அஸ்தமிக்கும் நேரம் ஆகப்போகிறது. மற்றவர்கள் பசியில் சாப்பிட உட்கார்ந்து விட்டார்கள்" என்று அவசரப்படுத்தினான்.

"இல்லை, அவர்களெல்லாம் சாப்பிடட்டும். எனக்கு இப்போது சாப்பாடு இறங்காது" என்றார் பொன்னியின் செல்வர்.

"இந்தப் பிராந்தியத்தில் பிழைப்பதே புனர்ஜன்மந்தான். இதில் பட்டினி வேறா?" என்றான் வந்தியத் தேவன். அதற்குள் மெய்யப்பன் அவர்களை அழைக்க வந்துவிட்டான். அவர்கள் பேசியதைக் கேட்டுவிட்டு அவன் முகம் சுருங்கிற்று.

"திருடி வாழ்வதற்கு எனக்குக் கூட வருத்தமாகத் தானிருக்கிறது, அரசே. ஆனால், எங்களைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை. பத்துப் பேர் ஒரு கொலை வெறி பிடித்த சேனையை என்ன செய்ய முடியும்?" என்றான்.

பொன்னியின் செல்வருடைய முகம் மலர்ந்தது. "முடியும். எல்லாரும் வயிறார உண்டபின் அங்கு வாருங்கள்" என்று அவருக்குப் பிடித்தமான பாறையொன்றைச் சுட்டிக் காட்டினார். சில நாட்களாக அனைவரும் அங்கு சூரியன் சாயும் காலத்தில் ஒன்று கூடுவதை வழக்கமாய் வைத்திருந்தார்கள். விளையாட்டுக்காக எல்லாரும் அதை மந்திராலோசனைக் கூட்டம் என்றுகூடக் கூறுவார்கள்.

அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம் கானகத்துக் குகையின் வாசலில் திண்ணை போல ஒரு பாறை இருந்தது. காற்றில் குலுங்கிய விருட்சங்களிலிருந்து மலர்கள் உதிர்ந்து அந்தப் பாறையைச் சுற்றியிருந்தன- புஷ்பக் கம்பளம் விரித்தது போல. அதில் கம்பீரமாக வீற்றிருந்தார் சோழர் குல இளவரசன்.

கல் என்றாலும் அதுவும் அரியணைதான். இளவரசன் எதில் அமர்ந்தாலும் அதுவும் அரியணைதானே! தனக்கென நாடு கெஞ்சிக் கொடுத்த தங்கமும், வைரமும் பதித்த கரிகாலனின் அரியணையை வேண்டாம் என்று மறுத்துவிட்டு இப்போது இந்தப் பாறையில் அமர்ந்து எதிர்காலத்தைப் பற்றி முடிவு செய்து கொண்டிருந்தார் அருள்மொழி வர்மர்.

அவர் முகத்தில் கம்பீர தேஜஸ் குடி கொண்டிருந்தது. சுற்றிலும் அவரது மந்திரி சபை தரையில் அமர்ந்திருந்தது. இன்று ஆலோசனை பலமாக இருக்கும் போலிருந்தது.

அவர் முகத்தில் பல நாட்களாக இருந்த மலர்ச்சியை இன்றைக்குக் காணோம். ஆழ்ந்த யோசனையில் முகத்தில்கூட அசைவுகள் தெரியவில்லை. காற்றில் அவரது தலைமுடி மட்டும் சுட்டற்றுப் பறந்தது.

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு அச்சோழர் பெருந்தகை தொண்டையைக் கனைத்துக் கொண்டு மென்மையான குரலில் பேசினார்.

"மெய்யப்பரே!, இந்தக் கொள்ளையரின் அட்டூழியங்களை எவ்வளவு நாள் பொறுத்துக் கொள்வது?" என்று முதல் கேள்விக் கணையைத் தொடுத்தார், பொன்னியின் செல்வர்.

"பொன்னியின் செல்வா! இங்கு நம்மால் என்ன செய்ய முடியும்? தோற்றுத் துரும்பாய்ப் போய், குடும்பத்தையும் நாம் பார்க்காமல், நாம் இருக்கிறோமா இல்லை மூழ்கி விட்டோமா என்று அவர்களுக்கும் தெரியாமல், தவிக்கின்றோம். நாங்களோ வணிகர்கள். எதிரணியில் இருப்பது வெறி கொண்ட வீரர்கள், விதி சதி செய்கிறது. நம்மால் என்ன செய்ய முடியும்?" என்று யோசிக்காமல் பதில் சொன்னான் மெய்யப்பன்.

"விதிப்படி நடந்துவிட்டது. இனி அதை மாற்ற முடியாது என்று நாம் இருக்கக் கூடாது. நீங்கள் நினைப்பது போல அவர்கள் வீரர்கள் அல்ல. மற்றவரைப் பணிய வைப்பதால் அவர்கள் வீரர்களாய் இருக்க முடியாது. அவர்கள் கோழைகள். அவர்களால் தொடர்ந்து எதிர்ப்பைச் சகித்துக் கொள்ள முடியாது" என்றார் பொன்னியின் செல்வர்.

கொள்ளையர் பெரும் சக்தி வாய்ந்தவர்கள் என்று அகதிகள் கூறியதை அடிக்கடி கேட்டிருந்தார், பொன்னியின் செல்வர். அவர்கள் கூறியதில் எவ்வளவு உண்மை, எவ்வளவு கற்பனை என்று அருள்மொழிவர்மரால் நிச்சயித்துச் சொல்ல முடிந்தது.

பயமென்பது கற்பனை எனும் ஓவியனின் தூரிகை என்று அவருக்கு நன்கு தெரியும். கப்பலைச் சூழ்ந்து கொண்டவுடனே, ஒரே மூர்க்கமாய் அதைத் தாக்கிக் கைப்பற்ற யத்தனிப்பார்கள் கொள்ளையர்கள். எதிரணியில் யாருக்கும் திருப்பித் தாக்கும் மனோதைரியம் இல்லை என அவர்களுக்குத் தெரியும். இவர்களைக் கண்டே பயணிகள் பயப்படுவார்கள், அதுதான் மற்றவர்களை அவர்கள் துச்சமாகக் கருதக் காரணம் .

"அவர்கள் காற்றில் வீசும் வாளைக் கண்டு, பீதி கொண்டு மற்றவர்கள் அலறுவார்கள். இதனால் இவர்கள் தாங்கள் வீரர்கள் என்று நினைத்து விட்டனர். அது அப்படியில்லை. உண்மையில் இவர்கள் தொடை நடுங்கிப் பயல்கள்!" என்றார்.

அவர் மேலும் தொடர்ந்தார், "அவர்களை நிச்சயம் தோற்கடித்து விடலாம். இந்த யுத்தத்திலே நாம் ஜயம் பெற்றோமானால் அதனுடைய பெருமை முழுவதும் கடவுளுக்கே. ஜெயம் என்பது

உயிருடன் தப்பிப்பது மட்டும் அல்ல. இந்தத் தீவில் கொள்ளையரின் கொட்டத்தை அடக்கிவிட வேண்டும். இவர்களை எதிர்க்க நம்மால் முடியும். மடிந்தாலும் அவனுக்கு ஒரு வலியை உண்டு பண்ணிய பின் மடிவோம். இந்த முயற்சியை நாம் செய்யவில்லை என்றால் அது பலருடைய வாழ்க்கையைப் பாதிக்கும்" என்றார்.

"நான் இந்தத் தீவில் வீண் பொழுது போக்க விரும்பவில்லை. 'நீ என்ன காரியத்துக்காக வந்தாய்?' என்று என் உள் மனம் அடிக்கடி கேட்கிறது. கொள்ளையரைத் தரிசனம் செய்து புண்ணியம் கட்டிக் கொண்டு போவதற்காக வந்தேனா? கொலைக்குக் கொலை, பழிக்குப் பழி வாங்குவதற்காக வந்தேன். சோழர் பிரஜைகளைத் துன்புறுத்தி நடந்து கொண்டால் சோழனின் தண்டிக்கும் கை நீளமானது என அவனுக்குத் தெரிய வேண்டும்."

அதுவரை மெதுவாகப் பேசிய பொன்னியின் செல்வரின் குரல், கொள்ளையரின் அட்டூழியங்களைப் பற்றிப் பேசும் போது சிம்ம கர்ஜனையைப் போல் மாறியது.

"இனிச் சும்மா இங்கிருப்பதில் பயனில்லை. இனிமேல் செய்ய வேண்டியதென்ன என்பதைப் பற்றி இன்றே யோசித்துவிட வேண்டும்." இவ்விதம் பொன்னியின் செல்வர் வெறி கொண்டவர் போல் பேசிக் கொண்டே போனார். வந்தியத் தேவனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். கடைசியில் குறுக்கிட்டு, "என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்?" என்று கேட்டான்.

"அந்தக் கிராமத்தை அழிக்க வேண்டும். கப்பல்களை அழிக்க வேண்டும்" என்றார் பொன்னியின் செல்வர்.

வந்தியத் தேவன் குறுக்கிட்டு, "சோழர் குலக் கோமகனே! கருணை கூர்ந்து மன்னிக்க வேண்டும். நான் குறுக்கே பேசாமலிருக்கலாகாது. நாம் இருப்பது பத்துப் பேர்தான் என்று இளவரசருக்கு நினைவூட்ட ஆசைப்படுகிறேன். நாம் பத்துப் பேர், அவர்களோ ஐந்நூறு பேர். எப்பேர்ப்பட்ட பகீரதப் பிரயத்தனம் செய்கிறோம்?"

"சரியான கேள்வி, தக்க சமயத்தில் கேட்டீர்கள். இதைத் தெளிவுபடுத்தும் கடமையும் எனக்கு உண்டு." அதற்கு, தான் ஏற்கனவே யோசித்து வைத்திருந்த பதிலைக் கூறினார் பொன்னியின் செல்வர்.

"ஆள் பலம்தானா பெரியது? ஆயுத பலம்தானா முக்கியம்? புத்தி பலம் அதை விடப் பெரியது. துரதிர்ஷ்டவசமாக நம்மிடம் ஆள் பலம் இல்லை. ஆனால், ஆண்டவன் கொடுத்த பலம்

உள்ளது. நம் அறிவைச் சொன்னேன். நாமெல்லாம் அப்படியொன்றும் நிராதரவான பிராணிகள் அல்ல. நிராயுதபாணிகளும் அல்ல. திடீரென எதிர்பாராதபோது தாக்கினால் அவன் உறையிலிருந்து வாளைக்கூட உருவ முடியாது. ஆள் பலம் குறைந்த சைனியங்கள் இயற்கையையும் உதவிக்கு அழைக்க வேண்டும் என்று யுத்த சாஸ்திரங்கள் கூறவில்லையா?'' என்றார்.

வந்தியத் தேவனுக்குப் புரியவில்லை. ஏன் திடீரெனப் பொன்னியின் செல்வரே புத்தியில்லாமல் பிடிவாதம் பிடித்து யுத்தத்துக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்? அதற்குப் பதிலாக ஒரு கப்பலைத் திருடித் தப்பித்து விடலாமே. அவனது யோசனையை முன் வைத்தான்.

அருள்மொழி வர்மர் அதை முன்பே யோசித்துவிட்டார். ''நம்மால் மீண்டும் ஒரு சமுத்திரப் பிரவேசம் முடியுமா? நாம் பத்துப் பேர். நலிந்து போயிருக்கிறோம். நம்மால், காற்று வந்தவுடன், ஒரு பாயை விரித்துக் கம்பத்தில் கட்ட முடியுமா?''

வந்தியத் தேவன் மீண்டும் எழுந்தான். ''சோழ இளவரசர் ஒருவர் எனக்கு அடிக்கடி சொல்வதை இந்த மந்திரி சபையில் சொல்ல விருப்பப் படுகிறேன்'' என்றான் வல்லவராயன்.

தான் என்றாவது சொன்னதை வைத்தே தன்னை மடக்க நினைக்கிறான் இவன் எனப் புன்னகை பூத்தார் இளவரசர்.

''முரட்டுத் துணிச்சல் கொடுக்கும் படபடப்புக்குப் பதிலாகத் தெளிந்த அறிவும் வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்வார்'' என்றான் வந்தியத் தேவன்.

பொன்னியின் செல்வர் சிரித்தார். ''நம் நாட்டில், வேலும் வாளும் ஏந்தி எத்தனையோ போர்க் களங்களில் போர் செய்து விழுப்புண் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேத மந்திரமாக வைத்திருந்தது, எந்த முகாந்திரத்தினாலும் நம் விடுதலை வேட்கையைத் தவறவிடக் கூடாது, என்பதாலல்லவா? ஆனால், நாம் இப்போது எதற்காகப் பொறுமை காக்கிறோம்? வீட்டில் பெண்டிரும் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்றுதானே. வீட்டைப் பற்றி நினைத்துப் போரிடுபவன் வீரனாக இருக்க முடியுமா? இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பின் நம் வீரம் மடிய வேண்டுமா? வீர மரணத்துக்கு ஆயத்தமாக இருக்கும்போது, யமனுக்கு நாம் ஏன் பயப்படவேண்டும்? இந்த யுத்தத்தை நாம் நடத்தாவிட்டால், என்றாவது கப்பல் வரும் என்று காத்திருந்து விட்டுப் போனால், அது என்றைக்கும் நமது அவமானத்துக்கே சின்னங்களாக விளங்கும்!'' என்றார்.

''வீர மரணம் வந்தால் கூடப் பரவாயில்லை. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதற்காக நம் விலைமதிப்பற்ற உயிரைத் தூக்கியா எறிய வேண்டும்?'' என்றான் வந்தியத் தேவன்.

''தூக்கி எறியவில்லை. நம் பகைவர்களை வேரோடு அழிக்க முடியாவிட்டாலும் பலவீனப்படுத்த வேண்டும். நமக்கு பின் வந்து போராடும் சோழ வீரர்களுக்கு இவர்களை வேரோடு பிடுங்கி எறிய அது உதவியாய் இருக்குமல்லவா?'' என்றார்.

ஆனால், அவருடைய வார்த்தைகள் வந்தியத் தேவனுக்குச் சிறிதும் உற்சாகம் அளித்ததாகத் தெரியவில்லை. ''அப்படி நாம் போரிட்டு மாண்டால் உலகத்துக்கு உண்மை தெரியாமலே போய்விடுமே ?'' என்று கூறினான்.

வந்தியத் தேவனுக்கு இதில் மனம் இல்லை என்று தெளிவாகத் தெரிந்தது. ''இன்னொரு ஜன்மம் எடுத்தால், பொன்னியின் செல்வருடன் அருகில் வாழும் பாக்கியம் வேண்டும் என்று வேண்டிய காலமுண்டு. வெகு சீக்கிரத்தில் அடுத்த ஜென்மம் எடுக்க வைத்து விடுவார் போலிருக்கிறதே!'' என்று நினைத்துக் கொண்டான்.

பொன்னியின் செல்வர் விடுவதாக இல்லை. ''வல்லவராயரே, உமது மன சாட்சிக்கு விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ள விரும்புகிறேன். நம் குலத்து முன்னோர்கள் அனைவரும் போர்க் களத்தில் புறமுதுகிடாத வீரர்கள் என்று புகழ் பெற்றது போலவே, ஒளிந்திருந்து நல்ல காலம் வருமெனவும் காத்திருக்கவில்லை. சோழ சாம்ராஜ்யத்தில் யுத்தம் என்று நடந்து வெகுகாலம் ஆகிவிட்டது. இனி அங்கு இருந்தால் நம் வேலும் வாளும் துருப்பிடித்து விடும் என்றுதானே கிளம்பி வந்தோம்?''

வந்தியத் தேவன் குறுக்கிட்டு, ''இப்போது என்ன குடி முழுகி விட்டது? எதற்காக அவசரம் கொள்கிறீர்கள்? நாம் ஏதாவது சோழர் கப்பல் இங்கு வந்த பின் இதைச் செய்யலாமே!'' என்றான். பொன்னியின் செல்வர் திடீரென அவசரம் காட்டுவது ஏன் என அவன் கண்டுபிடிக்காமல் விடுவதாய் இல்லை.

பொன்னியின் செல்வர் கூறினார். ''தெய்வ சித்தத்தினால் உயிர் தப்பினோம். இதில் எல்லாம் ஒரு படிப்பினை நமக்கு இருக்கிறது. இங்கு நலமாய் வந்தோம். பின் நாமும் மாமனார் வீட்டிலேயே மாப்பிள்ளை என்பது போல ஐக்கியமாகி விட்டோம். கொள்ளையரின் கடுஞ் சோதனைக்கு ஆளாகியிருக்கும் வணிக மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டாமா? பிறவி எடுத்ததற்கு யாருக்கேனும் ஏதாவது உதவி செய்யக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்

போது இந்த அற்ப உயிரைத் தக்க வைத்துக் கொள்வதில் என்ன பயன்?''

மெய்யப்பன் பதறிப் போனான். ''ஐயனே! உமது நாவில் இப்படித் துர்வாக்குச் சொல்லி வைக்காதீர்! தப்பித் தவறிப் பலித்து வைக்கப் போகிறது!'' என்றான்.

''வீட்டில் நாம் வந்து விடுவோம் என்று நிச்சயமாக எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகாது'' என்று பொன்னியின் செல்வர் ஆறுதல் வார்த்தை சொன்னார்.

பொன்னியின் செல்வருடைய பேச்சுத் திறமையைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. போர் முனையில் அவர் பேசியதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே யமதர்மனைச் சந்திக்கச் சென்றவர் பலர். பொன்னியின் செல்வர் இரண்டு வார்த்தை யாரிடமும் பேசிவிட்டால் போதும், அவர்கள் மனம் இளகிவிடும். அதிலும், இப்போது அவர் பேசியது போர்முனையில் பேசப்படும் வசனங்கள்.

''என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்'' என்றார்கள் வணிகர்கள். கணக்கெழுதும் வணிகர்கள் வாளேந்தத் துடிக் கிறார்கள். அது பொன்னியின் செல்வருடைய திறமை.

வணிகர் எல்லாரும் மிக்க உணர்ச்சியோடிருக்க, மெய்யப்பன் உருக்கத்தோடு தழுதழுத்த குரலில், ''ஐயனே! தாங்கள் எங்கள் அன்புக்குரிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர். எங்கள் உடல், பொருள், ஆவிக்கு உரிமையுடைய அரசர். எப்பேர்ப்பட்ட கட்டளையை இட்டாலும் செய்து முடிப்போம். உமக்கு முன் செத்து மடிவோம். வணிகருக்காக நடத்தப்படும் போராட்டம். இதில் எங்கள் பங்கேற்பு இருக்க வேண்டும்'' என்றான் அழுத்தந் திருத்தமாக. ''அரசர்க்கு அரசே! தங்கள் அருகில் உயிர் துறக்கும்படி நேர்ந்தால் அதை நாங்கள் பெரும் பாக்கியமாகக் கருதுவோம்.''

அவர்களிடம் பொன்னியின் செல்வர் காட்டிய பிரியத்தையும் அநுதாபத்தையும் பார்க்கப் பார்க்க, அவர்கள் எல்லாரும் அடிமை களாய்ப் போனார்கள் என்பது தெளிவாய் தெரிந்தது. தன் கையைப் பிடித்துக் கொண்டு யமலோகத்துக்கு நடந்து செல்லு வோம் என்று அவர் கூறியிருந்தாலும் மறு வார்த்தை பேசாமல் சென்றிருப்பார்கள். இதில் வேறுபடக்கூடிய ஒரே ஒருவன் வந்தியத் தேவன் தான்.

முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருந்தான் வந்தியத் தேவன். அவன் சண்டைக்குச் சளைத்தவன் அல்ல.

உண்மையில் அவன் பயப்படவில்லை. அவனுக்குப் பயமென்றால் விசைக்கு என்ன விலை என்று கேட்கும் குணமுண்டு. அவனை விரும்பிக்கச் செய்தது ஒன்றுதான். பொன்னியின் செல்வர் ஏன் திடீரென இதைத் தொடங்குகிறார் என்பதன் விவரம் இன்ன தென்று தெரியவில்லை. அவரது யோசனை இன்னதென்று அவனாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவன் என்ன முடிவெடுக்கப் போகிறான் என்று காத்திருக்கை யில் சுற்று வட்டாரமே அமைதியானது. பொன்னியின் செல்வர் நேராக அவன் கண்கள் வழியாக மனதுக்குள் புகும் பார்வை ஒன்றைச் செலுத்தினார். பரந்து விரிந்த சோழ சாம்ராஜ்யத்தில் பலரைப் போலப் பொன்னியின் செல்வரைத் தெய்வமாக எண்ணியவரில் இவனும் ஒருவன். அந்தப் பாறையின் மீது அமர்ந்திருப்பவர் கணக்கிட முடியாத அளவுக்கு உயர்ந்தவர். அவரிடம் காட்டும் நேசம் கடைசித் துளி உதிரம் உள்ளவரை இருக்கும் இவனுக்கு.

இப்போது, 'சரித்திரத்தில் என்னுடன் இடம் பெறப் போகிறாயா, இல்லையா?' என்று பார்வையால் கேளாமல் கேட்கிறார் அவர். இது அவனுக்கு ஒரு தேர்வு, 'என்னுடன் சரித்திரத்தின் ஏடுகளில் வரத் தயாரா? அதற்கு நீ தகுந்தவனா?' என்று மறைமுகமாகக் கேட்கிறார்.

முதலில் அவனுக்கு அதிர்ச்சிதான். ஆனால், தன்மான உணர்ச்சி அதிகமுள்ளவனான வந்தியத் தேவன், இதில் தன்னுடைய சந்தேகங்களைப் பகிரங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

இத்தனை நேரம் பொறுமையுடன் இருந்த வந்தியத் தேவன் இப்போது குறுக்கிட்டு, ''வெற்றி அல்லது வீர மரணந்தான் நமது குல தர்மம். நானும் ஒப்புக் கொள்கிறேன்'' என்றவுடன் சுற்றியிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பினார்கள்.

''ஐயா! தாங்கள் இப்போது சொன்னது மனப்பூர்வமாகக் கூறிய வார்த்தையா?'' என்று பொன்னியின் செல்வர் கேட்க, ''சத்தியமாக என் மனத்தில் இருப்பதையே சொன்னேன்'' என்றான் வந்தியத் தேவன்.

''அப்படியானால் என்னைப் பூரணமாக நம்புவீர்களா?''

''நீர் சொல்வதையே செய்யச் சித்தமாயிருக்கிறேன்.''

''ரொம்ப நல்லது. நாளையிலிருந்து நாம் நமது தாக்குதலுக்காக ஆயத்தமாகிறோம்.''

கடைசியாக அனைவரும் இணங்கி விட்டார்கள் என்று அறிந்த பின், பொன்னியின் செல்வர், ''பல ஆண்டுகளுக்கு இந்தப்

பிரதேசங்களில் சோழர்கள் ராஜ்யத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர். நீரோ நிலமோ இங்கு நடப்பது நியாயமாக இருக்க வேண்டும். இங்கு பாதிக்கப்படுபவர்கள் சோழப் பிரதேசப் பிரஜைகளாக இருந்தால் அதற்கு நியாயம் கேட்கும் பொறுப்பு அரசனுக்கே. இந்தத் தீவில் இதுவரை யுத்தம் என்பதே நடக்க வில்லை. இப்போதுதான் முதன் முதலாக யுத்தம் வந்திருக்கிறது. இதை நடத்துவதற்கு மந்திரி மண்டலத்தாரின் அனுமதி கோரப் போகிறேன். அதற்கு நீங்கள் எல்லாரும் அனுமதி கொடுக்க வேண்டும். நமக்கு ஆள் பலம் இல்லை. பெரும் பிரயத்தனத்தின் பேரில்தான் இதைச் செய்ய வேண்டும். ஆனால், நமக்குத் தர்ம தேவதையும், அமராவதி நகர் வாழும் அனைத்துக் கடவுள்களும் ஆதரவு தெரிவிப்பார்கள். இந்த யுத்தத்தில் 'வெற்றியோ தோல்வியோ, எது நேர்ந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றார் பொன்னியின் செல்வர்.

அதற்குப் பதிலாகச் சோழர் படையின் கோஷமான ''சோழம் சோழம்!'' என்று அனைவரும் குரல் எழுப்பினார்கள்.

''அடுத்த வாரம் வரும், விஜய தசமியன்று யுத்தத்துக்குப் புறப்படுகிறோம். அன்று காலையில் ஆயுதபூஜை நடத்திவிட்டு வேலையைத் தொடங்குகிறோம்.'' என்றார்.

''இவருக்கு ஆயுத பூஜை வருகிறது என்று எப்படித் தெரியும்?'' என்று யோசித்த வந்தியத் தேவனுக்குப் பொன்னியின் செல்வர் தினமும் கரி படிந்த குகைச் சுவரில் ஒரு கோடு கிழிப்பது ஞாபகம் வந்தது.

''இன்றிரவு அராஜகத்தை எதிர்த்து நம் போராட்டம் ஆரம்ப மாகப் போகிறது. இந்தத் தீவில் பெரிய சண்டை மூளப் போகிறது. இந்தக் கொள்ளையர்கள் நம்முடன் சண்டையிட்டு மடியப் போகிறார்கள்!'' என்றார்.

அத்துடன் மந்திராலோசனை சபை கலைந்தது.

இரண்டு நண்பர்களும் மட்டும் அருகருகே இருந்தார்கள். சற்று நேர அமைதிக்குப்பின், ''இந்தச் சோழ நாட்டிலேயே வீரம் மட்டுமல்ல, மதி நுட்பம் அதிகம் உள்ளவரும் நீர்தான். உம்மைப் போலப் பிரம்ம சிருஷ்டியில் காண்பது அபூர்வம்'' என்று வந்தியதேவனைப் புகழ்ந்தார், பொன்னியின் செல்வர்.

''சோழியன் குடுமியும் சும்மா ஆடாது. சோழனின் நாவும் அதுபோலத்தான்!'' என்று நினைத்த வந்தியத் தேவன் குறுக்கிட்டு, ''எல்லாம் சரிதான். ஏன் இவ்வளவு அவசரம் என்றுதான் எனக்குப் பிடிபடவில்லை'' என்றான்.

''என் வாழ்வில் தவறவிட்ட சந்தர்ப்பமாக இது ஆவதை நான் விரும்பவில்லை!'' என்று அவர் கூற, அவன் அதை நம்பியதாகத் தெரியவில்லை.

மனதுக்குள் பொன்னியின் செல்வர் புலம்பினார். ''ஐயோ, என் ஆருயிர் நண்பரே. உம்மிடம் உண்மையைச் சொல்ல முடிந்திருந் தால், சொல்லியிருக்க மாட்டேனா? கனவில் வந்த பெண் ஒருத்தி என்னைப் பைத்தியமாக ஆக்கியே தீருவேன் என்கிறாள். என் மனமே இளகிவிடும் என்று பயந்துதான் இந்தப் போருக்கு ஆயத்த மானேன். இனிக் காலம் கடத்தினால் மீண்டும் ஒரு தடவை அத்தகைய முயற்சி என்னால் செய்ய முடியாது. நாம் இங்கே தாமதிக்கத் தாமதிக்க, என் புத்தி தடுமாறிப் போய்விடும். நாம் கோழைகளாகப் பயந்து வாழ்ந்தோம் என்ற பழிச்சொல் பரவி ஊர் சிரிக்கக் கூடாது!'' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

அவரிடம் பதில் ஒன்றும் வராத நிலையில் வந்தியத் தேவன் மேலும் குழம்பினான்.



அத்தியாயம் முப்பத்தொன்று

மந்திராலோசனை!

பல விஷயங்கள் சோழரின் மந்திராலோசனை சபையில் விவாதிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் அதிகம் பேசியவர் பொன்னியின் செல்வர்தாம். நெடு நேரம் அவர் பேச, மற்றவர் கேட்டபடி அமர்ந் திருந்தனர். மகுடி முன் சர்ப்பம் போலவும், அசைவற்ற சிற்பங்கள் போலவும், அவரது வார்த்தைகளை விழுங்கிக் கொண்டிருந்தனர்.

அருள்மொழி வர்மர் தனது யுத்த திட்டத்தை மற்றவரிடம் விளக்கினார். ''ஆள்பலம் இல்லை என்பதால் நமது வேட்கை தடைப்பட வேண்டியதில்லை'' என்று வலியுறுத்திப் பேசினார்.

''என் அருமை நண்பர்களே! நான் இங்கு வந்ததிலிருந்து என்னிடம் நீங்கள் காட்டும் அன்பைக் கண்டு ஒரு பக்கம் பெருமையாய் இருக்கிறது. இன்னொரு பக்கம் எனக்கு அழுகை வருகிறது. உங்களுக்காக எதுவும் செய்ய இயலவில்லையே என்று என் மனது இரத்தக் கண்ணீர் வடிக்கிறது. ஆனால், ஒன்று மட்டும்

நினைவில் கொள்ளுங்கள். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் உங்கள் சந்ததியர் இந்தக் கடலில் உலவப் போகிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் தைரியத்தைக் கொடுக்கவே நாம் போராடப் போகிறோம்'' என்றார்.

''கடல் கொள்ளையர் சமுத்திரத்தில் முளைத்த ஒரு கொடும் வியாதி போல இருக்கிறார்கள். இப்போது வலுவடைந்த நிலையில் உடலெங்கும் பரவித் தொந்தரவு கொடுக்கிறார்கள். கடல் அன்னை விரைவில் இந்தக் கொடும் நோய் நீங்கிக் குணம் அடைய வேண்டும் என்பதற்காக அல்லவா இவ்வளவு கஷ்டப்படுகிறோம்!'' என்றார்.

இளவரசர் ஆவேசமாகப் பேசினார். கேட்பவருக்கு வீரம் வரவழைக்கும்படி பேசினார். வீரப் பேச்சுகள் எல்லாம் முடிந்த பின்பு எப்படி இதைச் சாதிக்கப் போகிறோம் என்று, அவர்கள் எல்லாம் பிரமித்து நிற்கும்போது, அவரது நோக்கத்தையும் அதை அடைய வழிகளையும் விளக்கினார்.

''என்னென்ன இடையூறுகள் நேர்ந்தாலும், அவ்வளவையும் சமாளித்து, எடுத்த காரியத்தைச் சாதிக்க வேண்டும். முதலில் என்னென்ன ஆயுதங்கள் உள்ளன என்று நான் பார்க்க வேண்டுமே'' என்றார். வணிகர்கள் சேகரித்து வைத்திருந்த ஆயுதங்களைக் கண்டு அவரே பிரமித்துப் போனார். தற்காப்புக்குத் தேவைப்படும் என்று கொள்ளையர் கிராமத்தில் கேட்பாரற்றுக் கிடந்தவற்றை எடுத்து வந்து வைத்திருந்தார்கள்.

ஏழெட்டு வாள்கள், இருபது ஈட்டி முனைகள் மற்றும் சில காப்புக் கேடயங்களும் இருந்தன. ஓரிரு வில் அம்புகளும் இருந்தன.

முதலில் அவற்றைச் சுத்தம் செய்யும்படி கட்டளையிட்டார். அவற்றின் மீது படிந்திருந்த துருவை அகற்றவே ஒரு நாள் பிடித்தது. எல்லாருமாய்த் தேய்த்ததில் அவை மாலை வெய்யிலில் ஜொலித்தன. அவற்றில் ஒரு வாளைத் தமக்கெனத் தேர்ந்தெடுத்தார் பொன்னியின் செல்வர். அதைக் காற்றில் இப்படியும் அப்படியுமாய் வீசியபோது காற்றில் பலவித சப்தங்களை அது செய்தது. அது பூரணமாகப் பிடித்துப் போகவே, அதை ஒரு முத்தம் கொடுத்து ஏற்றுக் கொண்டார். வந்தியத் தேவனுக்கு எப்போதும் பிடித்த ஆயுதம் ஈட்டிதான். இருந்த பத்து ஈட்டிகளுக்கும் நல்ல மூங்கில் கம்புகளாய்க் காட்டில் சென்று தேடி இணைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் காலையில் ஆயுதப் பயிற்சி நடந்தது: அப்போது தான் இரு வீரர்களுக்கும் தெரிந்தது. அவர்களைத் தவிர இங்கு

யாரும் ஒரு போரைக் கூடப் பார்த்தது இல்லை என்று. மலைத்துப் போனான் வந்தியத் தேவன். வணிகர்களுக்கே மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. கலங்காது இருந்தவர் பொன்னியின் செல்வர் மட்டும்தான். ''கவலைப்படாதீர்கள். இன்னும் நாலைந்து நாட்கள் உள்ளன. அதற்குள் நல்ல பயிற்சி செய்தால் எல்லாம் சரியாகிவிடும்'' என்றார் ஆறுதலாக.

இப்படிப் பல முறை, ''நீரும் எம்முடன் தோளுக்கு தோள் நின்று போராட வேண்டும்'' என்று பொன்னியின் செல்வர் நினைவு படுத்தியபோது, மெய்யப்பன் அவர் முன்னே வந்து நின்றான். தொங்கிப் போயிருந்த முகத்துடன், ''ஐயனே, உம்மையும் எம்மையும் ஒப்பிடுகிறீரே. மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பது குழந்தைக்குக் கூடத் தெரிய வரும்'' என்றான்.

''நாங்களும் உங்களைப் போலதான் இந்தத் தீவில் அகப்பட்டுக் கொண்டிருந்தோம். பல ஆண்டுகளாக இருக்கிறோம். ஆனால், என்ன பயன்! குடும்பத்தை மறுபடி எப்போது பார்க்கப் போகிறோம் என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருந்தோம். உம்மைப் போலப் போருக்கு ஆயத்தமாக வேண்டும் என்று ஒரு நாளாவது நினைத்திருப்போமா? சரித்திரப் பிரசித்தி பெற்ற குடும்பத்தில் வந்தவர் நீங்கள். நாங்களோ முன் பின் போரை அறியாதவர்கள்'' என்று பேசி முடிக்கும் போது அழுது விடுவான் போலயிருந்தது.

அதற்குப் பொன்னியின் செல்வர், ''போர் பற்றி என்ன தெரிய வேண்டும்? இங்கு இருக்கிறாரே வந்தியத் தேவர். இவர் கூட குருமுகமாகப் போர்க்கலையைப் பற்றிப் பாடங்கேட்டதுண்டா? வந்தியத் தேவருக்குத் நிகரானவர் தொண்டை மண்டலத்திலுள்ள வீரர்களில் எவருமில்லை. ஏன், சோழ சாம்ராஜ்யதில் பெரும் சாதனைகளைத் தனியொரு மனிதர் செய்தாரென்றால், அது இவராகத்தான் இருக்க முடியும். போர்க் கலை என்பது தற்காப்பு எண்ணம் வந்தவுடன் இயற்கையாக வந்துவிடும். நியாயம் நம் பக்கம் உள்ளது. பகவான் கிருபை செய்தால் அடுத்த நிமிடம் வெற்றி இங்கேயே வந்து விடுகிறது!'' என்றார்.

போர்ப் பயிற்சி தொடங்கியது. வாளைத் தொட்டு அறியாதவர்களுக்கு அதில் பயிற்சி கொடுப்பது வந்தியத் தேவனுக்குப் புதியதாக இருந்தது. ஓரிரு நாட்கள் போர்ப் பயிற்சி நடந்த பின் போர்த் திட்டத்தை விளக்கினார், பொன்னியின் செல்வர்.

முதலிலே கொள்ளையர் கோட்டையைத் தாக்குவதா அல்லது அவர்களின் பெரும் பக்க பலமான கப்பற் படையைத் தாக்குவதா

என்ற விஷயம் விவாதிக்கப்பட்டது. எல்லாருமாய்ச் சென்று ஒவ்வொரு இலக்கையும் அழிக்கலாமே என்று வந்தியத் தேவன் சொன்னான். அதை நிராகரித்தார், பொன்னியின் செல்வர்.

''நாம் தாக்க வேண்டியவை கப்பல்களையும், அந்தக் கிராமத்தையும். இரு குழுக்களாகப் பிரிந்து செல்ல வேண்டும். ஒரே நேரத்தில் இரண்டையும் செயல்படுத்த வேண்டும். இதற்கு நான் இரு வேறு வகைப் போர் முறையை உபயோகிக்கப் போகிறேன். துறைமுகத்தை ஒரு பிரிவு தாக்க வேண்டும். அனைத்துக் கப்பல்களையும் தீக்கு இரையாக்க வேண்டும். இனி அவற்றில் ஒன்று கூடக் கடலுக்குள் பிரவேசிக்கக் கூடாது. இனி என்றுமே நமது சோழநாட்டு வணிகர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது. அந்த வேலையை நானே முன்னின்று படையின் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கி நடத்தப் போகிறேன். நான் எப்படி துறைமுகத்தைத் தாக்கப் போகிறேன் என்று இப்போதே சொல்லி விடுகிறேன். கப்பல்களில் எரியக்கூடிய பொருட்கள் வெகுவாக இருகின்றன. துறைமுகத்தை அணுகி, இருக்கும் காவலை வெட்டிச் சாய்த்துவிட்டு, ஏதேனும் இரண்டு கப்பல்களின் மேல் ஏறி அங்கு அக்கினி பகவானைப் பிரயோகம் செய்யப் போகிறேன். அதற்கு முன் என்னுடன் வருபவர்கள் கப்பல்களின் நங்கூரத்தைக் கழற்றி விட வேண்டும். பின் கரையிலிருந்து தீப்பந்தங்களைக் கப்பல் களின் மீது எறிய வேண்டும். காற்றில் நெருப்பு ஒவ்வொரு கப்பலாய்ப் பரவி மரத்தால் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தையும் சாம்பலாய் ஆக்கிவிடும். நானும் ஏழு பேரும் சென்று படகுகளைத் தாக்குவோம். அதே சமயத்தில், வல்லவ ராயர் தலைமையில் ஐந்து பேர் கிராமத்தைத் தாக்க வேண்டும்'' என்றார்.

வந்தியத் தேவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ''கிராமத்தை எப்படி அழிப்பது? அதையும் தீக்கு இரையாக்க வேண்டுமா?'' என்றான்.

''இல்லை, இல்லை. அக்கினி பகவானைப் பிரயோகித்தால், அவர்கள் உடைமைகளைப் பெரும் அளவில் சேதப்படுத்தி விட லாம். ஆனால், நாம் உயிர்ச் சேதம் செய்ய முடியாது. செய்யவும் கூடாது. ஏனென்றால் அடிமைகள் பலர் அங்கு இருக்கிறார்கள். அவர்கள் தப்பி வர ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அப்படி இருக்கையில் கொள்ளையரும் உயிர் தப்பி விடுவார்கள். அதனால் தப்பியபின் நாளை அவர்களெல்லாம் மத்த கஜங்கள் போலக் கோபம் கொண்டு நம்மைத் தேடி வருவார்கள். இந்தத் தியாகத்தை நாம் அந்த அடிமைகளுக்காகச் செய்துதானாக வேண்டும்'' என்றார்.

வந்தியத் தேவனுக்குப் புரியவில்லை. 'ஐந்நூறு பேர் வாழும் கிராமத்தை அழிப்பது சுலபமல்லவே. தீயினால் செய்யலாம். அது கூடாது என்கிறார். எப்படி இதைச் சாதிக்கப் போகிறேன்?' என்று குழம்பினான்.

சபை கலையுமுன், ''இன்னும் இரண்டு நாட்களுக்குள் வல்லவ ராயர் தன் யுத்த திட்டத்தைத் தன் குழுவினரிடம் விளக்க வேண்டும்'' என்றார் பொன்னியின் செல்வர்.

அன்று வந்தியத் தேவன் தனக்குத் தூக்கம் இல்லை என்று முடிவு செய்து கொண்டான். ஆரம்பத்தில் பொன்னியின் செல்வரது பேச்சு வந்தியத் தேவனுக்கு வேப்பங்காயாக இருந்தது. 'சுலபமான காரியத்தைத் தனக்கென வைத்துக்கொண்டு, இவனை மாட்டி விடுகிறாரோ? அப்படி இருக்குமோ?' என்ற யோசனை உண்டாயிற்று.

'இல்லை, இல்லை. இரண்டு காரணங்களினால் அப்படி இருக்க முடியாது' என்று அவனது உள் மனது சொன்னது.

கடினமான வேலையையே பொன்னியின் செல்வர் எப்போதும் சாதிக்கத் துடிப்பார். இரண்டு காரியங்களில் எதில் ஆபத்து குறைவோ அதைத் தான் தன்னிடம் தள்ளி விட்டிருப்பார். அப்படி என்றால் கிராமத்தை அழிப்பதுதான் சுலபமான காரியமோ?

'இன்னும் யோசனையே செய்யவில்லை. அதற்குள் எப்படிப் பொன்னியின் செல்வருக்கு ஆபத்தின் அளவு பற்றித் தெரியும்? அப்படியென்றால் அதற்கும் திட்டம் தீட்டிவிட்டாரோ? தானே வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என விட்டு விட்டாரோ? ஐந்து பேர்களின் உதவி கொண்டு ஒரு கிராமத்தையே அழிக்க வேண்டும். அதைச் சாதிக்க முடிந்த ஒரே வழி இரவோடு இரவாகச் சென்று ஒரு பத்துப் பதினைந்து இடங்களில் தீயைப் பற்ற வைப்பதுதான். ஆனால், அதற்கும் தடை விதித்து விட்டார் பொன்னியின் செல்வர். என்ன செய்வது?'

வந்தியத் தேவனுக்கு மனம் கசந்து போயிருந்தது. கொஞ்ச நாளாகக் கடற்கரை வெண்மணலில் போய் இரவெல்லாம் கப்பல் வருகிறதா என்று கடலைப் பார்த்துக் கொண்டிருப்பதே அவனுக்கு வழக்கமாய்ப் போயிருந்தது. ஆனால், அவன் அன்றிரவு சென்றது ஏரிக் கரைக்கு. அங்கிருந்துதான் கொள்ளையர் கிராமம் நன்றாகத் தெரிந்தது. அந்தக் கிராமத்தைப் பார்த்தபடி இருந்தால் ஏதாவது யோசனை தன்னைத் தேடி வருமா என்று காத்திருந்தான்.

அன்றிரவு மட்டுமல்ல. மறுநாளும் கூட வந்தியத் தேவன் அவ்விடத்திலேயே இருந்து யோசனை செய்தான். இரவு

முழுவதும் ஒரு கண நேரங்கூடக் கண்ணை மூடவில்லை. சித்திரப் பதுமை போல் ஏரியின் அருகே உட்கார்ந்திருந்தான். இருதயத்தின் பாரம் முழுவதும் நீங்கட்டும் என்று காத்திருந்தான் போலும். மலைச் சரிவில் அமர்ந்தபடி அங்கிருந்து ஒரு காத தூரத்தில் தெரிந்த கொள்ளையர் கூட்டத்தின் கிராமத்தைப் பார்க்கப் பார்க்க அவனுடைய கோபம் கொந்தளித்துப் பொங்கிற்று.

கிராமத்தில் தினமும் ஒரே கூத்தாய் இருந்தது. ஒரே ஆட்டமும் பாட்டுமாய் இருந்தது. விஷம புத்தியுள்ள அந்த ஆட்களை முதலில் நேருக்கு நேர் நெடுநேரம் பார்த்தான் வந்தியத் தேவன். அந்தக் கிராமத்தில் பல தமிழர்கள் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதை நினைத்தபோது அவனுடைய கோபத் தீ அவனது அறிவையே மங்கச் செய்துவிடும் போலிருந்தது. இந்தக் கொடுமைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்தது. ஆத்திரத்தில் பலவகையான முட்டாள்தனமான யோசனைகள் வந்தன. ஆனால், அவசரப்படக் கூடாது என்று நிதானப்படுத்தியது உள்மனம்.

எனினும் மூன்றாம் நாள் இரவுவரை அந்தக் கிராமத்தின் அழிவை எப்படிச் சாதிக்கப் போகிறோம் என்று வந்தியத் தேவனுக்குத் தோன்றவேயில்லை. ஆயுதப் பயிற்சியில் கூட அவன் முகத்தைக் கண்டவருக்கு அவன் இன்னமும் திட்டம் தீட்டாதது தெளிவாகத் தெரிந்தது.

மூன்றாம் நாள் இரவு முகம் தொங்கியபடி உணவை உண்டு கொண்டிருந்தான் குகை வாசலில். உண்ட பின் ஏரிக் கரைக்குச் செல்லவிருந்தான். இன்னும் இரண்டு நாட்களில் விஜயதசமி.

பொன்னியின் செல்வர் அவன் அருகில் வந்தார். ''வல்லவ ராயரே! என்ன சோகம்? இன்னும் திட்டம் தீட்டவில்லையா?'' என்று சில நிமிடம் அறிவுரை செய்தார். சில நிமிடங்கள் பேசினார். பேசியது முழுவதுமாக அவன் காதுகளில் விழக்கூடயில்லை. அவர், அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, ''இன்னும் யோசியுங்கள்'' என்றார்.

நடுநிசியில் நிலவொளியில் அந்த ஏரியின் ஓரத்தில் அமர்ந்திருந்தான். பொன்னியின் செல்வர் கூறிய வார்த்தைகளைப் பற்றி இரவில் அந்த ஏரிக் கரையின் அருகே அமர்ந்திருந்தபடி யோசித்தான் வந்தியத் தேவன்.

''பொன்னியின் செல்வருக்கு என்ன? கப்பல்களுக்கு ஒரு யோசனை செய்து விட்டார். அந்தத் தெம்பில் நமக்கு அறிவுறுத்துகிறார்' என்று கோபமாய் நினைத்துக் கொண்டான். 'அவருக்

கென்ன, சுலபமாய் முதலில் வந்த யோசனையைத் தனக்கென வைத்துக் கொண்டார். நம் பாடு திண்டாட்டம்தான். இதில் ஆறுதல் வேறு. என்ன சொன்னார் கடைசியாக? ஆம், 'நீர் நன்றாய் யோசித்தீர் என்றால் அந்தக் கிராமத்தை அழிப்பது தண்ணீர்பட்ட பாடு!' என்றார் அல்லவா.'' என்று நினைத்துக்கொண்டு ஏரியின் நீரைப் பார்த்தான். உடனே பொறி தட்டியது.

மூன்றாம் நாள் இரவு நாலாம் ஜாமத்தில் அவனுக்குச் சரியான யோசனைகள் தோன்றின. கிராமத்தை அழிப்பது எப்படி என்று பொன்னியின் செல்வர் கூறிய ஆறுதல் வார்த்தைகள் அவனுக்கு எடுத்துரைத்தன.

ஏரியின் பின்புறம் இருந்த குளத்தை மறுபடி பார்த்தான், வந்தியத் தேவன். குளத்தில் தண்ணீர் ததும்பி அலைமோதிக் கொண்டிருந்தது. போன வாரம் முழுவதும் மழை வந்ததுதான் காரணம். அதன் மேற்புறம் தாமரை இலைகள் தளதளவென்று வளர்ந்து விளங்கின. இயற்கையை ரசிப்பதில் ஆர்வம் இருப்பது இயல்புதானே? கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது.

ஆனால், தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் ''இந்த இயற்கை அழகையெல்லாம் பார்த்து ஏமாந்துவிடக் கூடாது. இது கொடிய மிருகங்களுக்கு உதவி செய்ய ஏற்படுத்தப்பட்டது. இதையே அவர்களைத் தாக்க உதவும் கருவியாகவும் பயன்படுத்தலாம்'' என்று முடிவு செய்தான்.

அந்தக் கிராமத்தை அழிப்பதென்றால் இந்த அணையைத் தகர்க்க வேண்டும். ஆனால், எதை வைத்து உடைப்பது? ஏரியின் வடிகால் பக்கம் மிகவும் தாழ்வாக இருந்தது. தண்ணீர் உயரமே மூன்று ஆள் உயரத்துக்கு மேல் இருந்தது. ஆனால், ஏரி வந்த பின் அவ்விடத்தில் எப்போதும் ஈரம் இருப்பதனால் சுற்றியிருந்த தாவரங்கள் எல்லாம் பசுமையாய் வளர்ந்திருந்தன.

வடிகாலுக்குச் சற்றுத் தூரத்தில் இரண்டு மரங்கள் அடுத்தடுத்து இருந்தன. அவற்றைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒரு வழி தோன்றியது. அவற்றை வெட்டிச் சாய்த்து விட்டால், அதுவும் சரியாக ஏரியின் தடுப்புச் சுவரின் மீது விழும்படி செய்தால், அந்த ஏரியில் உடைப்பு ஏற்படும். நீர் வெளியே பாயும். கடலுக்குச் செல்லும் அவசரத்தில் அது கிராமத்தைத் தரைமட்டமாக்கிவிடும்.

மரம் வெட்டுவோர் மரங்களை வேண்டும் இடத்தில் விழ வைப்பதை அவன் தொண்டை நாட்டில் பார்த்திருந்தான். விழ வேண்டிய இடத்துக்கு ஏற்ப மரத்தை வெட்ட வேண்டும். பின் அதைத் தள்ளிவிட்டால் அது நிர்ணயித்த இடத்தில் சென்று விழும்.

அதனால் கட்டடங்களுக்கோ சுற்றி நிற்கும் மக்களுக்கோ பாதகம் ஏற்படாது.

இதற்குத்தான் முதலில் இருந்து பொன்னியின் செல்வர் இயற்கையை நம் துணைக்கு அழைக்க வேண்டும் என்று கூறினாரோ? அந்தக் கிராமத்தைப் பார்க்கும் போதெல்லாம் அதை அப்படியே சாம்பலாக்கிவிட வேண்டும் என்று அவனுக்கு உண்டான பேராவலை மறந்துவிட்டான் வந்தியத் தேவன். அந்தக் கதி கப்பலுக்கு தான்.

அந்த முடிவில் ஒரு அதிசயத்தை அவன் பார்த்தான். நீரில் மிதப்பதற்கு நெருப்பில் அழிவு. நிலத்தில் இருப்பதற்கு நீரில்தான் அழிவு. அழிவுக்குப் பாதை பலவுண்டு. ஒவ்வொன்றும் வேறுபட்டவை. விந்தையானவை.

இதைப் பொன்னியின் செல்வர் ஏற்கெனவே யோசித்து விட்டார் என்று தெரிந்தது. அவனுக்கே அது தோன்ற வேண்டும் என்று மௌனம் காத்தார் போலும். இவரைப் புரிந்து கொள்ள முடியவேயில்லை. அவனது இதழ்களில் ஒரு புன்னகை மலர்ந்தது. 'அவர் ஒருவரைப் புரிந்து கொண்டால் இந்த வையகமே எனக்கு வசப்படும்' என்று நினைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் காலையில், "சோழர் குலவிளக்கே! கேளுங்கள். இன்று ஆயுத பூஜை. இன்று நள்ளிரவு பிறக்கும் விஜயதசமி. நாளைக் காலை இதே இடத்தில் சந்திப்போம். அப்போது உமது வேலை நிறைவேறிக் கப்பல்கள் கரித் துண்டுகளாய்க் கடலில் மிதந்து கொண்டிருக்கும்போது, அந்தக் கொடும் கொள்ளையர் வாழும் கிராமமும் தரையோடு தரையாகியிருக்கும்" என்றான் வந்தியத் தேவன்.

பொன்னியின் செல்வருடைய இதயம் இன்னமும் பூரணமாகத் திருப்தி அடையவில்லை. வந்தியத் தேவனிடம் அவனது திட்டத்தைப் பற்றிக் கேட்டு விடலாமா என்றுகூட யோசித்தார். ஆனால், அது அவன் வீரத்துக்கும் விவேகத்துக்கும் அவர் காட்டும் அவமரியாதையாகி விடும் என்று நினைத்து மௌனம் காத்தார்.

அன்று மாலையிலேயே ஆயுத பூஜை தொடங்கியது. சூரியன் அஸ்தமித்த பின்பு கொள்ளையர் கிராமத்திலிருந்து எடுத்து வரப்பட்ட அனைத்து ஆயுதங்களும் ஒன்று சேர அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு பாறையைச் சிவலிங்கம் என்று பிரதிஷ்டை செய்து தினந்தோறும் ஆகம விதிகளின்படி பொன்னியின் செல்வர் பூஜை செய்வதுண்டு. சிவலிங்கமாய்ப் பாவித்துத் தினமும் தேவாரம்

பரந்த வட்டப் பாறையின் முன்னே, ஆயுதங்கள் பரப்பி அடுக்கப்பட்டன.

எல்லாரும் அதிசயத்துடன் பார்க்க பூஜையில் இரண்டு கோடரிகளைக் கொண்டு வந்து வைத்தான் வந்தியத் தேவன். அந்தக் கோடரிகளை விறகு வெட்டத் தேவைப்படும் என்று வணிகர்கள் ஒரு காலத்தில் திருடி வந்திருந்தனர். அதற்குச் சாணை தீட்டிப் பளபள என்று மாற்றியிருந்தான் வந்தியத் தேவன்.

அதைக் கண்டு சிரித்தார் பொன்னியின் செல்வர். தனது திட்டம்தான் வந்தியத் தேவனின் திட்டமும் என்று உணர்ந்தார். அவர் கண்களில் கேள்வியும் இல்லை, சந்தேகமும் இல்லை.

"பரசு என்பது பரசுராம அவதாரம் எடுத்த ஆண்டவனின் ஆயுதம். அது உமக்குமா? அவருக்குப் பின் இதைப் போரில் பயன்படுத்தப் போகும் முதல் வீரர் நீர்தான். நம் நண்பர் ஆழ்வார்க்கடியான் இப்போது உம்மைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார்" என்று மட்டும் சொன்னார்.

ஆயுத பூஜை தொடங்கியது. இதுவரை வணிகர்கள் ஆயுத பூஜை என்றால் கணக்கு ஏடுகளையும், வியாபாரத்துக்கு உதவும் எழுதுகோல்களையும் வைத்துத்தான் செய்திருந்தார்கள். இதுவே அவர்கள் வாழ்க்கையில் தத்ரூபமாகப் பார்க்கும் முதல் ஆயுத பூஜை.

அந்த ஆயுத பூஜையை மிக்க பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றினார் பொன்னியின் செல்வர். குங்குமம் இடும்போதுதான் சிரமம் வந்தது. உடனே தன் கைவிரலைக் கீறி, அதில் வெளிவந்த இரத்தத்தை ஆயுதங்களுக்கு இட்டார். பின் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அதை நெற்றியில் இட்டு விட்டார். உடனே அவர்களுக்குள் வீரம் பொங்கி வந்தது போல ஒரு பிரமை. பின் இருக்காதா? ஆயிரம் ஆண்டு தழைத்த அரச குடும்பத்தின் இரத்தம் நெற்றியில் திலகமாக இருக்கிறதல்லவா?

வானம் இருட்டியது. இயற்கையே மௌனமானது போல ஒரு பிரமை. போருக்கு ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார், பொன்னியின் செல்வர்.

இரண்டு பிரிவினரும் கிளம்பும் முன் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள். பொன்னியின் செல்வர் முதலில் கிளம்பினார். அவர்களுக்கு விடை கொடுத்துவிட்டு வந்தியத் தேவன், அவர்கள் ஒரு திருப்பத்தின் பின் மறையும்வரை காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தபடி திருப்பத்துக்கு முன் பொன்னியின் செல்வர் தலையைத் திருப்பினார். ஒரு கையை உயர்த்தி வாழ்த்தினார்.

அப்போது வந்தியத் தேவனின் மனதில் ஓர் எண்ணம் மேலோங்கியது. இருவரின் திட்டத்தில் ஏதேனும் தவறு இருந்தாலும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது இதுவே கடைசி முறையாகி விடுமல்லவா?

அவன் தொண்டையில் ஒரு சோகம் வந்து அடைத்துக் கொண்டது.



அத்தியாயம் முப்பத்திரண்டு
கப்பல்கள் எரிகின்றன

இவ்வளவு நாட்கள் பொன்னியின் செல்வரும் அவரது சகாக்களும் தங்கியிருந்தது வட்டமான தீவுதானே. அதைச் சுற்றியிருந்த மணற் பரப்பும் அது போலவே வட்டமாகவே இருந்தது. கடற்கரை மணல் பரப்பில் நடந்தபோது ஒரு திருப்பத்துக்கு அப்பால் குகையும் அங்கு நின்ற வந்தியத் தேவனின் குழுவினரும் பொன்னியின் செல்வருடைய கண்ணுக்கு மறைந்தனர்.

அந்தத் திருப்பத்திலிருந்து இன்னும் சற்று தூரம் போனவுடன், பாதையில் மற்றும் ஒரு திருப்பம். அதில் திரும்பியவுடன் எதிரே துறைமுகம் கண்ணுக்குத் தெரிந்தது.

நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் துறைமுகம் மிகவும் எழில் நிறைந்த காட்சியை அளித்தது. அமைதியான அலையற்ற கடலில் ஆடாமல் அசையாமல் நின்றன அந்தக் கப்பல்கள்.

அடங்கிக் கிடந்த கடலும் அழகுதான். அதில் தெரிந்த கப்பல்களின் பிம்பங்களும் அழகுதான். ஆனால், அதை ரசிக்க முடியவில்லை வணிகர்களால்.

துறைமுகத்தை நெருங்க நெருங்க, அது அளவில் பெரியதாக ஆனது. அந்தக் கப்பல்களைச் சூழ்ந்திருந்த அபாயத்தை நினைத்து அவர்களது உள்ளம் பதைபதைத்தது. இவ்வளவு ஆண்டுகளாக பயந்து பயந்து வாழ்ந்த கொள்ளையருடன் நேருக்கு நேர் போர் என்று எண்ணியவுடனே அவர்களுடைய கை கால்கள் வெட வெடத்துப் போயின.

முன்னிருட்டு வேளைதான். ஆனால், வானத்தில் ஆயிரங் கோடி நட்சத்திரங்கள் ஒளிச் சுடர்களாக விளங்கின. அவை

அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்ற பயம் வணிகர்களிடம் இருந்தது.

ஆனால், முகத்தில் ஒரு மாற்றமும் கொள்ளாமல் பொன்னியின் செல்வர் நடந்தார். அங்கிருந்த கப்பல்களை ஒரு நொடி நின்றபடி நேரே நோக்கிவிட்டு, அதையே மார்க்கமாக கொண்டு நேராக நடக்கலானார். வேறென்ன செய்வது? இவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

துறைமுகத்தை உற்றுப் பார்த்தார், பொன்னியின் செல்வர். அங்கு கண்டதை மனம் பூரணமாக ஜீரணித்துக் கொண்டது. வணிகர்கள் பொன்னியின் செல்வரிடம் ஏற்கெனவே விளக்கி யிருந்தார்கள். கொள்ளையடிக்கச் செல்லும் போது மட்டும்தான் கப்பல்கள் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்குச் செல்லும். அதைத் தவிர மற்ற நாட்களில் குளிருக்கு ஒன்றாய்க் கூடி நிற்கும் பறவைகள் போலக் குழுக்களாகத்தான் இங்கு இருக்கும். கட்டுக் காவலும் குறைவாகத்தான் இருக்கும்.

பெரிய கப்பல் ஒன்று மட்டும் நடுவில் இருந்தது. நடுவில் இருந்த அந்தப் பெரிய கப்பல் வணிகர்களுடையது. கடல் போரில் கொள்ளையர்களால் கைப்பற்றப் பட்டது. அதனால் பெரியதாகவும் சரக்குகளை ஏற்றிச் செல்ல ஏதுவாகவும் உருவாக்கப் பட்டிருந்தது. வேகம் அதன் தனித் தன்மையல்ல. அதைச் சுற்றிப் பல சிறிய கப்பல்கள் இருந்தன.

பெரிய கப்பலில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்ததாகத் தெரிந்தது. சுற்றியிருந்த கப்பல்கள் ஓர் இருபது இருக்கும் எண்ணிக்கையில். அவை மிகவும் பெரியதாகவும் இல்லை, அதற்காகப் படகுகள் போலச் சிறியதாகவும் இல்லை.

அனைத்துக் கப்பல்களிலும் நடுவிலிருந்த கப்பற் பாய் கம்பத்தில் சுற்றப்பட்டிருந்தது. துறைமுகத்தில் அந்தப் பாயை விரித்து வைப்பது பெரும் அபாயம் என்று கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு மாலுமிக்கும் தெரியும். பின் கப்பலின் கட்டுப்பாட்டைத் தம் வசத்திலிருந்து வாயு பகவான் அபகரித்துக் கொள்வார்.

பொன்னியின் செல்வர் பிறப்பித்த உத்தரவின்படி எல்லாரும் பூனை போல நடந்தார்கள். துறைமுகம் மிகவும் அமைதியாக இருந்தது. நீரிருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஓலைகளால் அமைக்கப்பட்ட ஒரு பெரிய குடில் இருந்தது. அங்குதான் காவலர்களும் கப்பலை மேற்பார்ப்பவர்களும் தங்குவார்கள் என்று யூகித்தார்கள். அதன் வெளியில் சுவரிலும் மரத்திலும் செருகப் பட்டிருந்த தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அந்தத் தீப்பந்தத்தின் மீதே கண்களை வைத்துக் கொண்டு, அதன் எதிர்ப்புறமாகச் சோழர்கள் நடந்தார்கள். இருளிலேயே நடந்தார்கள். முடிந்தவரை, வீண் ரத்தம் சிந்துதலைப் பொன்னியின் செல்வர் விரும்பவில்லை. காவலர்கள் கண்ணயர்ந்திருந்த போதுதான் திட்டமிட்டிருந்ததைச் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தார். ஆனால், அது இயலவில்லை. மாபெரும் வீரர் வருகிறார். அவரது வலிமையைச் சோதிக்காமல் இருக்குமா, விதி!

திடீரென எதிர்ப்புறம் இரண்டு கொள்ளைக் கூட்ட வீரர்கள் வருவதைப் பார்த்ததும் எல்லாரும் இருளுக்குள் அவசரமாக ஒதுங்கினார்கள். ஆனால், காவலர்களின் கண்களில் இவர்கள் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள் என்பது உடனே தெரிந்தது.

''யாரடா அது?'' என்று அதட்டும் தோரணையில் கேட்டுக் கொண்டு இரண்டு தடியர்கள் வந்தார்கள். அவர்கள் பேசியது என்ன மொழி என்று தெரியவில்லை. ஆனால், தோரணையிலிருந்து ஏதோ அடிமைகள் உத்தரவின்றி வெளியே நடமாடுகிறார்கள் என்று நினைத்து விட்டார்கள் எனப் புரிந்து கொண்டார்கள் சோழர்கள். அவ்வளவுதான். எச்சரிக்கைக் குரலைக் காவலர்கள் எழுப்பப் போகிறார்கள். பின் கூட்டமாய் வந்து பகைவர் படை இவர்களைச் சூழ்ந்து கொண்டு விடுவார்கள் என்று எண்ணி வணிகர்கள் அனைவரும் நடுக்கமுற்றார்கள்.

அதற்கு நேர்மாறாகப் பொன்னியின் செல்வருடைய உடல் விரைத்தது. பொன்னியின் செல்வர் பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை. போருக்கு ஆயத்தமானார். அந்தக் கொள்ளையர்களுக்கு முன் ஓரிரு அடிகள் எடுத்து வைத்தார். நடக்கும்போதே தன் முதுகின் பின் வைத்திருந்த வாளை மெல்ல எடுத்தார். தூரத்தில் இருந்த தீப்பந்த ஒளியில் அது மின்னியது.

அந்த இருவரின் கண்களில் இருந்த பயத்தையும் அந்த வெளிச்சம் வெளிக் காட்டியது. நிராயுதபாணியாகச் சில அகதிகள் இருப்பார்கள். அவர்களைச் சாட்டையால் அடித்துச் சற்று நேரம் பொழுது போக்கலாம் என்று நினைத்தவர்கள் தங்களுக்கு நிகரான, ஏன், தங்களை விட உயர்ந்த ஒரு சக்தியைக் கண்டபின் பயந்தார்கள்.

பொன்னியின் செல்வரைத் திரும்பிப் பார்த்தவுடன் ஒன்றை மட்டும் மெய்யப்பன் கண்டு கொண்டான். பொன்னியின் செல்வர் முற்றிலுமாக மாறிவிட்டார். அவரது தோற்றமே மாறியிருந்தது. அவரது கண்கள் இருட்டில் நெருப்பின் ஜுவாலை போல ஒளிர்ந்தன. ஒரு பெயரில்லாத உணர்ச்சி அவரது முகத்தை

முகத்திரை மறைப்பது போல மறைத்தது. கோபமா அது? இல்லை, இதுதான் வீரமா?

பொன்னியின் செல்வர் வாளை ஓங்கினார்.

பொன்னியின் செல்வருடைய படையே அவர் முகத்திலும் உடலிலும் தோன்றிய மாறுதல்களைக் கண்டு அஞ்சும்போது, இரண்டு காவலர்களும் அதையே மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர். எதிரே வந்த கொள்ளையர்கள் ஸ்தம்பித்து நிற்க, பொன்னியின் செல்வர் அவர்கள் மீது பாய்ந்தார். மெய்யப்பன் தன்னை அறியாமல் கண்ணை மூடிக் கொண்டான். வாளின் வேகமும் அதைப் பயன்படுத்தியவரின் குறியும் அபாரமாக இருந்தன. தொண்டையில் எழுந்த கடைசி வார்த்தைகள் கூட வெளிவரும் முன், மாண்டு விழுந்தார்கள் இரண்டு கொள்ளையர்களும்.

திரும்பி மெய்யப்பனைப் பார்த்தார் பொன்னியின் செல்வர். வெகுண்டு வெறி கொண்ட வேங்கை போல மாறியிருந்தது அவரது முகம். முகத்தில் சாந்தமும், கண்களில் பிரகாசமும் கொண்டிருந்த இளவரசர் இப்படி மாறியது வியப்பைத் தந்தது. சோழர் சாம்ராஜ்யத்துப் பிரஜைகளையெல்லாம் வசீகரித்து, அவர்களுடைய பக்தியைக் கொள்ளை கொண்ட இளவரசு இவர் என்று தெரியும். ஆனால், இங்கே இருப்பவர் முற்றிலும் வேறொருவர் போல இருக்கிறாரே?

உடனே அவரது பார்வையைப் புரிந்து கொண்டு மாண்ட இருவரையும் இருட்டான மூலை ஒன்றுக்கு இழுத்துச் சென்று கிடத்தினார்கள் வணிகர்கள். அவர்கள் கைகளில் வெதுவெதுப்பான உதிரமானது ஒட்டிக் கொண்டது.

இறந்தவர்களையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த வணிகர்கள், சிலை போன்று, ஸ்தம்பித்து நிற்க, அவர்களிடம், ''வாருங்கள்!'' என்று கட்டளையிட்டார் பொன்னியின் செல்வர்.

திடீரென்று முன்னெச்சரிக்கை இல்லாமல் நேர்ந்த அந்தச் சந்திப்பே வணிகர்களைப் பீதியடையச் செய்திருந்தது. மீதி தூரத்தை உடல் நடுக்கத்துடன்தான் நடந்தனர்.

பொன்னியின் செல்வர் முன் நடக்க, பின் தொடர்ந்தனர் வணிகர்கள். ஆனால், இடைவெளி அதிகமாகவே விட்டு நடந்தனர். வந்தபோதிருந்த இளவரசர் இவரில்லை என்று எண்ணும் அளவுக்கு அவருள் மாற்றங்களைக் கண்டனர். நடக்கும்போது அவரது மூச்சு புயல் காற்றுப்போல இருந்தது. வாளின் ஓரே

வீச்சில் இரண்டு உயிர்களைக் கொன்ற வெறி இன்னமும் அடங்கவில்லை போலும்.

நரசிம்ம அவதாரமெடுத்து இரணியனை வீழ்த்திய பின்பும் அவரது கோபம் அடங்கவே பல யுகங்களாகின என்று கேள்விப் பட்டிருந்தவர்கள், அதை நேரே பார்ப்பது போல இருந்தது. எப்போதுமே சாந்தமும் பொறுமையுமே உருக்கொண்டாற் போன்ற தெய்வீகத் தோற்றத்துடன் இருப்பவரா இவர்?

அதற்கு மேல் வழியில் யாதொரு எதிர்ப்புமின்றித் தங்கு தடையில்லாமல் சென்றார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் துறைமுகத்தின் எல்லைக்கு வந்து விட்டனர். அதற்கு மேல் கடல் இருந்தது. ஒரு நாற்பது ஐம்பது அடிகள் தள்ளி முதல் கப்பல் இருந்தது. அதை எல்லாரும் ஒரு நிழல் படர்ந்த இடத்திலிருந்தபடி நோட்டம் விட்டார்கள்.

பொன்னியின் செல்வர் அசைவின்றி நின்றார். நின்றது சிலை போலத்தான் என்றாலும், அவர் தன் கரிய விழிகளினால் குறுகுறு வென்று இருளுக்குள் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தார். முதலில் நிலத்தைப் பார்த்தார். துறைமுகத்தைப் பற்றி வணிகர்கள் வர்ணித்திருந்தது முற்றும் சரியென்று அவருக்குத் தோன்றியது. அங்கு கட்டுக்காவல் மிகவும் குறைந்திருந்தது.

பின் பார்வையைக் கடலுக்குள் பாயவிட்டார். திட்டத்தின் அடுத்த கட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தார்.

ஒரேயொரு கப்பலைப் பயன்படுத்திக் கூடக் கொள்ளையாளர்கள் நாளை கடலுக்குச் செல்லும்படி வாய்ப்புகள் வைக்கக் கூடாது என முடிவு செய்தார். குழுவினரிடம் திரும்பி, "எல்லாரும் என்னுடன் வர வேண்டும். இங்கிருந்து மெல்ல நீந்தி நடுவிலிருக்கும் பெரிய மரக்கலத்துக்குச் செல்ல வேண்டும்" என்றார்.

குளிர்ந்த நீரில் வாளை முக்கி, முதுகுப் பக்கமாகச் செருகிக் கொண்டு கடலில் இறங்கினார். அவரது உடலின் கீழ்ப்பாகம் மெல்ல மெல்லக் கடலுக்குள் மறைந்தது. கால்கள் எட்டும் வரை நடந்தார். பின் மெல்ல நீந்தினார்.

வணிகர்களும் தொடர்ந்தார்கள். அருள்மொழி வர்மர் இருந்ததிலேயே மிகப் பெரிய கப்பலைக் குறி வைத்துக் கொண்டு நீந்திக் கொண்டிருந்தார். குழுவாய் நின்ற கப்பல்களில் மையமாக இருந்த பெரிய கப்பலை அடைந்தார்.

கீழிருந்து பார்க்கையில் அதன் பாய்மரக் கொம்பு வானத்தைக் கீறுவது போல இருந்தது. அதன் துணிப்பாய் மிகவும் பெரியதாக

இருந்திருக்க வேண்டும். ஆனால், காற்றுக்குப் பயந்து சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கப்பலை சுற்றியே இதர கப்பல்களும் இருந்தன.

கப்பலின் பக்கத்தில் நங்கூரம் பாய்ச்ச ஒரு இரும்புச் சங்கிலி தொங்கிக் கொண்டிருந்தது. அதன் மேற் பாகம் கப்பலில் இணைக்கப்பட்டிருந்தது. கீழே தடித்த இரும்பு நங்கூரம் கடலின் தரையில் ஏதாவது ஒரு இடுக்கில் சிக்கியபடி இருக்கும். இவ்வளவு பெரிய கப்பல் கடலின் அலைகளுக்கும், காற்றின் வேகத்துக்கும் ஈடு கொடுத்தது, அந்த நங்கூரத்தினால்தான்.

அந்தச் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு மேலே பூனை ஏறுவது போல ஏறினார் இளவரசர். அவரது நனைந்த உடலிலிருந்து நீர் சொட்டியது. அவர் மேலே செல்வதற்குக் கடலில் காத்திருந்த மற்றவர்களுக்கு அந்த அமைதியான சூழலில் அது ஏதோ பெரு மழையோசை போலக் கேட்டது. ஆனால், கப்பலின் ஒரு பக்கம் அவர் குரங்கு போல ஏறுவதை கண்டு கடலில் இருந்தவர்களின் மனம் பூரிப்படைந்தது.

அவருடைய புகழானது கடல்களுக்கு அப்பாலுள்ள தூர தூர தேசங்களிலெல்லாம் பரவியிருப்பதில் எந்த அதிசயமும் இல்லை எனத் தோன்றியது. இவர் வந்த ஒரு மாத காலத்திற்குள்ளே அவர்களிடம் காணப்பட்ட மாறுதலானது மிக்க அதிசயமாயிருந்தது. அப்படிப்பட்ட மாமனிதனிடம் பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததே என்று மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால், இதெல்லாம் எவ்வளவு நாழிகைக்கு என்ற கேள்வியும் தோன்றியது.

பொன்னியின் செல்வருக்குப் பின் ஏறிய வணிகர்களுக்கெல்லாம் கைகள் நழுவின. ஆனால், அவர்கள் தளரவில்லை. கப்பலின் மீது ஏறிய பின், உள்புறமாகக் குதித்தார்கள். கைப் பிடியைப் பிடித்துக் கொண்டே கப்பலின் மையப்பகுதிக்கு இளவரசரைப் பின் தொடர்ந்து நடந்தார்கள்.

நடுவில் அறை இருந்தது. அதன் வாயில் வழியாக வெளிச்சம் வந்தது. யாரோ ஒரு பணக்கார வணிகர் செய்த கப்பலாய் இருக்க வேண்டும். கொள்ளையர்கள் கைப்பற்றிய பின் இங்கு கொண்டு வந்து நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பின் இதை கடலுக்கு எடுத்துச் சென்றதாகத் தெரியவில்லை.

கப்பலில் வேலைப்பாடுகள் மிகவும் அழகாக இருந்தன. பொன்னியின் செல்வர் நினைத்துக் கொண்டார்; 'என்ன ஒரு முட்டாள்தனம்! அழகுக்குக் கொடுத்த முக்கியத்துவத்துக்குப்

பதிலாகப் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்திருந்தால், இந்தக் கதி இந்தக் கப்பலுக்கு இல்லை' என்று.

அந்த அறைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தார். உள்ளே காவலுக்கு இருந்த ஆள் ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். திரும்ப வந்து பாய்மரக் கம்பத்தின் அருகே நின்றார். வாளை உயர்த்தி அந்தப் பாயைக் கட்டியிருந்த கயிற்றை வெட்டினார். பாய் அவிழ்ந்தது. மற்றவர்களிடம் சைகையால் புரிய வைத்தார். பின் எல்லாருமாகச் சுற்றியிருந்த பாயை அவிழ்த்தார்கள். அதன் நுனியில் இருந்த கயிற்றை இழுத்து, அதற்காக இருந்த கம்பத்தின் மீது சேர்த்து கட்டினார்கள். கட்டியவுடனே கப்பல் இலேசாக அசைந்தது. காற்று, விரித்த பாயுடன் விளையடியதில் அந்தச் சிலிர்ப்பு.

அசையாத கப்பலின் ஆட்டத்தில் விழித்து எழுந்த காவலன் வெளியே ஓடி வந்தான். அதை எதிர்பார்த்திருந்த பொன்னியின் செல்வர் வாளை உருவித் தயாராக வைத்திருந்தார். தனது சிறிய வாளை நீட்டியபடி காவலன் மெல்ல வெளி வந்தான். பொன்னி யின் செல்வருடைய வாள் வானில் உயர்ந்தது. அதுவே காவலன் பார்த்த கடைசிக் காட்சி.

பின் சுந்தரத்தைப் பார்த்து, அவர், "அந்த அறைக்குள் தீபம் இருக்கும். இந்தப் பந்தத்தில் தீப்பற்றிக் கொண்டு வா. தீபத்தில் தீயை அணைத்து விடாதே. அப்புறம்.." என்றார். சுந்தரம் பயந்து போயிருந்தான். தீ அணைந்து விட்டால் பின் வெறி கொண்ட வேங்கையிடம் இவனும் பலியாக வேண்டியது தான். இறந்து கிடந்த காவலனுடைய உடலைத் தாண்டி அறையினுள் பிரவேசித் தான் சுந்தரம்.

அவன் வருவதற்குள் சுற்று முற்றும் நோட்டம் விட்டார், பொன்னியின் செல்வர். ஆபத்து என்று யாருக்கும் இதுவரை தெரியவில்லை என உணர்ந்தார். ஆனால், கப்பல் இன்னமும் அதிகமாக ஆடத் தொடங்கியது. பொறுமையிழந்து அறைக் கதவை நோக்கினார். இரண்டு பந்தங்களில் தீயேற்றிக் கொண்டு வெளியில் வந்தான் சுந்தரம். ஒன்றைத் தன் கையில் வாங்கிக் கொண்டார் பொன்னியின் செல்வர். சுந்தரத்திடம், கப்பலின் மறுபக்கம் செல்லும்படியும் அங்கு முடிந்தவரை எரியக் கூடிய பொருட்களில் நெருப்பை மூட்டும்படியும் கட்டளையிட்டார். அவனும் தலை அசைத்து விட்டுச் சென்றான்.

தன் தீப்பந்தத்தைக் கொண்டு விரிக்கப்பட்ட பாயைத் தவிர மற்ற இடங்களில் நெருப்பைப் பற்ற வைத்தார் பொன்னியின்

செல்வர். கடைசி வரை விரித்திருந்த பாய்க்கு ஆபத்து வரக் கூடாது என்பது அவரது எண்ணம்.

தீ வைத்த இடங்கள் பற்றிக் கொண்டன. ஆனால், முதலில் வேகமாக நெருப்புப் பற்றவில்லை. பின் பல இடங்களில் அவர் சென்று தீயைப் பற்ற வைத்தார். கப்பலின் மறுபக்கத்தில் வெளிச்சம் அதிகரித்தது. சுந்தரம் தன் வேலையை நன்றாய்ச் செய்திருந்தான் எனப் புரிந்து கொண்டார்.

சுந்தரம் சென்ற பக்கத்தில் அதிக அளவில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் இருந்தன. அவன் செல்லும் வழியில் ஒரு பெரிய பாத்திரத்தில் எண்ணெய் இருந்தது தெரிந்தது. கப்பல்களுக்கு எண்ணெய் தேய்ப்பது வழக்கம் என அவனுக்குத் தெரியும். வருடம் ஒரு முறை கப்பலைக் கடற்கரை மண்ணில் சாய்த்து எண்ணெய் தடவுவது வழக்கம். மீன் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அதற்குப் பயன்படுத்துவார்கள்.

அந்தப் பாத்திரத்தைச் சாய்த்து விட்டான். அதிலிருந்து ஆறு போல எண்ணெய் ஓடியது. பின் தீப்பந்தத்தால் எண்ணெய் தோய்ந்த இடங்களில் நெருப்பைப் பற்ற விட்டான். அந்த இட மெல்லாம் பற்றிக் கொண்டது. சற்று நேரத்துக்கெல்லாம் அங்கே பிரளயம் போலத் தீ பரவும் எனத் தெரிந்து கொண்டான்.

பின்னர், தீப்பற்றத் தொடங்கிய ஒரு பஞ்சு மூட்டையைப் பக்கம் நின்ற கப்பலின் மீது விட்டெறிந்தான். அவனைப் போலவே மற்ற வணிகர்களும் பஞ்சு மூட்டைகளைச் சுற்றியிருந்த கப்பல்களின் மீது விட்டெறியத் தொடங்கினார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவர்கள் வைத்த தீ எல்லா இடங் களிலும் பரவியிருந்தது. அதற்குள் பிரதானக் கப்பலின் நடுக்கம் பெரிதாயிற்று. காற்றினால் உயிர் பெற்ற பாய்க்கும் கடற்தரையில் செல்லிய கப்பலின் நங்கூரத்துக்கும் போட்டி ஏற்பட்டது. அகலமான பாயின் மீது காற்று அடிக்கும்போது கப்பல் பலமாக அசைந்தது. ஆனால், நங்கூரம் அதை விடுவதாக இல்லை.

கப்பல் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது. அருகிலிருந்த கப்பல்களுடன் மோதியது. அதனால் பல கப்பல்களில் பயன் படுத்தப்பட்டிருந்த மரமும் முறிந்தது. கடைசியாக அந்த பலப் பரீட்சையில் வெற்றி பெற்றது காற்றுத்தான். நங்கூரம் கப்பலின் மேற் தளத்தில் இணைக்கப்பட்ட இடமும் தீப்பற்றி எரியவே அங்கு பிளவு ஏற்பட்டது.

சங்கிலி, பாம்புபோலச் சிலிர்த்துக்கொண்டு கடலுக்குள் விழுந்தது. உடனே ஏதோ விடுபட்டது போலக் கப்பல் இங்கும்

அங்குமாய் அசைந்தது. அதைத்தான் பொன்னியின் செல்வர் எதிர் பார்த்துக் காத்திருந்தார். சில நிமிடங்களில் வெப்பம் தாங்க வில்லை. இனி இங்கிருப்பதால் ஆதாயம் ஒன்றும் இல்லை, அபாயம்தான் என்று அறிந்து, கையிலிருந்த தீப்பந்தத்தை அருகிலுள்ள கப்பலின் மீது எறிந்துவிட்டு நீருக்குள் எல்லாருமாய்க் குதித்தார்கள்.

கடலின் குளிர்ச்சி அவர்கள் சில நிமிடம் முன்வரை அனுபவித்த வெப்பத்துக்கு ஆதரவாக இருந்தது. பின் நீருக்குள் மூழ்கிக் கரையை நோக்கி நீந்தினர். அவர்களுக்குத் தெரியும். காற்றும் நெருப்பும் அவர்களது வேலையை இனி எளிதாக முடித்துவிடும் என்று.

அவர்கள் கரையை அடையுமுன் பிரதானக் கப்பல் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. தீ கப்பலின் கீழ்த் தளத்தில் இருந்த கற்பூரத்தைப் பற்றிக் கொண்டுவிட்டது போலும்.

கப்பலில் கற்பூரம் ஏற்றப்பட்டு வருவது சகஜம். கீழை நாடுகளில் கற்பூர மரத் துண்டுகளை எரித்துவிட்டுப் பாத்திரத்தை அதன் மீது கவிழ்த்துவிட்டு விடுவார்கள். அந்தப் புகை பாத்திரத்தின் உள்ளே சென்று படியும். பின் வெள்ளை நிறப் பொடியாகத் தென்படும். கற்பூரம் போல எரிவது வேறேதும் இல்லை. இப்போது அதில் தீ பரவியது. அக்கினியின் பேயாட்டத்தில் நங்கூரம் இல்லாத கப்பல் அங்கும் இங்குமாய் அசைந்தது. அதனால் அதன் அருகிலிருந்த இதர கப்பல்களுக்கும் வெப்ப அலைகள் பரவின.

காற்றின் களியாட்டம் கொள்ளையரின் கப்பற் படையைச் சற்று நேரத்துக்கெல்லாம் கரித் துண்டுகளாய் ஆக்கிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. தன்னுடன் வந்தவர்கள் அனைவரும் ஒரு சேதமுமின்றிக் கரைக்கு நீந்திக் கொண்டிருந்ததைக் கண்ட பொன்னியின் செல்வர் தான் புறப்படுவதற்கு முன் செய்த சபதத்தை நினைவில் கொண்டார்.

"என்னுடைய வாள் வலி கொண்டும், எனக்குத் துணை வரும் வீரர்களின் தோள் வலிகொண்டும், இந்தக் கொள்ளையர்களை அடக்குவேன். போரில் மடிந்தால், சோழர் குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன்!" என்று சபதம் செய்துவிட்டு வந்த பொன்னியின் செல்வருக்கு இப்போதுதான் திருப்தி.

துறைமுகம் முழுவதும் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. எவ்வளவு வித்தியாசம்! வந்தபோது இருந்த அமைதி இப்போது இல்லை. அதற்குள் காவலுக்கு என்று இருந்த பத்துப் பதினைந்து

வீரர்கள் வெளியே வந்துவிட்டார்கள். வேற்று மனிதன் ஊடுருவி விட்டான் என்று உணர்ந்த வீரர்கள் கத்திக் கொண்டே ஓடி வந்தார்கள்.

பொன்னியின் செல்வர் கரையை அடையும் முன் தனது வாளை உருவினார். இளவரசர் தன்னுள் அடக்கி வைத்திருந்த அசாத்திய சக்தியை அப்போது வெளிக் கொணர்ந்தார். மகாசக்தியைக் கட்டவிழ்த்தார். தருணத்துக்கு ஏற்ப இப்போது தன் திறனை வெளிக்காட்டினார்.

வாளோடு வாள் மோதியபோது, மின்னல்கள் போல மின்னின. ஒவ்வொரு சுழற்சியிலும் ஒவ்வொரு எதிரியின் தலையைத் துண்டித்தது அவரது வாள். ஓடி வந்த வீரர்களை அவர்கள் வந்த வேகத்திலேயே வெட்டிச் சாய்த்தார் பொன்னியின் செல்வர். சாட்சாத் அந்தத் தேவலோகக் காவலன் பெருமாளின் சக்ராயுதம் போலச் சுற்றியது அவரது வாள். அதன் விளைவாக கடைசியாகக் காலடியில் மாண்டு கிடந்தனர் பலரும்.

மெய்யப்பன் நினைத்துக் கொண்டான். 'ஆகா. கதையில் கேட்ட அர்ஜுனன் போல, கர்ணன் போலப் போராடுகிறாரே. இவர் போரிட்டதைப் பார்த்த பின் இனி உயிர் துறந்தாலும் கவலையில்லை. அவர் போராடியது அவருக்கு இருந்த வீரத்தை மட்டுமா வெளிக் காட்டியது? அதற்கு மேல் ஏதோ தெய்வ சக்தியொன்று அவரை வழி நடத்தியதாகவே தோன்றியது.'

பொன்னியின் செல்வர் தலைமை வகுத்த படை துறைமுகத்தி லிருந்து திரும்பி வந்தது. வாயு பகவான் பெருமளவில் அவர்களுக்கு உதவி புரிந்திருந்தார். தீ ஒரு கப்பலிலிருந்து வேறு கப்பலுக்கு அதன் உதவி கொண்டு பரவியது. சில நிமிடங்களிலேயே கொள்ளை யரின் கப்பல் படை நிர்மூலமாகிவிடும் என்று தெரிந்து குகைக்குத் திரும்பினார்கள்.

திருப்பத்திலிருந்து பார்த்தார்கள். துறைமுகத்தில் இரவு - பகல் போல - மாறியிருந்தது. ஒன்று மட்டும் நிச்சயம். காலையில் அங்கு கடலில் மிதக்கப் போவது கொள்ளையரின் கப்பல்கள் அல்ல. கரித் துண்டுகள் மட்டும்தான்.

அப்போதுதான் பொன்னியின் செல்வர் எல்லாரும் மறந்து போயிருந்த விஷயத்தைப் பற்றிப் பேச்சை எடுத்தார்.

"வந்தியத் தேவர் சென்ற காரியம் என்னவானதோ? அவர் என்ன செய்கிறாரோ?"

❖ ❖ ❖

அத்தியாயம் முப்பத்து மூன்று

அணை உடைந்தது

அன்று நள்ளிரவு பொன்னியின் செல்வரும் அவர் தலைமையில் செயல்பட்ட கோஷ்டியினரும் துறைமுகத்துக்குக் கிளம்பினார்கள். அவர்களை வழி அனுப்பிவிட்டு, அவர்கள் ஒரு திருப்பத்தில் மறைந்த பின்னே, வந்தியத் தேவனும் அவன் தலைமையில் இருந்த படையினரும் எதிரப்புறமாகக் கிளம்பினர்.

''எங்களுக்கு ஆயுதங்கள் எதுவும் வேண்டாம். எங்கள் திட்டத்தில் எதிரியைச் சந்திக்கும் சந்தர்ப்பமே கிடையாது!'' என்று கூறிய வந்தியத் தேவன் ''எல்லாவற்றையும் நீங்களே எடுத்துச் செல்லுங்கள்'' என்று பெருந்தன்மையாய்க் கூறிவிட்டான். நான்கு மரம் வெட்டும் கோடரிகளை மட்டும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள், வந்தியத் தேவனின் தலைமையில் இருந்த கோஷ்டியினர். பொன்னியின் செல்வருடைய வற்புறுத்தலுக்காக அங்கிருந்த அனைத்து வேல்களையும் எடுத்து வந்தார்கள்.

கடைசி நிமிடத்தில் வந்தியத் தேவனின் மனதை வதைத்தன பல துன்பமான கற்பனைகள். எனினும் தன் சோக நினைவுகளை உதறிவிட்டுத் தன் குழுவினரை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் பிரவேசித்தான். அந்தக் கொள்ளையர் கிராமத்தை நோக்கி ஐவரும் சென்ற போது அவர்களது உள்ளத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை விவரிக்க முடியாது. எதிரிகளின் உடைமைகளைத் தாக்கப் போகிறோம் என்ற உணர்வு அவர்களை நடத்திச் சென்ற போதும், மனதில் நிறைந்த சந்தேகங்கள் வேகத்தைக் குறைத்தன.

அந்தக் கோட்டையைத் தாக்குவது நூறு வீரர்களால் கூட இயலாத காரியம் என்று அவர்களுக்குத் தெரியும். நான்கு கோடாரிகளுடன் ஐவர் அதைச் செய்யப்போகிறார்கள் என்றால் யாருக்கும் அதிசயமாகத்தான் இருக்கும். எந்தப் போர்க் கலை ஏட்டிலும் இல்லாத திட்டம் இது. ஆனால், தனக்கு எவ்வித ஆயுதமும் வேண்டாம் என்றவுடன், மர்மமாகச் சிரித்த பொன்னியின் செல்வருக்கு இவனது திட்டம் முழுமையாக வெற்றி பெறுமென்று தெரியும் என யூகித்தான்.

காட்டின் வழியாகச் சில நிமிடங்கள் நடந்த பின் அணைக்குப் பின்னிருந்த ஏரியை அடைந்தார்கள். பனி விழுந்ததால் செடி கொடிகளெல்லாம் பூரணப் பொலிவுடன் விளங்கின. இவர்கள் வரவைக் கண்டு அந்த அணையின் பின் இருந்த நீரில் தத்திப் பாய்ந்த தவளைகளின் சப்தம் ''பொத் பொத்'' எனக் கேட்டது.

அங்கிருந்து கொள்ளையர் கிராமம் நன்றாய்த் தெரிந்தது. ஒரு வெறுப்புடன் அந்தக் கோட்டையைப் பார்த்தான் வந்தியத் தேவன். கொள்ளையர் கோட்டைக்கு அருகே முன்பொரு முறை சென்றிருந்த போது சவுக்கடியினால் துடித்த அடிமையின் அபயக் குரலும், வேலிக்கு மேல் எட்டிப்பார்த்தபோது கண்ட பயங்கரக் காட்சியும் அவன் மனதை மீண்டும் ஒரு முறை குலுக்கின.

தனது உணர்ச்சிகளைப் பின்தள்ளிவிட்டுப் போர்புரியும் கண்ணோட்டத்துடன் அந்தக் கிராமத்தை நோட்டம் விட்டான். அதைக் கோட்டை எனக் கூற முடியாது. சம பலம் கொண்ட எதிரியின் தாக்குதலை அரை நாழிகை கூட அந்தக் கோட்டை எதிர்த்து நிற்கமுடியாது. கொள்ளையர் தங்கள் தொழிலை இந்தத் தீவில் தொடங்கியபோது, மரங்களை வெட்டி மேலே கூர்மையாக்கி, ஒன்றையடுத்து ஒன்றாய் ஒரு மரச்சுவர் போல ஏற்படுத்தியிருந்தனர்.

பின் காலம் செல்லச் செல்ல நம்மைத் தாக்க யார் வருவார் என்ற அசிரத்தை அவர்களுக்கு ஏற்பட்டது. அப்படியே பராமரிப்பின்றி இருந்து விட்டது தடுப்புச் சுவர். ஆங்காங்கே மனிதர் உள்ளே புகுமளவுக்கு ஓட்டைகளும் இருந்தன. அதன் வழியாகதான் அந்தரம் உணவு திருடி வருவான். எந்த அடிமையேனும் தப்பினாலும் எங்கு செல்ல முடியும் இந்தப் பயங்கரத் தீவில். அவர்கள் உணவுக்கு என்ன செய்ய முடியும் என்ற எண்ணம் கொள்ளையருக்கு இருந்ததால் ஓட்டைகளை அடைக்கக்கூட முற்படவில்லை அவர்கள்.

கோட்டையினுள் நோட்டம் விட்டான், வந்தியத் தேவன். கிராமத்துக்குள் ஒரே கும்மாளமாக இருந்தது. நடுவில் பலவிடங்களில் நெருப்பை வளர்த்துக் கூத்தடித்துக் கொண்டிருந்தார்கள், கொள்ளையர்கள். பாட்டும் ஆட்டமுமாய் இருந்தது. மதுபானம் வெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது. அதன் விளைவாக யாரும் சுய நினைவில் இருப்பதாகத் தெரியவில்லை. கோடரி மரத்தில் மோதும் சப்தமோ மரம் முறியும் சப்தமோ அங்கிருப்பவர்களுக்கு நிச்சயமாகக் கேட்காது என முடிவு செய்தான், வந்தியத் தேவன்.

ஒரு கவலையும் இல்லாமல் கூத்தடித்துக் கொண்டிருந்த கொள்ளையர்களைக் கண்டவுடன் பல சந்தேகங்களும் அவன் மனதில் எழுந்தன. ஓட்டை உடைசல் இருந்தாலும் அது மாபெரும் கோட்டைதான். உள்ளிருந்தவர்கள் ஐந்நூறு கொடிய பாவிகள். 'இந்தக் கோட்டை இவ்வளவு பெரியதாக இருக்கின்றதே! தனது திட்டம் கொண்டு இதைத் தகர்க்க முடியுமா? இந்த காரியத்தில் இளவரசர் பேச்சைக் கேட்டு இறங்கினோமே. நம்முடைய அவசர

புத்தி நம்மை விட்டு எப்போதுதான் போகப் போகிறது?' என்று நினைத்தான்.

இந்த எண்ணங்கள் அவன் கால்களின் வேகத்தைக் குறைத்தன. ஆனாலும் ஒரு முடிவுக்கு வந்தான். முதலில் ஆட்சேபம் தெரிவித்ததனால் அவனது பொறுப்பு அதிகரித்தது. இதில் வென்றே காட்ட வேண்டும் என்ற வெறியும் தோன்றியது. 'வெற்றி அல்லது வீர மரணம். நம்மிடம் இருக்கும் ஆயுதங்களையும், ஆள்பலத்தையும் வைத்துக் கொண்டு, இதை விட நல்ல திட்டத்தைத் தீட்ட முடியாது.'

இந்தத் திட்டம் மனதுக்குப் பிடித்து விட்டது. அதற்கொரு முக்கிய காரணம்-பொன்னியின் செல்வர் கொடுத்த சாடைக் குறிப்பினால்தான் இந்தத் திட்டமும் வந்தது.

"வீரர்கள் பலம் இல்லாத படை இயற்கையை உதவிக்கு அழைக்க வேண்டும்" என்று அவர் கூறினாரே. உமக்கு அந்தக் கிராமத்தை அழிப்பது தண்ணீர் பட்டபாடு என்றும் அல்லவா கூறினார். அப்போது தான் இவனுக்குப் பொறி தட்டியது. பின்பு தான் அந்த அணைக்குப் பின் இருந்த நீரையே ஆயுதமாய்க் கொண்டு அந்தக் கிராமத்தை அழிக்க முற்பட்டான்.

திட்டம் வகுத்த பின் தன் குழுவினரை ஒரு முறை அழைத்துக் கொண்டு ஏரிக் கரைக்குச் சென்றான், வந்தியத் தேவன். அங்கு அவன் தலைமையில் விவாதக் கூட்டம் நடந்தது.

"அணையைச் சுற்றி ஆட்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று அவன் வினவ, வணிகர்கள் அதற்குப் பதில் அளித்தார்கள். "அதைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். அங்கு இந்தக் காலங்களில் யாருமே வருவதில்லை. கிராமத்தில் வரும் ஆற்று நீர் குறைந்தால் மட்டுமே இங்கு வருவார்கள். இதுவரை பல முறை இங்கு வந்திருக்கிறோம். ஆனால், ஒரு முறை கூடக் கொள்ளையரைப் பார்த்ததில்லை" என்று உறுதியாய்ச் சொன்னார்கள்.

பின்னர் அவன் திட்டத்தை அவர்களுக்கு விளக்கினான். அவர்களுக்கும் அந்தத் திட்டம் சாத்தியமே என்று தோன்றியது.

நடந்து வந்தவர்கள் ஏரியின் மேல்பாகத்தை வந்தடைந்தார்கள். அங்கிருந்து கிராமத்தை நோட்டம் விட்டபின், கீழே இறங்கி வந்தார்கள். வந்தியத் தேவன் பேச முற்பட்டான். இப்போது அவன் குரலைக் கடுமையாக்கிக் கொண்டு, "எல்லாரும் நன்றாய்க் கேட்டுக் கொள்ளுங்கள். மீண்டும் ஒரு முறை சொல்ல

அவகாசமோ, வாய்ப்போ இல்லாமல் போகலாம். இப்போது நம்மிடம் நான்கு கோடரிகள்தான் இருக்கின்றன" என்றான்.

"வெட்டவேண்டியது இந்த இரண்டு மரங்களை!" என்று கூறி, இரண்டு உயரமான மரங்களைக் காட்டினான். "வெட்டப்பட்ட உடன் மரங்கள் அணையின் தடுப்புச் சுவரின் மீது விழவேண்டும். மிகவும் வேகமாகவும் செயலாற்ற வேண்டும். நாம் ஐவரும் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கக் கூடாது" என்றான்.

மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டார்கள், வணிகர்கள். "எல்லாம் புரிந்ததா?" என்று கேட்டுவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் கையில் கோடரியுடன் மரத்தை நோக்கி விடுவிடு என்று நடந்து சென்றான்.

மரத்துக்கும் அணைக்கும் நடுவில் நின்று கோடரியை ஓங்கினான், வந்தியத் தேவன். அந்தக் கோடரி இறங்கி மரத்தில் பாய்ந்தது. சப்தம் ஏதோ களங்கமற்ற வானில் கேட்ட இடி போல இருந்தது. மரத்திலே மலர்ந்து குலுங்கிய புஷ்பங்கள் கீழே விழுந்து "கம்" மென்று மணம் வீசின. தாங்கள் நடத்தும் தர்ம யுத்தத்துக்காக தேவர்கள் மலர் தூவி வாழ்த்துகிறார்கள் என்று நினைத்தான் வந்தியத் தேவன். நல்ல சகுனம்தான்.

ஒரு அசைவில் கோடரியை மரத்திலிருந்து விடுவித்தான். அடுத்த மரத்துக்கு நகர்ந்தான். அவனைத் தொடர்ந்து இன்னொருவன் அவன் இடத்தை எடுத்துக்கொள்ள, வந்தியத் தேவன் அடுத்த மரத்தைத் தாக்க முற்பட்டான். இப்படி கொஞ்சம் நேரம் வெறி வந்தவர்கள் போல் மரங்களை வெட்டினார்கள்.

வலது புறமாக இருந்த மரத்தை அணையின் மீது தள்ளி விடுவது என முடிவெடுத்தனர். அந்த மரத்தில் வெட்டப்படாத பாகத்தின் பக்கம் சென்று அதை எல்லாருமாகச் சேர்ந்து தள்ளிவிட்டார்கள். முதலில் அசையாத மரம் கொஞ்ச நேரத்தில் சடசடவென்று முறிந்து விழுந்தது. எல்லாருமாக அகன்றார்கள்.

செங்குத்தாக மரம் சாய்ந்தது. அது சரியாக அணையின் மேல்புறத்தில்தான் விழுந்தது. தண்ணீர் வெளியே தெறித்தது. மரத்தின் அடிப்பகுதி பலமாக அணையின் மீது விழுந்தபோதும், அணையில் எதிர்பார்த்தபடி ஒரு பிளவும் ஏற்படவில்லை. வந்தியத் தேவன் தன் சகாக்களின் தொங்கிய முகங்களைப் பார்த்தான்.

"பரவாயில்லை, கவலைப்படாதீர்கள். அடுத்த மரம் இருக்கிறது. அதையும் வெட்டித் தள்ளுங்கள். நிச்சயமாக அணை உடையும்" என்றான். மீண்டும் கோடரியை அடுத்த மரத்தின் அடிப்பாகத்தில் பாய்ச்சத் தொடங்கினார்கள்.

பயங்கரச் சப்தத்துடன் இரண்டாவது மரமும் சாய்ந்தது ஆனால், வந்தியத் தேவன் சொன்ன இடத்தில் அது விழவில்லை. மரம் அணையின் மேல் விழாமல், பக்கத்திலிருந்த பாறையின் மீது விழுந்தது.

எல்லாருக்கும் ஏமாற்றம்.

இனி மரம் வெட்டி அணையைத் தகர்ப்பது என்பது சாத்தியமில்லை. வந்தியத் தேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். 'எவ்வளவு அதிர்ஷ்டக்காரன் நீ! யாராலும் சாதிக்க முடியாத காரியங்கள் எவ்வளவு நீ சாதித்திருப்பாய்! இந்த எளிய காரியத்தைக் கைநழுவ விட்டாயே!' அவன் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அதனால் அடுத்து நடந்த சம்பவத்தை அவன் தெளிவாகப் பார்க்கவில்லை.

மெல்ல மெல்ல மேலே இருந்த அந்த மரம் உருண்டு அதன் கிளைகள் நீரில் விழுந்தன. தண்ணீர் வெளியே தெறித்தது. இப்போது அந்தப் பிரதான அடிமரம் அணையின் மீது பொத்தென விழுந்தது. ஐந்து பேருடைய கண்களும் அந்தப் பக்கம் நோக்கின.

அணையின் மேல்பாகத்தில் விழுந்த மரம் ஒரு கண நேரம் நின்றது. அந்த இரு மரங்களுமே அடுத்தடுத்துத்தான் இருந்தன. பின் ஏதோ வெண்ணெயை வெட்டும் கத்திகள் போலப் பொல பொல வென்று மரங்கள் தரையை நோக்கி நகர்ந்தன. சில நிமிட நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்டது அனைத்தும். மரம் கீழ் இறங்குவதைக் கண் கொட்டாத பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் வந்தியத் தேவனும் சகாக்களும். ஏற்கெனவே விழுந்த மரத்தின் கனமும் அடுத்தது விழுந்த வேகமும் அணை உடைவதற்கு முழு ஆதரவு கொடுத்தன.

முதலில் பிளவின் வழியாகச் சலசல சப்தத்துடன் நீர் மெதுவாகத்தான் கசியத் தொடங்கியது. பின்னர் தேக்கி வைக்கப் பட்டிருந்த அவ்வளவு நீரும் இவ்வளவு நாள் அடைபட்டுக் கிடந்த கோபத்தை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, ஆவேசமாகப் பொங்கிப் பெருவெள்ளமாய்ப் பெருத்த ஓசையுடன் வெளியேற முயறச்சி செய்யவே, மீதி அணையும் மடமடவென உடையத் தொடங்கியது.

வந்தியத் தேவன் நீரின் பாதையிலிருந்து தாவினான். அவனுடைய பரிவாரங்களும் தப்பிப் பிழைத்து மேடேறினார்கள். ஏதோ பிரளயத்தைப் பார்ப்பது போல இருந்தது. சற்று முன்னால் கவலையும் வேதனையும் குடிகொண்டிருந்த வந்தியத் தேவனுடைய முகத்தில் இப்போது வெற்றிப் புன்னகை தவழ்ந்தது.

பாய்ந்து வந்த தண்ணீர் கிராமத்தை என்ன செய்யுமோவென்று எல்லாரும் கண் கொட்டாத ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்தார்கள். வெள்ளம் கிராமம்வரை அதற்கு நிர்ணயிக்கபட்ட வழியில்தான் சென்றது. அது எதிர்ப்பை எதிர்கொண்டது கிராமத்தின் வெளிச் சுவரிலும், உட்புறத்திலும்தான். அங்கு சரியான பராமரிப்பில்லாமல், தூர் வாரப்படாமல் இருந்த ஓடையின் பாதையில் அவ்வளவு வெள்ளம் செல்ல முடியவில்லை. நீர்ப் பிரவாகம் உடனே நிலமெங்கும் பரவியது.

கொள்ளையரின் கிராமத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பெயர்த்தெறிந்தது அந்தப் பிரவாகம். சுய நினைவில் இருந்தவர்கள், வெள்ளத்தில் சிக்கிக் கொள்ளாமலிருக்க ஓடினார்கள். ஆனால் முடியவில்லை. போதையில் இருந்தவர்ளையும், தூக்கத்தில் இருந்த வர்களையும் அந்த வெள்ளம் இழுத்துச் சென்று மேற்கு வேலியின் மீது முட்டியது. சற்று நேரத்துக்கெல்லாம், நதியின் முகத்துவாரத்தில் கிராமத்தின் உடைமைகளும், இறந்த கொள்ளையரின் உடல்களும் கிடந்தன.

கொள்ளையர் கிராமத்தில் பெரும் இரைச்சல் கேட்டது. வெள்ளத்திலிருந்து தப்பிக்கப் பலரும் சிறு முயற்சிகூடச் செய்யவில்லை. இரவெல்லாம் களியாட்டங்களில் கழித்தவர்கள் அபாயத்தை எதிர் கொள்ளும்போது எழுப்பிய பயக் கூக்குரல் வானவெளியை எல்லாம் கிடுகிடுக்க வைத்தது. வெள்ளத்தைக் கண்டு செய்வதறியாது அலறினார்கள். உயிர்சேதம் பெரிதாக இல்லை என்றாலும் அந்த வெள்ளப் பெருக்கில் கிராமமே தரைமட்டமானது.

உடைந்து போன அணையை ஒரு பரவசத்துடன் பார்த்துக் கொண்டே இருந்தான், வந்தியத் தேவன்.

நிமிடத்துக்கு நிமிடம் ஏரியின் நீர் மட்டம் குறைந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். அது காலியாகும்போது கிராமமும் காலியாகிவிடும் என அவனுக்குத் தெரியும். திரும்பிப் பார்த்தால் கிராமத்தில் முன்பிருந்த ஜன நடமாட்டமும் கலகலப்பும் இல்லை.

அவன் தோளைப் பற்றிக் குலுக்கினான் ஒரு வணிகன். ''இனி இங்கு அதிக நேரம் இருப்பது ஆபத்து. செல்வோம், வாருங்கள்'' என்றான். மனமில்லாமல் வந்தியத் தேவன் திரும்பினான்.

போகும் வழியில் தன் வெற்றியைப் பொன்னியின் செல்வரிடம் விவரிக்க வேண்டும். அவர் புகழும் வார்த்தைகளைக் காது குளிரக் கேட்க வேண்டும் என்று நினைத்தபடி நடந்தான். அப்போது

அவன் மனதில் ஒரு பயம் தோன்றியது. 'பொன்னியின் செல்வரும் வெற்றி பெற்றிருக்க வேண்டுமே.'

அந்த நினைப்பு வந்தவுடன் அவனது கால்கள் வேகமாக நடந்தன. ஆனால், குகையை அடையும் முன்பே துறைமுகத்தில் தீயின் ஆக்ரோஷத் தாண்டவங்கள் தெரிந்தன. துறைமுகத்தில் புகையானது வானமுகடு வரை சென்று மேகம்போல விரிந்தது.

'ஆகா! அவருக்கும் வெற்றிதான்!' என்று எண்ணினான். துறை முகத்தைத் தாக்கச் சென்ற படையும் இவர்களுக்கு முன்பே வெற்றி யுடன் வந்து விட்டது. வந்தியத் தேவனோ அணையைத் தகர்த்துக் கொள்ளையர் கிராமத்தையே நிர்மூலமாக்கி விட்டான். வெற்றி என்பது மதுவைவிடப் போதை தரக்கூடியது. அந்த மயக்கத்தில் வந்த வந்தியத் தேவனும், பொன்னியின் செல்வரும் ஒருவரை யொருவர் அணைத்துக் கொண்டனர்.

"இளவரசே! மாபெரும் வெற்றி!" என்றான் வந்தியத் தேவன். "அது என்னவோ, இத்தனை காலம் நாம் கண்ட வெற்றிகளைக் காட்டிலும் இந்தப் வெற்றி இணையற்ற சிறப்புடன் திகழ்கிறதே?" என்று கேட்டான்.

பொன்னியின் செல்வர் பதிலளித்தார். "வந்தியத் தேவரே! இதுவரையில் சோழ சாம்ராஜ்யத்துக்கு எவ்வளவோ மகத்தான சேவைகளைப் புரிந்திருக்கிறீர்கள். ஆனால், அவை எல்லாவற்றை யும் விடப் பரம முக்கியமான காரியம் இன்று நீங்கள் செய்தது."

ஒரு நொடி மௌனத்துக்குப் பின், "ஆனால், வல்லவராயரே, இனிமேல் தான் நமக்குச் சோதனை. தங்கள் மீது இன்னொரு கோஷ்டி படையெடுத்து வரக்கூடுமென்று கனவிலும் கொள்ளை யர்கள் கருதவில்லை. அவர்கள் சற்றும் எதிர்பாராத சமயத்தில் தாக்கி ஜெயம் கண்டோம். கொள்ளையரின் வஞ்சகத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது."

"பல நாட்களாய் இருந்த அவர்களது சேமிப்பு அழிந்ததைக் கண்டு அவர்களுடைய உள்ளத்தில் எவ்வளவு பயங்கரமான வன்மம் குடிகொண்டிருக்கும் என்று எண்ணும்போது நம்மை அவர்கள் உயிரோடு இந்தத் தீவை விட்டுப் போகவிடுவார்களா என்பதே சந்தேகம்தான்" என்றார்.



அத்தியாயம் முப்பத்து நான்கு

போர்! போர்!

செங்கதிர்த் தேவன் சமுத்திரத்திலிருந்து எழும் நேரமாயிற்று. அதற்கான அறிகுறிகளும் கடலும் வானும் கலக்கும் இடத்தில் தெரிந்தன. இன்னமும் இரவு பெற்ற பெரும் வெற்றி அனுபவங் களை மற்றவருடன் பகிர்ந்து கொண்டிருந்தனர் சோழர் படை யினர். இரவு யாரும் தூங்கக்கூடவில்லை.

அன்றிரவு மூன்றாம் ஜாமத்தில் மந்திராலோசனை சபை மறுபடி யும் கூடியபோது, கூடியிருந்த எல்லாருடைய முகத்திலும் மலர்ச்சி காணப்பட்டது. இன்னமும் வெள்ளப் பிரவாகத்தை பற்றி ஒரு கோஷ்டியினரும், அக்கினி ஆவேசத்தைப் பற்றி மற்றவரும் பேசிக் கொண்டிருந்தனர். வணிகர்கள் ஆவேசமாக இருந்தனர். தாங்கள் வாளேந்தும் குலத்தில் பிறக்கவில்லை என்பதே அவர்களுக்கு மறந்து போனது.

"தடுத்தவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்தி அதாஹதம் செய்து கொண்டு வந்து விட்டோம். கப்பல்களையும் அவற்றிலிருந்த கொள்ளையரின் செல்வத்தையும் பூண்டோடு அழித்துவிட்டு வந்தோம்" என்று ஒரு கோஷ்டியினரும், "வெள்ளம் பெருக் கெடுத்ததைப் பார்த்திருக்க வேண்டுமே, இந்தத் தீவே மூழ்கிவிடும் என்ற பயம் வந்து விட்டது!" என்று மற்றவரும் வாயளந்து கொண் டிருந்தனர்.

அருள்மொழி வர்மர் மற்றவர்கள் மறந்ததை நினைவு படுத் தினார். "போர் இன்னும் முடியவில்லை. தெய்வாதீனமாகத்தான் இதுவரை இந்த வெற்றிகளைச் சாதிக்க முடிந்தது. ஆனால், நம் மீது தெய்வங்களுக்கு இருந்த கருணை இன்னும் தொடர வேண்டு மென்று வேண்டிக்கொண்டு புறப்படுவதற்கு ஆயத்தமாகுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் கொள்ளையர்கள் நம்மைத் தேடி வந்துவிடுவார்கள்" என்றார், பொன்னியின் செல்வர். இரவெல் லாம் வேலை செய்து களைத்துப் போயிருந்தனர். ஆனால், எல்லா ருடைய முகத்திலும் வெற்றி வாகை சூடியதில் மகிழ்ச்சி.

பின் இருக்காதா? இரண்டு ஆண்டுகள் யாருக்காக பயந்து பயந்து வாழ்ந்தார்களோ, அவர்களுடைய இருப்பிடத்தையும், உடைமைகளையும் நிர்மூலமாக்கியாயிற்று. குகையிலிருந்து பார்த்தால், கொள்ளையரின் கிராமமும், கப்பல்களும் அடைந் திருந்த சேதம் நேரடியாகத் தெரியாவிட்டாலும், புகை மண்டலம்

மலைக்கு மேல் கவிந்திருந்தது தெரிந்தது. கப்பல்களும் அவற்றில் இருந்த எரியக் கூடிய பொருட்களும் இன்னும் அக்கினிக்கு இரையாகிக் கொண்டுதான் இருந்தன.

எழ மனமில்லாமல், தலைவரின் சொல்லுக்காகப் படை எழுந்தது. முகம் சுழுவியது. மொத்தப் படையின் எண்ணிக்கை பதின்மூன்று. எதிரிப்படைகளோ அதைப் போல நாற்பது மடங்கு பெரியது. ஒருவன் நாற்பது பேருடன் போரிட முடியுமா? சோழர் சரித்திரத்தில் மிக அதிசயமான போர் தொடங்கப் போகிறது என்று தோன்றியது.

எல்லாருமாக ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றனர். அதுதான் போர்க்களம் என்று பொன்னியின் செல்வர் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்.

கடற்கரையில் சோழநாட்டுச் சைனியம் ஒன்று கூடி நின்றது. ஆனால், இது விசித்திரமான படை. புலிக் கொடி கம்பீரமாகப் பறக்கவில்லை. இந்தப் பேரரசின் சரித்திரத்தில் இவ்வளவு சிறிய சைனியம் போருக்கு ஆயத்தம் ஆனதுமில்லை. நாடில்லாமல் திண்டாடிய விஜயாலயனிடம் கூட இதைவிட அதிகமான ஆள்பலம் இருந்திருக்கும்.

எழுந்த சூரியன் சோழர்களுக்கு மட்டும் வெளிச்சம் தரவில்லை. அது கொள்ளையருக்கும் தங்கள் இழப்புகளை முழுவதுமாக விளக்கிக் காட்டியது. சிதைந்து கிடந்த கிராமத்தையும், கருகிக் கிடந்த பாய்மரங்களையும் பார்க்கப் பார்க்க அவர்களுக்குக் கோபக் கனலும் மண்டியது.

முதலில் வெள்ளத்தினால் பெரும்பாலானவருக்குப் போதை தெளிந்தது. ஆனால், விஷயம் இன்னதென்று தெரியவில்லை. இது நாச வேலைதான் என்று முதலில் அவர்கள் சந்தேகப்படவில்லை. பின்பு பார்த்தால் கப்பல்களும் பற்றி எரிந்து கொண்டிருந்தன.

வெள்ளம் வந்தால் இயற்கையென நினைத்துக் கொள்ளலாம். பல காத தூரம் நீரில் மிதந்த கப்பல்களும் தீப்பற்றி எரிந்தால் என்னவென்று நினைப்பது? அப்போது ஒரு கேள்வி எழுந்தது. கிராமம் அழிந்தபோது அதே நேரத்தில் கப்பல்களும் எப்படித் தீப்பிடிக்கும்? நிலத்தில் இருக்கும் கிராமம் நீயில் அழிந்தால் ஒரு அடுப்பு கவிழ்ந்தது என நினைத்துக் கொள்ளலாம். கடலில் மிதந்த கப்பல்கள் யாவும் கருகி நீரில் கரித்துண்டுகளாய்க் கிடந்தது எப்படி?

பின் உடைப்பு வரையில் போய்ப் பார்த்துவிட்டு முடிவு செய்தார்கள். அணையை உடைத்தவை மரங்கள். இரண்டே இரண்டு

மரங்கள். அவற்றைக் கொண்டு ஒரு கிராமத்தையே அழித்து விட்டனர் எதிரிகள். ஆனால், அது போலல்லாமல், துறைமுகம் எங்கும் போருக்கு அறிகுறியாகக் காவல் புரிந்தவரின் சடலங்கள் கிடந்தன.

குரோதத்தின் சிகரத்தை அடைந்திருந்த கொள்ளையர்களுக்குக் கொலைவெறி. இதுவரை இப்படி நடந்ததே இல்லை என ஆத்திரம் புத்தியை மறைக்கும் அளவுக்கு எழுந்தது. 'இதுவரை நம்மைக் கண்டு அஞ்சியவர்களைப் பார்த்திருக்கிறோம். நம்மைக் கண்டு அலறிக் கடலுக்குள் குதிக்கும் மக்கள், நம் சாட்டையடிக்குப் பயந்து நம் கட்டளைகளை நிறைவேற்றும் அடிமைகளைத்தான் பார்த்திருக்கிறோம். இப்போது என்னவென்றால், நம்மைத் தாக்கும் ஒரு கும்பல் இந்தத் தீவில் இருக்கிறதா?' என்ற கேள்வி எழுந்தது.

யார் இந்த நாசவேலையைச் செய்தது எனத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். 'கப்பல்களையும், கிராமத்தையும் அழித்தது யார்? அவர்கள் இந்தத் தீவில்தான் இருக்கிறார்களா? காவல்காரர்களை வெட்டிச் சாய்த்தது யார்? நம் படையை எதிர்க்கத் துணிகிற மற்றொரு படை இருப்பதாகத் தெரியவில்லையே!' என்ற குழப்பமும் எழுந்தது.

கடற் கொள்ளையர்களால், வீடுகள் நீரில் அழிந்ததைத் தடுக்க முடியவில்லை. இதுவரை அடக்கி வைத்திருந்த அடிமைகள் எல்லாரும் காட்டுக்குள் ஓடியதையும் தடுக்க முடியவிலை. தங்களுடைய கப்பல்கள் கொழுந்து விட்டெரிந்ததைத் தடுக்க முடியவில்லை. அதனால் மூட்டப் பெற்ற ஆத்திரத் தீயையும் அணைக்க முடியவில்லை. போர் முழக்கங்களைச் செய்து கொண்டு கிளம்பினார்கள்.

விந்தையான போர். ஒரு பக்கம் மனிதர்கள் எனும் போர்வையில் திரிந்த ரத்த வெறி பிடித்த ஓநாய்கள். அவர்களுக்கு எதிரே பத்துப் பதினைந்து பேர் கொண்ட சைனியம் தர்மத்துக்காக அணிவகுத்து நின்றது. அதில் சிலர் வாளையும் ஈட்டியையும் முதல் முறையாக நேற்றுத்தான் தொட்டுப் பார்த்திருந்தனர். நேற்று நடந்ததுதான் அவர்கள் வாழ்க்கையில் உண்மையான ஆயுத பூஜை.

இதுவரை ஆயுத பூஜை என்றால் மெய்யப்பனும் சகாக்களும் எழுத்தாணியையும், கணக்கு ஏடுகளையும் வைத்துத்தான் வழிபட்டு வந்தனர். நேற்று வாளும், ஈட்டியும், கேடயமும் அடுக்கி வைத்து அருள்மொழி வர்மர் பூஜை போட்டதைப் பிரமித்துப் போய்ப் பார்த்தனர்.

ஒரு நல்ல சமமான இடமாய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டது, சோழர் படை. கரையில் வெகு தூரம் வெண்மணல் படர்ந்திருந்தது. "அங்குதான் நமது இறுதிப் போர்" என்றார், பொன்னியின் செல்வர். அவர் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அருள்மொழி வர்மர் வழக்கத்தைவிட மிடுக்கான நடையுடன் வந்து போர்க்களத்தில் நின்றார். அந்த அழகைப் பலமுறை பார்த்த வந்தியத் தேவனுக்கே உணர்ச்சிகள் பொங்கின. முதல் முறையாகப் பார்த்த வணிகர்கள் அடைந்த பரவசத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

தன் வாளை உயர்த்தினார், பொன்னியின் செல்வர். அதில் இன்னும் காய்ந்தும் காயாமலும் இரத்தக் கறை இருந்தது. அவர் உயர்த்திய வாளின் மீது எல்லாருடைய கண்களும் கவனமும் சென்றன.

அப்போது மற்றவர் முகங்களை நோக்கியபடி அருள்மொழி வர்மர் பேசினார் "மாவீரர்களே! உங்களை வணங்குகிறேன். இந்த எளியேனிடம் எல்லையற்ற நம்பிக்கை வைத்து இந்தப் போரில் உங்கள் வாழ்க்கையை அளிக்க முன்வந்த உங்கள் பெருந்தன்மையைப் போற்றி வணங்குகிறேன்."

அந்தப் பேச்சு அவருக்கு மிக்க மன வேதனையை அளித்தது என்று நன்றாய்த் தெரிந்தது. குரல் உணர்ச்சி வயப்பட்டதால் நடுங்கிற்று. அதைக் கேட்ட எல்லாருடைய கண்களிலும் நீர் பெருக்கெடுத்தது - "இவருக்காகக் கொடுக்க நம்மிடம் ஒரு உயிர்தானே இருக்கின்றது!" என்று.

இது ஒரு படையென்றால் அந்தப் படையைத் தாக்கிக் கபளீகரம் செய்ய முயன்றது கொள்ளையர் கூட்டம். அவர்களுக்கு எதிரே பெரும்படை ஒன்று வந்து கொண்டிருந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன. வரவர அந்தச் சத்தம் நெருங்கி வருவது கேட்டது. படை நிமிடத்துக்கு நிமிடம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சைனியத்தின் முன்னணிப் படைவீரர்கள் மட்டுமல்ல, அவர்களுடைய முகங்களில் கோபமும், வெறியும் கண்ணுக்குத் தென்படலாயின. வந்த வேகத்தில் ஒவ்வொரு வீரனுக்கும் வியர்த்துக் கொட்டியது.

இத்தனை பேருடன் தன்னந்தனியாகச் சண்டையிடுவது சாத்தியமில்லை என்று வந்தியத் தேவனுக்கு நன்கு தெரியும். 'கொள்ளையர்களின் ஆட்கள் கோழைகள்தான் என்றெல்லாம் பொன்னியின் செல்வர் முன்பு சொன்னாரே. இவ்வளவு ஆத்திரம் அவர்களுக்கு எப்படி வந்தது?' என்று நினைத்துக் கொண்டான்.

"கொல்லுங்கள்! வெட்டுங்கள்!" என்று பற்பல மொழிகளில் முழக்கங்கள் பேரிரைச்சலாய்க் கேட்டன. நிமிடத்துக்கு நிமிடம் அந்த சப்தமும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட சைனியம் போலல்லாமல், ஏதோ காட்டெருமைக் கூட்டம் போல அவர்கள் ஆத்திரத்தில் வந்தனர்.

படைகளின் கோப முழக்கத்தைக் கேட்ட பின் அவர்கள் எல்லாரும் வேகமாக நெருங்கி வருகிறார்கள் என்று தெரிந்தது. முன்னணிப் படைகள் கண்ணுக்குத் தெரிந்தன. ஐந்நூறு வீரர்கள் கொண்ட படை அவர்களை நெருங்கி வந்தது. கையில் பயங்கரமான ஆயுதங்களும், முகத்தில் கொடூரமும், மனதில் குரோதமும் கொண்டு நெருங்கி வந்தார்கள்.

கொள்ளையர் மிக அருகில் வந்துவிட்டார்கள். சோழர் படையைக் கண்டு ஸ்தம்பித்து நின்றது அந்தப் படை. வழக்கமாக, எதிரிகளின் அளவற்ற எண்ணிக்கையைக் கண்டு பிரமிப்புக் கொண்டு படைகள் அசந்து போய் அசைவுற்று நிற்பதுதான் நிகழும். ஆனால், அதற்கு நேர்மாறாக, ஒரு கையின் விரல் எண்ணிக்கையிலிருக்கும் இந்த அற்பப் படை நாம் பல ஆண்டுகளாகச் சேர்த்து வைத்தவற்றை எல்லாம் நிர்மூலமாக்கி விட்டதே என்ற ஆங்காரம் கொள்ளையரைச் சில நொடி திகைத்து நிற்கச் செய்தது. 'இது முன்னணிப் படைதானோ! மேலும் ஒரு பெரிய படை எங்காவது ஒளிந்திருக்கிறதா?' என்று கூட அவர்கள் யோசித்தார்கள்.

பகைவர்கள் நெருங்கியபோது காற்றுக் கூட அசையவில்லை. மரங்களில் கிளைகள் ஆடவில்லை. இலைகள் அசையவில்லை. எல்லாப் பக்கங்களிலும் நிசப்தம் நிலவியது. எதிரிகளின் முழக்கங்களைத் தவிர. ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோன்றியது.

வந்தியத் தேவன் மாபெரும் வீரன்தான். ஆனால், அவன் தலை நிமிர்ந்து எதிர்ப் பக்கம் வந்த எதிரிப் படையைப் பார்த்தவுடன் தன்னை அறியாமல் ஒரு நடுக்கமுற்றான். முடிவில்லாமல் வீரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இவர்களை யமலோகம் அனுப்பி வைக்க அவன் கைகள் நடுங்கின. முகமெல்லாம் குப்பென வியர்த்து உதடுகள் துடித்தன. தன் வேலின் கைப்பிடியை நன்றாகப் பிடித்துக் கொண்டான். முக்கியமாக அதுவரை தன் உயிரைத் தக்க வைத்துக் கொள்ள இயலும் என்றிருந்த எண்ணம் நீர்க்குமிழி போல வெடித்தது. பொன்னியின் செல்வர் போன்ற பெரும் வீரர் தான் இந்தப் படையை வழி நடத்திச் செல்கிறார். வேலும் வாளும் வீசி, வஜ்ராயுதம் போல் வலுப்பெற்றிருந்த அவரது கைகளில்

நிச்சயம் ஒரு இருபது பேராவது யமலோகம் செல்வது உறுதி. ஆனால், அதற்குப் பின்?''

துவண்ட மலரைப் போல் மாறியது வந்தியத் தேவனின் முகம். ஆனாலும் ஒன்று. அருகில் இருப்பது அருள்மொழி வர்மர். அவர் அருகே போர்க் களத்தில் மாண்டு விட்டாலும் பெருமைதானே. அதிலும் ஒன்று மட்டும் அவன் நினைவுக்கு வந்தது. தன் மனைவி குந்தவை தன் தம்பியைப் பற்றி அடிக்கடி கூறியது. ''என் தம்பி கையில் சங்குச் சக்கர ரேகை உள்ளது. அவன் உலகை ஆளப் பிறந்தவன்.'' வந்தியத் தேவன் திரும்பித் தன் மைத்துனரைப் பார்த்தான். அவர் கையில் சங்குச் சக்கர ரேகை இருக்கிறதோ இல்லையோ, ஒரு நல்ல போர் வாள் இருந்தது. அவர் அந்த வாளைப் பிடித்திருக்கும் விதம் அவன் நெஞ்சில் ஒரு புதிய தெம்பைக் கொடுத்தது.

கொள்ளையன் பெரும் சைன்யத்துடன் வருகிறான் என்னும் செய்தி அவருக்குப் பெருங்கலக்கத்தை உண்டு பண்ணியதாகத் தெரியவில்லை. ஆனாலும் மனதின் ஒரு ஓரத்தில் ஒரு சிறிய சலனம். அவர் எவ்வளவோ ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டம் தவறிப் போய் விட்டதோ? அவரைச் சுற்றியிருந்தவர்களெல்லாம் தீட்டிய திட்டம் தகர்ந்துவிட்டது என நினைத்திருந்தனர். ஆனால், அவர்களிடம் முக்கியமானதை அவர் இன்னும் சொல்லவில்லை.

கடற் கொள்ளையர்களின் கூட்டம் வேகமாக நெருங்கி வந்தது. எதிர்த்து நின்று பெரும் சேதத்தை உண்டாக்கிய சுண்டைக்காய்ச் சைனியத்தை மண்ணோடு மண்ணாக மடிய வைக்க வைராக்யம் பூண்டு வந்தார்கள். கூட்டத்தைப் பார்த்ததும் வந்தியத் தேவன் மனதில் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் நீங்கி விட்டது.

வந்தியத் தேவன் திரும்பி மைத்துனரைப் பார்த்தான். பொன்னியின் செல்வரும் வரும் எதிரிகளை உணர்ச்சியற்ற பார்வையுடன் நோக்கினார். மகுடமும், முத்து மாலைகளும், வாகுவலயங்களும் அணிந்து ஜாஜ்வல்யமாய் ஜொலிக்கப் போர்க் களத்தில் நிற்க வேண்டியவர், தலைவிரி கோலமாக நின்றிருந்தார். வாயு பகவான் அவர் முடியைப் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தான். ஒப்புவமையில்லாத வீராதி வீரர் அருள்மொழி வர்மர். ஆனாலும் இந்த யுத்தத்தின் முடிவு தெரிந்ததே.

அந்தச் சில வினாடி நேரத்துக்குள் வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் என்னவெல்லாமோ எண்ணங்கள் கொந்தளித்தன. இன்னும் ஒரு பத்து அடி பின்னால் எடுத்து வைத்தால் அவர்கள் கடலில் விழ வேண்டியதுதான். பின்னால் நகருவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் இல்லை. வந்தியத் தேவன் மனதுக்குள் புயல் வீசியது.

'அவ்வளவுதான், வல்லவராயா. உன் கதை முடிந்தது. நீ ஆடிய ஆட்டம் எவ்வளவு! ஏமாற்றியவர் எவ்வளவு பேர்! இன்று என்ன செய்யப் போகிறாய்? பின்புறம் வருண பகவான் தடுக்கிறான். முன்னால் கொடிய தடியர்கள். ஒவ்வொருவரும் காற்றுக்கு வீசும் விசிறியளவுக்கு வாள் வைத்திருக்கிறார்கள். அதில் பற்கள் வேறு. ஆண்டவன் அருளினால் ஒரு பெரிய அற்புதம் நடந்தாலன்றி நமக்கு வரப்போகும் விபத்துகளைத் தடுக்க முடியாது!' என்றது அவன் மனம்.

அன்பு மனைவி குந்தவையை நினைத்தான். 'கண்ணே! இனி உன்னைப் பார்க்க இயலாதா? மாண்டாலும் உன் மடியில் படுத்தே உயிர் விட நினைத்தேனே. எங்கோ ஒரு காட்டுத் தீவில் காட்டுமிராண்டிக் கூட்டத்தின் கையால் இப்போது மடியப் போகிறேனா?'

தன் மனக் கண்ணில் குந்தவையைப் பார்த்தான். அவளுடைய செந்தாமரை வதனத்தையும், வியப்பினால் விரிந்த கரிய பெரிய கண்களையும் பார்த்துத் திகைத்து நின்றான்.

வந்தியத் தேவனுக்கு மட்டுமல்ல. பொன்னியின் செல்வருக்கும் தன் மனைவி மற்றும் குழந்தைகளின் எண்ணம் வந்தது. அத்துடன் அந்த மர்மப் பெண் கூட நினைவில் வந்தாள். 'அந்தக் கனவுக் கன்னியைக் காணாமலே மடியப் போகிறோமா?' என்ற கேள்வியும் எழுந்தது.

''நீ யார்? என்னை இப்போதும் வந்து கொல்கிறாயே. ஆனால், ஒன்று. இன்று மட்டும் நான் ஜெயித்து வீடு திரும்பினால், உன்னை நிச்சயம் கண்டுபிடிப்பேன்!'' என்று மனதுக்குள் சங்கற்பம் செய்து கொண்டார்.

உடனே அவளுடைய நினைவுகளை மனதிலிருந்து அகற்றினார். போராடப் போகின்றவனுக்கு வலிமை இழக்க வைக்கும் சக்தி அல்லவா அது! அவர் முக பாவத்தில் அப்போது ஏற்பட்ட ஒரு கண நேர மாறுதலை வந்தியத் தேவன் கவனித்தான். திடீரென சாந்தமான முகம் மீண்டும் கடுமையானது.

இரண்டு படைகளுக்கும் இடையேயிருந்த தூரம் குறுகிக் கொண்டிருந்தது. வேறு யோசனை செய்வதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. இருவரும் எல்லா எண்ணங்களையும் உதறித் தள்ளி விட்டுப் போருக்கு ஆயத்தமானார்கள்.

ஐந்நூறு பேருக்கு எதிரே பதினைந்து பேர் என்பதையே மறந்து போனார்கள். இந்தத் தனிமைத் தீவின் கடற்கரைப் போர்க் களத்தை மறந்தார்கள். இன்னும் ஒரு தக்கோலத்துக்குப் போனார்கள்.

கடற் கொள்ளையர்கள் சோழ சைனியத்தைக் காலடியில் நசுக்க வந்து விட்டனர். எதற்கும் கவலைப்படாத அருள்மொழி வர்மர் தன் வாளை உயர்த்தினார். ''சோழம்! சோழம்!'' என்று முழக்கமிட்டார்.

'ஆவி பிரியும் நேரத்தில் நான் இந்த வார்த்தைகளைத்தான் நினைத்துக் கொண்டு சாக வேண்டும் என்று கத்துகிறாரா?' என்று நினைத்துக் கொண்டான் வந்தியத் தேவன்.

ஆனால், தர்ம தேவதை உறங்கும் போது நடக்கும் போரிது. ஒப்புவமையில்லாத வீராதி வீரர் அருள்மொழி வர்மர். இந்த யுத்தத்தின் முடிவு முன்பே தெரிந்தும் எவ்வளவு உணர்ச்சியுடன் போராடுகிறார்!

இந்த வாழ்க்கையின் நியாயமற்ற தன்மை வந்தியத் தேவனை கசந்து போகச் செய்தது. கோபத்தினால் அவனுடைய இரத்தம் கொதித்தது. இந்தப் போர்க் களத்தின் ஏற்றத் தாழ்வுகள் நியாயமானதாக இல்லையே!

வந்தியத் தேவனுடைய பரபரப்பு உச்ச நிலை அடைந்து விட்டது. அவன் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் இப்போது கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. வந்தியத் தேவனின் கைகளில் வேலொன்று புறப்படச் சித்தமாயிருந்தது. அது பறந்து சென்றவுடன் அடுத்து எறிவதற்கு ஏழெட்டு வேல்கள் தயாராய் இருந்தன.

சூரியனின் வெளிச்சத்தில் அவன் கையிலிருந்த வேலின் முனை மின்னியது. கையிலே வேலை எடுத்தான். அதை முதல் வரிசையில் இருந்த குண்டோதரனின் மீது பிரயோகிப்பதற்காக ஓங்கினான். அவன் குறி தப்பாது. அந்த வேல் வழியில் இருப்பவர்கள் உடனே யமனுலகம் சேர்வார்கள்.

பொன்னியின் செல்வர் மீண்டும் ஒரு முறை, ''சோழம்! சோழம்!'' என்று கத்தினார். அருள்மொழி வர்மரின் அந்த வார்த்தைகளுக்கு எதிரொலி கேட்டது.

ஒரு நொடியில் கொள்ளையர் படை ஓர் அடிகூட எடுக்காமல் நின்றது. அந்தப் போர்க் களத்தில் அப்போது கடலின் ஆழத்தில் குடி கொண்டிருப்பது போன்ற நிசப்தம் குடி கொண்டிருந்தது. முன் வரிசையில் இருந்தவர்கள் வந்தியத் தேவன் வேலை எறிந்தால்

அது பலிவாங்கும் தூரத்தில்தான் இருந்தார்கள். அதனால் அவர்கள் முகத்தில் உருவெடுத்த உணர்ச்சிப் புயலை இவர்களால் பார்க்க முடிந்தது. அதில் குடி கொண்டிருந்த குழப்பமும் பயமும் நன்றாய்த் தெரிந்தது.

ஒரு முழக்கத்துக்கு இவ்வளவு வலிமையா? அந்தப் பெரும் படையில் திடீரென அசைவு ஏற்பட்டது. படை சோழர்களின் மீது பாய ஆயத்தமாகிறது என்று நினைத்தபோது ஒரு பெரும் இரைச்சலுடன் கொள்ளையர் கூட்டம் தலைதெறிக்கப் புறமுதுகு காட்டி ஓடத் தொடங்கியது.

ஆகா! என்ன நடக்கின்றது? வந்தியத் தேவன் ஓங்கிய வேல் அப்படியே நின்றது. முதலில் வந்தியத் தேவனுக்கு எண்ணம், தன் வேலைக் கண்டுதான் அந்தக் கூட்டம் நிற்கிறது என்று. ''இல்லை, அது சாத்தியமில்லையே. ஐந்நூறு பேர் எதற்கு ஒரு வேலைக் கண்டு பயப்படவேண்டும்?''

மீண்டும் ஒரு முறை ''சோழம், சோழம்!'' என்றார் பொன்னியின் செல்வர். அதற்குப் பலத்த எதிரொலியும் கேட்டது. ஆனால், என்ன அதிசயம்! தீவின் உள்பக்கம் கேட்காமல், கடல் பக்கம் கேட்டது.

ஸ்தம்பித்து நின்ற கொள்ளையர் படை பின்னர் ஏன் தலை தெறிக்க ஓடியது? ஏன் என்று தெரியாமல் விழித்தது சோழர் படை. அந்தக் கொள்ளையர்களின் கண்கள் பார்த்த திசையை வந்தியத் தேவனின் பார்வையும் வெறித்தது.

மருமலையின் பிரதேசத்தைத் திரும்பிப் பார்த்தான், வந்தியத் தேவன். குதூகலத்தின் சிகரத்தைத் தொட்டான். அதைக் காட்டிலும் இனிமையான வார்த்தைகளை அவன் வாழ்நாளில் அவன் கேட்டதில்லை.

அவன் கண்ட காட்சியை விட இனிமையான காட்சிகளை அவன் இனிமேலும் பார்க்க இயலாது.



அத்தியாயம் முப்பத்தைந்து

யமதர்மன் தோன்றினான்

சுழிக்காற்றுப் போல இரவில் திடீரெனக் கொள்ளையர் வந்து சோழர் கடற் படையில் ஓரிரு கப்பல்களை அலங்கோலப்படுத்தி விட்டுப் போயினர். பிறகு, முக்கியமாகப் பொன்னியின் செல்வருடைய கப்பல் அடிபட்டுப் பிளவுபட்டது என்றும், அதில் இருந்த அனைவரும் கடலில் மிதந்ததையும் கடற்படைத் தலைவர்கள் கண்டு கொண்டனர். அவசரமாகக் கண்களுக்குத் தெரிந்தவர்களைக் காப்பாற்ற முயன்றனர். சொட்டுச் சொட்டாய் நனைந்த பலரும் கடலிலிருந்து தூக்கப்பட்ட பின் ஒவ்வொருவர் முகத்திலும் விளக்கைக் காட்டி அவர்களை அடையாளம் கண்டு கொண்டனர்.

ஆனால், காப்பாற்றப்பட்டவரில் பொன்னியின் செல்வரும் இல்லை. வந்தியத் தேவரும் இல்லை.

பல நாட்கள் எல்லா வேலைகளையும் விட்டு விட்டுக் கடலை வலை வீசித் தேடினார்கள். "சோழ சாம்ராஜ்யத்தின் இரு பெரும் பொக்கிஷங்களைத் தொலைத்துவிட்டு எப்படி ஊர் திரும்புவது?" என்று பல நாட்களாகச் சுற்று வட்டாரத்திலிருந்த அனைத்துச் சோழர் கப்பல்களும் இதில் ஈடுபட்டன. இதில் பல வியாபாரக் கப்பல்களும் உண்டு. சடலங்களும் கிடைக்காததால் இன்னும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தளர விடாமல் தேடினார்கள்.

இருவரும் கடலில் தொலைந்து போய் ஒரு மாதம் இருக்கும். ஒரு நாள் சூரிய உதயத்தின் போது, பாய்மரக் கம்பத்தின் மீது நின்று கடலை நோட்டம் விட்டவன் ஒரு சப்தத்தை எழுப்பினான். அவன் கழுகுப் பார்வைக்கு ஏதோ தென்பட்டது. சோழ நாட்டு மாலுமிகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கப்பல் ஓட்டிப் பழக்கமுள்ள பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இந்த வகைப் போர்க் கலையில் தேறியவர்கள்.

கையில் வைத்திருந்த கொம்பை வாயில் வைத்து யானை பிளிறுவது போல ஓசை எழுப்பினான். என்னவென்று கேட்டு கொண்டு கூட்டம் அந்தக் கம்பத்தைச் சுற்றி உடனே சேர்ந்து விட்டது. பதிலுக்கு அவன், "ஒரு பெரும் புகை மண்டலம் கிழக்கே தெரிகிறது" என்று கூறினான்.

எல்லாரும் அவன் கைகாட்டிய திசையில் திரும்பினார்கள். நேரத்துக்கு முன் இருந்த மங்கலான காலை வெளிச்சத்தில் புகை மண்டலம் ஒன்று வானத்தையும் பூமியையும் அளாவி நின்றது கண்ணுக்குப் புலனானது.

கப்பல் இன்னும் அருகே சென்றது. சற்றுத் தூரத்தில் ஒரு தீவில் புகைப் படலம் எழுந்தது. காற்றில் அது உருமாறி, வெகுநேரம் ஏதோ சாம்பல் நிற ஸ்தம்பம் போல நின்றது. தீவு எதிலாவது காட்டுத் தீயாய் இருக்கும் அல்லது இந்தப் பிரதேசங்களில் இருந்த ஏதாவதொரு எரிமலையாய் இருக்குமென நினைத்தனர், முதலில்.

எதற்கும் ஆராய்ந்து பார்க்கலாம் என்று அந்தத் திசையில் கப்பல்களைத் திருப்பினார்கள். அருகில் சென்றவுடன், 'என்ன ஆச்சரியம்! ஒரு துறைமுகம் போலத் தெரிகின்றதே. நிச்சயமாக அது கள்வர் பதுங்கும் தீவாய்த்தான் இருக்க வேண்டும்' என்று முடிவு செய்தனர்.

அனைவருக்கும் நம்பிக்கை பிறந்தது. உடனே கொடி மரத்தின் மேலே இருந்தவன் கொம்பை வைத்துத் தொடர்ந்து ஊதத் தொடங்கினான். அந்த ஆள் ஊதிய கொம்பின் முழக்கத்துக்குப் பதில் முழக்கம் ஒவ்வொரு கப்பலிலிருந்தும் எதிரொலிக்கப்பட்டது.

தலைமைக் கப்பலின் மேல் மாடத்தில் எச்சரிக்கை முரசு "தின் தின்" என்று ஒலிக்கத் தொடங்கியது. உடனே ஒவ்வொரு கப்பலும் அதைப் பின்பற்றியது. புகை மண்டலத்தைப் பார்த்தபின் கப்பல்களின் திசைப் போக்கு மாறியது.

சுற்று வட்டாரத்திலிருந்த அனைத்துக் கப்பல்களும் ஒரு மணி நேரத்துக்குள் ஏதோ முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவம் நடக்க இருக்கின்றது என்று புரிந்து கொண்டு திசை திரும்பின. சற்று நேரத்தில் அந்தத் திசையில் இருந்த அனைத்துக் கப்பல்களும் பேரொலியுடன் ஒரே திசையில் பயணித்தன. தீவை நோக்கி அவை அவசரமாகச் செல்லத் தொடங்கின.

அண்மையில் வந்தவுடன் அந்தத் துறைமுகத்திலிருந்த கப்பல்களெல்லாம் புகைந்து கருகிப் போயிருப்பதைக் கண்டனர். நிச்சயமாகத் தீவில் இறங்கிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது. அப்போது மேலிருந்த அந்த ஆள் கொம்பு ஊதுவதை நிறுத்திவிட்டு, மூச்சிரைக்கக் கத்தினான். "ஏதோ போர் மாதிரித் தெரிகிறது. இந்தப் பக்கம் பத்துப் பேர் இருக்கிறார்கள். எதிர்த்துப் பெரும் சைனியம் வருகின்றது" என்றான். "புகை மண்டலம் போலத் தூசு கிளம்பிக் கொண்டிருக்கின்றது."

உடனே ஆணைகள் பறந்தன. படகுகளும் கட்டுமரங்களும் கடலில் இறக்கப்பட்டன. நகரும் கப்பல்களின் பக்கத்திலிருந்து படகுகள் கடலில் தள்ளப்பட்டன. அதில் குதித்து ஏறிக் கொண்டனர் வீரர்கள். படகுகளில் ஆயுதம் ஏந்திய வீரர்கள் போருக்கு ஆயத்தமாய் இருந்தனர். படகுகள் எல்லாம் நிலத்தை நோக்கி நகர்ந்தன. கப்பல்களும் அந்தத் தீவை நோக்கிப் பயணித்தன.

முதலில் சென்ற படகில் பல நாள் ஈழத்தில் பணி புரிந்தவன் ஒருவன் நின்றான். அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டிருந்த அந்தச் சிறிய கூட்டத்தில் தலைவன் போல முன் நின்றவரை எங்கோ பார்த்தது போலிருந்தது.

பின் உடனே பொன்னியின் செல்வர்தான் அவர் என அவன் மதி கூற, அவனது உதடுகள் கூவின. இன்னொருவனும் அவ்வாறே திரும்பக் கூவினான். ''பொன்னியின் செல்வர் வாழ்க! வாழ்க!'' என்று பற்பல குரல்கள் சேர்ந்து முழங்கின. ''சோழம் சோழம் !'' என்றும் கூவினார்கள்.

கரைமீது இப்போது வானம் வெளுத்துப் போயிருந்தது. தாங்கள் நேற்று இரவு இழந்ததை முழுவதுமாக அறிந்து விட்டனர், கொள்ளையர். இனிச் சீக்கிரத்தில் பதிலடி கொடுக்க வருவார்கள். ஒரு படகைத் தயாராக வைத்துக்கொண்டு இந்த வேலைகளெல்லாம் செய்திருக்கவேண்டும் என்று வல்லவராயனுக்கு தோன்றியது. அவன் நினைத்த பொழுதிலேயே தூரத்தில் பகைவர் கூட்டம் புழுதிப்படலத்தை எழுப்பிக்கொண்டு வந்தது. கோபக் குரலகள் ஒன்று கூடி உருவான அந்தச் சத்தம் அவர்கள் அதி விரைவில் நெருங்கி வந்துவிட்டன அறிவுறுத்தியது.

வந்தவர்களில் தலைவனாகத் தோன்றியவன் மிகவும் பருமனான மனிதன்தான் என்பதை வந்தியத் தேவன் கண்டு கொண்டான். அவன் நகர்ந்து வரவே சங்கடப்பட்டான். எனினும் இழப்புகளை உருவாக்கிய அந்தப் பொடியர்களைத் தன் கையினாலே கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் என்ற முடிவுடன் வந்தான். ''இந்தப் பொடிப் பயல்கள் பத்துப் பேர் தன் சாம்ராஜ்யத்தையே அழித்து விட்டனரே!'' என்று தன் தாய் மொழியில் சபித்துக் கொண்டுதான் வந்தான்.

நடுவில் பொன்னியின் செல்வர் பெரும் வாளுடன் நிற்க, வணிகர் இருவரும் வேல் பிடித்த கையுடன் அருகில் சென்று இருபுறமும் காவலாக நின்றார்கள். ஒரு சமயத்தில் எதிரிகளின் போர்ப்படையின் முன்னணியில் நிற்பவரின் முகங்களும் தெரியத்

தொடங்கின. அப்போதுதான் பொன்னியின் செல்வர் ''சோழம் ! சோழம்!'' என்று கோஷமிட்டார். அவர் எழுப்பிய கோஷம் அந்த விசித்திரமான போர்க்களத்தைக் கடந்து, வான முகடு வரையில் சென்று எதிரொலி செய்தது.

ஆனால், அதன் எதிரொலி விசித்திரமாகப் பின் பக்கத்திலிருந்து எப்படிக் கேட்டது? நிலத்தை நெருங்கிய படகில் இருந்தவர்களின் காதிலும் 'சோழம், சோழம்' என்ற அந்தப் போர் முழக்க ஒலி கேட்டது. அவர்கள் உரத்த குரலில் அதை மறுபடியும் சொல்ல, பின் இருந்த பாய்மரங்களில் இருந்தவரும் முழங்கத் தொடங்கினர். பலவாயிரம் பேரும் சேர்ந்து தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை குரல்கள் எழுப்பினார்கள். தாம் போய்ச் சேருவதற்கு முன் போர் தொடங்கிவிடுமோ என்ற அச்சத்தில் அனைவரும் சேர்ந்து கோஷித்தனர். வானைப் பிளந்து விடும் அந்தச் சப்தம் நிலவுக்கே கேட்டிருக்கும். நிலத்திலும் கேட்டது.

ஒரு மனிதன் தொண்டையிலிருந்து ஆயிரம் பேர் கோஷமா? குரல் வந்த திசையைக் கொள்ளையர் கூட்டம் திடுக்கிட்டு நோக்கிற்று. அவர்கள் இருந்த மணற் பரப்புக்குச் சற்றுத் தூரத்தில், கடல் மார்க்கமாக அவர்களுக்கெனப் பிரத்யேகமாக அவதாரம் எடுத்த யமதர்மராஜன் தோன்றினான்.

ஆனால், எதிரில் வந்த அந்தப் பயங்கர முகத் தோற்றங்களைக் கவனித்துக் கொண்டே பொன்னியின் செல்வருடைய படையினர் சோழ நாட்டுப் போர்க் கப்பல்கள் வருவதைக் கவனியாமல் இருந்து விட்டார்கள்.

வந்தியத் தேவனுக்குப் புரியவில்லை. முதலில் 'சோழம்' என்ற கோஷத்தைக் கேட்டுத்தான் கூட்டம் நின்றது என்று நினைத்தான். ஆனால், சற்று உற்று நோக்கினால் அந்தக் கூட்டத்தின் முன் வரிசையிலிருந்தவர்கள் எதிரே ஒரு பயங்கரமான பொருளைப் பார்ப்பவர் போலக் காணப்பட்டார்கள். அவர்களை அவ்விதம் பயங்கரப்படுத்தியது என்னவென்று திரும்பிப் பார்த்தவனுக்கு மறுகணமே தெரிந்து விட்டது.

நூறு கப்பல்கள் கடலை அடைத்துக் கொண்டு அந்தத் தீவை நெருங்கி வந்து கொண்டிருந்தன. அதைக் கண்டுதான் கொள்ளையர்கள் ஓடியிருக்க வேண்டும். தன் தலைவனுடைய வீர முழக்கத்துக்காக அல்ல. தான் உயர்த்திய வேலுக்காகவும் அல்ல. ஆனால், ஆனால், அந்தக் கப்பல்கள் எப்படிச் சரியான நேரத்துக்கு வந்தன?

'இதென்ன விந்தை! -கனவு காண்கிறோமா? சித்தப் பிரமையா? -அல்லது உண்மைதானா? -நடக்காத காரியம் நடக்கிறதே! -

கைகூடாத ஆசை கைகூடுகிறதே! அதோ வருண வெள்ளத்தில் நீந்திக் கொண்டு வரும் படகுகள் சோழர் படைதானே?... கண்களே! சரியாகப் பாருங்கள்! நெஞ்சே! கொஞ்சம் நிதானித்துக் கொள்! ஆம், ஆம். அவர்கள்தான். சந்தேகமில்லை!'

வந்தியத் தேவன் திரும்பிப் பார்த்த நேரத்தில் கடல் உயிர் பெற்றிருந்தது. 'நாம் நூறு முறை தினமும் வந்து ஏக்கமாய்ப் பார்த்தபோதெல்லாம் வெறுமையாய் இருந்த கடல், இன்று உயிர் பெற்றிருக்கிறது.' உடல் நடுக்கத்தை அடக்கப் பார்த்து முடியாமல் சிலிர்த்தான். நூற்றுக் கணக்கான கப்பல்களின் பாய்மரத்து உச்சிகளிலே வரிசை வரிசையாகப் புலிக் கொடிகள் காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருந்தன. சமுத்திரத்தின் மீது ஒரே சேனா சமுத்திரமாய் இருக்கிறது.

'ஆகா! மைத்துனர் கையில் இருக்கும் சங்கும் சக்கரமும் வேலை செய்கின்றன!' என்று முடிவு கட்டினான். ஆனால், பொன்னியின் செல்வர் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. சிரத்தின் பின்புறமும் பார்க்கும் சக்தி பெற்றவர் போலச் சிரித்துக் கொண்டிருந்தார். அவருக்குத் தெரிந்தது தன் பின் சோழரின் கடற்படை பலம் நெருங்கிக் கொண்டிருந்தது என. திரும்பிப் பார்க்காமலே பொன்னியின் செல்வர் முகத்தில் புன்னகையின் சாயல் தோன்றியது. வாளுடன் கையை ஓங்கியிருந்தவர் மெல்ல அதை இறக்கினார். போர் முடிந்தது. தோல்வியின் வாயிலிருந்து மீட்கப்பட்ட மாபெரும் வெற்றி.

கப்பல் பணியாளர்கள் அனைவரும் படகு கரைக்கு வரக் காத்திருக்கவில்லை. பாய்ந்து கடலில் நீந்தி வந்தனர். வாட்களை மட்டும் தலைக்கு மேல் தூக்கியிருந்தனர்.

கொள்ளையர்கள் கரையில் நின்று செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். பின் பரபரப்பு அடைந்தார்கள். காட்டில் சென்று ஒளிந்து கொள்ளலாம் என்று தலை தெறிக்க ஓடினர். "ஐயோ!" என்று அலறிவிட்டு விரைந்தோடிக் கடலில் சிலர் குதித்தனர். குதித்தவுடனே தண்ணீரில் மூழ்கினார்கள். சில வினாடி நேரத்துக்கெல்லாம் அவர்கள் குதித்த இடத்துக்குச் சற்றுத் தூரம் அவர்களுடைய தலை மட்டும் மேலே எழுந்தது. பின் அலைகள் கொண்டு வந்து அவர்களைக் கரையில் சேர்த்தன.

சோழ வீரர்கள் அனைவரும் விரைவாக ஓடோடி முன்னால் வந்தார்கள். தனித்து நின்ற தலைமை வீரனை அவர்கள் அணுகி வணக்கத்துடன் நின்றார்கள். பின் மண்டியிட்டனர். ஒவ்வொரு கப்பலின் தலைவனும் பொன்னியின் செல்வர் முன் மண்டியிட்டு

வணக்கம் செலுத்தினான். கப்பற்படைத் தலைவர், "ஐயனே, உம்மைத் தேடித் தேடிக் கண்கள் பூத்துப்போய் விட்டன. நிச்சயம் உமக்கு நீரில் கண்டமில்லை என எமக்குத் தெரியும். பொன்னி ஆற்றின் செல்வரல்லவா நீர்!" என்றார்.

பொன்னியின் செல்வர் திரும்பி ஒரு புன்னகையுடன் வல்லவரையரைப் பார்த்தார். "ச்சீ!" என்றான் வந்தியத் தேவன். "நம் வீரத்தைக் வெளிக்காட்டும் முன்னே வந்து வேலையைக் கெடுத்து விட்டார்கள் இவர்கள் !" என்றான் அவன்.

சங்கங்களும், எக்காளங்களும் காது செவிடு படும்படி முழங்கின. முரசங்களும், பேரிகைகளும் எட்டுத் திசையும் அதிரும்படி ஆர்த்தன. படை வீரர்கள் எழுப்பிய கோஷங்கள் தீவு முழுவதும் எதிரொலித்தன. "கடற் கொள்ளை அழிந்தது! சோழர் வாழ்க! கொள்ளையருக்கு நாசம்!" எனும் கோஷங்களையும், "உத்தம சோழர் வாழ்க!, பொன்னியின் செல்வருடைய வீரத் தோள் வெல்க!" எனும் முழக்கங்களையும் மாற்றி மாற்றி அந்த வீரர்கள் எழுப்பிக் கொண்டு கம்பீரமாக இங்கும் அங்குமாய் நடந்தார்கள்.

சோழர் படை தீவு முழுவதும் தன் வேட்டையைத் தொடங்கியது. சோழரைப் பார்த்தபின், உடனே மரத்தின் மேல் ஏறியவர் பலர். கடலுக்குள் குதித்தவர் பலர். பொந்துகளில் ஒளிந்தவரும் பலர். இந்தக் குரல் ஒலிகளுக்கு இடையிடையே ஏதாவது மரத்தின் மீதோ, இல்லை, பொந்தின் உள்ளேயோ ஒளிந்திருந்த கொள்ளையனைக் கண்டுபிடித்தால் ஒரே கரகோஷமும் ஆட்டமும் போட்டனர் சோழ வீரர்கள்.

வெள்ளத்தில் சிக்கிய பொந்தில் எலிகள் போல அனைவரும் மாட்டிக்கொண்டார்கள். பிடிபட்டவர்கள் கோழைகள் என்பது அவர்கள் அகப்பட்ட போது அவர்கள் வாயிலிருந்து வந்த விநோதமான சப்தங்களிலிருந்து தெரிய வந்தது. பிடிபட்ட ஒவ்வொரு கொள்ளையனும் தமிழ் மரபுப்படி அருகே இருந்த மரத்தில் தூக்கில் இடப்பட்டான். கொலைகாரர்கள் பலர் கதறிக் கொண்டே தூக்குமேடைக்குச் சென்றார்கள். ஆனால், விநோதமாகச் சிலர் நகைத்தபடியும் சென்றார்கள்.

அவர்களுள் ஒரு கையும் ஒரு காலும் இல்லாதவர்கள் பொன்னியின் செல்வருடைய ஆணையின் பேரில் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஒரு மரக்கலம் கொடுக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டபோது பலரும் ஆட்சேபணைக் குரல்களை எழுப்பினர்.

''ஏன் நாம் பரிதாபம் காட்ட வேண்டும்?'' என்று படைத் தளபதிகள் கேட்டார்கள். ''இனியும் இவர்கள் கடலுக்குள் சென்று நம் கப்பல்களைத் தாக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? உமது கருணைக்கு ஒரு அளவே இல்லையா?'' என்று வந்தியத் தேவன் கூடக் கேட்டான்.

''நாம் அழித்தது ஒரு கொள்ளைக் கூட்டத்தைத்தான். இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் தேடி அழிக்க வேண்டும். இல்லை, சோழனின் வஞ்சம் எவ்வளவு வலிக்கும் என அவர்கள் உணர வேண்டும். இப்போது பிழைத்துப் போகும் கொள்ளையர்கள் சென்று அதைச் சொல்வார்கள். யாரெல்லாம் அழிவே இல்லை என நினைத்துக் கடலில் ஓநாய்கள் போலத் திரிந்தார்களோ, அவர்களெல்லாம் புளிய மரத்தில் கால்களை உதறியபடி, முகத்தில் நாக்குத் தள்ளியபடி பிராணனை விட்டார்கள் என்று. இவர்களும் தங்கள் நண்பர்கள் புளிய மரத்தில் தொங்கியதைப் பார்த்துவிட்டு, இனி அதே தவறைச் செய்ய மாட்டார்கள்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

''சோழனின் பழி எப்படிப்பட்டது, அவன் கோபம் எவ்வளவு பெரியது என்பதை அவர்கள் சென்று எல்லாத் திசைகளிலும் சொல்ல வேண்டும். இனிக் கடலில் கொள்ளையடிக்க நினைக்கும் ஒவ்வொரு தீயவனும் இதைக் கேட்டு நடுங்க வேண்டும். புலிக் கொடியைப் பார்த்தாலே புலியைப் பார்த்தது போல அலறி ஓட வேண்டும். அனைவரையும் கொன்று விட்டால் அது எப்படி வெளியே தெரியும்?'' என்று முடித்தார்.

'அடேடே! இத்தனை நேரம் அந்த விஷயம் நம் மூளைக்கு எட்டவில்லையே!' என்று நினைத்தபடி படைத் தளபதிகளும் ஒப்புக் கொண்டனர்.

மாலை நேரம் வந்தது. கடற்கரையோரம் ஒரே கூத்தும் கும்மாளமுமாய் இருந்தது. தீவின் மறுபக்கம் கொள்ளையரின் உடல்களை ஆந்தைகளும் கோட்டான்களும் விருந்துண்ணத் தொடங்கி விட்டன.

சோழர் படையைச் சேர்ந்த வீரர்கள் அதிசயித்தார்கள். பத்துப் பேராய் இவ்வளவு பெரிய கொள்ளையர் கூட்டத்தைத் தோற்கடித்தது, பார்த்தவரின் வாய் வழியாகப் பரவி, நாட்டுச் சரித்திரத்திலும் கூத்து மேடைகளிலும் இந்த அதிசயம் அரங்கேறும்.

ஆழ்ந்து யோசித்தபடி மரத்தினடியில் உட்கார்ந்திருந்தான், வந்தியத் தேவன். ''வல்லவராயரே! நாம் வந்த காரியம் ஆகி

விட்டது. புறப்படலாமா?'' என்றார் அருள்மொழி வர்மர், அவன் அருகில் அமர்ந்தபடி.

''என் மனதின் ஐயங்கள் இன்னும் பூர்த்தியாகவில்லை!'' என்றான் அவன். ''பிரபு! வீர சொர்க்கம் நிச்சயம் என்று முடிவு கட்டித்தான் இங்கு வந்து விட்டேன். திரும்பிப் பார்த்தால் நமது கப்பற்படை வந்து கொண்டிருக்கிறது. இது எப்படி? எனக்கு விளங்கவில்லையே. தற்செயலாக நடந்ததா? இல்லை, படை வரும் என்று யூகித்தீரா? எல்லாரும் சொல்லி வைத்தாற் போல் எப்படி வந்தார்கள்?''

''வல்லவராயரே! அவர்கள் வருவார்கள் என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. ஆனால், சரியான நேரத்துக்கு வர வேண்டுமே என்ற ஐயத்தில்தான் உமக்கெல்லாம் முன் கூட்டிச் சொல்லவில்லை. அவர்கள் வந்து சேருவதற்குள்ளே, போர் தொடங்கக் கூடாது என வேண்டிக்கொண்டேன்.''

''நம்மைக் காணவில்லை என்று எல்லாக் கப்பல்களும் தேடிக் கொண்டிருக்கும். உம்மைக் காணவில்லை என்று ஊருக்குச் சென்று சொன்னால் அவர்கள் நிலைமை என்னவாயிருக்கும்? இளைய பிராட்டி குந்தவை செய்தி சொன்னவரை உயிருடன் எரித்து விட்டிருப்பார்!'' என்று சொல்லி நகைத்தார்.

''கப்பல்கள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்கும் என்று யூகித்தேன். அவர்கள் தேடியது ஒரு தடயத்துக்குத்தான். அதைக் கொடுக்கவே பெரும் பிரயத்தனம் செய்து, அதை இந்தத் தீயினால் செயல் படுத்தினேன் அக்கினி பகவான் கடவுள்களுக்கெல்லாம் தூதுவன் தெரியுமா? அவரை எனக்காகத் தூது செல்லும்படி அனுப்பினேன். அவ்வளவுதான்'' என்றார், பொன்னியின் செல்வர். ''வாருங்கள், கதையெல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்லி எழுந்தார்.

''இதை மட்டும் சொல்லி விட்டுப் போங்கள். அச்சமயம் கப்பல்கள் வந்து குறுக்கிட்டிரா விட்டால், என்ன நடந்திருக்கும்? உங்கள் நோக்கத்தை எப்படி முடிக்க எண்ணியிருந்தீர்கள்?'' என்றான் வல்லவராயன்.

''உண்மையைச் சொல்லட்டுமா? ஒன்றும் நினைத்து வைக்கவில்லை. நீர் அடிக்கடி என்னைக் கேலி செய்வீரே. சங்குச் சக்கரத்தைப் பற்றி. அது பார்த்துக் கொள்ளும் என விட்டு விட்டேன்'' என்றார், தன் கண்ணைச் சிமிட்டியபடி.

'அருள்மொழி வர்மர் போர் முழக்கத்தை முழங்குவதற்கும் கப்பற்படை வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. இவர்களுக்கு

நேருவதற்கு இருந்த அபாயத்தைத் தடுத்தது எது? வீரமா, விவேகமா, இல்லை விதியா? ஆனால், ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. சங்கும் சக்கரமும் நிச்சயமாக வேலை செய்கிறது!'' என்று வந்தியத் தேவன் நினைத்துக் கொண்டான்.

அன்று மாலை கொள்ளையர் அனைவரும் கைதாகியிருந்தனர்; அல்லது கொல்லப்பட்டிருந்தனர். அந்தக் கிராமத்திலிருந்து தப்பிய அடிமைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தனர். சோழர் கப்பலிலிருந்து வந்த கணக்கர்கள் அந்தத் தீவில் இருந்த செல்வத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தனர். வெள்ளத்தில் அழிந்த கிராமத்தில் மணிகளும் தங்கமும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அவை சேகரிக்கப்பட்டன.

வணிகர்கள் விடைபெற வந்தபோது பொன்னியின் செல்வர் அவர்களைப் பார்த்து, ''உங்கள் உதவியிராவிட்டால் நான் உயிருடன் சென்று தஞ்சையைப் பார்த்திருக்க முடியாது'' என்றார்.

நீர் ததும்பிய கண்களினால் மெய்யப்பன் அவரைப் பார்த்துச் சொன்னான், ''சுவாமி! எங்களைக் கொடும் விதியிலிருந்து மீட்டு எங்களுடைய உயிரையும் காப்பாற்றிய தங்களுக்கு என் ஆயுள் உள்ள வரையில் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.''

மேலும், ''நீர்தான் பொன்னியின் செல்வர் என்று நாங்கள் முதலில் நம்பாததற்கு எமக்குத் தகுந்த தண்டனை கொடுத்து விட்டார் இறைவன்'' என்றான் வணிகன்.

''என்ன?'' என்றார் பொன்னியின் செல்வர், சற்றுக் கவலையுடன்.

''ஐயனே, நாங்கள் நாட்டுக்குத் திரும்பச் சென்று ஒரு போரில் கலந்து வெற்றி பெற்றோம் என்றால் கூட நாங்கள் உளறுகிறோம் என்று விட்டு விடுவார்கள் எங்கள் குலத்தினர். ஆனால், பொன்னியின் செல்வர் படையில் தளபதிகளாய்ப் பணிபுரிந்து வெற்றியும் பெற்றோம் என்றால், தலையில் எலுமிச்சையைத் தடவி வெய்யிலில் உட்கார வைத்து விடுவார்கள்'' என்றான் சிரித்துக்கொண்டே.

பொன்னியின் செல்வர் மனம் விட்டுச் சிரித்தார். ''சென்று வாருங்கள். அடுத்த போர் வரும்போது சொல்லி அனுப்புகிறேன்'' என்றார். வணக்கம் செலுத்தி விடைபெற்றுக் கொண்டனர் வணிகர்கள்.

கப்பல்கள் தாயகம் நோக்கிப் புறப்பட்டன. ''பொன்னியின் செல்வர் வாழ்க!'' என கோஷங்கள் கம்பீரமாக எழுந்தன.

''சோழம் சோழம்'' என்றும் தாய்த் திருநாட்டை வாழ்த்திக் கோஷங்கள் எழுந்து வானளாவியது.

கப்பலிலிருந்து பார்க்கையில், இவ்வளவு நாள் தங்கியிருந்த தீவு சிறியதாகிக் கொண்டே வந்தது. பொன்னியின் செல்வர் உற்சாகமாக இருந்தார். அதைப் பற்றி மற்றவருக்கு ஒரு வியப்பும் ஏற்படவில்லை. இன்று எவ்வளவு பெரிய வெற்றி! தீவு கண்ணுக்கு மறையும் வரையில் இளவரசர் அதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார். அவருடைய முகத்தைச் சுற்றி அபூர்வமான ஜோதி ஒன்று பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. அங்கே அவர் பெற்ற மாபெரும் வெற்றியினால் வந்ததல்ல, அந்த முக மலர்ச்சி. அங்கு அவர் சந்தித்த பெண்ணுக்கே அதை உண்டாக்கிய பெருமை உரியது.

அவருடைய உள்ளம் குதூகலத்தினால் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. இனிக் கனவில் வந்த அந்தப் பெண்ணை எப்படியும் தேடிக் கண்டு பிடித்துவிடலாம் என்று நினைத்தபோது, அவர் முகத்தில் அவருக்குத் தெரியாமல் ஒரு புன்னகை தென்றல் போலத் தவழ்ந்தது.



அத்தியாயம் முப்பத்தாறு

நற்செய்தி வந்தது!

நாகைப்பட்டினம் என்பது கடலோர நகரம். ஒரு காலத்தில் நாகர் என்ற குலத்தினர் இங்கு குடியேறி வாழ்ந்ததால் இதற்கு நாகைப்பட்டினம் என்ற பெயர். சோழர் காலத்தில் நாகைப்பட்டினம் தமிழகத்தின் முக்கியத் துறைமுகப் பட்டினங்களில் ஒன்றாயிருந்தது. சாம்ராஜ்யத்துக்குத் தலை நகரமான தஞ்சை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு துறைமுகப் பட்டினமான நாகையும் நெடுநாளாக முக்கியமாயிருந்து வந்தது.

வெளிநாடுகளிலிருந்து எத்தனை எத்தனையோ பொருள்கள் பெரிய பெரிய மரக் கலங்களில் வந்து அத்துறைமுகத்தில் எப்போதும் இறங்கிக் கொண்டிருக்கும். விருந்தினர் வீட்டின் வெளியே நாணி நிற்பது போலக் கப்பல்கள் துறைமுகத்துக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்றுவிடும். அவை கரையை ஒட்டி வர ஆழம் இல்லாததனால், அப்பொருள்களை ஆயிரக் கணக்கான சிறிய படகுகள்

ஏற்றிக் கொண்டு வந்து கரையில் சேர்த்துவிடும். அங்கிருந்து பெரிய மாடுகள் பூட்டிய கட்டை வண்டிகள் பொருட்களை ஏற்றிச் சென்று நாடெங்கும் சேர்த்துவிடும்.

அது போலவே, படகுகள் மீண்டும் கரையிலிருந்து மாற்றுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு போய் மரக்கலங்களில் சேர்த்தன. அங்கிருந்து மரக்கலங்கள் கீழை நாடுகள் பலவற்றிற்கும் சென்று வாணிபம் நடத்தின. இதனால் வணிகருக்குச் செல்வமும், நாட்டுக்குச் சுங்க வரியும் கிடைத்தன. சோழரின் அபார செல்வத்துக்கும் அளவுக்கதிகமான செல்வாக்குக்கும் நாகைத் துறைமுகம் ஒரு பெரிய பங்கு வகித்தது.

அந்தத் துறைமுக நகரத்தில் அந்தி நேரம் அமைதி பெற்று விளங்கியது. நாகைப்பட்டினத்தின் கரையோரமாய் நம் பழைய நண்பர்கள் ஆழ்வார்க்கடியானும் இளம் சம்புவராயனும் அலைகள் கால்களை நனைத்து விடாதபடி நீரிலிருந்து சற்றுத் தூரத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இருவரையும் கண்டால் ஏதோ வேலைக்காக ஒரு இலக்கை நோக்கி நடப்பது போல நமக்குத் தோன்றவில்லை. ஏதோ நேரத்தைக் கழிப்பதற்காக நடப்பது போலவே தென் படுகிறது.

கடலிலிருந்து பறவைகள் தலைக்கு மேல் பறந்து நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. அலைகள் ஓடோடி வந்து கரையின் மீது மோதிச் சுக்கு நூறாக உடைந்தன. காற்று அவர்களுக்கு இடையிடையே புகுந்து விளையாடியது. பல விதங்களில் இயற்கை அன்னை தன் அழகை வெளிக் காட்டியபோதும் இருவருக்கும் அதில் ஈடுபாடிருந்தது போலில்லை.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்கி இருவரும் தலை நகரில் இருந்த சமயத்தில் அவர்களை விட்டு வெகு தூரம் நாம் வந்துவிட்டோம். ஆனால், தஞ்சையிலிருந்த இருவரும் இங்கே என்ன செய்கிறார்கள்?

முகங்களை இறுக்கமாக வைத்துக்கொண்டு இருவருமாய் நடந்தார்கள். சற்று உற்றுக் கவனித்தால் அப்படி இருந்தவர்கள் அவர்கள் மட்டுமல்ல. இந்தத் துறைமுக நகரில் எல்லாருக்குமே முகம் இறுக்கமாகத்தான் இருந்தது. ஒருவர் கூட மற்றொருவரைப் பார்த்தவுடன் வணக்கம் கூடச் செலுத்தவில்லை. எந்தக் கொண்டாட்டமும் இல்லை. கோயிலில் கூட ஒரு விறுவிறுப்பில்லாமல் தான் மணியோசையும், தேவாரமும் கேட்டன. நாகை நகர மக்களுக்குக் கடவுள் மீது அப்படி என்ன கோபமோ?

குழந்தைகள் மட்டும் பெரியோரின் கஷ்டம் புரியாமல் கலகல வென்று சிரித்துத் தங்கள் குதூகலத்தை வெளியிடுவார்கள். அவர்களைப் பார்த்து முறைத்துப் பெரியோர்கள் அதை அடக்கிவிடவே, அவர்களும் வாயடைத்துப் போனார்கள். நாடே மயான அமைதி குடியிருந்தது.

இந்த நகர் தொன்றுதொட்டு அமைதிக்குப் பெயர் போனது இல்லை. எப்பொழுதும் செவிகளுக்குச் சவாலாய் இருக்கும் நாகை. அந்த நகரினுள் நுழைபவருக்கு அதன் ஓசைகள் வெகு தூரத்திலிருந்தே கேட்டுவிடும். ஏன் என்றால் என்றென்றும் நகரம் என்றால் இதுவல்லவா நகரம் என்று சொல்லும் அளவுக்குத் தஞ்சைக்குப் போட்டியாக இருந்தது நாகை. ஏன், அதை விடக் கூட இங்கு செல்வம் அதிகமாகப் புரண்டது.

நாகையின் துறைமுகத்தை விட அதன் தெருக்களில் எப்போதும் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கும். பெரிய பெரிய மாடுகள் பூட்டிய மர வண்டிகள் இந்த நகரத்தில் இரவு பகல் எனப் பார்க்காமல் சதா ஓடிக் கொண்டிருக்கும். முன் பக்கம் மாடுகள் இழுக்கவும் பின்புறம் ஆட்கள் முனகல்களுடன் சப்தித்துக் கொண்டு தள்ளவும் தெருவை அடைத்துக் கொண்டு அந்த வண்டிகள் நகரும். ஆனால், இன்று அந்த வண்டிகள் கூட மௌனமாக நகர்ந்ததாகத் தெரிந்தது.

துறைமுகம் அருகே பூ, கறிகாய், பழம், பால், தயிர் விற்போரின் கூச்சல்கள் செவிகளை எப்போதும் துளைக்கும். ஆனால், இன்று கொண்டு வந்த பொருட்கள் விற்றாலும் விற்காவிட்டாலும் பரவாயில்லை என்று ஒருவர் கூடக் குரலை எழுப்பவில்லை.

இதற்கெல்லாம் என்ன காரணமாக இருக்க முடியும்?

தலைநகர் தஞ்சையில் இன்னமும் ஒரு புரளியாக இருந்த செய்தி இங்கு எல்லாருக்குமே தெரிந்திருந்ததுதான் இந்த இறுக்கத்துக்குக் காரணம். துறைமுகத்துக்குக் கீழ்க் கடலிலிருந்து வந்த கப்பல்களெல்லாம் சோழ நாட்டுக் கப்பல்கள் எப்படியெல்லாம் காணாமல் போன இரண்டு இளவரசர்களையும் தேடுகின்றன என்று செய்திகளைக் கொண்டு வந்தன.

அதுவும் கொடிய மிருகம் போன்ற கொள்ளையனும் ஆளை விழுங்கும் மீன்களும் நீந்திய கடல்களில் ஒரு மாத காலமாய்த் தேடிக் கொண்டிருந்தார்கள். ஏதாவது தீவு ஒன்றில் ஒதுங்கியிருந்தாலும் அங்கிருந்த தீவுகளில் வாழும் மனிதர்கள் நரமாமிசப் பட்சணிகளாய்க்கூட இருக்கலாம் என்ற பயம் அனைவருக்கும் உண்டு. கப்பலில் இருந்தாலே ஒழிய அந்த பிரதேசங்களில்

யாராலும் ஒரு மாதம் உயிர் வாழ முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

முதலில் அச் செய்தியை எவரும் நம்பவே இல்லை. ஆனால், 'தேடுதல் வேட்டையை நேரில் பார்த்துவிட்டு வந்தேன்' என்று பல வணிகர்கள் சொன்ன பிறகு நம்பினார்கள்.

சற்று நேரத்துக்கு முன் ஆழ்வார்க்கடியான் ஒரு யோசனை சொன்னான். துறைமுகம் சென்று சமீபத்தில் வந்திறங்கிய கப்பலில் வரும் பயணிகள் அல்லது மாலுமிகளை நிறுத்தி அவர்களிடம் விசாரிக்கலாமா என்று கேட்டான். இருவரும் ஒரு கணம் அதுவே சரியென்று நினைத்தார்கள். ஆனால், அதற்கு வேண்டிய மனோ தைரியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. ஆணி அடித்தாற்போல் 'பொன்னியின் செல்வர் மாண்டு விட்டார்' என்று யாரேனும் கூறிவிட்டால் என்னவாகும்?

ஈழத்தை வெற்றி கொண்டு, மன்னன் மகிந்தனை மலை நாட்டுக்குத் துரத்திய வீரரைக் கடல் கொண்டு விட்டதோ என்ற செய்தி இந்தத் துறைமுக நகரில் பெரும் துக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. 'காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த தவப் புதல்வரைக் கடல்தாய் காப்பாற்றாமல் விட்டுவிட்டாளே' என்று எல்லாரும் புலம்பினார்கள்.

'இவ்வளவு மக்களின் அன்பைப் புறக்கணித்துவிட்டு அவரால் மறைய எப்படி முடிந்தது? இத்தனை பூஜைகளும் வேண்டுதல்களும் வீண் போனதா என்ன?' என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டார்கள். கண்ணீர் வழிந்தபடி மாந்தர் விம்மி விம்மி அழுத குரலைக் கேட்டால் கல்லும் மலையும் உருகிவிடும். ஆனால், கடலன்னையின் மனம் உருகவில்லையே!

பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டு விட்டதாக நாட்டில் செய்தி பரவினால் சோழ நாடெங்கும் ஒரே அல்லோல கல்லோலமாகி விடுமென்பது தெரிந்ததே. ஆனால், நாகைப் பட்டினம் வருத்தப்பட மற்றும் ஒரு தனிப்பட்ட காரணம் இருந்தது.

கடல் கடந்து செய்யும் வாணிபம் கொடுக்கும் இலாபங்கள் கணக்கிட முடியாதவை. ஆனால், அதனுடன் கைகோத்து வந்த ஆபத்துகள் சாமானியரைக் கதி கலங்க வைக்கும். கடல் ஓநாய்கள் என அழைக்கப்பட்ட கொடுமையான கொள்ளையர் வணிகரின் கப்பல்களைச் சுற்றி வண்டு போல வட்டமிட்டுத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களது தாக்குதல்கள் சோழர்

களின் கடல் படையின் திறமையை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

பழைய காலத்திலிருந்து தமிழகத்துக்கும், கீழை நாடுகளுக்கும் உள்ள தொடர்புகள் ஏராளம். கடல் கடந்த வியாபாரம் விரிவடைந்த பின், கொள்ளையரின் பார்வை கடல் வாணிபத்தின் மீது திரும்பியது. பல முறை கப்பல்களிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொன்னையும் வைரத்தையும் இழந்து பல பழம்பெரும் வாணிபக் குடும்பங்கள் இன்று நடுத் தெருவில் நின்றன.

கடல் வாணிபம் கெட்டுப் போயிருக்கும் இந்த நாளில் ஏன் அவர் செல்ல வேண்டும் என்ற கேள்வியை மற்ற ஊரைச் சேர்ந்தவர்கள் கேட்கலாம். கடற் பிரயாணம் முன்போல இப்போது சுலபமாயில்லை என்று கடல் வாணிபத்தையே நம்பியிருந்த நாகை மக்களுக்கும் நன்கு தெரியும். கடல் கடந்த வாணிபத்தைக் காக்கவே சென்றார் பொன்னியின் செல்வர் என்பதில் ஐயமில்லை. 'பொன்னியின் செல்வர் நம் போன்ற வாணிபருக்கு நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றி விடவே சென்றார் அல்லவா?' என்று நினைக்கும்போது கடல் வாணிபத்தை நம்பியிருந்த இந்த நகரம் ஒரு குற்றவுணர்வுடன் இருந்தது.

ஆவேச வெறி கொண்ட கடற் கொள்ளைக்காரர்கள் அதிகமாகிவிட்டார்கள். கடல்களில் எங்கெங்கும் சஞ்சரித்து வருகிறார்கள். ஏன், துறைமுகங்களின் சமீபத்திலும்கூட அவர்கள் வந்து காத்திருக்கிறார்கள். மூர்க்காவேசத்துடன் போர் செய்து பழகிய அவர்களின் உறைவிடத்துக்கே சென்று அவர்களின் திமிரை அடக்க முயன்றார் பொன்னியின் செல்வர்.

'எதற்காக? நம் போன்ற வணிகருக்காகத்தான். அரச குலம் நம்மைப் பெரிய மனசு செய்து மன்னித்தாலும், நமக்காகச் சென்று ஒரு மாவீரன் மடிந்து விட்டான் என்று சரித்திரம் நம்மைப் பழிக்குமே' என்ற குற்ற உணர்வு அவர்களைத் தாக்கியது.

குற்ற உணர்வு ஒருபுறமிருக்கத் தோல்வியும் தாக்கியது. 'இந்தச் சந்தர்ப்பம் தோற்றது. இனி நம் விமோசனத்துக்கு மறுபடி எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ?.... தெரியாது. இப்படிப்பட்ட மாவீரனாலேயே இந்தக் கடல் ஓநாய்களை அடக்க முடியவில்லை என்றால் பின் யாரால் முடியும்? இனி நம் வாழ்க்கைக்கு வழி என்ன?' என்ற கேள்வி தோன்றியது.

சரி, நம் நண்பர்களின் நிலையைக் கவனிப்போம். ஒரு வாரத்துக்கு முன்னால் வைணவன் ஆழ்வார்க்கடியானும் கந்தமாறனும்

பிரதமரின் அலுவலகத்துக்கு வந்தார்கள். ஒரு செய்தியைப் பகிர்ந்து கொள்ள பிரதமர் கூப்பிட்டு அனுப்பியிருந்தார்.

சில நாட்களாக அரசல் புரசலாக ஒரு செய்தி நாட்டில் பரவியிருந்தது. அருள்மொழி வர்மரும் வந்தியத் தேவரும் கப்பலிலிருந்து விழுந்து மூழ்கிப் போய்விட்டார்கள் என்று. கரையோரமெங்கும் இந்தச் செய்தி பரவியிருந்தாலும் அரச குடும்பத்துக்குச் செய்தி தெரியாமல் பார்த்துக் கொண்டார் பிரதமர். ஆனால், இப்போது தனக்கெனக் கிடைத்த உதவியாளர்கள் இருவரையும் நாகைப்பட்டினம் அனுப்பிவைக்க எண்ணினார், தேடும் முயற்சியில் பங்கேற்க.

கோடிக்கரை வேலைக்குப் பின், "நீ மறுபடியும் கடம்பூர் போக வேண்டாம், இங்கேயே எங்களுக்கு ஒத்தாசையாயிரு!" என்று சோழப் பிரதேசத்துப் பிரதமர் கூறியது மாறனுக்கு மிகவும் சாதகமாகப் போனது. அந்தப் பழுவூர்ப் பெண் இவனைப் பொது நிகழ்ச்சிகளிலும், கோயிலிலும் பார்த்து நாணிச் சிரித்தது இவனுக்கு எவ்வளவு சுகமாக இருந்தது!

ஆனால், இப்போது அநிருத்தர் கொடுத்த அந்த வேலையைச் செய்து முடிக்க மாறனுக்கும் மனம் இணங்கவில்லை. அவனது இறுகிய முகத்தைக் கண்டு, "உனது உதவி நாட்டுக்கு இப்போது தேவைப்படுகிறது. அதை முடித்துவிட்டு நீ உன் ஊருக்குச் செல்லலாம்" என்று கட்டளையிட்டார் பிரதமர்.

வேண்டா வெறுப்பாக அந்த வேலையை ஏற்றுக் கொண்டு வெளியில் வந்தவுடன், "வேலை, வேலை என்று துடிப்பாயே, இதை ஏன் வேண்டாமென்றாய்?" என்று அடியான் கூடக் கேட்டான்.

அதற்கு மாறன், "இளவரசர் நாளைக்கெல்லாம் நலமாய் வந்து சேருவார் என்றே நம்புகிறேன். ஆனாலும் நீ என்று சொன்னால் வாய் சுட்டுவிடாது. அப்படி.. அப்படி ஒரு நிலையில், அந்த துர்சம்பவத்தைப் பற்றிய சோகச் செய்தியை நான் கொண்டு வர விரும்பவில்லை."

அடியானுக்குப் புரிந்தது. துர்செய்தி கொண்டு வருபவர்களின் எதிர்காலமும் கெட்டுப் போவதைக் கவனித்திருந்த அடியானுக்கு அது நன்கு தெரியும். அரசனிடம், "ஐயா! உமது மகன் போரில் மாண்டு போய்விட்டான்!" என்றோ, "உங்கள் பெண்ணை எதிரி நாட்டு இளவரசன் காதலிக்கிறான்!" என்ற செய்தியையோ சென்று சொன்னால், முதலில் அவர் கோபத்துக்கும் ஆளாக வேண்டும்.

பின் ஜென்மம் முழுவதும் செய்தி கொணர்ந்தவனைக் காணும் போதெல்லாம் அந்தத் துன்பச் செய்தியே அவர் மனதுக்கு வரும். ஓகோ! அதனால்தான் இந்த வேலை அவனுக்கு ஒரு பீதியைக் கொடுத்தது போலும். ஏற்கெனவே கோடிக்கரை சென்று தோல்வியைத் தழுவி வந்தாயிற்று. அதன் காரணமாகவே பழுவூர் அரண்மனை இருக்கும் தெருவிலேயே தலை காட்ட முடியவில்லை. இந்த வேலையில் வெற்றியென்றால் பரவாயில்லை. அதற்கு நேர்மாறாக இருந்தால், நம் எதிர்காலம் என்னவாகும் என்ற சந்தேகம் திடீரென்று மாறன் மனத்தில் உதயமாயிருக்க வேண்டும்.

"எதற்காக அவ்வளவு தூரம் நீங்கள் பயப்படுகிறீர்கள்? அவரை என்ன அவ்வளவு கையாலாகாதவர் என்று எண்ணி விட்டீர்களா? அப்படி என்ன மோசம் வந்துவிடப் போகிறது? அவர்கள் இருவரும் பெரும் வீரர்கள்!" என்று சமாதானப் படுத்தினான், அடியான். ஆனால், அவன் குரலில் முன்பிருந்த வலிமையில்லை.

மாறன் தொடர்ந்தான்; "வைணவனே! அவர்கள் இருவரும் எப்படிப்பட்ட தைரியசாலிகள் என்று எனக்குச் சொல்ல வேண்டுமா? அவர்கள் கையில் வாள் இருக்கும் வரையில் அவர்களுக்கு என்ன பயம்? எப்படிப்பட்ட அபாயம் வந்தால் தான் என்ன? தன்னந்தனியாக நின்று சமாளிப்பார்கள். ஆனால், நாடு நகரமெல்லாம் ஏதேதோ பேசிக் கொள்கிறார்களே. அதுவே உண்மையானால்..." என்று பாதியில் நிறுத்தினான்.

பின் சற்று மௌனம் காத்துவிட்டு, "ஆயுதம் ஏந்திய ஆயிரம் பகைவர்களின் நடுவில் அவர்கள் இருவரையும் தன்னந்தனியாக தப்பி அனுப்ப முடியும். ஆனால், அவர்கள் இப்போது சிக்கிக் கொண்டிருப்பது இயற்கையின் பிடியில். நான் இயற்கையின் சக்தியை நம்புபவன். அது மனிதரின் சக்தியை விட அதிகமானது. இயற்கையின் உக்கிர லீலைகளை நாங்கள் வெகுவாக அநுபவித்தவர்கள். என் கோட்டையை அழித்த நெருப்பாக இருக்கட்டும், பற்றிக் கிடந்து எங்களை வாட்டியெடுக்கும் வீர நாராயண ஏரியாக இருக்கட்டும். எந்த மனிதனையும் விட இயற்கையின் தாக்கம் அதிகமாகவே இருக்கும்!" என்றான் மாறன்.

அவன் வாதத்தை அடியான் ஏற்பதாகத் தெரியவில்லை. "கடலில் தோன்றும் புயல் காற்றுகளையும் சுழிக் காற்றுகளையும் பற்றி எனக்கும் நன்றாய்த் தெரியும். கடல் மதம் பிடித்த யானையைப் போல் இருக்கும் போது, கடலில் தென்னை மர உயரத்தில் அலைகள் எழுமாம். பொங்கி வந்து கப்பல்களை மூழ்கடிக்குமாம். எனினும், சம்புவராயரே! தங்களுடைய நம்பிக்கை குன்றி விட்டதாகத் தோன்றுகிறது. ஆனால், ஒன்று மட்டும் நினைவில்

கொள்ளுங்கள். இயற்கையை விடப் பலமானது சிலரின் கர்ம வினை. அப்படி பட்டவர் பொன்னியின் செல்வர். அவரைச் சுற்றி நடக்கும் அனைத்தும் அவரை ஒரு பெரிய இலக்குக்கு ஒரு படி அருகே கொண்டு செல்கிறது என்றே எனக்குத் தோன்றும். அதனால் அவருக்கு ஒரு பாதகமும் ஏற்படாது. ஆனால், உனது நண்பன் வந்தியத் தேவன் அவர் அருகிலிருந்து குட்டையைக் குழப்பாமல் இருக்க வேண்டும் என்பது மட்டும்தான் என் கவலை'' என்றான்.

தன் நண்பனை நினைத்துச் சிரித்து விட்டான், தன் கவலையை மறந்த மாறன். மனதின் பளு குறைந்தது. மனம் திறந்து பேசலானான். ''நானும் சோழர்களின் கர்ம வினையைப் பற்றிப் பல நாள் யோசித்திருக்கிறேன். அவர்களுக்கு எதிராகச் சதி செய்த கடம்பூர் மாளிகை இன்று மண்ணோடு மண்ணாகப் போனது. சதி செய்தவர்களெல்லாம் ஏதோ ஒரு பெரும் விதத்தில் பாதிக்கப் பட்டுள்ளனர். கடவுள் சோழர்கள் பக்கம் இருக்கிறார். அது அவர்களின் பூர்வ புண்ணியம் என்று உங்கள் நண்பர் குடந்தை ஜோசியர் சொல்வார். ஆனால், அது அவர்களின் நல்ல மனதுக்குத் தான் என்று நான் நினைகிறேன்.''

தஞ்சையில் இந்த உரையாடல் நடந்து ஒரு வாரமானது. அரைப் பகல் நேரமாவது இங்கே தங்கிவிட்டுக் கீழ்த் திசை செல்லும் கப்பல் ஒன்றில் ஏறி விடலாம் என்று எண்ணியவர் களுக்குச் சரியான கப்பல் கிடைக்காமல் மூன்று தினங்கள் தங்கும்படி ஆகி விட்டது.

பொழுதும் போகவில்லை. இந்த நகரத்தின் மக்கள் அனுபவிக் கும் நரக வேதனையையும் காணச் சகிக்கவில்லை. இருவரும் நாகை வந்து சேர்ந்தபின், அந்த நகரின் சோகம் இவர்களையும் பற்றிக் கொண்டது.

பேசிக்கொண்டே கடற்கரையிலிருந்து நகரத்துக்குள் பிரவேசித் தார்கள் அடியானும் மாறனும். அது நரகத்துக்குள் பிரவேசித்தது போலிருந்தது. மக்களின் முகத்தில் கடுகடுப்பையும், நாக்கில் மௌனத்தையும் பார்த்தார்கள்.

அவர்கள் நடந்தபோது தூரத்தில் சூடாமணி விஹாரத்தின் கட்டடம் கண்ணுக்குத் தென்பட்டது. புத்தரின் கோயிலான அது கூடப் பொன்னியின் செல்வர் செய்து கொண்டிருந்த திருப்பணி தாம். அதைக் கண்டவுடன் இருவருக்கும் கண்ணில் நீர் பெருக் கெடுத்தது.

வந்ததிலிருந்து அடியான் தன் சுயரூபத்தில் இருக்கவேயில்லை. ஊருக்குள் தங்க வேண்டும் என்ற நிலைமை வந்தவுடன் எப் போதும் போல ஒரு சைவ மடத்தைத் தேர்ந்தெடுத்து இர வெல்லாம் சைவர்களுடன் வாதப் போர் நடத்த ஆசைப்படுவான் என்று நினைத்தான் மாறன். சைவ மடம் ஒன்றிருந்தது. அதுதான் இந்தப் பொல்லா வைணவனுடைய அபிமான வாசஸ்தலம். ஆனால், அதில் அவன் தங்க இஷ்டப்படவில்லை.

வழியோடுபோகிற சனியனை விலைக்கு வாங்கியது போல, இவன் ஒட்டிக் கொண்டு விட்டானே என்று மாறன் நினைத்த காலம் உண்டு. ஆனால், பொன்னியின் செல்வருடைய சதியைப் பற்றிய நினைவில் இந்த வீர வைணவன் வாயைக் கூடத் திறக்க வில்லை. எவ்வளவோ சிவன் கோயில்களையும் சிவத் தொண்டர் கூட்டத்தையும் கடந்தார்கள். ஆனால், அவன் வேலையைக் காட்டவில்லையே. திருமலை நம்பிக்குக் கோபம் பிரமாதமாக வந்திருக்க வேண்டுமே என்று திரும்பிப் பார்த்தான் மாறன். கையிலிருந்த தடியைச் சுழற்றி அக்கூட்டத்திலிருந்தவர்களை ஒரு கை பார்த்துவிட எண்ணுவானல்லவா என்று எண்ணினான். ஆனால், அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

ஆனால், தன் மனம் மட்டும் அந்தப் பழுவூர்ப் பெண் லோகாவையே சுற்றிச் சுற்றி வருகிறதே. தன் ராஜவிஸ்வாசம் குறைந்துவிட்டதா என்று கூடச் சந்தேகமே வந்தது மாறனுக்கு.

இவ்விதம் இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகும் வரையில் இருவருமாய்த் தெருக்களில் நடந்தனர். நாளைக் காலை இருவரும் பாய்மரக் கப்பலேறிக் கீழ்த்திசை சென்று தேடுதல் வேட்டையில் கலந்து கொள்ள ஆயத்தமாக இருந்தனர். கப்பல்களையும் தேர்ந் தெடுத்து விட்டனர். பொழுது விடிவதற்குள் கப்பல் புறப்பட்டு விடும். மூன்று நாள் முழுவதும் இங்கே மக்களோடு மக்களாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிந்தாயிற்று. இதற்கு மேல் தாங்க முடியாது.

அப்போது ஒருவன் ஓடோடி வேர்க்க விறுவிறுக்கச் சென்று கொண்டிருந்தான். அவனை நிறுத்தி, ''என்ன . . . ? என்ன?'' என்று வினவினான், மாறன்.

''ஐயா, பதறாதீர்கள்! இவர் இன்னும் செய்தி ஒன்றும் சொல்ல வில்லையே? முழுதும் கேட்டு விட்டுப் பின் அது நற்செய்தியா இல்லையா என்று தீர்மானிப்போம்'' என்றான் அடியான்.

இவர்கள் இருவரின் மனதும் படபடக்க, ''ஐயா! நற்செய்தி கொணர்ந்தேன். பொன்னியின் செல்வர் கிடைத்து விட்டாராம்.

நாளைக் காலை எப்போதாவது நாகை வரப் போகிறாராம். இப்போது கீழ்க் கடலிலிருந்து வந்த கப்பலில் செய்தி வந்தது'' என்றான்.

இருவர் முகத்திலும் பிரகாசம் தெரிந்தது. இளவரசர்கள் சௌக்கியமாயிருப்பதாகச் செய்தி கிடைத்த பின் மாறன், ''பொன்னியின் செல்வருக்கு ஒரு தீங்கும் ஏற்படாது. அவர் சிரஞ்சீவியாயிருப்பார் என்று எனக்கு முன்பே தெரியும். அவர் கையில் பிடித்த வேலிலும், அரையில் செருகிய வாளிலும் கூர்மை குறைந்தாலும், அவையிரண்டும் கடலுக்கு உள்ளே சென்றாலும், அவரது மதிநுட்பத்தைப் பற்றிய நம்பிக்கை குறையாது. எப்பேர்ப்பட்ட நிலையிலும் அவர் தப்பி வந்து விடுவார் என்று எனக்குத் தெரியும்'' என்றான்.

மௌனமாய் இருந்த ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''நம்பி அடிகளே! தங்களுடைய திருச்செவியில் விழுந்ததா?'' என்று மாறன் கேட்டான். ''சீக்கிரம் புறப்படுங்கள். துறைமுகம் சென்று விடுவோம்'' என்றும் சொன்னான்.

அந்த இனிய செய்தியைக் கேட்டவுடனே ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் அத்தனை நாளும் அடங்கிக் கிடந்த வைணவ ஆர்வம் கரையை உடைத்துக் கொண்டு பொங்கி விட்டது.

''நாளைக் காலைதானே வருகிறார்கள். அப்போது போகலாம். முதலில் எனக்கு இந்த ஜாகை பிடிக்கவில்லை. அந்தச் சைவ மடம் மிகவும் ஏற்றதாகத் தெரிகிறது. அவர்களுடன் வாதமிட்டு நாட்களாகின்றன. அங்கேயே போவோமா?'' என்றான்.



அத்தியாயம் முப்பத்தேழு
அலைகடலும் மக்கள் கடலும்

அந்த நள்ளிரவில் வந்த நற்செய்தியால் அன்றிரவு முழுவதும் நாகைப்பட்டினமும், அதன் சுற்றுப்புறங்களும் ஒரே கும்மாளமாக இருந்தன. நாகை நகர மக்கள் குதூகலம் அடைந்திருந்தார்கள் என்று அவர்கள் ஒவ்வொருவருடைய முகக் குறியும் காட்டியது.

நாகை நகரம் தனது இயல்பு நிலைக்குத் திரும்பியது. அளவுக்கதிகமான சப்தங்கள் மீண்டும் எழத் தொடங்கின. மணி ஓசை நாலாபுறங்களிலும் கேட்டது. கோயில்களில் இசைக் கருவிகள் எழுப்பிய இன்னிசைகளுடன், மங்கையர் மனமாரப் பாடிய மதுர கீதங்களின் ஒலியும் கலந்து கேட்டன.

கொள்ளையரை அடக்கச் சென்ற இளவரசர் அருள்மொழி வர்மர் பல நாள் திரும்பி வரவேயில்லை அல்லவா? இதனால் எல்லையற்ற கவலைக்கு உள்ளாகித் தத்தளித்தனர் நாகைப் பட்டினத்தினர். தங்கள் துயர் துடைக்கச் சென்றார் அவர் என்று எண்ணிய போது அவர்களுடைய துயரம் பன்மடங்கு ஆயிற்று.

ஒருவேளை ஏதேனும் தீவில் சென்று உயிருடன் ஒதுங்கி இருக்கக் கூடாதா என்ற ஆசை. ஒரு நம்பிக்கை. அப்படியே விதியை மாற்றியெழுதும்படி கடவுளை மன்றாடினர். ஆனால், இன்று அது நிறைவேறிய பின், ''இளவரசரின் திருமேனியில் உள்ள சங்கு, சக்கரச் சின்னங்கள் பழுதாகப் போய்விடுமா? கடல் அன்னை அவரைப் பத்திரமாக நாடு கொண்டு வந்து சேர்த்து விடுவாள் என்று எனக்குத் தெரியும்'' என்று அனைவரும் தாங்கள் இதுவரை பயந்ததை மறைக்கக் கூறி வந்தார்கள்.

நாகை நகரின் இரவு பகலானது. மக்கள் எல்லாரும் வானமே கூரை என்று தங்கள் வீடுகளைப் புறக்கணித்துவிட்டு வெளி வந்தனர். முற்றும் துறந்த முனிவர்கள் கூட இதற்கு விலக்கல்ல. தெருவில் நடந்த கொண்டாட்டத்தில் அவர்கள் கூடப் பௌத்த மடங்களிலிருந்து வெளியே வந்து விட்டார்கள். அந்தக் கூட்டத்தில் அவர்களின் மொட்டைத் தலையும் காவி வஸ்திரங்களும் தனித்து தெரிந்தன.

சைவ மடத்தில் தஞ்சம் புகுந்திருந்த அடியான் அந்த ஒளிமயமான காட்சியைச் மடத்தின் ஜன்னல் வழியாக ஒரு தடவை சுற்றி வளைத்துப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சு விட்டான். இந்தப் பெருநகரம் இன்றைக்குத் தூங்காது போலும். இந்த சந்தோஷப் பிரதேசத்திலேயே அவனுக்கு மட்டும்தான் கோபம் போலிருந்தது. இவன் வலியச் சென்று வம்புக்கு இழுத்தாலும் சைவர் யாரும் வாதத்துக்கே வரவில்லை.

கடவுள் வைணவரா சைவரா என்று கவலைப்படவில்லை யாரும். இந்தச் சோழ நாட்டின் பொக்கிஷத்தைக் கொண்டு வந்து சேர்த்துவிட்ட கடவுள் எப்படி இருந்தால் என்ன? நாமம் போட்டிருந்தால் என்ன? இல்லை, திருநீறு அணிந்திருந்தால்தான் என்ன? அவர் சோழரின் கட்சியில் தானிருந்தார். அதில் அணுவளவும் சந்தேகமில்லை.

சரி, யாரையாவது வம்புக்கு இழுத்தால்தான் தூக்கம் வரும் என்ற முடிவுடன், பரபரப்பாய் இருந்த மாறனை நோக்கி, ''இரவே

சென்று துறைமுகத்தில் இடம் பிடிக்கவேண்டும் என்று பறந்தீரே. அப்படியென்ன ஆவல். வல்லத்து அரசர் வந்தியத் தேவனைப் பார்க்கவா? இல்லை, பொன்னியின் செல்வரைப் பார்க்கவா?'' என்று வினவினான் பொல்லாத வைணவன். பல நாள் நட்புக்கு நடுவே காளான் போல முளைத்த பகையைப் பற்றித்தான் அவனுக்கு நன்கு தெரியுமே.

மாறன் அழுத்தமாகப் பதில் சொன்னான். ''பொன்னியின் செல்வருக்கு நான் யாரென்றே மறந்திருக்கும். என் ஆருயிர் நண்பனைக் காணவே ஆவல் கொண்டேன். என் தங்கை மணிமேகலை மரணப் படுக்கையில் இருந்தபோது என் அழைப்புக்கு இணங்க ஓடோடி வந்தானே அவன். அவனுக்கு நான் வாழ்நாளெல்லாம் கடமைப்பட்டுள்ளேன்'' என்றான் உருக்கமாக. அதற்கு மேல் வைணவன் கேள்விகள் ஏதும் கேட்கவில்லை.

செய்தி அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவி விட்டது. ஜனங்கள் ஊருக்குள் திரள் திரளாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். சூரியன் உதிக்கும் முன் எல்லாரும் ஒரு மனிதனைப் போல் விரைந்து துறைமுகம் சென்றடைந்தார்கள். அதில் நம் இரு நண்பர்களும் உண்டு.

''ஒருவரிடம் கூட வழி கேட்கவேண்டாம் போலிருக்கிறது. வாசலில் வந்து நின்றால் போதும். கூட்டம் அலையைப் போல அடித்துச் சென்று துறைமுகத்தில் சேர்த்துவிடும்'' என்றான் மாறன்.

ஆனால், காலையில் எழுந்து ஸ்நானம் செய்து, அடியான் வைணவ பாஷாண்ங்களையெல்லாம் பூசி இவர்கள் துறைமுகத்துக்கு வந்து சேர்வதற்குள், அவர்களுக்கு முன்னாலேயே அங்கே ஏறக்குறையச் சில ஆயிரம் பேர் வந்து சேர்ந்திருந்தார்கள். நாகையிலிருந்த படைகளும் படைத் தலைவர்களும்கூட வந்திருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் படையினர் தவிர 'நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்' என்று உலகமெல்லாம் புகழ் பெற்ற வர்த்தக மண்டலத்தின் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அயல் நாடுகளுடன் கப்பல் வாணிபம் செய்யும் பெரும் தன வந்தர்கள். பொன்னியின் செல்வருடைய கடல் பயணம் இவர்களது வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு நிரந்தரமாக ஒரு நிம்மதியைக் கொடுக்கவே, நன்றி மறவா நகரத்தார்கள் முன் வரிசையில் நின்றார்கள்.

துறைமுகத்துக்கு உள்ளே யாரும் பொதுவாக அனுமதிக்கப் படுவதில்லை. சுங்க வரி கட்டப்படாத பொருட்களை யாரேனும் வெளியே எடுத்துச் சென்று விடுவார்கள் என்ற பயம்தான் அதற்குக்

காரணம். ஆனால், இன்று அனைத்து விதிகளும் தளர்த்தப் பட்டன. முன் வரிசையில் நிற்க இடம் கிடைக்கவில்லை என்று மாறன் அடியானைப் பழித்தான். ''நாமம் பூச வேண்டுமென்றால் நேற்றிரவே பூச வேண்டியதுதானே. பாருங்கள், உம்மால் அவர்கள் வரும் கப்பலைப் பார்க்க ஒரு நல்ல இடம் கூடக் கிடைக்கவில்லை'' என்றான்.

''தம்பி! இந்த நாமத்தின் மகிமை உனக்குத் தெரியாது'' என்றான் அடியான்.

''என்ன மகிமையோ? ஏதோ. . .'' என்று முணுமுணுத்தான், மாறன். கூட்டத்தில் பலரும் வந்திருந்தனர். ஆனாலும் அந்தக் கூட்டத்தில் அடியான் அவனது விசித்திரத் தோற்றத்தினால் தனியாகத் தெரிந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அடியான் நினைத்தது நடந்தது. அவனை ஒரு அரசாங்க அதிகாரி 'பிரதமரின் நம்பிக்கையைப் பெற்ற ஒற்றன்' இவன் எனத் தெரிந்து கொண்டு, கூட்டத்தில் முண்டிக் கொண்டு வந்து, ''ஐயா! வர வேண்டும்: முன் வரிசைக்கு வாருங்கள்'' என்று சொல்லி இரு காவலர்களுக்குக் கண்ணால் சமிக்ஞை செய்யவே, அவர்கள் ஈட்டி முனையில் வழி ஏற்படுத்திக் கொடுத்தனர். இருவருமாய் முதல்வரிசைக்கு வந்து சமுத்திர ராஜனின் அருகில் நின்றார்கள்.

காலஞ்சென்ற சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் திருக் குமாரர், சோழநாட்டு மக்களின் கண்ணின் மணியானவர் வந்து கொண்டிருக்கிறார் என்ற ஆர்வத்தில் அவர்களுக்குப் பின்னால் கூட்டம் முண்டியது. மக்களுக்குள் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. காலையில் இளவரசர்கள் வந்து நாகையை அடைவார்கள் என்று நேற்றிரவு வந்த கப்பல் செய்தி கொண்டு வந்தது. அவர்கள் வென்ற பெரும் வெற்றியைப் பற்றிய செய்தியும் அந்தக் கப்பலின் மாலுமிகள் கொண்டு வந்தனர்.

அவரவர்களும் உயிர் பிழைத்திருந்தால் போதும் என்ற நிலைமையில் ஒரு படையை அமைத்து, மாபெரும் கொள்ளையரின் சைனியத்தை வீழ்த்திய சாகசம், வேகமாக பல்வேறு கற்பனைகளுடன் கூடி பரவியது. பொன்னியின் செல்வருடைய படையில் இருந்த பத்துப் பேர் நால்வராக ஆனார்கள். எதிரிகளோ எண்ணிக்கையில் பெருக்கெடுத்தனர். சோழ நாட்டுக் கப்பல்கள் தக்க சமயத்தில் வந்தது மூடி மறைக்கப்பட்டது. நால்வராய் ஓராயிரம் பேரை வெட்டிச் சாய்த்ததாகச் செய்தி பரவியது. இப்படித்தான் மனிதர்கள் கடவுள்களாக ஆக்கபடுகிறார்கள் என்பதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. அந்த மாபெரும் வெற்றியைப் பற்றித்தான் ஜனங்களிடையில் பேச்சாயிருந்தது. ஒரு நாவிலிருந்து ஒரு

செவிக்குச் செய்தி பரவியபோது அந்தக் கதை மெருகூட்டப் பட்டது. காலைச் சூரியன் எழுவதற்குள் அது காவியமானது.

மக்கள் அனைவரும் கடலை நோக்கிக் காத்திருந்தனர். நீரும் வானும் சேரும் ஒரு மெல்லிய கோட்டின் மீது பாய்மரக் கப்பலைக் கண்ட முதல் ஆளுக்குக் கண் பார்வை மற்றவரைவிடச் சிறப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவனது குரல் வளமும் அதற்குச் சளைத்தது இல்லை. அவன் போட்ட கூக்குரலைக் கேட்டு, அங்கு நின்ற அனைவரும் கடலில் ஒரு மூலையில் தோன்றிய கப்பலை நோக்கினார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் கடலில் ஒரு பெரிய மரக்கலம் காணப் பட்டது. கப்பல்கள் கரையை நெருங்கிய போது அசாதாரண நிசப்தம் குடிகொண்டிருந்தது. வருவது பொன்னியின் செல்வர் தானா என்ற சந்தேகம் அனைவர் மனதிலும் இருந்தது போல. இல்லை, மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்படுவோமா என்ற பயம் வேறு.

கப்பலின் மேல் பறந்த கொடியை உற்றுக் கவனித்தனர் மக்கள். கப்பல் நெருங்கியவுடன் அதில் பாயும் புலி ஒன்று தெரிந்தது. தங்க நூல்களால் அலங்கரிக்கப்பட்ட வேங்கை, பகலவன் வெளிச்சத்தில் மின்னியபோது உண்மை புலனானது. இளவரசர்தான் வருகிறார் கப்பலில் என்று தெளிவாயிற்று. மக்களின் பரபரப்பு மிகுந்தது. இவ்வளவு நாட்கள் நிம்மதியும் சந்தோஷமும் சின்னா பின்னமாகி யிருந்த மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

அந்தக் கப்பல் கரையோரமாக எவ்வளவு தூரம் வரலாமோ அவ்வளவு தூரத்தில் வந்து நின்றது. பளிங்கு போல் தெளிந்த தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்த கடலில் கப்பல் மிதந்தது. அதன் பக்கவாட்டில் ஒரு ஏணி இறக்கப்பட்டது. ஏணியைப் பார்த்த பின் தாங்கள் யாருக்காகக் காத்திருந்தார்களோ அவர் நாட்டில் சஞ்சரிக்கப் போகிறார் என்று அறிந்த கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. பின் அந்தக் கூட்டம் ஒரு பேரிரைச்சலை உண்டு பண்ணியது.

கப்பலிலிருந்தவருக்கும் சோழ நாடு நன்றாய்த் தெரியத் தொடங்கியது. நாட்டைக் கண்டவுடன் வந்தியத் தேவனுடைய உள்ளம் பூரித்தது. சென்ற காரியம் முற்றிலுமாக வெற்றி பெற்று விடும் போலக் காண்கிறது என்று பரத கண்டத்தைப் பார்த்த வுடன்தான் முழு நம்பிக்கை அவனுக்குப் பிறந்தது.

தாயகத்தைக் காண்பது கண்கொள்ளாக் காட்சி. இனி இதைப் பார்ப்போமா என்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருந்த வந்தியத்

தேவனுக்கு இந்தக் காட்சி இன்னும் இனிமையாக இருந்தது. கடலின் நீலத்தை ஓரிரு வாரங்களாகக் கண்டபின் நிலத்தின் பசுமை கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருந்தது.

''அதோ! நாகை'' என்று பரபரப்புடன் சொன்னான்.

இவ்விதம் சொல்லிக் கொண்டே பொன்னியின் செல்வருடைய முகத்தை வந்தியத் தேவன் கூர்ந்து கவனித்தான். தன்னுடைய மொழியினால் என்ன பயன் விளையப் போகிறதோ என்னும் ஆவலுடன் பார்த்தான். ஆனால், ஒன்றும் இல்லை. தாயகம் திரும்பும் வீரர் போலில்லை அவர். எதையோ பறிகொடுத்தவர் போலல்லவா இருந்தார்!

பொன்னியின் செல்வரைத் திரும்பிப் பார்த்தபோது அவர் முகத்தில் ஒரு சோக ரேகை ஓடிக் கொண்டிருந்தது. வந்தியத் தேவன் கப்பலில் திரும்பி வரும்போது பொன்னியின் செல்வ ருடைய மனப்போக்கை நன்கு அறிந்து கொண்டான். 'வெற்றி பெற்றவர் போல் வரவில்லை. எதையோ பறிகொடுத்தது போல வந்தார்.' ஓரிரண்டு முறை அவருடன் பேசிப் பார்த்தான். சரியான பதில் வராமல் போகவே, பிறகு அவரிடம் பேச்சுக் கொடுக்கும் எண்ணத்தையே விட்டுவிட்டான்.

கிழக்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்த காற்றினால் கடல் தண்ணீர் அலை மோதிக் கொண்டு கப்பலைக் கொண்டு போய்ச் சோழர் கரையில் முட்டிவிடும் போலிருந்தது. அதை வரவேற்கும் மனோ நிலையில்தான் கப்பலில் வந்தவர்கள் அனைவரும் இருந்தார்கள். ஆனால், பொன்னியின் செல்வர் மட்டும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தார்; ஏதோ அவர் நினைத்த அளவுக்கு வெற்றிகள் பெறவில்லை என்று ஏங்கியவர் போல.

'இன்னும் போர் வேண்டுமென்றால் அவர் தனியாகத்தான் போக வேண்டும். ஐயோ! நம்மால் முடியாது. இவரென்ன, மனிதனா? இல்லை, மரக்கட்டையா? இப்படி இல்லறத்தின் மீது சற்றும் பற்றில்லாமல் இருக்கிறாரே? பகைவரைத் தோற்கடிக்க வேண்டுமென்று எண்ணினாரே! எண்ணி அதைச் செயலிலும் நிறைவேற்றினாரே! அவர் எப்பேர்ப்பட்ட அறிவாளியாயிருந் திருக்க வேண்டும்! வீர பௌருஷத்திலேதான் அவருக்கு இணை வேறு யார்? ஆனால், அன்று இருந்த சந்தோஷம் ஏன் இன்று இல்லை?' என்று குழம்பினான் வந்தியத் தேவன்.

திரும்பி வரும்போது கனத்த இதயத்துடனே திரும்பி வந்தவர் பொன்னியின் செல்வர் மட்டும்தான். கப்பலின் மாலுமிகளோ வந்தியத் தேவனோ மிகவும் சந்தோஷமாகவே வந்தார்கள். தாய்

நாட்டுக்கு நீண்ட நாள் கழித்துத் திரும்புவதில் அனைவரின் இதயங்களும் பளுவில்லாமல் காற்றைப் போல இருந்தன. அது சமனிலைப் படுத்தியிராவிட்டால் பொன்னியின் செல்வருடைய கனத்த இருதயம் கப்பலைக் கடலின் தரைவரை இழுத்துச் சென்று மூழ்கடித்திருக்கும்.

கரையிலிருந்த கூட்டத்தைக் கவனிக்கத் தொடங்கினான், வந்தியத் தேவன். கப்பல் அருகே வந்தபோது துறைமுகம் ஜனத் திரளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. கொள்ளையர் சைனியத்தை நிர்மூலம் செய்து திரும்பும் சோழர் குல விளக்கை வரவேற்கக் கூட்டம் அலை மோதியது. கொள்ளையரால் பாதிக்கப்பட்ட வணிகரெல்லாம் இந்த நகரத்தைச் சேர்ந்தவர்களே. அதனால் வரவேற்பு பலமாக இருந்தது.

கடலுக்கு முன் முடிவில்லாத கடலைப்போல், மக்களும் சேனா வீரர்களும் அலைமோதிக் கொண்டு நின்றார்கள். அவர்கள் கையில் பிடித்த வேல்களும், வாள்களும், மார்பில் தரித்த கவசங்களும் ஒளிவிசிக் கண்ணைப் பறிக்கின்றன. தூரத்திலுள்ள மாட மாளிகைகளின் மேல் ஜனங்கள் நின்று ஆர்ப்பரித்தார்கள். துறைமுகத்தில் மக்கள் திரண்டு கூட்டம் கூட்டமாக முன்னேறி வந்தார்கள். பெரும் ஓசையை எழுப்பிக்கொண்டு தாங்கள் நிற்கு மிடத்தில் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டு நின்றார்கள்.

கடலின் ஆர்ப்பாட்டம் பலமாக இருந்ததால் நாடு அமைதியாக இருக்கும் என எண்ணி வந்தவர்களுக்கு, இந்த ஆயிரக் கணக்கான மக்களின் குரலிலும் கரகோஷத்திலும் எழுந்த சப்தம் கடலையே சவாலுக்கு இழுத்தது போலிருந்தது.

கப்பலில் இருந்தவர்களும் ஜனத் திரளைக் கண்டு மகிழ்ந்தனர். கை சளைத்தபோதும் கவலைப் படாமல் அசைத்தனர். கரை மீது ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது. பல்லாயிரம் மக்களின் கோஷம் நன்றாகக் கேட்டது. ''சோழ குலத் தோன்றல் வாழ்க!'' மன்னாதி மன்னர் வாழ்க!'' என்றெல்லாம் கோஷிப்பது போலத் தோன்றுகிறது. அவனவன் தனக்கு என்ன தோன்றியதோ, அதைக் கத்திக் கொண்டிருந்தான்.

கூட்டத்தைப் பார்த்திருந்த வந்தியத் தேவனின் தோளைத் தட்டி பொன்னியின் செல்வர் ஒரு திசையில் சுட்டிக் காட்டினார். ''வலது பக்க ஓரமாக நிற்பவர்கள் யாரெனத் தெரிகிறதா?''

வந்தியத் தேவன், அவர் சுட்டிக் காட்டிய திசையில் தன் பார்வையைத் திருப்பப், பேரானந்தத்தில் அவன் இதயம் படபடத்தது.

''கன்னகளே! உண்மையைச் சொல்லுங்கள். என் ஆருயிர் நண்பன் மாறனா அது?'' நடுவில் பகை வந்திருந்தாலும் இருவரும் உயிருக்குயிராய்ப் பழகிய காலங்களின் ஞாபகங்கள், கசப்பை அந்த நொடியில் மூழ்கடித்தன. 'ஐந்து ஆண்டுகளாகப் பார்க்காத நண்பன் இங்கு எனக்கெனக் காத்திருக்கிறான்!'

அவன் மௌனத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட பொன்னி யின் செல்வர், ''உனக்கு இன்னாரென்று தெரியவில்லையா? உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? உன் ஆருயிர் நண்பன். இளம் சம்புவராயன். அருகில் இருப்பவரைத் தெரியவில்லையா? நாம் தீவில் அடிக்கடி பேசிக் கொண்டோமே, அந்த வீர வைணவர். நம்மை வரவேற்க வந்திருக்கிறார்கள்'' என்றார்.

படகில் ஏறுமுன் கப்பலின் மாலுமிகளிடம் விடை பெற்றுக் கொண்டார் பொன்னியின் செல்வர். அனைவரும் மண்டியிட்டு வணக்கம் செலுத்தினார்கள். பலர் கண்ணில் கண்ணீர் பெருக் கெடுத்தது. பெரும்பாலும் அனைவரின் முகமும் ஒரு பேரனுபவம் பெற்ற பூரிப்பிலிருந்தது. வாழ்நாளெல்லாம் சொல்லி மகிழ ஒரு கதை கிட்டியது அல்லவா?

படகு நிலத்தை நெருங்கியது. பிரயாணிகள் கடற்கரையைத் தொட்டவுடன் கூட்டம் அவர்களை நோக்கி முன்னேறியது. அவர்கள் இறங்கிக் கொண்டிருக்கும் போதே அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் கூடி விட்டார்கள். கூட்டம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் இளவரசரைப் போற்றி கோஷமெழுப்பினர்.

பகைவர் முன் முன்னேறி வெற்றி கண்ட வீரர்கள் அடி அடியாகப் பின் வாங்க வேண்டியிருந்தது. 'மீண்டும் தண்ணீரில் தள்ளி விடுவார்களோ இந்தப் பித்து பிடித்த மக்கள்!' என்று வந்தியத் தேவன் நினைத்தான், அவ்வப்போது திரும்பி, தனக்கும் நீருக்கும் உள்ள தூரத்தை அளவிட்டுக்கொண்டு.

சற்று நேரத்துக்கெல்லாம் படை வீரர்கள் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். வேலும் வாளும் பிடித்த வீரர்கள் கூட்டத்தினரைத் தடுத்து நிறுத்தினார்கள். அத்தகைய வீராதி வீரனைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் துறைமுகத்திலிருந்த கூட்டத்தினர் இப்போது நடுவில் வழி விட்டுவிட்டு இருபுறமும் ஒதுங்கி நின்றார்கள்.

எக்காளம் ஊதுவோர், பரிச்சின்னம் ஏந்துவோர் ஆகியவர்கள் மட்டுமே வழியில் நின்றவர்கள். அவர்கள் பின்னாலேயே இளவர

சர்கள் செல்வார்கள் என்று இருந்தது. முதலில் பொன்னியின் செல்வரும் பின்னே வந்தியத் தேவரும் வரிசையாக எல்லாரும் வாழ்த்த, அதை ஏற்றுக் கொண்டே நடந்தனர்.

''ஜய விஜயீபவ!'' என்ற கோஷம் சமுத்திர கோஷத்தைப் போல் எழுந்தது. தங்கள் மீது நூறு, நூறு கரங்கள் மலர்களையும், மணிகளையும், மஞ்சள் நிற அரிசியையும் தூவுகின்றன என்பதை இருவரும் அறிந்தனர்.

முக்கியஸ்தர்கள் ஒரு வரிசையில் நிற்கவே, அவர்களை நெருங்கினார்கள் இரு வீரர்களும். முதலில் வைணவன் இருந்தான். இளவரசர் கையைப் பற்றிக்கொண்டு, ''உம்மை எப்போது காணப்போகிறோம் என்று மனம் களைத்துப் போயிருந்தேன், அரசே!'' என்றான் திருமலை.

''முதன் மந்திரியின் அந்தரங்க ஒற்றனுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது?'' என்றார் பொன்னியின் செல்வர் பலத்த சிரிப்புடன். அசடு வழிந்த அவன் அதற்கு மறுமொழி பேசும் முன் அடுத்து நின்ற மாறனிடம் நகர்ந்தார்.

கந்தமாறன் நடுக்கமுற்று அடுத்ததாக வரிசையில் நின்றான். ''இந்த இளவரசர் நம்மை அடையாளம் கண்டு கொள்வாரோ? இந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவு புதுப் பழக்கங்கள்! நண்பர்களை நினைவில் வைத்துக் கொள்ளவே நேரமிராது. நம்மை எப்படி...?''

நேருக்கு நேர் வந்த இளவரசர் அவனைப் பார்த்துச் சிரிக்கக் கூட வில்லை. ஏதோ பரபரப்பாய் இருந்தவர் மற்ற யாருக்கும் கேளாத குரலில் ''கந்த மாறவேளே, உம்மிடம் ஒரு காரியம் ஆக வேண்டும். நாளைக் காலை நாகை சிவன் கோயிலுக்குத் தற்செயலாக வருவது போல வர வேண்டும்'' என்றார். ''கந்தனின் சன்னிதிக்கு முன் வந்து விடுங்கள். நான் உம்முடன் அந்தரங்கமாகப் பேச வேண்டும்'' என்று சொல்லி நகர்ந்துவிட்டார்.

இந்தப் பேச்சைக் கேட்டதும் மாறனுக்கு உடம்பு வெலவெலத்துப் போய்விட்டது. கண நேரத்தில் அவனுடைய உள்ளம் என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டது.

ஒரு கணம் திகைத்து நின்றான் மாறன். பொன்னியின் செல்வர் இவனைத் தனியாக அழைத்ததைப் பற்றி நியாயமாக உவகை கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனுடைய உள்ளத்தில் உவகை ஏற்படவில்லை. ''ஏன் என்னை மட்டும்?'' என்ற எண்ணம் அவனுக்கு திடீரெனத் தோன்றியது. ஏதேதோ தெளிவில்லாத ஐயங்கள் அவன் உள்ளத்தில் தோன்றி அலைக்கழித்தன.

அடுத்து வந்த வந்தியத் தேவன் கந்தமாறனை அணைத்துக் கொண்டான். ''மாறா!'' என்று அவன் கூற, ''வல்லா!'' என்று இருவரும் யௌவன காலத்தில் அழைத்துக் கொள்வது போலவே அழைத்தனர். உணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் பேசி இரு நண்பர்களும் அணைத்துக் கொண்டார்கள்.

''நண்பா! தாய், தந்தை எப்படி இருக்கிறர்கள்?'' பின்னர் ஏதோ கேட்க நினைத்த வந்தியத் தேவன் தன் இதழைக் கடித்துக் கொண்டான் .

''என்ன நண்பா?'' என்று கேட்டான் மாறன்.

கண்ணில் நீர் தேங்க, ''உன்னைப் பார்த்தவுடன், மணிமேகலை எப்படி இருக்கிறாள் என்று கேட்கத் தோன்றியது. அவள் மறைந்ததாகவே எனக்குத் தோன்றவில்லை!'' என்றான்.

''அந்தச் சம்பவம் உனக்கு இன்னும் நினைவு இருக்கிறதா? மறந்து விட்டாயோ என்று எண்ணினேன்!'' என்றான் மாறன்.

''ஏன் அப்படிக் கேட்டு விட்டாய்? அவளை நினையாத நாள் இல்லை!'' என்று இருவரும் பழையதைப் பேசி ஒன்றாய் சேர்ந்தனர்.

மாறனைக் கண்டதில் வந்தியத் தேவனுக்கு அளவில்லா மகிழ்ச்சி. ஆனால், அதற்கு மேல் பொன்னியின் செல்வர் மகிழ்ந்தார். கப்பலிலிருந்து பார்த்தபோது கண்ணுக்கெட்டிய தூரம் மக்களின் வெள்ளம். அதில் இரண்டு முகங்கள். ஒன்று வீர வைணவன். மற்றும் ஒன்று கந்தமாறன். தான் யாரென்று அவருக்கு மறந்தே போயிருக்கும் என்று மாறன் எண்ணியிருந்ததற்கு நேர்மாறாக அவனைக் கண்டவுடனேயே நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்துக் களைத்திருந்த பொன்னியின் செல்வருடைய முகத்தில் ஒரு பிரகாசம்.

யாரிடமாவது தன் மனதிலிருந்ததை மளமளவென்று கொட்ட வேண்டும் போலிருந்தது இளவரசருக்கு. ''மாறன் வந்தது நம்முடைய நோக்கத்துக்கு அனுசரணையாகவே இருக்கின்றது'' என்று நினைத்துக் கொண்டார் பொன்னியின் செல்வர். யாரிடமாவது இதைப் பற்றிப் பேசவில்லை என்றால் அவருக்குப் பைத்தியமே பிடித்துவிடும்.

வந்தியத் தேவனிடமோ, குந்தவை தேவியிடமோதான் முதலில் அந்த கனவுக் கன்னியைப் பற்றி பேசியிருப்பார். ஆனால், இருவரும் இந்தக் காதல் எண்ணம் இவருக்கு வந்ததே தவறு என்று நினைக்கக் கூடியவர்கள். பொன்னியின் செல்வருடைய மனைவி

வானதி என்றால் குந்தவைக்கு உயிர். வந்தியத் தேவருக்கோ தன் மனைவி குந்தவை தேவியின் வாக்கு தெய்வ வாக்கு.

அதனால், 'மாறனிடம் நம் மனதைத் திறந்துவிட வேண்டும்' என்று முடிவு செய்தார், பொன்னியின் செல்வர்.



அத்தியாயம் முப்பத்தெட்டு
நீர் காதலித்திருக்கிறீரா?

நாகைக் காரோணம் என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட நகரச் சிவன் கோயில் அக்காலங்களில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. ஊரின் நடுவே கிழக்கு நோக்கிக் கருந்தடங்கண்ணி என்ற நீலாயதாட்சி உடனுறை ஆதி புராணர் கோயில் இருந்தது.

அதற்கு மாறன் தனியே வந்து சற்று நேரமாகக் காத்துக் கொண்டிருந்தான். வந்தவுடன் முதல் காரியமாக மாறன் அந்தரங்கப் பேச்சுக்கு ஏற்றாற்போல் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்தான். நந்த வனம் செல்லும் வழியில் தரையில் ஒரு சாய்ந்த தூணின் மீது அமர்ந்தான். தூணைச் செதுக்கும் போது சிற்பிக்கு உளி தடுமாறியிருக்கும் போலத் தெரிந்தது. ஆனால், அந்தத் தூண் தேவைப்படா விடிலும் யாரும் அதை வெளியிலெடுத்துச் செல்லவில்லை. சிவன் சொத்து குல நாசம் என்று எண்ணி எடுத்துச் செல்லவில்லை போலும்.

தன்னுடன் அந்தரங்கமாகப் பேச வேண்டும் என்று பொன்னியின் செல்வர் அழைத்ததை நினைவு கூரும்போது மாறனுக்கு இன்னமும் ஆச்சரியம் குறையவில்லை.

தன் மனதைச் சாந்தப் படுத்திக் கொள்ள அமர்ந்த இடத்திலிருந்து கோயிலை ஒரு நோட்டம் விட்டான். மூவரும் பாடிய தலம். அதற்கு மேலாக இந்தக் கோயிலில் உள்ள சௌந்தரராஜப் பெருமாள் திருமங்கை ஆழ்வாரால் மங்களா சாஸனம் பெற்றது தான். உடனே சைவத்தையும் வைணவத்தையும் பிரித்துப் பிரித்துப் பேசிய ஆழ்வாக்கடியான் நினைவு வந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கோயிலின் பக்கவாட்டிலிருந்த கதவின் வழியாக வந்த பொன்னியின் செல்வர் மாறனின் பின்புறமாக வந்து அவனை அதிர்ச்சியுறச் செய்தார். கோயிலின் முன்

வாசல் வழியாக வருவதென்றால் அவர் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட வேண்டும் என்று அர்ச்சகர்களும் கோயில் நிர்வாகிகளும் வற்புறுத்துவார்கள் என்று அப்படிச் செய்தாரோ என்னவோ? அவரைக் கண்டவுடன் எழுந்து நின்று வணங்கினான் மாறன். சிரம் வணங்கி நின்ற மாறனை உற்றுப் பார்த்தார் இளங்கோ.

பொன்னியின் செல்வரின் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. பேசலாமா வேண்டாமா என்று அவர் கடைசி முறையாக யோசிக்கிறார் என்று நன்றாய்ப் புரிந்தது மாறனுக்கு. ஏதோ பேசத் துடிப்பவர் போல அவரது உதடுகள் அசையவும், பின் உள் மனம் அதை நிராகரிக்கவும், மாறனுக்குத் தாங்கவில்லை. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று போர்க்களத்தில் நடப்பது போலப் பேச்சிலும் இருக்கும் இளவரசர், ஏன் இன்று தடுமாறுகிறார் என்று தெரியவில்லை. தன்னிடம் பேச அப்படிப்பட்ட பெரிய விஷயம் என்ன இருக்கிறது என்றும் புரியவில்லை.

ஆனால், உண்மையில் மாறன் வந்ததில் வந்தியத் தேவனைவிடப் பொன்னியின் செல்வருக்கே அதிகத் திருப்தி என்று சொல்ல வேண்டும். தன் மனதைத் திறந்து பேச ஓர் ஆள் கிடைத்ததை முன்னிட்டுப் பெரும் திருப்தி அடைந்தார். உறவு என்று ஏற்பட்ட பின் வந்தியத் தேவனிடம் மனம் திறந்து பேச முடிவதில்லை. அதுவும் மாப்பிள்ளை குந்தவை தேவியாருக்கு ஒரு பக்தர் போலவே ஆகிவிட்டார். மனைவியின் நினைப்புக்கு மாறாக ஏதும் நடக்க அவர் விரும்ப மாட்டார். மற்ற பெண்ணைப் பற்றிய நினைவு தம்பிக்கு வந்ததே தவறு என்று நினைக்கக்கூடியவர் குந்தவை.

அவர் ஓரிரவில் வந்த கனவின் நினைவில் மகிழ்ந்தது எத்தனையோ நாள்! அந்தச் சில நிமிடக் கனவும் அதில் வந்த பெண்ணும் அவருக்கு அப்படியொரு இன்பத்தை அளித்தனர். ஆனால், இடையிடையே, இனிமேல் அந்த மாதிரி அனுபவங்கள் நமக்குக் கிட்டப் போவதே இல்லை என்ற நினைவு வந்ததும், மனத்தில் கொடிய வேதனை உண்டாயிற்று. வெறுமை நிறைந்த ஒரு மனோ நிலை ஏற்பட்டது.

அவளை மறக்க, ஆன மட்டும் முயன்றும் அவரது முயற்சி பலிக்கவில்லை. அந்தக் கனவில் அந்தப் பெண் வந்த போது அவர் அடைந்த பேரானந்தமான அனுபவம் அவருக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவும் படுக்கும் முன் இறைவனை வேண்டினார். அம்மாதிரி அவள் கனவில் வந்து மறுபடியும் அந்தப் பரவசம் அடைவதை அவர் விரும்பினார். முக்கியமாக அதை

யெல்லாம் விட அவளருகிலேயே மீதி வாழ்க்கையைக் கழித்துவிட விரும்பினார்.

தனக்கு ஒரு புறம் கஷ்டத்தையும் மறுபுறம் இன்பத்தையும் விளைவித்த இந்தக் கனவுக் கன்னியைப் பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவருக்குத் துடிப்பா யிருந்தது. இல்லையென்றால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந் தது.

உண்மையிலேயே தயங்கித் தயங்கி, யோசித்து யோசித்து, பின்தான் மாறனிடம் இந்தப் பேச்சை எடுக்கலாம் என்று உறுதி யாய் இருந்தார், பொன்னியின் செல்வர். இளவரசர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, மாறனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"நண்பா! எனக்காக வந்ததில் உனக்கு மிக்க வந்தனம். உன் நேரத்தை வீணில் செலவிடப் போகிறேன் என்று நினைகிறேன்" என்றார்.

நாலாபுறத்திலும் கண்ணைச் சுழற்றிப் பார்த்து விட்டுப் பேசத் தொடங்கினார். "நண்பா! உன்னிடம் நான் மனம் திறந்து பேச வேண்டும்" என்றார்.

"இங்கு பேசுவது வெளிவராதென்று சத்தியம் பண்ணிக் கொடு. வேண்டாம், சத்தியம் வேண்டாம். நீ சொன்ன சொல்லை நிறை வேற்றுவாய் என்று எனக்குத் தெரியும். யாரிடமும் சொல்லா திருப்பாயல்லவா?" என்று சொல்லி நிறுத்தினார்.

"இப்போது உன்னிடம் சொல்லப் போகும் விஷயத்தை வேறு யாரிடமும் சொல்லாதே. நானும் அது போலவே இதைப் பற்றி வேறு யாரிடமும் பேச இயலாது. உன் பேரில் மிகுந்த அன்பு வைத்திருக்கிறேன். இந்த விஷயத்தைப் பற்றி உன் நண்பன் வந்தியத் தேவனிடமோ இல்லை, ஆழ்வார்க்கடியானிடமோ கூடப் பேச முடியாது. இந்த நாட்டு மக்களைப் பார். நான் காலால் இட்டதை அவர்கள் தலையால் செய்யக் காத்திருக்கிறார்கள். ஆனால், என் பிரச்சனையைப் பற்றி யாரிடம் பேசுவதெனத் தடுமாறினேன். கப்பலிலிருந்து உன்னைப் பார்த்தவுடன் எனக்கு ஏக சந்தோஷம். அப்போதே முடிவு செய்துவிட்டேன். உன்னிடம் தான் என் மனதைத் திறப்பதென்று."

மாறன் திடமான குரலில், "அரசர்க்கரசே! எதையும் என்னிடம் சொல்வதற்கு நீர் தயங்க வேண்டாம். எனக்கு இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மைதான் முதன்மையானது!" என்றான்.

"நண்பா" என்று இளவரசர் அடிக்கடி அழைத்ததில் மாறனுக்கு இன்பம் கலந்த அதிர்ச்சி. ஒரு காலத்தில் அரச குடும்பத்துக்கு முன் சுதந்திரமாகத் தலை தூக்கி நிற்க முடியவில்லை என்ற நிலை மாறி, அவர்கள் தங்கள் மனதைத் திறக்கும் வடிகாலாக மாறியதே பெரும் வெற்றிதான். ஆனால், அவனுக்கு இன்னமும் புரிய வில்லை. அப்படி இவருக்கு என்னதான் பிரச்சனை?

மனக் கிளர்ச்சியில் இருந்த அவனை, அடுத்து அவர் பேசிய வார்த்தைகள் அதிர வைத்தன.

"இளம் சம்புவராயரே! நீர் காதலித்திருக்கிறீரா?"

மாறனின் மனக் கண்ணின் முன் அந்தப் பழுவூர்ப் பெண்ணின் உருவம் வந்து நின்றது. மாறன் அதிர்ச்சியுற்றான். "தன் நிலையைப் பற்றி எப்படி இவர் தெரிந்து கொண்டார்?"

"இந்தக் கேள்வியை நான் ஏன் கேட்கிறேன் என்று நீ வியக்க லாம். சுந்த மாறா! எனக்கு இப்போது காதல் வந்துள்ளது. வெகு காலமாய் இல்லாத ஒரு எண்ணம் எனக்கு இப்போது ஏன் வந்தது? பெண் வாசனையே இல்லாத போர்க் களத்தில் செயலாற்றிய தனால்தான் வந்ததா என்று தெரியவில்லை."

"அந்த அதிர்ஷ்டக்காரப் பெண் யார், இளவரசே?" என்றான் மாறன்.

முதல் முறை காதலிக்கும் வாலிபன் போல முகம் சிவந்து கூறினார். "அவள் அழகுக்கு இந்த ஈரேழு பதினாலு உலகங்களும் இணையாகாது. ஆனால், அதில்தான் ஒரு சிக்கல். அவள் இந்த உலகில் இருக்கிறாளா எனத் தெரியாமலேயே அவள் மீது அன்பு செலுத்தி விட்டேன்" என்றார்.

'இது என்னடா வம்பாய்ப் போயிற்று! இந்தக் கடல் பிரயாணம் அவர் மூளையைப் பாதித்துவிட்டதா?' என்று நினைத்தான் மாறன்.

அவன் மனதைப் படித்தாற்போல் பொன்னியின் செல்வர் தொடர்ந்தார். "அவள் எனக்கு அறிமுகமானது எப்படி என்று சொல்கிறேன். உமது குழப்பம் குறையும்" என்றார். "கப்பல் சுக்கு நூறாய் நடுக் கடலில் உடைந்தவுடன், அந்தக் கொள்ளையர் தீவில் நானும் உமது நண்பர் வந்தியத் தேவனும் ஒரு மணற் பரப்பாய் இருந்த கரையில் ஒதுங்கினோம். எலும்புகள் சிதறிக் கிடந்தன அந்த இடத்தில். அந்தக் கோரச் சூழலில் உறங்கிய எனக்கு ஒரு மோகனக் கனவு வந்தது. அதில் அவள் வந்தாள். எழுந்த பின் அது கனவென்று தெரிந்திருந்தும் என் மனம் அடைந்த வேதனையைச் சொல்லி முடியாது."

''இது ஏன் இப்படி இருக்கிறது? ஒரு நாள் கனவில் வந்தவள் என்னை ஏன் வாட்டி எடுக்கிறாள்? அவள் இந்த உலகத்தவள் இல்லை என்று தெரிந்தால், என் அன்பு வெறுப்பாக மாறினாலும் மாறிவிடும். ஆனால், அதுவும் எனக்குத் தெரியவில்லை.''

''கனவுலகம் மிகவும் அதிசயமானது. இரவில் மிகவும் நிஜமாகத் தெரியும். சூர்யோதயத்தின் பின் அதன் பலம் குறைவதாகவே தோன்றும். கனவுகள் காலைக் கதிர் வரும் முன்னே மறைவதுதான் வழக்கம். அப்படிச் சற்று நேரம் மனதில் நின்றிருந்தாலும் கூட மாலைக்குள் மறந்து விடுவதே மனித இயல்பு. இவ்வளவு நாட்களுக்குப் பின்னும், இவ்வளவு பெரிய அனுபவங்களுக்கு மத்தியிலும், அவள் முகம் மறையாமல் இருந்தது வியப்புதான். அது ஒன்று போதாதா, அவள் இவ்வுலகில்தான் உலவுகிறாள் என்பதற்கு?'' என்றார்.

''இளவரசே! நீர் கேட்கலாம். இது என்ன அறிவீனம்? கனவில் வந்தவளைப் பற்றி இவ்வளவு நாட்களாக என்ன நினைப்பு? உடனே அவளை மறந்துவிட வேண்டியதுதான் என்று!''

மாறன் அப்படி ஏதுவும் சொல்லுவதாக இல்லை. ஒரு பெண்ணின் பிடியில் அவனும் சிக்கியிருந்தான் அல்லவா? 'இந்த க்ஷணம் முதல் நீதான் எனக்கு எல்லாம்' என்று தன் மனதை ஒரு பெண்ணிடம் இழந்த மாறனுக்கு எல்லாம் புரிந்தது. ஆனால், கனவில் வந்தவளுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி மட்டும் எழுந்தது.

''ஒன்று சொல்கிறேன், அந்தப் பெண் கனவில் ஒரு முறைதான் வந்தாள். ஆனாலும் அவள் நினைப்புத்தான் எங்களை இங்கு கொண்டு வந்து சேர்ப்பித்தது.''

''அவள் ஒருத்திக்காகத்தான் இந்த உயிரை நான் வைத்துக் கொண்டிருந்தேன். போராடினேன். பின் வெற்றி பெற்றுத் தப்பினேன். பொங்கி வரும் சமுத்திரத்தைப் போல் முன்னேறி வந்த கொள்ளையரை வெட்டிச் சாய்த்தபோது கூட எனக்கு அவள் எண்ணம்தான் தோன்றியது. என் உயிரைப் பணயம் வைத்துப் போரிட வேண்டிய நிலையில் கூட அவள் முகம் என் முன்னால் தோன்றியதென்றால் அதற்கு அர்த்தம் என்ன?''

ஒன்றும் பேசாமல் மாறன் அமர்ந்திருந்தான். பொன்னியின் செல்வர் தொடர்ந்தார். ''ஆனால், ஒன்று. இப்படியே சென்றால் என் வீரம் மங்கிப் போய் விடும். என் வாள் துருப்பிடித்து விடும். தக்க சமயத்தில் உறையிலிருந்து வெளிவர மறுத்துவிடும்.''

பேச வேண்டியதெல்லாம் பேசி விட்டார்; இல்லை, கொட்டி விட்டார் என்று தெரிந்த பின், மாறன் தயங்கியவாறே, ''நான் ஒன்று நினைக்கிறேன், அதை நான் சொல்வது உசிதமாயிருக்குமா என்று அஞ்சுகிறேன்'' என்றான்.

''சொல்'' என்றார் இளவரசர்.

மாறனின் முகத்தையும் அவ்வப்போது ஒரு தடவை உற்றுப் பார்த்தார். அவன் முகத்தில் பரிகாசச் சிரிப்பின் அறிகுறிகளையே தேடினார் போலும்.

''அரசே! காதல் என்பது எப்போது வேண்டுமானாலும் வரும்'' என்றான் மாறன். அதைச் சொல்லும் போது பழுவேட்டரையர் மகள் லோகாவை நினைத்துக் கொண்டான் மாறன். ''அம்மா சொல்லிச் சாப்பிடுவது ஒன்று, நாமாக மரத்தின் மீது ஏறிப் பழத்தைப் பறித்துச் சாப்பிடுவது ஒன்று. இரண்டில் சுவை எதில் அதிகமாக இருக்கும்?'' என்று வினவினான். மெல்லிய புன்னகை ஒன்று இளவரசர் இதழ்களில் தவழ்ந்தது.

''அரசே! கனவில் வந்த பெண்ணின் அருமையைக் குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப் படுவது மற்றவருக்கு வேண்டும் என்றால் ஆச்சரியமா யிருக்கலாம். ஆனால், எனக்கு அப்படி யில்லை. உலகில் எதுவும் அர்த்தமற்று நடப்பதில்லை. அதுவும் உங்கள் வாழ்க்கையில் நடப்பது எல்லாமும் ஒரு உள் அர்த்தம் கொண்டதாகவே திகழும். கனவில் எவ்வளவோ தூரம் பிரயாணம் செய்து எத்தனையோ கடல்களைக் கடந்து வந்த அந்தப் பெண் உங்களுக்காகவே பிறந்திருக்கலாம். அவள் உண்மை யானவளென்றால் விரைவில் உங்கள் முன் வந்து நிற்பாள். அவள் இவ்வுலகைச் சேர்ந்த பெண்ணாய் இருந்தால் அவளைத் திருமணம் செய்து கொள்ள என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? உங்களைப் போல வீர இளைஞர், சோழ குமாரர் பல மணங்கள் புரிந்து கொள்வதில் என்ன ஆட்சேபம் எழ முடியும்?'' என்றான்.

''தந்த மாற வேளே! நீ இப்போது சொல்வது மட்டும் உண்மை யென்று ஏற்பட்டால் நான் பெறும் சந்தோஷத்தை வார்த்தை களால் அளவிட முடியாது'' என்றார், பொன்னியின் செல்வர்.

மாறன் நினைத்துக் கொண்டான் ''மானிய கேடத்து இரட்டை மண்டலச் சக்கரவர்த்தியும், வேங்கி நாட்டின் மன்னரும், கலிங்க தேசத்து ராஜாவும், கன்னோஜி சக்கரவர்த்தியும் கூடப் பொன்னி யின் செல்வருக்குப் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். இந்தக் கனவுப் பெண் எந்த தேசத்தவளோ? ஆனால், அவள் அதிர்ஷ்ட சாலிதான். அவளை மட்டும்தான் அவர் இலட்சியம் செய்கிறார்.''

"ஆனால், கனவுலகில் தோன்றும் பெண்கள் நம் உலகிலும் சஞ்சரிப்பார்கள் என்பது நிச்சயம் இல்லையே. இதற்காக உங்கள் மனதை வீணாக வருத்திக் கொள்ளாதீர்கள் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோள்" என்றும் எச்சரித்தான்.

இதைக் கேட்டதும் அவருடைய முகம் சுருங்கியதைக் கவனித்தான்.

உடனே, "உங்களைப் போன்ற அரசர்களுக்குப் பல மனைவிகள் இருப்பது நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதானே. அவள் முதலில் வரட்டும். பின் என்ன தடை வரப்போகிறது? அரசர் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்குப் பொறாமை என்பதே இருக்காது. கணவன் பல மனைவிகளை வைத்துக் கொள்வதைச் சாதாரணமாகவே எடுத்துக் கொள்வார்கள்" என்றான் மாறன்.

பொன்னியின் செல்வர் ஒரு பெருமூச்சுடன், "இதைப் பற்றி நான் உமது ஆருயிர் நண்பரிடம் பேச முடியவில்லை. உம்மிடம் கலந்து பேசினால் ஒரு வழி பிறக்கும் என்று தோன்றியது. இது நமக்குள் இருக்கட்டும். தஞ்சை சென்ற பின் என் மனைவியைப் பார்க்கும் போது, எனக்கு அந்தப் பெண்ணின் உருவம் மறைந்து விடுமோ என்னவோ?" என்றார்.

"ஆனால், நான் எதற்குப் பயப்படுகிறேன் தெரியுமா? அந்தக் கனவு என் புத்தியைக் குழப்பி விட்டது. என் புகழுக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பது என் குறிக்கோள். அதனால்தான் எனக்குக் கொஞ்சம் அச்சமாய்ப் போய்விட்டது. என் மனம் என்னைக் கேட்கிறது. 'வெகு யோக்கியன் போல் நடித்தாயே? காதல் மனைவிக்குத் துரோகம் செய்யலாமா நீ என்று' என்றார்.

தொடர்ந்து, "அந்த ஆசையை அடியோடு விட்டுவிடு என்று என் அறிவு சொல்கிறது. ஆனால், இந்த மனம்தான் என்னைப் பாடாய் படுத்துகிறது!" என்றார்.

மாறனுக்குப் புரிந்தது. ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும், "என் பெண்ணை மணந்து கொள்!" என்று கெஞ்சிக் கூத்தாடக் கூடிய பெருமை வாய்ந்தவர் அவர், ராமனைப் போல அரியணையைத் துறந்தவர், அந்த உத்தமப் புருஷனை போல ஏக பத்தினி விரதனாகவும் இருந்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்.

இளவரசர் உணர்ச்சி வசப்பட்டார் "ஐயோ, நண்பரே! என் மனத்திலுள்ள கொதிப்பை நீ அறிய மாட்டாய். அறிந்திருந்தால் என்ன செய்வாய்? எனக்கே தெரியவில்லை. இது என் மனைவிக்குச் செய்யும் துரோகமா? இல்லை, வெறும் பைத்தியக்காரத்தனமா?"

"அந்தப் பெண் கிடைத்தாலும் அவளை நான் எப்படித் திருமணம் செய்து கொள்வது? தமக்கை குந்தவை என்ன சொல்லுவாள்? 'நான் உன்னோடு பேசவே தயாராயில்லை. இதற்கு நீ ஆசைப்பட்டால்கூட நான் சம்மதிக்க மாட்டேன்!' என்பார். பின், 'வல்லவராயர் இன்னும் ஒரு பெண்ணை மணந்தால் என் மனம் எப்படிக் கொதிக்கும்! நினைத்துப் பார். இரு குழந்தைகள் பெற்ற பின் மீண்டும் காதலா? நான் அப்படியா உன்னை வளர்த்தேன்?' என்பார்."

"என்னைப் பெண்ணாசைப் பிடித்து அலைகிறவன் என்று சரித்திரம் எழுதிவிடக் கூடாது. ராமனைப் போல ஏக பத்தினி விரதனாக இருக்க வேண்டுமென்பத்தான் ஆசை." இளவரசர் சற்று மௌனம் காத்தார். அதைச் சாக்காகக் கொண்டு மாறன் நடந்ததை ஆராய்ந்தான்.

கனவில் வந்த கன்னி இளவரசரின் உள்ளத்தைக் கலக்கி விட்டாளென்பது நன்றாகத் தெரிந்தது. கோயிலின் நந்தவனம் அருகே இருந்தார்கள் அல்லவா? தோட்டமெங்கும் தாழம் பூக்கள் வெடித்து மலர்ந்து நறுமணத்தைப் பரப்பின. அந்த மணம் மனதைப் போதை கொள்ளச் செய்யும் சக்தி கொண்டிருந்தது. அந்த சுவாசம் போலத்தான் இந்தப் பெண் சகவாசமும். ஒரு கனவுக் கன்னியின் தொல்லையே இளவரசரை இப்படி மாற்றி விட்டதே. காமாந்தகாரத்தில் மூழ்கியிருந்த மனிதர்கள் எப்படித் தவிப்பார்கள் என்று நினைத்தான்.

பொன்னியின் செல்வருடைய சரித்திரம்தான் எல்லாருக்கும் தெரிந்ததே. அதை மாறனும் நன்கு அறிவான். சிறு பிராயம் முதலாக அருள் மொழி தமக்கை குந்தவையின் வாக்கையே வேத வாக்காகக் கொண்டு நடந்து வந்தார். அதற்காக அவள் சுட்டிக் காட்டிய பெண்ணைக் காதலிப்பது என்பது மாறனுக்குச் விசித்திரமாகத் தோன்றியது. அதனால் அவர் உள் மனதில் தானாக ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று தோன்றியிருக்க வேண்டும். அந்த எண்ணமே இந்தக் கனவுக் கன்னியின் ரூபத்தில் வந்திருக்க வேண்டும்.

பொன்னியின் செல்வர் வானதி தேவியை நிச்சயமாகக் காதலித்தார். ஆனால், அவர் தமக்கை சொல்லைத் தட்ட முடியாமல் அவ்வாறு காதலித்திருக்கலாம். இப்போதுதான் அவருக்கு முதல் முறையாகக் காதல் அரும்பியதோ என்னவோ?

ஆனால், இன்னும் வேறு வழியில் இந்தப் பிரச்சனையை ஆராய்ந்தால் இவரைச் சுற்றி நடப்பதெல்லாம் எதிர்காலத்தில் அவர் சரித்திரத்தில் இடம் பிடிக்கவே நடப்பது என்பதே நிஜம். இந்தக் கனவு கூட அதில் ஒன்றுதானா? அந்தப் பெண் இவருக்காகப் பிறந்து வளர்கிறாளோ என்னவோ?

எதிர்காலம் எனும் கற்சுவரில் தோன்றிய பிளவைப் போல வந்த கனவைப் புறக்கணிக்கவும் முடியவில்லை.

காதல் பித்துப் பிடித்து அலைவது, தான் மட்டும்தான் என்று நினைத்த மாறனுக்கு ஒரு ஆறுதல். நாட்டின் மிகப் பெரிய மனிதருக்கும் இந்த வியாதி பற்றியிருந்தது. தங்கள் இருவருடைய காதலுக்கும் நடுவே இருந்த ஒற்றுமை வேற்றுமையை அவன் ஒப்பிட்டுப் பார்த்தான். அவன் வாழ்க்கையில் முதல் முறையாகக் காதலில் சிக்கிக் கொண்டிருந்தபோது இந்த மாமனிதர் தானும் தமது கனவில் கண்ட ஒரு பெண்ணையே நினைத்து ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறாரே! அந்தப் பெண்ணின் காலடியைத் தேடிக் கொண்டிருக்கிறாராம், சரணாகதியடைய.

நான் அந்தப் பழுவூர்ப் பெண்ணைச் சதா எண்ணி மருகிக் கொண்டிருப்பதில் ஒரு தவறுமில்லை என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான்.



அத்தியாயம் முப்பத்தொன்பது

அரசரும் அரசியும்

மௌனத்தைக் கலைத்த பொன்னியின் செல்வர் தன் மனதிலிருந்த அந்தரங்கத்தை மாறனிடம் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார். ''இருந்தாலும் என் மனத்தில் இப்போது அவ்வளவு உற்சாகம் இல்லை. அந்தப் பெண் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு பின்னணியாக விளங்குகிறாள்.''

மாறன் ஊமை போல வாயடைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். பொன்னியின் செல்வரை ஒரு மாமனிதராய்ப் பார்த்திருந்தான். 'இவரா அவர்?' என்றே இப்போது நம்ப முடியவில்லை.

'பொன்னியின் செல்வருடைய உள்ளம் எவ்வளவு மென்மை என்று! அது இப்போது எப்படியெல்லாம் குழம்பியிருந்தது?' என்று எண்ணினான்.

பெண்களின் கைவளை குலுங்கும் சத்தமும், கலகலவென்ற சிரிப்பும் கேட்டு மயங்காதவர் யார்? பெண்களை மாயப் பிசாசுகள், மயக்கும் மோகினிகள் என்று வெறுத்தோடிய முனிவர் பலரே அந்தப் பெண்களின் மடியில் கிடந்ததாக இதிகாசங்கள் சொல்லவில்லையா?

''சம்புவராயரே! தங்களுடைய யோசனை என்ன? நீர் என் மதிப்புக்கும் அபிமானத்துக்கும் உரியவர். உமது கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார் பொன்னியின் செல்வர்.

மாறன் அதற்கும் மேல் ஒரு கணம் கூடச் சிந்திக்கவில்லை. இந்த மாவீரனின் மனதை இப்போதைக்கு சாந்தப்படுத்தியாக வேண்டும்.

மெல்லிய குரலில் ஆரம்பித்தான். ''அரசர்க்கரசே உங்களைப் பொறுத்தவரை இன்னொரு திருமணம் என்பது தவறில்லையே! சோழ குலத்துக்கு அதனால் பாதகம் இல்லை. குற்ற உணர்வினால் கலங்காதீர்கள். ஆனால், அந்தப் பெண் பூவுலகில் தானிருக்கிறாள் என்று தெரியும்வரை தாங்கள் அமைதி காக்க வேண்டும்.''

தலையசைத்தார் பொன்னியின் செல்வர். அவன் மேலும் தொடர்ந்தான்.

''இப்போதைக்கு இதை விட்டு விடலாம், இளவரசே. ஏதும் நடந்ததாக உங்கள் மனைவி மற்றும் தமக்கையிடம் காட்டிக் கொள்ளாதீர்கள். அவள் நிச்சயம் வருவாள். உங்களைச் சுற்றி நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் ஒரு அர்த்தமிருக்கும். விலங்குகளின் மொழியைக் கூட அறிந்தவர் நீங்கள் என்று நாடே போற்றுகிறது. கனவின் உள்ளர்த்தம் உங்களுக்குத் தெரியாமலா போய்விடும்? அந்தப் பெண் நிச்சயமாக உங்கள் முன் தோன்றுவாள் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றான்.

அலை பாய்ந்த மனதுடன் பல நாட்கள் தவித்துக் கொண்டிருந்த தன்னைச் சாந்தப்படுத்தி விட்டானே இவன் என்று அதிசயமாக மாறனைப் பார்த்தார் பொன்னியின் செல்வர். இந்த ஐந்து ஆண்டுகளில் மாறன் எப்படி மாறிவிட்டான்! அறியாப் பிள்ளை போலிருந்தவன் இன்று இவ்வளவு முதிர்ச்சியுடன் பேசுகிறானே!

''வாருங்கள். கோயில் நடை சாத்தும் முன் ஒரு முறை உள்ளே சென்று இறைவனைத் தரிசித்து விட்டுச் செல்லலாம். நாளை ஊருக்குப் புறப்பட வேண்டுமல்லவா?'' என்றான் மாறன்.

தன் மனதின் பாரம் இப்போது இறங்கிய பொன்னியின் செல்வர், நாகைக் கோயிலின் பிராகாரத்திலிருந்த சிற்ப வேலைப் பாடுகளை மிகவும் ரசித்தார் .

''எத்தனைமுறை வந்தாலும் சலிக்காத கோயில் இது!'' என்றார்.

அவர் திருப்தி அடையும் வரை கோயிலை இருவரும் வலம் வந்தார்கள்.

''அரசர்க்கரசே, ஊரில் தங்களுக்கென்ன முக்கிய வேலை? 'கிளம்பவேண்டும், கிளம்ப வேண்டும்' என்று எல்லாரையும் அவசரப்படுத்துகிறீர்களே!'' என்றான் மாறன். ''சிரம பரிகாரம் செய்து கொண்டு செல்ல அவகாசம் உள்ளது. இந்த ஊர் மக்களும் அதையே விரும்புவார்கள்.''

''இல்லை, இல்லை, நாளை தலைநகருக்குச் சென்றுவிட வேண்டும்'' என்றார் பொன்னியின் செல்வர்.

ஏன் என்று வினவாமல் வினவியது மாறனின் முகம்.

பொன்னியின் செல்வர, ''நான் கடற் கொள்ளையரை அழிக்கச் சென்றிருந்த காலத்தில் திருக்கோயிலூர் முதுகிழவரான மலைய மான் அரசர் காலமாயிருக்கிறார். திருக்கோயிலூர் வரை சென்று என் தாயின் வீட்டில் துக்கம் விசாரித்து விட்டு வர வேண்டும். ஆனால், அது மட்டும் காரணமல்ல. நான் வெகு நாள் இங்கு தங்கக் கூடாது'' என்றார் மர்மமாக. பின் விளக்கினார்.

''நான் சென்ற முறை இங்கு தங்கியிருந்தபோது கடல் பொங்கி ஊரையே விழுங்கி விட்டது!'' என்றார், சிரித்துக்கொண்டே. ''ஹா ஹா'' என்று சிரித்தவர் ''கேலிக்காகக் கூறினேன்'' என்றார். ஆனால், அதிலிருந்த உண்மையைத் தெரிந்து கொண்டான், மாறன்.

பொன்னியின் செல்வர் தொடர்ந்தார்: ''இது போலவே முன்பொரு தடவை கடலிலிருந்து தப்பித்து வந்த போது இந்த ஊரில்தான் தங்கினேன். ஆனால், அது சந்தோஷத்தைத் தரவில்லை. அந்த நாட்களில்தான் என் மூத்த சகோதரன் ஆதித்தன் கொல்லப்பட்டான்.''

மாறன் நடுக்கமுற்றான். இவருடைய அண்ணன் கரிகாலன் கொலையுண்டு கிடந்தது தன் மாளிகையில். பொன்னியின் செல்வர் அவன் நடுக்கத்தைக் கண்டு கொண்டதாகத் தெரிய வில்லை.

''துன்பங்கள் வந்தால் கைகோத்துக் கொண்டுதான் வரும் என்பது போல என் மேல் உயிரையே வைத்திருந்த ஊமை ராணி, அரசரைக் காப்பாற்றத் தன் உயிரை விட்டாள். பின்பு நான் முன்பே சொன்னது போலக் கடல் பொங்கி வந்து இந்த அழகிய நகரை மூழ்கடித்தது.''

ஊமை ராணியை நினைத்ததும், பொன்னியின் செல்வருக்கு ஒரு முக்கியமான வேலை தஞ்சையில் எப்படி நடைபெறுகிறது என்று அறிய ஆவல் ஏற்பட்டது. தன் முயற்சியால் கட்டப்பட்டு வந்த சிங்கள நாச்சியார் கோயில் எப்படி உருவெடுக்கிறது என்று அறிய ஆவல். அந்த ஊமைப் பெண்ணை ஒரு தெய்வமாக்க முடிவு செய்திருந்தார், பொன்னியின் செல்வர். அவளுக்காகத் தஞ்சையில் ஒரு கோயிலையும் நிர்மாணித்துக் கொண்டிருந்தார்.

''நாம் தஞ்சையில் கட்டிக் கொண்டிருக்கும் சிங்கள நாச்சியார் கோயிலைப் பற்றித்தான் கூறுகிறேன். நான் நாட்டில் இல்லாத காலத்தில் அதைக் கட்டி முடித்திருப்பார்கள்'' என்றார். ''நான் வந்தாலும் வராவிட்டாலும் அதை முடித்துக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று என் தமக்கையிடம் சொல்லி விட்டு சென்றேன். ஆனால், நல்ல தருணத்தில் திரும்பி வந்து விட்டோம். அந்த வைபவம் இன்னும் முடிந்ததாகத் தெரியவில்லை'' என்றார்.

பொன்னியின் செல்வர் தொடர்ந்தார். ''நான் செய்யும் கோவில் திருப்பணிக்கு அரசாங்க ஒத்துழைப்பு நிச்சயம் வேண்டும் என்று நினைத்தேன். கோயிலை எழுப்ப வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்திருக்கிறார் அல்லவா? அந்தக் கட்டளையைப் பெறுவதற்குள் நாங்கள் படாத பாடு பட்டுவிட்டோம்'' என்று அந்தக் கதையைச் சொன்னார்.

சுமார் ஓராண்டு காலத்துக்கு முன் பிரதமர் அநிருத்தர் தமது அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென முன்னால் எச்சரிக்கை இல்லாமல், காவலன் ஒருவன் உள்ளே ஓடி வந்தான்.

''ஐயா! பொன்னியின் செல்வர் தங்களைக் காண வந்திருக்கிறார்.''

சாதாரணமாக எதற்கும் நிலைமாறாத பிரதமரே ஒரு நிமிடம் ஆடிப் போய் விட்டார். எழுந்து நின்று பொன்னியின் செல்வரை, ''வா, அருள்மொழி, சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருக்க மாட்டேனா?'' என்றார்.

திறந்த கதவின் அருகே நின்ற பொன்னியின் செல்வர் நான்கே எட்டில் அறைக்குள் வந்து, பிரதமர் முன் குனிந்து அவர் கால்களை வணங்கினார்.

பின் எழுந்து, "ஐயனே, நீங்கள் வயதில் மூத்தவர், என் தந்தைக்கு ஆருயிர் நண்பர். உங்களைப் பார்க்க நான் வரக் கூடாதா?" என்று வினவினார்.

இருவரும் அமர்ந்தனர். நாட்டு நடப்புகளைப் பற்றிச் சற்று நேரம் கலந்துரையாடினார்கள். பின்பு, வந்த விஷயத்தைக் கூறிவிட்டுப் பொன்னியின் செல்வர் விடைபெற்றார்.

மதி நுட்பத்தில் அநிருத்தருக்கு நிகரானவர் சோழ சாம்ராஜ்யத்தில் எவருமில்லை. ஆனால், அவரே பொன்னியின் செல்வர் வந்து சென்ற பின்பு சற்று குழம்பியிருந்தார்.

திடீரெனப் பொன்னியின் செல்வர் ஒரு முக்கியமான காரியத்துக்காக, ஆட்சி புரிந்து கொண்டிருந்த உத்தம சோழச் சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும் என்று நேரம் ஒதுக்கச் சொல்லிப் பிரதமரிடம் கேட்டார்.

பிரதமரின் முகத்தில் இப்போது கவலை ரேகை ஓடியது. அவரது வெண்மையான புருவங்கள் சிறிது மேலே சென்றன. கண்களில் வியப்பும் ஐயமும் தோன்றின.

நாட்டின் அரசியலில் தலையிடுவதில்லை என்று இரு ஆண்டுகளாகப் பொன்னியின் செல்வர் முடிவெடுத்தது ஆட்சியாளர்களுக்கு வேலையை எளிதாக்கியிருந்தது. தலைநகரில் இருப்பதில்லை என்று சபதம் ஏற்றவர்போல் பொன்னியின் செல்வர் தனக்கென ஒரு வேலையை ஏற்படுத்திக்கொண்டு வெளியூர் சென்று விடுவார்.

சோழக் கப்பற்படை கடல் கடந்த தேசங்களுக்கெல்லாம் சென்று வெற்றிக் கொடி நாட்டக் காரணம் பொன்னியின் செல்வர். தூர தேசங்கள் பலவற்றில் இன்று புலிக்கொடி பறக்கின்றது என்றால், அது இப்போது அடக்க ஒடுக்கமாய் இங்கு வந்து சென்றாரே, அவரால்தான்.

அருள்மொழி வர்மரின் வீரப் பிரதாபங்களைக் குறித்து இன்று உலகமே வியந்து மெச்சிக் கொண்டிருந்தது. பல வணிகர்கள், "எங்கள் வியாபாரக் கப்பல்கள் எல்லாம் பத்திரமாகத் திரும்பி வந்து விட்டன. ஒன்றுகூடச் சேதமடையவில்லை!" என்று புன்னகை பூத்த முகத்துடன் சொல்லக் காரணமும் அவர்தான்.

'அடுத்த வாரம் கீழைக் கடலுக்குச் செல்வதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் சக்கரவர்த்தியுடன் இந்தச் சந்திப்பு எதற்காக? தன்னையும் அல்லவா அழைக்கிறார்' என்று பிரதமர் வியந்தார்.

அநிருத்தருக்குத் தெரியும். இராஜ்ஜியத்துக்கு ஆசைப்பட்டுப் போட்டியிடும் இரண்டு இளவரசர்களைச் சமாளித்து விடலாம். இருவருக்கும் ஒரே நோக்கம்தான். ஆனால், தீவிரமாய் அதை வேண்டாம் என்று கூறும் இரண்டு இளவரசர்களின் நோக்கம் வெவ்வேறாக இருக்குமல்லவா?

அதை நினைத்துப் பார்த்தார் பிரதமர். சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி. ஒருவர் தனக்கென நாடு மனமுவந்து கொடுத்த மகுடத்தை - அதற்கு உரியவராய் இருந்து- இவருக்காக முன்பே அதைத் துறந்து விட்ட ஒருவருக்குக் கொடுத்த சம்பவம்.

சுந்தர சோழச் சக்கரவர்த்திக்கு உடல் நலமில்லையென்றும், அவர் அதிக நாள் உயிரோடிருக்க மாட்டாரென்றும் நாடறிந்த போது, அடுத்துப் பட்டத்துக்கு வருவது யாரென்ற போட்டி வந்தது. அரசர் எண்ணியிருந்தது தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனை. அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டியவர் ஆதித்த கரிகாலர் அல்ல, மதுராந்தகத் தேவர் என்று முடிவு செய்தார்கள் பழுவூர் தலைமையில் செயல்பட்ட இதர குறுநில மன்னர்கள்.

'சோழ நாடு பெரும் ரணகளமாகும். சோழ நாட்டின் நதிகளில் எல்லாம் இரத்த வெள்ளம் பெருகி ஓடும்...' என்றுதான் நினைத்திருந்தனர் மக்களும், இதர நாடுகளும்.

பின்னர் அந்த இருவருக்குமே பட்டமில்லை என்று விதி முடிவு செய்தது. ஒருவர் கொலையுண்டு கிடந்தார். மற்றொருவர் தான் சோழன் அல்ல, அதற்கு நேர்மாறான எதிரி வம்சத்தின் குலக் கொழுந்து என்றறிந்து ஓட்டம் பிடித்தார். இப்போது போட்டியின்றியே பொன்னியின் செல்வர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம்.

ஆனால், கோயில் நந்தவனத்தில் பூப்பறித்த சிறுவனே பட்டத்திற்கு உரியவன் என அறிந்து அவனை அரியணையில் அமர்த்திக் கொண்டாடினான், இப்போது எளிமையாய் வந்த மாமனிதன்.

அப்படி ஒரு நிலைமை தனக்கு ஏற்பட்டிருந்தால் தான் என்ன செய்திருப்போம் என்று அனைவரையும் சிந்திக்க வைத்த சம்பவம். புறாவின் உயிரைக் காப்பதற்காகச் சதையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவர்கள் இருவரும். அதனால்தான் அந்தக் குலத்தவர் அனைவரும் "செம்பியன்" என்ற பட்டப் பெயர் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்று கேட்கவா வேண்டும்?

நீதி நெறியிலிருந்து அணுவளவும் தவறாதவர்கள் என்ற புகழையும் அடைந்தது, சோழர் பரம்பரை. தனக்கு உரியது அல்ல என்ற

வுடன் அந்த மணி மகுடத்தைச் சூடிக் கொள்ள மறுத்து விட்டார், பொன்னியின் செல்வர். நந்தவனத்தில் வளர்ந்த தன்னை விடத் திறமைசாலிகள் அரண்மனையிலே வளர்ந்தவர்கள் என்று ஒதுங்க நினைத்தார் உத்தம சோழர். நந்தவனத்தில் பூப் பறித்தவர் செங்கோல் ஏந்தத் தயங்கினார்.

நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும், பெருங்கிள்ளியும், கோச் செங்கணாரும் வந்த குலத்தில் உத்தமர்,அருள்மொழி எனும் இந்த இரண்டு மாமனிதர்கள் ஒரே சமயத்தில் தோன்றியதுதான் தவறு. ஒருவர் பின் ஒருவராய்த் தோன்றியிருந்தால் சோழ தேசம் உலகெங்கும் பரவியிருக்கும் என்று அநிருத்தருக்கு வருத்தம்.

அநிருத்தர் அரண்மனைக்கு உள்ளே நுழைந்தபோது அரண் மனைக்கு வெளியே காலத்தை அறிவிக்கும் ஆலாட்சி மணிகளின் ஓசை முழங்கியது.

ஏதோ சிரிப்பை அடக்கிக் கொண்டு, அதைப் புன்முறுவலாய் வெளிக்காட்டியபடி, பிரதமரை வரவேற்றார், உத்தம சோழர்.

''வாருங்கள்! பிரதமரே, வாருங்கள். நான் அரசியாரிடம் இப்போதுதான் சொன்னேன். ஆலாட்சி மணியோசையுடன் உள்ளே நுழைகிறார் பிரதமர். அவர் என்றும் சொன்ன நேரத்துக்கு வந்து விடுவார் என்று. அரசியாரோ அதற்கு, நான் உள்ளே சென்ற பின்புதான் மணியடிக்க வேண்டும் என்று அந்த ஆலாட்சி அதிகாரியை நீர் மிரட்டி வைத்திருக்கிறீர் என்று கூறுகிறார்'' என்றார் அரசர் சிரித்துக் கொண்டே.

''ஐயனே! அரசர் பெருமானே! உமது நன்மதிப்பைப் பெற்ற அளவுக்கு நான் அரசியாரின் மதிப்பைப் பெற முடியவில்லையே என்பதுதான் எனக்குப் பெரும் வருத்தம்'' என்றார் பிரதமர். அவர் முகத்தில் நிஜமாகவே சோகம் இருந்தது. ''அம்மையாரின் நன் மதிப்பை என்று பெறுகிறேனோ அன்றுதான் எனக்குப் பரம திருப்தி ஏற்பட்டது என்று வைத்துக் கொள்ளலாம்'' என்றார்.

''ஐயா, அரசர் விளையாடுகிறார். தாங்கள் அவர் பேச்சைப் பொருட்படுத்த வேண்டாம். உங்களுக்கு அனந்த கோடி வந்தனம்!'' என்றார், பூங்குழலி அரசியார்.

அரசரும் அரசியும் கிழவர் வந்ததும் எழுந்து நின்று கைகூப்பி வணங்கினார்கள். அநிருத்தரின் வயதுக்கு மதிப்புக் கொடுத்து முன்பு காலில் சாஷ்டாங்கமாக விழுந்த அரசரைப் பிரதமர் தடுத்துவிட்டார்.

இந்தக் கதையில், ஏன்- சரித்திரத்தில் இந்தக் காலகட்டத்தில் பெரும் பேரும் புகழும் பெற்ற இரண்டு நபர்களை இப்போது சந்திக்கிறோம்.

பரத கண்டத்தில் ஒரு பெரும் பகுதியை அடக்கி ஆண்ட பீடமது. பல லட்சக் கணக்கான மனிதர்களின் வாழ்க்கையை நிர்ணயித்த நாற்காலி அது. ஆனால், பொன்னால் செய்து நவ ரத்தினங்களால் இழைத்த சோழ சிம்மாசனத்தில் இன்று பூக்குடலைச் சிறுவனும் படகோட்டிப் பெண்ணும் வீற்றிருந்தது சரித்திரத்தில் ஒரு மாபெரும் திருப்பம் என்றுதான் கூற வேண்டும். அந்த அசாத்தியமான காரியத்தைச் செய்து விட்டது சோழர் குலம். சாமானியர்கள் இருவர்- படகோட்டிப் பெண்ணும் பூக்குடலைக் கையனும்- இன்று கரிகாலன் அமர்ந்திருந்த அரியணையின் மேல்.

நாளுக்கு நாள் விரிந்து பரந்து வரும் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சட்டம் இல்லை. ஆனால், பார்ப்பவருக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கும் அல்லவா? விரிந்த தோள்களும் வீரம் நிறைந்த முக பாவமும் ஆஜானுபாகுவான கட்டமைப்பும் இப்பதவியை வகிக்கும் அரசனிடம் இருக்கும் என்று எண்ணியபடியே நாம் உத்தம சோழரின் முன் சென்று நிற்கிறோம்.

ஆனால், அவர் அப்படியில்லையே. மாலை நேரத்துப் பூஜை செய்து விட்டு வந்திருப்பார் போலும். புன்னகை பொலிந்த முகத்துடன் தோற்றமளித்தார். தாம் தலையிலணிந்த மகுடத்து அருகே நெற்றியில் திருநீறு பூசியிருக்கிறார். அந்தக் கிரீடம் இல்லையென்றால் சாமானியன் போலவே தோன்றுவார். அவர் முகத்தில் சாந்தமும் அமைதியும் குடிகொண்டிருக்கிறது. எப்படிப் பட்ட சாந்தம்! வாழ்நாளில் ஒரு நாளும் ஒரு போர்க் களத்தைக் கூடப் பார்த்திராதவர் முகத்தில் மட்டும் திகழும் சாந்தமது.

வைர நெஞ்சமுள்ள ஒரு மகா சக்கரவர்த்தியைப் பெறப் போகிறோம் என்று இந்த நாடு காத்திருந்தபோது, ஒரு மாபெரும் சிவ பக்தன் அரியணை ஏறினான். அதனால் நாடு ஒன்றும் இழக்க வில்லை. சாந்தம் குடி கொண்ட முகம், கருணை வடிவான பேச்சு, போன்ற அரிய பண்புகளுடன் எதிரிக்கும் அன்பைச் செலுத்தி ஆட்சி புரிந்தார். அதனால் அமைதியும் ஆன்மீகமும் வளர்ந்து இந்த உலகுக்குச் சோழர்களின் மறு முகத்தையும் காட்டியது.

உத்தமர் சோழ சாம்ராஜ்யத்தை ஒரு நாளும் நீதிக்குப் புறம்பாக ஆட்சி செய்யாத செங்கோலுக்குச் சொந்தக்காரர். அவர் அருகில் இருந்தவர் அழகிலும் அறிவிலும் சிறந்த காதல் மனைவி பூங்குழலி

அம்மையார். அரசியார் இன்றும் திவ்விய ஆபரணங்கள் எதையும் அணியாதவர். ஏழ்மையில் வளர்ந்தவர். அது அவரைப் பாதித்த தில்லை. கடலில் படகு செலுத்திய காலங்களில் அவர் கூந்தலில் தாழம்பூவை மட்டும் ஆபரணமாய் அணிந்திருந்தார். அப்படி அணிந்ததனால் அம்மலருக்கு அழகைத் தந்த பெண்மணி அவர்.

ஆரம்ப காலத்தில் படகோட்டிப் பெண்ணாய் இருந்தபோது சக்கரவர்த்தினி பூங்குழலி அம்மையாருக்கும் பிரதமருக்கும் சதா சண்டை சச்சரவுதான். அநிருத்தர் கடந்த காலத்தில் பூங்குழலி அம்மையாரிடம் எவ்வளவு கடின சித்தராயிருந்தபோதிலும், இப்போது மிகவும் மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார். அரச குடும்பத்துக்கு அவர் தன்னலம் கருதாமல் செய்த நல்லவையே அவரை அரசியாக்கியிருந்தது என்று நம்பினார்.

இன்றும் அரசி அதே துடுக்கான பேச்சுடன்தான் அந்தக் கிழ அந்தணரிடம் பேசுவார். அவருடைய நன்மதிப்பைக் கவர வேண்டும் என்று தன் இயற்கைக் குணத்தை மாற்றிக் கொள்ளா தது பிரதமரின் மனதை மிகவும் கவர்ந்தது. சில ஆண்டுகளாகச் சோழ நாட்டில் பொய்யும் பகல் வேஷமும் மிகுந்திருந்தன. அரசியாரின் நேர்மையான போக்கு மாசு படிந்த இடத்தில் வீசிய இளந்தென்றல் போலிருந்தது.

அரசியார், "குருநாதரே! எல்லாம் பழையபடியே இருந்திருந் தால் நன்றாய் இருந்திருக்குமோ? உம்மைக் கண்ட போதெல்லாம் நான் சண்டை பிடிப்பதும், 'ஏ ஓடக்காரப் பெண்ணே' என்று நீர் என்னை மிரட்டுவதும்... எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!" என்றாள்.

அநிருத்தர் முகம் சுருங்கிற்று. ஓரிரு வார்த்தைகள் உதிர்த்து விட்டால் ஆண்கள் மனதை அறிந்து கொள்ளலாமே! பெண்களின் மனதை யாரால் அறிய முடியும்? அதுவும் தான் சந்தித்ததிலேயே மிகவும் ஆழமான மனமுடையவர் பூங்குழலி என்று அவர் நிச்சயம் செய்திருந்தார். அவர் படகோட்டிய கடலை விட அவர் ஆழமான வர். இப்போது பழையதைச் சொல்லிக் குத்திக் காட்டுகிறாரா என்று நினைத்தார்.

அவ்வளவு ஆழமானவர் அழுத்தமாகவும் இருப்பாரல்லவா? பிரதமரின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு அவரைச் சாந்தப் படுத்தும் முயற்சியில் அரசி ஈடுபட்டார்.

"தவறாக நினைக்க வேண்டாம், குருதேவா! இந்த உலகத்தி லேயே பூங்குழலி தேவிதான் அதிர்ஷ்டக்காரி என்று ஊரார் பேசிக் கொள்கிறார்கள். அரசரைத்தான் திருமணம் செய்து கொள்ள

வேண்டும் என்ற அவளுடைய மனோரதம் நிறைவேறிவிட்டது, என்று வேறு சொல்கிறார்களாம்."

"நானும் என் காதலரும் கோடிக்கரைக்குப் போய் அலை கடலில் படகு செலுத்தியும், குழகர் கோவிலில் சேவை செய்தும் ஆனந்த வாழ்க்கை நடத்தியிருக்கலாம். இங்கு வந்து மாட்டிக் கொண்டு விட்டோமா என்று நினைக்கிறேன். அதைத்தான் குறிப் பிட்டேன்" என்றார்.

சட்டெனப் பேச்சை மாற்றி, வந்த காரியத்தைச் சொன்னார் பிரதமர்.

"அரசே! உம்மைச் சந்திக்கப் பொன்னியின் செல்வர் நேரம் கேட்கிறார். என்னையும் வரச் சொல்கிறார். என்ன செய்யட்டும்?"

பூங்குழலி அம்மையாரே கள்ளக் கோபத்துடன் பதிலளித்தார்: "அப்படியெல்லாம் சும்மா வருவதற்கில்லை. இங்கு விருந்து உண்பதென்றால் மட்டும் வரச்சொல்லுங்கள். அதுவும், தம்பதி சமேதராகத் தான் வரவேண்டும். எங்களை ஏதோ அன்னியர் போல நடத்துகிறார் பொன்னியின் செல்வர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் போல நினைப்பதே இல்லை. நீங்களும் எங்களுடன் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும்" என்றார்.

"தாயே! நீங்கள் அழைத்ததற்கு நன்றி. ஆனால், எனக்குப் பூஜைகளும் உள்ளன. நீங்கள் விருந்தை உண்ணுங்கள். பின்பு நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்றார் பிரதமர்.

வெளியே வந்த பிரதமருக்கு ஒன்றும் புரியவில்லை. அரியணை எனக்கு, எனக்கு என்று இருவர் போராடிப் பார்த்திருந்தார். 'பல மிழந்து செயலிழந்து நோய்ப் படுக்கையில் படுத்திருக்கும் கிழட்டு மன்னன் எப்போது சாவான்? எப்படி நாம் ஆட்சியைப் பிடிக்க லாம்?' என்று காத்திருக்கும் இளவரசர்களைப் பார்த்திருந்தார். ஏன், வட பாரதத்தில் அண்ணன் தம்பிகளைக் குருடாக்கி அரியணைக்கு அருகதையில்லாதவராய் ஆக்கும் கொடிய மன்னர் களைப் பற்றிக் கூடக் கேள்விப் பட்டிருந்தார்.

ஆனால், அரியணைக்குப் பாத்தியதை கொண்டாடும் இருவர், 'எனக்கு வேண்டாம். அவருக்கே கொடுங்கள்!' என்று மறுத்ததை இதுவரை தன் நெடுங்கால அனுபவத்தில் பார்த்ததில்லை.

ஆனால், எதற்காக இந்த இருவரும் சந்திக்க வேண்டும் என அவருக்கு இன்னும் புரியவில்லை. இருவரும் விலகியிருந்தாலே நாடு நலமாய் இருக்குமே!



அத்தியாயம் நாற்பது

உத்தமரின் மனோரதம்

பொன்னியின் செல்வரும், வானதியும், அவர்கள் மகனும் மகளும், வல்லவராயனும், குந்தவையும் அரண்மனைக்கு விருந்துக்கு வந்திருந்தனர். விருந்தினர்களை ஆர்வத்துடன் வாசலில் வந்து வரவேற்றார் சக்கரவர்த்தி.

''என் அருமைப் பொன்னியின் செல்வரே!'' என்று வாயாரக் கூறிக்கொண்டே அருள்மொழி வர்மரைத் தழுவிக் கொண்டார்.

''வர வேண்டும் நண்பரே!'' என்று வந்தியத் தேவனையும் அணைத்துக் கொண்டார். பெண்களைப் பார்த்து, ''வாருங்கள், வாருங்கள்!'' என்று மனமுவந்து வரவேற்றார்.

சக்கரவர்த்தி உடலமைப்பில் சற்று மெலிந்தவர். வந்தவர்களோ ஆஜானுபாகுவான உடல் கொண்டவர்கள். அந்த வேற்றுமை பார்த்தவுடனேயே சுற்றியிருந்தவர்களுக்குப் புலப்பட்டது.

பூங்குழலி அம்மையாரும் வெளியே காத்திருந்தார். பெண்களும் முகமன் கூறினார்கள். நலம் விசாரித்தார்கள். வரவேற்பு வைபவங்கள் முடிந்த பின், அரண்மனைக்குள் எல்லாருமாக ஒன்றாய்ப் பிரவேசித்தார்கள்.

அந்த அறையில் வேலையாட்கள் யாருமில்லை. மிக நெருக்கமான உறவினர்கள் மட்டும்தான் என்பதால் பெண்கள் பரிமாற, ஆண்களும் குழந்தைகளும் முதலில் சாப்பிட அமர்ந்தார்கள்.

அனைவரும் அசைவ உணவு சாப்பிடும் போதும், சக்கரவர்த்தி முழுச் சைவம் என்பதால், பரிமாறப்படும் உணவும் சைவமாகவே இருந்தது.

இலைக்கு முன் மன்னரும் வல்லவராயரும் அமர்ந்து இருக்க, பூங்குழலி அம்மையார் பரிமாறிக் கொண்டிருந்தார். குந்தவையோ, உணவுத் தட்டுகளை அவருக்கு எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது, ஒரு குவளை சாய்ந்து அதிலிருந்து தண்ணீர் காவிரி போலப் பாய்ந்து சென்றது. தன்மீது அது பட்டுவிடாமல் பூங்குழலி தன் காலைச் சட்டென அகற்றிக்கொண்டார்.

உடனே அருள்மொழி வர்மர் நகைத்தார்.

''இளவரசரே, ஏன் நகைக்கிறீர்?'' என்றார் சக்கரவர்த்தினி.

''நாங்கள் ஆண்கள். எங்களுக்கு ஒரே நகை புன்னகைதான். தங்களைப் போலத் தங்க நகைகள் அணிய முடியாது'' என்றார் அருள்மொழி வர்மர் -அந்தப் புன்னகை அவர் இதழ்களை விட்டு அகலாமல்.

''ஏன் நகைத்தீர் என்றல்லவா அரசியார் கேட்டார்?'' இம்முறை குந்தவை கேட்டார்.

''இல்லை, ஒரு காலத்தில் அரசியாரைச் சமுத்திர குமாரி என்று நான்அழைப்பதுண்டு. இன்று இந்தத் தண்ணீரைக் கண்டு அலறுகிறாரே என்று சிரித்தேன்!''

பூங்குழலியின் முகம் நாணத்தில் சிவந்தது. இவ்வளவு நாட்களுக்குப் பின் அதை ஞாபகப் படுத்துகிறார். ஆனால், அவரும் இந்த வாதத்தில் தோற்பதாக இல்லை.

''அப்படிக் கூறிக்கொண்டே இப்போது நீங்கள்தான் சமுத்திர ராஜனாகி விட்டீர்கள். போதாததற்கு நம் வீட்டு மாப்பிள்ளையையும் அழைத்துச் சென்று நீரில் நனைய விடுகிறீர்கள்!'' என்று வந்தியத் தேவனைப் பார்த்து ஒரு போடு போட்டார். ''அவருக்குத் தண்ணீர் என்றாலே மிகவும் பயம்!''

பெண்கள் கலீர் என்று சிரித்தார்கள்.

அங்கு இங்கு சுற்றி கடைசியாகத் தன் தலையில் கை வைத்து விட்டார்களே என உணர்ந்து வந்தியத் தேவன் விழித்தான்.

அரசியார், ''நான் கடலைப் பார்த்துப் பல நாட்களாகின்றன'' என்று கூறி மௌனமானார். அவரது கண்கள் கனவு காண்பது போலிருந்தன. அவர் கோடிக்கரையை நினைக்கிறார் என்பதை அங்கிருந்தவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

உடனே அவசரமாக மன்னர் பேச்சை மாற்றினார். ''மாப்பிள்ளை சோழ நாட்டின் பிரதானப் பாதாள நிலவறையின் கட்டுக் காவலை உடைத்துக்கொண்டு சென்றவர் அல்லவா? அதனால் தான் அவரை இங்கு நிரந்தரமாகக் கட்டிப் போட்டேன்'' என்று கூறிக் குந்தவையை அரைக் கண்ணால் பார்த்தார்.

குந்தவையோ, ''அரசே! உமது கட்டைப் பற்றி நீங்கள்தான் மெச்சிக் கொள்ள வேண்டும். அவர் வருடத்தில் எத்தனை நாட்கள் நாட்டில் இருக்கிறார் என்ற கணக்கைச் சொன்னால் வியப்பீர். அவரைப் பேசாமல் நிலவறையிலேயே விட்டிருந்திருக்கலாம்'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

தன் பழைய ஞாபகங்களிலிருந்து விடுபட்டு வந்த சக்கரவர்த்திக்கு ஏதோ அடக்க முடியாத சிரிப்பு. ''என்ன சிரிக்கிறாய்.

பூங்குழலி?'' என்றார் சக்கரவர்த்தி. மெல்லிய குரலில், ''எங்களிடமும் சொல்லிவிட்டுச் சிரி'' என்றார்.

இருவரும் மிக ஏழ்மையாக இளமையைக் கழித்தவர்கள். சக்கரவர்த்தி ஒரு பூக்குடலைப் பையனாகச் சிவன் கோயிலுக்கு இறை பணி செய்து கொண்டிருந்தார். பூங்குழலியோ கோடிக்கரையில் படகு வலித்துக் கொண்டிருந்தாள். உயர் பதவியும் மாளிகை வாழ்வும் அவர்களது போக்கைச் சற்றும் மாற்றவில்லை என்பது தான் உண்மை.

''ஒன்றும் இல்லை, அத்தான்! நான் நம் வீட்டு மாப்பிள்ளையை முதலில் சந்தித்ததை நினைவு கூர்ந்தேன். சிரிப்பு வந்தது.''

''அப்படி என்னதான் நடந்தது?'' என்றார் சக்கரவர்த்தி, ஆர்வமாக. வந்தியத் தேவன் மீது அவருக்கு இன்னும் பிரியம் அதிகம்.

முதன் முதல் பூங்குழலி வல்லவராயரைப் பார்த்தபோது, அவன் ஆந்தை போல இருக்கிறான் எனக் கேலி வார்த்தை கூறிவிட்டார். அது இன்றுவரை வல்லவரயாரின் மனதை உறுத்தும். தன் அழகின் மீது அவனுக்கு அப்படி ஒரு நம்பிக்கை.

வந்தியத் தேவனைத் திடீரென்று திகில் பற்றிக் கொண்டது. அவன் நெஞ்சப் படபடப்பு அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று. ''ஆந்தை'' எனும் வார்த்தை சபையில் உச்சரிக்கப்பட்டவுடன், எச்சில் கையென்றாலும் பரவாயில்லை, வெளியே ஓடிவிடுவது என வந்தியத் தேவன் முடிவு செய்திருந்தான். ஆனால், பூங்குழலியோ அதை மனதில் எண்ணிக்கொண்டு மற்றும் ஒரு சம்பவத்தைக் கூறினார்.

''அவரைச் சந்தித்த நாளிலே, புதை மண்ணிலிருந்து நான்தான் காப்பாற்றினேன்'' என்றார்.

வந்தியத் தேவனுக்கு அரசியை முதலில் சந்தித்த வேளை நினைவுக்கு வந்தது. தன்னை அறியாமல் ஒரு நடுக்கம் அவன் உடம்பைக் குலுக்கியது. முடிவில்லாது பரந்திருந்த இருளில் பல நெருப்புப் பிண்டங்கள் பூமியிலிருந்து எப்படியோ எழுந்து நின்றன. திடீரென்று அவற்றில் சில பிண்டங்கள் மறைந்தன. வேறு சில தீப்பிண்டங்கள் புதிதாக எழுந்து நின்றன. கரிய இருள் நிறங் கொண்ட ராட்சதன், வயிற்றிலேயே வாய்கொண்ட ராட்சதன் ஒருவனைப் பார்ப்பது போலிருந்தது. வயிற்றிலிருந்த தீயின் ஜ்வாலை வாய் வழியாக வெளியே வந்தது. வாயை மூடும் போது அது மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்டவனுடைய ஒவ்வொரு ரோமக்கால் வழியாகவும் அவனுடைய உடம்பின் ரத்தம் கசிவது போலிருந்தது. அப்படிப்பட்ட பீதி அவனை என்றைக்கும் ஆட்கொண்டதில்லை.

''இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகள்தான் என் காதலர்கள். இவர்களைப் பார்த்துச் சல்லாபம் செய்வதற்குத்தான் நள்ளிரவில் இந்த இடத்துக்கு நான் வருகிறேன்'' என்றாள் இன்று சக்கரவர்த்தினியாய் இருந்த பூங்குழலி. ஆனால், அவன் அன்று அவளைச் சுத்தப் பைத்தியம் என்றுதான் நினைத்தான்.

''புதை மண்ணிலிருந்து காப்பாற்றினாயா? நீயுமா?'' என்றார், சக்கரவர்த்தி. ''என்ன ஒற்றுமை! நானும் முதலில் இவரைச் சந்தித்த நாள் இவரைப் பழுவேட்டரையரின் வீரர்களிடமிருந்து காப்பாற்றினேன்!''

வந்தியத் தேவன் பொறுத்தது போதுமென்று நினைத்தான். பேச்செல்லாம் அவனைச் சுற்றியேயிருந்தது. இந்தப் பேச்சை இப்போது நிறுத்தாவிட்டால் பல விஷயங்கள் வெளிவரும் என்று பயந்த வந்தியத் தேவன், ''அந்த இரட்டிப்பு நன்றிக் கடனுக்காகத் தான் உங்கள் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன்'' என்று ஒரு போடு போட்டான்.

அனைவரும் இளையபிரட்டி நிற்கும் திசைக்குத் திரும்பினர். குந்தவையின் முகத்தில் தோன்றிய பொய்க் கோபத்தைக் கண்டு அனைவரும் சிரித்தார்கள்.

உலகிலுள்ள மன்னாதி மன்னர்கள் எல்லாரும் குந்தவையின் கைப்பிடிக்க ஒரு காலத்தில் தவம் கிடந்தார்கள். ஆனால், அத்தகைய இளைய பிராட்டி விரும்பியது வல்லத்து இளவரசரைத் தான்.

குந்தவையும் கிண்டல் பேச்சில் சளைத்தவரல்லவே. அவரும் பேசினார்.

''இவர் சொல்லும் காரணத்தை நீங்கள்தான் மெச்ச வேண்டும். அவர் என் தம்பியுடன் வெகு சமீபத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சதி செய்து என் கைப்பிடித்தாரோ என இப்போது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. என் கையை அவர் பிடித்ததே அவனுடன் உறவினராய் மீதி வாழ்க்கையை நடத்துவதற்குத் தானோ என்னவோ?''

''அப்படி எல்லாம் நினைக்காதீர்கள்'' என்றார் பூங்குழலி. ''வல்லத்து ராணியைப் பாராத ஒவ்வொரு கணமும் அவருக்கு ஒரு யுகமாக இருக்கிறதாம்!'' என்று கேலி செய்தார்.

"அந்தக் கொடுமையை எங்கே சொல்ல. எந்த நாட்டுக்கு நான் அரசியோ அந்த வல்லத்து நாட்டை நான் இன்னும் பார்த்ததுகூட இல்லை!" என்று புலம்பினாள், குந்தவை.

வந்தியத் தேவன் தன் தர்ம பத்தினியிடம் திரும்பி, "கோமகளே! மன்னிக்க வேண்டும். தங்களை விட்டு ஒரு கணமும் பிரியவே கூடாது என்று நினைத்துத் தான் உங்களைத் திருமணம் முடித்தேன்" என்று கூறிப் பொன்னியின் செல்வரை நோக்கி, "தங்கள் தமக்கையார் எனக்குக் கட்டளை இட்டிருக்கிறார்கள். இனிப் பாதி நாளாவது பூமாதேவியின் மீது நான் சஞ்சரிக்க வேண்டுமாம்!" என்றான்.

விருந்தெல்லாம் முடிந்த பிறகு தாம்பூலத் தட்டு வைக்கப் பட்டது. அரசர் செய்து கொண்டிருந்த மழபாடிச் சிவன் கோயில் திருப்பணியைப் பற்றிக் கேட்டார்கள் விருந்தினர்கள். அவர் முகம் மலர்ந்ததிலிருந்து அந்தத் திருப்பணியை எவ்வளவு ஆர்வத்துடன் செய்து வருகிறார் என்று அனைவருக்கும் தெரிந்தது.

"பொன்னியின் செல்வா! ஒரு காலத்தில் தஞ்சை நகர்ப்புறத்தி லுள்ள அழகான பூந்தோட்டத்தின் மத்தியில் என் குடிசை இருந்தது. அதில் என் அன்னையும் நானுந்தான் வசித்தோம். பொழுது விடிந்ததும் எழுந்திருந்து, எங்கள் வீட்டைச் சுற்றியுள்ள கொடிகளிலும், மரங்களிலும் குலுங்கும் மலர்களை இருவரும் சேர்ந்து பறித்து, பின் சித்திர விசித்திரமான மாலைகளாகக் கட்டு வோம். மாலைகளை நான் தஞ்சைத் தளிக்குளத்தார் ஆலயத்துக் கும், துர்கா பரமேசுவரியின் ஆலயத்துக்கும் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருவேன். மாலை நேரங்களில் தாமரைக் குளத்தில் தண்ணீர் மொண்டு கொண்டு போய்ப் பூச்செடிகளுக்கு ஊற்றுவோம். அந்தத் திருப்பணியெல்லாம் ஒரு எதிர்பார்ப்பும் அற்றது. அந்தச் சேவையினால் நெற்றிக் கண் படைத்த சிவபெரு மான் என் முன்னால் பிரத்தியட்சமாகிவருவார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனால், ஒரு நல்ல சிவ பக்தனாகச் சிவலோகத் தில் என் பெயரிலிருக்கும் ஏட்டில் எழுதப்பட வேண்டும் என்பதே என் குறிக்கோள். ஆனால், என் மனதுக்குள் ஒரு ஏக்கம். இதை விட இறைவனுக்கு என்னால் ஒரு திருப்பணியும் செய்ய முடிய வில்லையே என்று" என்றார், சக்கரவர்த்தி.

சிறுபிள்ளைப் பிராயம் முதல் இறைவனுக்கும் இறைவிக்கும் மலர் மாலை தொடுத்துச் சேவை செய்து கொண்டிருந்தார் மன்னர் பெருமான். அதை விட மேலான சேவை ஒன்றும் செய்ய முடிய வில்லை என்று மனதுக்குள் குமுறி ஏங்கிக் கொண்டிருந்தவருக்கு அரசாட்சி கிடைத்தவுடன், ஊரெங்கும் சிவத்தொண்டில் இறங்கி

விட்டார். பழைய கோயில்கள் அனைத்தும் சீரமைக்கப்பட்டன. புதிய கோயில்கள் கட்டப்பட்டன. செங்கற் கோயில்கள் கற்றளி களாக மாற்றப்பட்டன.

"அப்பர் பெருமான், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி அடிகளின் பாதங்கள் பட்டுப் புனிதமாகி, அவர்களுடைய பதிகங்கள் பெற்றுத் தெய்வீகமடைந்த ஸ்தலங்களில் எல்லாம் வானளாவிய விமானக் கோபுரங்களுடன் கற்றளிகளை எடுக்க வேண்டும். இதுதான் என் மனோரதம். அதையே என் வாழ்க்கைக் குறிக் கோளாகக் கொள்கிறேன்."

அதுடன் நெடு நாட்களாக இந்த இரு வீரர்களிடம் பேச வேண்டும் என்று நினைத்ததை இன்று மன்னர் கூறினார்: "நீங்கள் போரில் நம் முன்னோர்கள் செயலாற்றிய செயல்களின் பழைய குலப் பெருமையைக் கூறிச் சிறப்படைந்து கொள்ளலாம். சூரிய குலத்தில் தோன்றியவர்கள் என்றும், அணை கட்டிய கரிகால வளவன் வம்சத்தினர் என்றும், வலிமையில் வீரனாம் விஜயாலயச் சோழரின் பேரரின் பேரர் என்றும், நீதிக்குத் தன் தசையை வெட்டிக் கொடுத்த சிபியின் வம்சம் என்றும் பெருமை அடித்துக் கொள்ளும்போது, கோச்செங்கட் சோழனின் பரம்பரையில் வந்தவர்கள் நாம் என்பதை மறந்துவிடக் கூடாது."

அரசர் தான் வந்த குலத்தில் பிறந்த கோச்செங்கண்ணரைப் பற்றிக் கூறலானார். "பழங்காலத்தில் சோழச் சக்கரவர்த்தினி கர்ப்பமாய் இருந்தார். குழந்தை பிறக்கும் நேரமும் வந்தது. அப்போது பஞ்சாங்கத்தைக் கவனித்த அரசவை ஜோதிடர், 'ஆகா! இன்று மாலைக்கு மேல் குழந்தை பிறந்தால் மாபெரும் சிவ பக்தனாய் அல்லவா வருவான்!' என்று கூறுவதைக் கேட்டு விட்டார் அரசி. சிறிதும் தயக்கமின்றித் தன்னைத் தலை கீழாக உத்தரத்திலிருந்து தொங்க விடச் சொன்னார். குழந்தையின் பிறப்பும் மாலைக்கு மேல் தள்ளிப்போக, அந்தப் புனித அரசியும் மாண்டு போனார். அவ்விதம் சிவத் தொண்டையே மேன்மை யாய்க் கொண்டு வாழ்ந்த குடும்பம் நம்முடையது" என்றார் அரசர்.

அந்தக் கதையை எவ்வளவு முறை கேட்டாலும் கண்ணில் நீர் வந்துவிடும். பெண்கள் மூவரின் மனங்களும் அந்தப் பெயர் தெரியாத அரசியின் தியாகத்தை எண்ணிப் பிரமித்திருந்தன. அவளது சந்ததியில் பிறந்ததற்குப் பெருமைப்பட்டார்கள்.

பொன்னியின் செல்வர் மௌனத்தைக் கலைத்தார். அரசர் கூறியதற்கு மறுமொழி சொன்னார். "அரசர்க்கரசே! நீர்

சொல்வதை முழு மனதுடன் ஒப்புக் கொள்கிறோம். கோச் செங்கண்ணார் செய்த இறைச் சேவை எந்த ஊருக்குச் சென்றாலும் தெரிகிறதே. நாடெங்கும் மாடக்கோயில்களைக் கட்டி நமது குலத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார். ஆனால், நாம் மட்டும் நல்லவராய் இருந்தால் போதாதல்லவா? நம்மைச் சுற்றியிருப்பவரும் அதற்கு ஏற்றாற் போலிருக்க வேண்டுமல்லவா? நாம் செய்த திருப்பணிகளைப் பல காலம் கட்டிக் காக்க வேண்டிய அவசியமும் நமக்கு இருக்கிறதல்லவா?'' என்றார்.

அரசர் தொடர்ந்தார்: ''நான் வீரத்தைக் குறை கூறவில்லை, பொன்னியின் செல்வரே. உங்கள் வீரமானது மெச்சத்தக்கது. அதன் புகழானது நெடுந்தூரம் பரவித் தூர தேசத்தவர் காதுகள் வரை எட்டியுள்ளது. ஆனால், உங்களை விட ஒருவர், ஏன், இங்கு அமர்ந்திருக்கிறாரே, உமது மாப்பிள்ளை வல்லவராயர், உங்களை விட வீரச் செயல்களைப் புரிந்தாரென்றால் அவரைப் பற்றியே காவியங்கள் எழுதத் தொடங்கி விடுவார்கள் புலவர் கூட்டம். நீங்கள் கைப்பற்றும் பிரதேசங்கள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளில் பல கை மாறி உங்கள் பெயரைச் சொல்லுமோ-சொல்லாதோ? எனது சேவை அப்படியில்லை. மனதில் கோயில் கட்டிய பூசலருக்கே- கல்லில் கோயில் கட்டிய பல்லவனை விட - அதிக மதிப்புக் கொடுத்தார், நமது சிவபெருமான்.''

சக்கரவர்த்தி அரசுரிமையைக் காட்டிலும் இறைச்சேவையில் ஊறிய அமைதியான வாழ்க்கையே சிறந்ததென்று தனக்குப் பாத்தியமான சோழரின் செங்கோலைக் கையில் ஏந்த மறுத்தார். அரண்மனை வாழ்க்கையை விடவும் அரச போகத்தை விடவும் கடவுளுக்கு அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கை கோடி மடங்கு சிறந்தது என்று எண்ணினர். ஆனால், தான் விலக நினைத்தாலும், தன்னைத் துரத்தி வரும் அரியணையைப் பார்த்து ஒன்று தீர்மானித்தார்.

சிவஞானச் செல்வரின் சகவாசத்திலும், புண்ணிய ஸ்தல யாத்திரையிலும் ஆலய வழிபாட்டிலும் ஈடுபட நினைத்த தனக்குச் சிவ பிரான் வேறொரு முக்கியமான வேலை வைத்திருந்தார் என்று புரிந்து கொண்டார். ஒரு அரசனாய் இருந்து நாடெங்கும் அமைதியையும் ஆன்மீகத்தையும் வளர்க்க முடிவெடுத்து, தன் நாட்டில் போர்க் களத்தில் மோதும் வாட்களின் ஒலியை விட, ஆலயத் திருப்பணியில் உளிகள் கல்லின் மீது எழுப்பும் சப்தத்தையே கேட்க விரும்பினார்.

உத்தம சோழர் போருக்குச் சென்றதில்லை. வீர சாகசங்கள் புரிந்ததில்லை. ஆனால், மன்னருக்கு ஒன்று மட்டும் நன்றாய்த் தெரியும். போர் என்பது ஒரு வாய்க்கு இருபது முப்பது மனிதர்கள் என விழுங்கக் கூடிய மிருகம். விழுங்கும்போது ஒரு சிரமமும் அனுபவிக்காமல், அதன் குடல்கள் ஒரு ஏப்பமுமின்றி ஜீரணிக்கும் சக்தி கொண்ட மிருகம். எப்போதும் பசி பசி என்று நித்ய வேட்டையில் இருக்கும் மிருகம். போரென்பது, ஊரின் வெளிப்புறத்தில் வாழ்ந்து கொண்டு தினம் தினம் உண்ண இருபது ஆட்களைக் கேட்கும் பூதத்தைப் போன்றது.

அரசர் தொடர்ந்தார்: ''போர்க்களத்தில் அடைந்த வீர மரணத்தின் புகழை மிஞ்சி ஒரு வீரனுக்கு ஏதுமில்லை என்று நாம் பறை சாற்றுகிறோம். வெள்ளைத் துணியில் சுற்றிய எவ்வளவு உடலங்கள் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டு பிறந்த ஊரில் அடக்கத்துக்காக எடுத்து வரப் பார்த்திருக்கிறோம்? அவனது குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லவே, அவன் சொர்க்கம் சென்றான் என்று நினைக்கிறோம். தீரம் நிறைந்தவர்களுக்கு வீர சொர்க்கம் இருக்கிறது என்பதை எல்லாம் நான் நம்பவில்லை. சாகும் தறுவாயில் ஒவ்வொரு வீரனும் அதை அறிந்து வருத்தப்படுவான் என்றே எண்ணுகிறேன். அவ்வளவு பேரையும் யுத்தகளத்தில் பலி கொடுத்துவிட்டு, அவர்கள் இறந்த செய்தி வந்தபோதெல்லாம் ஒப்பாரி வைக்கும் நாட்டை நான் ஆள விரும்பவில்லை. பிள்ளைகள் பிறந்தவுடன் பீமனையும், அர்ச்சுனனையும் போன்ற வீரர்களாய் வளர்க்க வேண்டுமென்றே நினைக்கிறது இந்த நாடு. ஒருவனுக்கு என்றுமே வெற்றி கிட்டாது. இந்தப் பக்கம் அடிக்கும் காற்று அந்தப் பக்கமும் அடிக்குமல்லவா?'' என வினவினார்.

''மன்னர்களின் மண்ணாசையினால் இரத்த வெள்ளம் வீதிகளில் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஒரு நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய சிறந்த இளைஞர்கள் போரிட்டு வீணாய் மடிவானேன் என்று தினமும் கேட்டுக் கொள்வேன். சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை, பேரிகை, எக்காளம் முதலிய வாத்தியங்களின் பேரொலி இந்த நாட்டில் கேட்டு எத்தனை நாள் ஆகிறது என வருத்தப்படும் மக்களும் உண்டு. போரில் தோல்வி யுற்றுப் பல நாட்களானதால் நாம் யுத்தத்தின் கொடூரங்களை மறந்து விட்டோம்.''

''போரினால் கைம்மைக் கோலம் பூண்ட பெண்கள் ஏராளம். அநாதையாகி விட்ட குழந்தைகள் ஏராளம். நாம் என்னதான் உதவி செய்தாலும் அவர்களுக்குக் கணவன் அல்லது தந்தைக்கு

ஈடாக முடியுமா? அவர்களது வீரத்தையும் வீர மரணத்தையும் வெகுவாகப் பாராட்டிவிட்டு, முடிந்தால் அவர் வீழ்ந்த இடத்தில் ஒரு கல்லை நட்டுவிட்டு நாம் வந்து விடுவோம்.''

''வீரர்களின் வழியில் அவர்களைத் தடையின்றி விட்டு விட்டால் உலகில் உள்ள எல்லா நாடுகளும் பிணக் காடாகவும் சுடுகாடாகவும் மாறிவிடும். அமைதியுள்ள நாடாய் இருந்தால் தான் சிவபக்தனாகிய நான் ஆட்சி புரிவதற்குச் சோழ நாடு தகுந்த இராஜ்யமாயிருக்கும். ஒரு நாள் வரும். யுத்தம் என்ற வார்த்தையே ஒரு தீயசொல்லாகக் கருதப்படும் நாள் வரும். அது என் ஆட்சியில் வர வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்'' என்று பேசிக் கொண்டே போனார்.

மற்றவர்கள் இன்னமும் மௌனம் காத்தார்கள்.

அரசர், ''உங்கள் வீர தீரச் செயல்களில் பலவற்றை உலகம் மறப்பது உறுதி. ஆனால், நாம் கட்டும் கோயில்கள் நம்மைப் பற்றியும் நமது உயர்ந்த கலை கலாசாரத்தைப் பற்றியும் உலகுக்குப் பறை சாற்றிக் கொண்டேயிருக்கும். நான் சொல்வதைக் கேட்கும் மனோ நிலையில் நீங்கள் இருவரும் இல்லை. ஆனால், உங்களுக்கு ஆன்மீகத்தில் நாட்டம் இல்லை என்பதை நான் நம்பவில்லை. மனிதனாய்ப் பிறந்தீர். சிவத்தொண்டுக்குப் பெயர் போன குலத்தில் பிறந்தீர்கள். அருள்மொழி வர்மரே! நன்றாய்க் கேளுங்கள். ஒரு நாள் என் வழிக்கு நீரும் வருவீர்'' என்றபோது எல்லாரும் சிரித்தனர்.

''நீங்களும் ஒரு நாள் கோயில்கள் பல கட்ட வேண்டும் என்று எம்பெருமானை வேண்டுகிறேன். அதுவும் பெரிய பெரிய கோயில்களாக அவை இருக்க வேண்டுமெனப் பிரார்த்தனை செய்கிறேன். நான் கட்டும் கோயில்களை விட ஒரு பெரிய கோயிலைக் கல்லினால் கட்டி உலகம் உள்ளவரை புகழ்பெறுவீர். அதற்கு நான் வழிபடும் மழபாடி வஜ்ரநாதரை வேண்டுகிறேன். அதற்காக நான் அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து வருவேன்!'' என்றார் அரசர்.

பொன்னியின் செல்வர் இளநகையுடன், ''மன்னா! அப்படி பெரிய கோயிலெல்லாம் கட்ட எனக்குப் பொறுமை இல்லை. ஒரு சிறிய கோயில் கட்ட உங்கள் அனுமதி நாடவே இங்கு வந்தேன்'' என்றார்.

சக்கரவர்த்தியின் முகம் காலைக் கதிரவனைக் கண்ட தாமரை மலராக மலர்ந்தது. கோயில்கள் கட்டப்படுவதிலும் பழைய கோயில்கள் சீரமைக்கப்படுவதிலும் அவருக்கு இருந்த ஆர்வமும் மட்டற்ற மகிழ்ச்சியும் நாடறிந்தது.

''சிவபெருமான் வேண்டுதலுக்குச் செவி சாய்ப்பாரெனக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், இவ்வளவு அதிவேகமாகப் அருள் பாலிப்பாரென இன்றே காண்கிறேன்'' என்றார் மன்னர்.



அத்தியாயம் நாற்பத்தொன்று

எதிர்பாராத எதிர்ப்பு!

''என்ன, என் பெரியன்னைக்கு ஒரு கோயிலா!''

தன் ஆஸ்தான பீடத்தில் அமர்ந்திருந்த அரசர் எழுந்தே நின்று விட்டார். அரசரின் முகக் குறி இந்த ஆலோசனைக்கு வரவேற்பு அளிப்பதாக இல்லை என்பதை அனைவரும் உடனே அறிந்தார்கள். ஆன்மீகத்திலும் ஆகமத்திலும் எதையும் முறையோடு செய்வதில் அவர் பிடிவாதமுள்ளவரென மற்றவர்களுக்குத் தெரியும்.

சற்று முன் கோயில் கட்டும் மரபைச் சோழர்கள் எப்படியெல்லாம் காலம் காலமாகக் கடைப்பிடித்து வந்தார்கள் என்று சக்கரவர்த்தி பொன்னியின் செல்வருக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். அதற்கு மறுமொழியாகப் பொன்னியின் செல்வரோ தானும் ஒரு கோயில் கட்டவேண்டும் என்று உத்தரவு கேட்க, மன்னருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஆனால், அவசரப்பட்டு அக மகிழ்ந்து விட்டார் உத்தம சோழர். அதற்குப் பரிசாகத்தான் இந்த அதிர்ச்சி.

''நான் என் அன்னையாய்க் கருதும் ஊமை ராணிக்கு ஒரு கோயில் கட்ட வேண்டும். இதற்குச் சம்மதமாயிருந்தால் சொல்லுங்கள்'' என்று பொன்னியின் செல்வர் விண்ணப்பித்திருந்தார்.

பொன்னியின் செல்வர் கேட்டதைப் பற்றிச் சிந்தனையில் ஆழ்ந்தார் அரசர். அவர் ஆழ்ந்த யோசனையிலிருந்ததால் பொன்னியின் செல்வர் தன் தரப்பு வாதத்தை முன் வைக்க நினைத்தும், முடியவில்லை.

மன்னர் மௌனம் காத்த நேரத்தில் நாட்டின் பிரதமர் மூச்சிரைக்க ஓடோடி வந்தார். அநிருத்தர் தன் பூஜை புனஸ்காரங்களை முடித்து விட்டார் என்பதற்கு அறிகுறியாக நெற்றி யெங்கும் திருநீறு பூசியிருந்தார். வைணவ மரபில்

தோன்றிய பிரம்மராயர் தன் ஆசைப்படியே சிவ பக்தியில் மூழ்கியிருப்பது அவரது சிஷ்யனான ஆழ்வார்க்கடியானுக்குச் சற்றும் பிடிக்காது. எனினும் சிஷ்யனிடம் பல காரணங்களைச் சொல்லிச் சமாளித்து விடுவார்.

அரசர் அதுவரை உட்கார்ந்திருந்த பீடத்திலிருந்து எழுந்து நின்றார். சரியான நேரத்துக்குப் பிரதமர் வந்துவிட்டார் என்று நினைத்தார். அரசர் எழுந்தவுடன் அனைவரும் எழுந்தார்கள்.

தாமதமாக வந்துவிட்டோமா என்ற பயத்தில் அரக்கப் பரக்க ஓடியே வந்தார், அந்த முதுமை எய்திய அந்தணர்.

பிரதமர் வந்தபோது அறையிலிருந்த அனைவரது முகமும் பேயறைந்தாற் போலாகியிருந்தது. உண்மையில் பொன்னியின் செல்வர் இந்தப் பேச்சை எடுக்கப் போகிறாரென்று அவருடன் விருந்துக்கு வந்த மனைவி, தமக்கைக்கும், வல்லவராயருக்கும் கூடத் தெரியாது. அவர்கள் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தார்கள்.

பிரதமருக்குப் பொன்னியின் செல்வர் எதற்காக அரசருடன் சந்திப்பை விரும்பினாரோ, அதைப் பற்றிய பேச்சை எடுத்து விட்டாரென்று தெரிந்து விட்டது. தன் தாமதத்துக்கு விலையென்ன என்று யோசித்தார்.

பிரதமர் தாமதமாக வந்ததற்கு முதல் முறையாகக் கோபப்பட்டார், மன்னர். சற்று நேரத்தில் ஒரு முடிவெடுக்க முடியாமல் தத்தளித்துப் போய் விட்டாரல்லவா? இப்போதாவது அவரிடம் விவரத்தைச் சொல்லிவிட நினைத்தார்.

''பிரம்மராயரே! பொன்னியின் செல்வர் கோயில் ஒன்று கட்ட நினைக்கிறார்'' என்றார்.

பிரதமர் அநிருத்தர் பெருமூச்சு விட்டார். ''இவ்வளவுதானா?'' என்று முதலில் நினைத்தார். பின் அவர் அனுபவம் நிறைந்த மூளையில் ஒரு மாற்று யோசனை. 'இல்லை, இருக்காது. அப்படி என்றால் இவ்வளவு பேர்களின் முகங்களும் பேயறைந்தாற் போலிராதே.'

பிரதமரின் குழப்பத்தைக் கண்ட அரசர் அதைத் தெளிவுபடுத்தி, ''அவர் கோயில் கட்ட எண்ணுவது மந்தாகினி அம்மையார் என்ற பெண்ணுக்கு. அவளைத்தான் உமக்கு நன்கு தெரியுமே. இலங்கைக்கும் பரத கண்டத்துக்கும் இடையே ஜனசஞ்சாரமில்லாத் தீவுகளில் வசித்து வந்த ஊமைப் பெண்.''

ஒரு நடுக்கம் பிரதமரின் உடலை முழுவதுமாய் உலுக்கியது. 'செத்தும் ஊமைச்சி நம்மை விட மாட்டாள் போலிருக்கிறதே!'

என்று நினைத்தார் பிரதமர். தன் நீண்ட நாள் அரச சேவையில் நாட்டுக்கும் மனித குலத்துக்கும் நல்லதையே செய்து வந்தவர் அவர். ஆனால், வெகு சில சந்தர்ப்பங்களில் எது நேர்மையானது, எது நேர்மைக்குப் புறம்பானது என்று அவருக்கே தெரியாது. ஒரு மெல்லிய கோடே அவை இரண்டையும் பிரிக்கும். அவை இரண்டில் எதைச் செய்தாலும் மற்றொன்றைச் செய்யவில்லையே என்ற குற்ற உணர்வு மனதை அரிக்கும்.

பிரதமருக்கு நேர்ந்த அப்படியொரு சம்பவம் அந்த ஊமை ராணியைப் பற்றியதே. அந்த ஊனமுற்ற பெண்ணை அவளுடைய ஆசைக் காதலரான சுந்தர சோழரிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்த பாவத்தைக் கொட்டிக் கொண்டவர், அநிருத்தரே.

பிரதமர் மௌனம் காத்ததைக் கண்ட அரசர் தொடர்ந்தார்: ''இங்கு கூடியுள்ளவர்கள் என்னைத் தவறாக நினைக்கக் கூடாது. குழந்தைப் பிராயம் முதல் சிவனையே வழிபட்ட எனக்கு இது கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. சுற்றி வளைக்காமல் சொல்லி விடுகிறேன். இதில் எனக்கு விருப்பமில்லை. எனக்குத் தெரிந்தவரை ஆகம சாஸ்திரத்திலும் இந்து மதத்திலும் பூமியில் வாழ்ந்தவர்களுக்குக் கோயில் அமைக்க அனுமதியில்லை. சமயக்குரவர்கள் நால்வரும் சைவத்துக்கு எவ்வளவு செய்தார்கள்! அவர்களுக்குக் கூட மடங்கள்தான் நிறுவியிருக்கிறோம். கோயில்கள் அல்லவே.''

''உங்களைப் போல எனக்கும் அந்த அம்மையாரின் மேல் மிகுந்த பக்தி யுள்ளது. என்னை வளர்த்து ஆளாக்கிய அன்னை இன்றும் கோட்டைக்கு வெளியே தன் வாழ்க்கையை அமைதியாய் நடத்துகிறார். அவரது தமக்கையேதான் இந்த ஊமை ராணி. இங்கு அமர்ந்திருக்கிறாரே என் ஆசை மனைவி. இங்கு கூடியுள்ளவர்கள் அனைவரிலும் இவருக்கு மட்டுமே ஊமைராணியுடன் ரத்த சம்பந்தம் உள்ளது. இவரது அத்தையே அந்த மாதரசி.''

''மந்தாகினி அம்மையார் எனக்கும் நெருக்கமானவரே. அவருக்கு ஒரு கோயில் எழுப்ப எனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால், ஒரு தேசத்தைப் பரிபாலிப்பவனுக்குப் பல விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும். முக்கியமாகப் பிரஜைகளின் மனோபாவங்களை அவ்வப்போது தெரிந்து கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். நான் ஒரு தனி மனிதனாய் இருந்திருந்தால் இதைச் செய்திருக்கலாம். ஆனால், இப்போது நமக்கெல்லாம் வேறு பொறுப்புகள் உள்ளனவே. இதனால் விளையக்கூடிய விபரீதங்களைப் பற்றியும் கேளுங்கள். அரசன் தன் உறவினரைத் தெய்வ அந்தஸ்துக்கு உயர்த்த எண்ணுகிறான் என்ற செய்தி சோழ

நாடெங்கும் கொந்தளிப்பை உண்டாக்கி விடக் கூடாது. மனுநீதிச் சோழரின் வழித் தோன்றல்கள் நாம். அதற்குத் தகுந்தாற்போல நடுநிலைமை தவறாமல் நீதி வழங்கும் மன்னர் என்று இதுவரை பெயரெடுத்து விட்டேன். அதனால் யாரும், எனக்கு வேண்டியவரைப் பூலோக ஸ்தானத்திலிருந்து கடவுளாக உயர்த்தப் பார்க்கிறேன் என்று குற்றம் சாட்டுவதை நான் விரும்பவில்லை. இந்தச் செயலை நாம் தொடங்கினால் நம் மீது உள்ள நல்லெண்ணத்திற்கு இழுக்கும், மக்கள் மனதில் கசப்பும் மிகுதியாகுமென்றே நினைக்கிறேன்'' என்றார் மன்னர்.

''இது பெரிய இடத்துச் சமாசாரம் என்று சும்மா செல்ல மாட்டார்கள். ஒவ்வொருவரும் தாய் தந்தைக்குக் கோயில் எழுப்ப ஆரம்பித்தால் சோழ நாட்டில் நடவு செய்யவே இடமிருக்காது.''

''இந்தக் காலத்தில், தஞ்சைச் சோழரின் புகழ் எண் திசையிலும் பரவியிருக்கிறது. பாரத நாடெங்கும் நம் முன்னோர்களுடைய கீர்த்தி வியாபித்திருப்பதோடு, கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் சென்றிருக்கிறது. இப்போது உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது, ஒரு நல்வழி காட்ட. பரத கண்டத்து ஜனங்கள் எல்லாரும் நம்மிடம் அளவிலாத பக்தி கொண்டிருக்கிறார்கள். இது நாம் கவனிப்புடன் இருக்க வேண்டிய காலம். இப்போது நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் சற்றுக் கவனத்துடன்தான் வைக்க வேண்டும். இல்லையேல் நாமே தவறாக வழி காட்டியதாகப் போய்விடும்'' என்றும் சொன்னார்.

இதுவரை பொதுவாகப் பேசிய மன்னர் இப்போது பொன்னியின் செல்வரை நேரடியாகப் பார்த்துப் பேசினார்: ''பொன்னியின் செல்வரே! சொல்லுங்கள். அரசனும் அவனைச் சேர்ந்த குடும்பமும் நாட்டுக்கு நல்ல வழி காட்டுபவர்களாக இருக்க வேண்டுமல்லவா? சரித்திரம் நமக்கு மாபெரும் பொறுப்பைக் கொடுத்திருக்கிறது. நீதி வழங்குவதிலும், குடிகளின் நலன்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பதிலும், நாம் சிறந்தவர்கள். ஆனால், அதையெல்லம்விட, இந்த நாட்டின் இறைபண்பைச் சரியாக வழி நடத்த வேண்டும்.''

சக்கரவர்த்தி கடவுளைப் பற்றிப் பேசும் போது தன் உயிருக்கு உயிரான சைவ மதத்தைப் பற்றிச் சொல்லவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்தது. சிவபக்திச் செல்வரான சக்கரவர்த்தி சைவத்தில் ஈடுபட்டவர். ஆனால், எந்த மதத்தினருக்கும் சோழ நாட்டில் ஒரு சுதந்திரம் இருந்ததால்தான், சாம்ராஜ்யத்தில் பல மதத்தினர் திருப்தியுடன் இருந்தனர். சைவர், வைணவர், பௌத்தர், சமணர், சாக்தர் ஆகிய சகல மதத்தினரையும் தர்மம்

தவறாமல் பரிபாலித்து வர வேண்டும் என்பது அரசனின் கடமை என்று பூரணமாக நம்பி, அதைச் செயலிலும் காட்டி வந்தார் அரசர்.

ஆனால், தனது மதத்தைப் பின்பற்றாதவரைச் சகித்துக் கொள்ளாத அரசர்களும் இருந்தார்கள். பல்லவன் அப்பர் பெருமானைக் கல்லில் கட்டிக் கடலில் போட வில்லையா? இல்லை, பாண்டியன் ஆயிரக்கணக்கான சமணரைக் கழுவிலேற்றவில்லையா? ஆனால், அது சோழரின் பண்பாடு இல்லை. எந்த மதத்தையும் துவேஷித்தவராய், சோழர்களின் சரித்திரத்தில் எங்கும் கிடையாது. எனினும், உத்தமருக்கே மனிதருக்குக் கோயில் என்பது ஒரு விசித்திரமான கோரிக்கை.

மன்னர் பெருமூச்சு விட்டார். ''பொன்னியின் செல்வா! நீர் செய்யும் காரியம் அனைத்தும் விசித்திரமாகவே இருக்கின்றன.''

மன்னருக்குப் பதில் அளிக்கப் பொன்னியின் செல்வர் எழுந்தார். ''மன்னர் பெருமானே! நாட்டுக்கு நல்லது எது, கெட்டது எது என்று தீர்மானிக்கும் செங்கோல் உம் கையில். உமது ஆணைக்குக் கட்டுப்படுகிறேன். நீர் முடியாதென்றால் நான் வருத்தப்படுவேன். ஆனால், மனம் உடைய மாட்டேன். ஊமைராணி வாழ்ந்த தீவுக்குச் சென்று அங்கே அவளுக்கு ஒரு கோயில் கட்டுவேன். இந்தப் பிரச்சனையே எழாமல் இதை முன்பே செய்திருக்கலாமே என்று நீங்கள் அனைவரும் மனதுக்குள் கேட்பது தெரிகின்றது. ஆனால், அவள் உயிரைத் தியாகம் செய்தது இங்கே- சோழர்களின் மாபெரும் தலை நகரமாக விளங்கும் தஞ்சையிலே. அவள் தெய்வமானது இங்கே. அதனால்தான் இங்கு அவளுக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று என் மனம் ஆசைப்படுகிறது. இந்த இடத்தில் கோயில் கட்டினால்தான் அவள் புகழ் மூவுலகும் பரவும். அவள் செயல்களின் கீர்த்தி அந்தக் கோயிலின் மூலமாக உலகம் உள்ளவரையும் நின்று நிலவும்'' என்றார்.

தாம் ஒப்புதல் கொடுக்காததால் மனம் உடைந்து போய் விட்டார் பொன்னியின் செல்வர் என்று அறிந்தார், அரசர். இந்த ஐந்து ஆண்டுகளில் பொன்னியின் செல்வர் கேட்டவை மிகவும் குறைவு. அதை அரசர் நிராகரித்தது அதைவிடக் குறைவு.

''நான் இங்கு அனுமதிக்கா விட்டாலும் அந்தத் தீவில் கட்டுவேன் என்ற உங்கள் உறுதியைப் போற்றுகிறேன். தீவென்ன, இன்னும் ஒரு சுதந்திர நாட்டையே ஏற்படுத்தி அங்கே அவளுக்குக் கோயில் கட்ட உமது தோளுக்கு வலிமை உள்ளது. ஆனால், தவறென்றால் அது எங்கு நடந்தாலும் தவறுதானே. முதலில் அந்தச் செயல் சரியா தவறா என்று முடிவு செய்வோம். பிறகு இடத்தைப்

பற்றியும் பேசுவோம்'' என்றார் அரசர். பின், "பேச வேண்டிய வர்கள் இருவரும் பேசியாயிற்று. முதியவர் பிரம்மராயர் வந்திருக் கிறார். அவரைக் கேட்போம்'' என்று தன் தலையிலிருந்த பாரத்தைப் பிரதமர் சிரசுக்கு மாற்றினார்.

''பிரம்மராயரே! நீர் என்ன நினைக்கிறீர்?'' என்று முடிவெடுக் கும் பளுவைப் பிரதமருடன் பகிர்ந்து கொண்டார் அரசர். அனைவரது முகங்களும் அரசரின் முகத்திலிருந்து பிரதமரை இப்போது நோக்கின.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பிரதமர் ஒரு குற்றம் செய்திருந்தார். தன் ஊமைக் காதலியான கரையர் மகளைத் தேடி வரும்படி சோழ நாட்டு அரசர் சுந்தர சோழர் அநிருத்தரை அனுப் பினார். ஆருயிர் நண்பர் தனக்காக அதைச் செய்து முடிப்பார் என்று மனதார நம்பிதான் அனுப்பினார்.

அநிருத்தரும் அவளைத் தேடி கோடிக்கரை போய்ச் சேர்ந்தார். அங்கே கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் அவள் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து விழுந்துவிட்டாள் என்பதைச் செவி வழியாக அறிந்தார். அந்தப் பயங்கரக் காட்சியை நேரில் பார்த்த வர்கள் சொன்னார்கள். அதைத்தான் அவரும் தஞ்சாவூருக்கு வந்து அவர் நண்பரிடம் தெரிவித்தார்.

நண்பர் சொல்வதைச் சந்தேகிக்காமல், சுந்தர சோழர் தன் வாழ்க்கையின் இதரக் கடமைகளைச் செய்யத் தொடங்கினார். நாட்டு மக்களைப் பரிபாலித்தார். மனைவியின் மீது பற்றுக் கொண்டார். அதன் விளைவாகத், தனக்கென்று பிறந்த மூன்று குழந்தைகளை நன்றாய் அன்பு செலுத்தி வளர்த்தார்.

ஆனால், அநிருத்தரோ அவருக்குத் தெரிந்த உண்மையை முழு மாகச் சொல்லவில்லை. கரையர் மகள் கடலில் விழுந்தாளே தவிர, அதிலே மூழ்கிச் சாகவில்லை. கடலில் படகு விட்டுக் கொண்டு வந்த வலைஞன் ஒருவன் அவளைக் கண்டெடுத்துப் படகில் ஏற்றிக் காப்பாற்றி விட்டான். அந்தப் படகுக்காரனிடம் நிறையப் பணம் கொடுத்து அவளைப் பத்திரமாக இலங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்படியும் அங்கேயே இருக்கும்படியும் ஏற்பாடு செய்தார் அநிருத்தர். சோழர் குலத்துக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டுதான் மனமறிந்து அத்தகைய குற்றத்தைச் செய்தார்.

'அந்தக் குற்றம் இத்தனை காலத்துக்குப் பிறகும் வந்து தொல்லை மூட்டுகிறதே! சுந்தர சோழரும், மந்தாகினி அம்மையாரும் மறைந்த

பின்னரும் அந்தக் குற்றம் நம்மை வாட்டுகிறதே!' என்று பிரமித்தார் பிரதமர்.

அவர் உள்ளத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்பதை அவருடைய முகம் எடுத்துக் காட்டியது. பிரதமர் மனதில் முதலில் தோன்றியது, 'அந்த ஊமைப் பெண்ணுக்கு நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறை நிவர்த்தி செய்ய ஒரு அரிய வாய்ப்பை இறைவன் கொடுக்கிறான். இதை உபயோகித்துக் கொண்டால் நாம் குற்ற உணர்விலிருந்து விடுபட்டு விடலாம்' என்று முதலில் நினைத்தார்.

அநிருத்தர் மனதுக்குள் ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். 'இல்லை. என் நாடே எனக்கு முக்கியமானது. எந்த நரகத்தில் என்னை இட்டுக் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் என்னை வேகவிட்டாலும் பரவாயில்லை. சோழர்களின் நலனே எனக்கு முக்கியம்!' என்று முடிவெடுத்தார்.

மெல்லப் பேசத் தொடங்கினார் பிரதமர். ''அரசர்க்கரசே! நானும் உம்முடன் முழுவதுமாய் ஒத்துப் போகிறேன். இந்தக் கோயிலைக் கட்டக் கூடாது. ஆனால், எனது காரணங்கள் முற்றிலு மாக வேறானவை. இதனால் அரசியல் ரீதியாக அபாயங்கள் உண்டு'' என்றார்.

உள்ளே வரும் போது பிரதமர் எதேதோ விபரீதமான யோசனைகளுடன் வந்தார். 'பாதி ராஜ்யம் வேண்டுமென்று பொன்னியின் செல்வர் கேட்பாரோ? வெள்ளாற்றுக்கு வடக்கே உள்ள ராஜ்யத்தைத் தனக்கு என்றும், தெற்கேயுள்ள பகுதியை உத்தம சோழருக்கு என்றும் பிரித்துக் கொள்ளலாம் என்ற திட்டத்தை முன் வைக்கப் போகிறாரோ என்று கூட நினைத்தார். ஆனால் அதையெல்லாம் விட விபரீதமாக ஒன்றைக் கேட்டு விட்டாரே.'

''இந்தக் கோயிலைக் கட்டுவதனால் என்ன இரகசிய அபாயங்களைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? சற்று விளக்கமாகச் சொன்னால்தானே நாங்கள் ஜாக்கிரதையாயிருக்க முடியும்?'' என்றார், அரசர்.

''சொல்லத்தான் வருகிறேன், மன்னர் பெருமானே!'' என்றார், பிரதமர்.

தன் குரலைச் சரி செய்து கொண்டு பிரதமர் பேசலானார். ''காலஞ்சென்ற சக்கரவர்த்திக்கு நான் முதல் மந்திரியாக இருந் திருக்கிறேன். அப்போது நடந்த பல சம்பவங்கள் அனைவருக்கும் தெரியும். நம் நாட்டில் இருந்த இரண்டு முக்கியமானவர்கள்

சோழரை துவேஷிக்கும் எதிரணியில் இன்று இருக்கிறார்கள். ஒருவர் நந்தினி தேவியார். மறைந்த பழுவேட்டரையரின் மனைவி. மற்றும் ஒருவர் நம் சக்கரவர்த்தி வளர வேண்டிய இடத்தில் தவறுதலாக வளர்ந்த பழைய மதுராந்தகர் என்று அன்று அழைக்கப்பட்டு, புஜங்கன் என்று இன்று புது நாமம் பெற்றிருப்பவர்.''

எல்லாரும் ஒரு நொடி பழையதை நினைத்தார்கள். நிகழ்ச்சிகள் நடந்த அந்த எட்டு மாதக் காலத்தில் இவர்கள் அனைவருடைய வாழ்க்கையுமே மாறியமைந்திருந்தது.

''அந்த இருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. நம் அனைவரிடமும் நெருங்கிப் பழகியவர்கள். இன்று சோழ சாம்ராஜ்யத்துக்குச் சவாலாய் இருக்கும் இரண்டு பாண்டியப் போராளிக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குபவர்கள். கடைசியாக, இருவரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகள். அந்தத் தாய்க்குக் கோயில் கட்டுவதைப் பற்றித்தான் பொன்னியின் செல்வர் இப்போது பேசுகிறார்'' என்றார் பிரதமர்.

''நம்மைப் பூண்டோடு அழித்து விடக் கோர சபதம் செய்திருக்கிறதே, அந்தப் பாண்டிய வம்சம், அந்த வம்சத்தின் கடைசி அரசரான வீரபாண்டியருக்கும் ஊமைராணிக்கும் பிறந்த இரட்டைக் குழந்தைகள்.போராளித் தலைவர்களின் தாய்க்குத் தெய்வ அந்தஸ்துக் கொடுத்து அவர்களை ஏன் வலுவடையச் செய்ய வேண்டும்?'' என வினவினார் பிரதமர்.

''காட்டில் ஒரு சிறு கூட்டமாய்த் திரியும் அவர்களால் சோழரின் குலத்துக்கும் அவர்கள் ஆளும் சோழ சாம்ராஜ்யத்துக்கும் பேராபத்து முன்பே வந்திருக்கிறது. மீண்டும் அப்படி நிகழாதவாறு அரச குலத்தினர் எல்லாரும் இப்போது சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்றும் எச்சரித்தார்.

கோயில் கட்டப்படும் சிறிய விஷயம் இப்படி ஒரு விபரீதமான விளைவை உண்டாக்குமென்று அங்கு யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏற்கெனவே அரசரின் உள்ளம் பெரும் குழப்பம் அடைந்திருந்தது. அந்தச் சமயம் பார்த்துப் பிரதமர் பழையதைப் பேசியிருக்க வேண்டாமென்று எல்லாருக்கும் தோன்றினாலும், அவர் கூறியதில் முக்கியமான விஷயங்கள் அடங்கியிருந்ததைத் தெரிந்து கொண்டனர். கோயிலுக்கு எதிராக இப்போது பல அம்சங்களில் ஆட்சேபணைகள் எழுந்து விட்டன.

பொன்னியின் செல்வர் அந்தக் கோயிலைக் கட்ட வேண்டும் என்று நினைத்தபோது அதற்குச் சற்று எதிர்ப்பு இருக்கும் என்று

என் நினைத்தார். அந்த யோசனையைக் காரியத்தில் அவர் நிறைவேற்றுமுன் அரசரின் ஆதரவு தேவை என்று நினைத்தார். ஆனால், எதிர்ப்பு அவரிடமிருந்தே வருமென்று பொன்னியின் செல்வர் நினைக்கவேயில்லை. மேலும் பிரம்மராயரும் இப்படி அதை எதிர்ப்பார் என்று முதலில் பொன்னியின் செல்வர் யோசிக்க இல்லை. எதிர்ப்பைக்கண்டு மிகவும் சோர்வுற்றார்.

வந்த வேலை தோற்றது என்று எண்ணினார் பொன்னியின் செல்வர். ''ஆகா, இவ்வளவு எதிர்ப்பா?'' என்று அதிசயித்தார். ஆனால், சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக, அதுவும் பிரதமரின் ஆட்சேபத்தைப் பொருட்படுத்தாமல் இந்தக் காரியத்தைச் செய்வதற்கு அவர் மனம் இணங்க வில்லை. எல்லாம் போயிற்று என்று அவர் நினைத்தபோது, அங்கு ஓர் மயான அமைதி நிலவியது.

யாருக்கும் பேச விஷயம் இல்லை. அங்கிருந்த அனைவரும் அந்த ஊமை ராணியால் சிறிதளவேனும் பயனடைந்திருந்தார்கள். அதனால் அவளுக்குச் செய்யவேண்டிய பெருமை கை நழுவியது கண்டு மனதால் வருத்தப்பட்டனர்.

வெளியில் அர்த்த ஜாமத்துக்குக் கோயிலில் அடித்த மணி அங்கே குடிகொண்டிருந்த நிசப்தத்தை அதிகமாய் எடுத்துக் காட்டிற்று. அப்போது அங்கே சூழ்ந்திருந்த மயான அமைதியை உடைத்துக் கொண்டு, ''நான் பேசலாமா?'' என்றது ஒரு பெண்ணின் குரல்.

அது பூங்குழலி அம்மையார். எல்லாரும் திடுக்கிட்டு அரசியார் அமர்ந்திருந்த திசையில் திரும்பினார்கள்.

''பேச வேண்டிய நேரங்களில் நாம் வாய் மூடி மௌனிகளாய் இருந்ததுண்டு. ஆனால், இப்போது பேசத் தவறி விட்டால் பின் தவறாகப் போய்விடும்'' என்றார் சக்கரவர்த்தினி.

'ஆகா, நாம் வந்த காரியம் இன்றைக்கு முழு வெற்றிதான்' என நினைத்தார் பொன்னியின் செல்வர்.



அத்தியாயம் நாற்பத்திரண்டு

மானிடருக்கு ஒரு கோயில்

பூங்குழலியின் குரல் கேட்ட திக்கில் அனைவரும் திரும்பினார்கள். பூங்குழலி அம்மையார் பேசத் தயாராக இருப்பதை அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

அரண்மனைக்கு விருந்துண்ண வந்தபோது, முதலில் பொன்னியின் செல்வர் பேசியிருந்தார். தான் ஊமை ராணிக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று கூறியவுடன், மீதி இரவு முழுவதுமாகப் பேசியவர்கள் சக்கரவர்த்தியும் பிரதமரும்தான். ஆனால் இருவருமே ஒரே கண்ணோட்டத்தில்தான் பேசினார்கள்.

இருவரும் கோயிலைக் கட்டினால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றியே பேசினர். கோயிலுக்கு ஆதரவாகப் பேச மற்றவர்களுக்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. ஏனென்றால் அரசரும் பிரதமரும் பேசியதில் பல ஆழ்ந்த உண்மைகள் இருந்தன. மறுத்துப் பேச முடியாத அளவுக்குக் கருத்துக்கள் இருந்தன. கோயில் கட்ட வேண்டாம் என்பதற்குத் தனிப்பட்ட காரணங்கள் அரசருக்கோ அநிருத்தருக்கோ இருந்ததாகத் தெரியவில்லை.

''நான் பேசலாமா?'' என்று அரசரை நோக்கிக் கேட்டார், சக்கரவர்த்தினி.

''அதுதான் தொடங்கி விட்டாயே! பேச வந்ததைப் பேசி முடித்துவிடு'' என்று புன்னகையுடன் உத்தம சோழர் தன் இருக்கையில் சாய்ந்தார், இது உடனே முடியப் போகும் விவகாரம் அல்லவென யூகித்து.

பிரதமரும் சக்கரவர்த்தியும் இந்தக் கோயில் கட்டும் அருமையான திட்டத்தை எதிர்த்ததில் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார் அரசி. அரசரிடம் உடனே இதற்கு ஒப்புதல் மட்டுமல்ல ஒரு கனிசமான மானியமும் கிடைக்குமென்று முதலில் எண்ணியிருந்தார். அதை நிறைவேற்றிப் பொன்னியின் செல்வரையும் நாட்டு மக்களையும் மகிழ்விக்க ஆர்வம் கொண்டிருப்பார் அரசர் என்றும் எண்ணினார். ஆனால், இப்போது நடந்ததெல்லாம் அதற்கு நேர் மாறாக இருந்தன.

உயர் குலத்துப் பெண்களுக்குரிய இயற்கையான நாணமோ இவருக்கு இல்லை. 'தன்னடக்கத்துக்குப் பங்கமில்லாமல் நடை பயில வேண்டும், குரல் உயர்த்தாமல் பேச வேண்டும், தரையை பார்த்துகொண்டே பதில் சொல்லவேண்டும்' என்று அரண்மனை

யில் வளர்க்கப்படவில்லை பூங்குழலி. கட்டுப்பாடற்ற சூழலில் வளர்ந்தவர். இயற்கையுடன் பிணைந்த வாழ்க்கையை நடத்தியவர். அதனால் உள்ளதை உள்ளபடி கொட்டி விடுவார். அவருடைய உள்ளத்தில் அல்லும் பகலும் குடிகொண்டிருந்த அத்தையைப் பற்றி இவர்கள் இளக்காரமாகப் பேசுகிறார்கள் என்றவுடன் பொறுக்காமல் பொங்கி எழுந்தார்.

''இந்தக் காரியம் நிறைவேறினால் என் அத்தை உலகில் அடையக் கூடிய மகத்தான அந்தஸ்தை நினைத்து நான் பேசவில்லை. போர்த் திறனிலும் வீரத்திலும் நமது நாடு மிகச் சிறந்து விளங்குவது பற்றி நம்முடைய பிரஜைகள் மிக்க பெருமை கொண்டிருக்கிறார்கள், சந்தேகமில்லை. நமது சோழர் குலமும் அதற்கு ஏற்றாற்போல் நடந்து வந்துள்ளது. ஆனால், எல்லா குணங்களும் இருக்க வேண்டும் நம்மிடம். தவறைக் கண்டால் பொங்கி எழ வேண்டும். கஷ்டத்தைக் கண்டால் கருணை வர வேண்டும். அது போலவே நமக்கு இணையில்லாத உதவி செய்தவர்களை நினைத்தாலே நன்றி வர வேண்டும். இல்லையென்றால் நம்மைப் பற்றிச் சரித்திரம் வீரர்களென்றும் நல்லவர்கள் என்றும் குறிப்பிடும் போது நன்றி கெட்டவரென்றும் குறிப்பிட்டு விடும்.'' ஒரே மூச்சில் பேசினார் அரசி.

பிரதமரிடம் திரும்பினர். ''ஏன் பெண் என்றும் ஊமை என்றும் அவளைத் தரம் தாழ்த்துகிறீர்கள்? அந்த மாதரசியைப் போல ஒரு தெய்வப் பிறவி இந்த ஈரேழு பதினாலு உலகத்திலும் வேறு யார் இருக்க முடியும்? கதைகளிலும் காவியங்களிலும் கூடக் கிடையாது.''

''அரச குலத்துக்கு ஆபத்து என்றதும், அவள் எப்படித் துடிதுடித்துப் போய் விட்டாளென எனக்குத்தான் தெரியும். பொன்னியின் செல்வர் பல கண்டங்களிலும் தப்பிப் பிழைத்தாரானால், அது அவளால்தான். ஐயா! அவள் இல்லையென்றாலும் இளவரசர் தப்பிப் பிழைத்திருக்கக் கூடும். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் தப்ப வைத்தவருக்கு நன்றி சொல்ல வேண்டாமா?''

''அவளால் புத்துயிர் பெற்ற குலம் அவளுக்குக் கோயில் கட்டுவதுதான் நியாயம். அவளுக்குக் கோயில் கட்ட உமக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதைப் பூர்வ ஜன்ம பாக்கியமாய் எண்ணி மனம் பூரித்து எஞ்சிய வாழ்க்கையை வாழ வேண்டும். ஆனால், சோழ குலத்தாருக்கு அவள் மேல் இவ்வளவு தான் அபிமானம் என்பது இன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது. ஒரு காலத்தில் அவளை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற

கோபம் எனக்கு உண்டு. அதன் பின் அவள் இந்த நாட்டுக்கு மாபெரும் சேவை செய்து உயிர் துறந்தாள். எனினும் அவளை ஏற்றுக்கொள்ள உமக்கு மனமில்லையே!''

அரசியாரின் குற்றச்சாட்டில் எள்ளளவேனும் உண்மையில்லை என்று பொன்னியின் செல்வருக்கும் தெரியும், குந்தவைக்கும் தெரியும். இன்றும் இருவரும் அந்த ஊமை ராணியைத் தெய்வமாகத்தான் கருதிப் போற்றி வந்தனர். ஆனால், வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைப்பானேன்? தங்கள் யுத்தத்தை யல்லவா அரசி நடத்திக் கொண்டிருந்தாரென்று மௌனம் காத்தனர்.

தன் அத்தையின் சாவினால் ஏற்பட்ட அத்யந்த சோகத்தை இவ்வளவு நாள் கழித்து வெளிப்படுத்திக் கொண்டிருந்தார், அரசியார். அவரது அத்தையின் மீது அவருக்கு இருந்த அளவு கடந்த அன்பு, ரத்த சம்பந்தத்திற்கு அப்பாற்பட்டது. பூங்குழலி அம்மையார் மிக உணர்ச்சிவசப்பட்ட முகத்துடன் பேசுவதைக் கண்ட எல்லாருடைய மனமும் கலங்கியது.

பார்ப்பவர்களுக்கு இவ்வளவு ஆவேசமாய்ப் பூங்குழலி பேசியதைக் கேட்டு எத்தனை ஆண்டுகளாகி விட்டன எனத் தோன்றியது. மன்னரின் திருமணம் காதல் மணம்தான். அதனாலோ என்னவோ பூங்குழலி அம்மையார் மிக உரிமையுடனே மன்னரிடம் பேசுவார். மன்னராய் இருந்தாலும் மனைவி ரகசியமாய்க் கடிந்து கொள்வது வழக்கம்தான். ஆனால், பகிரங்கமாக அனைவரின் முன்னும் அரசியார் பொங்கி எழுந்தது இறுக்கமான அமைதியை மற்றவரிடம் ஏற்படுத்தியது. அனைவரின் முகங்களும் மன்னரின் முகத்தையே பார்த்தன.

அரசியார் தொடர்ந்தார்: ''உங்களுக்கு நமது கலாச்சாரம் இதற்கு இடம் கொடுக்குமா என்ற கவலையா? இல்லை, உலகம் போற்றும் நாகரிகம் கொண்ட சோழரின் உலகப் புகழ் பெற்ற தலைநகரில் ஒரு காட்டுமிராண்டிக்குக் கோயிலா என்று உங்கள் மனது உறுத்துகிறதா? அவளை காட்டு வாசியென்று யாராலும் ஒதுக்கி விட முடியாது.''

அரசர் முகத்தில் என்றுமே வராத ஒரு புது உணர்ச்சியை அனைவரும் பார்த்தார்கள். அதுதான் கோபம்.

''என்ன சொல்கிறாய், பூங்குழலி? சிலருக்குத் தனி வாழ்க்கையென்பதே கிடையாது. அவர்கள் எல்லாருக்கும் பொதுவானவர்கள். தங்கள் வாழ்க்கையை மற்றவர் நலனுக்காக அவர்கள் அர்ப்பணித்து விட வேண்டும். அரச குலத்தில் பிறந்து சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள் எப்போதும் நாடு, நாட்டு நலன், குடி மக்கள், குடி மக்கள் நலன் என்றே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் கோயில் கட்ட எண்ணுவது என் பெரியன்னைக்கு. நாடு என்ன நினைக்கும்? என்னைப் பார்த்துச் சிரிக்காதா?'' என்றார்.

பதில் சொல்ல வாய் திறந்தார் பூங்குழலி. தன் கையை உயர்த்தி அவரை மௌனப் படுத்தினார் அரசர். ''புரியாமல் பேசாதே பூங்குழலி. பிரதமர் சொன்னதைக் கேட்டாயல்லவா? பழி சொல்லுகிறவர் ஒருவராயிருந்தால் அவரை நீங்கள் அடக்கி விடலாம். பதினாயிரம், லட்சம், பத்து லட்சம் பேர் பழி தூற்றுவார்கள். அவ்வளவு பேரையும் நீங்கள் மௌனப்படுத்துவதற்கு முடியாது. சரித்திரமும் விழிகளைத் திறந்து வைத்துக் கொண்டு நம்மைக் கவனிக்கிறது. மக்கள் அறிவற்ற மூடர்கள் என்று நினைத்த அரசர்களின் கதியென்னவாயிற்றென்று நீ அறியாயோ?''

பூங்குழலி விடுவதாக இல்லை. ''அந்த மங்கையர்க்கரசியின் யோகத்தைக் கொண்டுதான் நம் அரச குலம் இன்று தழைத்து நிற்கிறது. இல்லையென்றால் சோழர் குலம் காணாமல் போயிருக்கும். இங்கிருக்கிறாரே, உலகத்திலேயே பெரிய அறிவாளி என்று நாம் பாராட்டிச் சொல்லும் பிரதமர்! அவராலும் ஒன்றும் செய்திருக்க முடியாது.''

எல்லாரும் அதிர்ந்து போனார்கள். பிரதமரைப் பற்றி அரசரே தாழ்த்திப் பேச மாட்டார். ஆனால், அநிருத்தர் முகத்தில் ஒரு மாற்றமோ இல்லை. அவரும் அரசியாரும் மோதிக் கொண்ட பழைய சந்தர்ப்பங்கள் அவர் மனக்கண் முன் தோன்றின. அநிருத்தர் பூங்குழலியுடன் வாதாடி வெகு நாட்களாயிற்று. பழைய சந்தர்ப்பங்களில் பூங்குழலியின் பேச்சுத் திறன் அவரையே பந்தாடியிருந்தது.

''கலங்கரை விளக்கத்துக் காவலர் தியாகவிடங்கருக்கு இவ்வளவு வாயாடியான ஒரு மகள் இருக்கிறாள் என்பது எனக்கு இதுவரை தெரியாமற் போயிற்று!'' என்றார், அவர் ஒரு முறை.

அதற்கு, ''இதை வெளியில் சொல்ல வேண்டாம், ஐயா!'' என்றாள் பூங்குழலி.

''ஏன், பெண்ணே?''

''சோழ சாம்ராஜ்யத்தின் முதன் மந்திரி பிரம்மராயருக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்கிறது. தங்களுக்கு ஒன்று தெரியாது என்று அவர்களுக்குத் தெரிந்து விட்டால், தங்களிடம் மக்களுக்குள்ள மதிப்புக்குப்

பங்கம் வந்துவிடாதா?'' என்றாள் அவள். அந்தச் சம்பவம்தான் இப்போது அவர் நினைவுக்கு வந்தது.

பூங்குழலி தொடர்ந்தார். ''ஆண்டவன் புண்ணியம் இல்லையென்றால் அந்தப் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் நோக்கம் நிறைவேறியிருந்தாலும் இருக்கலாம் என்று எல்லாரும் சொல்கிறார்கள். அந்தச் சதியை முறியடித்தது இவரது ஆட்களா? இவரிடமிருக்கும் எல்லாம் தெரிந்த ஒற்றர் படையா? இல்லை, நம் சைனியத்திலிருக்கும் வீரர்களா? அவர்களால் ஆதித்தரின் மரணத்தைத் தடுக்க முடிந்ததா?''

அவர் சொல்வதில் உண்மையிருந்ததனால் எவரும் குறுக்கிட்டுப் பேச வில்லை.

''பொன்னியின் செல்வரும் சுந்தர சோழரும் கூட அன்று தாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அது நடக்கவில்லை? அது யாரால் என்று நாம் இன்று நினைத்துப் பார்க்கவில்லையென்றால் நம்மைப் போல நன்றி கெட்டவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்'' என்றார்.

பின் ஊமை ராணியின் சாகசங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கலானார், பூங்குழலி அம்மையார். ''பொன்னியின் செல்வர் குழந்தையாக இருந்த போது அவரைப் பொன்னி ஆற்றிலிருந்து காப்பாற்றியது இந்த நாட்டுக்கு எவ்வளவு பெரிய சேவை! ஆனால், அவரைக் காப்பாற்றியது பொன்னி நதியேயென நினைத்து நாடே அவரைப் 'பொன்னியின் செல்வர்' எனக் கொண்டாடுகிறது.''

ஏதோ பொம்மலாட்டம் நடப்பது போலிருந்தது. பொன்னியின் செல்வரைப் பற்றிப் பேசியவுடன் எல்லாரும் அவர் முகத்தைப் பார்த்தனர். அவர் முகத்திலும் பிரமிப்பு. காலமெல்லாம் பெண்களின் ஆதரவில், ஆதிக்கத்தில் வாழ்ந்தவர் அவர். ஆனால், பெண் குலத்தின் சக்தி எப்படிப்பட்டதென்று இன்றுதான் முழுமையாக அறிந்து கொண்டார்.

''இப்போது சமீப காலத்தில், சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்ற, விதிக்கும் வேலுக்கும் குறுக்கே புகுந்து, அந்த மங்கையர்க்கரசி தன் உயிரை மாய்த்துக் கொண்டாளே, அது எப்பேர்ப்பட்ட தியாகம்!''

அரசர் குறுக்கிட்டார்: ''அதனாலெல்லாம் ஒருவரைத் தெய்வமென்று கூறிவிட முடியாது. நீரில் மூழ்கித் தத்தளிக்கும் போது நீச்சல் தெரிந்த எந்தப் பெண்மணியும் செய்வதையே அவரும் செய்தார். அது போலவே தன் காதலரின் உயிரைக் காக்கத் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.''

மேலும் அரசர் பொறுமை இழந்தவராய், ''மந்தாகினி அம்மையால்தான் இவர்களைக் காப்பாற்றினார் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக அவருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவோம். மண்டபங்கள் கட்டுவோம். அவர் வாழ்ந்த கோடிக்கரையிலோ இலங்கைத் தீவில் கேதீச்சரத்திலோ கோயில் திருப்பணி செய்வோம். ஆதுர சாலைகள் அமைப்போம்'' என்றார் மன்னர்.

அடங்கிப் போவார் பூங்குழலி அம்மையார் என்று எல்லாரும் நினைத்திருக்கப் பொங்கி எழுந்தார். ''மண்டபங்கள் கட்டுவீர்கள். ஸ்தூபிகள் நாட்டுவீர்கள் என்றெல்லாம் எதிர்பார்த்து அத்தை எந்தவொரு தியாகமும் செய்ய வில்லை. அது ஒருபுறமிருக்கட்டும். நீங்கள் ஏற்றுக் கொள்ளும் தெய்வீக சக்திகளும் அவருக்குப் பல உண்டு.''

பொன்னியின் செல்வரை நோக்கி, ''ஈழத் தீவில் தங்களைப் பல அபாயங்களிலிருந்து காப்பாற்றியது ஊமை ராணிதானே?'' என்று கேட்டார். அவரும் தலை அசைத்தார்.

''அவளைப் பிச்சியென்றும் பைத்தியக்காரி என்றும் நினைத்தீர்கள். ஆனால், என் அத்தை பிச்சி அல்ல. என் அத்தைக்கு வாய் பேச முடியா விட்டாலும், காது கேளாவிட்டாலும், அதிசய சக்தி உண்டு. ஒவ்வொரு முறையும் அபாயம் வரப்போகிறது என்று ஒரு மானிடப் பெண்ணுக்கு எப்படித் தெரியும்? நன்றாய் நினைத்துப் பாருங்கள். இதெல்லாம் செய்தது ஒரு ஊமைப் பெண். அரச குலத்துக்கு எப்போதெல்லாம் தீங்கு நேரும் என அறிந்து கொள்ளும் ஒரு தெய்வீக ஆற்றல் அவளிடம் இருந்தது.''

''அரண்மனையில் உள்ள யாரோ ஒருவரைக் கொல்வதற்காகப் பாண்டியச் சதிகாரன் ஒருவன் அங்கே காத்திருக்கிறான் என்று அறிந்து கொண்டாள். நானும் அத்தையும் அரண்மனையிலிருந்த ரகசியச் சுரங்கப் பாதையில் ஒளிந்திருந்தோம். திடீரென எனக்குச் சைகை மூலம் அங்கே ஒளிந்திருப்பவனைத் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி என்னை வெளியே அனுப்பிவிட்டாள். பொன்னியின் செல்வருக்கும் ஏதோ ஆபத்து வரப் போகிறது என்று அத்தை தன் அதிசய சக்தியினால் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் இருக்குமிடத்துக்கு என்னை அனுப்பினாள்.''

''அடுத்த அறையில் என்ன நடக்கிறது, நடக்கப் போகிறது என்றே நமக்குத் தெரிவதில்லை. வெகு தூரத்தில் நாளைக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அறிந்த பெண் வெறும் மானிடப் பெண் மட்டும்தானா? அவள் தெய்வப் பெண் இல்லையா?''

மீண்டும் மௌனம். அரசருக்கு முற்றிலுமாக என்ன செய்வது என்று தெரியவில்லை. எப்போதும் போலப் பிரதமரிடம் திரும்பினர்.

''பிரதமரே! சொல்லுங்கள். நான் செய்ய வேண்டியது இன்ன தென்று சொல்லுங்கள். தங்களுக்கு நன்றாய்த் தெரியும், இந்த நாட்டுக்கு உகந்தது என்னவென்று.''

முதன் மந்திரி சிறிது யோசனை செய்துவிட்டுக் கூறினார். ''மன்னர் பெருமானே! இப்போது நான் கூறப் போவது தங்கள் அரசியாருக்கு உகந்ததாயிருக்க முடியாது. ஆயினும் பொறுமை யுடன் கேட்க வேண்டும். சோழ குலத்து மன்னர்கள் என்றென்றும் நடுநிலையோடுதான் செயல் படுவார்கள் என்பது சரித்திரம். அவர்கள் வீரத்தில் இணையற்றவர்கள். அப்படியே அறத்திலும். அறத்தில் எப்படியோ, அப்படியே தெய்வபக்தியிலும் சிறந்த வர்கள். சில ஆண்டுகளுக்கு முன் தன்னுடைய மகள்தான் சாம்ராஜ்ய சிங்காதனத்தில் அமரப் போகிறாள் என்று கருதிக் காயை நகர்த்திய குறு நில மன்னர்கள் பலர். ஆனால், எங்கோ படகோட்டியாய் இருந்த பூங்குழலி அம்மையார் இன்று அந்த அரியணையில் அமர்ந்திருக்கிறார். விரல் விட்டு எண்ணக் கூடிய சந்தர்ப்பங்களில்தான் இதுபோலச் சரித்திரத்தில் நடந்துள்ளது. இப்படி நடந்ததா என்று எதிர்காலத்தில் பலரும் வியக்கும் அளவுக்கு இது விந்தையானது. அதுதான் ஊமை ராணிக்குத் தெய்வங்கள் கொடுத்த பரிசு. அவளுடைய அண்ணன் மகளுக்கு இந்தப் பதவி கிட்டியது'' என்றார் பிரதமர்.

தப்பிக்க ஒரு வழி கிடைத்தது அரசருக்கு. ''ஆம், நானும் நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்கிறேன், இத்துடன் விட்டு விடலாமே, பூங்குழலி. நீ சொல்வதெல்லாம் சரி. ஆனால், நாட்டு மக்களின் அபிப்பிராயத்தையும் நீ மதித்து நடக்க வேண்டும்'' என்றார். ''மேலும் பாண்டியரின் கையைப் பலப்படுத்துவது போலாகிவிடும் என்று பிரதமர் கூறுகிறரே'' என்றார் அரசர்.

ஆனால், பூங்குழலி விட்டு விடுவதாக இல்லை. எந்த அத்தை யைப் பற்றி அடிக்கடி அவர் பெருமையுடன் பேசி வந்தாரோ, அவளை எதிரிகளுடன் முடிச்சுப் போடும் இந்தப் பொல்லாத பிராமணரை வார்த்தைகளால் நோகடிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது.

''ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். எதிரிகளின் உறவினர் அவள் என்ற பேச்சே வேண்டாம். விதி வசத்தினால் நடந்ததை எல்லாம் அரசியலாக்கப் பார்க்கிறார் பிரம்மராயர். பாண்டிய

ஆபத்துதவிகளுக்கு நெருக்கமானவர் ஊமை ராணி யென்றால், அரசே! நீங்கள் யாரிடம் வளர்ந்தீர்கள்? உங்களைப் பெற்ற குலம் உங்களை வேண்டாமென ஒதுக்கிய போது வளர்த்தது அந்தப் பாண்டியப் போராளிகளின் பெரியன்னைதான். இன்று இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் அரசி நான். ஆனால், உண்மையில் நான் யார்? அந்தப் போராளிகளின் மாமன் மகள். நம்மையும் நிராகரித்து விரட்டிவிடுவாரா பிரதமர்?''

விபரீதமாகப் போய்க் கொண்டிருந்தது விவாதம் என எல்லாரும் உணர்ந்தார்கள்.

அரசியார் கோபாவேசத்துடன் தொடர்ந்தார். ''ஆம். அதுவும் சரிதான். இந்தச் சோழ சாம்ராஜ்யமும் இதில் வாழும் ஜனங்களும் ஒரு துன்பமும் இன்றிச் செழித்து வாழட்டும். நாம் சென்று விடுவோம். அந்த ஊமைப் பெண்ணுக்கே இந்தக் கதியென்றால் பின்னொரு நாளில் இந்த நாடு நம்மை எப்படி நடத்தும் என்று எனக்குந் தெரியாது'' என்றார். ''அவளுக்கு அங்கீகாரம் இல்லை யென்றால் எனக்குமில்லை. இந்த அரியணை மீது அமர்ந்திருக்க நான் இனி சம்மதிக்க மாட்டேன். நீங்களும் அதை உதறிவிட்டு வாருங்கள்!'' என்றார், சக்கரவர்த்தியைப் பார்த்து.

குந்தவை நினைத்தாள். 'இந்த அரியணைக்கு இந்த நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு பெரிய போட்டி வந்தது! இன்று இதை வேண்டாமெனப் புறக்கணிக்க எவ்வளவு பேர் இருக் கிறார்கள்?'

''நீ விவாதத்தைத் திசை திருப்புகிறாய். இப்போது விவாதம் நடப்பது ஒரு மானிடப் பெண்ணுக்குக் கோயில் கட்டலாமா என்பதுமட்டும் தான்'' என்றார் சக்கரவர்த்தி.

''ஐயா! நான் ஒரு திசைக்கும் பேச்சைத் திருப்ப வில்லை. நீங்கள் அனைவரும் நன்றி கெட்டவர்கள் என்று கூற மாட்டேன். பொன்னியின் செல்வர் இன்னும் நன்றி மறக்கவில்லை. எனக்கு நம்மை நினைத்தால்தான் அவமானமாயிருந்தது!'' என்று பூங்குழலி கூறியபோது, அவர் கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது. ''பொன்னியின் செல்வரது நன்றி மறவாத குணத்தைப் பார்த்ீரா? நமக்கு எல்லாம் இது தோன்றாமல் போயிற்றே! அதற்கே நாம் வெட்கப்பட வேண்டாமா?''

''சபையோரே! நம் முன்னோரின் செய்நன்றி மறவாத குணம் நமக்கு மீண்டும் வரும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இங்கு பேசிய பிரதமர் மற்றும் அரசரின் பேச்சைக் கேட்டதனால் தாங் களும் என்னைப் போலவே நிராசையுற்றிருக்க வேண்டும். ஆனால்

இங்கு உண்மை விசுவாசம் உள்ள ஒரே ஒருவர் பொன்னியின் செல்வர் மட்டும்தான் என்று நினைக்கிறேன்.''

''அது அபாண்டம்!'' என்றார் அரசர். ''அப்படியெல்லாம் சொல்லாதே. நீ இல்லையா?'' என்றார் .

''நானிருந்து என்ன பயன்? இந்தப் பிரதமர் காலங் காலமாக என்னை அழைப்பாரே. 'ஏ ஓடக்காரப் பெண்ணே!' என்று. ஓடக் காரப் பெண்ணை நடத்துவது போலத்தான் நாடும் அரச குடும்பமும் என்னை இன்றும் நடத்துகிறது.''

இதை கேட்டவுடன் அரசர் மனம் மாறினார். தன் ஆசை மனைவி பிடிவாதக்காரிதான். ஆனால் மணம் புரிந்த நாளிலிருந்து இதுவரை ஒன்று கூடத் தனக்கெனக் கேட்டதில்லையே இவள்.

''ஊமை ராணிக்கு விசுவாசம் கொண்டவர்கள் வரிசையில் என்னையும் சேர்த்துக் கொள். என்ன வந்தாலும், ஆகாசவாணி பூமா தேவி சாட்சியாக இந்தக் கோயிலைக் கட்டிய பின்தான் மற்ற வேலையெல்லாம்'' என்றார் சக்கரவர்த்தி, புன்னகை பூத்த இதழ்களுடன்.

''பிரதமரே! நமது சக மந்திரிகளிடமும் பிரதானிகளிடமும் இந்த நற்செய்தியைத் தெரிவிக்க வேண்டும். எமது முடிவைத் தெரியப் படுத்துங்கள். ஸ்தபதிகளிடமும் சொல்லி அனுப்புங்கள்'' என்று கட்டளையிட்டார்.

சபையில் கரகோஷம் எழுந்தது. ''ஆனால், ஒரு நிபந்தனை!'' என்று அரசர் கையுயர்த்திச் சொன்னவுடன் மீண்டும் அமைதி.

''என்னடா இது புதுக் குழப்பம்!'' என்று எல்லாரும் திடுக்கிட்ட போது- ''அந்தக் கோயில் கட்டும் செலவில் பாதி என்னுடையது!'' என்றார். உடனே கண்ணீர் தோய்ந்த கன்னங்களில் குழி விழப் பூங்குழலி அரசியார் புன்முறுவல் பூத்தார்.

விருந்தினர் கலையும் முன், சபையில் ஒருமுகமான அபிப் பிராயம் வருவதற்குத் தடையாய் இருந்த பிரதமரைச் சாந்தப்படுத்த முயற்சித்தார் அரசி. தனியாய்ச் சந்தித்து, ''குருதேவா! தங்களைப் பற்றி இந்தப் பேதைப் பெண் அறியாமையால் கூறிய வார்த்தை களை மன்னிக்க வேண்டும். நீங்கள் மன்னித்தால் நான் நன்றி யுள்ளவளாக இருப்பேன்'' என்றார்.

பிரதமர் கண்ணில் கண்ணீர். ''தாயே! உனக்குத்தான் நான் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும். என் மனதில் இருந்த ஒரு பெரும் சுமையை நீ இன்று இறக்கி விட்டாய்!'' என்றார்.

'இந்தக் கிழவர் என்ன சொல்கிறார். ஒன்றும் புரியவில்லையே!' என்று நினைத்துக் குழம்பினார் சக்கரவர்த்தினி பூங்குழலி.

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்து மூன்று

பழுவூர் அரண்மனைக்கு விஜயம்

கடல் கொள்ளையர்கள் மீது வெற்றி வாகை சூடியபின், அதற்கான நாட்டு மக்களின் நன்றியையும் ஏற்றுக்கொண்டு, நாகையிலிருந்து பொன்னியின் செல்வரும் அவரது தமக்கையின் கணவரான வந்தியத் தேவனும் தலை நகர் தஞ்சைக்குப் புறப்பட்டு இரண்டு நாட்களானது. வழி நெடுகிலும் அவர்களது வீர சாகசங் களைப் பற்றிய கதைகள் பரவி அவர்களைக் காண மக்கள் கூட்டம் கூட்டமாக வெகு நேரம் காத்துக் கிடந்தனர். பொன்னி யின் செல்வர் கிராமம் கிராமமாக நின்று நின்று வந்து கொண் டிருந்தார்.

தஞ்சையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள் இளவரசர்கள். அவர்களது தர்ம பத்தினிகள் அச்சமயத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று இப்போது கவனிப்போம்.

தஞ்சை வீதிகளில் ஒரு பல்லக்கு ஆடி அசைந்து வந்தது. பல்லக் குக்கு முன்னாலும் பின்னாலும் வேலேந்திய காவல் வீரர்கள் குதிரைகளின் மேல் வந்தார்கள். தாதிப் பெண்களும், தோழிகளும் பின்னால் நடந்து வந்தார்கள்.

அரண்மனையிலிருந்து மாதரசிகள் சிலர் வருகிறார்கள் போலும். முன்னும் பின்னுமாய் வரும் வீரர்களைப் பார்த்தால் இப் பெண்மணிகள் பெரிய குலத்துப் பெண்டிராகவே இருக்க வேண்டும் என்று பார்வையாளர்கள் யூகித்தார்கள்.

பல்லக்கின் பக்கங்களை மூடியிருந்த பட்டில் நெய்யப்பட்ட வெளித் திரையில் பாயும் வேங்கை இலச்சினைச் சித்திரம் காணப் பட்டது. அப்படியென்றால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் உள்ளிருக்க வேண்டும். தஞ்சை அரண்மனைகளில் வாழும் மகாராணிகளும் இளவரசிகளுந்தான் இவர்கள் என்று மக்கள் நினைத்தனர். அந்த யூகமும் சரிதான்.

இளைய பிராட்டி குந்தவை, சின்ன பழுவேட்டரையரின் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியனுப்பியபோது, அந்தக் கிழவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்தத் திடீர் விஜயம் என்று அவர் தீவிரமாக யோசித்தார். தன் ஐயம் தீராத நிலையில் தன் மகள் லோகாவை அழைத்து விஷயத்தைத் தெரிவித்தார்.

அவள் முகத்திலும் முதலில் ஆச்சரியம் பரவியது. பின் புது வெள்ளம் வந்து, தேங்கியிருந்த பழைய நீரை அடித்துச் செல்வது போல ஆனந்தம் அவள் முகத்தை ஆக்கிரமித்தது.

ஓடோடிச் சென்று செய்தியை அந்தப்புரத்தில் பரப்பினாள், லோகா. அவள் இந்த நற்செய்தி கொண்டு பாய்ந்தோடியபோது அவளது கால்கள் தரையைத் தொட்டனவா என்று நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை.

செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அந்த மாளிகையின் அந்தப்புரத்து மகளிர் இளையபிராட்டியை வரவேற்க மிகுந்த ஆர்வத்தோடு ஏற்பாடுகளைக் கவனிக்கலானார்கள். அவர்களைத் தூண்டியது பழுவூர் இளவரசி லோகாதான். இளையபிராட்டி தன் வீட்டுக்கு வரப்போகிறார் என்ற செய்தியைக் கேட்டதுமே அவளுடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்த பரபரப்பை அவளுடைய முகத் தோற்றம் வெளிப்படுத்தியது.

குந்தவையுடன் அவளுக்கு அறிமுகம் கூடக் கிடையாது. சக்கரவர்த்தியின் குடும்பம் பழுவூர் அரச குடும்பத்துடன் நெருக்கமாய் இருந்தபோது, இவள் சிறு பிள்ளையே. இவள் வளர்ந்து வயதுக்கு வருவதற்குள் என்னென்னவோ நடந்து அரங்கேறியிருந்தது. மிகக் கசப்பான அனுபவங்களின் நடுவே சோழர்களுடன் நட்பும் குன்றியிருந்தது.

ஆனால், என்னவோ குந்தவையின் குண நலன்களைப் பற்றிக் கேள்விப்பட்டுக் அவள் மேல் லோகாவுக்கு ஒரு பக்தியே உருவாகியிருந்தது.

'எனக்கு நினைவு தெரிந்த நாட்களாய் அவர்கள் இங்கு வந்ததில்லையே!' என்று மட்டும் நினைத்தாள். எது எப்படியிருந்தாலும் இன்று குந்தவை தேவி இங்கு வருவது அப்பாவின் கோப தாபத்தைக் கொஞ்சம் குறைக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

சென்ற மாதம் அந்தச் சம்புவராயன் கோடிக்கரைக் காட்டுக்குச் சென்று வெறும் கையுடன் திரும்பி வந்ததிலிருந்து, அப்பா ஒரே கோபமாய் இருந்தார். யாரும் அவர் அருகில் நெருங்கக்கூட முடியவில்லை. அவர் ''ஆம்'' என்றும் ''வேண்டாம்'' என்றும் உறுமுவது, ஏதோ அடிபட்ட சிங்கம் கர்ஜிப்பது போலிருந்தது.

ஆனால், எது எப்படியோ, அந்தச் சம்புவராயனை லோகாவுக்கு மிகவும் பிடித்துப்போனது. தன் வார்த்தைக்காக அவன் தன் வீரத்துக்கு இழுக்கும், கடமையில் பங்கமும் ஏற்படுத்திக் கொண்டான். தன் வேண்டுதலுக்காகத் தமக்கையைக் கொல்லாமல் விட்டான் அல்லவா?

ஆனால், அவனைப் பொது இடங்களில் பார்த்ததைத் தவிர, வேறெங்கும் சந்திக்க முடியவில்லையே. ஓரிரு முறை கோயில்களில் அவனைப் பார்த்தாள். தானாகச் சென்று அவனுடன் பேச முற்படும் போதெல்லாம் வாயடைத்துப் போகிறானே, அதுதான் ஏனென்று தெரிய வில்லை. ''சரி, அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். கலைமகளும் திருமகளும் உருக் கொண்டு அவதரித்திருப்பதாக அவர்களைப் பற்றி உலகெல்லாம் பேசிக் கொள்ளும் பெண்டிர் வருகிறார்கள். அவர்களை முதலில் கவனிக்க வேண்டும்'' என்று முடிவெடுத்தாள்.

வரப் போவது ஈழத்துப் போரில் வீர சொர்க்கம் எய்திய கொடும்பாளூர் சிறிய வேளாளரின் செல்வப் புதல்வி வானதி தேவியாரும் தான்; பொன்னியின் செல்வருடைய தர்ம பத்தினி!

இளைய பிராட்டியின் அன்புக்குகந்த தோழி என்றுதான் நாடு வானதியை முதலில் அறிந்திருந்தது. பின் அவள் கணவனான பொன்னியின் செல்வர் செய்த காரியம் ஒன்றினால், இல்லை,ஒரு தியாகத்தினால் அனைவருக்கும் இவளைத் தனியாக அடையாளம் தெரிந்தது. இவள் அரியணை ஏற மாட்டேன் என்று சொன்னதற்காகத், தனக்குப் பாத்தியமான சோழ சாம்ராஜ்யத்தையும், மணி முடியையும் செங்கோலையும் வேண்டாமென்று உதறியெறிந்தவர் பொன்னியின் செல்வர். அது சம்பந்தமாக மர்மமாகவும், விளங்காமலும் இருந்த பல விஷயங்களை மக்கள் மறந்து விட்டனர். பொன்னியின் செல்வர் அப்படிச் செய்யப் பல காரணங்களிருந்தன. எனினும் மனைவிக்கு அரியணை ஏற விருப்பமில்லை என்பதற்காகவே அவர் அரச வாழ்க்கையைத் துறந்தார் என்ற கதை மட்டும் ஊரெங்கும் நாடெங்கும் பரவியது. அப்படி உதறியெறியத் தூண்டியவள் வருகிறாள்.

இந்த இரு பெண்மணிகளைப் பற்றி லோகா மிகவும் கேள்விப்பட்டிருந்தாள். இருவர்க்கும் சொத்துகள் ஏராளம். மன்னர் குலத்தில் பிறந்த மாதரசிகள் மிகவும் கௌரவிக்கப்பட்டார்கள். சோழ குலத்தில் பிறந்த பெண்மணிகளும் வாழ்க்கைப்பட்ட பெண்மணிகளும், சொந்தமாகச் சொத்துரிமை பெற்றிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் தரவாரியாகக் கிராமங்களும், அகண்ட

காவிரியின் கரையில் நன்செய் புன்செய் நிலங்களும், கால்நடைச் செல்வங்களும் இருந்தன.

செல்வம்தான் எல்லாரிடமும் இருக்கிறதே! பழுவூர் சாம்ராஜ்யத்தில் இல்லாததா? இந்த உடைமைகளைச் செல்வம் படைத்தவர்கள் எவ்வாறு உபயோகித்தார்கள் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவைப் பிராட்டி பலவகை அறங்களுக்குத் தம் உடைமைகளைப் பயன்படுத்தினார். நாடெங்கும் தர்ம வைத்திய சாலைகளை நிறுவ வேண்டும் என்று ஆசைப்பட்டார். அது போலவே தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் ஆதுரசாலை அமைப்பதற்குக் குந்தவை தேவி ஏற்பாடு செய்திருந்தார். 'இப்படிப்பட்ட நல்ல மனம் யாருக்கு வரும்' என்று லோகா வியந்தாள்.

வானதியும் குந்தவையும் மரியாதை நிமித்தமாகச் சின்னப் பழுவேட்டரையர் வீட்டுக்கு வந்தனர். இருவர் மணந்ததும் வைர நெஞ்சு படைத்த படைத் தலைவர்கள் என்பதால், அவர்கள் வீட்டில் தங்குவது குறைவுதான். இப்போது கூட அவர்கள் தூர தேசத்தில் இருந்தார்கள். அதனால் இந்த இரண்டு பெண்களின் வேலையும் இரட்டிப்பானது.

வீரர்களுக்கு ஆரத்தி எடுத்துப் போருக்கு அனுப்பி விட்டோம் என்று சும்மா இருக்க முடியாது ராஜகுலப் பெண்கள். ஆசி கூறி, நெற்றியில் மந்திரித்த திருநீற்றை இட்டு, திருஷ்டி கழித்து வழி அனுப்பினால் மட்டும் போதாது. அரச குடும்பத்தினருக்குப் பல பொதுக் காரியங்களில் ஈடுபாடு இருக்கும். அவற்றை எல்லாம் ஆண்கள் போருக்குச் சென்றால் பெண்கள்தானே பார்த்துக் கொள்ள வேண்டும்?

சாலையில் வந்தது சித்திர விசித்திரமாகச் செய்த பல்லக்கு. அதில் வீற்றிருக்கும் இந்த வனிதாமணிகளின் முகங்கள் சற்று இறுக்கமாகத்தான் இருந்தன. பழுவூர் மாளிகை அருகே வர வர, அவர்கள் படபடப்பும் அதிகரித்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் இந்த இரு பெண்களும் பல முறை பழுவேட்டரையரிடம் அரசியல் ரீதியாக மோதியிருந்தனர். பின் ஐந்து ஆண்டுகளாக இந்தப் பக்கமே தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை. இன்று எப்படி வரவேற்கப்படப் போகிறோமோ என்ற வருத்தம் இருவர் மனதிலும்.

வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலேயே பல்லக்கை நிறுத்தி விட்டுத் தாமும் சற்று அங்கேயே நின்று மனத்தை அமைதிப்படுத்திக் கொண்டு, பின் செல்லலாமா என்று கூட நினைத்தாள், குந்தவை.

இத்தகைய மனோநிலையில் இரண்டு அரசிளங்குமரிகளும் பழுவூர் அரண்மனை வாசலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

பழுவூர் மாளிகையின் வாசல் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கக் கூடாது என்று அந்தப்புரப் பெண்களுக்குக் கட்டளை. எனினும் பெண்களெல்லாம் பின்கட்டிலிருந்து வந்து வாசலில் உட்கார்ந்து அரசிளங் குமரிகளின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். பழுவேட்டரையரும் அவர்களிடம் ஒன்றும் சொல்ல வில்லை. பல காலமாய் முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் இருந்த சின்னப் பழுவேட்டரையர் இன்று புதுக் குதூகலத்துடன் இருந்தார். சோழர்களுடன் தொடர்பு அவரது குலத்தின் உயிர் நாடி போன்றது. ஆனால், அவருக்கும் புரியவில்லை, ஏன் இந்தப் பெண்கள் வருகிறார்கள் என்று?

பழுவூர் அரண்மனை வாசலின் முகப்பில், பல்லக்கு கீழே வைக்கப்பட்டது. அரண்மனையிலிருந்து எங்கும் நிற்காமல் பல்லக்கு ஒரே மூச்சாய் வந்து கொண்டிருந்தது என்பதனால் தூக்கி வந்தவர்கள் களைத்துப் போயிருந்தார்கள். பழுவேட்டரையர் மாளிகையை அடைந்தவுடன் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு நெற்றி வேர்வையைத் துடைத்துக் கொண்டனர்.

முதலில் யார் இறங்குவார்கள் என்று பழுவூர் அரண்மனைப் பெண்கள் பேராவலுடன் காத்திருந்தனர். குந்தவை- அருள் மொழிக்கு இரண்டு பிராயந்தான் மூத்தவளான போதிலும்- தம்பியை வளர்க்கும் பொறுப்பு தன் தலை மேலேயே விழுந்திருப்பதாக எண்ணியிருந்தாள். தமக்கை இட்ட கோட்டைத் தம்பியும் தாண்டுவது கிடையாது.

ஆனால், இப்போது திருமணமாகிவிட்டது, இளங்கோவுக்கு. இதனால் அவர் வாழ்வோடு பின்னியிருந்த இரு பெண்களுக்கும் ஒரு போராட்டம் ஏற்பட்டிருக்கும் என்றே அனைவரும் கருதினர்.

யார் முதலில் கால் எடுத்து வைக்கிறாரோ, அவரே இன்னமும் பொன்னியின் செல்வர் மீது ஆதிக்கம் செலுத்துகிறார் என்று முடிவு செய்யலாம் என்றிருந்தனர். தாதிப் பெண்களும் தோழிப் பெண்களும் ஆவலாய் மேல் மாடங்களிலிருந்து பலகணிகளின் வழியாகப் பல்லக்கின் பக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திரை விலகுகிறது. பெரும் எதிர்பார்ப்புடன் அனைவரும் பார்க்க, ஒரு சிறுவன் முதலில் எட்டிப் பார்க்கிறான். செக்கச் செவேலென்ற முகம் கொண்டிருந்தான்- தன் குலத்தை முதல் முதலாய்த் தோற்றுவித்ததாகச் சொல்லப்படும் ஞாயிறைப்போல. அவன் முகத்தில் இயற்கையாய் வீற்றிருக்கும் குறும்பு தெரிகிறது.

அத்துடன் இவ்வளவு நேரம் தான் அடக்கி வைக்கப்பட்டிருந்த பல்லக்கு நின்று விட்டதும் அதிலிருந்து தான் இறங்கப் போவதையும் எண்ணிக் குதூகலமடைந்தான் அவன்.

முதலில் அவன் கீழே குதித்து ஒரு ஓட்டம் பிடித்தான். அவன் என்ன செய்வான், ஏது செய்வான் என்று அறிந்திருந்த பரிவாரங்களில் இருந்த தாதிப் பெண்கள் அவன் பின்னால் ஓடினார்கள். அவர்களுக்கு இதில் நிறைய அனுபவம் உண்டென்று பார்ப்பவருக்குத் தெரிந்தது. அவனுக்குப் பின்னே ஓடிக் கோழிக் குஞ்சை அமுக்குவது போல அவனைப் பிடித்தனர்.

இதைச் சற்றும் எதிர்பாராமல் பார்த்திருந்தவர்கள் மீண்டும் பல்லக்கை நோக்கினார்கள். அந்தச் சிறுவன் செய்த கலவரத்தில் பல்லக்கிலிருந்து இறங்கியதில் யார் கால் முதலில் தரையைத் தொட்டது என்று யாரும் பார்க்கவேயில்லை. அந்தப் பெண்கள் எல்லாரும் திரும்பிப் பார்க்கையில் குந்தவை தேவி இறங்கி விட்டாள். அவள் அருகே கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு வானதி தேவியும் நின்றிருந்தாள்.

பல்லக்கிலிருந்து இறங்கிய இருவரும் அழகிகள் என்றாலும், ஒருவருடைய அழகுக்கும் இன்னொருவருடைய அழகுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. குந்தவை ஏழுலகத்துக்கும் ராணி எனத் தகும் அதிகாரத் தோற்றமுடைய பெண்மணி. செந்தாமரை மலரின் கம்பீர சௌந்தரியம் உடையவள். சுந்தர சோழர் வனப்பு மிக்கவர் என்று பிரசித்தி பெற்றிருந்தார். அதனால் அவர் புதல்வி சுந்தரியாய் இருப்பதில் வியப்பென்ன?

வானதியோ காந்தியுடன் விளங்கும் நாரீமணி. சர்வ அழகு பொருந்திய சாந்த சுந்தரி. தாய்மை அவள் அழகை அழிக்கவில்லை. மேலும் மெருகூட்டியிருந்தது.

வெளியே ராஜேந்திரன் தாவியோடிய பின்பு, திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்த குந்தவையின் கண்களில் முதலில் பட்டது - தட்டுத் தடுமாறிப் பழுவூர் மாளிகைப் படிகளில் இறங்கி வந்து வரவேற்கக் காத்திருந்த பழுவேட்டரையரை.

"வாருங்கள், வாருங்கள், அரசிகளே, வர வேண்டும்!" பழுவேட்டரையர் அவருடைய வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியை ஊன்றுகோலாய்ப் பயன்படுத்தி மெல்ல நடந்து வந்தார்.

"என் பாக்கியம், பாட்டா!" என்றாள், குந்தவை. அவள் முகத்தில் ஒரு ஆச்சரியம். இப்படி ஒரு மனிதன் மாற முடியுமா என்று.

அவரது தலையில் தும்பைப் பூ என்பதா, திருநீறு தெளித்தது என்று சொல்வதா - தலை மயிர் எல்லாம் வெண்மையாய்

இருந்தது. பார்த்துப் பல ஆண்டுகளானதால் அடையாளம் தெரியவில்லை. முன்பெல்லாம் அரண்மனையில் அடிக்கடி அவர் தென்படுவதுண்டு. இப்போதில்லை.

எனினும் இவர் இன்று உயிருடன் இருப்பதே சோழ நாடு செய்த பாக்கியம்தான். ஒரு காலத்தில், "கடவுள் அருள் இருந்தால் பிழைப்பார்!" என்று மருத்துவர்கள் சொல்லிக் கை விரித்து விட்டுச் சென்று விட்டனர். மலை உச்சியிலிருந்து தள்ளப்பட்ட பழுவூர் மன்னர் தாம் வாழ்க்கையில் கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான போர்களைப் போல், தீரத்துடன் போராடினார் காலனுடன்.

ஆரம்பத்தில் வழக்கமான நல விசாரணைக்குப் பிறகு ஒரு அமைதி அவ்விடத்தைச் சூழ்ந்தது. வாசலிலிருந்து ஆரத்தித் தட்டுடன் இளைய பிராட்டியை அந்தப்புரத்து மாதர்கள் வரவேற்றார்கள். முதலில் குந்தவை அந்தப்புரத்துக்குத்தான் விஜயம் செய்ய வேண்டுமெனத் தந்தையிடம் லோகா சொல்லியிருந்தாள். அவரோ அது போன்ற புது வழக்கமெல்லாம் முடியாது எனக் கடிந்து கொண்டார்.

விருந்தாளிகள் அனைவரையும் ஆர்வத்தோடு வரவேற்று, அன்பைச் சொரிந்து உபசரணைகள் செய்த பின், அவர்களை வீட்டின் முன் பகுதியில் விட்டுவிட்டுப் பெண்கள் எல்லாரும் அந்தப்புரக் கதவுக்கு அருகில் நின்று வேடிக்கை பார்த்தார்கள். லோகா மட்டும்தான் பழுவேட்டரையருடன் நின்றாள்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் விருந்தாளிகள் உள்ளே வந்தார்கள். ஒருவரைத் தவிர. வானதியின் மகனை உள்ளே அழைத்து, "டேய், இங்கே வா!" என்று வலுக்கட்டாயமாகப் பிடித்துப், "பாட்டன் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொள்" என்றார்கள்.

அந்தச் சிறுவன் காலில் விழுந்தவுடன் பழுவேட்டரையர் திணறிப் போய்விட்டார். "அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே. இப்போது பார்த்துக் கையில் ஒன்றும் இல்லையே. என் செய்வேன்? அவன் எழுந்திருக்கிறானே. தன்னை ஏக்கக் கண்ணுடன் பார்க்கிறானே. என் செய்வேன்?" என்று நினைத்தபோது, அவரது கையில் ஒரு நாணயம் திணிக்கப்பட்டது. அது லோகாவாகத்தான் இருக்க வேண்டும் என்று திரும்பிப் பார்க்காமலேயே தெரிந்து கொண்டார். அந்தக் காசைப் பார்த்தார். தங்கம் ஜொலித்தது. அதில் பனைமரச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

சிறுவனை எழுப்பி அந்தக் காசைக் கொடுத்தார். ஆசிர்வாதம் செய்த அவரது வஜ்ராயுதம் போன்ற கை வற்றிப் போயிருந்ததைக் கவனிக்க விருந்தினர் இருவரும் தவறவில்லை.

சிறுவன் காசை வாங்கி உற்றுப் பார்த்தான். அவனுக்கு அந்தப் பொன் நிறம் பிடித்துப் போயிருக்க வேண்டும் போல. அதன் மேலிருந்த மரத்தைத் தன் பிஞ்சு விரலால் தடவிப் பார்த்தான்.

லோகாவின் செயலைக் கவனித்த குந்தவை அவளை இப்போது தான் நன்றாகக் கவனித்தாள். உற்றுக் கவனித்தாள். ''ஆகா! இந்தப் பெண் நிலவரத்தை நன்றாய்ப் படித்து வைத்திருக்கிறாள். மிகவும் சூடிகையாய் இருக்கிறாள்'' என்று நினைத்தாள்.

இளவரசிகளை உபசரித்து வரவேற்றுப் பீடங்களில் அமரச் செய்த பிறகு, தாமும் அமர்ந்தார் பழுவேட்டரையர். குந்தவை பேசத் தொடங்குவதற்கு ஒரு நிமிடம் ஆயிற்று.

''பாட்டனுக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?'' என்று கேட்டாள்

''நீங்கள் இன்று வந்து விட்டீர்கள் அல்லவா? இனிமேல் சீக்கிரம் குணமாகிவிடும். அரசிகளே! இந்தக் குடிசை பாக்கியம் செய்தது!'' என்று பரவசமாய்ச் சொன்னார் பழுவேட்டரையர். ''இந்த வீட்டில் ராஜகுமாரிகளின் பாதங்கள் படுமா என்று ஏங்கிய காலமுண்டு. தேவிமார் என்னைப் பார்க்க வேணுமென்று சொல்லி யனுப்பியிருந்தால் நானே வந்திருக்க மாட்டேனா?'' என்று பணிவுடன் கேட்டார்.

''நன்றாய் இருக்கிறதே. நலம் விசாரிக்கக் கூப்பிட்டு அனுப்பு வார்களா, என்ன? நாங்கள் இருவரும் பாட்டன் உடல் நலத்தை விசாரிக்கவே வந்தோம்'' என்ற குந்தவை, திரும்பிப் பார்த்தவுடன், தாதிப் பெண்களும் பல்லக்குச் சுமந்து வந்தவர்களும் முன் வந்து கூடைகள் நிறையப் பழங்கள் கொண்டு வைத்தார்கள்.

குந்தவை பேசினாள்: ''ஒன்று சொல்லட்டுமா, பாட்டா. காலாந்தகரின் அருகில் யமனே வரப் பயப்படுவானே! அதனால் உமக்கு உடம்புக் கோளாறு காற்பங்கு, மனக் கோளாறு முக்காற் பங்கு.''

பழுவேட்டரையர் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. ''தாயே! உங்கள் இருவருக்கும் நான் எவ்வளவோ தீங்குகள் செய்திருக் கிறேன். ஆனால், எதையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் என்னையும் மதித்து வந்தீர்களே!'' என்றார்.

சுந்தர சோழரின் ஆட்சிக் காலத்தில் குந்தவை தன் தகுதிக்கு அப்பாற்பட்டு மன்னரையும் அரசவையையும் ஆட்டிப் படைக் கிறாள் என்றும், தஞ்சையில் பெண்ணாட்சி நடக்கிறது என்றும் காலாந்தகரே சபைகளில் ஒரு காலத்தில் குற்றம் சாட்டியிருந்தார்.

வானதியின் குலத்தையே அடியோடு பழுவூர் அரசர்கள் வெறுத்த காலமுண்டு. சோழ நாட்டின்ஆட்சிக்குட்பட்ட பல குறு நில மன்னர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் யார் சக்கரவர்த் திக்கு நெருக்கமாவது என்ற பெரும் போட்டி ஏற்பட்டது. போட்டி யினால் பொறாமையும் புறங்கூறலும் எழுந்தன.

எப்போது பழுவேட்டரையர்களுக்கும், கொடும்பாளூர் வேளாளருக்கும் சண்டை மூளுமோ என்று நாடே கதி கலங்கிப் போயிருந்த நாள் அது. இன்று வானதி பிறந்திருந்த கொடும் பாளூரின் கை ஓங்கியிருந்தது. பழுவூர்க் கை பழுவேட்டரையரின் கையைப் போல வற்றிச் சுருங்கிப் போயிருந்தது.

குந்தவை சற்றுக் கடுமையாகப் பேசினாள்: ''பாட்டா, இந்த மாளிகைக்குள்ளே வந்தபோது பழைய ஞாபகங்களை வெளியில் மூட்டை கட்டி வைத்துவிட்டுத்தான் வந்தேன்'' என்றாள். ''நாங்கள் வந்தவுடன் நீங்களும் உங்கள் வீட்டிலுள்ள அந்த மூட்டைகளை வெளியில் விட்டெறியும்படி வேண்டுகிறேன், பாட்டா.''

எவ்வளவு பெருந்தன்மையாகப் பேசுகிறாள் இளையபிராட்டி என்று லோகா நினைத்தாள் . அவளுக்குக் குந்தவையை மிகவும் பிடித்துப் போனது.

''ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன் தாயே!'' என்று அவளி டம் அனுமதி கேட்டார் பழுவேட்டரையர். ''உன்னை நான் ஒரு காலத்தில் தூக்கி வளர்த்திருக்கிறேன். நமக்குள் இரத்த சம்பந்தமும் உண்டு. ஆனால், இந்தப் பெண்ணோ என் பகைவரென்று கருதிய கொடும்பாளூரில் பிறந்தவள்.''

வானதியிடம் திரும்பினார். ''தாயே, நமக்குள் பகை இருந்த காலமும் உண்டு. ஆனால், உண்மையாக நீயும் உன் கணவர் பொன்னியின் செல்வரும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் காட்சி யைப் பார்க்க விருப்பப்பட்டேன். அமராவதி அரச சபையில் தேவேந்திரனும் இந்திராணியும் கொலு வீற்றிருப்பதைப் போல் அது இருக்குமென்று கற்பனை செய்து வைத்திருந்தேன். வேண்டா மென்று உதறி விட்டாயே!''

''தாயே!'' என்று வானதியை மீண்டும் நோக்கினார். ''ஆனால், ஒன்று. நீயும் உமது கணவரும் வேண்டாமென ஒதுக்கியது உலகில் மிகச் சிறந்த பொருளை. சோழரின் சிம்மாசனத்தில் அமர்ந்தவர்க ளெல்லாம் மாபெரும் மனிதர்கள். ஆனால், அதை வேண்டா மென்று தள்ளிவிட்ட உன் கணவர் அவர்களையெல்லாம் விட மேலானவராய் ஆனார்.''

வானதி கண் கலங்கினாள். அந்த வார்த்தைகளில் உண்மையும், அன்பும், பாசமும் மிகுந்திருந்ததாகவே வானதிக்குத் தோன்றியது.

சோழர் குலப் பெண்கள் தம்மிடம் மிகுந்த அன்பு செலுத்தியது பழுவேட்டரையருக்குப் புத்துயிரை அளித்துப் புதிய உற்சாகத்தை உண்டு பண்ணியது.

''தாய்மார்களே! ஒன்று மட்டும் நிச்சயம். சோழர்களின் வெற்றிக்கு அவர்களுடைய பலமும் வீரமும் மட்டும் காரணமல்ல. பாசத்துடன் பண்புகளையும் ஊட்டி, அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதும் ஒரு காரணம். நானும் பெற்றேனே. நாடு நாடு என்று திரிந்தேன். பட்டம் பதவியென்று அலைந்தேன். ஆனால் குழந்தையைச் சரியாக வளர்க்கத் தவறி விட்டேன்.'' உடனே சோழர்குலப் பெண்கள் இருவரும் பழுவூர் அரசரின் மகளைத் திரும்பிப் பார்த்தனர்.

பழுவேட்டரையரின் ஆவேசத்தைக் கண்டு லோகா கண் கலங்கினாள். நிலவை மேகம் மூடியது போல, சோகமெனும் இருள் அவள் முகத்தில் பரவியது.

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்துநான்கு

''அம்மா'' என்று அழைத்தான்!''

பழுவூர் அரசர் தான் பெற்ற குழந்தைகளை நினைத்து ஆத்திரப்பட்டவுடன்- விருந்தினர் வந்திருப்பதையும் பொருட்படுத்தாமல் -லோகா அழத் தொடங்கினாள்.

குந்தவைக்குக் கோபம் வந்தது. சற்று நேரத்திற்கு முன் சிரித்து, முகமன் கூறியவளைப் புண்படுத்தி விட்டாரே இந்தக் கிழவர்! ஆவல் ததும்பிய முகத்துடன், கன்னங்கள் குழியப் புன்னகை செய்த பெண்ணை அழவைத்து வேடிக்கை பார்க்கிறாரே! இருக்கையிலிருந்து எழுந்து அந்தப் பெண்ணிடம் சென்றாள். அவளுடைய தோளின் மீது ஒரு கையைப் போட்டு, ''இது என்ன, பாட்டா? என் மக்களைச் சிரித்து வரவேற்ற நீங்கள் இவளை அழ விட்டுப் பார்க்கிறீரே! இது நியாயமா?'' என்றாள்.

பதறிப்போன பழுவேட்டரையர் ஒரு சமிக்ஞை காட்டவே, லோகா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

விம்மிக் கொண்டிருந்த பெண்ணைச் சாந்தப்படுத்தும் முயற்சியில் குந்தவை இறங்க - அப்போது அவள் முகத்தை நன்றாய்ப் பார்த்தாள். அருகிலிருந்து பார்த்தபோது லோகாவின் வசீகரம் குந்தவையை இன்னும் கவர்ந்தது. முகத்தில் விசித்திரமான புன்னகையுடன், ''உன் பெயர் என்னம்மா?'' என்று கேட்டாள்.

''லோகமாதேவி. லோகா என்று அழைப்பார்கள்'' என்றாள் அவள்.

ஆகா! என்ன பெயர்! உலகை ஆளப் பிறந்தவள் என்றல்லவா அர்த்தம். அவளது பெயர் உலக மகா தேவி. பெயருக்குத் தகுந்தாற் போல் அவள் மூவுலகை ஒரு குடையின் கீழ் ஆளப்போகும் மன்னர் மன்னனை மணப்பாளென்று நம்பி வைத்த பெயரோ?

ஒரு காலத்தில், அதாவது அவளுக்கு இந்த நாமகரணம் செய்த போது, அது மிகவும் சாத்தியமான காரியமாய் இருந்திருக்கலாம். பல தலைமுறைகளாய்ச் சோழர்களுடன் பெண் கொடுத்துப் பெண் எடுக்கும் தகுதியைக் கொண்டிருந்த பழுவேட்டரையர் குலம் இன்றோ நொந்து நொடிந்து கிடந்தது.

சரித்திரத்தின் மீது அவருக்கு இருந்த கோபத்தை அவள் பேரில் தான் தினம் தினம் காட்டுவாரென்று தெரிந்தது. 'அப்படியும் இந்தப் பெண் அவ்வளவு உற்சாகமாக இருந்தாளே?' என்று குந்தவைக்கு ஆச்சரியம்.

லோகாவின் வசீகரம் குந்தவையைப் பரவசப் படுத்தியது. 'இவ்வளவு இலட்சணமானவளைச் சமீபத்தில் நாம் பார்த்த இல்லை. ஆனால். இதுவே மற்றப் பெண் என்றால் நாம் பொறாமைப் பட்டிருப்போமே. நமக்கு அந்த எண்ணமே வரவில்லையே, ஏன்?'

லோகாவைப் பார்த்ததும் குந்தவையின் வியப்பு அளவு கடந்தது. தேவிமார் இருவரும் லோகாவின் தமக்கையை நன்கு அறிவார்கள். லோகாவின் தமக்கை சோழர் குலத்தில் வாழ்க்கைப் பட்டு அரண்மனையில்தானே இருந்தாள். பழைய மதுராந்தகனை மணந்த அவள் மிகவும் நிமிர் பிடித்தவள் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால், இந்தப் பெண் இவ்வளவு பணிவாக இருக்கிறாளே?

ஆனால், எப்படி இரு சகோதரிகளுக்குள் இப்படி வித்தியாசம் வரும் என்று குந்தவை யோசித்துவிட்டுத், தன் இரு சகோதரர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். கரிகாலன் அவசரத்தில் வாழ்ந்து அவசரமாய் இறந்தவன். அவனது மிகுந்த வலிமையினால் அருகில் வந்தவரையெல்லாம் காயப்படுத்தியவன். அதற்கு நேர் மாறான

வன் தம்பி அருள்மொழி. அன்பு, கனிவு, பொறுமை, பெருமை என்பவற்றிற்கெல்லாம் இருப்பிடம். அதுபோலத்தான் இதுவும்.

லோகாவுக்கும் ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டதென்று அவளுடைய முகபாவத்திலிருந்து தெரிய வந்தது. குந்தவையும் வானதியும் அரண்மனை ஆண்களை ஆட்டிப் படைக்கிறார்கள் என்றே தாதிப் பெண்கள் கூறக் கேட்டிருந்தாள். அதுவே உண்மையாக இருக்கும் என்றும் நினைத்து விட்டாள். ஆனால் தான் கண் கலங்கியதும், தந்தையிடம் சண்டை பிடிக்கும் குந்தவை சத்தியமாக அப்படியிருக்க முடியாது.

குந்தவையின் அரவணைப்பில் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று ஆசைதான் லோகாவுக்கு. ஆனால், வந்தவர்களைக் கவனிக்க வேண்டுமே. அந்தச் சாக்கில் உள்ளே சென்று முகம் கழுவி, அழுததற்கான அடையாளங்களை அகற்ற வேண்டுமே, என்று குந்தவையின் பிடியிலிருந்து அகன்று, அந்தப்புரத்துக்குள் ஓடினாள். அவள் கால்கள் தரையில் பட்டனவா என்றே சந்தேகம் வந்தது. ஆனால், பட்டிருக்க வேண்டும்: கிண்கிணிகள் ஒலிப்பது போல் அந்தப் பெண்ணின் கால் கொலுசுகள் ஒலித்தன.

உள்ளே சென்ற லோகாவின் பின்னே குட்டிப் பயல் ராஜேந்திரனும் ஓடி விட்டான். வந்த வீட்டில் அந்தப்புரத்துக்குள் உத்தரவின்றி நுழையலாமா என்று யோசித்தபடி, தாதிப் பெண்களும் அவனைப் பின் தொடரவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் லோகா ராஜேந்திரனைச் சுமந்தபடி உள்ளிருந்து வெளி வந்தாள்.

ராஜேந்திரன் இதுவரை இவ்வளவு அடக்கமாக இருந்ததாக யாருக்கும் தெரியாது. அதுவும் ஒரு பெண்ணிடம். பெண்கள் என்றாலே ராஜேந்திரனுக்குப் பிடிக்காது. ஆனால், அவனது துரதிர்ஷ்டம் பெண்கள் பெரும்பான்மையாய் இருந்த அந்தப்புரத்திலேயே அவன் வளர வேண்டியிருந்தது. தஞ்சை அரண்மனையில் அத்தைகளுக்கும் பாட்டிகளுக்குமிடையில் செல்லப் பிள்ளையாக வளர்ந்தான். அவர்கள் அவனை முத்தமிட்டு முத்தமிட்டுக் கன்னம் கனியச் செய்து விடுவார்கள்.

வானதி ராஜேந்திரனை லோகாவிடமிருந்து வாங்க முயற்சித்தாள். எனினும் அவன் லோகாவை விட்டு வருவதாகத் தெரியவில்லை.

லோகா மெல்ல இரண்டு தேவிமார்களையும் பார்த்து, ''உங்களை நான் அக்கா என்று அழைக்கலாம் அல்லவா?'' என்றாள்.

குந்தவை, பொய்க் கோபத்துடன், ''அடி போடி, என்னைப் பெயர் சொல்லிக் கூட அழை. என் பெயர் குந்தவை, இவள் வானதி!'' என்று அறிமுகம் வேறு செய்தாள். லோகாவுக்கு இந்த அன்னியோன்யம் பிடித்தது என்று அவள் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சிக் குறி தெரிவித்தது.

குந்தவை தொடர்ந்தாள்: ''இங்கு பாரடியம்மா. உமது குலமும் எமது குலமும் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டவை. இந்த மரியாதை எனும் மூடுபனி நமக்குள் வரக் கூடாது.''

இளவரசிகளுக்கு அருகே நின்றபடி வானதி கையில் தூங்கிக் கொண்டிருந்த மகளைக் கொஞ்சினாள் லோகா.

''அக்கா! இவளது பெயர் என்ன?''

''என் கணவர் பொன்னியின் செல்வர் இருக்கிறரே. தமக்கையின் பெயர்தான் அவருக்கு மிகவும் பிடிக்கும் பெயராம். அதைத்தான் மகளுக்கும் வைத்திருக்கிறார்!'' என்றாள் வானதி.

லோகா உடனே குந்தவையிடம் வினவினாள், ''அக்கா! உம்மைத் தவிர வாழ்க்கையில் யாரையும் அவர் மதிப்பதற்கு இல்லை போலும். அதனால்தான் உமது பெயரை வைத்திருக்கிறாரோ என்னவோ?'' என்று கேலி செய்தாள்.

''இல்லையடி, பொல்லா பெண்ணே! என்னைத் திட்ட வேண்டும் என்று நினைப்பு வரும் போதெல்லாம் அவளைத் திட்டுகிறான். ஒரே பெயர் வைத்ததால்தான் அதற்குச் சௌகரியமாயிருக்கிறது!'' என்றாள் குந்தவை.

அனைவரும் சிரித்தார்கள்.

பின், ''அப்படியெல்லாம் இல்லை. சோழர் குலம் மிகவும் குன்றிப் போயிருந்த காலத்தில் விக்கிரமன் என்று ஒரு இளவரசன் இருந்தான். அவன் சிறு பிள்ளையாய் இருக்கும் போதே அவனது தந்தை பார்த்திப மகாராஜா பல்லவர்களால் போரில் கொல்லப்பட்டார். ஆனால், விக்கிரமனுக்குப் பெண் கொடுத்து எங்கள் குலம் மீண்டும் தழைக்க வழி வகுத்தனர், பெருந்தன்மையான பல்லவர்கள். அந்தப் பெண்ணின் பெயரே குந்தவை. அதனால்தான் எங்கள் வீட்டில் தலைமுறை ஒன்றுக்கு ஒரு குந்தவையாவது இருக்கிறாள்!'' என்றாள்.

''ராஜேந்திரா, இங்கே வா. லோகாவைத் தொந்தரவு செய்யாதே!'' என்று அவனை லோகாவிடமிருந்து அழைத்துக் கொண்டாள், வானதி. வேண்டா விருப்புடன் அவனும் சென்றான். ஆனால், ஒரு நிலையில் வானதியால் ராஜேந்திரனைக்

கட்டுப்படுத்த முடியவில்லை. தப்பி ஓடி விட்டான். அவன் வெளியே தோட்டத்தை நோக்கி ஓட தாதிப் பெண்கள் அவனைப் பின் தொடர, சற்று நேரத்தில் வீடே களை கட்டிவிட்டது. பழுவேட்டரையர் முகத்தில் பெருமிதம்.

"இவன் துடுக்குத்தனத்தை அடக்கவே மூன்று தாதிப் பெண்கள் தேவைப்படுகிறார்கள். இவனைப் போய் மூன்று உலகத்தையும் ஆளப்போகும் பிள்ளை என்று குடந்தை ஜோசியர் சொன்னாரே!" என்று சொல்லிச் சிரித்தாள் வானதி.

"அதிலென்னடி சந்தேகம்?" என்றாள், குந்தவை.

"ஆம், அக்கா. குடந்தை ஜோசியர் சொன்னது எதுவும் தவறாது" என்று சொல்லி வானதி கலீரென்று நகைத்தாள்.

"சிரிப்பதற்கு என்னடி இருக்கிறது?" என்றாள் குந்தவை. கொடும்பாளூர் நாட்டு இளவரசி எதைப் பற்றிச் சிரிக்கிறாளென்று யூகித்து விட்டாள்.

சிரிப்புக்கு நடுவே தடுமாறி வந்த வார்த்தைகளில் வானதி மற்றவர்களுக்கு விளக்கினாள்: "குடந்தை ஜோசியரிடம் நான் இளைய பிராட்டிக்கு ஏற்ற அந்த ஸுகுமாரரான இராஜகுமாரர் எங்கிருந்து, எப்போது வருவார்?" என்று கேட்டேன்.

"கட்டாயம் வரப் போகிறார். அதி சீக்கிரத்திலேயே வருவார்" என்றார் ஜோசியர்.

"எப்படி வருவார்? நேரே ஆகாசத்திலிருந்து கூரையைப் பொத்துக் கொண்டு வந்து குதிப்பாரா?" என்று குந்தவை தேவி கூடக் கேலியாகக் கேட்டார்கள். மறுநிமிடம் வல்லவராய அண்ணா ஜோசியருடைய சீடருடன் சண்டையிட்டுக் கொண்டு உள்ளே வந்து குதித்தார். அந்தச் சம்பவத்தை நினைத்தேன், சிரித்தேன்!" என்றாள் வானதி.

நாணி முகம் சிவந்த குந்தவை, வானதியுடன் ஜோசியர் வீட்டுக்குப் போனதைப் பற்றி மேலும் கூறினாள். "இவள் வீராதி வீரனை மணக்கப் போகிறவள், உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் போகும் புதல்வனைப் பெறப் போகிறவள்!" என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போனார் ஜோதிடர். அவள் ஜாதகம் மிகச் சிறந்தது என்று கூறினார். அந்தத் தைரியத்தில்தான் என்னைக் கேலி செய்கிறாள்"என்றாள்.

"ஐயோ! அக்கா, தவறாக எடுத்துக் கொண்டீரா?" என்று குந்தவையைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கினாள், வானதி.

இவர்களிடையே இருந்த அன்னியோன்யத்தைக் கண்டு வியந்தாள் லோகா. பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு தானும் அந்தக் குடந்தை ஜோசியரைச் சென்று பார்த்த அனுபவத்தை நினைத்துப் பார்த்தாள்.

பழுவேட்டரையரின் தங்கை ஒருத்தி வீட்டோடு இருந்தாள். அவள் இளம் வயதிலேயே விதவையாகித் தாய் வீடு திரும்பியவள். அவளே தாயில்லாப் பெண்களான லோகாவையும் அவளது தமக்கையையும் வளர்த்து வந்தாள். அவள்தான் தன் அண்ணனிடம் வந்து, "ஒரே ஒரு காரியத்துக்கு மட்டும் அனுமதி கொடுங்கள். அந்தக் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்கு ஒரு தடவை போய் அவரிடம் லோகாவைப் பற்றிச் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறேன்" என்றாள்.

பழுவேட்டரையரும் எதிர்பாராத விதமாக, "சரி, நானும் வருகிறேன்" என்று சொல்லிவிட்டார்.

காலத்தின் தொடக்கம் முதல் மனிதர்களுக்கு வருங்கால நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதில் ஆர்வமிருந்தது. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறி சொல்லுகிறவர்கள் - இவர்களுக்கு எந்த நாட்டிலும் குறைவில்லை. அவர்களிடம் சென்று எதிர்காலம் எனும் பனி மூட்டத்தை அகற்றிக் கொள்வோருக்கும் குறைவில்லை. விதி விலக்காய் இருந்தவர்கள் இந்தப் பழுவேட்டரையர்கள்தான்.

ஏனென்றால் வெகு காலமாக விதி அவர்கள் வசம் பாசம் காட்டிக் கொண்டிருந்தது. ஆகையினால் தெளிவாய்த் தெரிந்ததை ஒருவனிடம் சென்று தட்சிணை கொடுத்துத் தெரிந்து கொள்வானேன் என்று ஜோசியர் வீட்டுப் பக்கமே சென்றதில்லை.

குடந்தை சோதிடரின் வீடு முன்பொரு நாளில் நகரின் ஒரு மூலையில் காளி கோயிலுக்கு அருகில் ஒரு தனித்த இடத்தில் இருந்தது. குடந்தை நகருக்குள் புகாமலேயே நகரைச் சுற்றிச் சென்று அந்த வீட்டை அடைந்து விடலாம். தாங்கள் ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களென்று வெளியே தெரிய விருப்பப்படாதவர்கள் செல்லச் சௌகரியமாக இருக்கும் என்பதனால் அந்த ஏற்பாடு. ஆனால், ஒரு வெள்ளத்தில் அந்த வீடு அடித்துச் செல்லப்படவே, இப்போது ஆற்றிலிருந்து தூரமாகவே வீடு கட்டித் தன் தொழிலைக் கவனித்தார் குடந்தை ஜோதிடர்.

வீட்டு வாசலில் காத்திருந்து சோதிடர் மிக்க மரியாதையுடன் பழுவேட்டரையருடன் வந்தவர்களை வரவேற்று உபசரித்தார்.

"அரசர் பெருமானை வெகு தூரத்திலிருந்துதான் இதற்கு முன் பார்த்திருக்கிறேன்" என்று பெருமிதத்துடன் சொன்னார்.

குடிலுக்குள் நுழைந்த பழுவூர் அரசர் சுற்று முற்றும் பார்த்தார். சுவரில் ஒரு மாடத்தில் அம்பிகையின் படம் மலர் மாலையால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அமருவதற்குச் சில பீடங்கள் சித்தமாயிருந்தன. குத்து விளக்கெரிந்தது. அங்குமிங்கும் கோலங்கள் போடப்பட்டிருந்தன. ராசிச் சக்கரங்கள் போட்ட பலகைகளும் ஓலைச்சுவடிகளும் சுற்றிலும் இறைந்து கிடந்தன.

எல்லாரும் பீடங்களில் அமர்ந்த பிறகு, சோதிடரும் உட்கார்ந்தார். பழுவேட்டரையர், அவரிடம், "ஜோதிடரே! உமது சாஸ்திரத்தில் எனக்கு நம்பிக்கை யில்லை" என்று முகத்தில் அடித்தாற்போல் கூறினார்.

ஜோதிடர் இதைப்போல் எவ்வளவு பேரை இதற்கு முன் பார்த்திருப்பார்? தன் அஸ்திரத்தை விட்டார் "அதற்கென்ன, அரசே. பலருக்கும் நம்பிக்கை இல்லைதான். ஆனால், என்னைத் தேடி அவர்கள் வருகிறார்கள். உமது சகோதரர் தன் மறைவுக்குச் சில தினம் முன் என்னைத் தேடி வந்தார். ஆனால், உண்மையைச் சொல்லப் போனால் அவர் ஜோசியம் கேட்க வரவில்லை. எனினும் சோழர் பிரசதேசத்தில் வைர நெஞ்சம் கொண்ட இரு மாபெரும் வீரர்கள் என்னைத் தேடி வந்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பரம திருப்தி. என் பிறவிப் பயனை அடைந்து விட்டேன்" என்றார்.

தனக்குத் தெரியாமல் அண்ணன் இவரைச் சந்தித்தாரா என்று வாயடைத்துப் போனார் பழுவேட்டரையர்.

"யாருக்கு ஜாதகம் பார்க்க வேண்டும்?" என்று வினவினார் ஜோதிடர். ஆனால், அவருக்கு நன்றாய்த் தெரியும், பழுவேட்டரையர் கூட்டிவந்த இந்த யுவதிக்குத் தானென்று.

உலகத்தில் கஷ்டங்கள் அதிகமாகும் போதுதான் சோதிடர்களைத் தேடி மக்கள் அதிகமாக வருவார்கள். இப்போது உத்தம சோழரின் ஆட்சியில், குடி மக்களுக்குக் கஷ்டம் என்பதே கிடையாது. இப்போது பழுவேட்டரையர் வருகிறேன் என்று சொல்லி அனுப்பியிருக்கிறாரே என்று அவரது மகள்கள் இருவருக்கும் முன்பே எழுதி வைத்திருந்த ஜாதகத்தை ஏற்கெனவே எடுத்து வைத்துவிட்டார் ஜோதிடர்.

தெய்வத்தைக் கும்பிட்டு லோகாவின் ஜாதகத்தைப் பார்த்தவர் திடுக்கிட்டார். "இதை எழுதிய போது இதெல்லாம் நம் கண்ணுக்குப் புலப்படவில்லையே! சரி. எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் வர

வேண்டும் போலிருக்கிறது" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

வந்தவர்களும் அவர் முகம் மாறியதைக் கவனித்து விட்டார்கள்.

"சற்றுப் பொறுக்க வேணும்!" என்று சொல்லிவிட்டு, ஜோதிடர் பக்கத்திலிருந்த ஒரு பழைய பெட்டியைத் திறந்து சிறிது நேரம் புரட்டினார். பிறகு, அதிலிருந்து சோழிகளை எடுத்துப் பார்த்தார். பின்பு சோழிகளைத் தரையில் சிதறும்படி போட்டு எண்ணிக்கையைக் கவனித்தார். ஜோதிடர் கண்ணை மூடிக் கொண்டு சிறிது நேரம் ஏதோ மந்திரம் ஜபித்தார். தியானம் செய்தவர் கண்ணுக்கு முன் எதிர்காலம் அப்படியே தொடர்படமாக ஓடியது போலும். சோழிகளும் ஜாதகத்தை உறுதிப்படுத்துகின்றன. அவ்விதமே தேவி பராசக்தியின் அருள் சொல்கிறது என்று நினைத்துக் கொண்டார்.

மெல்லக் கண்களைத் திறந்தவர், லோகாவை ஆச்சரியத்துடன் நோக்கினார். பழுவூர் அரசரைப் பார்த்து, ஜோதிடர், "ஐயனே! கவலைப் பட வேண்டாம். நான் பரபரப்பு அடைந்தது வேறு விஷயத்துக்காக. இந்தப் பெண்ணின் ஜாதகம் மிகச் சிறப்பானது. தமிழ்ச் சரித்திரத்தில் எந்த ஒரு பெண்ணுக்கும் நடந்திராத மகிமை இவளுக்கு நடக்கும். இவளுக்குத் தமிழ் மரபில் தோன்றிய மாபெரும் அரசன் பள்ளிப் படை ஒன்று கட்டுவான்!" என்றார்.

"ஹா ஹா" என்று சிரித்து விட்டார், பழுவேட்டரையர். "வரும் போதே உம்முடைய சாஸ்திரத்தில் எனக்கு ரொம்ப நம்பிக்கை இல்லை. இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் இழந்து விட்டேன்!" என்று பரிகசித்தார். "ஆனால், உம் நல்ல மனதைப் பாராட்டுகிறேன். வாழ்க்கையில் நொந்து நூலாய்ப் போன எனக்கு ஆறுதல் சொல்ல நினைக்கிறீர். என் மகள் மிகவும் நன்றாய் வாழ்வாள் என்று கூறினால் நான் சந்தோஷப்படுவேன் என்று கூறுகிறீர். ஆனால், உண்மையைத் தெரியவே உம்மிடம் வந்தோம். புகழுரை கேட்க வேண்டுமென்றால் புலவருக்குச் சொல்லியனுப்பியிருப்பேன். பெண்ணுக்குப் பள்ளிப்படையா? என்னால் நம்ப முடியவில்லையே. இதுவரை எந்தப் பெண்ணுக்கும் அந்தப் பெருமை கொடுக்கப் பட்டதில்லையே!" என்றார்.

பழந்தமிழ்நாட்டில் போர்க்களத்தில் உயிர் துறந்த மாவீரர்களின் ஞாபகமாக வீரக் கல் நட்டுக் கோயில் எடுப்பது மரபு. வெறும் கல் மட்டும் ஞாபகார்த்தமாக நாட்டியிருந்தால் 'நடுகற் கோயில்' என்று வழங்குவார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலையையும் ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால் அது 'பள்ளிப்படை' என்று வழங்கப்படும்.

பழுவேட்டரையர் குரல் இறுக்கமானது. "தாங்கள் வேண்டு மென்று ஜோதிடம் சொல்லும் கருத்தைத் திரித்துக் கூறுகிறீர்கள். நீங்கள் பேசுவது வெறும் ஆறுதல் வார்த்தைகள் தாமென்றால் நான் இங்கிருந்து வெளியேறச் சித்தமாயிருக்கிறேன்."

"ஐயனே! எனக்கு நல்ல மனம் என்று சொன்னதற்கு நன்றி. ஆனால், நீர் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இவள் ஜாதகம் பலவற்றைக் கூறினாலும் அதை நான் முதலில் சொல்லவில்லை. இப்போது சொல்கிறேன். இவளது கணவன் மாபெரும் வீரன். இவளது மகனோ அதை விட மாபெரும் வீரன். ஆனால், எனக்கு ஒன்றுதான் புரியவில்லை. இதைப் போலவே கருத்துகள் தெரிவித்த ஜாதகத்தை நான் சில ஆண்டுகளுக்கு முன் பார்த்திருக்கிறேன். கிரகங்கள் வெவ்வேறு இடத்திலிருந்தாலும் தெரிவித்த கருத்து இப்படி ஒத்திருப்பதே கஷ்டம். இரட்டைக் குழந்தைகளுக்கே ஒன்றாய் ஜாதகம் அமையாது. ஆனால், இந்த இரண்டு பெண் களுக்கும் எப்படி...,?"

இப்போது அரசரின் கவனத்தை முழுமையாகச் சிறைப் பிடித்து விட்டார் ஜோதிடர். "அந்தப் பெண் யாரோ?" என்றார் பழு வேட்டரையர்.

"மற்றவர் ஜாதகத்தைப் பற்றி உம்மிடம் சொன்னால், நாளை உமது ஜாதகத்தைப் பற்றி நான் வெளியே பேசுவேன் என்ற பயம் உமக்கு வரும், மன்னா. அதனால் அதைப் பற்றிய பேச்சைத் தவிர்த்து விடலாம்" என்று கூறிவிட்டார் ஜோதிடர்.

பழைய நினைவுகளில் இருந்து திரும்பி வந்த லோகாவுக்கு, குந்தவை வானதியின் ஜாதகத்தின் மகிமையைப் பற்றி அதே வார்த்தைகளைக் குறிப்பிட்டபோது, ஒரு யோசனை வந்தது. 'ஜோதிடர் சொன்ன அந்தப் பெண் வானதிதானோ?'

குந்தவை கேட்டாள். "லோகாவுக்கும் திருமணம் செய்யும் வயது வந்து விட்டதல்லவா? அந்த ஜோதிடரைச் சென்று பாருங்கள்" என்றாள்.

லோகா பதிலைத் தயாராக வைத்திருந்தாள். "எனக்குத் திருமணமே வேண்டாம், அக்கா."

"ஏனடி அசட்டுப் பெண்ணே?" என்றாள் குந்தவை.

"அப்பாவுக்கு யார் இருக்கிறார்கள், அக்கா? ஏதாவது காலைத் தலையை வலித்ததென்றால் அவருக்கு வேறு துணை யார்?"

"அவர் வீரர். தலை வலிக்கெல்லாம் பயப்படுவாரா என்ன?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள், குந்தவை.

ஒரு காலத்தில் திருமணப் பேச்சைத் தந்தை எடுத்தால் இது போல வீர வசனங்கள் பேசுவாள் லோகா. "தந்தையே! உம்மை விட்டுப் போகச் சொல்லாதீர்கள். அதை விடக் கிணற்றில் விழச் சொன்னால், விழுந்து விடுகிறேன். விஷத்தைக் குடிக்கச் சொல் லுங்கள், குடித்து விடுகிறேன். நீங்கள் இருக்கும் நிலையில் எனக்குத் திருமணம் ஒரு கேடா?" என்பாள்.

ஆனால், இன்று அந்த வார்த்தைகளில் ஏனோ அழுத்தமில்லை. அதற்கு முக்கிய காரணம் அந்தச் சம்புவராயனைப் பார்த்தவுடன் அவளுக்குள் ஏற்பட்ட ஒரு மன மாற்றம் தான். தனக்காகத் தன் வெற்றியை விட்டுக் கொடுத்த வீரனை அவள் இதுவரை பார்த்ததே இல்லை.

அப்போது வெளியிலிருந்து சப்தம் அதிகரித்தது. அதுவரை வெளியே தோட்டத்தில் தாதிப் பெண்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் உள்ளே வந்தான். ஓடி வந்தவன் மூச்சிரைக்க நின்றான். ஒரு பக்கம் திரும்பினான். அங்கு வானதியும் குந்தவையும் நின்றார்கள், மறுபுறம் லோகா இருந்தாள்.

ராஜேந்திரன் தன் சின்னத் தலையை இப்படியும் அப்படியுமாய் மாற்றி மாற்றித் திருப்பினான். அவனது மைதீட்டிய கண்களால் இரு பெண்களையும் உற்றுப் பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வந்தான்.

எல்லாரும் அதிசயிக்கும் ஒரு விஷயம் நடந்தது. ஓடிச் சென்று லோகாவின் கால்களைக் கட்டிக்கொண்டு, "அம்மா!" என்றான்.

"அவளைத் தொந்தரவு செய்யாதே. இங்கு வா" என்றாள் வானதி.

தன் தலையை வேகமாக அசைத்துவிட்டுத் தன் சிறு விரலை வைத்து லோகாவின் கன்னத்தில் இருந்த குழியை ஆராய்ந்தான். அவனது தரப்பு வாதத்தை வலியுறுத்துவது போல மிக இனிய மழலைக் குரலில் ராஜேந்திரன் அவளைப் பார்த்து, "அம்மா!" என்று மீண்டும் அழைத்தான்.

இதைக் கேட்டுக் குந்தவை விழுந்து விழுந்து சிரித்தாள்.

தன்னைத்தான் அந்தப் பயல் அம்மா என்று அழைக்கிறான் என்பதை லோகா உணர்ந்து நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஒரு நிமிடமாயிற்று. பின் லோகாவுக்குப் பெருமை தாங்கவில்லை.

ராஜேந்திரனைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்தாள்.

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்தைந்து

வந்தது நற்செய்தியா? துற்செய்தியா?

ராஜேந்திரன் லோகாவை 'அம்மா' என்று அழுத்தமாக அழைத்ததும், எல்லாரும் சிரித்தார்கள்.

குந்தவை சிரித்தாள். அந்தச் சிறுவனின் தாய் வானதியும் சிரித்தாள். பழுவேட்டரையருக்கே ராஜேந்திரனின் அந்தச் செயல் புன்னகையை உண்டு பண்ணிற்று. ஆனால், அம்மா என்று அழைக்கப்பட்ட லோகா மட்டும் வாயடைத்துப் போனாள்.

ஏதோ ஐந்தாண்டுகளாக எஜமானர் எப்போது சிரிப்பார் என்று காத்திருந்தது போலப் பழுவூர் அரண்மனையினுள் ஒரே சிரிப்பொலியும் கும்மாளமுமாய் இருந்தது. அதற்குப் பின் அடிக்கடி அந்தப் பெண்கள் அவனுடைய சேஷ்டைகளைக் கண்டு 'கலீர் கலீர்' என்று சிரித்தார்கள். பலமுறை கெக்கலி கொட்டிப் பலமாகச் சிரித்தார்கள்.

இந்தச் சுற்று வட்டாரத்தில் பெண்கள் சிரித்துக் கும்மாளம் கொட்டமடித்து எவ்வளவு நாட்களானது! அரசிளங் குமரிகள் வந்ததில் பழுவேட்டரையருக்குப் பெரும் மகிழ்ச்சி. அதிலும் அந்தக் குட்டிப் பயல் இந்த வீட்டை ஒரு கலக்குக் கலக்குகிறானே என்ற சந்தோஷம்.

பழுவேட்டரையர் சிரித்த தருணத்தில் தான் கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டாள், குந்தவை.

''பாட்டா, உம்மிடம் ஒன்று கேட்க வேண்டுமே?''

''கேள். தயக்கமில்லாமல் கேள். நான் உன் தந்தையை யொத்தவன். அப்படிச் சொல்ல எனக்கு அருகதை இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால், தாயே! உன்னை என் மகளாகவே கருதுகிறேன். உன்னைப் போல ஒரு பெண், பிறந்த இடத்தில் நல்வாழ்வைப் பற்றி எந்நேரமும் நினைத்திருந்தால் வளராதா அந்தக் குடும்பம்? பெருகிப் பரவாதா அதன் புகழ்? எனக்கும் வாய்த்தாளே, ஒரு மூத்த மகள்... அந்தச் சனியனின் வாழ்க்கையை நல்லபடி அமைக்க நினைத்தே என் குலம் அழிந்தது'' என்று புலம்பினார். ''இந்தச் சங்கடமெல்லாம் நேற்று நடந்தது போல் ஞாபகம் வந்தது. ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.''

''கெட்ட காலம் வந்தால் அப்படித்தான் பாட்டா'' என்றாள், ஆறுதலாகக் குந்தவை. அவரது கோபம் அவளுக்கு நன்கு

புலனானது. ஆனால், மீண்டும் மீண்டும் பேச்சு அவர் மூத்த மகளிடம் போவதில் அவளுக்கு விருப்பமில்லை.

''இல்லை, தாயே. காலத்தைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. பேராசையினால்தான் பழுவூர் ராஜ்யம் இன்றைக்கு இந்தக் கதியை அடைந்திருக்கிறது. அதனால்தான் எங்கள் அதிகாரத்தை, பல நூறாண்டுக் காலமாக உழைத்துப் பெற்ற பரிசை இழக்கும்படி நேரிட்டிருக்கிறது!'' என்றார் விரக்தியான குரலில், பழுவூர் அரசர்.

குந்தவை தொடங்கினாள்: ''அப்படி என்ன வந்தது, நீங்கள் ஒதுங்கியே இருக்க? இங்கு நிற்கிறாளே, லோகமாதேவி, இவள் வயதுக்கு வந்த பின் நான் அவளைப் பார்த்திடக்கூட இல்லை. அப்படி எங்கள் மேல் உங்களுக்கு என்ன சினம்?'' என்றாள்.

பழுவேட்டரையர் பதறிப் போனார். ''ஐயோ! நன்றாய் இருக்கிறது. உன் மேல் எனக்கென்ன சினம்? தாயே! என் மனத்திலே கோபமோ, வன்மமோ ஒன்றுமில்லை. இருப்பதெல்லாம் உங்கள் நட்புக்கு ஏற்றாற்போல் என் நடப்பு இல்லையென்ற எண்ணம்தான்.''

குந்தவை விடுவதாக இல்லை. ''சரி. பின் இப்படித் தனியாக அரண்மனையில் இருந்தால் உலக நடப்பு என்ன தெரியும்? இராஜ்யம் குட்டிச் சுவராய்ப் போய்விடும். என்னவோ உங்கள் சேவை இத்துடன் முடிந்து போய்விட்டது போல் பேசுகிறீரே'' என்றாள்.

''என் மேல் நீங்கள் எல்லாரும் கோபமாய் இருக்கிறீர்கள் என்று எண்ணித்தான் இத்தனை நாளும் தங்களை நான் நேரில் சந்திக்காமலிருந்தேன். ஆனால், எங்கள் பேரில் அரச குலத்தின் கோபம் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது.''

குந்தவை பதிலளித்தாள். ''உங்கள் பேரில் நாங்கள் கோபங் கொண்டால் எங்களைப் போல் நன்றி கெட்டவர்கள் யாரும் இல்லை. இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல, ஏழேழு ஜன்மங்களிலும் நன்றியுள்ளவளாயிருப்போம். அது போலவே பழுவேட்டரையர்கள் கெட்டவர்கள் என்று அரிச்சந்திரனே வந்து சொன்னாலும் நான் நம்ப மாட்டேன் என்று என் தந்தை சுந்தர சோழர் சொல்லவில்லையா?''

பிரமித்துப் போனார் பழுவேட்டரையர். அவரது மௌனத்தை கவனித்தபடி, குந்தவை மேலும் ஆறுதலாய்ப் பேசினாள்: ''வீணாக மனதை வருத்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களை ஒதுக்கி வைக்கும்படி யாராவது விரும்பிக் கட்டளையிடுவார்களா? அப்படி நினைத்து நீங்கள் ஆத்திரப்பட்டுக் கொதித்துக் கொண்

டிருக்கிறீர்கள். அப்பா இருந்தால் நீங்கள் ஒதுங்கியிருக்க முடியுமா?''

பழுவேட்டரையர் ஏதோ ஆத்திரத்தினால் இவ்வளவு நாள் ஒதுங்கியே இருந்துவிட்டார். அதனால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியின் வேகம் நாளாக ஆகக் குறைந்து மங்கி வந்தது. அதற்கு ஏற்றாற்போல் அவரைச் சாந்தப்படுத்தித் தேசிய அரசியலில் இணைக்கவேண்டும் என்றுதான் குந்தவை வந்திருக்கிறாள் என்று தெரிந்து கொண்டார்.

''தாயே! அழகாய்ப் பேசுகிறீர். உமது வாதம் வார்த்தை அளவே இல்லையென்று என்னாலும் யூகிக்க முடிகிறது. சிலரை அரசன் தண்டிப்பான். சிலரைக் கடவுள் தண்டிப்பான். என் விஷயம் அப்படித்தான். ஆனால், தண்டிக்கப்பட்டு இருந்தாலும், தண்டனையின் அளவு போதவில்லை என்று நினைக்கும் மனிதன் நான். சோழர் உப்பைத் தின்றவன். சிபிச் சக்கரவர்த்தி தன் தொடையை அறுத்துக் கொடுத்தானே, அந்தக் குலத்துக்குத் தெரிந்தோ தெரியாமலோ துரோகம் செய்தவன் நான். அதற்காகவே தனியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தேன்'' என்றார்.

''நான் ஏன் வெளியே செல்ல மறுக்கிறேன் என்று கேள். தாயே! இந்த நகரம் எனக்குப் பல கசப்பான நினைவுகளைத் தினம் தினம் கொடுக்கும் நரகம். சோழர்களுக்கு இனித் தொந்தரவு கொடுக்க மாட்டேன். பழுவூருக்குப் போக விரும்புகிறேன். தஞ்சையில் முக்கியமான அலுவல் இருக்கிறது. அதை முடித்துவிட்டுத்தான் மற்றப் பிரயாணம் எல்லாம். ஆனால், என் பழி தீரும்வரை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த நகரை விட்டு வெளியேறுவதற்கு உடன்பட மாட்டேன். என் பெயரைச் சரி செய்து கொண்டு விட்டு இந்த நகரத்தை விட்டு அகல வேண்டும், தாயே!'' என்றார் பழுவேட்டரையர்.

குந்தவை அதிர்ந்து போனாள், ''என்ன, தஞ்சையை விட்டு வெளியேறுவதா? இது தர்ம தேவதைக்குத் தகுமோ?'' என்றாள். ''அழகாயிருக்கிறது. நல்ல தீர்மானம் செய்தீர்கள். சோழ குலத்துக்குப் பரம்பரைத் துணைவர்களான நீங்கள் எங்கள் தலை நகரை விட்டுச் செல்வதா? எங்கள் சரித்திரத்தின் கதைகள், காவியங்களிலிருந்து உங்கள் தியாகத்துக்கும் சேவைக்கும் எத்தனையோ உதாரணங்களை நான் சொல்லுவேன். முத்தரையர் வசத்திலிருந்த தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டு முதலில் அந்நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். இந்த நகரம் எங்களுக்குக் கிடைத்ததே உங்களால்தான். இதைவிட்டு நீங்கள் செல்லுவதா?'' என்றாள் குந்தவை.

''பாட்டா, சோழ குலத்துக்கு விரோதமாக நீங்கள் எதுவும் செய்ய மாட்டீர்கள் என்பது எவ்வளவு உறுதியோ, தர்ம நியாயத்துக்கு விரோதமாகவும் எதுவும் எப்பொழுதும் செய்ய மாட்டீர் என்பதும் இரு மடங்கு உறுதி. ஏதோ செய்யாத தவறைச் செய்து விட்டோம் என்று குழம்பி உளறுகிறீர்கள். என்னைக் கேட்டால் உமக்கு உடல் நிலை இன்னும் சரியாகவில்லை என்றே தோன்றுகிறது. பித்தத்திலும் காய்ச்சலிலும் பிதற்றுகிறீர்கள்'' என்று உரிமையோடு கோபித்தாள்.

நிலைமையை நன்கு அறிந்திருந்தாள், குந்தவை. பழுவேட்டரையரின் தேக சுகம் சரியாக இல்லை. மலை உச்சியிலிருந்து விழுந்தவரல்லவா? அவரது மனதும் சரியில்லை. வானத்திலிருந்து தள்ளி விடப்பட்டவர் அல்லவா?

குந்தவையின் பேச்சைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை, அந்தக் கிழவர். அவர் தொடர்ந்தார். ''என் மகள் நம் பரம எதிரியுடன் இருக்கிறாள். அவளைப் பலவந்தப்படுத்திப் பிடிவாதமாக அவன் அழைத்துப் போகவில்லை. அவளாகச் சென்று விட்டாள். சதிபதிகளாய்க் கைகோத்துக்கொண்டு காட்டில் உலவுகிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் எந்தக் காலத்தில் என் குலம் முன்னேறப் போகிறது? என்னை யார் நம்பப் போகிறார்கள் என்று ஒதுங்கி விட்டேன்'' என்று அலுப்படைந்தார்.

''அவளால்தானே எனக்குப் பட்டப் பகலில் இருள் கவிந்தது. என் மூத்த மகளை இந்தப் பூலோகத்திலிருந்து ஒழித்தால்தான் என் குலத்துக்குக் கதி மோட்சம் என்ற உறுதி கொண்டேன்!'' என்றார்.

பழுவூர் அரசருக்கு ஆண்டுகள் செல்லச் செல்லச் சோழர்கள் தன்னை மன்னித்து அழைத்துப் போவார்கள் என்ற நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது. அதனால்தான் அந்தப் பிரம்மப் பிரயத்தனமான காரியத்தில் இறங்க நினைத்தார். அந்த மூத்த பெண் ஓடிப்போனதில் இவருடைய ஆகாசம், பூமி, திக்குத் திகாந்தமெல்லாம் தாறுமாறாக வெடித்தன.

பதறிப் போனாள் குந்தவை. ''ஐயா! நீங்கள் இப்படியெல்லாம் சொல்லச் சொல்ல என்னுடைய மனக் கவலைதான் அதிகமாகிறது. இதையெல்லாம் கேட்பதற்கே எனக்குச் சகிக்கவில்லை.''

அவளுடைய பதற்றம் அவரை அசைத்ததாகத் தெரியவில்லை. ''இப்படித்தான் நான் செய்த காரியம் பிசகானது என்று சொல்கிறார்கள் பலரும். மகளைப் பெற்றவனுக்கு அவளைக் கொல்ல உரிமையில்லையா? அவள் வீட்டிலிருந்து புறப்பட்ட சமயம் என் மனத்திலிருந்த வருத்தம் இப்போது இல்லை. அதற்குப் பதிலாக

இப்போது கோபமும் ஆத்திரமும் என் மனத்தில் குடி கொண்டிருக்கின்றன. என் மகளைக் கொள்ளை கொண்டு போன பாண்டிய ஆபத்துதவிகள் எனும் பகைவர்கள் மீது குரோதம் எழுகிறது. அவளைப் பறிகொடுத்து விட்டேன் என்பதை விட, மூடத்தனத்தினால் அவளும் நம் எதிரியாகி விட்டாளே, நமக்கு உப்பிட்ட சோழருக்கு எதிராகச் செயல்படுகிறாளே என்று கோபம் வருகிறது. ஆனால், ஒன்று தாயே. அவளாக அப்படிச் செய்யவில்லை. அந்தப் பாண்டி நாட்டுப் பாஷாண்டியினிடம் அவள் அகப்பட்டுக் கொண்டாள். பாண்டியரின் மந்திர தந்திரங்கள், சூழ்ச்சிகள், வேஷங்கள் எல்லாம் என் குலத்தை வஞ்சித்துவிட்டன'' என்றார்.

''அவர்கள் மட்டுமா என்னை வஞ்சித்தார்கள்? என் மகளையும் மருமகனையும் கொல்ல ஆள் கேட்டு இந்த தேசத்துப் பிரதமராயிருக்கும் அந்தப் பொல்லாத பிராமணனிடம் சென்றேன். இளம் சம்புவராயனை அனுப்பி அந்த வேலையைக் கெடுத்து விட்டார். நீ பிரதமர் செய்த காரியத்தைக் கேட்க வேண்டுமே. ஒரு பெரும் பாண்டியக் கூட்டத்தை அடக்க இரண்டு பேரை அனுப்பினார். அந்த வீர வைணவனையும் இளம் சம்புவராயனையும்'' என்று குற்றம் சாட்டினார்.

பிரதமர் ஏதாவது செய்தாரென்றால் அதற்குத் தக்க காரணம் இருக்கும் என்று குந்தவைக்கு நன்கு தெரியும். அதனால் பேச்சை மாற்றினாள்.

''என்ன, இளம் சம்புவராயன் கந்தமாறன் தஞ்சையில் இருக்கிறாரா? நான் பார்க்க வேண்டுமே'' என்றாள் குந்தவை.

கந்தமாறன் என்ற பெயரை இளவரசியின் வாயிலிருந்து கேட்டவுடன், பழுவேட்டரையருக்கு முகம் சுருங்கியது. லோகாவின் முகமோ மலர்ந்தது.

''உங்களுக்கு அவரை எப்படித் தெரியும்?'' என்றாள் லோகா.

இந்தப் பெண்ணுக்கு என் இந்தக் கேள்வி என்று குந்தவையும் நினைத்தாள். பழுவேட்டரையரும் நினைத்தார்.

''அவர் என் கணவரின் ஆருயிர் நண்பர். இளமைக் காலத்திலிருந்து இருவரும் உயிருக்கு உயிராய்ப் பழகியிருந்தார்கள். அப்பப்பா! அவரைப் பற்றி இடம் காலம் பற்றிக் கவலைப்படாமல் பேசிக்கொண்டே இருப்பார் என் கணவர். அவருடைய அருந்தவ நண்பரைப் பற்றிப் பேசாத நாளில்லை. நானும் இளம் சம்புவராயனைப் பார்த்துப் பழகியிருக்கிறேன். ஆனால், அப்போது நாடெங்கும் ஒரே குழப்பமாயிருந்தது அல்லவா? நம் எல்லாருக்கும் சோதனையான காலம் என்பதால் அவரைப் பற்றிக் முழுவது

வரைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், எப்பேர்ப்பட்ட நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன் என்று என் கணவர் அவரைப் பற்றி கூறும் போதெல்லாம் வருத்தப்படுவேன்'' என்றாள் குந்தவை.

வடக்கெல்லையில் தன் கணவரும் இளம் சம்புவராயனும் புரிந்த வீரதீரப் பராக்கிரமங்களை அவள் வர்ணித்தாள். மாறனின் அற்புதக் குணாதிசயங்களைப் புகழ்ந்தாள். மலைத்துப் போனது லோகா மட்டுமல்ல; அவள் தந்தையும்தான்.

ஒரு காலத்தில் அந்தக் கந்த மாறனை முதுகில் கத்தியால் குத்திவிட்டார், அண்ணன் பெரிய பழுவேட்டரையர். அவனைக் காப்பாற்றியது வந்தியத் தேவன்தான். ஆனால், எதிர்பாராமல் மாறன் உயிர் பிழைத்தபோது அந்தக் கொலைப் பழியை வந்தியத் தேவன் மேலே போட்டார்கள், பழுவேட்டரையர்கள்.

அந்த ஆருயிர் நண்பர்கள் பிரியக் காரணமாய் இருந்தது பழுவூர்ச் சதி தான். ஆனால், இன்னும் வந்தியத் தேவன் தினமும் மாறனைப் புகழ்வானா? இந்த நாட்டில் நாம் மட்டும்தான் கெட்டவனாய்ப் போனோமா என்ற குற்ற உணர்ச்சி பழுவூர் அரசனைச் சூழ்ந்தது.

குந்தவை, ''இடையில் நமக்குள் என்ன என்னவோ நடந்து விட்டது. இது விதியின் விளையாடல் என்று எண்ணி நம் இயல்பு வாழ்க்கையைத் தொடர வேண்டும்'' என்றாள்.

பழுவேட்டரையர் கூறினார். ''என் குலத்தை வாழ வைக்க எந்த மார்க்கமும் காணப்படாதிருக்கவே எனக்கு உலகமே இருண்டு விட்டதாகத் தோன்றியது. என்னை இந்தச் சோழர் குலம் மறந்து விட்டதோ என்று கூடத் தோன்றியது. ஆனால், நீங்கள் இருவரும் பழையதையெல்லாம் மறந்து என்னை வந்து 'பாட்டா' என்று அழைத்தவுடன், என் உலகில் மறுபடியும் சூரியன் பிரகாசித்தது. எனக்கு மறுபடியும் பழைய தெம்பு வந்தது. ஒரு நாள் என் வீடு தேடி வந்த இந்த இரு திருமகள்களால் என் எதிர்காலமே மாறியதாய் நினைக்கிறேன், நீங்கள் புகுந்த சோழர் குலமும், வாணர் குலமும் எவ்வளவு வளர்ச்சி அடையும்.''

முக மலர்ச்சியுடன் மேலும் கூறினார். ''உம்மைக் கண்டவுடன் எனக்கு விதியில் பூரண நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. விதியின் படியேதான் எல்லாம் நடக்குமென்று கருதுகிறேன். இல்லாமற் போனால் இன்றைக்கு இந்த இருள் படிந்த வீட்டில் இரண்டு திருமகள்கள் வருகை தருவதேன்? எல்லாவற்றிற்கும் ஒரு நேரம் வர வேண்டும், தாயே!''

குந்தவை, "நேரம் வந்துவிட்டது. அடுத்த வாரம் முதல் என் சிறிய தாயாருக்குக் கட்டிய கோயிலுக்குக் கும்பாபிஷேக வேலைகள் தொடங்கப் போகின்றன. அருள்மொழி அதற்குள் வந்து விடுவான் என்று நம்புகிறேன். அதில் நீங்கள் வந்து கலந்து கொள்ள வேண்டும், பாட்டா" என்றாள்.

"தாயே! அந்த ஊமை ராணியின் கோயில் கட்டி முடிக்கப் பட்டதா? நல்லது. ஆனால், என்னை மன்னித்து விடுங்கள். நன்றிக்குப் பெயர் போன அவள் கோயிலில் கால் வைக்கக்கூட நாங்கள் அனைவரும் தகுதியற்றவர்கள்" என்றார்.

"என் வாழ்க்கையில் காரிருள் சூழ்ந்திருக்கும் வேளையில் என்னையும் மனிதனாய் மதித்து வந்தீர்களே. உமக்கு நன்றி. ஆனால், என்னைக் கண்டால் பலருக்கும் பழையவையெல்லாம் நினைவுக்கு வரும். உமது குல தெய்வமாம் அந்த ஊமை ராணிக்குக் கோயில் கட்டுகிறீர்கள். அவள் சோழர் குலத்துக்காக உயிர் துறந்தவள். நாங்களோ அதற்கு நேர்மாறாகத் துரோகம் செய்தவர்கள். அதனால் அங்கு வருவதற்கு அருகதையற்றவர்கள்" என்றார்.

குந்தவை உரிமையுடன், "அப்படியெல்லாம் உம் பேச்சைக் கேட்டுவிட்டுத் திரும்பிச் சென்று அங்கு ஆடவரிடம் ஒப்பிப்ப வர்கள் நாங்கள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்!" என்றாள்.

ஆனால், பழுவேட்டரையர் முடிவுக்கு வந்து விட்டார். "ஒரு காலத்தில் இந்த உலகத்தில் என்னால் செய்ய முடியாத காரியம் ஒன்று உண்டென்றால், அது சோழரின் கட்டளையை மீறுவது தான். ஆனால், விதியெனும் நதி இப்போது வேறு திசையில் ஓடுகிறது, மகளே. இனி அதை என் வீட்டு வாசல் வழியாக ஓடவைக்க முயற்சிக்கிறீர்கள்" என்றார். "தாயே! என் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதன் பொருட்டு மிக்க வந்தனம். என் வீடே இன்று களை கட்டிவிட்டது. எனினும் உம்மைப் போன்ற பெரிய மனதை மற்றவரும் அங்கு கொண்டிருக் கிறார்களா என்பதே சந்தேகம். அவர்களைச் சொல்லியும் குற்ற மில்லை. நான் அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அவ்வளவு புண்படுத்தியிருக்கிறேன்."

"ஐயனே! உங்களுக்கு எப்படிப் புரிய வைக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை" என்றாள் குந்தவை.

அப்போது ஒரு தாதிப் பெண் அவசரமாக உள்ளே ஓடி வந்தாள். குந்தவையிடம் வந்து நின்று, "இளவரசி அவர்களே, உங்களுக்கு

ஒரு அவசரச் செய்தி கொண்டு அரண்மனையிலிருந்து சேவகன் வந்திருக்கிறார்" என்றாள்.

சற்று நேரம் காத்திருக்க இயலாத செய்தி என்றால், அது சற்றுத் துயரமானதாய் இருக்கும் என்று நினைத்த இருவரும், 'என்னவோ ஏதோ' என்று பயந்து வாசலுக்கு விரைந்தார்கள்.

எதற்கும் கலங்காத பழுவேட்டரையரும் முகம் சுளித்தபடி தொண்டிக் கொண்டே பின் தொடர்ந்தார். தன் வீட்டுக்கு வந்த இளவரசிகளுக்கு வந்தது நற்செய்தியாய் இருக்க வேண்டுமே என்று இறைவனை வேண்டினார். ஒரு கணம் அவர் உள்ளம் சலனம் அடைந்து விட்டது. திடீரென்று ஒரு விபரீதமான சந்தேகம் கிழவர் உள்ளத்தில் உதித்தது. ஒருவேளை அது கேட்க தகாத செய்தியாகத் தான் இருக்குமோ என்னவோ? அவருடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலே ஒரு மெல்லிய குரல், "காலந்தகா! உனது கெட்ட காலம் இவர்களையும் ஒட்டிக் கொண்டது!" என்றது.

'நாம்தான் துரதிர்ஷ்டசாலிகள். அதனால்தான் குந்தவை இங்கு வந்த போது ஏதோ கெட்ட செய்தி வந்திருக்க வேண்டும். இல்லை, அந்தப் பொல்லாத பிராமணன் அநிருத்தன்தான் சதி செய்து அந்தச் செய்தியைச் சரியாக இங்கு அனுப்பியிருக்க வேண்டும்' என்று நினைந்தார்.

"ஏதாவது துயரமான செய்தியா, தாயே?" என்று பதறிப்போய் வினவினார், பழுவேட்டரையர்.

பழுவூர் அரசர் உடல் ஒரு நடுக்கம் பெற்றதைக் கவனித்தாள், குந்தவை. அவரைச் சாந்தப்படுத்தும் வகையில் குந்தவை முக மலர்ச்சியுடன், "சத்தியமாக இல்லை, பாட்டா. அதற்கு நேர்மாறாக மிகச் சிறப்பான செய்தி வந்துள்ளது" என்றாள்.

அவரும், "என்ன?" என்றார் ஆவலுடன்.

"பொன்னியின் செல்வரும் வல்லத்து மன்னரும் மாபெரும் வெற்றி பெற்றுத் திரும்பி விட்டார்களாம். பாட்டா, இங்கு வந்த பின் நற்செய்தி வந்தது. கடவுள்கள் பேசும் மொழியை நாம் முழுவதுமாய்ப் புரிந்து கொள்ள முடியாது. அதில் இப்படி ஏதோ ஒன்றிரண்டுதான் நமக்கு எளிதில் விளங்கும். உம்முடன் நாங்கள் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டால்தான் தினந்தோறும் எங்கள் செவிகளுக்கு இனிய செய்திகள் வரும் என்று தேவலோகம் சொல்லிக் கொடுக்கிறது" என்றாள்.

திகைத்து நின்ற பழுவேட்டரையரை நோக்கிக் குந்தவை வெற்றிப் புன்னகையுடன், "விதியென்ற நதியின் கதி மாறியதால்

இந்த நிலைமை என்று புலம்பினீர்களே, பாட்டா. அந்த நதி, இப்போது உமது வாசலுக்கு வழிகேட்டு வந்து விட்டது'' என்றாள்.

பழுவேட்டரையரைப் பார்த்துக் குந்தவை தொடர்ந்தாள். ''கடல் கொள்ளையரை வீழ்த்திச் சோழநாட்டுக்குப் பெருமை தேடிய இரு வீரர்களும் தஞ்சை வந்து விட்டனராம். இளவரசர்களின் ஆசைப்படியே பாட்டனின் சமூகத்துக்கு நேரே அழைத்து வரப்படுகின்றனர் அந்த இரு வீரர்களும். தாங்கள் சற்று முன் சொன்னது போல் உங்களை மதிக்காமல் இல்லை, சோழர் குலம். இளவரசர்கள் தங்களிடம் மிக்க நம்பிக்கையும் மரியாதையும் உள்ளவர்கள். ஆகையால் முதலில் உங்களை நேரில் கண்டு ஆசி பெறவே வருகிறார்கள்'' என்றாள். ''இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள்.

பழுவேட்டரையருக்கு முதலில் புரியவில்லை. 'என்ன இது? பல ஆண்டு காலமாய் ஒன்றும் நடவாமல் பொழுது போக்குவதே கஷ்டம் என்றிருந்தது. இப்போது என்னவென்றால் இந்த ஒரு ஜாம நேரத்தில் பழுவூர்க் குலத்தின் சரித்திரமே மாறிவிடும் போலிருக்கிறதே!'

பல வருடம் தன்னிடம் எட்டிப் பார்க்காத அதிர்ஷ்டம் ஒரே நாளில் வந்து தாக்கியதில் அந்த மனிதர் களிப்படைந்தார். நாட்டின் மாபெரும் வீரர், மாபெரும் வீரச் செயல் ஒன்றை முடித்துவிட்டு நேரே தன் வீட்டை நோக்கி வந்தது பழுவேட்டரையருக்கு அளவிலாத வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டிற்று.

குந்தவை நற்செய்தியைக் கூறி, அங்கு கூடியிருந்தவரை ஆனந்தக் கடலில் ஆழ்த்திய பிறகு, அதற்கு ஒரு மறுமொழி சொன்னார் பழுவேட்டரையர்.

''திருமகள்கள் இருவர் கால் பதித்த பின் என் வீட்டில் ராஜகுமாரர்கள் வராமலா இருப்பார்கள்?'' என்று தன் கண்களைச் சிமிட்டினார்.

பின் திரும்பிப் பழைய தோரணையில் ஒரு மாறுபட்ட குரலில் கர்ஜித்தார். ''யாரங்கே, ஆரத்தித் தட்டிற்கு ஏற்பாடு செய்யுங்கள்!''

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்தாறு

ஆரத்திப் புகைக்குப்பின் அதிசயம்!

தங்களால் முடிந்தவரை வாயு வேக மனோ வேகமாகத் தலைநகர் இருக்கும் திசையை நோக்கிச் செல்ல எண்ணமிட்டிருந்தார்கள், சோழப் படையினர். எனினும் ராஜ பாட்டையின் இரு புறமும் தழைத்துச் செழித்திருந்த விருட்சங்களின் நிழல்களில் அந்த ஊர்வலம் தலை நகரை நோக்கி நத்தை போலத்தான் நகர்ந்தது என்று சொல்ல வேண்டும். கொள்ளையருடன் போராடி மாபெரும் வெற்றி பெற்ற வந்தியத் தேவனும் பொன்னியின் செல்வரும் அந்த ஊர்வலத்தில் இருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து சென்றார்கள், வைணவன் ஆழ்வார்க்கடியானும் இளம் சம்புவராயனும்.

பொன்னியின் செல்வர் வருகிறார் என்ற செய்தி நாடு நகரமெல்லாம் பரவியிருந்தபடியால், அவர்களைக் காணப் பெரும் திரளாக மக்கள் வந்தனர். ராஜ பாட்டையிலிருந்து பிரிந்த கிளைச் சாலைகளில் ஏகப்பட்ட கிராமங்கள் இருந்தன. பொதுவாக அரசியலிலிருந்து ஒதுங்கியே இருந்த கிராம ஜனங்கள் பொன்னியின் செல்வர் வருகிறார் என்றவுடன் தங்களுக்கு இருந்த எல்லா வேலைகளையும் விட்டு விட்டு, அவர்களைக் காண, ராஜ பாட்டையின் இரு புறமும் கூடி நின்றனர். இப்படிப் பலவிடங்களில் கூடியிருந்த பிரஜைகளைச் சந்திப்பதற்காக ஊர்வலம் நின்றது. அங்கிருந்த மக்கள் வீரர்களைத் தரிசித்த பின் ஓரிரு வார்த்தை கூறுவார், பொன்னியின் செல்வர். பின்பு எல்லாரும் நகர்வார்கள்.

மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட பின், அந்தக் குதிரைகள் தஞ்சைக்குச் செல்லும் சாலையின் வழியாகப் பாய்ந்தன.

குதிரைகளின் குளம்புகள் கிளப்பிய புழுதி அடங்கும் வரையில் அவை போன திசையைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள் மக்கள், -சரித்திர நாயகரைத் தரிசித்த திருப்தியில். ஆனால் இதுவே பலமுறை நடந்ததால் தாமதம் அதிகரித்தது. ஊர்வலத்தில் பலருக்கும் பொறுமையே போனது.

முதலில் சென்ற இரண்டு குதிரைகளில் வந்தியத் தேவனும் மாறனும் அமர்ந்திருந்தனர். முன்பு பல காலம் இணை பிரியாமல் இருந்த இருவரும் போகும் வழியில் பல விஷயங்களைப் பரிமாறிக்

கொண்டனர். மாறனும் வந்தியத் தேவனும் யௌவனப் பருவத்தில் எத்தனையோ இன்பமான தினங்களைக் கழித்த வடக்கு எல்லையை இருவருமாய் நினைவு கூர்ந்தார்கள். பழைய ஞாபகங்கள் போட்டியிட்டுக் கொண்டு முன்வந்தன. பயணம் முடியும் முன் இருவரும் பகையெல்லாம் மறந்து பழைய நட்புக்கு உண்டான நெருக்கத்தை அடைந்து விட்டனர்.

அடுத்து வந்த இரண்டு குதிரைகளில் பொன்னியின் செல்வரும், வீர வைணவன் ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். இளவரசர் நாட்டின் நடப்பைப் பற்றி அடியானிடம் கேட்டுக் கொண்டார். ஆனல் அடியானுக்கு ஒரே அதிசயம். அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே பலமுறை அவர் கவனம் எங்கோ சென்று விட்டது. பொன்னியின் செல்வரை அவன் இப்படிப் பார்த்ததே இல்லை.

அந்த வைணவன் நினைத்துக் கொண்டான் 'திடீர் திடீரென' அவர் மனம் வேறெங்கோ போய் விடுகிறது. நான் கேட்கும் பல கேள்விகளுக்குப் பதில் கூடச் சொல்வதில்லையே. நான் கேட்ட கேள்விகளே முதலில் அவர் செவிகளில் விழுந்தனவா என்று சந்தேகம் எழுகின்றதே.?

தீவில் நடந்த ஏனோதானோ வாழ்க்கையால், பல நாள் கடல் பிரயாணத்துக்குப் பிறகு, இருவருக்கும் பழைய உடல் வலிமை இன்னும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். உடல் தளர்ச்சியடைந்திருந்தனர். ஆனால், வந்தியத் தேவனின் முகத்திலிருந்த தெளிவு பொன்னியின் செல்வருடைய முகத்தில் இல்லை என்பதை வைணவன் உணர்ந்து கொண்டு விட்டான். ஆனால், ஒரு மங்கையின் மையலெனும் மாய மந்திரத்தில் சிக்கித் தவிக்கிறார் அந்த மாமனிதர் என்று சோழ நாட்டின் தலை சிறந்த ஒற்றனான அடியானாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அருள்மொழி வர்மருடைய உள்ளமும் உடலும் சோர்ந்து போயிருந்தன. இம்மாதிரி அனுபவத்தை இதற்கு முன் அவர் எக்காலத்திலும் அடைந்ததில்லை. 'அந்த மோகனக் கனவு ஏன் கலைந்தது? அதுவே நிரந்தரமாக இருக்கக் கூடாதா?' என்ற ஏக்கம் இருந்தது.

இரண்டு நாள் பிரயாணத்துக்குப் பின் தலைநகரை நெருங்கி விட்டனர். கோட்டையின் மேற்குத் திசையில் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. அதற்கப்பால் தஞ்சையில் இருந்த அரண்மனைகளின் உன்னதமான மாடங்கள் காணப்பட்டன. வெகு விரைவில் கோட்டை வாசலை வந்தடைந்தனர்.

பல ஆண்டுகள் முற்றுகையுமின்றிப் போருமின்றித் தஞ்சைக் கோட்டையைச் சுற்றிய அகழியின் ஆழம் குறைந்திருந்தது. முதலைகளும் அவ்வளவாக இல்லை. அது இப்போது ஒரு தாமரைத் தடாகத்தை ஒத்திருந்தது. அந்த அகழியில் இன்று செந்தாமரை மலர்கள், குவிந்த மொட்டுக்கள், பச்சை வர்ணத் தட்டுகள் போல் படர்ந்திருந்த இலைகள் நிறைந்திருந்தன. அதைப் பார்த்த பொன்னியின் செல்வர் புன்னகைத்தார். அவருடைய மனோநிலைமையை ஒத்தே இருந்தது தலை நகர் அகழியும்.

காதல் முற்றுகையில் திண்டாடிக் கொண்டிருந்த பொன்னியின் செல்வருடைய மனதை ஒத்திருந்தாலும், உத்தம சோழர் ஆண்ட பிரதேசம் அடைந்திருந்த நிலையை அந்தத் தாமரைக் குளம் போலிருந்த அகழி நன்கு பிரதிபலித்தது. இன்று சோழ சாம்ராஜ்யம் ஓர் அமைதிப் பூங்காவாகத்தான் இருந்தது.

தஞ்சைக் கோட்டை வாசலை அணுகிய பின் கோட்டைக் காவலர்கள் இளவரசர்களை பயபக்தியுடன் நெருங்கி வந்தபோது, அவர்கள் முகங்களை ஏறிட்டுப் பார்த்தார் பொன்னியின் செல்வர். அப்போது ஒரு காவலாளி அவர் காதோரமாக வந்து ஒரு செய்தியைச் சொன்னான். 'தாங்கள் வருவது தெரியாததால் இளவரசிகள் சின்னப் பழுவேட்டரையர் வீட்டில் இருக்கிறார்கள்' என்று. முதலில் அவருக்கு ஆச்சரியம். 'ஐந்தாண்டுகள் இல்லாமல் இன்று எதற்குச் சென்றிருக்கிறார்கள்?'

ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''நாமும் அங்கேயே செல்வாமே'' என்றார்.

கோட்டைக் கதவுக்குள் நுழைந்ததுதான் தாமதம். ''வீரவேல்!, வெற்றிவேல்!'' எனும் தமிழர் முழக்கமும், ''சோழம், சோழம்'' எனும் சோழ நாட்டின் பிரத்யேக முழக்கமும் அங்கு கூடியிருந்த மக்களிடம் எழுந்தன.

இந்த முழக்கங்கள் இவர்களை நாகையிலிருந்து பின்தொடர்ந்து ஒரே குரலில் விண்ணதிர முழங்கிய போதும், அதைக் கேட்டவர் நெஞ்சம் சிலிர்த்தது.

தேச மக்களின் கண்ணுக்குக் கண்ணான அருமை இளவரசரை நேரில் காணத் தலை நகர மக்கள் அலை அலையாய்த் திரண்டு தஞ்சையின் வீதிகளை அடைத்துக் கொண்டிருந்தனர். வந்திய தேவனுக்கு அவன் தப்பி வந்த கடலை நினைவூட்டியது கூட்டம். சற்று நேரத்துக்கெல்லாம் சங்கு, தாரை, எக்காளம், பேரிகை போன்ற பலவித வாத்தியங்கள் முழங்கின. அத்துடன் ஊர்வலத்தோடு வந்து கொண்டிருந்த மக்களின் கடல் ஆர்ப்பரிப்பு போன்ற

கோஷங்கள் நாற்புறமும் எதிரொலித்தன. தஞ்சையின் வீதிகளை அடைத்துக் கொண்டு மக்களும் ஊர்வலத்துடன் உடன் சென்றார்கள். இனி அதிவிரைவில் பழுவூர் அரண்மனை வந்து விடும் என்று இளவரசர்கள் இருவரும் அறிந்தனர். வந்தியத் தேவன் பொன்னியின் செல்வரைப் பார்த்தான். அவர் கண்ணில் தோன்றிய செய்தியை புரிந்து கொண்டான். ஒரு அடி முன் வைத்துத் தன் கையை உயர்த்தி எல்லாரையும் அமைதி காக்கச் சொன்னான். ஐந்து ஆண்டுகளுக்கு முன் வந்தியத் தேவன் என்றால் யார் என்று கேட்டிருப்பார்கள் அவ்வளவு பேரும். ஆனால் இன்று அவன் ராஜா வீட்டு மாப்பிள்ளை. அவனுக்குத் தஞ்சையில் ஏக மரியாதை. அவன் விரும்பிய அமைதி கிடைத்த பின் பேசத் தொடங்கினான்.

அந்த ஜனங்களின் மனம் புண்படாதபடி அவர்களைக் கலைக்க வேண்டியது தான் வந்தியத் தேவனின் நோக்கம். ''மகா ஜனங்களே! நீங்கள் எல்லாரும் இங்கே வந்து கூடியிருப்பதின் நோக்கத்தை அறிந்து கொண்டேன். இளவரசர் அருள்மொழி வர்மரிடம் உங்களுக்கெல்லாம் எவ்வளவு அன்பு உண்டு என்பது இன்றைக்கு எனக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆனால் நீங்கள் ஒன்று நினைவில் கொள்ளவேண்டும். இனிப் பொன்னியின் செல்வர் தஞ்சையை விட்டுச் செல்ல அவரை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். இனி தினந்தோறும் நாட்டில் உலா வருவார். உங்களுடன் ஒன்றாய்க் கலப்பார். நீங்கள் மனமார அவருடன் பேசிப் பழகலாம். ஆனால், இன்று அவர் வந்திருப்பது விருந்தினராக. ஒரு மாபெரும் வீரர், இந்த வீட்டுக்குச் சொந்தமானவர், உடல் நிலை குன்றி இருப்பதாக அறிந்து பொன்னியின் செல்வர் நேராக இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். அந்த முதிய வீரருக்குத் துன்பம் ஏற்படுமென்றால் அவரைப் பார்க்காமலேயே செல்லலாம் என்று முடிவு செய்துவிட்டார். அதனால் நீங்கள் எல்லாரும் சென்று தங்கள் வேலையைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன், அவர் சார்பாக'' என்றான்.

பொன்னியின் செல்வர் திரும்பி மக்களை நோக்கிக் கைகூப்பி, ''தஞ்சை நகர மக்களே! உங்கள் அன்புக்கு நன்றி. நான்தான் திரும்பி வந்து விட்டேனே. இனித் தினமும் நகர்வலம் வந்து உங்களைச் சந்திக்கிறேன். இப்போது எனக்கு விடை கொடுங்கள்'' என்று சொன்னவுடன் மறுபேச்சின்றி, காற்றின் முன் கார்மேகக் கூட்டம் போலக் கலைந்தது ஜனக்கூட்டம்.

தூரத்தில் வரும்போதே இளவரசர்களைப் பழுவேட்டரையர் வீட்டில் நின்றவர்கள் கண்டு கொண்டார்கள். அந்தக் கூட்டத்தின்

நடுவில் கூடப் பொன்னியின் செல்வரும், வந்தியத் தேவனும் ராஜ களையும், வீரக் களையும் ஒளி வீசப் புன்னகை பொலியும் வதனத் தோடு, பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொள்ளப் பட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் வீர வைணவனும் இளம் சம்புவரையனும் வந்தார்கள்.

மாறனுக்கு ஒரே மகிழ்ச்சி. பழுவேட்டரையர் கொடுத்த வேலையை முடிக்காததால் அந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்கக் கூட முடியவில்லை. பின் அந்தப் பழுவூர்ப் பெண்ணை எப்படிப் பார்ப்பது? கோயிலில் மட்டும் அவ்வப்போது பார்த்துக் கொண் டிருந்தான். ஆனால், அவளுடன் பேசினால் ஏதேனும் பிரச்சனை வருமோ என்று சற்று ஒதுங்கியே இருந்தான். எனினும் இவனைப் பார்த்து அவள் புன்னகை புரிவதிலே பரவசம் அடைந்தான். இன்று பொன்னியின் செல்வர் அழைத்துச் செல்வதால் தைரியமாகப் பழுவூர் அரண்மனைக்குள்ளேயே நுழையலாம். அவளைக் கண்ணாரப் பார்த்துக் களிப்படையலாம்.

இளவரசர்கள் பழுவூர் அரண்மனையின் வாசல் பக்கம் வந்து சேர்ந்தவுடன் சின்னப் பழுவேட்டரையர் விந்தி விந்தி முன்னால் வந்து அவர்களை வரவேற்றார். இளவரசர்கள் அவரைக் கைகூப்பி வணங்கினர்.

''பொன்னியின் செல்வா! நாட்டில் பிரவேசிக்கும் போதே முதலில் என் வீட்டுக்கு வந்து என்னைப் பெருமைப்படுத்தினீர்!'' அவர் குரலில் இருந்த நடுக்கம் உணர்ச்சிப்பிரவாகத்தால் ஏற்பட்டது. அவர் உருவத்துக்கு ஏற்றாற் போலிருந்தது குரலும்.

ஒரு காலத்தில் கம்பீரத் தோற்றமுடைய காலாந்தகர் இன்று இந்த நிலையிலா? சின்னப் பழுவேட்டரையரா இவர்? அவர் தோற்றம் இப்போது அடியோடு மாறிப் போயிருக்கிறதே?'' என்று வந்தவர்கள் வியந்தார்கள்.

பொன்னியின் செல்வர், ''ஐயனே, உம்மை என் ஆயுள் உள்ளளவும் மறக்க முடியாது!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். ''உம்து அண்ணன் என்னைத் தோளில் சுமந்தது எனக்கு நினைவில் இல்லை. ஆனால், பிறர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். சோழ அரச குலமும், பழுவூர் அரசர் குலமும் எத்தனையோ திருமணங்களால் ஒன்றுபட்டிருக்கின்றன. அரிஞ்சயர் மனைவி உமது வீட்டுப் பெண்ணல்லவா? என் உடலில் ஓடும் ரத்தம் ஒரு பங்கு பழுவூர் ரத்தமல்லவா? பழுவூரைப் பழித்தால் அது சோழரையும் சேர்த்து இழிவு படுத்துவது போலத் தானே!'' என்றார்.

எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பவர் பழுவேட்டரையர். அவருக்குத் தமக்கையும் தம்பியும் பேசி வைத்துக் கொண்டு தம்மைச் சாந்தப்படுத்துகிறார்களோ என்று முதலில் தோன்றியது.

''இல்லை இல்லை. கடல் கடந்து வந்திருக்கிறார் இவர். அவளோ அரண்மனை அந்தப்புரத்திலிருந்து வருகிறாள். இருவரும் சொல்லி வைத்தாற் போலப் பேசும் அந்த நல்ல வார்த்தைகள் அவர்களது நல்லியல்பையே காட்டுகின்றன. வளர்ப்பு அப்படி!'' என்றது பழுவேட்டரையருடைய பகுத்தறிவு.

''இளவரசர்கள் சற்றுப் பொறுத்திருக்க வேண்டும். ஆரத்தி எடுக்கப் பெண்கள் காத்திருக்கிறார்கள். அவர்களை இதோ அழைக்கிறேன்'' என்று பழுவூர் அரசர் கூறியதும், அந்தப் பெண்கள் ஆரத்தித் தட்டுடன் வந்தார்கள்.

அதற்குள்ளாகப் பொன்னியின் செல்வர் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த தம் தமக்கையையும் மனைவியையும் பார்த்துப் புன்னகைத்தார். மனக் கலக்கம் அடைந்திருந்த அவர், மனைவி குழந்தைகளை வெகு நாட்களுக்குப் பின் பார்த்ததில் தெளிவடைந்தார். மனைவி கையில் பிடித்திருந்த மகனையும் இடுப்பில் சுமந்திருந்த மகளையும் கண்டு முகம் மலர்ந்தார்.

அப்போது அவர் கண் முன் அந்தக் கனவுக் கன்னியின் முகம் வானத்து மின்னலைப் போல் ஒரு நொடி தோன்றி மறைந்தது. பொன்னியின் செல்வர் திடுக்கிட்டார். ''ச்சீ! இது என்ன? மனைவியைப் பார்த்தாலும் அந்தக் கனவுக் கன்னியின் எண்ணம் வருகிறதே!'' என்று வெட்கப்பட்டார்.

அன்னிய புருஷன் வந்திருக்கும்போது பெண்கள் அடக்கமாய் உள்ளே சென்றுவிட வேண்டுமென்பது பழுவூர் அந்தப்புரத்தில் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்ட விதி. ஆனால், இன்று பல விதி முறைகள் பழுவூர் அரண்மனையில் புறக்கணிக்கப்பட்டன. அவற்றில் இதுவும் ஒன்று.

ஆண் மக்கள் முன்னால் வருவதற்கே அஞ்சக் கூடிய அந்தப்புரப் பெண்களெல்லாம் வந்த விருந்தினர்களை வரவேற்கக் கூச்சமின்றி வாசலிலும் மாடத்திலும் வந்து நின்றார்கள். அந்தக் கூட்டத்தின் நடுவில் கண்களைச் செலுத்தினார் பொன்னியின் செல்வர். ஒருவேளை அவள் இந்தக் கூட்டத்தில் இருப்பாளோ? பொதுவாகப் பொன்னியின் செல்வர் பெண்கள் பக்கமே தலை நிமிர்ந்து பார்க்க மாட்டார். ஆனால், இன்று ஏதோ ஒன்று அந்தப் பட்டுப் புடவை உடுத்திய பட்டாம் பூச்சிகள் கூட்டத்தை நோக்க வைத்தது.

அவர், அவர்கள் பக்கம் திரும்பியதில் ஏக உற்சாகத்தில் இருந்தார்கள் பெண்கள். பின் அவரது செயல் அவருக்கே கொஞ்சம் வெட்கத்தைத் தந்தது. ''பெண்கள் பக்கமே என்றும் பாராத நாம் இன்று இப்படிப் பெண்டிர் கூட்டமிருக்கும் திசையை நோக்குகிறோம்!''

கொள்ளையர் தீவிலிருந்து வந்ததிலிருந்து அவருக்கு அந்தத் தகாத பழக்கம் ஏற்பட்டிருந்தது. முன்பெல்லாம் பெண்கள் நிற்கும் இடத்தை நேராகப் பார்க்கக்கூடத் தயங்குவார். இன்று அவரது கனவுக் கன்னிக்காக அவருடைய விழிகள் பெண்கள் கூட்டத்தில் இங்குமங்கும் அலை பாய்ந்து கொண்டிருந்தன. ஆனால் இந்தக் கூட்டத்திலும் அவள் இல்லை.

அதுவும் நியாயம்தானே. அதற்குள் அவள் கிடைத்து விடுவாளா என்ன? தன்னுடைய பிரமை கொண்ட மனத்தில் கற்பனையிலே தான் அந்தப் பெண்ணின் உருவம் தோன்றியிருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தார்.

கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பொன்னியின் செல்வர் பூமிக்கு மறுபடியும் வர வேண்டும். அது என்றாவது நடைபெறத்தானே வேண்டும். அது இன்றுதான் என்று முடிவுக்கு வந்தார். 'நம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவளை மறக்க வேண்டியதுதான். இப்படிப் பெண்கள் கூட்டத்தையே வெறித்து பார்த்துக்கொண்டிருந்தால் என் பேரில் களங்கம் ஏற்படுவதுதான் மிச்சமாகும். என்னைச் சுற்றியுள்ளவர்களின் நிலைமையைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவதாகவே முடியும்.'

இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த இளவரசர் தன் மூக்கினுள் கற்பூரப் புகை நுழையவே தன் முன் ஆரத்தி தட்டு நீட்டப்பட்டதைக் கவனித்தார். தட்டில் கற்பூரம் எரிந்து கரும் புகை மண்டலத்தை உருவாக்கிக் கொண்டிருந்தது. அந்தப் புகை விலகியது, சட்டென்று ஒரு திரை விலகியது போலிருந்தது. அப்போதுதான் தலை குனிந்தபடி ஆரத்தி எடுத்த பெண்களைப் பார்த்தார்.

முதலில் தான் உயிர் தப்பி மீண்டு வந்த கடலின் நீர் அவ்வளவும் புரண்டு வந்து தன்மீது மோதுவதாகத் தோன்றிற்று. அந்த ஆனந்த சாகரத்தின் அலைகள் அவரை அடித்துச் சென்றுவிடுமா என்றுகூட நினைத்தார்.

தன்காலடியில் ஒரு பூகம்பம் உண்டானது போல ஒரு ஆட்டம் கொண்டார். அவருடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஒரு குலுக்குக் குலுக்கி அவரைத் திக்கு முக்காடச் செய்து விட்டது.

"ஆகா! கண்களே! இது உண்மைதானா? நான் பார்ப்பது கனவு இல்லையே. அந்த ஒப்பற்ற காதல் கனவை நிஜப்படுத்த அவள் வந்துவிட்டாளே!"

அவள்தானா? கனவில் வந்த பெண் மனக்கண் முன்னால் இன்றைக்கும் அழியா ஓவியமாக நிற்கிறாள். மறந்து விடும் முகமா அது? இது அவளேதான்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, கைகள் நடுநடுங்க, தட்டிலிருந்த கற்பூரச் சுடர் மீது கைகளை வைத்தார். அது விரலைச் சுட்டுவிடவே சுயநினைவுக்கு வந்தார். அதிலும் ஒரு இன்பம். ஆகா! தீயினுள் விரலை விட்டால் அவளைத் தீண்டும் இன்பம் வருகின்றதே. ஆகா என்ன கவி நயமான யோசனை! ஆனால் எதிர் காலத்தில் வரும் கவிகளுக்கு அதை விட்டு வைப்போம். இப்போது நாம் கனவு காணவில்லை, உண்மையாக நடப்பதுதான்" என்று நம்பிக்கை பெற்றார்.

அவர் கனவில் கண்ட அந்தப் பெண் இதோ இருக்கிறாளே! மாயத் தோற்றம் காட்டி, அவர் மதியை மயக்கியவள், அவர் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டு, இரவும் பகலும் அவரை இம்சித்தவள், சதா அவரை ஏங்க வைத்தவள், புலம்ப வைத்தவள், கற்பனை உலக வாசி இல்லை.

அவர் எந்தப் பக்கம் பார்த்தாலும் அங்கு அவளைக் கண்டார். ஆனால், இன்று தன் பக்கம் பார்த்துச் சிரிக்கிறாளே. அந்தக் குறும்புச் சிரிப்பு அவளுடைய பவளச் செவ்வாயின் இதழ்களில் மட்டுமல்லாமல் அவளுடைய அகன்ற கண்களையும் ஆக்கிரமித் திருந்தது.

அவளும் ஆனந்தமாக இருப்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. "ஒரு வேளை இவள் கனவிலும் நான் வந்தேனா? " என்று பொன்னியின் செல்வருக்கு தோன்றியது.

ஆனால், அந்தப் பெண் சிரித்தது பொன்னியின் செல்வரைப் பார்த்து அல்ல; அவருக்குப் பின்னால் நின்று இவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இளம் சம்புவராயன் கந்த மாறனைப் பார்த்தே லேசாக சிரித்தாள்!

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்தேழு

பூர்வ ஜன்ம வாசனையா?

சோழர்களின் அரண்மனை நியாயமாகக் கொண்டாட்ட ரம் கோலாகலமுமாக அந்த இரவு வேளையில் இருந்திருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக அசாதாரணமான நிசப்தம் ஆடி கொண்டிருந்தது. ஏன்?

அதற்கு முக்கியக் காரணம் அருள்மொழி வர்மர் திரும்பி வந்ததிலிருந்து அவர் காத்த அமைதிதான். எப்போதும் அவர் வெளி நாடுகளிலிருந்து திரும்பியவுடன் முதலில் ஸ்நான பானங்களை முடித்துக் கொண்டு சிறிது இளைப்பாறுவார். பின்பு பெரியோரைச் சந்தித்துத் தான் பத்திரமாகத் திரும்பியதைத் தெரிவிப்பார். தூர தேசங்களிலிருந்து கொண்டு வந்த பொருட்களை அவர்களிடம் சமர்ப்பிப்பார்.

பின் அந்தப்புரத்தின் நடுவே அமர்ந்து தன் குழந்தைகளைக் கொஞ்சுவார். மனைவியும் தமக்கையும் உட்பட, அந்தப்புரத்துப் பெண்கள் அவரைச் சுற்றி அமரத் தன் வெளியுலக அனுபவங்களை விவரிப்பார். தம்முடைய யாத்திரையில் தாம் கண்டு வந்த தேசங்களைப் பற்றியும், இயற்கை அழகுக் காட்சிகள், கலை அதிசயங்களைப் பற்றியும் விவரிப்பார். மிக அபாயமான சூழ்நிலைகளைப் பற்றிகூட மிகவும் நகைச்சுவையுடன் விவரிப் பார். இரவு வெகு நேரம் வரை அரண்மனை ஜே ஜே என்றிருக்கும். அப்படிப்பட்டவர் இன்று வாயடைத்திருந்தார். அரண்மனையும் அமைதியாய் இருந்தது.

அஸ்தமன வேளையின் மங்கிய வெளிச்சத்தில் அரண்மனைக் குள் அவர் மீண்டும் பிரவேசிக்கும் போது பெண்டிரும் தாதியர் களும் காத்திருந்து அவரை வரவேற்றார்கள். மறுபடியும் ஆரத்தி எடுக்கப்பட்டது. பொன்னியின் செல்வருக்குப் பழுவூர் அரண்மனையில் ஆரத்தி எடுத்த பெண் நினைவுக்கு வந்தாள்.

சற்று முன் சந்தித்தவளா அவள்? 'இல்லை இல்லை!' என்றது அவர் மனம். கொள்ளையர் தீவில் அவர் கனவில் பார்த்தது அவள் தான். ஆனால், அதற்கும் முன்பாக எத்தனையெத்தனை முற்பிறவி களில் அவரும், அவளும் ஒன்றாய் வாழ்ந்திருக்க வேண்டும்!

அவர் மனதில் பல நினைவுகள் ஓடின. ஒரு சமயம் அவள் கனவில்தான் கண்ணுக்குத் தெரிந்தாள். மறு கணத்தில் மறைந் தாள். இனி அவளைப் பார்க்க முடியாது என்று தோன்றியபோது,

மறுபடியும் கண்ணுக்குப் புலப்பட்டாள். கனவில் அவள் வந்த போது கீழைக் கடல்களில் அதிகம் பேசப்படும் மாயமோகினி களின் சரித்திரம்தான் பொன்னியின் செல்வருக்கு நினைவுக்கு வந்தது. அழகுப் பாடல் பாடிக் கப்பலின் மாலுமிகளைக் கவர்ந்து வஞ்சித்துச் சென்று விடும் மோஹினிகள். அவர்களுடன் சென்ற மாலுமிகள் என்ன ஆனார்கள் என்று யாருக்கும் தெரியாது. கப்பல்களிலிருந்து தவறி விழுந்தவர்களுக்காகத்தான் இந்தக் கதை உருவாக்கப்பட்டது என்று பலமுறை அவருக்குத் தோன்றியதுண்டு.

ஆனால், இன்று தெரிந்த இவள் மாயக்காரி அல்ல, மயக்கும் மோஹினியும் அல்ல என்று தெளிவானது. ஆனால், அவளுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அந்தப் பூர்வ ஜன்மத்து நினைவுகள் எல்லாம் மோதிக் கொண்டு வந்ததன் காரணமாகத்தானோ அவர் வாயடைத்துப் போயிருந்தார்!

பழுவூர் அரண்மனைக்கு அவர் விஜயம் செய்தது அவருக்குப் பழைய கனவு லோகத்தை நினைவூட்டி மெய்மறக்கும்படி செய்திருந்தது. அவளைக் கண்ட அதிசயம் அளவு கடந்து பொங்கிற்று. அளவற்ற வியப்பும் களிப்பும் அடைந்தார். ஆனால், அந்தக் கனவுக் கன்னியைத் திடீரென்று சமீபத்தில் கண்டதும் பொன்னியின் செல்வருடைய தேகம் நடுங்கிற்று. அவளுடைய கனவு தரிசனமே அவருக்கு அளவிலாத மோகத்தை உண்டாக்கியிருந்த போது, அவள் நிஜமாக வந்தது அவரைக் கிறங்கடித்து விட்டிருந்தது.

அப்போது திணறித் திக்கு முக்காடிப் போன பொன்னியின் செல்வர் இப்போது நிதானம் அடைந்திருந்தார். ஆனால், அவர் நிம்மதியாக இருக்கக் கூடாது என்று அவருடைய தலையில் எழுதியிருந்தால் அவர் என்ன செய்ய முடியும்? பல சந்தேகங்கள் எழுந்தன. வெகு சமீபத்தில், அதுவும் மயங்கிய அந்தி மாலையின் வெளிச்சத்தில் கண்ட அந்தக் காட்சி மற்றொரு கனவாக இருக்குமோ என்று தோன்றியது. தன்னைத் தானே கேட்டுக் கொண்டார் ''அருள்மொழி! நன்றாய்ப் பார்த்தாயா? அது அவள் தானா? இல்லை, தவறாகப் புரிந்து கொண்டாயா?''

'இல்லை இல்லை!' என அவளைக் கண்ட கண்களும், காட்சியை கிரகித்த மனமும் உறுதியளித்தன. ''தெய்வ லோகத்தில் கந்தர்வ கன்னிகைகள் பக்கத்தில் இருந்தாலும் அவளது அழகு தனித்து நிற்கும். அது அவளேதான்.''

[illegible] தேடிய கனவுக் காதலியைப் பார்த்த பின் அவர் [illegible] மகிழ்ச்சியாக இருக்கலாம் என்றால், அவரால் முடிய [illegible] அந்தக் கனவினால் அவரது உள்ளம் பெரிதும் கலக்கமும் [illegible] அடைந்திருந்தது. அவளைக் காணும்வரை பொழுதே [illegible] ஒவ்வொரு கணமும் ஒரு முடிவில்லாத யுகமாகத் [illegible] இப்போதோ காலம் சிறகு முளைத்துப் பறந்து [illegible]

இது என்ன அதிசயம்! இங்கே சோழ நாட்டில் இருந்த பெண் [illegible] கொள்ளையர் தீவில் கனவில் வந்ததெப்படி? அதன் [illegible] என்ன? பல நாட்களாக அவருடைய கண்கள் சுற்றிச் [illegible] பார்த்தும் அவர் பார்க்க விரும்பிய பெண்ணை மட்டும் [illegible]வில்லை. இன்றோ எதிர்பாராத வேளையில் பல ஆண்டு [illegible] கால் பதியாத இடத்தில் அவள் தன்னை ஆரத்தி எடுத்து [illegible] அதிர்ச்சி. சோழர்கள் பரம்பரையாகப் பெண் [illegible] பழம் பெரும் பழுவூர்க் குடும்பத்தைச் சேரந்தவள் [illegible] தெரிந்தவுடன் இன்னுமோர் இன்ப அதிர்ச்சி.

விதியின் விசித்திரத்தைக் குறித்து அடிக்கடி எண்ணமிட்ட [illegible]? விதிப்படி தான் எல்லாம் நடக்கும் என்றால் விதி [illegible] வந்துவிட்டது. அவருடைய கனவுக் கன்னியை அங்கே [illegible] கூட அவ்வளவு வியப்பளிக்கவில்லை. ஆனால், விதியை [illegible] வியந்தார். தன்னை முதலில் பழுவேட்டரையர் வீட்டுக்கு [illegible]. அவளை வைத்தே ஆரத்தி எடுக்க வைத்த விதியை [illegible]வதா, பழிப்பதா என்று அவருக்குத் தெரியவில்லை.

ஏன் விதியைப் பழிக்க வேண்டும்? அவள் அருகேயே தன் [illegible] மனைவி மக்களையும், அந்தக் கனவுக் கன்னியைத் தாம் [illegible] எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடிய தமக்கை குந்தவையையும் [illegible] வைத்து அழகு பார்த்த விதியைப் போற்றுவதா - தூற்றுவதா?

[illegible]ரெங்கும், உலகெங்கும் ஏக பத்தினி விரதனாய் இருக்கப் [illegible] அறிவித்தாயிற்று. வானதியை மணந்த ஐந்து ஆண்டு [illegible] எத்தனையோ அரசர்கள் அவருக்குப் பெண் கொடுக்கப் [illegible]டெடுத்தனர். ஆனால், அவர் மறுத்துக் கூறியவுடன் வந்த [illegible] பேச்சுகளும் முறிந்து விட்டன.

இதற்கிடையில் இன்னுமொரு எண்ணம் அருள்மொழி [illegible]க்கு வந்தது. ''மாறன் மிகவும் ராசியானவன். அவனிடம் அவர் மனதைத் திறந்து ஒரிரு நாட்களில் அவளைக் கண்டோமே. அவனும் சொன்னானே. நிச்சயமாக அவள் உங்கள் முன் தோன்று வாளென்று. தீர்க்கதரிசி அவன். நாம் இளம் சம்புவராயனை

மீண்டும் சந்திக்க வேண்டும். ''பார்த்தாயா என் காதலியை?'' என்று கேட்கவேண்டும். 'அந்த ஆரத்தி எடுத்த பெண்தான் என் கனவில் வந்தவள்'' என்று, அவனிடம் தெரிவிக்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

பொன்னியின் செல்வரைச் சுற்றிச்சுற்றி வந்த குழந்தைகள் தூங்கிவிட்டன. அவர் ஏதாவது பேசுவார் என்று நினைத்த அந்தப் புர மாதரும் கலைந்து விட்டனர். அவருடைய மனைவி வானதி தேவியாருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. போர்க் களத்திலிருந்து திரும்பி வந்த களைப்பினால்தான் அவர் உற்சாகம் குறைந்திருக்கிறார், என்றும் அவருக்குத் தனிமை தேவையென்றும் நினைத்து, அவரை விட்டு விலகித் தனக்கு நெருக்கமான மற்றும் ஒரே ஜீவனான குந்தவையைத் தேடிச் சென்றாள்.

குந்தவைக்கும் வானதிக்கும் உள்ள நட்பு, சொந்த பந்தத்தைக் கடந்தது. சொந்தம் ஏற்படும் முன் உருவானது. தன் தம்பிக்கு ஏற்ற மனைவி இவள்தான் என அறிந்து அவர்கள் திருமணத்தை முடித்து வைத்தவளே குந்தவை தான்.

அரண்மனையெங்கும் தேடியும் குந்தவையைக் காணவில்லை. நீண்ட நாள் கழித்து வந்த தன் கணவர் வந்தியத் தேவருடன் அவளிருப்பாளென்று முதலில் நினைத்தாள் வானதி. ஆனால், வந்தியத் தேவரோ அரண்மனை அறையொன்றில் களைத்துப் போய் உறங்குகிறார் என்று அந்தப்புரப் பெண்கள் கூறினார்கள். பின் குந்தவை தேவி எங்கே?

தஞ்சை அரண்மனையின் அந்தப்புரத்தையொட்டிய நந்தவனத்தில் இருந்த தடாகத்தில் தாமரைகள் வாடத் தொடங்கி விட்டன. அவற்றின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டன குளத்தின் விளிம்பில் இருந்த அல்லி மலர்கள். தடாகக் கரையில் குந்தவை ஆழ்ந்த யோசனையிலிருந்தாள்.

தன் ஆருயிர்க் காதலன் வந்து விட்டான் என்ற போதும், அவனைச் சுற்றி வரவில்லை அவளது எண்ணங்கள். வீட்டுக்குத் திரும்பிய பின்னும் அவளுடைய நினைவு மட்டும் பழுவூர் அரண்மனையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

பழுவூர் மாளிகையிலிருந்து வந்ததிலிருந்து அவளுடைய உள்ளம் தத்தளித்தது. அப்போது அந்த மங்கையின் கணவன் வந்தான். அவன் அவளை வீட்டின் உள்ளே அழைத்தபோது, பல மாத காலம் கழித்து வந்திருக்கிறான் கணவன் என்று கூடப் பாராமல், ''சற்று நேரம் கழித்து வருகிறேன்'' என்று கூறினாள்.

''நல்ல தமக்கை. நல்ல தம்பி. இரண்டு பேருக்கும் என்ன ஆனதோ தெரியவில்லை'' என்று கூறி, வந்தியத் தேவன் உள்ளே சென்று விட்டான். அவளும் அல்லிகள் ஆக்கிரமித்த தாமரைத் தடாகத்தின் அருகே அமர்ந்திருந்தாள்.

ஒளி மயமாக இருந்தது தடாகக் கரை. குளத்தின் நடுவில் இருந்த தெளிந்த நீரில் நிலவின் பிம்பம். நிலவும் ஒளிவீசியது. தண்ணீரிலே தெரிந்த அதனுடைய பிரதி பிம்பமும் ஒளி வீசியது.

குளத்தின் அருகே அமைதியாய் அமர்ந்திருந்த குந்தவை, 'முழு மதியைப் பெண் முகத்துடன் எத்தனையோ கவிஞர்கள் ஒப்பிட்டுப் பாடியிருப்பார்கள். ஆனால், இன்று தான் அந்தப் பொருத்தத்தை முற்றிலுமாக உணர்ந்தேன். பழுவூர்ப் பெண்ணே! உன்னை அங்கு விட்டு விட்டு நான் வரவில்லை. நீ என்னுடன் நினைவாக இங்கு வந்து விட்டாயே!' என்று நினைத்தாள்.

பழுவூர் அரண்மனைக்குப் போனதிலிருந்து அவளது சித்தக் கடலில் கொந்தளிப்பு அதிகமாயிற்று. அலை அலையாய் எண்ண அலைகள் எழுந்து வந்து மோதிப் பார்த்தன.

தானும் ஒரு பேரழகிதான் என்று மற்றவர் சொல்லியும், கண்ணாடியில் பார்த்தும் தெரிந்து வைத்திருந்தாள் குந்தவை. தன்னைச் சுற்றியிருந்த தோழிகளும் அழகுக்கு இலக்கணமாய்த் திகழ்பவர்கள்தாம். ஆனால், இந்தப் பெண்ணின் சௌந்தர்யம் அதை எல்லாம் மீறி இருக்கிறதே. 'காண்போர் கண்களையும் உள்ளத்தையும் ஒருங்கே கவர்ந்து பரவசப்படுத்திய பெண், அந்த லோகா. நான் அவளைப் போன்ற ஓர் அழகியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு வெகு காலம் ஆயிற்று!' என்று நினைத்தாள். குழலும் வீணையும் போன்ற இனிமையான குரல். 'அவள் பேசும் மொழி கேட்டு என் நெஞ்சு ஏன் இப்படிப் பொங்குகிறது? அவளுக்கும் எனக்கும் என்ன தொடர்பு?'

அரண்மனைக்கு வந்ததிலிருந்து ராஜேந்திரனைப் பார்க்கும் போதெல்லாம் குந்தவைக்கு அவன் லோகாவைப் பார்த்து அம்மா என்று அழைத்ததுதான் நினைவுக்கு வந்தது. அது எப்படி? இவ்வளவு அன்பு சொரியும் தன்னையே ராஜேந்திரன் ஒரு முறை கூட அம்மா என்று அழைத்ததில்லை. அவளிடம் என்னத்தைத் தான் அவன் கண்டான்? விதியின் விளையாடல்களைப் பற்றி மழலைகள் அறியுமோ?

வானதிக்கும் லோகாவுக்கும் உருவப் பொருத்தமும் இல்லை. வானதியோ பால் நிறம். லோகாவோ தேன் நிறம். அம்மா என்று மற்றொரு பெண்ணை எப்படி ஒரு குழந்தை அழைக்கும்? அதுவும்

வாழ்வில் முதல் நாள் பார்த்த ஒருத்தியை? ஏன் அந்தக் குட்டிப் பயல் ராஜேந்திரன் அப்படி நடந்து கொண்டான்? தாயை அருகே வைத்துக் கொண்டு, வேறொரு பெண்ணை வாயார அம்மா என்றானே. இதுதான் விட்ட குறை தொட்ட குறையோ?

''பூர்வ ஜன்ம வாசனையில் உனக்கு நம்பிக்கை உண்டா?'' என்று பலமுறை தன்னை மற்றவர் கேட்டிருக்கிறார்கள். பூர்வ ஜன்மத்தில் இரண்டு பேருக்கு நட்போ, உறவோ இருந்தால், இந்த ஜன்மத்திலும் அத்தகைய சொந்தம் ஏற்படும் என்பார்கள். இன்றே அதைக் கண் முன் பார்த்தேன். 'அந்த யுவதிக்கும் நமக்கும் தொடர் புள்ளதா? அது இந்த ஜன்மமும் தொடர வேண்டும் என்ற ஆசையும் நம் இதயத்தில் இருக்கிறதே!' என்று நினைத்தாள்.

பூரணச் சந்திரனின் சந்தன நிறக் கிரணங்கள் அவள் முகத்தில் எப்போதும் பட்டுக் கொண்டிருப்பது போலப் பிரகாசமான அவள் முகம் எவ்வளவு அழகாய் இருந்தது! இப்பேர்ப்பட்ட அற்புத அழகு அந்த இருள் படிந்த வீட்டுக்குள் கிடந்து வீணாவதை நினைத்தால் அவளுக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிறது. இவளது அழகு இதுவரை மற்றவர்களுடைய கவனத்தைக் கவராதிருந்தது எப்படி? விதி எப்படி இவளை விட்டு வைத்தது? எதற்காக? முக்கியமாக, யாருக்காக?

இன்று நடந்தது ஏதோ முக்கியமான விஷயம் என்று அவளுடைய உள்ளுணர்ச்சிக்குத் தெரிந்திருந்தது. மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்தபடி தடாகத்தின் அருகேயிருந்த குந்தவையிடம், வானதி வந்தாள். 'இந்த மௌன வியாதி எல்லாரையும் பற்றிக் கொண்டு விட்டது போலும். ஆசைக் கணவர் வந்ததிலிருந்து எல்லாக் கேள்விகளுக்கும் ஓரிரு வார்த்தைகளில்தான் பதில் அளித்தார். அவர் தமக்கையும் அப்படிதான்' என்று நினைத்துக் கொண்டு, குந்தவையின் தோளின் மீது கையை வைத்தாள்.

திடீரென்று அருகில் நின்றிருந்த வானதியை ஏறிட்டுப் பார்த்து, ''அந்தப் பெண்... அவள் பெயரென்ன... லோகா, அவளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்றாள் குந்தவை.

வானதி முக மலர்ந்து புன்னகை செய்தாள். ''நான் நினைப்பது இருக்கட்டும், அக்கா. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும்.''

''போடி, கள்ளி என்னதான் நினைத்தேனாம்? சொல், பார்ப்போம்'' என்று வினவினாள் குந்தவை.

''என்னைப் பார்க்குமுன் அவளைப் பார்த்திருக்கக் கூடாதா என்று நினைத்தீர்கள்'' என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

அதிர்ந்து போன குந்தவை மௌனமாக இருந்தாள். வானதி தொடர்ந்தாள். ''செம்பியன் இரத்தம் ஓடும் என் மகனே அவளை அம்மா என்று அழைத்தபோது, அந்தக் குலத்தில் பிறந்து வளர்ந்த உமக்கும் அப்படித்தானிருக்கும் அக்கா. இல்லை, அக்கா. மறுக்காதீர்கள். எனக்குத் தெரியும் ஒரு பொருள் நன்றாய் இருந்தால் அதை நமக்கு அல்லது நமக்கு வேண்டியவருக்கு அருகில் வைத்துக் கொள்ள நினைப்பது இயல்புதானே?''

அந்தப் பெண்ணைப் பற்றிய பேச்சைத்தான் வானதி எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால், அவள் கொஞ்சமும் பரபரப்பு அடையாமல் சாவதானமாகப் பதில் சொன்னாள். அந்தப் பெண்ணைக் கண்டால் அவளுக்குப் பொறாமையோ ஆத்திரமோ வரவில்லை. தனக்கென உலகின் மிகச் சிறந்த பொருள் கிட்டியவுடன், இதரப் பொருட்களின் மீது பற்றோ வெறுப்போ ஏற்படாமல் இருப்பது இயற்கைதானே.

உடனே ஒரு குற்ற உணர்வுடன் வானதியைப் பார்த்தாள் குந்தவை. வாய் பேச வார்த்தையில்லை.

''அக்கா! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று தெரியும். அதற்குக் காலம் கடந்து சென்று விடவில்லை!'' என்றாள் வானதி.

''போடி, பைத்தியக்காரி!'' என்று செல்லமாய்த் திட்டினாள், குந்தவை.

வானதி விடுவதாக இல்லை. ''அக்கா! அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் மந்திரத்தினால் கட்டுண்டு நின்றீர்கள். நீங்கள் வல்லவராயர் அண்ணாவைக் கண்டு கூட இப்படிக் கிறுகிறுத்தது இல்லை. மகுடி முன் சர்ப்பம் என்பார்களே, அம்மாதிரி இருந்தீர்கள்.''

''என்னைச் சர்ப்பம் என்கிறாயா?'' என்று போலிச் சிரிப்பொன்றுடன் பேச்சை மாற்றினாள் குந்தவை. அந்தப் பேச்சை அத்துடன் விட்டு விட்டாள் குந்தவை. தேவையில்லாத வார்த்தைகளை உதிர்த்தால் அது பின்னால் நமக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்று அவளுக்குத் தெரியும். அதற்குப் பின் மௌனம் அவ்விடத்தை ஆக்கிரமித்தது.

குந்தவை ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். பெண்களுக்குப் பிறந்தகத்தின் மீது இருந்த பாசம் பற்றித் தெரிந்ததுதான். ஆனால், குந்தவை அளவுக்குப் பாசம் யாருக்கும் இராது. இந்தக் குலம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் தழைத்து வளர வேண்டுமென்பதில்

அவள் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தாள். அத்துடன் எப்படியாவது தம்பி மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்பதுதான் அவள் பிரார்த்தனை. அவன் நன்றாயிருக்க வேண்டுமென்றுதான் அல்லும் பகலும் தில்லை அம்பல மூர்த்தியைத் தியானித்துக் கொண்டிருந்தாள்.

லோகாவைத் தன் மருமகனுடன் பார்த்தவுடன் அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஏதோ நெடுந்தூரம் பயணித்த பறவை ஒரு நொடி ஒரு மரக்கிளையில் இறங்கிச் சஞ்சரித்தது போல உணர்வு. அதற்கு வானதி எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டேன் என்று சொல்லாமல் சொல்லி விட்டாள். எல்லாம் கூடிவருகிறது. தான் நினைத்ததைச் செயல் படுத்தினால் பாழாய்ப் போன பழுவூர்க் குலம் மீண்டும் தழைக்க வாய்ப்பு உண்டு. அதை விட அருள்மொழியின் வாழ்வும் செழிக்க வாய்ப்பு உண்டு.

இந்தப் பெண்ணுக்கும் என் குலத்துக்கும் ஏதோ தொடர்பிருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவளுடைய உள் மனத்திலிருந்து வேறு ஏதோ ஒரு எண்ணம் வெளிவரப் போராடிக் கொண்டிருந்தது. அது என்ன?

'ஆகா! பொன்னியின் செல்வன் சொல்லவில்லையென்றாலும் அவனது ஏக பத்தினி விரதம் எல்லாருக்கும் தெரிந்ததே. ராமனைப் போல அரியணையைத் துறந்தான். ராமனின் இதர பண்புகளையும் கடைப்பிடிக்க நினைக்கிறான்.'

குந்தவை பெருமூச்சு விட்டாள். 'முன்பெல்லாம் அருள்மொழி நான் சொன்னதை மறுவார்த்தை பேசாமல் ஒப்புக் கொள்வான். ஆனால், வானதி வந்த பின்பு, அதுவும் இரு குழந்தைகள் பிறந்த பிறகு, தன் ஏக பத்தினி விரதத்தைக் கைவிடும்படி சொன்னால் என்னைத் தேசப் பிரஷ்டமே செய்து விடுவான்!' என்று நினைத்தாள்.

வானத்தில் நிலவு சப்தமின்றிச் சிரித்தது.

அதன் பிம்பமும் தடாகத்தில் குலுங்கிக் குலுங்கி சிரித்தது.



அத்தியாயம் நாற்பத்தெட்டு

நந்தினியைப் பற்றிய நினைவுகள்

சோழ நாட்டின் நடப்புகளைக் கண்டபின் அசந்தே போனான் மாறன். ஊமைராணிக்காகக் கட்டிய கோயிலின் கும்பாபிஷேகம் இன்னும் இரண்டு நாட்களில் நடப்பதாய்த் தேதி குறிக்கப் பெற்றிருந்தது. அதனால் நாடே குதூகலத்தில் மூழ்கித் திளைத்தது போலிருந்தது. எங்கு பார்த்தாலும் ஆட்டமும் பாட்டும். கூத்தும் கும்மாளமும். அது மட்டுமா? வீதிக்கு வீதி விருந்தளித்துக் கொண்டிருந்தனர் நகரத்தார்கள். அகண்ட காவேரிக் கரையில் அவர்கள் வைத்திருந்த நன்செய் நிலத்தில் எங்கும் சம்பா நெல், கதலி வாழை, வெற்றிலை, கரும்பு முதலியவை பயிராக்கி வந்தனர். அதன் அறுவடையை இந்த விழாவுக்காக மனதாரப் பயன் படுத்தினர்.

தஞ்சையைச் சுற்றிலும் வளமான பூமி. பொன் போட்டால் பொன் விளையக் கூடியது. அதனால் செல்வத்துக்கும் தர்மத்துக்கும் ஒரு குறைவும் இல்லை. அது போலவே ஆழ்கடல் கடந்து செல்வம் சேர்த்து வந்த வணிகர்களும் இந்த நகரில் ஏராளம். எல்லாருமாய்த் தாங்கள் தர்மம் செய்ய இது நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணிப் பொன்னை வாரி இறைத்தனர்.

முக்கியமாக, ஒவ்வொருவரும் இதைத் தங்கள் சொந்த வீட்டு விசேஷம் போலவே கருதிச் செயல் பட்டனர். வாசல்களில் சித்திர விசித்திரமான கோலங்களைப் போட்டார்கள். வீட்டைச் சுற்றிய மதிற் சுவர்களிலும் திண்ணைகளின் பக்கச் சுவர்களிலும் காவி நிற வர்ணப் பட்டைகள் அடித்தார்கள். முற்றிய தார்களையுடைய வாழை மரங்களையும், செவ்விளநீர்க் குலைகளையும், பச்சைப் பசேல் என்ற தோரணங்களையும், தென்னங் குருத்துக் கூந்தல்களையும், எங்கெங்கும் தொங்க விட்டார்கள். முக்கியமாக ஒவ்வொரு வீட்டின் உச்சியிலும் வேங்கை பாயும்படியாகச் சித்திரிக்கப்பட்ட கொடியைப் பறக்க விட்டார்கள். காற்றடிக்கும் போது, தஞ்சை நகருக்கு மேல் லட்சம் புலிகள் பாய்ந்தோடுவது போல ஒரு பிரமை ஏற்பட்டது.

இந்த வைபோகத்தை எல்லாம் கண்ட பின்தான் சோழர்களின் அரவணைப்பில் மீண்டும் வந்ததற்கு மாறன் மன நிறைவு அடைந்தான். வேறெந்த நாட்டில் நடக்கும் இதெல்லாம்? இந்த ஆரவார ஊர்வலமெல்லாம் ஒரு ஊமைப் பெண்ணுக்காக. தனக்கென யாரும் இல்லை என்று ஏங்கித் தவித்த ஊனமுற்ற ஒரு

பெண்ணுக்கு இன்று கோயில் கட்டி விழாவெடுத்து நன்றி தெரிவிக்கின்றனர் சோழர்கள். ஈழ நாட்டுக் காடுகளில் பித்துப் பிடித்தவள் போல் திரிந்து கொண்டிருந்த ஊமை ஒருத்திக்குச் சோழரின் தலைநகரில் ஒரு கோயில். சரித்திரம் காணாத விந்தை. சோழர் குலம் என்றும் நன்றி மறவாதது என்பதற்கு எடுத்துக் காட்டு.

மாறன் ஆச்சரியப்பட்டதில் அதிசயம் இல்லை. மக்கள் அப்பேர்ப்பட்ட ஆனந்தத்துடன் இந்த விழாவில் பங்கேற்றனர். வீதிகளையும், வீட்டு வாசல்களையும் அலங்காரம் செய்தார்கள்.

கலைஞர்களுக்கும் இது ஆதரவான காலம் என்றே சொல்ல வேண்டும். கும்பாபிஷேகத் திருநாளை முன்னிட்டுச் சக்கரவர்த்தியின் அரண்மனை நிலா முற்றத்தில் நாட்டியமும் நாடகமும் மூன்று நாட்கள் நடைபெற்றன. அதை ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்து கண்டு களித்தார்கள்.

அரண்மனைப் பெண்டிர் அமர்வதற்கு ஒரு தனியான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் அமர்ந்தபடி குந்தவை தேவியும் வானதியும் விழாக்களில் கலந்து கொண்டார்கள். ஆள் அனுப்பிப் பழுவூர் அரண்மனையிலிருந்து லோகாவையையும் அழைத்து வந்து விட்டாள், குந்தவை. லோகாவைக் கண்டதில் எல்லாருக்கும் பெரும் மகிழ்ச்சி. ஆனால், அவளைக் கண்டு ராஜேந்திரன் ஆனந்தத் தாண்டவமே ஆடிவிட்டான். லோகா வந்ததிலிருந்து அவள் மடியை விட்டு அவன் அகல வில்லை. அவளை இந்த முறையும், "அம்மா! அம்மா!" என்று வாயார அழைக்க அவன் தவறவில்லை.

இளவரசிகளும், அவர்களுடைய அந்தரங்கத் தோழிமாரும் ஒன்றாய் அமர்ந்து நாடகம் பார்த்தார்கள். அப்போதெல்லாம் குந்தவை தேவிக்கு அருகிலேயே லோகா வந்து உட்கார்ந்தாள். இளைய பிராட்டிக்கு அருகில் இருக்கும் பெண் யார் என்று கேட்காதவரே இல்லை. பின்பு தெரிந்தவுடன், எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். "பழுவூர் இளவரசியா இவள்?" மேலும் இளைய பிராட்டியே அந்தப் பெண்ணுக்கு அவ்வளவு மதிப்பளித்து மரியாதை செய்தது பலருக்கும் வியப்பளித்தது.

தூரத்திலிருந்து லோகாவைப் பார்த்த மாறனும் வியந்தான். அரச குலத்துடன் நெருக்கம் பழுவூருக்கு இல்லையென்றார்களே. இப்போது எப்படி?

மாறனும் ஆழ்வார்க்கடியானும் சிங்கள நாச்சியார் கோயிலுக்கு விஜயம் செய்தனர். அங்கு கும்பாபிஷேக வேலைகள் மிக

விமரிசையாக நடந்து கொண்டிருந்தன. ஓரிரு நாட்களில் விசேஷம் இருந்ததால் அவசரமாகவே பல வேலைகளும் நடந்தன. கோயிலின் ஒரு புறத்தில் அந்தணர்கள ஹோமம் வளர்த்து யாக சாலையைத் தொடங்கி விட்டனர். ஹோம குண்டத்தில் இடும் விறகும், நெய்யும், வாசனைத் திரவியங்களும் எங்கும் புகையாய்க் கிளம்பியது. இவ்வளவு விமரிசையாக ஒரு கோயில் நிகழ்ச்சி சமீபத்தில் நடந்ததில்லை என்று பலரும் பேசும்படி நடந்தன வைபோக வேலைகள்.

கோயிலுக்கு அருகில் இருவருமாய்ச் சென்று சிற்பங்களை உற்றுப் பார்த்தனர். இந்தக் கோயில் மற்றக் கோயில்களிலிருந்து வேறுபட்டது என்று பார்த்தவுடன் தெரிந்தது. கோயிலின் வெளிச் சுவர்களில் சிங்கள நாச்சியாரின் லீலைகளெல்லாம் பாறையில் செதுக்கப்பட்டிருந்தன. அவள் மீது புஷ்பமாரி பொழிந்து கொண்டிருந்த கந்தர்வ வடிவங்களும் அழகாய் இருந்தன. ஆனால், அதைத் தவிர மருந்துக்குக் கூட இதர தெய்வங்களின் உருவங்கள் இல்லை. முழு முக்கியத்துவமும் அந்த ஊமை ராணிக்கே கொடுக்கப்பட்டிருந்தது.

பல கோயில்களில் நடனத் தோற்றங்களையும் அபிநய பாவங்களையும் மட்டும் செதுக்கிய சிற்பிக்கு இது புதிதாக இருந்திருக்க வேண்டும். சிலைகளைக் கண்டவுடன் சிற்பி அவர் தேர்ந்தெடுத்த அந்தக் கலையில் கரை கண்டவர் என்று தெரிந்தது. சிற்பக் கலையைப் பலவாண்டு கற்றுப் பாண்டித்யம் பெற்றவர் என்றும் புரிந்தது. பாராத ஒரு பெண்மணியைத் தத்ரூபமாகச் சித்திரித்திருந்தார். பல இடங்களில் கல்லா, இல்லை, தசையா என்று தெரியாத அளவு அழகாய் இருந்தது.

ஓராண்டுக்குப் பிறகு உண்மையிலேயே அவர்கள் கற்றிருந்த கலையையும் அதன் வெளிப்பாட்டையும் மக்கள் பார்த்துக் கருத்தை வெளியிடப் போகிறார்கள் என்றவுடன் சிற்பிகளுக்கே உற்சாகமாயிற்று. கருங்கல்லைப் போல வெறுமையானது ஒன்றுமில்லை. சிற்பத்தைப் போல அழகானது ஏதும் இல்லை. ஆனால், நடுவில் இருக்கும் நிலைகள் மிகவும் விகாரமாக இருக்கும். கோணலான முகங்களும், சதுர வடிவக் கைகளும் முழு வடிவம் பெறும் முன் பார்க்கும் போது சிற்பிக்கே உற்சாகம் போய்விடும். ஆனால், இன்று ஓரமாய் நின்றபடி அவற்றைக் கண்டு மக்கள் அதிசயித்து மகிழ்ந்ததைக் கண்டு மெய்மறந்து பரவசம் அடைந்தார்கள் அவர்கள்.

இந்தக் கோயில் இவ்வளவு அழகாக உருவெடுத்ததற்கு முக்கியக் காரணம் குந்தவை நாச்சியரார் என்று ஊரே அவரைப் புகழ்ந்தது.

காலஞ்சென்ற அந்தப் புனிதப் பெண்மணியாம் ஊமை நாச்சியாருக்கு ஒரு கோயில் கட்டுவது என்று சக்கரவர்த்தி இங்கே சிற்பத் திருப்பணியை ஆரம்பித்த பிறகு, பொன்னியின் செல்வர் கொள்ளையர் தீவுகளுக்குப் படையெடுத்துச் சென்று விட்டார். இங்கு நடந்து வந்த சிற்பத் திருப்பணியை நிறுத்தக் கூடாது என்று தமக்கையிடம் விட்டுச் சென்று விட்டார்.

அதனால் தடையின்றி நடந்தது வேலை. இடைவிடாது கேட்டன உளிகளின் ஓசை. பொன்னியின் செல்வர் பாதகரான கொள்ளையரை அடக்கி வெற்றி வாகை சூடி வரும்வரை அந்தக் கோயிலுக்குக் குந்தவை அடிக்கடி விஜயம் செய்து திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்வதாக வாக்களித்திருந்தாள். அப்படி அவள் செய்ததால்தான் இன்று இந்தக் கோயில் இவ்வளவு சிறப்பாக இருந்தது. சில நாளைக்கெல்லாம் அருள்மொழி வர்மரே வந்து விடுவார் என்று நம்பியே இந்தத் தேதியைக் குறித்தார்கள். அவரும் வந்து விட்டார்.

கோயிலையும் மக்களின் ஆரவாரத்தையும் கண்ட பின் அரண்மனைக்குத் திரும்பிய மாறனுக்கு ஒரு கேள்விதான் மனதை உறுத்தியது. அதை அவன் இரவு உணவு முடியும்வரை அடியானிடம் கேட்கவில்லை.

சம்புவராயர் மாளிகையில் சாம்பிராணிப் புகையின் வாசனை இன்னும் குறையவில்லை. எப்போதும் போல மாலையில் ஊழியர்கள் புகை போட்டு மாளிகையை எஜமானருக்கு ஏற்றாற்போல் அலங்கரிப்பது வழக்கம். ஒரு மாத காலத்துக்கு முன் இங்கு வந்த போது அந்த விருந்தினர் மாளிகையின் நிலையை இப்போது இங்கு பார்க்க முடியாது. அப்போது ஒரே சிலந்தி வலையும் ஒட்டடையுமாய் இருக்கும் இந்தக் கட்டடம். இப்போது நிரந்தரமாகச் சின்ன எஜமானர் இங்கு தங்குகிறார். அவருக்குத் துணையாக அந்த வைணவன் வேறு. அதனால் அந்தக் கட்டடம் புதுப் பொலிவு அடைந்திருந்தது.

தினமும் இருவரும் சண்டையடித்துக் கொள்வார்கள். முதலில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மாளிகை ஊழியர்கள் என்ன செய்வது என்று அறியாமல் தவித்தார்கள். விருந்தாளியும் எஜமானரும் சண்டையிட்டுக் கொண்டால் இவர்கள் என்னதான் செய்ய முடியும்? இப்பொழுதெல்லாம் அது பழகிப் போய்விட்டது.

தினமும் இருவரும் சண்டை பிடிப்பார்கள். பின் ஒன்றாய் அமர்ந்து உணவு அருந்துவார்கள். அடுத்தடுத்த படுக்கையில் படுத்தபடி வெகு நேரம் வாதாடுவார்கள். பின் உறங்குவார்கள்.

ஊமை ராணியின் சிலையைக் கோயிலில் பார்த்த மாறன் உணவு உண்ட பின் கேட்டான்: "வைணவரே! நானும் அந்த ஊமை ராணியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் கதையை முழுமையாக நீர் என்னிடம் சொல்லியும் இருக்கிறீர். மிகப் பெரிய மகிமை கொண்டவள்தான். ஆனால், மானிடப் பெண்ணுக்குக் கோயிலா? எப்படி அரசர் ஒப்புக் கொண்டார்? பின் அவள் சந்ததியரை எல்லாம் தெய்வப் பிறவிகள் என்று கூற முடியுமா?" என்று வினவினான்.

அடியான் சிரித்து விட்டான் : "நிச்சயமாகச் சோழர்களால் அதைச் சொல்ல முடியாது. ஊமை ராணியின் சந்ததியர் இருவர். ஆனால், அவர்களைப் பரம எதிரிகள் என்று பறைசாற்றுகிறார்கள் அல்லவா, சோழர்கள்?" என்றான். "நன்றாய்ச் சிந்தியுங்கள், இளவரசே. அரசியார் பூங்குழலிக்கும் பாண்டியத் தலைவர்களுக்கும் இரத்த சம்பந்த வழி உறவுண்டு. அவர்கள் இருவரின் மாமன் மகள் அல்லவா சக்கரவர்த்தினி. பார்த்தீரா, இளவரசே. அரச குடும்பங்களுக்குள் திருமணம் செய்து கொண்டால் நட்பு வளரும் என்று கூறுவீரே. இது இயற்கையாய் அமைந்த உறவு. ஆனால், ஒருவர் கழுத்தை ஒருவர் நெரித்துக் கொல்வதற்கே முயல்கின்றனர்!" என்று சொல்லிச் சிரித்தான்.

"ஆம். நந்தினியின் தாய்தானே இந்த ஊமை ராணி!" என்று கூறினான் மாறன்.

நந்தினியின் பெயரைக் கேட்டவுடன் ஏதோ துயரமயமான காட்சியைப் பார்த்தவன்போல் வைணவன் முகம் வேதனை அடைந்தது. கண் முன் தெரிந்த அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காதவன் போல் கண்களை இறுக்க மூடிக் கொண்டான்.

பின் பெருமூச்சு விட்டு, அடியான் நந்தினியின் சரித்திரத்தை விளக்கினான். "ஆம். ஒரு காலத்தில் பெற்றுப் போட்டு விட்டு அந்த ஊமை ஓடிவிட்டாள். நந்தினியை வளர்க்கும் பொறுப்பு எனக்கே கிடைத்தது. குழந்தையாக மிகவும் அழகாக இருப்பாள் நந்தினி. ஆனால், அவள் வயதான பின்தான் அதிசயமே ஆரம்பமானது. நந்தினியைப் பார்த்ததும் இன்னொரு முகம் ஒன்று பலருக்கு ஞாபகம் வந்தது. ஆனால், மனதின் பின் பக்கமாக ஒரு இருள் படிந்த இடத்தில் ஒளிந்து கொண்டு வெளிவர மறுத்தது. அந்த ஊமை ராணிக்கும் பழுவூர் இளைய ராணிக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியும் என்று யாரும் நினைக்கவில்லை."

"ஆனால், உண்மையில் நந்தினி நயவஞ்சக வேஷதாரி. அந்த உருவ ஒற்றுமையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது அவள்

மட்டும்தான். சாகும் தறுவாயிலிருந்த சுந்தர சோழர் முன் அவள் நின்றபோது அவருக்குத் தான் வஞ்சித்த ஊமைதான் பழி வாங்க வந்துவிட்டாள் என்ற பயம். அதிலேயே அவரது தளர்ச்சி அதிகரித்தது.''

சற்று நேரம் மௌனம் காத்த பின் தொடர்ந்தான், வைணவன்: ''நந்தினிக்குப் பதவியாசை என்றே அனைவரும் நினைத்தார்கள். ஆனால், சோழர்களின் மீது அவள் வஞ்சம் தீர்ப்பதற்காகவே அவள் பெரிய பழுவேட்டரையரை மணந்தாள். புதல்வியும், பேத்தியுமாக இருப்பதற்குரிய இளம் பிராயமுடைய பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள எப்படி அவர் மனம் துணிந்தது என்று நாடே நினைத்தது. முக்கியமாகப் பாட்டன் வயதிருக்கும் கிழட்டு எருமையொன்றை எப்படி இந்தச் சொப்பன சுந்தரி மணந்தாள் என்றும் வியந்தது.''

''ஆனால், அவள் ஒரு நாள்கூட முகம் சுளித்தது இல்லை. பழு வேட்டரையர் கட்டாயப்படுத்தி அவளை மணமுடித்திருக்கலாம் என்றாலும், அவள் அடிமை போல இல்லை. மாறாக அவர்தான் இவளுக்கு அடிமை போலிருந்தார்.''

''ஆனால், நன்றாய் அரசியலைக் கவனித்தவர்களுக்கு ஒன்று தெரிந்தது. அதுவரை ஒற்றுமைக்குப் பெயர் போன சோழ சாம்ராஜ்யத்தில், பெரிய பழுவேட்டரையரை அவள் மணந்த பிறகு, பிளவும், குழப்பமும் ஏற்பட்டிருந்தது.''

நந்தினியை அரசியலிலிருந்து மீட்டு மீண்டும் ஆன்மீகத்தில் வழி நடத்திச் செல்லலாம் என்ற யோசனையில்தான் அடியான் ஒற்றனாய்ச் செயல்படுகிறானோ என்ற கேள்வி மாறனுக்குள் எழுந்தது. ''நந்தினியைப் பாண்டியர்கள் அபகரித்ததனால்தான் இந்த ஒற்றர் வேலையில் நீர் இறங்கியிருக்கிறீரா?'' என்று கேட்டான்

இல்லையென தலையை அசைத்தான், அடியான். ''அவளைப் பாண்டியர்களும் அபகரிக்கவில்லை, பழுவூரும் அபகரிக்கவில்லை. அப்படியே அவர்கள் நினைத்தாலும், அவளுக்கு அவள் மட்டுமே எஜமானி.''

நந்தினியைப் பற்றி வர்ணித்தான், அடியான். மாறன் வியப் புடன் கேட்டுக் கொண்டு வந்தான். ''நான் என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். ஆண்டாளைப் போல அடுத்த பரம பக்தையாக உருவெடுக்கக் கொஞ்சமும் தகுதியற்றவள் அவள். அதிகாரம் செய்யும் ஒரு ஆசை அவளுக்கு உள்ளே வளர்ந்தது. அதற்கு முக்கியக் காரணம் உமது நண்பரின் மனைவிதான்.

குந்தவை இவளைக் குழந்தையாக இருக்கும் போது பெரும் பாடு படுத்தியிருக்கிறார். பின் ஆதித்த கரிகாலர் இவளைக் காதலிக்கவும் ஒரு தடை. எது எப்படியோ? எல்லாமாய்ச் சேர்ந்து அப்போதே இந்த நாட்டுக்கு ஒரு பெரும் பக்தை உருவெடுக்கமுடியாமல் செய்தது'' என்றான்.

''பரிவாரங்கள் புடைசூழச் சோழ ராஜ்யத்துக்கே அவள் சர்வாதிகாரிணியாக வேண்டும் என்று நினைத்து விட்டாள். அவள் மட்டும் மதப் பற்றுடன் இருந்திருந்தால், பதவி மதம் பிடிக்காமல் இருந்திருந்தால், சோழநாடே, ஏன். . . இந்தப் பரத கண்டமே ஆயர்பாடி போலவே குதூகலமாயிருந்திருக்கும்!'' என்றும் சொன்னான்.

அடியான் தனது ஆசைகளை நினைவு கூர்ந்தான். தன் தங்கை நந்தினியுடன் ஒவ்வொரு திருப்பதியாகச் சென்று பாசுரங்களைப் பாடிப் பள்ளிகொண்ட பெருமாளின் அருளாசி பெற வேண்டும் என்று எவ்வளவு ஆசை வைத்திருந்தான்! ''எனக்குப் பெரும் ஏமாற்றம் அளித்து விட்டுப் பட்டம் பதவி என்று ஆசைப்பட்டு விட்டாள். அவளுக்குப் பல முறை நான் செய்தி அனுப்பினேன். ஒரு முறை வந்தியத் தேவன் மூலமாகக் கூட.''

''கிருஷ்ண பகவான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்! என்பதுதான்அந்த செய்தி. வைணவம் இந்த நாட்டில் மீண்டும் மலரும் என்று வைஷ்ணவ பக்த கோடிகளும் காத்துக் கொண் டிருக்கிறார்கள் என்ற செய்தியை அவள் நிராகரித்தாள். ஆனால், அதற்கு உண்டான சந்தர்ப்பம் நந்தினி பழுவூர் அரசியானபோதே மறைந்தது. அந்தப் பாழாய்ப் போன பழுவேட்டரையர் என் எண்ணத்தில் மண்ணைப் போட்டார். அவருக்குத் தகுந்த தண்டனையும் கடவுள் கொடுத்து விட்டார். கோடைக் காலத்தில் ஆலங்கட்டி மழை பெய்து மக்களை அதிசயிக்க வைக்கும் அல்லவா? பனிக் கட்டிகளாய்த் தெருவெங்கும் சிதறிக் கிடக்கும். அதை வைரம் என்று எண்ணி வீட்டுக்குள் கொண்டு வந்து வைத்தால் சில நிமிடங்களில் தன் வேலையைக் காட்டிவிட்டு உருகிப் போய்விடும். பழுவேட்டரையர் தெருவில் கண்ட ஆலங் கட்டியைக் கொண்டு வந்து வீட்டினுள் வைத்தார்- வைரம் என்று எண்ணி.''

''ஆனால், ஒன்று. நந்தினி கொடியவள். தாடகை, சூர்ப்பணகை எல்லாரும் அப்புறந்தான். தவறாய் நினைக்காதே. நந்தினியும் நானும் ஒரே வீட்டில், ஒரே குடும்பத்தில் வளர்ந்தோம். இன்னும் உடன்பிறந்த தங்கையைப் போலவே அவளிடம் பிரியம்

வைத்திருக்கிறேன். ஆனால், அவள் ஆண்களை மயக்கும் விதமே எனக்கு அருவருப்பைத் தரும்'' என்றான் அடியான்.

மாறனுக்கு நன்கு தெரியும் - நந்தினி பெருமூச்சு விட்டால், அது மற்றவர் நெஞ்சில் புயலாக அடிக்கும். எவனையும் அவனுக்கு முன்னால் நின்று புன்னகை புரிந்து, அவனைத் தன் மாயவலையில் சிக்க வைக்கும் வல்லமை கொண்டவள் நந்தினி. மாறனும் அதை அனுபவித்திருந்தான். முன்பெல்லாம் நந்தினியுடன் பேசிக் கொண்டிருந்தபோது தன் அறிவு மெல்ல மெல்லத் தன்னை விட்டு அகன்று ஒரு விதப் போதை உணர்ச்சி உண்டாகி இருந்தது என்பதை இப்போது உணர்ந்தான்.

அடியான் கடைசியாக அறிவுரை சொன்னான். ''பெண் மோகத்தைப் போல் உலக வாழ்க்கையில் பொல்லாத மாயை வேறொன்றும் இல்லை. அது நாம் கோடியில் பார்த்தோமே புதை மண். அது போன்றது. அந்தப் படுகுழியில் விழுந்தால், விழுந்தவன் ஒழிந்தான். வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புபவன் பெண்களின் மோக வலையில் விழவே கூடாது!'' என்றான்.

''சன்யாசம் பெற்ற உமக்கு இப்படிச் சொல்வது சுலபம்!'' என்று வாதாடினான், மாறன்.

அடியான் ஒரு கேள்வியேந்திய பார்வையுடன் மாறனைப் பார்த்தான். மாறன் தன் கண்களை எதிராளியின் பார்வையிலிருந்து அகற்றித் தரையை நோக்கினான். ''இந்தச் சன்யாசி இதைச் சொல்கிறானென்றால் அது அவன் மன உறுதியைக் காட்டுகிறது. ஆனால், எல்லாரும் இப்படி ஒரு பெண்ணின் அரவணைப்பு இல்லாமல் ஏன் வாழக்கை நடத்த வேண்டும்?''

''எல்லாரும் நந்தினி போலக் கொடுமையானவர்களாகவா இருக்கப் போகிறார்கள்? மாறன் மனதைப் பறி கொடுத்த பழுவூர்ப் பெண் போல இருக்கக் கூடாதா? இல்லை, மாவீரர் பொன்னியின் செல்வர் தவியாய்த் தவிக்கிறாரே, ஒரு கனவுக் கன்னியின் தரிசனத்துக்காக - அவள் போல இருக்கக் கூடாதா?'' என்று நினைத்தான்.

❖ ❖ ❖

அத்தியாயம் நாற்பத்தொன்பது
சிங்கள நாச்சியார் கோயில்

சுமார் ஓராண்டுக்கு முன் சிங்கள நாச்சியார் கோயிலின் திருப்பணி தஞ்சையில் துவக்கப்பட்டது. கோயிலைக் கட்டத் துவங்குமுன், இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிழக்கு நோக்கிக் கோயிலைக் கட்டுவது என முடிவு செய்யப்பட்டது. அதற்குச் சிற்பிகளும் ஆகம சாஸ்திர வல்லுனர்களும் சொல்லிய காரணங்களுக்கு அப்பால் பொன்னியின் செல்வருக்கும் தனிப்பட்ட காரணங்கள் இருந்தன.

தஞ்சைக்குக் கிழக்கில்தான் ஊமை நாச்சியார் பிறந்த கோடிக் கரையும் அவள் வாழ்ந்து வந்த பூதத்தீவும் இருந்தன. உயிரைத் துறந்து தியாகம் செய்த இடத்தில் கோயில் கட்டும் நியாயத்தைப் போல, அவள் வாழ்ந்த இடத்தை நோக்கும்படியாகச் சிலையை அமைக்க வேண்டும் என்பது பொன்னியின் செல்வருடைய விருப்பம்.

இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கோயில் அமைக்கும் பணிகள் துவங்கின. கற்கள் கொடும்பாளூர் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டன. மலைகளைக் குடைந்து, பெரும் பாறைகளாக வெளியெடுத்து மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டுத் தஞ்சையை நோக்கிப் பிரயாணித்தன. ரிஷபங்கள் பூட்டிய வண்டிகளும், பொதி சுமக்கும் மாடுகளும், கோவேறு கழுதைகளும் இந்தக் கோயிலுக்கான இதர பொருட்களைப் பல காத தூரம் சுமந்து வந்திருந்தன. ஆனால், இந்த முறை அந்த வாயில்லா ஜீவன்கள் வருத்தப்பட்டிருக்க மாட்டா.

ஏனென்றால், அந்தச் சுமையையெல்லாம் மற்றும் ஒரு வாயில்லா ஜீவனுக்கு இந்த உலகம் கொடுக்கும் புகழைக் காலமுள்ளவரை பறைசாற்றவே அவை சுமந்தன.

நல்ல நாள் குறித்துக் கோயிலுக்கான இடம் சுத்தம் செய்யப்பட்டது. கோயிலின் அளவு கோலப் பொடியில் வரையப்பட்டது. முதலில் வெளி மதிலும் பின் உள் பிராகாரமும் வரையப்பட்டன.

பூமி பூஜையன்று சக்கரவர்த்தியே விஜயம் செய்தார். மக்கள் பெரும் ஆரவாரத்துடன் அவரை வரவேற்றார்கள். எல்லாருக்கும் முன்னால் நின்ற ஒருவர் மட்டும் தனியே வந்து பணிவுடன் நின்று சக்கரவர்த்தியை வணங்கினார்.

அரசரை வரவேற்க முன் வந்தவர் ஆசாரிய ஸ்தபதி. பார்ப்பதற்கு அவர் வயதில் மூத்தவராய் இல்லை. நாற்பது வயதுக்குள் தானிருக்கும். குஞ்சர மாமல்லர் என்பது அவரது பெயர். தொண்டை நாட்டிலிருந்து வந்திருப்பார் போலும். பரம்பரை பரம்பரையாகச் சிற்பம் வடித்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரே இந்தக் கோயிலைக் கல்லிலிருந்து உருவாக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். கடவுள்களுக்குக் கோயில் கட்டிக் கட்டிப் பழகிப் போயிருந்தவருக்கு இந்த அனுபவம் மிகவும் புதியதாக இருந்தது.

ஆனால், பொன்னியின் செல்வரைப் பல முறை சந்தித்து ஊமை ராணியின் பண்புகளையும் அவளது தெய்வீக சக்திகளையும் பற்றி நன்றாய்க் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார். இந்தக் காரியத்தைச் செய்து முடித்தால் அது தன் வாழ்க்கையின் மிகப் பெரிய சாதனை என்று கருதினார். ஆனால், அன்று அவருக்குத் தெரியாது, பின் ஒரு காலத்தில் ஓராயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்று உலகம் போற்றும் கோயில்களை அவர் கட்டப் போகிறார் என்று.

குஞ்சரன் வணக்கத்துடன் தம் கையிலிருந்த கல்லுளியைச் சக்கரவர்த்தியின் பால் நீட்ட, அவர் அதை வாங்கிக் கொண்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பின் கொடும்பாளூரிலிருந்து வந்திறங்கிய ஒரு பாறையின் மீது தூண் போல ஆசாரிய ஸ்தபதி வரைந்து வைத்திருந்த சித்திரத்தின் மேல் கல்லுளியால் சில முறை பொளிந்தார். பிறகு கல்லுளியை ஸ்தபதியிடம் கொடுத்தார்.

ஸ்தபதியார் அதைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு, சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்தி விட்டுச் சிற்ப வேலையை ஆரம்பித்தார். அரசரின் அங்கீகாரம் பெற்ற வேலையிது என்று நாடே அறியும் வண்ணம் இந்தச் சம்பிரதாயம். இந்த வேலையைத் தடை செய்யும் யாவரும் அரசருக்கு எதிரிகளாகக் கருதப்படுவார்கள் என்று சொல்லாமல் சொன்னது அந்தச் செயல். அன்று முதற்கொண்டு ஓராண்டு காலம் தஞ்சையில் நூற்றுக் கணக்கான கல்லுளிகளின் சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

ஒரு மானிடப் பெண்ணுக்குக் கோயில் கட்டும் சோழர் மேல் வெறுப்பு வரும் என்று அரசர் யூகித்தது தவறு என்று தெரிய வந்தது. தங்களுள் ஒருவரான சாமானியருக்கு ஒரு கோயில் என்பது எல்லாருடைய மனதையும் கவர்ந்தது. "இந்தக் கோயில் சோழர்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது" என்று ஒரு பெரும் பகுதியார் கருதி, "இதைக் காட்டிலும் நம் அரசருடைய பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்?" என்று பேசுவதாய் ஒற்றர்கள் வந்து அரசவையில் தெரிவித்தார்கள். மக்களுக்கு அரசன் மீதிருந்த பிரியம் வளர்ந்தது. இப்படி வித்திலிருந்து மரமும்,

மரத்திலிருந்து வித்துமாக நாட்டில் நல்லெண்ணம் வளர்ந்து கொண்டே போகும்போது நாடு நலம் அடையும் எனத் தெளிவாகத் தெரிந்தது.

இதைப் பற்றிப் பாண்டிய ஆபத்துதவிகளின் கருத்தென்ன என்று அறிய முயற்சி செய்த போதிலும் பிரதமர் அநிருத்தரால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த ஊமை ராணி அந்தப் பாண்டிய ஆபத்துதவிகளின் இரு குழுக்களுக்குத் தலைமை தாங்கிய இரு தலைவர்களின் தாய். இந்தச் செயலால் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்றும், அவர்களின் கை பலம் பெறும் என்றும் அவர் நினைத்தது தவறு என்ற முடிவுக்கு வந்தார்.

ஓராண்டு காலத்தில் கோயில் கட்டப்பெற்று மிகவும் எழிலிருந்து காட்சி தந்தது. கும்பாபிஷேகத் தேதி குறித்தனர். அதற்கு ஏற்றாற் போல் பொன்னியின் செல்வரும் வந்தியத் தேவரும் மாபெரும் வெற்றி பெற்று நாடு திரும்பினர்.

உத்தம சோழச் சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த பிறகு, சோழ சாம்ராஜ்யத்தின் ஆன்மீக வளர்ச்சியின் புகழ் கடல்களுக்கு அப்பாலும் பரவியது. தூர தேசங்களிலிருந்து பல துறவிகள் சைவ வளர்ச்சியைப் பற்றி ஆராய இங்கு வந்தார்கள். அவர்கள் எல்லாரும் அயர்ந்தே போனார்கள்.

ஒரு வார காலமாகவே வெளிப் பிரதேசத்திலிருந்து வந்த பயணிகள் பலரும் தலைநகருக்குள் பிரவேசித்தார்கள். ஊரின் அலங்காரம் அவர்களின் கண்களையும் கருத்தினையும் கவர்ந்தது. "இன்று தலைநகரமே ஓரே கொண்டாட்டதில் உள்ளதே! தினமும் இப்படித்தான் இருக்குமோ?" என்று பல நாள் கழித்து வருபவர்கள் விசாரித்ததைப் பல இடங்களில் பார்க்க முடிந்தது. "இன்றைய கோலாகலத்துக்கு ஏதேனும் காரணம் உண்டா? விசேஷம் ஏதேனும் இன்று நடைபெறுமோ?" என்று ஆவலுடன் கேட்டார்கள், வெளிநாட்டுப் பிரயாணிகள்.

நகர மக்கள் பதில் கொடுத்தனர். "நாளை உத்தம சோழச் சக்கரவர்த்தியின் தலைமையில் சிங்கள நாச்சியார் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறப் போகிறது. அதனால்தான் ஜனங்களுக்கு அவ்வளவு கொண்டாட்டம்."

"யார் அந்தச் சிங்கள நாச்சியார்?" என்று ஊருக்குப் புதிதாய் வந்தவர்கள் கேட்டார்கள். "வேறு யார்?" என்று கூறி, ஊமை ராணி பற்றியும் அவளால் சோழப் பரம்பரை பல முறை காப்பாற்றப்பட்டதைப் பற்றியும் கதைகதையாகக் கூறலானார்கள் தலைநகரவாசிகள்.

கும்பாபிஷேகத்துக்குக் குறிக்கப்பட்ட நாளும் விடிந்தது. கிழக்கு வானத்தின் அடிப்புறத்தில் மேகக் கூட்டம் பயந்து ஒளிந்து கொண்டிருந்தது. மெல்ல மெல்ல அதன் மேலே வந்த வட்டமான உதய சூரியன் ஏதோ ஒரு விருந்தில் வைக்கப்படும் தின்பண்டம் போலத்தான் இருந்தது. இதிகாசத்தில் ஹனுமார் அந்தக் காட்சியைக் கண்டு சூரியன் ஒரு பழம் என நினைத்ததில் தவறே இல்லை என்று உதயத்தைக் கண்ட பலரும் கருதியிருக்கலாம்.

செம்பொன் நிற ஞாயிறு தலைநகர் மக்களை எழுப்பி விடுவோம் என நினைத்திருக்கக் கூடும். ஆனால், அதற்கு ஒரே ஏமாற்றம் தான். நகரமே விடிவதற்கு முன் கண் விழித்துத் தயாராகிக் கொண்டிருந்தது. சூரிய உதயத்தை வாழ்நாட்களில் பார்த்திருக்காத பல சோம்பேறிகளும் அன்று அதை முதன் முதலாய்க் கண்டார்கள். பலரும் இந்த மாநகரில் தூங்கவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

உண்மைதான். அன்றைய இரவை நகர மாந்தர்கள் கண் விழித்துப் பகலாகவே மாற்றியிருந்தார்கள். நகரமெங்கும் வீதி விளக்குகள் ஜகஜோதியாய்ப் பிரகாசித்தன. கொண்டாட்டத்துக்கு இடையில் தூங்க நினைத்தவர்கள் செவிடாக இருந்தாலே ஒழியத் தூங்கியிருக்க முடியாது.

தஞ்சை சோழர் ஆளுகையில் வந்த நூறாண்டுகளில் அதற்கு முன்னால் யாரும் அதன் சாலைகளில் அம்மாதிரிக் காட்சியை எப்போதும் பார்த்திருக்க முடியாது. எத்திசையில் நோக்கினாலும் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு ஒரே தலைகள்தாம். பூவுலகத்திலுள்ள மனிதர்கள் எல்லாம் இங்கே திரண்டு வந்திருக்கிறார்களா என்ன! அப்படிக் கணக்கிட முடியாத மக்கள் ஈ மொய்ப்பது போலத் தரையை மொய்த்துக் கொண்டு நின்றார்கள்.

தஞ்சை மாபெரும் ஜனத் தொகை கொண்ட நகரம்தான். ஆனால் அந்த ஜனத்திரளைக் கண்டவர்களிடையே நிச்சயமாக இந்த ஊரில் வாழ்பவர்கள் இவ்வளவு பேர் இருக்க முடியாது என்ற பிரமிப்பு. இதுதான் தஞ்சையின் ஜனத்தொகை என்றால் இந்த நகரில் எல்லாரும் நின்றபடியேதான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்றெல்லாம் பார்ப்பவர்கள் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பும்படியாக எல்லையில்லாத தூரம் ஒரே மனித மயமாகக் காணப்பட்டது.

தஞ்சை மக்கள் அன்று இரு வகை வியூகத்தை அமைத்திருந்தனர். ஒரு சாரார் கோயில் இருக்கும் இடத்திற்கு அதிகாலையில் சென்று இடம் பிடித்து விட்டனர். நகரத்தின் வீதிகளெல்லாம் ஒரே

இடத்திற்கே இட்டுச் செல்லும்படி தோன்றும் அளவுக்கு அனைவரும் அந்த இடத்தை நோக்கியே சென்றனர். புதியதாய்க் கட்டப்பட்டிருந்த சிங்கள நாச்சியார் கோயிலின் அருகில் மக்கள் பொழுது விடிந்ததிலிருந்து கூட ஆரம்பித்திருந்தனர். நல்லதோர் இடம் கிடைத்தால் நிகழ்வுகள் அனைத்தையும் நன்றாகப் பார்க்கலாம் என்ற நோக்கமே அனைவரின் மனதிலும் இருந்தது.

மீதி மக்களெல்லாம் அரண்மனையைச் சுற்றி முற்றுகை இட்டனர். இது அரசர் வீட்டு விசேஷம். அரசருக்கும் அரசிக்கும், பொன்னியின் செல்வருக்கும் நெருக்கமான அந்தத் தெய்வப் பெண்ணுக்குத் திருக்கோயில் என்பதால் அரண்மனையிலிருந்து புறப்படும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள விருப்பம் அவர்களுக்கு.

இரவின் நடு ஜாமத்திலிருந்தே மக்கள் கூட்டம் அரசரின் மாளிகைக்கு வெளியே காத்திருந்தது. பொழுது புலரும் சமயத்தில் அரண்மனை வாசலில் அரசருடன் கிளம்புவதற்காக ஆயத்தமாக நின்றார்கள்.

அரசர் ஏறிச் செல்வதற்கு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று வந்து நின்றது. முன்னாலும் பின்னாலும் குதிரைகள், ரிஷபங்கள் முதலியனவை நின்றன. குதிரைகளும் ரிஷபங்களும் அவ்வப்போது தங்களை விடப் பெரிய உருவம் கொண்ட யானை என்ன செய்கிறது என்று கவனமாய்ப் பார்த்தன. யானைக்கோ சுற்றியிருந்தவர்களெல்லாம் எறும்புகள் போலத் தோன்றியிருக்க வேண்டும். இல்லை, அரசரே தன் மீது தான் பயணிக்கப்போகிறார் என்ற எண்ணம் இருந்திருக்க வேண்டும். மமதையில் நின்றது, யாரையும் கவனிக்காமல்.

திருச் சின்னங்களும், கொடிகளும் ஏந்தியவர்களும், பலவித வாத்தியக்காரர்களும் அணிவகுத்து நின்றார்கள். மக்களோ பொங்கி எழுந்த கடலைப் போல் ஆரவாரித்துக் கொண்டு அரண்மனையைச் சுற்றிக் கண்ணுக்கெட்டிய தூரம் நின்றார்கள். அரண்மனையிலிருந்து அரசர் வெளியே வந்தவுடன் அந்த ஜனக் கூட்டத்திலிருந்து ஒரு மகத்தான ஆனந்த கோஷம் கிளம்பிற்று. அவரைத் தூரத்திலே பார்த்ததும், அந்த ஜன சமுத்திரத்தில் மகத்தான ஆரவாரம் ஏற்பட்டது. வாத்திய முழக்கங்களுடன் மனிதர்களின் கண்டங்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகள் போட்டியிட்டு ஆகாயத்தை அளாவின. அரசரை வரவேற்க சங்கங்களும் தாரைகளும் பேரிகைகளும் முரசுகளும் கடுமுகங்களும், சமுத்திர கோஷங்களும் சேர்ந்தாற்போல் முழங்கி பேரமளியை உண்டாக்கியது.

அரசர் தனக்காக மண்டியிட்டு அமர்ந்த யானையின் மேலேறினார். யானையும் புறப்பட்டது. ஜன சமுத்திரத்தின் நடுவே சக்கரவர்த்தி யானை மீதிருந்த அம்பாரியின் மேலேறிய பின்தான் அரசரின் தரிசனம் அனைவருக்கும் கிட்டியது.

யானை அரண்மனையிலிருந்து சிங்கள நாச்சியார் கோயிலை நோக்கிக் கம்பீரமாக நடந்து செல்ல, ஜனக் கூட்டமும் ஆரவாரத்துடன் அதைப் பின் தொடர்ந்து சென்றது. அம்பாரியின் மீது வீற்றிருந்த அரசர் மக்களின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அந்தச் சிவ பெருமானை மட்டும் தினந்தோறும் வழிபட்டு வந்த அரசர், கடவுளைத் தவிர வேறு ஜீவராசிகளுக்குக் கோயில் கட்ட முடியாது என்று சொன்ன அரசரே பிரமித்தார்- 'இந்த நாடு நகரமெல்லாம் நம் பெரியன்னையின் புகழ் பரவியிருக்கிறதே. அவள் கதையை ஆயிரம் ஆண்டுகள் கழித்தும்கூட இந்த நாடு பேசும் போலிருக்கிறதே!' என்று.

மக்கள் வழி நெடுகிலும் இருபுறமாக நின்று ஊர்வலத்தைக் கவனிக்கலானார்கள். நாமும் கவனிப்போம். இசை வாத்தியங்கள் கொண்ட கலைஞர்களுக்கும், சோழரின் வேங்கைக் கொடியை உயர்த்தி பிடித்த வீரர்களுக்கும் பின்னால் அலங்கரித்த அம்பாரி கொண்ட ஒரு யானை மெல்ல வந்தது. அதன் முன்னும் பின்னுமாய்ச் சில சோழ நாட்டுப் படைத் தலைவர்கள் கால் நடையாக வந்தனர்.

அம்பாரியின் மீது சோழ நாட்டின் சக்கரவர்த்தி உத்தம சோழர் அமர்ந்திருந்தார். யானையின் அசைவுக்கு ஏற்றாற்போல் அவரும் மெல்ல ஆடிக் கொண்டே வந்தார். தஞ்சை அரண்மனையில் அவர் பிரவேசிக்கும்போது அவர் ஏழ்மையில் வளர்ந்த உலகமறியாத பாலகனாயிருந்தார். இப்போதோ அந்த முகத்தில் ராஜகளை இருந்தது. உலக அனுபவத்தினால் ஏற்படும் முதிர்ச்சியும் காணப்பட்டது. இளம் பிராயத்தில் பட்டம் பெற்றவர். அதனால் வயதின் முதிர்ச்சி தெரியாவிடினும் களை பொருந்திய முகம் கொண்டவர். பக்திமான் என்று பார்த்தவுடன் எளிதில் கண்டறியலாம். அரசியலும் ஆன்மீகமும் சோழ சாம்ராஜ்யத்தின் இரு கண்களாகும் என்று சொல்லும் அளவுக்கு நடந்து கொள்பவர்.

அரசரைக் கண்டவுடன் அந்த ஜனக் கூட்டத்தில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் முழக்கத்தையும் கேட்டவர்கள் யானையே மிரண்டு விடுமோ என்றுதான் நினைத்தார்கள். அதன் பாகன் அதனருகே நடந்தபடி அதன் துதிக்கையை ஆறுதலாகத் தட்டி வந்ததால் யானை எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன்

துதிக்கையை விளையாட்டாக இப்படியும் அப்படியுமாக ஆட்டி வந்தது. கூட்டத்தைக் கண்டு பயம் கொண்டதாகத் தெரியவில்லை.

யானையில் அரசர் முன் வர, அவரது பரிவாரங்களுக்குப் பின்னால் சில பல்லக்குகள் வந்தன. ஏதோ பாடலை முணுமுணுத்தபடி, சுமையை மறந்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர் சிவிகை தாங்கிகள். அந்தப் பல்லக்குகளில் வந்தவர்கள் அரச குடும்பத்தில் இருக்கும் மூப்பெய்திய மாதராக இருக்க வேண்டும். அதில் நிச்சயமாகப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி இருப்பார். அவர் சக்கரவர்த்தி உத்தம சோழரின் தாய். தமிழகத்தில் பலவாயிரம் ஆண்டுகள் சைவம் தழைத்திருக்கும் அளவுக்குச் சேவை செய்தவர். அந்தப் புண்ணியம் செய்த தாயிடம் பிறந்ததற்கு உத்தம சோழரைப் பலரும் "திருவயிறு உதித்த தேவர்" என்று அழைப்பதுண்டு.

பல்லக்குகளைப் பின் தொடர்ந்து மூன்று குதிரைகள் ஒன்றின் பக்கம் ஒன்றாக வந்தன. எல்லாம் உயர்ந்த ஜாதிக் குதிரைகள். பாரசீகத்திலிருந்து கப்பலில் வந்து நாகையில் துறைமுகத்தில் இறங்கியவை. பளபளப்பான வெள்ளை நிறமுடையவை. மூன்று குதிரைகள் மீதும் மூன்று இளம் வீரர்கள் கம்பீரமாக அமர்ந்திருந்தனர். அவர்களில் மூவருமே ஆறடி உயரத்திற்கு மேல் ஆஜானுபாகுவாக இருந்தார்கள். அவர்களைத் தூரத்தில் பார்த்த போதே ஜனங்கள் அவர்களைச் சுட்டிக் காட்டி இன்னார் இன்னவர் என்று பேசத் தொடங்கினார்கள்.

இருவரைத் தூரத்தில் கண்டவுடனேயே யாரெனத் தெரிந்து கொண்டனர். ஒருவர் வல்லத்து அரசரும் அரச குடும்பத்தின் மருமகனுமான வல்லவரையர் வந்தியத் தேவன். அவர் அருகில் பொன்னியின் செல்வர். ஆனால், மூன்றாவது வருவது யார்? சோழர்களுடன் சரி சமமாக வரும் இந்த வீரன் யார்? யாரென்று முதலில் மக்களுக்குத் தெரியவிலை. பின்பு இளம் சம்புவராயன் என்று அடையாளம் கண்டனர்.

குதிரைகளைப் பின் தொடர்ந்து ஊர்வலத்தில் இரட்டைக் குதிரைகள் பூட்டிய அழகிய விமான ரதம் ஒன்று சென்றது. அதில் ஒரு தேரோட்டி ரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். நான்கு பெண்கள் நின்றபடி பக்கம் இருந்த மக்களைப் பார்த்துக் கையசைத்தும் புன்னகை புரிந்தும் வந்தனர். குதிரைகளின் அலங்காரமும் ரதத்தின் வேலைப்பாடுகளும் அதில் செல்பவர்கள் உயர் குலத்துப் பெண்கள் என்று எடுத்துக் கூறின. ஆனால், பெண்களின் முகத்தைப் பார்த்தால் அவர்கள் நிஜமாகத் தேவலோக மாதராய் இருக்க வேண்டுமெனச் சந்தேகம் பார்ப்பவர் கண்களுக்குத்

தோன்றி விடும். அப்படி ஒரு சௌந்தர்யம் அந்த நான்கு பெண்களின் முகத்தில் தவழ்ந்தது.

அதில் ஒருவர் சகக்ரவர்த்தினி பூங்குழலி அம்மையார். ஒருவர் பொன்னியின் செல்வருடைய தர்ம பத்தினி வானதி அம்மையார். மூன்றாவது வல்லத்து அரசியும் வல்லவராயர் பத்தினியுமான இளையபிராட்டி குந்தவை தேவி. நான்காவது வந்தது யார் என்று மக்களுக்குத் தெரியவில்லை.

ஆனால், குதிரையில் முன் சென்ற வீரர்களில் இருவர் பல முறை திரும்பித் திரும்பி அந்த நான்காவது பெண்ணாகிய பழுவூர் இளவரசி லோகாவையே பார்த்துக் கொண்டிருந்தனர்.



அத்தியாயம் ஐம்பது

கோயில் கட்டியதே பிசகா?

சாலையோரத்திலிருந்த எண்ணற்ற மக்கள் குதூகலத்தில் அரச குடும்பத்தை ஆரவாரத்துடன் வாழ்த்தினார்கள். வீதிகளில் எள்ளுப் போட்டால் எள் விழாதபடி ஜனக் கூட்டம் நிறைந் திருந்தது.

அப்பட்டணத்தின் வீதிகளில் அவரவர் வீட்டு வாசல்களில் பெண்கள் கோலமிட்டிருந்தார்கள். வீடுகளின் முகப்புகள் எல்லாம் தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தோரணங்களெல்லாம் இன்று புதிதாய்ப் போடப்பட்டிருந்தாலும் இந்த விழாக்கோலம் சில நாட்களாகவே இருந்து வந்தது.

முதல் நாள் இரவு வீதிகளிலெல்லாம் வாத்திய முழக்கங்களும், ஆடல் பாடல்களும், குரவைக் கூத்துகளும், பொம்மலாட்டங் களும், வீர முழக்கங்களுடன் கூடிய கத்தி விளையாட்டு - கழி விளையாட்டுகளும் நடந்து முடிந்திருந்தன.

ஊர்வலம் வரக்கூடிய பாதையில் உள்ள அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் எல்லாம் அதிகாரிகள் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். ராஜ வம்சத்தினர் மட்டுமின்றி அவர்களுடன் பரிவாரத்தில் வரக்கூடிய திரளான மக்களுக்கும் கும்பாபிஷேகம் முடிந்த பின்பு விருந்தளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முந்திய வாரமே, அனைவருக்கும் விருந்தளிக்க வண்டிகளிலே தானிய மூட்டைகளும் வந்திறங்கி விட்டன. ஓய்வின்றி எரிந்த

அடுப்புகளில் உணவு பொங்கப்பட்டு வெள்ளைப் பனி மலையாக ஆங்காங்கு கிடந்தன. இலை போட்டு விருந்து பரிமாறப்பட்டது. வயிறு நிறைய உண்டனர் மக்களும். மனம் நிறையப் பரிமாறினார்கள் அதிகாரிகள்.

தஞ்சை நகரில் வீடுகள், வீதிகள், சதுக்கங்கள் எல்லாம் நேர் கோடுகளில்தான் அமைந்திருந்தன. ஜன நடமாட்டம் சீராக இருக்க வேண்டுமென்று அமைக்கப் பட்டவை. ஆனால், அவ்வளவு பெரிய பட்டணமும் கொள்ளாத அவ்வளவு ஜன நெருக்கம் ஏற்பட்டது. அத்தனை மாட மாளிகைகள், கூட கோபுரங்களின் மேலும் ஏறி ஜனக்கூட்டம் நின்றது.

அந்தக் கோவில் கும்பாபிஷேகத்தில் கூடியிருந்த ஜனத்தொகை தஞ்சையின் மொத்த ஜனத்தொகைக்கு இரண்டு மடங்குக்குக் குறைவு இல்லை. இந்த வைபவத்திற்காகத் தஞ்சை நகர மாந்தரும் அக்கம் பக்கத்துக் கிராமவாசிகளும் கணக்கற்றவர்கள் கூடியிருந் தார்கள். ஆண்களும், பெண்களும், அனைவரும் சிறந்த ஆடை அணிந்து மலர்ந்த முகத்துடன் நின்றார்கள்.

பெண்களோ விலை உயர்ந்த ஆபரணங்கள் அணிந்திருந் தார்கள். குழந்தைகளும் அலங்கார ஆடை ஆபரணங்கள் பூண்டு கோலாகலமாகத் திரண்டு வந்தார்கள். நகரப் புருஷர்கள், எல்லாரும் அளவிலாத ஆர்வம் பொங்கிய கண்களுடன் ஊர்வலத் தைப் பார்த்துப் பரவசமடைந்தார்கள்.

ஊர்வலம் முடியும் தறுவாயில் அனைவராலும் கோயிலைக் காண முடிந்தது. தூரத்திலிருந்து கோயிலைப் பார்த்தவுடன் அனைவரும் பிரமித்துப் போனார்கள். அந்தக் கோபுர விமானத்தின் நிறம் சங்கின் நிறத்தில் இருந்தது. அதன் பின் இருந்த நீல நிற வானத்துடன் அதைச் சேர்ந்து பார்ப்பதற்கு மிகவும் எழில் பொங்கியது. நீலக்கடலில் தோன்றும் வலம்புரிச் சங்கு ஒன்றை நினைவுபடுத்தி, ஊமை ராணிக்குக் கடலுடன் இருந்த தொடர்பை அது வெளிப்படுத்தியது.

சூரியக் கதிர்கள் அதன் மேல் பட்டவுடன் அந்தக் கோபுரம் ஜொலித்த காட்சியின் அழகை என்னவென்று சொல்வது? கோயிலின் மீது பொற்கலசம் செம்பொன் வெய்யில் படும்போது பிரகாசித்தது. அது கோடிச் சூரியப் பிரகாசமாகக் கண்கள் கூசும்படி ஜொலிக்கின்றது என்று மக்கள் வியந்தனர்.

சக்கரவர்த்தியின் வருகையை அறிவித்த பேரிகை ஒலி வெகு தூரத்தில் கேட்ட போதே மக்கள் பரபரப்புடன் தெருவின் ஓரங்களுக்கு வந்து அவரை வரவேற்க ஆயத்தமாக நின்றனர்.

யானை மண்டியிட்டு அரசர் கீழே இறங்குமுன் பின்னால் வந்த குதிரைகளிலிருந்து அதிவேகமாக இறங்கி மூன்று வீரர்களும் ஓடிச் சென்று மன்னரை வரவேற்கும் வரிசையில் நின்றனர்.

சக்கரவர்த்தி முதலில் பொன்னியின் செல்வரைக் கண்டார். "நினைத்ததை முடித்து விட்டீர், பொன்னியின் செல்வா. ஆனால், உமது கோயில் கட்டும் பணி இத்துடன் நின்றுவிடக்கூடாது!" என்று சொல்லிக் கண் சிமிட்டினார்.

அடுத்து நின்ற வந்தியத் தேவரையும் இளம் சம்புவராயனையும் கண்டு அவர் இதழின் ஓரத்தில் ஒரு முறுவல் மலர்ந்தது. "நான் கூப்பிடும் போதெல்லாம் வராதவர் இன்று நண்பர் கூப்பிட்டவுடன் வந்து விட்டாரோ? ஆகா, நட்பின் மகிமையே மகிமை தான்!" என்றார். அந்த ஒரு நொடியில் வந்தியத் தேவனுக்கும் இளம் சம்புவராயனுக்கும் இருந்த பழைய நட்பை நினைவு கூர்ந்த அரசர், தான் பல முறை தலைநகர் வரும்படி அழைத்ததற்கு மாறன் வர இணங்கவில்லை என்பதையும் தெரிவித்து விட்டார்.

கோவில் மதிற்சுவரை ஒட்டி அரச குடும்பதினர் அனைவரும் ஓரிடத்தில் கூடிய பின், விழா தொடங்குமென அமைப்பாளர்கள் முடிவு செய்திருந்தார்கள், அதன்படி அரச குலத்தினரும் - ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் - குழுமி நின்றார்கள். சூரியனின் ஒளி ஆண்களின் கிரீடத்திலும் பெண்களின் பட்டு ஜரிகையிலும் பிரதிபலித்துப் பல சூரியர்கள் ஒன்று சேர்ந்தாற் போல் ஒரு தோற்றத்தை உருவாக்கியது.

ஊமை ராணியின் கோயில் மிக அழகாக அமைக்கப் பட்டிருந்தது. உள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த சாம்பிராணிப் புகையின் வாசனை அந்த இடத்தை மங்களகரமாக மாற்றியது. கர்பக் கிருஹம் தீப வரிசைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதனுள் இருந்த ஊமை ராணியின் சிலை பட்டுத் துணியால் மூடப்பட்டிருந்தது. கும்பாபிஷேகம் முடிந்த பின்பே அது திறக்கப் படும். அதன் பின் ஊமை ராணியைத் தெய்வமாக இந்த நகர மக்கள் வழிபடலாம்.

பந்தலின் நடுவில் அமைந்திருந்த தற்காலிக சிம்மாசனத்தில் சக்கரவர்த்தி வந்து அமர்ந்ததும், மந்திரி மண்டலத்தாரும் மற்றவர்களும் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர். கோயில் குருக்கள்மார் தொடர்ந்து வந்து சக்கரவர்த்திக்கும் மற்றவர்களுக்கும் விபூதி குங்குமப் பிரசாதங்களை அளித்து, மலர் மாலைகள் சூட்டினர். பின்பு முழக்கங்களுக்கிடையே சக்கரவர்த்தி தம் திருக்கரத்தினால் குஞ்சர மாமல்லன் எனும் ஆசாரிய ஸ்தபதியின் தலையில் பட்டுப் பரிவட்டம் கட்டினார். பிறகு உயர்ந்த பட்டு வஸ்திரங்களும் நூறு

பொன் கழஞ்சுகளும் வைத்திருந்த தாம்பூலத் தட்டையும் அவரிடம் கொடுத்தார்.

அவற்றை ஆசாரிய ஸ்தபதி வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவ்விதமே அங்கு வந்திருந்த நூற்றுக் கணக்கான சிற்பிகளுக்கும் மந்திரி மண்டலத்தாருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தலையில் பரிவட்டம் கட்டிப் பட்டு வஸ்திரங்களையும் பொன் கழஞ்சுகளையும் பரிசளித்தார்கள்.

சோழச் சக்கரவர்த்தியுடன் அமைச்சர்களும், பெருந்தர, சிறுதர அதிகாரிகளும், அரண்மனைப் பணியாளர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். அவர்களுடன் சிலாசாஸனம் பொறிக்கும் கல் தச்சர்களும், செப்புப் பட்டயம் எழுதும் விசுவகர்மர்களும் வந்தார்கள். கோயில் கும்பாபிஷேகத்தன்று கோயிலுக்கான மானியங்களை அரச குடும்பத்தார் அறிவிப்பது வழக்கம். அதிலும் இந்தக் கோயில் அரச குடும்பத்தில் பலருக்கும் பிடித்தமான வேலையென்பதால் மானியங்கள் அதிகமாக அறிவிக்கப்படும் என்பது பலருக்கும் தெரியும்.

ஒவ்வொருவருடைய அறிவிப்பைத் தொடர்ந்தும் உளிகளின் சப்தம் கேட்கும். அந்த நபர் கொடுத்த மானியம் சூரிய சந்திரர் உள்ள வரை அந்தக் கோயிலைச் சேரும் என்று கல்லிலும் செப்புத் தகட்டிலும் பொறிக்கப்படும். ஆனால், அதெல்லாம் கும்பாபி ஷேகம் முடிந்த பின்தான்.

அரசர் சமிக்ஞை செய்ததின் பேரில் வைபவம் ஆரம்பமாயிற்று. முதலில் ஓதுவார்மூர்த்திகள் இருவர் 'பொன்னார் மேனியனே' என்ற சுந்தரர் தேவாரத்தைப் பாடினார்கள். அந்தப் பெரிய ஜனக் கூட்டத்தில் அப்போது நிசப்தம் நிலவியது. இசைக் கருவிகளின் ஒத்துழைப்பில்லாமலேயே மிக இனிமையாக மனிதக் குரலில் பாடப்பட்ட அந்தப் பாடலைக் கேட்டு மக்கள் மெய்மறந்திருந் தார்கள்.

அந்தப் பாடல் ஒலிக்கின்ற போது கோயிலின் வெளிப்புறத்தில் ஊமை ராணியின் சரித்திரம் சித்திரிக்கப்பட்டிருந்ததை எல்லாரும் கண்டனர். அரச குலத்தினருக்கு அந்த அழகிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாமென்று தோன்றியது. அவள் புயல் வேகத்தில் ஓடுவதும், கடலில் நீந்துவதும் பெரும்பாலாக சுதை வேலைகளில் இருந்தன. பிற்காலங்களில் வாழும் குடிமக்கள் அதைப் பார்த்து அந்தப் புனித மாதின் கதையை நன்கு அறிந்து கொள்ள ஏதுவாகச் சிற்பிகள் அதைச் செய்திருந்தனர்.

பொன்னியின் செல்வர் கண்ணில் பட்டது இரண்டு சிற்பங்கள் தாம். ஒன்று படகிலிருந்து விழுந்த குழந்தை ஒன்றை ஊமை ராணி காப்பாற்றுவது போல ஒரு காட்சி. அந்தக் குழந்தை தாம்தான் என்று தெரிந்து கொண்டார். மற்றும் ஒன்றில், ஊமை ராணியின் உடலில் ஒரு வேல் பாய்ந்து இருப்பதும், அவள் சுந்தர சோழ மன்னரின் மடியில் உயிர் துறப்பதும் சித்திரிக்கப்பட்டிருந்தது. கேள்வி ஞானத்தில் இவ்வளவு உணர்ச்சி பூர்வமான சிற்பங்களை ஒரு சிற்பியால் செய்ய முடிந்திருந்தால் அந்தக் காட்சிகளை நேரில் பார்த்த சிலருக்கு எவ்வளவு உணர்ச்சிகள் பொங்கி எழும்?

அந்தச் சுதைசிற்பங்களை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அனைவரும். அங்கு கூடியிருந்த அரச குடும்பத்தினரில் அனேகமாக அனைவரும் அந்த அம்மையாரைப் பார்த்திருந்ததால் அவர்களுடைய மனங்களில் அந்த நினைவுகள் ஓடிக் கொண்டிருந்தன.

அதைப் பார்த்த அரசர் பொன்னியின் செல்வரிடம் சமிக்ஞை செய்யவே, அவரும் அருகே வந்தார். தேவாரப் பாடலுக்கு இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அரசர் ரகசியம் பேசும் தோரணையில், "உமது திருப்பணியைப் பார்த்து என் பெரியன்னை உயிர் பெற்று வந்து விட்டது போல் ஒரு பிரமையை அனுபவிக்கிறேன்" என்றார்.

பொன்னியின் செல்வருக்குக் கண்களில் நீர். அரசரின் உள் இதயத்திலிருந்து பிரவாகமாய்ப் பொழிந்த அந்தச் சொற்கள் பொன்னியின் செல்வரைக் குளிர வைத்தன. அவருடைய தேகம் சிலிர்த்தது.

தேவாரம் இனிதே முடிந்தது. அமைப்பாளர்களில் சிலர் முன் வந்து மன்னரிடம், "சக்கரவர்த்திப் பெருமானே, நீங்கள் அனைவரும் மூங்கில் மரத்தால் கட்டப்பட்டுள்ள சாரம் வழியாகக் கோவிலின் மேல் தளத்திற்கு வந்தருள வேண்டும்" என்றனர்.

உத்தம சோழர் தன்னருகே இருந்த அருள்மொழி வர்மரைப் பார்த்தார்.

பொன்னியின் செல்வரோ, "மன்னரும் அரசியாரும் மேலே ஏறினால் போதுமானது. நாங்கள் அனைவரும் கீழிருந்து நடப்பதைப் பார்க்கிறோம்" என்றார்.

"இல்லை, இல்லை" என்றார் சக்கரவர்த்தி. "இந்தக் கோயில் உருவெடுத்தது பொன்னியின் செல்வரால். அவர் மட்டும் மேலே செல்லலாம்" என்று வற்புறுத்தினார்.

வந்தியத் தேவன் குறுக்கிட்டு, "இது போல ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தால், நல்ல நேரம் சென்று விடும் போலிருக்கிறது. அனைவருக்கும் மேலே சென்று நிற்க இடம் போதுமானது. அதனால் அனைவரும் செல்வோம்" என்றான்.

இந்த யோசனை அனைவருக்கும் பிடித்திருந்தது. பெண்கள் முதலில் சாரத்தில் ஏறலானார்கள். பின் அரச குலத்து ஆண்களும் மேலே சென்றார்கள். அரசர் முதலில் செல்ல, மரியாதை நிமித்தமாகச் சில படிகளுக்குப் பின்னால் அருள்மொழி வர்மரும் வந்தியத் தேவரும் சென்றார்கள். மாறனும் மேலே ஏறினான்.

சம தளமாகக் கோயில் விமானத்தைச் சுற்றி அமைக்கப் பெற்றிருந்தது. அங்கு செவ்வோடுகள் பதிக்கப்பட்டிருந்தன. அந்த மேல் தளத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்த கண் கொள்ளாக் காட்சியினைக் கீழிருந்த பொது மக்கள் கண்டு மகிழ்ச்சி கொண்டனர்.

உயர்ந்த இடத்திலிருந்து கூடியிருந்த ஜனக்கடலை அருள்மொழி வர்மர் கண்டார். இன்றைக்கு இந்நகர மாந்தர் அனைவரும் இங்கு ஒன்று கூடி ராஜ வம்சத்தினரிடம் தங்களுக்கு இருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தியிருந்தனர். எங்கிருந்துதான் அவ்வளவு ஜனங்களும் வந்தார்களோ, தெரியாது. அதுவும் காலையில் அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் எப்படி வந்து சேர்ந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆண்களும், பெண்களும், வயோதிகர்களும், சிறுவர், சிறுமியரும் அந்தக் கோயிலைப் பெருங்கூட்டமாகச் சூழ்ந்திருந்தனர். ஜன சமுத்திரத்தில் அந்தக் கோயில் ஒரு தீவு போலத்தான் காட்சி அளித்தது.

கூட்டத்தை ஒரு வியப்புடன் மேலிருப்பவர்கள் பார்ப்பதற்கும் கீழிருப்பவர்கள் தங்கள் கண்ணுக்கு கண்ணான அரச குடும்பத்தினரை ஒன்று சேர்த்துப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

கோயிலைச் சுற்றிலும் ஜனக் கூட்டம் நெருங்கி நின்றது. அந்த ஜனக் கூட்டத்திலிருந்து கிளம்பிய வாத்திய முழக்கங்களும் வாழ்த்தொலிகளும் காதைக் கிழித்து விடும் போலிருந்தது. பொன்னியின் செல்வர் கோயிலின் மேன்மாடத்து முகப்பில் வந்து கைகூப்பிக் கொண்டு நின்றார். வீதியில் ஒரு பெரிய கோலாகலமான கூட்டம் அவர் முறுவலுக்காகவும் கை அசைவுக்காகவும் காத்துக் குரல் எழுப்ப ஆயத்தமாயிருந்தது.

முதலில், "உத்தம சோழர் வாழ்க!" என்று சில குரல்கள் எழுந்தன. அவ்வளவுதான். மடை திறந்த அணை போலத் தங்கள் ராஜ விசுவாசத்தை வெளிக்காட்ட மக்கள் முயன்றனர்.

"பொன்னியின் செல்வர் வாழ்க!" என்றும், "அரசர் வாழ்க!" என்றும் பலத்த குரல்களில் ஜனங்கள் கோஷம் எழுப்பினர். ஒரிருவர், "வல்லத்து அரசர் வல்லவராயர் வாழ்க" எனக் கூடக் கத்தியது வந்தியத் தேவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. பெருமையுடன் குந்தவையைத் திரும்பிப் பார்த்தான் வந்தியத் தேவன்.

கடலெனக் கூடியிருந்த ஜனங்கள் அரச குடும்பத்தினரை வாழ்த்திய சப்தம் கோயில் ஆச்சாரியர்கள் செய்த வேத முழக்கத்துடன் இணைந்து சமுத்திரத்தின் பேரிரைச்சலைப் போல இருந்தது.

தங்களை வாயார வாழ்த்திய இந்த சாம்ராஜ்யத்தின் மக்களைப் பார்த்தபடியே அனைவரும் கை அசைத்தனர். சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "ஆகா! என்ன ஒரு கூட்டம்!" என்றாள் குந்தவை.

'இப்போதுதான் பெரிய அன்னைக்கு ஏற்ற ஒரு அங்கீகாரம் கிடைத்தது' என்று நினைத்தபடி பொன்னியின் செல்வர் தன்னை வாழ்த்திய கூட்டத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தார்.

எள் போட்டால் எள் எடுக்க முடியாத அளவுக்குக் கூட்டம். கோயிலின் மேல் மாடத்திலிருந்த அவருக்குத் தெரிந்தது தலைகள் தான். எத்தனையோ ஆயிரமாயிரம் பேரை அவர் பார்த்து வந்தார்.

மக்களைப் பார்த்தபடி அவருடைய கண்கள் ஒரு முறை சுழன்றன. ஒரே ஒரு நொடி! ஒரு முகத்தின் மீது மட்டும் நின்றது அவரது பார்வை. ஏன் அவள் முகம் மட்டும் அவரை மீண்டும் பார்க்கத் தூண்டும் அளவுக்கு மனதில் நின்றது? தன் வீட்டு விசேஷம் போலத் தஞ்சை மக்கள் அனைவரும் அலங்கரித்துக் கொண்டு வந்திருந்த போது அவள் மட்டும் ஆபரணங்கள் ஏதும் பூணாமல் தலை விரி கோலமாக இருந்ததுதான் அவளைத் தனியாகக் கூட்டத்தின் நடுவே காட்டியிருக்க வேண்டும்.

இல்லை, அவள் அவரையே வெறித்து நோக்கியதால் இருக்குமோ? திடீரென வீசிய புயல் காற்றில் சிக்கியது போல அவரது உள்ளமும் உடலும் நடுங்கின. அதிர்ச்சியாய்த் தோன்றிய அந்த உணர்ச்சியை எப்படியோ சமாளித்துக் கொண்டு அவர் பார்த்த பெண்ணை மறுபடியும் பார்த்தார்.

அவர்கள் பக்கம் பொன்னியின் செல்வர் பார்க்கிறார் என்று அவளைச் சுற்றியிருந்த மக்கள் குதித்து ஆரவாரம் செய்ததில் அந்த முகம் மீண்டும் தெரியவில்லை. கோஷம் குறைந்த பின் அவள் மீண்டும் தெரிந்தாள். ஒரு ஆரவாரமும் இல்லாமல் நேரே அவரையே நோக்கி நின்றாள்.

முதலில் பொன்னியின் செல்வரால் தன் கண்களை நம்ப முடியவில்லை. இது என்ன வெறும் பிரமையா? அப்படித்தான் இருக்க வேண்டுமென முடிவு செய்தார்.

ஆனால், அந்தக் காட்சியைப் பார்த்த பின், பொன்னியின் செல்வருக்கு வேறு எதிலும் பார்வை செல்லவில்லை. கவனமும் செல்லவில்லை. மீண்டும் அவரது கண்கள் தேடத் தொடங்கின. குதித்துக் கொண்டிருந்த கூட்டத்தின் நடுவே அமைதியாக மீண்டும் அதே முகம். அதே தோற்றம். பார்த்தவரின் ரத்தம் உறைந்தது.

நிச்சயமாக அந்த முகம்தான். தன் தாயின் முகம் மனதில் எப்படிப் பதிந்திருக்கும். அது கடைசிவரை நினைவிருக்கும் அல்லவா? அது போலத்தான் அந்த முகம். ஆனால், அது எப்படி?

அப்போது அவர் உணர்வுகளை வர்ணித்தல் அசாத்தியமான காரியம். நிழல் போன்ற ஒரு ஞாபகம் அவரை ஆக்கிரமித்தது. அருள்மொழி வர்மர் மந்திர சக்தியினால் கட்டுண்டவரைப் போல் அந்தப் பெண்ணைப் பார்த்தபடி அசையாமல் நின்றார். 'பெரிய பிழை செய்து விட்டோமா? இன்னும் இறக்காதவருக்குக் கோயில் கட்டி விட்டோமோ?' என்று குற்றம் சாட்டியது மனம்.

'இல்லை, அந்தக் கோயிலில் அவர் கண்டிருந்த அற்புதச் சித்திர உருவங்களில் ஒன்றுதான் உயிர் பெற்று எழுந்து தன் கண் முன் வந்து நின்றதோ? சக்கரவர்த்தி கூடச் சொன்னாரே, உயிரோவியமாய்த் தீட்டியிருக்கிறீர்கள், என்று சிற்பியைப் பார்த்து.'

அந்த ஜன சமுத்திரத்தில் 'ஊமை ராணி' நின்றாள். கூட்டத்தில் நின்ற ஊமைராணியின் உருவம் அவரையே கண் கொட்டாமல் பார்த்தது. அந்தப் பார்வை அம்புகள் அவரைத் திக்குமுக்காடச் செய்தன. கோயிலின் மேல்தரையிலே நிற்கிறோமா, வானவெளியில் மிதக்கிறோமா என்று தெரியாத நிலையை அடைந்தார்.

யாருடைய ஞாபகார்த்தமாக அந்தக் கோயில் எழுப்பப்பட்டதோ, அவளே அந்தக் கூட்டத்தில் உயிருடன் நின்றாள். 'ஆகா! இது என்ன ஓர் இன்பமான அதிர்ச்சி! பெரிய அன்னை உயிருடன் இருக்கிறாரா?

ஆனால், 'எப்படி? அவரது சிதைக்கு நான்தானே தீ மூட்டினேன்!'

'மாண்டவர் மீண்டும் வருவாரோ?' பொன்னியின் செல்வருக்குத் தலை சுற்றியது!

முதல் பாகம் முற்றிற்று